# தாய்வீடு

THAIVEEDU APRIL 2022 ஏப்பிரல் www.thaiveedu.com

**நாளொரு கல்வி பொழுதொரு பரீட்சை எனத் தட்டித்தட்டி என்னை உருவாக்கிய கலாசாலை வீரகேசரி**


**– அன்னலட்சுமி இராஜதுரை**

– நேர்காணல் தெளிவத்தை ஜோசப்



**பேராசிரியர் ஜஜாஸ் அஹமட்டை நினைவுகூரல்**

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ





**கேள்விகளால் வேள்வி செய்வோம்**

– செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை



NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law




SRI NADARAJASUNDARAM
Sales Representative
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5




Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229




Your Trusted Realtor
Buying | Selling | Leasing | Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
416.803.7344
www.reon.ca




RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com




MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3




Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy




உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)




MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com




Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE




VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

# தாய்வீடு

**Publisher & Editor**
PJ. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஐயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 1-613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com



பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.


## அநீதிகளுக்கு எதிராய் ஒன்றிணைவோம்!

ஏப்பிரல் 24 ஆர்மீனிய இனப்படுகொலையின் நினைவுநாள்.

1915ம் ஆண்டிலே, அப்போது கொஸ்ந்தாந்திநோபிள் என்றும் இப்போது இஸ்தான்புல் என்றும் அறியப்படும் நகரிலே ஆர்மீனிய மதகுருக்கள், கல்விமான்கள், சமூகத்தலைவர்கள், எழுத்தாளர்கள் என 250பேர் காரணமெதுவுமின்றிக் குறிவைத்துக் கைது செய்யப்பட்டு கொலைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட நாளான ஏப்பிரல் 24ஆம் நாளே ஆர்மீனியப் படுகொலை நாளாக இப்போது நினைவுகூரப்படுகிறது. அதற்கு அடுத்த நாளும் 600க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு ஒரு மாதத்திற்குள் கொல்லப்பட்டார்கள். இதற்கு முன்னரான 600 ஆண்டுகளிலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த ஆர்மீனியாவில் மத, இனரீதியாகத் தனிமைப்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்ட ஆர்மீனியர்கள் இலட்சக்கணக்கில் கொல்லப்பட்டனர்.

இந்த இனப்படுகொலையைப் புரிந்தது உதுமானியப் பேரரசு என்று அழைக்கப்பட்ட இன்றைய துருக்கி அரசின் முன்னோடி. முதலாம் உலகப்போரின் நிழலிலே, 1915 முதல் 1923 வரை கோரமானதொரு இன அழிப்பை நடத்தி முடித்தது ஜேர்மனியின் நட்பு நாடாய் இருந்த துருக்கி. இதிலே 1.5 மில்லியன் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டார்கள் என நம்பப்படுகிறது. 1918இலே முதலாம் உலகப்போரின் முடிவிலே துருக்கியும் அது ஆதரித்த ஜேர்மனியும் தோல்வியுற்றபோதும் ஆர்மீனியர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. மாறாக, தோல்விக்கு ஆர்மீனியர்களே காரணம் எனப் பழிகூறி, இனப்படுகொலையை இன்னும் உக்கிரத்துடன் முடுக்கிவிட்டது துருக்கி. 1923இலே உதுமானியப் பேரரசு வீழும்வரை இனவழிப்பு ஓயவில்லை. போரிலே வெற்றிபெற்ற மேற்கு நாடுகள் பாராமுகமாய் இருந்தன.

இனப்படுகொலை (genocide) என்ற சொல்லை முதன்முதலில் நிறுவியவர் ரஃபாயேல் லெம்கின் என்ற போலந்து வழக்கறிஞராவார். 1944ல் வெளியான 'ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பாவில் அச்சு ஆட்சி' என்ற தனது நூலிலேதான் அவர் அச்சொல்லை அறிமுகப்படுத்தினார். 1946இல் ஐக்கிய நாடுகள் இனப்படுகொலையைக் குற்றச்செயல் என ஏற்றுக்கொள்ள, 1948இல் அது சட்டமாகியது.

ஒரு தேசிய, இன, அல்லது சமயக் குழுவைச் சேர்ந்தவர்களை முழுமையாகவோ பகுதியாகவே அழிக்கும் நோக்குடன் அக்குழுவினரைக் கொல்லுதல், அவர்களுக்கு உடல், உளரீதியாக பாரதூரமான தாக்கத்தை உண்டாக்குதல், அந்தக் குழுவுக்கு முழுமையான அல்லது பகுதியான அழிவை ஏற்படுத்தும் நோக்கத்திலான வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்துதல், அந்தக் குழுவுக்குள் பிறப்புகளைத் தடுக்கும் நோக்கத்திலான செயற்பாடுகளை முன்னெடுத்தல், அந்தக் குழுவின் பிள்ளைகளை வலுக்கட்டாயமாக இன்னொரு குழுவுக்கு மாற்றுதல் ஆகிய செயற்பாடுகளைச் செய்தலே இனப்படுகொலை என தற்போதைய காலகட்டத்தில் வரையறுக்கப்படுகிறது.

இவையெல்லாம் ஆர்மீனியர்களுக்கு நடந்தது. யூதர்களுக்கு நடந்தது. உக்ரேனியர்களுக்கு நடந்தது. டுட்சி மக்களுக்கு நடந்தது. பலஸ்தீனியர்களுக்கு நடக்கிறது. எமக்கும் நடந்தது. எனினும், ஆர்மீனியர்களின் நாற்பதாண்டுகளுக்கும் மேலான செயற்பாட்டின் பின்னரே அவர்களுக்கு நடந்தது இனப்படுகொலை என ஏற்றுக்கொள்ள உலகம் முன்வந்தது. 1965இல் முதன்முதலாக தென்னமெரிக்க நாடான உருகுவே ஆர்மீனிய இனப்படுகொலையை அங்கீகரித்தது. அதற்குப் பத்தாண்டுகளின் பின்னரே, 1975இல் இரண்டாவது நாடாக சைப்ரஸ் அங்கீகரித்தது. ஒரு நூற்றாண்டுக்குப் பின், 2021இல் அமெரிக்கா அங்கீகரித்தது.

ஆர்மீனிய இனப்படுகொலையை ஏற்றுக்கொண்டு 2004ஆம் ஆண்டில் கனடிய நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. அப்போது 70,000 வரையிலான ஆர்மீனியர்களே கனடாவில் வாழ்ந்தனர் என்பது கவனிக்கவேண்டிய ஒன்று.

இதுவரை 31 நாடுகளின் அரசுகள் ஆர்மீனியர்களுக்கு இழைக்கப்பட்டது இனப்படுகொலை என ஏற்றுக்கொள்கின்றன. இப்போதும் ஏற்றுக்கொள்ளாத - அல்லது வெளிப்படையாக அங்கீகரிக்காத நாடுகளின் எண்ணிக்கையே அதிகம். எனினும், தளராது போராடும் அம்மக்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் அதிகம்.

மியன்மாரில் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது பர்மிய இராணுவம் நடத்துவது இனப்படுகொலையே என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் அண்மையில் ஏற்றுக்கொண்டிருந்தார்.

அமெரிக்கக் கண்டம் முழுவதும் பரந்து வாழ்ந்த தொல்குடியினர் அழித்தொழிக்கப்பட்டமை இனப்படுகொலையே என்ற தொல்குடிச்சமூகத்தினரின் நிலைப்பாட்டுக்கு ஆதரவளிப்பார் யாருமிலர்.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான அங்கீகாரம் கோரியும் நீதிவேண்டியும் நூறாண்டுகள் கடந்தும் போராடும் ஆர்மீனிய மக்களுக்குத் தோழமைக் கரம் நீட்டுவோம். எம் கண்முன்னே ஏனைய தேசிய இனங்களுக்கு நிகழும் அநீதிகளுக்கும் இனவழிப்புகளுக்கும் எதிராக உணர்வுடன் குரல் கொடுப்போம். எமக்கு இழைக்கப்பட்ட, இழைக்கப்படுகின்ற அநீதிகளுக்கு எதிரான எமது நீதிக்கும் பொறுப்புக்கூறலுக்குமான போராட்டத்திற்கு உணர்வுத் தோழமை வலுச்சேர்க்கும்.

கறுப்பின மக்களின் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல்கொடுத்த கலாநிதி இளைய மார்ட்டின் லூதர் கிங் கூறியதுபோல் 'அநீதி எங்கு நடந்தாலும் அது எங்கெங்கிலும் நீதிக்கான அச்சுறுத்தலே'. எனவே நீதிக்கான எமது குரல்கள், எங்கெங்கு அநீதி நடப்பினும் அவற்றையும் எதிர்த்து உயர்வதே முறை.

# இம்மாதத் தாய்வீட்டில்...


அநீதிகளுக்கு எதிராய் ஒன்றிணைவோம்! 3

கேள்விகளால் வேள்வி செய்வோம் 5
- செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை

நேட்டோவுற்கு உக்ரேன் யுத்தம் இலங்கைக்கு தமிழ் மக்கள்! 9
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

1970களில் சபிக்கப்பட்ட தன்னிறைவுப் பொருளாதார முயற்சி! 12
- என். சரவணன்

உக்ரேன் பற்றி பூட்டின் ஆற்றிய உரை 17
- மணி வேலுப்பிள்ளை

மேற்கின் பொருளாதாரத் தடைகள்: அணுகுமுறையும் விளைவுகளும் 21
- ரூபன் சிவராஜா

பிரசவ காலமும் வாந்தியும் 26
- கந்தையா செந்தில்நாதன்

வழி தெரியாத வலி (Fibromyalgia) 28
- போல் ஜோசேப்

ஏட்டில் எழுதிவைத்தார் அங்காதிபாதம் 400 31
- பால. சிவகடாட்சம்

விஞ்ஞானமுறையும் முறையியலும் 33
- வீராசாமி பிரபாகரன்

மகிழ்ச்சியின் தோற்றுவாய் 34
- குமார் புனிதவேல்

குறுக்கு வழியில் குறைக்கும் உடல் எடை! 36
- சுப்ரமணியம் ஜெயசீலன்

மடிந்துபோன மனிதம் 38
- சி. நற்குணலிங்கம்

வீடு விற்கவா? வாங்கவா? சிந்தியுங்கள்! செயற்படுங்கள்! 40
- வேலா சுப்ரமணியம்

பிரபஞ்சத் தொடக்கத்தைப் பின்நோக்கிப் பார்க்க முடியுமா? 44
- குரு அரவிந்தன்

கோலங்கெடும்... 46
- வேதநாயகம் தபேந்திரன்

தடம் மாறிய பழமொழிகள் 48
- சி. நற்குணலிங்கம்

முதியோர் வாழ்வியல் - ஒரு கண்ணோட்டம் 50
- த. சிவபாலு

ஒஸ்லோவில் 'தவேந்தல்' நினைவேந்தலும் நூல் வெளியீடும் 53
- என். சரவணன்

படித்தோம் சொல்கின்றோம் சண்முகம் சபேசனின் 'காற்றில் தவழ்ந்த சிந்தனைகள்' 56
- முருகபூபதி

பெரியாரின் தீண்டாமைக் கொள்கை 58
- நெல்லை ஜெயசிங்

ஆவண வகை இலங்கைத் தமிழ் நாவல்களுள் அதி உயரம் ஏறிய படைப்பு! சாந்தனின் 'சித்தன் சரித'த்தை முன்வைத்து 60
- தேவகாந்தன்

இலங்கையில் தேசியவாதமும் இனவாதமும் - 1948-1956 62
ஆங்கில மூலம்: சி. அரசரத்தினம்
தமிழாக்கம்: க. சண்முகலிங்கம்

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி மலையகத்தில் மரபுக்கவிதைகளின் மலர்ச்சியும் 'குறிஞ்சிப்பூ' கவிதைகளும் 69
- மல்லியப்புசந்தி திலகர்

ஆவணஞானி இரா. கனகரத்தினம் 72
வே. விவேகானந்தன்

மாணவர் கல்வியில் தன்னை அர்ப்பணித்த நல்லதம்பி பேரின்பநாதன் 74
- த. சிவபாலு

மனித நேயமிக்க சமூக அநீதிக்கெதிரான குரல் மாத்தளை சோமுவின் சிறுகதைகள் 76
- எம். வாமதேவன்

தமிழ்த்தேசியத்தைக் கட்டமைத்த ஆணிவேர் தந்தை பெரியார் 78
- சு. வேணுகோபால்

பேராசிரியர் ஐஜாஸ் அஹமட்டை நினைவுகூரல் 86
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

நாளொரு கல்வி பொழுதொரு பரீட்சை எனத் தட்டித்தட்டி என்னை உருவாக்கிய கலாசாலை வீரகேசரி 92
- அன்னலட்சுமி இராஜதுரை
நேர்காணல்: தெளிவத்தை ஜோசப்

சிகப்பு நிறக் காரும் குதிரை வாலும்... 99
- ஓவியர் ஜீவா

இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும் அவற்றின் சமகாலப் பயன்பாட்டு நிலைகளும் 102
- கௌசல்யா சுப்பிரமணியன்

உப்பும் ஊறுகாயும் 105
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து... 109
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

தொன்மையைத் தேடி ஆதித் தமிழர், திணை வழிக் குடிகள் 112
செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 120
- நா. சுப்பிரமணியன்

நினைவு நல்லது மீண்டும் ஒரு வாழ்வின் தொடக்கம் 125
P. விக்னேஸ்வரன்

நாசகாரிகள்! 132
- மா. சித்திவினாயகம்

எல்லைகள் 136
- த. சாள்ஸ் குணநாயகம்

அரசியல் பேசிப்பேசி..! 139
- நெடுந்தீவு மகேஷ்

சிறுமி 142
ஜமெய்க்கா கின்கெயிட்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் 144
- உண்ணி. ஆர்
தமிழில்: அரவிந்த் வடசேரி

கலிகூலா: ரோம் கண்ட பைத்தியக்கார சக்கரவர்த்தி 150
- நிமால் நாகராஜா

# கேள்விகளால் வேள்வி செய்வோம்

- செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை

இலங்கைத்தீவின் இன்றைய நெருக்கடி என்பது அரசியல் நெருக்கடியா, அல்லது பொருளாதார நெருக்கடியா, அல்லது இரண்டும் இணைந்த ஒன்றா, அல்லது அவைகளுக்கு புறம்பான வேறு ஒன்றா? என்பது தொடர்பான தெளிவான புரிதல் எமக்குண்டா என்ற வினாவினைக் கேட்காமல் முன் நகரமுடியாத நிலைமைக்கு இலங்கைத்தீவும் அதன் பிரச்சினைக்கு தீர்வு தேடுபவர்களும் குழம்பிப்போயிருக்கின்றார்கள் என்பதே இன்றைய யதார்த்தமாக உள்ளது.

அண்மையில் சிறீலங்காவின் சனாதிபதியால் கூட்டப்பட்ட சர்வ கட்சி மகாநாட்டில் உரையாற்றிய தமிழ்கட்சியொன்றின் தலைவர்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் திரு. தர்மலிங்கம் சித்தாத்தன், 'தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு இணக்கமான தீர்வைக் கண்டறிவது நிச்சயமாக எமது நாட்டை ஆசியாவின் செரர்க்கமாக மாற்றும்' என்று உரைத்த கருத்தினை எங்கள் விவாதத்திற்கான தொடக்கப்புள்ளியாக கருதி, நாங்கள் எங்கள் சிந்தனையினை விரிவுபடுத்துவோமாகில், அதுவும் கூட எங்களை ஏதாவது ஒரு ஆக்கபூர்வமான திசையினை நோக்கி முன் நகர்த்தலாம்.

முதலில் இலங்கைத் தீவில் புரையோடிப்போயுள்ள பிரச்சினையினை எவ்வாறு புரிந்து கொள்வது? இது இலங்கைத் தீவில் வாழுகின்ற தமிழ்மொழியைத் தாய்மொழியாக கொண்ட மக்களின் பிரச்சினையா அல்லது ஈழத்தமிழர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக்கொள்கின்ற மக்களின் பிரச்சினையா அல்லது வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ்மக்களின் பிரச்சினையா அல்லது வடக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்களின் பிரச்சினையா என்பது இன்னமும் தெளிவாக வரையறுக்கப்படவில்லை.

அதேபோன்று இது வெறுமனே பொருளாதாரப்பிரச்சினையா அல்லது அபிவிருத்தி சார்ந்த சமனிலையின்மைப் பிரச்சினையா அல்லது ஆட்சி அதிகாரத்தை யார் கையில் வைத்திருப்பது என்ற பிரச்சினையா அல்லது அதற்கும் அப்பால் மொழி, பண்பாடு, இன அடையாளம் ஆகியவற்றை பாதுகாப்பது பற்றிய பிரச்சினையா அல்லது அவை எல்லாவற்றையும் ஒருங்கிணைத்த இருப்புக்கும் செழுமைக்கும் இனஅடையாளத்தை பாதுகாத்து சமூககூட்டுவாழ்க்கையினைத் தக்கவைக்கும் போராட்டமா என்பது பற்றி மேலும் மேலும் விவாதித்து தெளிவுறவேண்டியுள்ளது.

1948ன் பின்னான தமிழ்மக்களின் அரசியல் தலைவர்களாக இருந்த தந்தை செல்வா போன்றோர் இவ்விடங்கள் பற்றிய முழுமையான தெளிவுடையோராக இருந்திருக்கின்றார்கள் என்றே நாங்கள் நம்பவேண்டியுள்ளது. அமரர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலத்தின் ஐம்பதிற்கு ஐம்பது கோரிக்கை கூட இலங்கைத் தீவில் வாழும் தேசிய இனங்களின் சமத்துவ நிலையை நிலைப்படுத்துவதற்கான வாதமாக விளங்கிக்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமே தவிர, எண்ணிக்கை அடிப்படையிலான பிரதிநிதித்துவக் கதிரைகளின் கோரிக்கையாக புரிந்துகொள்ளப்பட்டிருக்கக்கூடாது.

காலநீட்டத்திலும் களநிலைகளின் மாற்றங்கள் காரணமாகவும் காலத்திற்கு காலம் கதாநாயகர்களாக தங்களை முன்னிறுத்தியவர்களின் பல்வேறுபட்ட அரசியல்கட்சி அடையாளங்கள், பதவிநிலைகள், கூட்டுக்கள் காரணமாக இலங்கைத்தீவின் பிரச்சினையும் அதுசார்ந்த தமிழ்மக்களின் அக்கறைகளும் திரிபுபடுத்தப்பட்டு வந்துள்ளதாகவே காணப்படுகின்றது.

தற்போதும்கூட இந்தியாவினதும் சர்வதேசத்தினதும் அழுத்தத்தினூடாகவும் அனுசரணையுடனும் அடையப்படக்கூடிய தீர்வுகள்



அல்லது அடைவுகள் பற்றிய அதீத கற்பனைகளும் அர்த்தபூர்வம் அற்ற வாதங்களும் பலதரப்பிலிருந்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலைமைகளையெல்லாம் சீர்தூக்கிப்பார்த்து ஒரு சிறப்பான மூலோபாயத்தின் அடிப்படையில் விடயங்களைக் கையாளுவது யார் என்ற வினாவும் அதற்கான தளமொன்றை உருவாக்கும் முன்னிலைப் பாத்திரத்தை பொறுப்பேற்பது யார் என்பதும் கூட குழப்பம் நிறைந்ததாகவே தற்போதுவரை காணப்படுகின்றமைக்கு, தமிழ்மக்களின் வாழ்வியலின் ஓர் அம்சமான 'நதியின் மூலத்தையும், ரிசியின் மூலத்தையும் தேடும்' பழக்கம் பெருந்தடையாகவுள்ளது என்றால் தவறாகாது.

### இலங்கைத் தீவின் பிரச்சினையினை மீளவரையறுத்தல்:

இலங்கைத்தீவில் காலத்தால் நீண்டு புரையோடிப்போயுள்ள பிரச்சினையினை ஈழத்தமிழர்களின் பிரச்சினை என்றோ தமிழ்ப்பேசும்



மக்களின் பிரச்சினை என்றோ மட்டுப்படுத்துவது பொருத்தமானதா? இவ்வாறு மட்டுப்படுத்தினால் தமிழ்மொழியை தாய்மொழியாக கொண்ட மலையகமக்களுடைய பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? தமிழைத் தாய்மொழியாகவும் இஸ்லாமியத்தை தமது மார்க்கமாகவும் கொண்ட மக்களுக்கு பிரச்சினைகள் இல்லையா? ஈழத்தமிழர்களின் அல்லது வடக்கு கிழக்கு வாழ் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டவுடன், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுவிடுமா? அவ்வாறு இல்லையாயின் வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு அரசியல் அதிகாரப்பகிர்வோ அல்லது வேறு அரசியல் தீர்வோ கண்டறியப்பட்டபின்பும் இத்தீவின் வேறுவிதமான இன, மத, வர்க்க குழுக்கள் சார்ந்த பிரச்சினைகளால் இந்ததீவின் அரசியலும் பொருளாதாரமும் வாழ்வியலும் தளம்பிக்கொண்டிருந்தால் அதிகாரப்பகிர்வினால் பெற்ற அனுகூலங்களை வடக்கு, கிழக்கு மக்கள் தக்கவைத்துக்கொள்ள முடியுமா? தங்களை தகவமைத்துக்கொள்ள முடியுமா?

தற்போது மேலெழுந்துள்ள பிராந்திய மற்றும் சர்வதேச அரசியற் சூழ்நிலைகளையும் இந்தியாவின் முன்முனைப்பான நகர்வுகளையும் நோக்கும்போது, சில தரப்புகளினால் இந்தியாவின் நேரடியான அரசியல், பொருளாதார ஆளுகைக்குள் இலங்கைத் தீவு செல்வதனால் ஈழத்தமிழர்கள் நிலை சிறப்படையும் என்ற எதிர்வுகூறலும், இலங்கையினை இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றாக மாற்றுவதன் அனுகூலங்கள் பற்றிய விவாதமும் வளர்ந்து வருகின்றது.

இந்திய வல்லரசின் தன்னலம் சார்ந்த கொள்கைகளும் மாறி மாறி ஆட்சிக்கு வரும் கட்சிகளின் இன, மத, மொழி மற்றும் மாநிலங்கள் சார்ந்த மேலாதிக்க வாதங்களும் அதனடிப்படையில் காலத்திற்கு காலம் கட்டவிழ்க்கப்படும் வன்செயல்களும் இலங்கைத்தீவினுள்ளும் தாக்கத்தை செலுத்தாது என நாம் நம்புகின்றோமா? இந்தியாவின் ஆட்சி முறையும் அரசியல் கலாசாரமும் எமக்கு முன்மாதிரியானவை என எங்களால் எந்தளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும்?

நாங்கள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் விளைவான மாகாண சபை முறைமையினை முழுமையாக அமுல்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கும்படி இப்போது இந்தியாவினைக் கேட்கின்றோம். நல்லது. ஆனால் இந்த மாகாணசபை முறைமையின் முழுமையான அமுலாக்கம் நடைமுறையில் நிகழுமா? முஸ்லீம் அரசியற் கட்சித் தலைவர்கள் வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபைமுறைமைக்கு மட்டுமல்லாது, மாகாணசபை முறைமையின் ஊடான அதிகாரப்பரவலாக்கத்திற்கும் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்களே. இவ்விடயத்தில் எவ்வாறு முஸ்லீம் மக்களின் ஆதரவினை திரட்டுவது. அதுபற்றிய ஏதாவது ஆக்கபூர்வமான முன்னெடுப்புகள் காத்திரமாக செய்யப்படுகின்றனவா? இவ்விடயம் தொடர்பாக இதுவரை அடைந்துகொண்ட முன்னேற்றங்கள் யாது?

வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபைக் கட்டமைப்பு தொடர்பாக, கிழக்கு மாகாணம் குறிப்பாக மட்டக்களப்பு மக்களின் புத்திஜீவிகள், சிந்தனையாளர்கள், செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் உடன்பாடு எந்தளவுக்கு எட்டப்பட்டுள்ளது. வளங்களைப் பகிர்வதிலும் அதிகாரக் கதிரைகளைப் பெறுவதிலும் வடக்கு வளர்கின்றது கிழக்கு தேய்கின்றது என்ற கடந்த காலக் குற்றச்சாட்டுக்கள் எவ்வாறு எதிர்காலத்தில் தீர்க்கப்படும்.

கடந்த நூற்றிஐம்பது வருடங்களுக்கு மேலாக இந்த தேசத்தின் அந்நியசெலாவணி ஏற்றுமதி வருமானத்திற்காக மாடாய் உழைக்கும் மலையக மக்கள், இன்றும் தனது இருப்புக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் குடியிருக்க சிறுதுண்டு நிலத்திற்காகவும் போராடிக்கொண்டிருக்கின்றார்களே. அவர்களது அரசியல் உரிமையும், தொழிலாளர் உரிமையும், வாழ்வுரிமையும் எவ்வாறு தீர்க்கப்படும். அவர்கள் தமிழர்கள் இல்லையா? அவர்கள் இன்னமும் இந்திய வம்சாவழி வந்தேறு கூலிகள் தானா?

சிங்கள பௌத்தர்கள் கொண்டாடும் மகாவம்சம் கூறும் வரலாறு உண்மையென எடுத்துக்கொண்டால், அவர்கள் தாங்கள் லாலா தேசத்திலிருந்து நாடுகடத்தப்பட்டு, இத்தீவில் அடைக்கலம் கொண்ட விஜயனுக்கும் அவனது தோழர்களுக்கும் அவர்களுக்கு மணப்பெண்களாக வந்த பாண்டிய இளவரசிக்கும் அவளது தோழிகளுக்கும் பிறந்த சந்ததியினர் என்று பெருமைகொள்ளும் போது, தாங்களும் இந்தியாவிலிருந்து வந்த வந்தேறு குடிகள் என்பதனை ஏற்றுக்கொள்கின்றனர்தானே. அப்படியானால் ஏன் அவர்கள் மலையக மக்களை மட்டும் இந்திய வந்தேறு கூலிகள் என தரம்தாழ்த்துகின்றனர்.

ஈழத்து தமிழர்கள் என்று கூறுபவர்களும், தங்களை இத்தீவின் பூர்வீக குடிகள் என்று ஒருபோதும் தங்களை அடையாளப்படுத்த தயாரில்லை. தாங்கள் சோழவம்சத்தின் வாரிசுகள் என்றும், இன்ன

மும் வரலாற்றின் புதைபடிமங்களில் கிடைக்கக்கூடிய இராஜவம்சத்து சான்றுகளைத் தேடி அலைகின்றார்களே. அப்படியாயின் அவர்களும் இந்தியாவிலிருந்து வந்தவர்களே.

அப்படியாயின் ஏன் மலையகம் வாழ் தமிழ்மக்கள் இந்த இரண்டு வந்தேறு குடிகளினாலும் குறைந்த நிலையில் கணிக்கப்படுகின்றார்கள். கடந்த கால இனக்கலவரங்களினால் மலையகத்திலிருந்து துரத்தப்பட்டவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் தங்களை குடியமர்த்திக்கொண்டார்கள். குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்திலும் வவுனியாவில் செட்டிகுளம் பிரதேசத்திலும் அவர்கள் படிப்படியாக தங்களது வாழ்க்கையினை தக்கவைத்துக்கொண்டனர். ஆனாலும் வடக்கில் இந்த இரண்டு மாவட்டங்களிலும் அவர்களது வாழ்க்கையும் சனநாயக அரசியலில் அவர்களுக்கான வாய்ப்புகளும் இரண்டாம் நிலையிலேயே காணப்படுகின்றது. சிங்கள பௌத்தர்களுடன் குடும்பசம்பந்தங்களை ஏற்படுத்தும் யாழ்ப்பாணத்து பெருமக்கள்கூட தங்களுடன் கூடவாழும் மலையகத்திலிருந்து வந்த தமிழர்களை புறநிலையாகத்தான் பார்க்கின்றனர்.

இத்தகைய விடயங்களை பேசாப்பொருட்களாக கடந்து சென்று.., தமிழ்மக்களுக்கு அரசியல் அதிகாரமும் தன்னாட்சியும் கிடைத்தால் எல்லாமே மாறிவிடும், இந்த தேசம் பொன்னும் வளமும்



கொளிக்கும் பூமியாக மாறிவிடும் என்பது எந்தளவிற்கு உண்மையானது.

இலங்கைத் தீவில் பல தசாப்தங்களாக புரையோடிப்போயுள்ள பிரச்சினையை வெறுமனே தமிழர் பிரச்சினையாகவோ அல்லது வடக்கு கிழக்குக்கான தன்னாட்சி பிரச்சினையாகவோ குறுக்கிவிட முடியாது. இது இத்தீவில் வாழும் பல தேசிய இனக்குழுமங்களுக்கிடையிலான தாழ்வுணர்ச்சியினதும் பாதுகாப்பற்ற அச்ச உணர்ச்சி சார்ந்ததுமாகவே அணுகவேண்டியுள்ளது.

இந்தப் பூகோளத்தில், இலங்கைத் தீவினை மட்டும் தங்களது தாய்நிலமாக கொண்டுள்ள சிங்களமொழி பேசும் மக்கள் தங்களை உலகின் மிகச் சிறுபான்மையாக கருதிக்கொள்கின்றனர். தங்களுடன் வாழும் தமிழ்மொழி பேசும் மக்களை இந்தியாவின் தென்பகுதியிலும் வேறு நாடுகளிலும் வாழும் தமிழ்பேசும் மக்களின் ஒரு பகுதியினராகவே அவர்கள் கணிப்பிடுகின்றனர். அந்த அடிப்படையில் வரலாற்றின் தொடர்ச்சியில் தங்களது சுதேச அரசுகளுக்கெதிராக தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்த அரசர்களின் எச்சங்களாகவே இங்குள்ள தமிழர்களை அடையாளங்காண்கின்றனர். அதேவேளையில் தங்களுக்கு ஆதரவாக இருந்த பாண்டியர்களை தமிழர்கள் என்பதனை அறியாமல் போனதும் சிங்களமக்களின் துரதிஸ்டம் ஆகும்.

எப்படி சிங்கள மக்கள் மகாவம்சத்தின் வரலாற்று கதைகளை நம்பி, இந்த தீவு முழுவதும் சிங்கள பௌத்தர்களுடையது என்று வாதிடுகின்றார்களோ, அதற்கு குறையாத வகையில் இங்குள்ள ஈழத் தமிழர்களும் தங்களை சோழசாம்ராச்சியத்தின் பின்தோன்றல்களாக உருவகிக்கின்றனர். இலங்கைத்தீவின் சிங்கள மக்களை ஆட்கொண்டுள்ள மகாவம்ச மனநிலை மாற்றமடையவேண்டியது எவ்வாறு இந்த தீவின் நீடித்த சமாதானத்திற்கும் இணைந்த வாழ்வுக்கும் அவசியமானதோ, அது போன்றே ஈழத்தமிழர்கள் மத்தியில் காணப்படும் சோழவம்ச மனநிலையும் மாற்றமடைய வேண்டியுள்ளது.

சிங்களம் என்ற மொழி, தீவின் தென்பகுதியில் வாழ்ந்த மக்கள் தங்கள் கைவசமிருந்த தமிழ், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளின் சொற்கள் கலந்த ஒரு இயல்பாக உருவாகிய புதிய மொழியாக வளர்த்தெடுக்கப்பட்டது. அவர்கள் தமக்கென கலைகள், பண்பாடு, விழுமியங்கள், வாழ்வியல் முறைமைகள் ஆகிய வற்றினைப் படிப்படியாக ஆனால் ஒரு தொலைநோக்கு உணர்வுடன் வளர்த்தெடுத்தார்கள். இந்த தீவுக்கே உரித்தான தனித்துவமானதும் உலகின் வேறொரு பகுதியிலும் பிரயோகத்தில் இல்லாத துமான மொழியான சிங்கள மொழி, வளப்படுத்தப்பட்டு பாதுகாக் கப்பட்டது. அந்நியர்களின் படையெடுப்புக்களாலும் வேறு பண்பா டுகளின் மேலாதிக்கத்தாலும் சிதையாவண்ணம் அவர்கள் தங்கள் அரசர்களைக் கொண்டும் பௌத்த பீடங்களைக் கொண்டும் பேணிக்காத்தனர். அதனால்தான் அவர்கள் தங்களது மொழி, பண்பாடு, அதுசார்ந்த மக்கள் என்ற விடயங்களில் மிகவும் தீட்சர் ணயத்துடனும் உறுதியுடனும் சகல விதமான மூலோபாயங்களை யும் கையாண்டு போராடுகின்றனர்.

ஆனால் ஈழத்தமிழர்களாகிய நாம், மிக அண்மித்த தமிழ்நாட்டின் மொழி, பண்பாடு, கலை, கலாசாரம் ஆகியவற்றின் எல்லைமீறிய செல்வாக்குக்கும் பாதிப்பிற்கும் உள்ளாகியுள்ளோம். எங்களை இத்தீவின் தமிழ்க் குடிமக்களாக உருவகிப்பதிலும் கட்டியெழுப்புவதிலும் முழுமையாக உழைக்கத் தவறியுள்ளோம். அதன் விளைவே இன்று நாம் எதிர்கொள்ளும் எமது இருப்புக்கான போராட்டமாக மாறியுள்ளது என்றால் தவறாகாது.

எனவே எங்களது முதன்மையான பணிகளில் ஒன்றாக, எங்களைத் தீவின் குடிமக்களாக உருவகித்து கட்டியெழுப்பவேண்டும். ஈழத்தமிழருக்கான தனித்துவமான இயல், இசை, நாடகங்கள், பண்பாடுகள், வாழ்வியல் அடையாளங்கள் என்பன முன்னிறுத்தப்பட்டு, மக்கள் மயப்படுத்தப்படவேண்டும். அத்தகைய முயற்சிகள் காலத்திற்குகாலம் பல அறிஞர் பெருமக்களாலும் முன்னேற்றகரமான சிந்தனையும் செல்வமும் கொண்டிருந்த வள்ளல் பெருமக்களாலும் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் அது மூலோபாய ரீதியில் முன்னெடுக்கப்படாமலும் தனிநபர்கள் சார்ந்த இயக்கங்களாக வளர்ந்து தேய்ந்து போயின.

அடுத்து, இன்று இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார பிரச்சினையும் அந்நியசெலாவணி கையிருப்புக் குறைவும் உணவுகள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறையும் பூகோளந் தழுவிய கொரோனோ பெருந்தொற்றின் பக்கவிளைவுகள் என்று கூறினாலோ அல்லது அவ்வாறு நம்பினாலோ அது மிகவும் மடைமைத்தனமாகும்.

இன்றைய நெருக்கடிகளும் எதிர்மறையான விளைவுகளும் மனிதத்தவறுகளாலும் அவர்களது நேர்மையற்ற சிந்தனைகளாலும் தான் ஏற்பட்டது என்பதனை உறுதிபடக்கூறமுடியும்,

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இலங்கைத் தீவு தனது பெறுமதிமிக்க வளங்களுக்கும் உணவு மற்றும் வாசனைத்திரவியங்களுக்கும் புகழ்பெற்றது. அதன்காரணமாகத்தான் இத்தீவினை தம் ஆளுகையின் கீழ் கொண்டுவர ஐரோப்பியர் ஆவல்கொண்டனர். பொலநறுவையிலிருந்து ஆட்சிசெய்த முதலாம் பராக்கிரமபாகு மன்னன் ‘மழையிலிருந்து கிடைக்கும் ஒரு துளி நீரினையும் கடலுக்குச் செல்லவிடக்கூடாது’ என்ற தொலைநோக்குடன் பாராக்

கிரம சமூத்திரத்தைக்கட்டி நீரினைச் சேமித்து விவசாயத்தைப் பெருக்கினான்.

இத்தீவின் வளங்கள் மற்றும் பெறுமதி மிக்க பொருட்கள் மட்டுமல்ல காலநிலையும் சீதோஷணமும் மண்வளமும் நீர்வளமும் கூட ஐரோப்பியரின் கவனத்தையீர்த்தது. தமக்கு தேவையான தேயிலை, கொக்கோ, கோப்பி மற்றும் இறப்பர் பயிர்களை அறிமுகப்படுத்தி பெருந்தோட்டங்களை உருவாக்கினர். அவற்றினை உருவாக்குவதற்கும் பணியாற்றுவதற்கும் என தென்னிந்தியாவில் வறுமையினால் அல்லல் பட்டிருந்த மக்களை தோட்டக்கூலியாட்களாக இங்கு கொண்டுவந்தனர். அவர்களின் வருகையுடன் தீவிற்கே உரித்தான விவசாயமும் ஏனைய கிராமிய பொருளாதாரமும் கவனிப்பாரற்று உள்ளூர் மக்களின் பொருளாதாரமும் சமூகநிலையும் மிகவும் கீழ்நிலைக்கு சென்றது.

1948களில் சுதந்திரம் என்ற பெயரால் சுதேசிகளிடம் ஆட்சியதிகாரம் கையளிக்கப்பட்ட பின்பு, சுதேசிகளின் அரசியல் தலைவர்கள் தங்களுக்கான அதிகாரக் கதிரைகளுக்காக கூறுபட்டுமோதினர். குறிப்பாக சிங்கள அரசியல் தலைவர்கள் சனநாயகத்தின் பெயரால் ஆட்சிக்கதிரைகளைக் கைப்பற்றுவதற்காக சாதாரண மக்கள் மத்தியில் இனவெறுப்பு சிந்தனைகளையும் குழுநிலை மனோபாவங்களையும் விதைத்தனர். நாட்டின் எதிர்காலம் கருதிய தொலைநோக்குடன் பல தேசியம், பண்பாடு, மொழி, மத அடையாளங்களைக் கொண்ட மக்களை ஒருங்கிணைப்பதற்கு பதிலாக அவர்களைப் பிரித்தனர். எண்ணிக்கையில் பெரும்பான்மையாக காணப்பட்ட சிங்களபௌத்த வாக்காளரின் வாக்குப்பலத்தில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தவறானதும் இனக்குரோதம் கொண்டதுமான வாக்குறுதிகளை வழங்கினர். பிரித்தானியர்களும் மிசனரிமார்களும் வழங்கிய ஆங்கிலக் கல்வியினால் தங்களை வளம்படுத்தி அரசின் விசுவாசமுள்ள பணியாட்களாக உழைத்த தமிழ் அரச உத்தியோகத்தரை சிங்கள மொழிமட்டும் சட்டத்தின் மூலம் பணிப்பொறுப்புகளிலிருந்து வெளியேற்றினர். திறமையும் நேர்மையான உழைப்பாற்றலும் அரசுக்கு விசுவாகமும் கொண்ட குடிமக்களை வெளியேற்றியதன் மூலம் தேசத்தின் முன்னோக்கிய பயணம் ஆரம்பத்திலேயே தடம்புரளவைக்கப்பட்டது.

பராக்கிரமபாகு அரசனின் கனவினை மறந்து, ஐரோப்பியர் அறிமுகப்படுத்திய இரப்பர் விளைபொருளைக் கொடுத்து, சீனாவின் அரிசியினை இறக்குமதி செய்து, நாட்டுமக்களுக்கு இலவசமாக வழங்கி, அவர்களை கையேந்திகளாக மாற்றினர். ஐந்து வருடத்திற்கு ஒருமுறை வரும் தேர்தலில் பதவிக்கதிரைகளை காப்பாற்றுவதற்காக இனக்குரோதமான வன்முறைகளையும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்ததன் மூலம் இந்நாட்டினை அழிவின் பாதைக்கு திருப்பினர்.

இலங்கைத் தீவின் தேசியம் என்பதே ஏழைப்பெண்களின் கண்ணீரினாலும் கடும் உழைப்பினாலும் கட்டியெழுப்பப்பட்டதே. 21ம் நூற்றாண்டில் இலங்கையின் அந்நிய செலாவணி வருமானம் நான்கு துறைகளை நம்பியதாக கட்டமைக்கப்பட்டிருந்தது. ஒன்று, தேயிலை ஏற்றுமதி வருமானம். அடுத்து, சுற்றுலாக்கைத்தொழில். மூன்றாவது, மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணியாட்களாக சென்று பலிக்கடாக்கள் ஆக்கப்படும் இத்தீவின் ஏழைக் குடிமக்களும் பெண்களும் ஈட்டும் வருமானம். நான்காவதாக, எந்தவொரு தொழிலாளர் பாதுகாப்பு சட்டங்களாலும் கேள்விக்குட்படுத்தப்பட முடியாததும், தொடர்ச்சியான எட்டு மணித்தியாலங்களுக்கு பணியாற்றும் நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டதும், பாலியல் சுரண்டல், உழைப்புச் சுரண்டல், கூலிச் சுரண்டல் ஆகியவற்றுக்கு பலியாக்கப்பட்டதுமான இந்த நாட்டின் ஏழை இளம் பெண்களின் உழைப்பில் உருவாகும் தைத்த ஆடைக்கைத்தொழில்.

இந்த நான்கு துறைகளும் சொந்தக் குடிமக்களை மோசமான சுரண்டலுக்கு உட்படுத்தியும் அவர்களுக்கான குடியிருப்பு, பாதுகாப்பு, நியாயமான உழைப்புக்கேற்ற கூலி ஆகியவற்றை வழங்க மறுக்கின்றதுமான துறைகள். இப்பெண்களினதும் ஏழை உழைப்பாளிகளினதும் கண்ணீரால் இந்த நாட்டின் அந்நிய செலாவணி சேகரிக்கப்படுகின்றபோது, அதனை எவ்வளவு பொறுப்பாண்மையுடன் கையாளவேண்டும் என்ற எந்தவிதமான பொறுப்புக்கூறல் நியமங்களுமின்றி கையாண்டதுதான் இன்றைய நெருக்கடிக்கான உண்மைக்காரணம்.

இந்த நாடு ஐரோப்பியரிடமிருந்து ஆட்சியதிகாரத்தை சுதேசிகள் பெற்றுக்கொண்டாலும், அவர்களிடம் இருந்த பேராசை காரணமாக ஒட்டுமொத்த நாட்டினையும் போட்டுடைத்தனர். அதேபோன்றே தமிழ் தலைவர்கள் மத்தியில் இருந்த அர்ப்பணிப்பும் தமிழ்த்தேசிய உணர்வும் ஆக்கபூர்வமான வழிமுறைகளூடாக தமிழ்ச் சமூகத்தை கட்டமைக்கின்ற ஆற்றலும் தொலைநோக்கும் கொண்ட தமிழ்மக்களின் தலைவர்கள் என்போரின் மறைவுக்கு பிறகு, பதவிக்கதிரைகளுக்கான கட்சி அடையாளங்களை முன்வைத்து மக்களைப் பிரிப்பதும் அவர்களின் ஒற்றுமையைச் சிதைப்பதுமான தமிழ் அரசியல்வாதிகளின் பொற்காலம் உருவாகியுள்ளது.

எதிர்காலத்தில், வடக்கு கிழக்கு மாகாணங்களும் அதன் நகரங்களும் விரைந்த அபிவிருத்தியை முன்னெடுக்கும் போது, தீவின் ஏனைய மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் வாழும் மக்கள் தன்னியல்பாகவே கவர்ந்திழுக்கப்படுவார்கள். வடக்கு, கிழக்கு தமிழர்கள் எவ்வாறு வாய்ப்புக்களைத்தேடி தென்னிலங்கையினை நோக்கி தங்களை நகர்த்தினார்களோ, அதுபோன்ற புதிய நிலைமை உருவாகும். இலங்கை அரசினால் ஊக்குவிக்கப்படாத திட்டமிடப்படாத தன்னியல்பான மக்கள் நகர்வு காரணமாக கிளிநொச்சியும் மன்னாரும் முல்லைத்தீவும் பெருமளவு தமிழர்களல்லாத மக்களின் வாழ்விடமாக மாறும். அவர்கள் அந்தப் பிரதேசங்களின் வாக்காளர்களாக, உள்ளூர் ஆளுகையிலும் ஏனைய பிரதிநிதிகளைச் செலுத்தவதிலும் உரிமை கொண்டிருப்பார்கள். இம்மாவட்டங்கள் பல்தேசிய இனங்களின் வாழ்விடமாக பெருமைபெறும். மாவட்டங்களின் பிரதிநிதித்துவம் கூட அவர்களின் குரல்களாகவும் கருத்துக்களாகவும் மேலெழும். இது அடுத்த இருபத்திஐந்து வருடங்களுக்குள் நிதர்சனமாகும். இதுவே இன்றைய திருகோணமலையினதும் வவுனியாவினதும் யதார்த்தமாக உள்ளது.

இத்தகைய நிலைமைகளை நாங்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றோம் என்பது பற்றிய விவாதத்தை எப்போது தொடங்கப்போகின்றோம். யார் தொடங்குவது. எங்கிருந்து தொடங்குவது. வெறுமனே எல்லையிட்டுத் தடுப்போம் என்ற குருட்டுத் தேசியவாதக் கருத்துக்களைத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கப்போகின்றோமா? இல்லை, எத்தகைய மாற்றங்கள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு எங்களைத் தகவமைத்துக்கொள்ளும் வல்லமை கொண்ட சமூகமாக எங்களை மாற்றப்போகின்றோமா?.

அரசியல் தீர்வு, அதிகாரப்பரவலாக்கல் போன்ற விடயங்கள் ஒற்றைப் பரிமாணங்கொண்டவை. எந்தவிதமான கால அட்டவணையும் இல்லாத அரசியல் தீர்வு விவகாரத்திற்காக கனவு கண்டுகொண்டு, தொலைநோக்கும் சமூகங்களின் ஆளுமைகளை வலுப்படுத்தும் எந்தவிதமான தந்திரோபாய வேலைத்திட்டங்களையும் களத்தில் கொண்டிராத 'கதிரைப்போராட்ட தலைவர்'களையும் நம்பி சீரழிந்து போகப்போகின்றோமா?

கேள்விகளால் வேள்வி செய்வோம்.

எங்கள் எதிர்காலத்தை நாங்களே கட்டமைப்போம்.

தந்திரோபாய பலமும் வளமும் கொண்ட உலகின் முதன்மையான சமூகங்களில் ஒன்றாக மேலேழுவோம்.

இணைந்த வாழ்விலும் இருப்பும் இசைவும் பங்களித்து ஈழத்தவர்களாக, முழுத்தீவின் மீதும் உரிமைகொண்ட குடிமக்களாக எங்களைத் தகவமைத்துக்கொள்வோம்.



selvin.ireneuss.mariampillai@thaiveedu.com

# நேட்டோவுற்கு உக்ரேன் யுத்தம் இலங்கைக்கு தமிழ் மக்கள்!

எஸ்.கே. விக்னேஸ்வரன்

உக்ரேனின் மீதான ரஷ்யாவின் ‘ஆக்கிரமிப்பு’ யுத்த நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்காவிலிருந்தும் அதன் கூட்டாளிகளான நேட்டோ நாடுகள், பிற அமெரிக்க சார்பு நாடுகள் என்பவற்றில் இருந்தும் இயங்கும் ஊடக நிறுவனங்கள் எப்படி ஒரு கெட்டித்தனமான ‘ஜனநாயக பிம்பத்தை’ அவற்றுக்கு வழங்கிவருகின்றன என்பதை தாய்வீடு வாசகர்கள் கவனித்திருக்கக்கூடும். கிட்டத்தட்ட, இந்தப் போக்குடன் இணைத்து நோக்கக்கூடிய விதத்தில் கடந்த இரண்டு மூன்று வாரங்களுக்கு மேலாக இலங்கையில் நடந்துகொண்டிருக்கும் பல ‘அற்புதமான அரசியற் திருப்பங்கள்’ தொடர்பாக அங்கிருந்து வெளிவரும் தமிழ் ஆங்கில நாளிதழ்களில் வரும் செய்திகளும் ‘ஆய்வுக்’ கட்டுரைகளும் அமைந்திருப்பதும் வாசகர்களின் கண்களில் பட்டிருக்கக்கூடும். ஒரு வித்தியாசம் என்னவென்றால் அங்கு



இப்போது ஆயுதமேந்திய யுத்தம் நடக்கவில்லை என்பதுதான். மற்றும்படி முன்னெப்போதும் இல்லாத வகையில் தமிழ் மக்களுக்கான அரசியற் தீர்வு, தமிழ் மக்களின் உடனடியான பிரச்சினைகளுக்கான தீர்வு என்பவை பற்றிய கோரிக்கைகளை இலங்கை ஜனாதிபதி கேட்கத் தயாராக இருக்கிறார் என்பதும், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெயசங்கர் அவர்கள் இந்த விடயத்தை அக்கறையுடன் அணுகுகிறார் என்பதுவும் நம்பமுடியாத ஆனால் நடக்கின்ற காரியங்களாக உள்ளன. நேட்டோ நாடுகளிலிருந்து வரும் ஊடகங்கள் போல தமிழ் ஆங்கில ஊடகங்களும் பெரும் புரட்சிகரமான ஜனநாயக மாற்றங்கள் நடப்பதாக எழுதி வருகின்றன. தமிழ்க் கட்சிகள் பெரும் நம்பிக்கையுடன் மிகவும் அக்கறையுடன் கடிதங்களை வரைந்துகொண்டிருக்கிறார்கள்.

இக்கட்சிகளிடையே, இந்தியாவுடனும் இலங்கை அரசுடனும் தாம் பேச விரும்பும் அல்லது அவர்களிடமிருந்து தாம் பெற விரும்பும் தீர்வுகளுக்கான கோரிக்கைகளில் மெல்லியதான, கவனத்துக்குரிய வேறுபாடுகள் இருக்கின்றனதான் என்றபோதும் அவை பொதுப்படையாக ஒருவிடயம் தொடர்பாகவே பேசிக் கொண்டிருக்கின்றன. அதாவது தமிழ் மக்கள் இந்த நாட்டின் ஏனைய இனக்குழுமங்களுக்குரிய உரிமைகளையும் வாய்ப்புக்களையும் கொண்டவர்களாக வாழ்வதற்கு ஏற்ற அரசியல் அமைப்பு ரீதியான மாற்றம் அவசியம் என்பதே அது.

இந்த அடிப்படையில் தான் இப்போது தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக்கூறும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும், அவை பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தாலும் சரி, வகிக்காவிட்டாலும் சரி இயங்கி வருகின்றன. இதைத் தவிர இந்தக் கட்சிகளிடையே வேறு எந்தப் பாரிய வேற்றுமைகளும் இல்லை. தவிரவும் இந்த நிலைப்பாடுகளை முன்வைத்து அரசுக்கெதிராக போராடுவதற்கான வேலைத்திட்டங்களாக அவர்கள் கையில் எடுத்திருக்கும் ஒரே போராட்ட வழிமுறை பாராளுமன்றத் தேர்தலில் நிற்பதும் அங்கு சென்று இதற்காகக் குரல் எழுப்புவதும் தான். இதுதவிர இன்னொன்றையும் இவர்கள் தொடர்ச்சியாகப் பயன்படுத்திவருவதும் உண்டு. அதாவது இந்திய அரசுடன் பிரதானமாகவும், பிறநாட்டு அரசுகளுடன் குறிப்பாக அமெரிக்க, ஐரோப்பிய அரசாங்கங்களின் பிரதிநிதிகளுடன் அவ்வப்போது உரையாடுவதும் அதன் மூலமாக இலங்கை அரசாங்கம் மீதான அழுத்தத்தைப் பிரயோகிக்கத் தூண்டுவதும். அவர்களைப் பொறுத்தவரை, இவற்றைச் செய்வதற்காக தமது கட்சியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பிவிட்டால் (அனேகமாக கட்சித் தலைவர்களே பாராளுமன்றம் செல்கிறார்கள்) இதைத் தவிர கட்சிகளுக்கு, தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கு செய்வதற்காக வேறெந்த வேலைகளும் இல்லை. அடுத்ததாக மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றுக்குப் பிரதிநிதிகளை அனுப்புவது இன்னொரு வேலையாக இருக்கும். அதுவும் முடிந்துவிட்டால் அவ்வளவுதான். பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசும் பேச்சுக்கள், அவர்கள் செல்லும் இடங்கள் என்பவை பற்றிப் பத்திரிகைகளில் வரும் செய்திகளுக்கு அப்பால் மக்களுக்கு வேறெதுவும் தெரிந்திருப்பதில்லை. மக்கள் அதைப்பற்றி யோசிக்கவும் விவாதிக்கவும் என்று, அவர்களுக்குக் கட்சிக்குள்ளும், வெளியிலும் எந்த வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதும் இல்லை. மாறாக, தாம் எடுக்கும் தீர்மானங்களை, செய்யும் நடவடிக்கைகளை மக்கள் மத்தியில் அரையும் குறையுமாகப் பூசி மெழுகி அறிவிப்பது மட்டுமே போதுமானது என்பதே இந்தக் கட்சிகளின் தலைவர்களது நிலைப்பாடு.

கடந்த இரு வாரங்களிற்கு மேலாக, நாட்டின் பொருட்கள், குறிப்பாக உணவுப் பொருட்களுட்பட்ட முக்கிய அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக உள்நாட்டில் மிகவும் தீவிரம் பெற்றிருக்கும் எதிர்ப்பலைகள், ஆர்ப்பாட்டப் போராட்டங்கள் அதற்கு மிகப்பெரிய நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. தமது சரிவரத் திட்டமிடப்படாத, வருமானத்தைப் பெற்றுத்தராத பிரமாண்டமான

வேலைத்திட்டங்களை வெறும் அரசியல் மற்றும் தனிப்பட்ட நலன் களுக்காக, பெருமளவான அந்நியக் கடன் முதலீடுகளுடன் தொடங்கியதன் விளைவாக, நாட்டின் 'கஜானா காலியாகும்' வர லாறு காணாத நெருக்கடி நிலையை இந்த அரசாங்கம் தனக்குத் தானே உருவாக்கிவிட்டுள்ளது. ஏற்கனவே உள்ள கடன்களைக் கட்டமுடியாத 'குடிமுழுகிப்'போன நிலையிலிருந்து விடுபட திரும் பவும் அந்நிய நாடுகளில் இருந்து கடன்களைப் பெற்று நிலை மையைச் சமாளிக்க முயலும் நிலைக்கு அரசாங்கம் வந்துள்ளது. கடன்காரனுக்கு, யாரும் பிச்சைக்காரனுக்குக் காசு போடுவது



போல் நன்கொடையாக எதையும் கொடுக்கப் போவதில்லை. அவ னிடம் எஞ்சியுள்ள மதிப்பான சொத்துக்களுக்கு ஈடாகவே யாரும் பணம் கொடுப்பார்கள். அறவிட முடியாத போது சொத்துக்க ளைப் பிடுங்கிவிடமுடியும் என்பதை கடன் வழங்குனர்கள் தெரிந்தே செய்கிறார்கள்.

இலங்கை அரசாங்கங்கள், குறிப்பாக இன்றைய ஆட்சித் தலை வர்களான ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஆட்சியில் இருந்த காலத் திலிருந்து, கிட்டத்தட்ட கடந்த இரு தசாப்தங்களாக அபிவிருத்தி என்ற பெயரில் செய்யப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும், அந் தக் குடும்பத்தினரையும் அவர்களைச் சார்ந்தோர்களையும் வளப்ப டுத்தியதே அன்றி நாட்டுக்கோ மக்களுக்கோ கடன் சுமையைத் தவிர வேறெதையும் தந்ததில்லை. அபிவிருத்தியின் பேரால் சீனா, ஜப்பான், இந்தியா, பங்களாதேஷ் என்று உலக நாடுகளிலிருந் தும், ஆசிய வங்கி, சீனாவின் எக்சிம் வங்கி என்றும், கடந்த ஜன வரி மாதம் வரை வாங்கிய அந்நியக் கடன்களின் தொகை 51,117 பில்லியன் அமெரிக்க டொலர் என்று அரசாங்க அறிக்கைத் தக வல்கள் தெரிவிக்கின்றன. இதற்குப் பின்னாகப் பெற்றுக் கொண்ட கடன்கள், குறிப்பாக இந்தியாவிலிருந்து கொடுக்கப்பட்டவை, இவற்றுள் அடங்காது. தவிர இவற்றுக்கான வட்டியாகச் செலுத் தப்பட வேண்டிய தொகை தனியானது. இதன்படி இலங்கையில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் கிட்டத்தட்ட 240,000 அமெரிக்க டொலர் கடனுடன் பிறக்கிறது என்று சொல்லவேண்டும்.

நாட்டில் நாளுக்கு நாள் மக்களது நாளாந்த தேவைகளுக்கான பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி அதிகரிப்புக்களால் அவர்கள் ஆத்திரமூட்டப்பட்டு வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை எதிர்த்துப் போராட்டத்தில் இறங்குகிறார்கள். ஆட்சியில் ஒட்டியி ருந்த பல அரசியல்வாதிகள் 'செத்த நாயிலிருந்து உண்ணி களர் வதைப் போல' ஒவ்வொருவராகக் களரத் தொடங்குகின்றனர்.

தமது கண்முன்னாலேயே தம்மோடு இணைந்து இருந்த பலரும் பதவிக்காக மட்டுமே தன்னுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நேரடியாகவே காணும் சந்தர்ப்பம் கோத்தபாயாவுக்கு நன்றாகத் தெரிய வருகிறது. இத்தகைய ஒரு பின்னணியில் தான் திடீரென அவர் சர்வகட்சிக் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கான அழைப்பை அனைத்துக் கட்சிகளுக்கும் அறிவிக்கிறார்.

வடக்குக் கிழக்கைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ரெலோ தவிர்ந்த ஏனைய கட்சிகள், அரசாங் கத்துடன் இணைந்து இயங்கும் சந்திரகாந்தனின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, அமைச்சர் தேவானந்தாவின் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தவிர்ந்த மற்றக் கட்சிகள் கலந்து கொள்ளவில்லை. தமிழ் மக்களது பிரச்சினைக்கான தீர்வைப் பரிசீ லிக்க அவர் தயாரில்லாதவர். அவருடன் பேசுவதில் அர்த்தம் இல்லை என்று அவர்கள் கூறினர். அவருடன் பேசுவதை விட இந் தியாவுடன் பேசுவதையும் அதன் மூலம் கோத்தபாய ராஜபக்ச வுக்கு அழுத்தம் கொடுப்பதுமே சரியானது என்று அவர்கள் தெரி வித்தார்கள். இலங்கையின் ஆட்சியாளர்களை அடிபணிய வைக்க முடியாவிட்டாலும் ஒரு கட்சியாக ஏற்று தம்முடன் பேச வைக்கு மளவுக்கு தம்மைப் பலப்படுத்த முடியாதவர்களால் இதைத்தவிர வேறெதைச் செய்யமுடியும்? ஆனால் கூட்டமைப்பு சந்தித்தது. அதுவும் நீண்டகால இழுத்தடிப்புக்குப் பின்னர் தானே ஒருங்கி ணைத்த சர்வகட்சி மாநாட்டுக்குத்தான் ஜனாதிபதியுடனான அந் தச் சந்திப்பு நிகழ்ந்தது. இந்த மாநாட்டுச் சந்திப்பில் கூட்டமைப் பினரால் முன்வைக்கப்பட்ட நான்கு (அரசியற் கைதிகள் விடு தலை, காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய உண்மைநிலைகளை அறிதல், வடக்குக் கிழக்கிலுள்ள நிலங்கள் சூறையாடப்படல், வடக்குக் கிழக்கு அபிவிருத்திக்கான தனியான நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கான ஏற்பாடு என்ற) விடயங்கள் சார்ந்த கோரிக் கைகளை பரிசீலிக்க தயாராக உள்ளதாக ஜனாதிபதி அறிவிக் கின்றார். ஜனாதிபதி கோத்தபாயாவின் இந்த நிதான அணுகுமு றைக்கான காரணம் மிகவும் தெளிவானது. நாட்டில் அரசுக்கெதி ராக எழுந்துவரும் எதிர்ப்பலைகள், நிதித்தட்டுப்பாடு என்பவற்றிலி ருந்து மீள, திரும்பத் திரும்பக் கடன் வாங்குவதிலேயே தங்கி நிற்கவேண்டிய சூழலில் இருக்கும் ஒரு ஜனாதிபதியால் இதைத் தவிர வேறெந்தப் பதிலையும் தெரிவித்திருக்க முடியாது. ஏனென் றால் இந்தக் கோரிக்கைகளின் பின்னாலுள்ள மிக அடிப்படை யான உண்மையை அவர் அறியாதவர் அல்ல. ஆனால் இன் றுள்ள நிலைமை காரணமாக, அதை தான் இத்தனைநாள் அறிந் திருக்கவில்லை என்பதுபோல பாசாங்கு செய்தாவது அவற்றைப் பரிசீலிக்கத் தயார் என்று அறிவிக்கவும் வேண்டிய நெருக்கடி அவருக்கு இருந்தது. இதைத் தவிர்ந்த எந்தப் பதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பையும், அரசை எதிர்த்து கூட்டத்தில் கலந்து கொள்ளாத பிற கட்சிகளை நோக்கி நகரவைத்துவிடும் என்பதை அவர் அறிந்தே இருந்தார். தவிரவும் இலங்கை வரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் தனது இந்தப் பதிலை மிகவும் கவன மாக அவதானிப்பார் என்பதும் கோத்தபாயவுக்குத் தெரியாத தல்ல.

இந்த மாநாடு முடிவுற்ற பின் நாடு முழுவதும் ஒன்றுதிரண்டு அர சுக்கெதிராகக் குரலெழுப்பும் நிலையில் எழுந்த கையறு நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ள நிலையில் தான் இந் திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்திறங்கினார். ஒரு இந்திய அரசின் அமைச்சராக அவர் வெற்றிகரமாக இலங்கை அரசாங்கத்துடன் ஆறு முக்கிய விடயங்களான கல்வி, மின்சாரம், பாதுகாப்பு, மீன்பிடி, பண்பாடு, தொழில்நுட்பம் ஆகிய விடயங்க ளில் இலங்கை அரசுடனான 'பரஸ்பர உறவை வலுப்படுத்தும்' நோக்கிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார். இதில் முக்கியமாக வடக்கின் மூன்று தீவுகளில் சீன அரச உதவி யுடன் நடக்கவிருந்த ஹைபிரிட் மின்வழங்கல் திட்டம் இப்போது இந்திய அரசின் கைகளுக்கு மாறியுள்ளது என்பதும் இங்கு கவ னத்துக்குரியது. இந்திய அரசுக்கு அவசியமான இலங்கை அர சைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கான ஆரம்ப வேலைகளை செய்து முடித்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், தமிழ்க் கட்சிக ளுக்குப் பொதுவாக புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் அதிக நம்பிக்கை வைக்கவேண்டாம் என்று அறிவித்து விட்டு நாடு திரும்பியுள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடக்கும் எல்லா வித மான அடக்குமுறைகளுக்கான தீர்வும், அந்நிய நாடொன்றின் தலையீட்டில் நடக்கும் போது அந்த நாட்டின் நலன்களைப் பிரதா னமாகக் கொண்டு நடக்குமே அன்றி தமிழ் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு நடக்கப் போவதில்லை என்பது 1987 யூலையில் செய்யப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்குப் பிறகு மீண்டும் இந்த ஆறு உடன்படிக்கைகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அப்போது ஜே.ஆர் இந்திய மிரட்டலுக்காக கைச்சாத்திட்டார். அந்த மிரட்டலைச் செய்வதற்கான அடிப்படைத் 'தார்மீகபலத்தை' இந்தியா, தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப்ப யிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து உருவாக்கியிருந்தது. அதைத் தொடர்ந்து தொடர்ச்சியாக தொழிற்துறை, அரசியல், பண்பாடு

போன்ற துறைகளில் இந்தியா இலங்கையில் பலமாகக் காலூன்றலை எதிர்பார்த்தபோதும் 2009 வரையில் அவை பெரியளவு சாத்தியப்படவில்லை. ஆனால் அதன் பின் பல பாரிய திட்டங்களை நடத்த முயன்றது. அனுமார் வழிபாடே அறியாதிருந்த நாட்டில், பிரமாண்டமான அனுமார் சிலைகள் நிர்மாணிக்கப்பட்டது முதல், காவியணிந்த சனாதன இந்துமதப் பிரச்சாரகர்களின் 'பண்பாட்டுப் படையெடுப்பு' பரவலாகத் தொடங்கியதும் அதன் பிறகுதான். யாழில் அண்மையில் கொழும்பிலிருந்தபடி அமைச்சர் கலாநிதி ஜெயசங்கரால் திறந்துவைக்கப்பட்ட யாழ்ப்பாண பண்பாட்டு மையம் கூட இவற்றில் ஒன்றுதான். இப்போது ஊழலும் கடனும் மலிந்து திணறிக் கொண்டிருக்கும் இலங்கை அரசுக்கு, உதவுவது என்ற பெயரில் நிதி வழங்கி தமது முதலீடுகளை இலங்கையில் வலுப்படுத்த தமிழ் தரப்பைத் தங்களுக்கு ஆதரவாக வைத்திருப்பது இந்திய அரசுக்கு அவசியம். அந்த அடிப்படையில், அவர்களது கோரிக்கைகளில் தமக்குச் சாதகமான, குறைந்த பட்சம் பாதகமற்ற கோரிக்கைகளை இலங்கை அரசு வழங்கவேண்டும் என்பதை இந்தியா வலியுறுத்தவே செய்யும்.

இன்று இலங்கையில் தமிழ் மக்களின் அரசியற் கோரிக்கைகளை தமது கரங்களில் எடுத்துள்ள தமிழ் அரசியல் தலைமை பேசும் தமிழ்த் தேசியம், ஈழத் தமிழர்களுக்கான தேசியம் கிடையாது. ஈழத் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டது திட்டமிட்ட இன அழித்தொழிப்பு அல்லது இனப்படுகொலை என்று, இந்தக் கட்சிகள் - குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் தமிழ் தேசியம் என்பதை ஒரு தேச மட்டத்திலான தேர்தல் வாக்கு வங்கிக்குத் தேவையான அளவிலேயே ஏற்றுக் கொள்கின்றனர். தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் உற்பத்தி சார்ந்த தொழிற்துறைகளை ஊக்குவிப்பதற்குப் பதிலாக அந்நிய முதலீடுகளை ஊக்குவிப்பதிலேயே அவர்களது கவனம் குவிந்துள்ளது. புலம்பெயர் தமிழர்களது முதலீடு பற்றி அவர்கள் கூறுவதெல்லாம் வடக்குக் கிழக்கின் மூலவளங்கள் சார்ந்த உற்பத்திகளை விட மனித உழைப்பை மட்டும் பெற்றுக் கொண்டு நடக்கும் பெறுமதி சேர்க்கும் (value addition) தொழில்கள். குறிப்பாக, காணிகள் வாங்கி வீடுகள் கட்டுதல், சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் விதத்திலான தொழிற்துறைகளை வளர்த்தெடுத்தல் போன்றவையே இதுவரை முன்வைக்கப்பட்ட தொழிற் துறைகளாக உள்ளன. அந்நிய உற்பத்திகளை இறக்குமதி செய்து வியாபாரம் செய்யும் வணிக முதலாளித்துவம் ஒரு நாட்டின் நிலைபேறான தேசியப் பொருளாதாரத்தை வளர்த்துவிடப் போதுமானதல்ல. பரந்துபட்ட மக்களை வெறுமனே நுகர்வோராக மட்டும் கருதும் எந்த ஒரு நாடும் பொருளாதார ரீதியாக முன்னேறிவிட முடியாது.

இப்போது கோத்தபாயா தலைமை, உரையாடலுக்குத் தயாராக இருப்பது என்பது அவருக்கு வந்துள்ள நெருக்கடியின் பலனாகவே அன்றி, அவர் தன்னை சிங்கள மக்களது மட்டுமல்ல தமிழ், முஸ்லிம் மக்களுக்குமான ஜனாதிபதிதான் என்பதை உணர்ந்ததால் அல்ல. இன்றைய கோத்தபாயா போய் இன்னொருவர் வந்தாலும்கூட இதே நிலமை தான் நீடிக்கும். ஒருவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறும் எல்லாம் அரசியல் யாப்பில் எழுதப்பட்டு விட்டன என்பதனால் அப்படியே எல்லாம் நடக்கும் என நம்பும் படி மக்களிடம் கூறக்கூடிய நிலையில் யதார்த்த நிலைமைகள் இருந்ததில்லை. அல்லது அப்படி அவை மாறிவிட்டதற்கும் எந்த ஆதாரங்களும் இல்லை. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 13 வது திருத்தச் சட்டம், அது கொண்டிருந்த அற்பசொற்ப அதிகாரங்களையும் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் பிடுங்கிக் கொள்ளக் கூடிய தன்மையைக் கொண்டதாகவே இருந்தது. அதில் சொல்லப்பட்ட தமிழ் மக்களது நலன்சார்ந்த முக்கியமான எந்த விடயங்களும் நடைமுறைக்குப் போகவும் இல்லை. உண்மையில் அவற்றைப் பறிப்பதன் மூலமாக இலங்கை அரசு சிங்கள மக்களை ஏமாற்றித் தம்மை அவர்களது தலைவர்களாக கடந்த 35 வருடங்களாக அரசியலில் நீடித்திருக்க முடிந்ததைத் தவிர வேறெதையும் சாதிக்கவும் இல்லை. ஒப்பந்தங்களும் சட்டங்களும் அவற்றை ஏற்றுக்கொண்டு நடக்கும் வரைதான் பயன் தருபவை. தமது தனிப்பட்ட நலனுக்காக அவற்றைப் பயன்படுத்தும் அரசியற் தலைவர்களால் எந்த ஒப்பந்தங்களையும் சட்டங்களையும் பயனற்றதாக்கிவிட முடியும்.

கோதபாய ராஜபக்ச ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து சட்டத்தையும் நீதி மன்றங்களையும் தனதும் தனது சுற்றத்தவரதும் நலனுக்கு ஏற்றவிதத்தில் வளைத்தெடுத்த போது, அந்த நடவடிக்கைகளுக்கு எதிராக ஏனைய கட்சிகள் மக்கள் முன் சென்று எத்தகைய போராட்டத்தையும் நடத்தவில்லை. ஒருசில பத்திரிகையாளர்கள், அதிகாரிகள் அதைச் செய்தார்கள். அவர்கள் எல்லோரும் இப்பொழுது சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு சிறைக்குள் தள்ளப்பட்டவர்களுக்கு ஆதரவாக எந்தத் தமிழ், முஸ்லிம் ஏன் எந்தச் சிங்கள அரசியற் கட்சிகளும் குரலெழுப்பவில்லை. (நீதி மன்றுக்குச் சென்று வாதாடுவதை, அதுவும் அவசியமானதுதான் என்றபோதும் அதை ஒரு மக்கள் போராட்டமாக நான் நம்பவில்லை). சட்டத்தை மீறி அரசாங்கம் செய்த, நீதிமன்றங்கள் செய்த, அதிகாரிகள் செய்த எந்த விடயங்களையும் எந்த அரசியற்கட்சிகளும் கேள்விக்குள்ளாக்கவில்லை. அவற்றை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவுமில்லை, ஞானசார தேரரின் அடாவடித்தனத்தை, இராணுவத் தளபதிகளின் ஊழல்களை, அம்பாந்தோட்டை முதல் கொழும்பு துறைமுகம் வரையிலான மக்களை மீளமுடியாக் கடனுக்குள் ஆழ்த்திய பயனற்ற முதலீடுகளைக் குறித்து யாரும் மக்களிடம் எடுத்துச் செல்ல எண்ணவில்லை. நாட்டின் இன்றைய பிச்சையெடுக்கும் நிலைமைக்குக் காரணம் வெறுமனே ராஜபக்ஷ குடும்ப ஆட்சி என்று யாரும் அவற்றைக் கைகழுவி விட்டுவிட முடியாது. அந்த அரசாங்கத்தின் அவையிலே அங்கம் வகித்த ஒவ்வொருவரும், தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைவரும் பொறுப்பாளிகளே. பாராளுமன்றம் செவிசாய்க்காவிட்டால், தம்மைத் தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்பிய மக்களிடம் அதை எடுத்துச் செல்வது அந்தப் பிரதிநிதிகளின் தார்மீகப் பொறுப்பும் அரசியற் கடமையும் அல்லவா? அப்படி இல்லை என்றால் இவர்களெல்லாம் தம்மை எப்படி தமது மக்களின் அரசியற் தலைவர்கள் என்று நெஞ்சை நிமிர்த்திச் சொல்ல முடியும்?

மக்களை அரசியல்மயப்படுத்துவதிலோ, அவர்களை ஜனநாயக உரிமைகளுக்கான தொடந்தேற்சியான போராட்டத்தில் பரவலாக அணிதிரட்டுவதிலோ அக்கறையற்று நடத்தப்படும் எந்தப் போராட்டமும் மக்கள்போராட்டமாக ஆவதில்லை. இப்போது மக்கள் இணைந்து நடந்த, நடக்கின்ற போராட்டங்கள் எல்லாமே வெறும் அடையாளப் போராட்டங்கள் மட்டுமே. தமிழ்க் கட்சிகள் அத்தகைய அடையாளப் போராட்டங்களைக்கூட சுயமாகத் தாமாகவே திட்டமிட்டு மக்களை அணிதிரட்டிச் செய்பவர்களும் அல்ல. தொழிற்சங்கப் போராட்டங்களைச் செய்ய ஒரு அரசியற்கட்சி அவசியம் இல்லை. இருந்தால் நல்லதெனினும் அது இல்லாமலே கூட தொழிலாளர்கள் தமது தேவைகளுக்கும் உரிமைகளுக்குமாகப் போராடக் கூடியவர்கள் தான். அதை அவர்களது தொழிற்சங்கங்களே செய்யும்.

இந்த பேச்சுவார்த்தைகள், இராஜபக்ச குடும்பத்தினரின் இடைக்கால மீட்சிக்காக ஓரளவாவது உதவும் என்று அவர்கள் நம்பும் வரை, ஒருசில மாற்றங்கள் நடக்கும் என்ற நம்பிக்கையுடன் இக்கட்சிகளை இந்தியாவுக்கும் இலங்கைக்குமாக ஓடவைக்கும் என்பதைத் தவிர, பெரிதாக எந்த எதிபார்ப்புகளும் நிறைவேறப் போவதில்லை. வேண்டுமானால் கூட்டணி முன்வைத்த அந்த அடிப்படைக் கோரிக்கைகள் நான்கில் ஒன்றிரண்டு அல்லது நான்கும் சிலவேளை சாத்தியப்படலாம். ஜெயசங்கர் அவர்களிடம், அரசாங்கம், அவர் திரும்பி இந்தியா போகுமுன்னராகக் கேட்ட இன்னொரு பில்லியன் கடனைப் பெற, அதற்கு அரசாங்கம் இணங்கலாம்.

ஆக, இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை வருகையிலும், அவருடனான உரையாடல்களிலும் தமிழ் மக்கள் நம்பிக்கையுடன் நோக்குவதற்கு எதுவும் இல்லை. அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் உக்ரேனை வைத்து நடத்தும் ரஷ்யாவின் யுத்தத்தை, தங்களது மேலாண்மைக்கும் பொருளாதார நலனுக்குமே என்பதை மறைத்து, எப்படி ஜனநாயகத்துக்கான யுத்தமாக அவர்களால் பரப்புரை செய்யப்படுகிறதோ அதே பரப்புரைதான் இதுவும்!



vickneaswaran.sk@thaiveedu.com

# 1970களில் சபிக்கப்பட்ட தன்னிறைவுப் பொருளாதார முயற்சி!

- என். சரவணன்

‘பருத்தித்துறையிலிருந்து தேவேந்திர முனை வரை விவசாய நிலங்களாக்குவதே எமது அரசாங்கத்தின் இலக்கு’ என்று சொன்னவர் சிறிமா. பிரதமர் சிறிமா பண்டாரநாயக்க 1974ம் ஆண்டு ஒக்ரோபரில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த வேளை ஒரு புறம் அவருக்கு எதிரான பலத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. அதேவேளை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் திறப்புவிழாவுக்காக வந்திருந்த சிறிமாவின் பேச்சில் இருந்த தேசிய விவகாரங்கள் கவனிக்கத்தக்கவை.

இலங்கையின் வரலாற்றில் பொருளாதார தன்னிறைவுக்காக அதிகபட்ச முயற்சியைச் செய்த அரசாங்கமாக, 1970ஆம் ஆண்டு



ஆட்சியமைத்த சிறிமா பண்டாரநாயக்கவின் தலைமையிலான ஆட்சியைக் குறிப்படலாம். சிறிமாவின் சுதந்திரக்கட்சி, இடதுசாரிக் கட்சிகளின் கூட்டு முன்னணி என்பது, 1960ஆம் ஆண்டு சிறிமா முதற் தடவையாக ஆட்சியமைத்தபோது உருவானது. அதே இடதுசாரிக் கூட்டுத் தான் 1970 அரசாங்கத்திலும் இணைந்து கொண்டது. அதுபோல, இவ் அரசாங்கத்தில் நிதி அமைச்சராகத் தொடர்ந்தவர் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் என்.எம். பெரேரா தான்.

பொருளாதாரமே அனைத்தினதும் அடித்தளம் என்கிற அடிப்படையைக் கொண்டவை இடதுசாரிக் கட்சிகள். கியூபப் புரட்சி நடந்து முடிந்தம் சேகுவேரா தனக்கு நிதி அமைச்சைத் தாருங்கள் என்று கூறி அந்த கியூபப் புரட்சியின் வெற்றிக்கு அர்த்தம் சேர்க்கும் முகமாக ஏற்படுத்திய பொருளாதார மாற்றங்கள் அந்த நாட்டின் செழிப்புக்கும், தன்னிறைவுக்கும் வழிவகுத்ததை மறந்திருக்க மாட்டோம்.

இலங்கையிலும் ஆளும் கூட்டணியில் இடதுசாரிக் கட்சிகள் பொருளாதார மாற்றத்தைத் தான் பிரதான பொறுப்பாக ஆக்கிக் கொண்டார்கள். 1960, 1970 அரசாங்கங்களில் அப்படித்தான் என்.எம். பெரேரா நிதிஅமைச்சராக ஆனார். 1960 அரசாங்கத்தில் ஐந்து தடவைகள் நிதி அமைச்சர்கள் மாற்றப்பட்டனர். அந்த ஐவரில் டீ.பி. இலங்கரத்னவைத் தவிர மற்றையோர் இடதுசாரிப் பின்னணியைக் கொண்டவர்கள். இறுதியாகத் தான் என்.எம். பெரேரா நிதி அமைச்சராக ஆனார். அந்த ஆட்சி நிறைவுற சில மாதங்களே இருக்கும் நிலையில் தான் அவர் அப்பதவியை வகித்தார். ஆனால் 1970ஆம் ஆண்டு அரசாங்கத்தின் போது பெரிய மாற்றங்களை செய்வதற்கான ஆதரவு சிறிமாவிடம் இருந்தும் அமைச்சரவையிடம் இருந்தும் கிடைத்தது.

1970இல் அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர், 1972இல் இலங்கை, பிரித்தானியாவின் டொமினியன் தன்மையிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டு குடியரசாக பிரகடனப்படுத்தப் பட்டது மட்டுமன்றி, அது சோஷலிச ஜனநாயக குடியரசாக பெயர் மாற்றப்பட்டது. பிரித்தானியர்கால அரசியலமைப்பும் அகற்றப் பட்டு புதிய அரசியலமைப்பும் உருவாக்கப்பட்டது. ஜே.ஆர் ஜெயவர்தன 1978இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு அந்த அரசியலமைப்பை மாற்றியபோதும் ‘இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு’ என்பதை மட்டும் மாற்ற முடியவில்லை என்றால் அதற்கு 1972இல் போடப்பட்ட அத்திபாரம் முக்கியமானது. அதுவே இன்றும் தொடர்கிறது.

1972 பொருளாதார சீர்திருத்தக் காலத்தில் உயர் தட்டு வர்க்கத்திலிருந்து சாமான்யர்கள் வரை இடைக்கால நெருக்கடிகளை அனுபவிப்பார்கள் என்பதை அரசும் அறிந்திருந்தது. மக்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால், நீண்ட கால பொருளாதார விளைவைத் தரப்போகும் அந்த சீர்திருத்தத்தை மக்களால் வரவேற்க முடியவில்லை. ‘தற்காலிக நெருக்கடிகளை’ அது தற்காலிகம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் திண்டாடினார்கள். பீதியுற்றார்கள். அதன் விளைவு அரசு கடும் மக்கள் எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிட்டது. முதலாளித்துவ சார்பு ஐக்கிய தேசியக் கட்சியும் இதனை நன்றாக பயன்படுத்திக்கொண்டு வரலாறு காணாத வெற்றியை தமதாக்கிக் கொண்டதுடன், வரலாறு காணாத தோல்வியை சுதந்திரக் கட்சிக்கும், இடதுசாரிக் கட்சிகளுக்கும் ஏற்படுத்தியது.

தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக தேர்ந்த இடதுசாரித் தலைவரான நிதி அமைச்சர் என்.எம். பெரேரா பல திட்டங்களை சிறிமாவின் அந்த ஆட்சி காலத்தில் கொண்டுவந்தார். பண வீக்கம் குறைந்தது. வெளிநாடுகளில் இருந்து அத்தியாவசியமான பல பொருட்கள் இறக்குமதி செய்வதுகூட தடை செய்யப்பட்டது.

அவசியமான மருந்துகள், எரிபொருள் போன்ற சில பொருட்க ளைத் தவிர ஏனைய அனைத்தின் மீதும் இறக்குமதிகள் நிறுத்தப் பட்டன. வருவாய் சமநிலையைப் பேணுவதற்காக சொத்துக் கட் டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதேவேளை இலங்கையில் இருந்து ஏற்றுமதி அதிகரிக்கப்பட்டன.

இந்த காலப்பகுதியில் உணவுத் தட்டுப்பாட்டை கட்டுப்படுத்தி அனைவருக்கும் சமமாக கிடைக்கச் செய்வதற்காக கூட்டறவுச் சங் கங்களும், கூப்பன் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. குறிப் பாக உணவு, உடை போன்றவற்றுக்கு இந்தக் கூப்பன் முறை பயன்படுத்தப்பட்டது. சுதந்திரக் கல்வி, மருத்துவம் என்பவை இடையூறின்றி கிடைக்கச் செய்வதற்காக அவை தேசியமயமாக் கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது.

தொழிற்சாலைகளை விரிவுபடுத்தி, பல புதிய தொழிற்சாலைக ளும் ஆரம்பிக்கப்பட்டன. கந்தளாய், செவனகல சீனித் தொழிற் சாலை ஆரம்பிக்கப்பட்டன. காங்கேசன்துறை, புத்தளம், காலி ஆகிய இடங்களில் சீமெந்துச் தொழிற்சாலைகள் மேலதிகமாக ஆரம்பிக்கப்பட்டன. களனி ரயர் கூட்டுத்தாபனத்திலிருந்து இந்தி- யாவுக்கு ரயர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. வாழைச்சேனையில் காகித தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது.

அரச கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டது. தனியார் தொழிற்துறை கள் பல அரசமயப்படுத்தப்பட்டன. உதாரணத்துக்கு 1970ல் கனி யவள நிலக்கரி சுரங்கத் தொழில், 1977ல் பெருந்தோட்டங்கள் போன்றன இவ்வாறு அரசமயப்படுத்தப்பட்டன. மலையகத்தில் பல தோட்டங்கள் வெளிநாட்டவர்கள் வசம் இருந்தன. அவற்றை அரசு சுவீகரித்து மக்கள் மயப்படுத்தியது. பெருந்தோட்டங்களை நிர்வகிப்பதற்காக அரச பெருந்தோட்ட கூட்டுத்தானமும் அமைக்



கப்பட்டது. 1973ல் இவ்வாறு பத்து கூட்டுத்தாபனங்கள் ஆரம்பிக் கப்பட்டிருந்தன.

வெளிநாட்டு நிறுவனங்களின் வசம் இருந்த தனியார் பாடசாலை கள், கல்லூரிகள் அத்தனையும் கூட அரசாங்கம் சுவீகரித்துக் கொண்டது. அப்பாடசாலைகள் அரச பாடசாலைகள் ஆகின.

1971ம் ஆண்டு கொடுவரப்பட்ட, நிறுவனங்களை கையகப்படுத் தும் சட்டத்துக்கு ஊடாக 1971-1976 காலப்பகுதிக்குள் 24 தனியார் நிறுவனங்களை அரசு சுவீகரித்துக்கொண்டது.

1974மே மாதாமளவில் சிறு காணி வைத்து உற்பத்தியில் ஈடுபடுப வர்களுக்காக 'தென்னை புனர்வாழ்வு நிவாரண முறை' என்கிற ஒரு திட்டத்தை ஆரம்பித்து இருபது ஏக்கருக்கு குறைவான நிலத்தை வைத்து உற்பத்தி செய்யும் முனைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கி ஊக்குவித்தது. அதுபோல சிறுபோக செய்கை யில் ஈடுபடும் விவசாயிகளுக்கான குறைந்த வட்டிக் கடனையும் அறிமுகப்படுத்தியது.

இரத்தினக்கல் தொழிற்துறையை பலப்படுத்துவதற்காக அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.

டச்சு காலத்துப் பயிரான புகையிலை உற்பத்தியில் தங்கியிருந்த யாழ் விவசாயிகள் மிளகாய், வெங்காயம் முதலானவற்றை பயி ரிட்டு வரலாற்றில் முதன் முறையாக இலாபமீட்டினர். யாழ்ப்பாண விவசாயிகளின் செழிப்பான, வளமான காலமாக இன்றும் குறிப்பி டுவதை நாம் கவனித்திருப்போம். இந்தியாவில் இருந்து இறக்கும தியான பம்பாய் வெங்காயம் மிளகாய் போன்றவை நிறுத்தபட்டி ருந்தது அல்லது குறைக்கபட்டிருந்தது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி குறைந்ததன் மூலம் பணம் இலங்கையை விட்டுச் செல்வது குறைக்கப்பட்டது. உள் நாட்டுக்குள்கூட ஓரிடத்திலி ருந்து இன்னோர் இடத்துக்கு சில அத்தியாவசிய விவசாயப் பொருட்கள் சென்றடைவது தடுக்கப்பட்டது. உதாரணத்துக்கு வன்னி, மட்டகளப்பில் உற்பத்தியான அரிசி போன்றவை யாழ் குடாவிற்குள் செல்வதுகூட வரையறுக்கப்பட்டதால் அங்கேயே உற்பத்தி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டனர். வேலையற்றிருந்த பட்டதாரிகள்கூட தமது பிரதேசங்களில் காடுமண்டிப்போயிருந்த நிலங்களில் விவசாயம் செய்ய ஆரம்பித்தார்கள்.

தமிழ் நாட்டிலிருந்து இலங்கை வந்து சேர்ந்து கொண்டிருந்த சினி மாக்கள், சஞ்சிகைகள், ஆடைகள்கூட இறக்குமதிகள் வரையறுக் கப்பட்டன. சிங்களவர்களுக்கு இது பாதிக்கவில்லை. அவர்கள் இந்தியாவை நம்பியிருக்கவில்லை. ஆனால் தமிழர்கள் அதுவரை இதில் தங்கியிருந்தார்கள். இதனால் ஈழத் தமிழர்கள் மத்தியில் சொந்தமாக பல சஞ்சிகைகள் தோன்றின, உள்நாட்டு நெசவு வளர்ந்தன. இது போலத்தான் தமிழில் சுதேசிய திரைப்படங்களை உருவாக்கும் வாய்ப்புகள் திறந்தன.

தமிழ் நாட்டிலிருந்து வெளியான கல்கண்டு, அம்புலிமாமா, ராணி போன்ற பல சஞ்சிகைகள் நிறுத்தப்பட்டதால் உள்நாட்டில் பல இலக்கிய சஞ்சிகைகள் வெளிவர வழிதிறந்தது. கொழும்பில் மெய்கண்டான் அச்சாக நிறுவனம் அம்புலிமாமா பாணியில் 'நட் சத்திரமாமா' என்கிற பெயரில் ஒரு சஞ்சிகையை வெளியிட்டதாக நினைவு. மல்லிகை ஜீவர் இந்தக் காலத்தில் தான் தமது 'மல்லி கைக்கு' அதிக மவுசு இருந்ததாகக் கூறுவார்.

அதுபோல இந்த காலத்தில் இந்திய திரைப்படங்களுக்கு இருந்த தடை காரணமாக உள்நாட்டில் பல ஈழத்து திரைப்படங்கள் வெளிவரத் தொடங்கின. ஈழத்துத் திரைப்படங்களின் பொற்கால மாக இக்காலத்தைக் குறிப்பிடலாம். சுதேசிய திரையங்குகளில் ஈழத்துத் திரைப்படங்களுக்கான வாய்ப்பு அதிகரித்தது.

உபாலி விஜேவர்தன போன்ற சுதேசிய தொழிற்துறையாளர்கள் எழுச்சி பெற்றது சிறிமா காலத்தில்தான். யுனிக், கெண்டோஸ், மெஸ்டா பியட், டெல்டா போன்ற இலங்கை பிராண்டுகளை வெளிநாடுகளுக்கு கொண்டு போக காரணமாக இருந்தார்.

துவரம் பருப்பு, பாசிப்பயறு போன்றவை உள்ளூரிலேயே உற் பத்தி செய்யப்பட்டு தன்னிறைவை எட்டிக்கொண்டிருந்தன. தீக்குச் சியிலிருந்து மோட்டார் இயந்திரம் வரை இலங்கையில் உற்பத்தி செய்யும் நிலை மாறியது.

இலங்கையில் மகாவலித் திட்டத்தை ஆரம்பித்ததும் சிறிமா தான். அது நிகழ்ந்தது 1960ம் ஆண்டு அவர் ஆட்சிக்கு வந்தபோது. ஆனால் 1970 அரசாங்கத்தின் போதுதான் அதன் பூரண பலனை நாடு அனுபவித்தது. மகாவலித் திட்டம் மட்டும் உரிய நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றால் இலங்கையின் விவசாயம் கண்டிருக்கக் கூடிய பாரதூரமான விளைவை எண்ணிப் பாருங் கள். விவசாயிகள் மட்டுமல்ல அதன் பின்னர் மின்சார உற்பத்திக் கும் மகாவலித் திட்டம் முக்கிய பங்காற்றியது.

நீண்ட காலமாக இலங்கையிக்கு எண்ணையை இறக்குமதி செய்து மொத்த எரிபொருள் துறையை கட்டுப்பாட்டுக்குள் வைத்



துக்கொண்டிருந்தவர்கள் மொபில் (MOBIL) கெல்டெக்ஸ் (CALTEX) ஷெல் (SHELL) எஸ்ஸோ (ESSO) போன்ற பல்தேசிய நிறுவனங்கள்தான். இலங்கையின் பெட்ரோல் நிலையங்கள் இந்த நிறுவனங்களின் பெயர்களில் தான் இயங்கின.

ஒபெக் நிறுவனம் தோற்றம் பெறும்வரை உலக எண்ணெய் சந்தையை கையகப்படுத்தி வைத்திருந்தவர்கள் அமெரிக்காவும் இங்கிலாந்தும்தான். அவர்களிடம் தான் எண்ணெயின் ஏகபோகம் இருந்தது. கொல்வின் ஆர்.டி. சில்வா நிதி அமைச்சராக இருந்த போது எண்ணையை இனி சோவியத் யூனியன், எகிப்து ஆகிய நாடுகளில் இருந்து பெறுவதன் மூலம் இந்த எகபோகத்தையும், விலை அதிகரிப்பையும் கட்டுக்குள் கொண்டுவரலாம் என்று சிறிமாவிடம் முன்மொழிந்திருந்தார். உள்ளூரில் இருந்த எண்ணெய் இறக்குமதிக் கம்பனிகளை அழைத்து இனி சோவியத் யூனியன், எகிப்து என்பவற்றிடம் இருந்து கொள்வனவு செய்யும்படி கோரியதற்கு அந்த நிறுவனங்கள் 'எமது கொள்கலன்கள்' சிகப்பு எண்ணையை விநியோகிக்க முடியாது என்று மறுத்திருந்தனர். அப்படி செய்யாவிட்டால் அந்த நிறுவனங்களை MR சுவீகரித்துக்கொள்ளும் என்று சிறிமா எச்சரித்தது மட்டுமன்றி அதற்கான சட்ட ரீதியான ஒழுங்குகளையும் செய்து முடித்தார். சகல எண்ணெய் கம்பனிகளுக்கும் நட்டஈட்டுத் தொகையை வழங்கும்படி கட்டளை இட்டார்.

அதில் ஒரு அமெரிக்க நிறுவனம் கடுமையாக இந்த திட்டத்தை எதிர்த்து. அதுமட்டுமன்றி அமெரிக்காவும் இலங்கைக்கு வழங்கி வந்த உதவிகளை நிறுத்தப்போவதாக மிரட்டியது. அன்றைய அமெரிக்க தூதுவர் திருமதி வில்ஸ் நேரடியாக சிறிமாவுடன் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். அப்படி பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் போதே, இலங்கைக்கான உதவிகளை நிறுத்தியதாக அமெரிக்கா அறிவித்தது. அமெரிக்காவுடன் இருந்த வர்த்தக ஒப்பந்தத்தையும் இரத்துச் செய்தது. இலங்கைக்கு வழங்கிவந்த புலமைப் பரிசில்களைக்கூட நிறுத்தியது அமெரிக்கா.

சோவியத், எகிப்து ஆகிய நாடுகளில் இருந்து சில காலம் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுக்கொண்டிருந்து. அதன் பின்னர் 1969 ஓகஸ்டில் ஈரான் தேசிய எண்ணெய் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இலங்கையின் தேசிய பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (Ceypetco - Ceylon Petroleum Corporation) ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் இன்று, இலங்கையின் எண்ணெய் ஏகபோகம் இந்திய நிறுவனமான IOC நிறுவனத்திடம் பறிபோய் சில வருடங்கள் ஆகின்றன. இன்று முழுவதுமாக பறிபோகும் நிலைமை உருவாக்கி இருப்பதை பல பொருளியல் வல்லுனர்கள் எச்சரிக்கிறார்கள். எப்போதும் எண்ணெய், எரிசக்தி, வலு என்பன அரசின் கட்டுப்பாட்டில் இல்லை என்றால் ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மையையே நெருக்கடிக்கு உள்ளாக்கிவிட முடியும் என்கிற ஒரு விளக்கம் உண்டு.

சிறிமாவின் ஆட்சியில் 1964ம் ஆண்டு அவ்வாறான மொத்தம் 13 கம்பனிகளை நாட்டை விட்டுத் துரத்தினார் சிறிமா.

நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு அளவுக்கதிகமான நிலங்களைக் கொண்டிருந்தவர்களிடம் இருந்து நிலங்கள் அரசால் சுவீகரிக்கப்பட்டு, நிலமற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டன. உள்நாட்டு விவசாயிகள், வளம் கொழிக்க வளர்ந்தெழுந்தார்கள்.

சிறிமா என்கிற இரும்புப் பெண்ணின் அரசாங்கத்திடம் இருந்த தூர நோக்கு அதன் பின்னர் வந்த எந்த அரசாங்கத்திடமும் இருந்ததில்லை என்று உறுதியாக கூறமுடியும். அதன் பின் வந்த அனைத்து தலைவர்களும் நாட்டை விற்றோ, அல்லது அடைவு வைத்தோ அவரவர் அரசாங்க காலத்தை அலங்காரமாக காட்டி, அவர்கள் வேண்டிய கடன்களை அடுத்த அரசாங்கத்திடம் சுமத்தி விட்டு ஓடுவதும், புதிய அரசாங்கம் மேலும் நாட்டை 'ஏலம்' போட்டு விற்றுவிட்டு மேலும் மேலும் புதிய கடன்களுடன் அடுத்த அரசாங்கத்திடம் சுமத்தி விட்டு கடப்பதுமாக தொடர்ந்ததன் விளைவு தான்... இன்றைய 'இலங்கையின் திவால் நிலை'.

கடனைக் கட்ட கடன் வாங்குவது போய், கடனைக் கட்ட கந்து வட்டிக்கு கடன் வாங்கி நாசப்படுத்தும் அளவுக்கு இன்று கொண்டு போனவர்களின் கணக்கு என்னவாக இருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்.

பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பல கறுப்புப் பணத்தை வெளிக் கொணர்வதற்காக, பழைய பணத்தாள்கள் செல்லுபடியற்றதென அறிவித்தார். அதேவேளை மக்களிடம் உள்ள பணத்தை பெற்றுக் கொண்டு புதிய பணத்தாள்களை பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. பணமதிப்பிழப்பு (Demonetization) நடவடிக்கையின் மூலம் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கள்ளப் பணம் அத்தனையும் செல்லுபடியற்றதாகின.

கறுப்புப் பணத்தை வெளியே எடுக்கவும், இந்தப் பொருளாதார முறை குறித்து மக்களுக்கு போதிய விளக்கம் இருக்கவில்லை. நாட்டில் நிலவிய உணவுத் தட்டுப்பாடு, வரிசையில் நிற்றல், கூப்பன் முறை போன்ற கடும் வழிமுறைகளால் மக்களின் அதிருப்தியும், வெறுப்பும் அரசின் மீது திரும்பியது.

கிழங்கு, சீனிக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு என்பன அடிப்படை

உணவாகின. இன்றும் அக்காலத்தை வெறுக்கும் பலரை நாம் காணமுடியும்.

இன்றைய ராஜபக்ஸ சகோதரர்களின் ஆட்சியிலும் அதே நிலை உருவாகியிருக்கிறது. ஆனால் இவை இரண்டுக்கும் இடையில் தலைகீழ் வித்தியாசங்கள் உள்ளன. அன்று நாடு எவரிடமும் கையேந்தாது தன்னிறைவோடும், வளமான வருமானத்தோடும் வாழ்வதற்கான பொருளாதாராக கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான குறிப்பிட்ட கால திட்டத்துக்காக கஷ்டங்களை பொறுத்துக் கொள்ள கோரப்பட்டது. ஆனால் இன்று, அடுத்தடுத்த சந்ததியினரின் எதிர்காலத்தையும் சேர்த்து விற்று, மொத்தமாக நாட்டை தாரைவார்த்துக்கொண்டே மக்களுக்கு கடும் நெருக்கடியை கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கையை மீண்டும் சோஷலிச பொருளாதாரத்திலிருந்து மீட்டு முதலாளித்துவ சந்தை பொருளாதாரத்துக்குள் இழுத்து விடவேண்டும் என்று உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்திய தரப்பு எல்லாமே 1977ம் ஆண்டு தேர்தலை உன்னிப்பாக கவனித்தது மட்டுமன்றி, இடதுசாரி கூட்டு அரசாங்கமான சிறிமா அரசாங்கத்தை எப்படியும் கவிழ்த்து தமது செல்லப்பிள்ளையான ஜே.ஆரை பதவியில் அமர்த்த முழு வேலையையும் செய்தன. அதன் விளைவு தான், 1977ம் ஆண்டு சிறிமா அரசாங்கத்தின் படு தோல்வியும் ஜே.ஆரின் வரலாறு காணாத வெற்றியையும்.

இத்தேர்தலில் ஐ.தே.க மொத்தம் 168 ஆசனங்களில் 140ஐ பெற்று 83 வீத அதி பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டது. 147 தொகுதிகளில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெறும் 8 ஆசனங்களை மட்டுமே பெற்று படுதோல்வியடைந்தது. எதிர்க்கட்சியாகும் தகுதியைக்கூட இழந்தது.

ஜே.ஆர். திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தி, அந்நிய முதலீடுகளை தாராளமாக அனுமதித்தார். உள்ளூர் வளங்களையும், உள்ளூர் உழைப்பையும் சுரண்டுவதற்கு தாராளமாக அனுமதித்தார். மீண்டும் விவசாயம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் வேகமாக சரியத் தொடங்கின.

பல அரச நிறுவனங்களை மீண்டும் வெளிநாடுகளுக்கு விற்கும் பணிகள் அவரால்த்தான் தொடங்கப்பட்டன. தேசிய வளங்கள், சொத்துக்கள், உற்பத்திகள் எல்லாமே அரச கட்டுப்பாட்டிலிருந்து தளர்த்தி தனியார்களுக்கு விற்றுத் தீர்க்கும் திட்டம் ஜே.ஆரால் தான் மீண்டும் தொடங்கப்பட்டன.


திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகமாகி இந்த 45 வருட வரலாற்றில் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கையின் ரூபா 4285% வீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கிறது. அதன்படி ஜனவரி 1, 1977ல் அமெரிக்க டொலர் மாற்று வீதம் 7.27 இலங்கை ரூபாயாக இருந்தது. ஆனால் இப்போது 2022 மார்ச் மாதம் அது 300 ரூபாவைத் தாண்டியிருக்கிறது. அதாவது 1977ல் ஜே.ஆர். இலங்கையின் அரச தலைமையை ஏற்ற போது 1000 ரூபாவின் பெறுமதியானது, 2022 மார்ச் 26 திகதியன்று பெறுமதி 42,850 ரூபாவிற்குச் சமம்.

சிறிமா ஒரு இரும்புப் பெண்ணாக உலக நாடுகளால் பார்க்கப்பட்டார். அதே போல, இந்த முயற்சிகளின் பெறுபேற்றை அனுபவிக்குமுன் ஆட்சி மாறியதால், திட்டங்கள் அனைத்தும் தவிடுபொடியாகின. மக்களால் வெறுக்கப்படும் சிறிமா ஆனார். படுதோல்வியை தழுவினார். ஆனால் அத்தோல்வியை இன்று மக்கள் அனுபவிக்கின்றனர்.

அன்று இன்னும் சில ஆண்டுகள் பொறுமை காத்திருந்தால், இலங்கை தன்னிறைவுக்கு உதாரணமான நாடாக உலகில் பேசப்பட்டிருக்கும். பாரிய ஸ்திரத்தன்மையான பொருளாதார மாற்றம் நிகழ்ந்திருக்க வாய்ப்புகள் நிறையவே இருந்தன.



sarawanan.n@thaiveedu.com






# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You®

# உக்ரேன் பற்றி பூட்டின் ஆற்றிய உரை

- மணி வேலுப்பிள்ளை

**2022 பெப்பிரவரி 21ம் திகதி உக்ரேனில் 'விசேட நடவடிக்கை' எடுக்கும் தறுவாயில் ரஷ்ய அதிபர் பூட்டின் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் ஆங்கில மொழிபெயர்ப்பு அவரது அதிகாரபூர்வமான இணையத்தளத்தில் முழுமையாக இடம்பெற்றுள்ளது: (http://en.kremlin.ru/events/president/news/67828). அவரது கூற்றுகள் சிலவும், அவை பற்றிய குறிப்புகளும் கீழே காணப்படுகின்றன:**



**பூட்டின்**

***கூற்று 1: 'நினைவுக்கு எட்டாத காலம் தொட்டு ரஷ்ய நிலம் என வரலாற்றில் அறியப்பட்ட ஆள்புலத்தின் தென்மேற்கில் வாழ்ந்த மக்கள் தங்களை ரஷ்யர்கள் என்றும், வைதீக கிருத்துவர்கள் என்றும் குறிப்பிட்டு வந்தார்கள். 17ம் நூற்றாண்டுக்கு முந்திய கதையும் பிந்திய கதையும் அதுவே. அந்த ஆள்புலத்தில் ஒரு கூறு 17ம் நூற்றாண்டில் திரும்பவும் ரஷ்ய அரசுடன் இணைந்துகொண்டது.'***

*குறிப்பு:* உக்ரேனிய ஆள்புலத்தை 'ரஷ்ய நிலம்' எனவும், அங்கு வாழ்ந்த மக்கள் தங்களை 'ரஷ்யர்கள்' என்று குறிப்பிட்டனர் எனவும் பூட்டின் தெரிவிக்கிறார். வரலாற்றுத் தரவுகளின்படி உக்ரேன் எனப்படும் ஆள்புலம் 7ம் நூற்றாண்டில் வேர்விட்டது. 16ம் நூற்றாண்டு வரை மங்கோலியர், லிதுவேனியர், போலாந்தியர்... முதலியோரால் அது துண்டாடப்பட்டு, கட்டியாளப்பட்டது. 17ம் நூற்றாண்டில் உக்ரேன் திரும்பவும் பங்குபோடப்பட்டு, மேற்புலத்தை ஆஸ்திரிய-ஹங்கேரிய பேரரசும், கீழ்ப்புலத்தை ரஷ்யப் பேரரசும் பற்றிக்கொண்டன. 17ம் நூற்றாண்டில் உக்ரேனிய ஆள்புலம் ரஷ்யப் பேரரசினால் கைப்பற்றப்பட்டதை, அது 'திரும்பவும் ரஷ்ய அரசுடன் இணைந்து கொண்டது' என்று கூறுகிறார் பூட்டின்.

***கூற்று 2: 'உக்ரேன் வெறுமனே எமக்கு ஓர் அயல் நாடல்ல. அது எமது சொந்த வரலாற்றிலிருந்தும், பண்பாட்டிலிருந்தும், உள்ளுணர்விலிருந்தும் அகற்ற முடியாத புலம்.'***

*குறிப்பு:* 1917ல் சோவியத் புரட்சியை அடுத்து, 1918 முதல் 1922 வரை, உக்ரேன் சுதந்திர நாடாக விளங்கியது. 1922ல் உக்ரேனிய குடியரசு எனும் பெயருடன் அது சோவியத் ஒன்றியத்தில் ஓர் அங்கமாகியது. 1991ல் சோவியத் ஒன்றியம் நிலைகுலைந்த பிறகு உக்ரேன் மீண்டும் சுதந்திர நாடாக மாறியது.




**உக்ரேன்**

***கூற்று 3: 'இவர்கள் எமது தோழர்கள், ஆருயிர் அன்பர்கள், ஒரு காலத்தில் ஒன்றாகப் பணியாற்றிய சகாக்கள், நண்பர்கள் மட்டுமல்ல. உறவினர்கள், குருதியாலும் குடும்ப உறவினாலும் பின்னிப் பிணைந்தவர்கள்.'***

*குறிப்பு:* அத்தகைய ஒட்டுறவை நினைந்துருகும் ரஷ்ய மக்களுக்கும், உக்ரேனிய மக்களுக்கும் இன்று நேர்ந்துவரும் கதி என்ன? உக்ரேன் மீதான 'விசேட நடவடிக்கை'யை எதிர்க்கும் ஆயிரக்கணக்கான ரஷ்ய 'தோழர்கள்' கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு வருகிறார்கள். உக்ரேனில் வீடுகளும், உடைமைகளும், கட்டடங்களும் தரை, கடல், வான் தாக்குதல்களுக்கு உள்ளாகித் தரைமட்டமாகின்றன. ஆயிரக் கணக்கான 'ஆருயிர் நண்பர்கள்' கொல்லப்பட்டு வருகிறார்கள். இலட்சக் கணக்கான 'குருதி உறவினர்கள்' அகதிகளாய் அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகிறார்கள்...

***கூற்று 4: 'தற்கால உக்ரேன் ரஷ்யாவினால், இன்னும் நுட்பமாகச் சொல்வதாயின், பொதுவுடைமைவாத ரஷ்யாவினால் தோற்றுவிக்கப்பட்டது. 1917ல் புரட்சி நிகழ்ந்த கையோடு அப்படி***

*முறை துவங்கியது. லெனினும், அவரது தோழர்களும் மிகவும் கொடூரமான முறையில் ரஷ்ய பாரம்பரிய நிலத்தைப் பிரித்து, துண்டாடினாரகள். அங்கு வாழ்ந்த பல இலட்சக் கணக்கான மக்களின் எண்ணத்தை எவருமே வினவவில்லை.'*



**லெனின்**

*குறிப்பு:* ரஷ்யப் பேரரசினால் கட்டியாளப்பட்ட பின்லாந்து, போலாந்து, லற்வியா, எஸ்தோனியா, லிதுவேனியா, உக்ரேன்... முதலியவை 1917 புரட்சியை அடுத்து சுதந்திரப் பிரகடனம் செய்தன. யுக்ரேனிய வரலாற்றறிஞர் சேர்கி புலோகிவ் இப்படிக் கூறுகிறார்: '1922 வரை, ஒரு குறுகிய காலத்துக்கு, உக்ரேன் சுதந்திர நாடாக விளங்கியது. 1922ல் போல்சிவிக் தரப்பினர் ஜேர்மனியுடன் இரபலோ பொருத்தனை எனப்படும் உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர். அப்பொழுது உக்ரேனியர்களிடையே ஒரு வினா எழுந்தது: 'எமக்காக உடன்படிக்கைகளில் ஒப்பமிடும் உரிமை எதையும் எதற்காக ரஷ்ய இணைப்பரசின் பிரதிநிதிகள் கொண்டிருக்கிறார்கள்?' என்ற வினா எழுந்தது. அதைக் குறித்து ஏதாவது செய்ய வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். எனவே ஒருமித்த அரசு ஒன்றை அமைப்பது குறித்து கலந்துரையாடினார்கள். வெவ்வேறு குடியரசுகள் இணைந்த ஐக்கியத்தை ஏற்படுத்த ஸ்டாலின் எண்ணினார். உலகப் புரட்சியை நாடிய லெனின் அதற்கு மறுப்புத் தெரிவித்து, உக்ரேனியரின் பக்கமும், ஜோர்ஜியரின் பக்கமும் சாய்ந்து, 'ஒன்றிய அரசு' ஒன்றை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்' (Serhii Plokhy, Vladimir Putin's Revisionist History of Russia and Ukraine, Isaac Chotiner, The New Yorker, 2022-02-23).



**சேர்கி புலோகிவ்**

அதன்படி 'உக்ரேனிய சமவுடைமைக் குடியரசு' எனும் பெயருடன் உக்ரேன் சோவியத் ஒன்றியத்துடன் இணைந்தது. பின்லாந்தையும், போலாந்தையும் தவிர, பிரிந்துபோன ஏனைய புலங்களும் சோவியத் ஒன்றியத்துடன் திரும்பவும் இணைந்துகொண்டன.

கூற்று 5: *'1954ல் குருசேவ் ஏதோ ஒரு காரணத்துக்காக கிரிமியாவை ரஷ்யாவிலிருந்து பிரித்து யுக்ரேனுக்கு கொடுத்தார். இப்படித்தான் தற்கால உக்ரேனிய ஆள்புலம் தோற்றுவிக்கப்பட்டது.'*



**ஸ்டாலின்**

*குறிப்பு:* உக்ரேன் சோவியத் ஒன்றியத்தினுள் அங்கம் வகித்தது. எனவே கிரிமியா தொடர்ந்தும் சோவியத் ஒன்றியத்தினுள்தான் இருந்தது. எனினும் 37 ஆண்டுகளுக்குள், அதாவது 1991ல், சோவியத் ஒன்றியம் நிலைகுலையும் என்று குருசேவுக்கு தெரிந்திருந்தால், அவர் 'கிரிமியாவை ரஷ்யாவிலிருந்து பிரித்து உக்ரேனுக்கு' கொடுத்திருக்க நியாயமில்லை.



**குருசேவ்**

கூற்று 6: *'ஓர் ஐக்கிய அரசினுள் ஒருங்கிணையும் குடியரசுகளுக்கு, அதாவது நிருவாகப் புலங்களுக்கும் ஆள்புலங்களுக்கும், சுயாட்சி வழங்கும் யோசனையை 1922ல் ஸ்டாலின் முன்வைத்தார். லெனின் அதற்கு மறுப்புத் தெரிவித்து, சுதந்திரவாதிகள் என்று தாம் குறிப்பிட்ட தேசியவாதிகளுக்கு, சிறப்புரிமைகள் அளிக்கும் யோசனை முன்வைத்தார். இது அடிப்படையில் ஒரு கூட்டிணைப்பாட்சி யோசனை ஆகும் அத்துடன் தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமையும், பிரிந்துசெல்லும் உரிமையும் உண்டு எனும் நிலைப்பாடும் ஆகும். இப்படி லெனின் முன்வைத்த யோசனையே 1922ல் சோவியத் சமவுடைமைக் குடியரசுப் பிரகடனத்தில் முதல் தடவையாக உறுதிப்படுத்தப்பட்டது. 1924ல் லெனின் இறந்த பிறகு, அது சோவியத் அரசியல்யாப்பில் பொறிக்கப்பட்டது. உடனடியாக இங்கு பல வினாக்கள் எழுகின்றன: முதலாவதாக, தேசியவாதிகளை சமாதானப்படுத்த வேண்டிய தேவை என்ன? பழைய பேரரசின் எல்லைப்புறங்களில் இடைவிடாது மேலோங்கும் தேசியவாத வேட்கைகளை நிறைவு செய்யவேண்டிய தேவை என்ன? புதுக்க, விதிமுறையின்றி, உருவாக்கப்பட்ட நிருவாக அலகுகளுக்கு, அதாவது ஒன்றிய குடியரசுகளுக்கு, அவற்றுடன் தொடர்பற்ற பாரிய ஆள்புலங்களை வழங்கிய நோக்கம் என்ன? ரஷ்யர்களாக விளங்கிய வரலாறு படைத்த மக்களோடு சேர்த்து மேற்படி ஆள்புலங்கள் அப்படி வழங்கப்பட்டன. வேட்கைமிகுந்த தேசியவாதிகளின் வேட்கைமிகுந்த கனவுகளைக் கடந்துசென்று தாராளமாக நன்கொடைகள் அளிக்கவேண்டிய தேவை என்ன? அவை அனைத்தையும் விஞ்சும் வகையில், ஐக்கியப்படுத்திய அரசிலிருந்து நிபந்தனை எதுவுமின்றி பிரிந்து செல்லும் உரிமையை அக்குடியரசுகளுக்கு அளிக்கவேண்டிய தேவை என்ன?'*

*குறிப்பு:* புரட்சிக்கு முந்திய பழைய ரஷ்யப் பேரரசை ஒரு நேரிய அரசாக லெனின் கருதவில்லை. அக்கம் பக்கத்து ஆள்புலங்களை பழைய பேரரசு அடிப்படுத்தி, கட்டியாண்ட வரலாறு அவருக்குத் தெரியும். அவற்றுக்கு சுயநிர்ணய உரிமையும், அவை விரும்பினால் பிரிந்து செல்லும் உரிமையும், சுதந்திர பிரகடனம் செய்யும் உரிமையும் உண்டு என்பது அவர் நிலைப்பாடு. அதே வேளை, அவை பொதுவுடைமைக் கட்சியில் இணைந்து கொண்டால், ஒரு கூட்டிணைப்பாட்சி அரசை அமைக்கலாம் என்ற யோசனையை அவர் முன்வைத்தார். ஸ்டாலின் முன்வைத்த சுயாட்சி யோசனையை விட லெனின் முன்வைத்த கூட்டிணைப்பாட்சி மிகவும் நெகிழ்வானது. இதையே, 'தேசியவாதிகளை சமாதானப்படுத்த..., தேசியவாத வேட்கைகளை நிறைவுசெய்ய..., நன்கொடைகள் அளிக்க..., பிரிந்து செல்லும் உரிமை அளிக்க...' எடுக்கப்பட்ட நடவடிக்கை என்கிறார் பூட்டின். சோவியத் ஒன்றியத்துடன் ஒருங்கிணைந்த குடியரசுகளுக்கு இடையே ஆள்புலங்கள் பரிமாறப்பட்டது முற்றிலும் உண்மையே. அவ்வாறு பரிமாறப்பட்ட ஆள்புலங்கள், சம்பந்தப்பட்ட குடியரசுகளின் ஆள்புலங்கள் என்ற வகையில் தொடர்ந்தும் சோவியத் ஒன்றியத்துக்கு உட்பட்ட ஆள்புலங்களகவே விளங்கின. 1922 முதல் 1991 வரை 69 ஆண்டுகளுக்குள் சோவியத் ஒன்றியம் நிலைகுலையும் என்று லெனினோ, ஸ்டாலினோ எதிர்பார்த்திருந்தால், ஆள்புலப் பரிமாற்றங்கள் நிகழ்ந்திருக்க நியாயமில்லை. 1917 புரட்சிக்குப் பின்னர் முன்புறம் நோக்கி, புதிய சோவியத் ஒன்றியத்தை கருத்தில் கொண்டு, காய்களை நகர்த்தினார் லெனின். பின்புறம் நோக்கி பழைய இரசியப் பேரரசை கருத்தில் கொண்டு, காய்களை நகர்த்துகிறார் பூட்டின்.

**கூற்று 7: *'புரட்சியின் பின்னர் போல்சிவிக்குகளின் தலையாய நோக்கம், முழுக்க முழுக்க என்ன விதப்பட்டும், ஆட்சியில் நீடிப்பதே. அந்த நோக்கத்துக்காகவே அவர்கள் அனைத்து அலுவல்களையும் மேற்கொண்டார்கள். ஜேர்மன் பேரரசிலும், அதன் நட்புநாடுகளிலும் படைபல, பொருள்வள நிலைவரம் மேம்பட்டிருந்தாலும், முதலாம் உலகப் போர் எப்படி முடிவடையும் என்பது ஏற்கெனவே உறுதியாகிவிட்டது. எனினும், நாட்டை அவமானத்துக்கு உள்ளாக்கும் பிரெஸ்ட்-லிடோவிஸ்க் பொருத்தனையை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஏற்றுக்கொண்டு, தேசியவாதிகளின் கோரிக்கைகளையும் அவாக்களையும் நிறைவேற்றினார்கள்.'***

*குறிப்பு:* 1917 புரட்சியை அடுத்து செம்படையினருக்கும் வெண்படையினருக்கும் இடையே உள்நாட்டுப் போர் மூண்டது. அதில் புலனைச் செலுத்துவது என்றும், தாம் மக்களுக்கு வாக்குறுதி அளித்தது போல, ஏற்கெனவே நடைபெற்றுவந்த முதலாம் உலகப் போரிலிருந்து ரஷ்யாவை விடுவிப்பது என்றும், ஒரே சமயத்தில் இரு முனைகளில் போரிட முடியாது என்றும் லெனின் முடிவெடுத்தார். சுவிற்சலாந்திலிருந்து நடு வல்லரசுகளின் (அதாவது ஜேர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, ஒற்றோமன் பேரரசு, பல்கேரிய அரசுகளின்) உறுதுணையுடன் தலைமறைவாக, சோதனைக்கு உள்ளாகாமல், தொடருந்து மூலம் ரஷ்யா திரும்பும் தறுவாயில், போரிலிருந்து வெளியேறுவதாக அவ்வரசுகளுக்கும் அவர் வாக்குறுதி அளித்திருந்தார். போர்நிறுத்தம் குறித்து நடு வல்லரசுகளுடன் பிரெஸ்ட்-லிடோவிஸ்க் எனும் (பெரலஸ் நாட்டு) நகரில் பேச்சுவார்த்தை நடந்தது. சோவியத் நாட்டின் கால்வாசி ஆள்புலங்களை தமக்குத் தரவேண்டும் என்று நடு வல்லரசுகள் நிபந்தனை விதித்தன. 'அவமானத்துக்கு உள்ளாக்கும்' நடு வல்லரசுகளின் நிபந்தனையை ஏற்க மறுத்த சோவியத் பிரதிநிதி ரொஸ்கி மாஸ்கோ திரும்பி, 'போரும் வேண்டாம், சமாதானமும் வேண்டாம்' எனும் நிலைப்பாட்டை லெனினிடம் விதந்துரைத்தார். அதையடுத்து நடு வல்லரசுகள் சோவியத் ரஷ்யாவை நோக்கி மேற்கொண்டு முன்னேறின. வேறுவழியின்றி மீண்டும் சொவியத் தரப்பு பேச்சுவார்த்தைக்குச் சென்றது. 1918 மார்ச் 3ம் திகதி சமாதான ஒப்பந்தம் (அதாவது பிரெஸ்ட்-லிடோவிஸ்க் பொருத்தனை) செய்யப்பட்டது. அதன்படி ஏறத்தாழ 10 இலட்சம் சதுர மைல் பரப்பளவு கொண்ட ஆள்புலம், 5½ கோடி மக்கள், நிலக்கரி, எண்ணெய், இரும்பு கையிருப்புகள், ஆலைகள்... முதலியவற்றை ரஷ்யா விட்டுக்கொடுக்க நேர்ந்தது. இதை 'தோல்விப் படுகுழி, அங்கவீனம், அடிமைத்தளை, அவமானம்' என்று விளம்பி லெனினே குமுறினார். பொருத்தனை செய்யநேர்ந்த சூழ்நிலையை சீனாவிலிருந்து எடைதூக்கிப் பார்த்த தோழர் மாவோ சே துங், அதை ஆதரித்து தமது தோழர்களுக்கு விளக்கமளிக்க நேர்ந்தது. 1918 நவம்பர் 18ம் திகதி நடு வல்லரசுகளின் தோல்வியுடன் முதலாம் உலகப் போர் முடிவடைந்த கையோடு சோவியத் நாட்டினால் விட்டுக்கொடுக்கப்பட்ட வளங்களும் புலங்களும் முற்றுமுழுதாக மீட்கப்பட்டன.



**ரொஸ்கி**

**கூற்று 8: *'அரச கட்டுமானம் குறித்து லெனின் வகுத்த நெறி வெறுமனே ஒரு தவறு மட்டுமல்ல, அதை விடவும் மோசமானது. பலரும் சொல்வது போல், 1991ல் சோவியத் யூனியன் நிலைகுலைந்த பிறகு அவரது தவறு தெட்டத்தெளிவாகப் புலப்பட்டது... ஏதோ ஒரு குறிப்பிட்ட தருணத்தில் ஏதோ கவர்ச்சிக்கு அல்லது ஆதாயத்துக்கு உரியதாய் இருந்த அரசியல் காரணிகளை அரச கட்டுமானத்தின் அடிப்படை நெறிகளாகப் பயன்படுத்த முடியாது, பயன்படுத்தலாகாது.'***

*குறிப்பு:* அதாவது லெனின் முன்வைத்த சுநிர்ணய உரிமையையோ, ஸ்டாலின் முன்வைத்த சுயாட்சியையோ அரச கட்டுமானத்தின் அடிப்படை நெறியாகப் பயன்படுத்த முடியாது, பயன்படுத்தலாகாது! உலகப் புரட்சியையும், சுயநிர்ணய உரிமையையும் நாடிய லெனின் தேசியவாதிகளின் பக்கம் சாய்ந்தார். பழைய ரஷ்ய பேரரசை நினைந்துருகும் பூட்டின் பேரினவாதிகளின் பக்கம் சாய்கிறார்!

**கூற்று 9: *'சோவியத் உக்ரேன் என்பது போல்சிவிக் கொள்கையின் விளைவு. சரிவரச் சொல்வதாயின், அது 'லெனினது உக்ரேன்'. உக்ரேனின் பிரமாவும் சிற்பியும் லெனினே. சுவடிக்கூடத்து ஆவணங்களைக் கொண்டு அது முற்றுமுழுதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொன்பாஸ் புலம் (அதாவது யுக்ரேனின் கிழக்கில் பெரிதும் ரஷ்ய இனத்தவர்கள் வாழும் புலம்) தொடர்பாக லெனின் மூர்க்கத்தனமான முறையில் அறிவுறுத்தல்களைப் பிறப்பித்தார். உண்மையில் தொன்பாஸ் புலம் உக்ரேனுக்குள் தள்ளிவிடப்பட்டது. அங்கு 'நன்றிமிகுந்த மகவு' தனது பிதாவின் சிலைகளை இன்று கவிழ்த்து வீழ்த்தியுள்ளது. அது பொதுவுடைமைக் கட்டமைப்பினைக் களையும் படிமுறை என்று சொல்கிறார்கள் அவர்கள். நீங்கள் பொதுவுடைமைக் கட்டமைப்பினைக் களைய விரும்புகிறீர்களா? மெத்த நல்லது, அது எமக்கு நன்கு பொருந்துகிறது. சரி, அதை ஏன் அரைவாசியுடன் நிறுத்த வேண்டும்? பொதுவுடைமைக் கட்டமைப்பினை முற்றிலும் களையும் படிமுறை உக்ரேனைப் பொறுத்தவரை எவ்வாறு பொருள்படும் என்பதைக் காட்டுவதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம்.'***

*குறிப்பு:* மேலே 6ம் கூறில் நாம் கூறியவாறு, சோவியத் ஒன்றியத்துடன் ஒருங்கிணைந்த குடியரசுகளுக்கு இடையே ஆள்புலங்கள் பரிமாறப்பட்டது முற்றிலும் உண்மையே. அவ்வாறு பரிமாறப்பட்ட ஆள்புலங்கள், சம்பந்தப்பட்ட குடியரசுகளின் ஆள்புலங்கள் என்ற வகையில் தொடர்ந்தும் சோவியத் ஒன்றியத்துக்கு உட்பட்ட ஆள்புலங்களாகவே விளங்கின. 1922 முதல் 1991 வரை 69 ஆண்டுகளுக்குள் சோவியத் ஒன்றியம் நிலைகுலையும் என்று லெனின் எதிர்பார்த்திருந்தால், ஆள்புலப் பரிமாற்றங்கள் நிகழ்ந்திருக்க நியாயமில்லை.

கூற்று 10: *சோவியத் ஒன்றியத்தின் அடிப்படை ஆவணங்களில் ஸ்டாலின் திருத்தம் செய்யவில்லை. சோவியத் ஒன்றியத்துக்கு அடிப்படையாய் விளங்கிய லெனினது நெறிகளை ஸ்டாலின் முறைப்படி மாற்றி அமைக்கவில்லை.'*


*குறிப்பு:* ஆனானப்பட்ட ஸ்டாலினாலேயே லெனினது நெறிகளை மாற்ற முடியவில்லை என்றால், வேறு யாரால் முடிந்திருக்கும்?

1922ல் லெனின் அறிவுறுத்தியவாறு 'சோவியத் சமவுடைமைக் குடியரசுகளின் ஒன்றியம்' எனும் பெயர் சூட்டப்பட்டது. 1991ல் போரிஸ் யெல்ற்சின் அதை 'ரஷ்ய இணைப்பரசு' என்று மாற்றினார். 'ஒன்றியம்,' 'இணைப்பரசு' போன்றவை ரஷ்யாவின் பல்வண்மையை உணர்த்தும் சொற்கள். வெறுமனே 'ரஷ்யா' என்று பெயர் சூட்டாத காரணம் அதுவே.



**யெல்ற்சின்**

அசல் ரஷ்யராகிய லெனின் ஒரு ஜோர்ஜியராகிய ஸ்டாலினை தேசிய இனங்களின் ஆணையாளராக அமர்த்தினார். பாதுகாப்பு அமைச்சராக அமர்த்தப்பட்டவரும், செம்படைச் சிற்பியுமாகிய ரொஸ்கி ஒரு யூதர். ஏன், இன்றைய உக்ரேனிய அதிபர் செலன்ஸ்கி கூட ஒரு யூதரே! ஒரே அரசு, ஒரே மொழி, ஒரே சமயம், ஒரே கட்சி, ஒரே ஆட்சியாளர்... எனும் நிலைப்பாட்டில் இனிமை காணும் பூட்டினுக்கு அத்தகைய பல்வண்மை கசப்பதில் விந்தை இல்லை.




**செலன்ஸ்கி**

கூற்று 11: *'அருவருப்பான கனவுலக நப்பாசைகளுக்கு (சோவியத்) புரட்சி உந்துவிசை அளித்தது. வழமையான அரசு எதையுமே முற்றிலும் அழிக்கக்கூடிய நப்பாசைகள் அவை. எமது அரசின் மூலாதாரமான, முறைசார்ந்த, சட்டதிட்ட அத்திவாரத்திலிருந்து அவை களையப்படாமல் போனமை ஒரு மாபெரும் அவலமாகும். எமது நாட்டில் ஏற்கெனவே அடிக்கடி நிகழ்ந்தது போல, எதிர்காலத்தை எவருமே எண்ணிப் பார்க்கவில்லை... தேசியவாத நச்சுக்கிருமி இன்னும் எம்மைப் பீடித்துள்ளது. தேசியவாத நோய் பீடிக்காவாறு அரசினைக் கட்டிக்காக்கும் ஆற்றலை அழிக்கவென முன்கூட்டியே புதைக்கப்பட்ட கண்ணிவெடி உறுத்திக்கொண்டிருந்தது. ஏற்கெனவே நான் கூறியது போல, சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்துசெல்லும் உரிமையே அந்தக் கண்ணிவெடி...*

*குறிப்பு:* மேலே 6ல் நாம் கூறியவாறு, புரட்சிக்கு முந்திய பழைய ரஷ்யப் பேரரசை ஒரு நேரிய அரசாக லெனின் கருதவில்லை. அக்கம் பக்கத்து ஆள்புலங்களை பழைய பேரரசு அடிப்படுத்தி, கட்டியாண்ட வரலாறு அவருக்குத் தெரியும். அவற்றுக்கு சுயநிர்ணய உரிமையும், அவை விரும்பினால் பிரிந்து செல்லும் உரிமையும், சுதந்திர பிரகடனம் செய்யும் உரிமையும் உண்டு என்பது அவர் நிலைப்பாடு. இதையே தனது உரையில் 'கண்ணிவெடி' என்றும், 2021 யூலை 12ம் திகதி எழுதிய கட்டுரையில் (http://en.kremlin.ru/events/president/news/66181) 'நேரக்குண்டு' என்றும் பூட்டின் குறிப்பிடுகிறார். சோவியத் தலைமையின் மீது அவர் தொடுக்கும் கண்டனம் இக்கட்டுரையில் அடங்கும் பின்வரும் கூற்றில் உச்சத்தை எட்டுகிறது:

கூற்று 12: *'ரஷ்ய மக்களை போல்சிவிக்குகள் தமது சமூக பரிசோதனைகளுக்கான அமுதசுரபியாகப் பயன்படுத்தினார்கள். தேசிய அரசுகளை அழித்தொழிக்கும் உலகப் புரட்சி ஒன்றை அவர்கள் கனவு கண்டார்கள். ஆதலால்தான் தாராளமான முறையில் எல்லைகளை வரைந்து, ஆள்புலங்களைப் பரிசளித்தார்கள். நாட்டைத் துண்டாடிய போல்சிவிக் தலைவர்களின் திட்டவட்டமான எண்ணம் என்ன என்பது இனிமேல் எமக்கு முக்கியமில்லை. சின்னஞ்சிறு விவரங்கள், பின்னணிகள், நியாயங்கள் குறித்து நாம் முரண்படலாம். எனினும் ஒரு விவரம் தெட்டத்தெளிவாகத் தெரிகிறது: ரஷ்யா கொள்ளையடிக்கப்பட்டது, உண்மையிலேயே ரஷ்யா கொள்ளையடிக்கப்பட்டது.'*

*குறிப்பு:* 1921 டிசம்பர் 23ம் திகதி பூட்டின் நடத்திய ஊடக மாநாட்டில், 'நீங்கள் உவக்கும் தலைவர் யார்?' என்ற வினாவுக்கு, ரஷ்யப் பேரரசர் 'மகா பீட்டர்' (1672-1675) என்று விடையளித்தார். ரஷ்யப் பேரரசை அகட்டி, ஓர் ஐரோப்பிய வல்லரசாக்கியவர் பீட்டர். அவர் 1696ல் ஒற்றோமன் பேரரசுடன் போரிட்டு அசோவ் புலத்தையும், 1700 முதல் 1721 வரை சுவீடியப் பேரரசுடன் போரிட்டு பால்டிக் புலத்தையும், 1722 முதல் 1723 வரை பாரசீகப் பேரரசுடன் போரிட்டு கஸ்பியன், காக்கேசஸ் புலங்களையும்... கைப்பற்றினார். அத்தகைய மகா பீட்டரை அதிபர் பூட்டின் நயந்துவக்க நியாயம் இருக்கிறது!



**மார்க்ஸ்**

மார்க்சின் அரியதொரு கூற்று இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது. அதாவது: 'மனிதர்கள் தமது சொந்த வரலாற்றை உருவாக்குகிறார்கள். ஆனால், தாம் விரும்பிய விதமாக அதனை அவர்கள் உருவாக்குவதில்லை. தாங்கள் தெரிவுசெய்த சூழ்நிலைகளுக்கமைய அதனை அவர்கள் உருவாக்குவதில்லை. நேரெதிரே காணப்படும், அவர்களிடம் தரப்படும், கடந்த காலத்திலிருந்து ஈயப்படும் சூழ்நிலைகளுக்கமையவே தமது வரலாற்றை அவர்கள் உருவாக்குகிறார்கள்.'



mani.v@thaiveedu.com

# மேற்கின் பொருளாதாரத் தடைகள்: அணுகுமுறையும் விளைவுகளும்

- ரூபன் சிவராஜா

உலகமயமாக்கலில் பொருளாதார உறவுகளே முதன்மையானவை எனும் போதும், அதனைத் தாண்டி அரசியல், சமூக, பண்பாடு, விளையாட்டு, ஊடகம், வாழ்வுமுறை, உணவு எனப் பல தளங்களில் உலகமயமாக்கல் தாக்கம் செலுத்துகின்றது. அதிலும் தகவல்தொழில்நுட்பமும் அதன் இன்னபிற கூறுகளும் பெருமளவில் தாக்கம் செலுத்துகின்றன. இந்த உலகம யமாக்கலில் சீனாவும் ரஷ்யாவும் தவிர்க்க முடியாத அங்கங்கள். ரஷ்யா எண்ணெய், இயற்கை வாயு ஏற்றுமதி நாடு மட்டுமல்ல. முக்கியமான மூலப்பொருட்கள், உணவுப்பொருட்களையும் உலக நாடுகள் அங்கிருந்து இறக்குமதி செய்கின்றன. தற்போதைய உலகு ஒற்றைத்துருவமாக இயங்க முடியாது. அது பல்துருவ உலகாகவே இயங்க முடியும். இதுவே உலகமயமாக்கலின் யதார்த்தம்.

இரண்டாம் உலகப் போருக்குப்பின்னர் மேற்கு ஐரோப்பிய நிலங்கள் இதுவரை எந்தப்போரையும் சந்திக்கவில்லை. கிழக்கு ஐரோப்பிய தேசங்களில் போர்கள் நடைபெற்றுள்ளன. தற்போதைய உக்ரைன் மீதான போர் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரான பாரிய இராணுவ நடவடிக்கை எனப்படுகிறது. அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ரஷ்யா மீது பொருளாதாரப் போரினைத் தொடுத்திருப்பதென்பது, அதன் பொருளாதாரத்தைச் சிதைப்பதையும் ஒரு தேசமாக அதனைப் பலவீனப்படுத்துவதையும் நோக்காகக் கொண்டுள்ளது. மட்டுமல்லாமல் விளையாட்டு, கலை உள்ளடங்கலான துறைகளிலும் ரஷ்யாவைப் புறக்கணிக்கத் தொடங்கியுள்ளன. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா, ஜேர்மன், நோர்வே போன்றன உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்புகின்றன.

## அமெரிக்கப் பிரச்சாரமும் இலக்குகளும்:

உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பினை விளாடிமிர் புதினின் அகண்ட ரஷ்யக் கனவின் செயல்வடிவம் என்றவாறுதான் மேற்கு அதிகம் வியாக்கியானப்படுத்துகின்றது. தன்னைச் சுற்றியுள்ள, குறிப்பாக முந்நாள் சோவியத் நாடுகளைத் தனது செல்வாக்கிற்குள் வைத்திருக்கின்ற முனைப்பு ரஷ்யாவிற்கு உள்ளதை மறுப்பதற்கில்லை. பெலருஸ் அவ்வாறானதொரு வகையில் புதினின் செல்வாக்கிற்கு உட்பட்ட நாடாக நீண்டகாலமாக உள்ளமை அறிந்த ஒன்றே. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மேற்கின் செல்வாக்கிற்கு உட்படாதிருப்பது தனது பாதுகாப்பிற்கு அவசியமென்பது ரஷ்யாவின் நிலைப்பாடு. பூகோள அரசியலினதும் பிராந்திய நலன் சார்ந்ததுமான நிலைப்பாடு அது. அமெரிக்காவினதும் மேற்கினதும் நோட்டோ விரிவாக்கத்தின் நேரடி விளைவே உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு என்பதை முன்னைய கட்டுரையில் பார்த்திருந்தோம்.

போருக்கான காரணத்தை முற்றுமுழுதாக ரஷ்யா மீது போட்டுத் தம்மை உலகப் பாதுகாவலர்களாகக் காட்டுகின்ற அணுகுமுறையினையே அமெரிக்காவும் மேற்கும் தொடர்ந்து கைக்கொண்டு வருகின்றன. மேற்கின் ஊடகங்களும் அந்த நோக்கத்திற்கு வலுச்சேர்த்து வருகின்றன. அமெரிக்காவிற்கு இந்தப் போர் இராணுவ, பொருளாதார நலன்களைக் கொடுக்கக்கூடியது. ஆனால் ஐரோப்பாவிற்குப் பொருளாதார இழப்பினைக் கொடுக்கக்கூடியது. ஐரோப்பாவில் தனது இயற்கை எரிவாயுவிற்கான சந்தையை ஏற்படுத்துவது, ரஷ்யப் பொருளாதாரத்தைச் சிதைப்பது, நேட்டோப் படைகளை மேலும் கிழக்கு ஐரோப்பாவில் விரிவுபடுத்துவது போன்ற இன்னபிற நலன்களை அமெரிக்கா இந்தப் போரைத் தூண்டிவிட்டதன் மூலம் அறுவடை செய்யப் போகின்றது.

## விரக்தியில் உக்ரைன் ஜனாதிபதி:

அமெரிக்கா போரைத் தூண்டிவிட்டது அல்லது எரிந்துகொண்டிருந்த நெருப்பின் மீது எண்ணெய் ஊற்றியது. ஆனால் இன்று போரின் உக்கிரத்தினை உக்ரைன் தனித்து எதிர்கொள்கிறது. 'தடைகளும் பொருளாதாரத் தண்டனைகளும் சமாதானத்தை நிர்ப்பந்திக்கப் போதுமானவை அல்ல', 'ஐரோப்பியக் கொள்கைளுக்காகத்தாம் உயிரைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம்' போன்ற கூற்றுக்களை விரக்தியின் விளிம்பில் நின்றபடி உக்ரைன் ஜனாதிபதி Volodymyr Zelenskyj வெளிப்படுத்தியுள்ளார்.

நோட்டோவின் கிழக்கு ஐரோப்பிய விரிவாக்கம் தனக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ற ரஷ்ய நிலைப்பாடு புறந்தள்ளக்கூடியதன்று. அதனைப் புரிந்துகொள்வதற்கு அமெரிக்க-மேற்கைரோப்பிய படைத்துறைக் கூட்டணி, கிழக்கு ஐரோப்பிய படைத்துறைக் கூட்டணி தொடர்பான வரலாற்றுப் பார்வை அவசியமாகுகின்றது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான நிலைமைகள், பனிப்போர் காலகட்டம், பின்-பனிப்போர் காலம் ஆகியவற்றின் பிராந்திய அரசியல், இராணுவ நிலைமைகள் தொடர்பான புரிதல் அவசியமானது.

## மேற்கு (நோட்டோ) - கிழக்கு (Warsaw):

இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஐரோப்பா மேற்கு அணி, கிழக்கு அணி என இரண்டு துருவங்களாகச் செயற்பட்டன. ஜேர்மனி இரண்டாகப் பிரிந்த அதே 1949ம் ஆண்டு, நேட்டோ உருவாக்கப்பட்டது. கிழக்கு அணி என்பது, சோவியத் மற்றும் ஏனைய கிழக்கைரோப்பிய நாடுகளைச் சுட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. பனிப்போர் காலத்தில் ஐரோப்பாவிற்கு வெளியில் இருந்த சோவியத் ஆதரவு கொம்யூனிச நாடுகளைச் சுட்டவும், குறிப்பாகச் சீனாவைச் சுட்டவும் 'கிழக்கு அணி' சொற்பிரயோகம் பயன்படுத்தப்பட்டது. மேற்கு அணி என்பது அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளைக் குறிப்பது. இந்தக் குறியீடு இன்றுவரை அரசியல் சொல்லாடலாகப் புழக்கத்தில் இருந்து வருகின்றது.

பன்னிரெண்டு நாடுகளுடன் நேட்டோ உருவாக்கம் பெற்றது. அமெரிக்கா, பிரித்தானியா, பெல்ஜியம், கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஐஸ்லாண்ட், லக்சம்பர்க், நெதர்லாந்த், போர்த்துக்கல், நோர்வே, டென்மார் ஆகியன அந்தப் பன்னிரெண்டு தொடக்க

கால நோட்டோ அணிகளாகும். இன்று 30 நாடுகளை ஒன்றுதிரட்டிய கூட்டமைப்பாக அது விளங்குகின்றது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளை அடுத்தடுத்து இணைத்தமை நோட்டோ அங்கத்துவ நாடுகளின் அதிகரிப்பிற்கான முக்கிய நகர்வாகும். இதுவே ரஷ்யாவை அச்சுறுத்துகின்ற முதன்மைக் காரணி. பனிப்போர் காலத்தில் கிரீஸ், துருக்கி, ஜேர்மன், ஸ்பெயின் ஆகியனவும், 1999ல் முந்நாள் Warsaw உடன்படிக்கை நாடுகளான போலந்த், ஹங்கேரி, செக்கியா ஆகியனவற்றையும் நோட்டோ இணைத்துக் கொண்டது. 2004ல் முன்னாள் கிழக்கு அணி நாடுகள் அல்லது அவற்றுடன் எல்லைகளைக் கொண்டிருந்த நாடுகளை இணைத்தது. அந்த வரிசையில் 2004ல் பல்காரியா, ரொமேனியா, எஸ்தோனியா, இலத்வியா, லித்வேனியா, சுலவாக்கியா, சுலவேனியா ஆகியனவும், 2009ல் அல்பேனியா, குரோவாசியா மற்றும் 2017ல் மொன்ரநீக்ரோ ஆகியனவும் இணைக்கப்பட்டன.

## ‘Warsaw உடன்படிக்கை’:

Warsaw pact எனும் உடன்படிக்கை சோவியத் ஒன்றியத்திற்கும் கிழக்கு ஐரோப்பாவின் அன்றைய நாடுகளுக்கும் இடையில் 1955ல் போலந்ந் தலைநகர் Warsawல் கைச்சாத்திடப்பட்டது. இதுவொரு படைத்துறை மற்றும் பாதுகாப்பு சார்ந்த கூட்டமைப்பு. அல்பேனியா, பல்காரியா, போலந்த், ரொமேனியா, செக்கோஸ்லவாக்கியா, ஹங்கேரி, கிழக்கு-ஜேர்மனி ஆகியன அக்கூட்டணியில் இடம்பெற்றிருந்தன. பனிப்போர் காலத்தின் கிழக்கு ஐரோப்பிய அணியாகவும், அதேவேளை நோட்டோ அணிக்கு எதிரான கூட்டாகவும் அது விளங்கியது. நோட்டோவுக்கு மாற்றான ‘சோசலிச இராணுவக் கூட்டமைப்பு’ எனவும் பார்க்கப்பட்டது. தொடக்கத்திலிருந்து சோவியத் ஒன்றியம் கூட்டமைப்பின் அதிகாரம் மிக்க தரப்பாக இருந்துவந்தது. 1989ல் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், அதாவது சோவியத்தின் உடைவும் பனிப்போரின் முடிவும் Warsaw உடன்படிக்கை கலைக்கப்படுவதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. போலந்த், ஹங்கேரி, பல்காரியா, செக்கோஸ்லவாக்கிய ஆகியன மேற்கின் பக்கம் சாய்கின்ற சூழல் உணரப்பட்டபோது, 1991ல் பிராஹாவில் உடன்படிக்கை உத்தியோகபூர்வமாக கலைக்கப்பட்டது.




## ரஷ்ய இயற்கை எரிவாயு ஏற்றுமதி:

உலகின் மொத்த இயற்கை எரிவாயு உற்பத்தியின் 20 வீதம் ரஷ்யாவினால் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஐரோப்பாவிற்கான மொத்த எரிவாயுத் தேவையின் 40 வீதம் ரஷ்யாவிலிருந்தும், 40 வீதம் நோர்வேயிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றது. 2011ல் அணுமின்நிலையங்களைப் படிப்படியாக அகற்றும் முடிவினை ஜேர்மன் எடுத்தது. இம்முடிவின் பின்னர் ரஷ்ய எரிவாயுவில் அதிகம் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு ஜேர்மன் தள்ளப்பட்டது. 2019 நிலவரத்தின்படி ஜேர்மனியின் மொத்த எரிவாயுத் தேவையின் 51 வீதத்தினை ரஷ்யாவிடமிருந்தும் 27 வீதத்தினை நோர்வேயிலிருந்தும் 21 வீதத்தினை நெதர்லாந்திலிருந்தும் இறக்குமதி செய்வதாக தரவுகள் கூறுகின்றன. 25 வீதமான ஐரோப்பிய நாடுகளுக்கான எண்ணெய் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.

அமெரிக்காவும் அடிப்படையில் எரிவாயு உற்பத்தி நாடு. தனது எரிவாயுவிற்கான சந்தையை ஐரோப்பாவில், அதாவது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மத்தியில் ஏற்படுத்துவதில் கடும் பிரயத்தனம் கொண்டிருக்கின்றது. ரஷ்யாவைப் போருக்குத் தூண்டிவிட்டதில் அமெரிக்காவின் நேட்டோ விரிவாக்கத் திட்டத்திற்கு அப்பாலான நோக்கமும் உள்ளது. நோட்டோ விரிவாக்கத் திட்டம் இராணுவ நலன் சார்ந்தது. மற்றையது நேரடியான பொருளாதார நலனை அடிப்படையாகக் கொண்டது. அது ஐரோப்பிய நாடுகள் இயற்கை எரிவாயுவிற்கு ரஷ்யாவில் தங்கியிருப்பதை இல்லாமற் செய்து தனது எரிவாயு ஏற்றுமதிக்கான கதவுகளைத் திறப்பதும் ஐரோப்பாவில் தனக்கான சந்தையை உருவாக்கிப் பேணுவதுமாகும். இதன் மூலம் ரஷ்ய பொருளாதாரத்தை சிதைப்பதென்ற இலக்கும் உள்ளடங்கியுள்ளதைப் புரிந்து கொள்ளலாம்.

## ரஷ்யா மீதான தடைப்பட்டியல்:

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ரஷ்ய விமானங்கள் தமது வான் பரப்பில் பறப்பதற்குத் தடைவிதித்துள்ளன. நோர்வேயும் தடைவிதித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் நான்கரை பில்லியன் யூரோ பெறுமதியான ஆயுதங்களை உக்கிரைனுக்கு வழங்க முடிவெடுத்துள்ளது. இது வரலாற்றில் முதற்தடவையாக ஐரோப்பிய ஒன்றியம் நேரடியாக இராணுவ நடவடிக்கைகளுக்கு அல்லது போரை எதிர்கொள்ள வேறொரு நாட்டுக்கு நிதிவழங்குகின்ற நிகழ்வு. முன்னர் ஐரோப்பிய நாடுகள் நோட்டோ மற்றும் ஐ.நா ஊடாக இராணுவ ஆளணிகள், ஆயுத தளவாடங்களை ஏனைய நாடுகளின் போர்களுக்கு அனுப்பி வைத்துள்ளன. ஜேர்மன் ‘Nord Stream- 2’ கடற்கீழ் எரிவாயுக் குழாய்த்திட்டற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. சுவீடன் பொதுவாக நடுநிலை வகிக்கின்ற நாடு. இராணுவ விடயங்களில் தலையிடுவதில்லை. ஆனால் உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கியுள்ளது. சுவிற்சர்லாந்தும் அதே போன்ற நிலைப்பாடுடைய நாடு. அதுவும் இப்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் ரஷ்யா மீதான தடைகளுடன் இணைந்துள்ளது. இப்படியாக முழு ஐரோப்பாவும் ரஷ்யாவுக்கு எதிராக ஒன்றிணைந்துள்ளன.

உலக வங்கிகளுக்கிடையிலான பணப்பரிவர்த்தனைக்கான Swift code பொறிமுறையிலிருந்தும், அமெரிக்க டொலர் பயன்பாட்டிலிருந்தும் ரஷ்ய வங்கிகள் பல விலத்திவைக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளால் ரஷ்ய வர்த்தக நிறுவனங்கள் மீதும் வணிக, பொருளாதாரத் தடைகள் கொண்டுவரப்பட்டுள்ளன ஐரோப்பிய நாடுகளால். ரஷ்யாவின் 3வது பெரிய வங்கியான VTB மற்றும் ஏனைய 3 வங்கிகள் உலகளாவிய நிதியமைப்பிலிருந்து நீக்கிவைக்கப்பட்டுள்ளன. அதன் பொருள் உலகளாவிய பணப்பரிவர்த்தனைகளுக்கு இந்த வங்கிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்பதாகும். ஆயினும் Swift பொறிமுறையிலிருந்து ரஷ்யா முற்றாக ஒதுக்கப்படவில்லை என்ற தகவலையும் அறிய முடிகிறது. முற்றிலும் நீக்கிவைக்கப்பட்டால் ரஷ்ய எரிவாயுவிற்கு ஐரோப்பிய நாடுகள் கட்டணத்தினைச் செலுத்தமுடியாது போய்விடும். கட்டணம் செலுத்தப்படாதுவிட்டால் ரஷ்யா எரிவாயு வழங்கலை நிறுத்திவிடும் என்ற ஐரோப்பிய நாடுகளின் அச்சம் Swift பொறிமுறையிலிருந்து முற்றாக ரஷ்ய வங்கிகளை விலத்தாமைக்கான காரணியாகும்.

## ‘Nord Stream - 1’ - கடற்கீழ் இயற்கை எரிவாயுக் குழாய்:

‘Nord Stream - 1’ உலகின் மிக நீண்ட கடற்கீழ் இயற்கை எரிவாயு




குழாய் தொடர் ஆகும். இது ரஷ்யாவுக்கும் ஜேர்மனிக்குக்கும் இடையில் அமைக்கப்பட்டுள்ள 1222 கிலோமீட்டர் நீளமான குழாய். பல்டிக் கடலின் ஊடாக போலந்த், பின்லாந்த், சுவீடன், டென்மார்க் நாடுகளின் கடற்பகுதிகளைத் தொட்டபடி ஜேர்மனிக்குள் செல்கின்றது. இது 2011ல் முழுமை பெற்றது. பல்கன் நாடுகளுக்கு ஊடாக இந்தக் குழாய்த்தொடரை அமைப்பதாயின் குறைந்த தூரமுடையதாக அமைத்திருக்கமுடியும். ஆனால் பிராந்திய அரசியல் திடமின்மை காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்ப்பதற்கு அப்பாதை தெரிவுசெய்யப்படவில்லை. இதற்கான ஆலோசனை ரஷ்யாவிடமிருந்து முன்வைக்கப்பட்டிருந்தது. 1993ல் இதற்கான பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டு, 1997களில் கடல்வழி வாய்ப்புகள் தொடர்பான கள ஆய்வுகள் முடிவுக்கு வந்து, 2005ல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. Nord Stream 2 எனும் பெயரில் இதேபோன்றதொரு புதிய எரிவாயுக்குழாய்த் திட்டம் 2015ல் தொடங்கப்பட்டது. அமெரிக்க அழுத்தம் காரணமாக 2019ல் இடைநிறுத்தப்பட்டு தற்போது ரஷ்யாவின் போர் காரணமாக நிரந்தரமாகக் கைவிடப்பட்டுள்ளது. Nord Stream 1 குழாய்த் தொடர் போன்ற கடத்துதிறன் கொண்ட திட்டம் இது.

இத்திட்டத்தினைத் தடுப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் மீதும் அதனது பொருளாதாரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் மீதும் அமெரிக்கா அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தது. பொருளாதாரத் தடைகளைப் போடப்போவதாகவும் நெருக்கியது. ஐரோப்பிய ஒன்றியம் கூட்டாகவும் ஜேர்மனி நேரடியாகவும் அமெரிக்க அழுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. ஐரோப்பிய மின்சார மற்றும் எரிசக்தி அரசியல் என்பது ஐரோப்பாவில் தீர்மானிக்கப்படவேண்டும், அமெரிக்காவில் அல்ல எனக் கடுமையான எதிர்ப்பினைப் பதிவுசெய்திருந்தன. அமெரிக்க வணிகத்தடை அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து நோர்வே Nord Stream 2 திட்டத்திலிருந்து முன்னரே விலகிக் கொண்டது. உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பு Nord Stream 2இற்கு ஜேர்மன் தானாக முற்றுப்புள்ளிவைக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

## ஜேர்மன் - ரஷ்ய வணிக உறவு:

பனிப்போர் காலத்தில் மேற்கிற்கும் கிழக்கிற்குமிடையிலான பாலமாக ஜேர்மன் இருந்துள்ளது. ரஷ்யாவுடனும் கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளுடனும் ஜேர்மன் முதலீட்டு மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தி வந்துள்ளது. 2000இற்குப் பின்னர் ரஷ்யாவின் பொருளாதார வளர்ச்சி, அது சீனாவுடன் நெருக்கமான உறவினைப் பேணிவருகின்றமை, ஜேர்மன் ரஷ்யா வணிக உறவு என்பன அமெரிக்காவிற்கு பதட்டத்தைக் கொடுக்கின்ற அம்சங்கள். அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன ரஷ்ய - ஜேர்மன் வர்த்தக உறவுக்கு எதிரான அழுத்தங்களை ஜேர்மன் மீது தொடர்ச்சியாகப் பிரயோகித்து வந்துள்ளன. அஞ்சலா மர்க்கல் காலத்திலும் ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனான வர்த்தக உறவு வலுப்பெற்று வந்துள்ளது. ரஷ்யா மீதான உக்ரைன் போர் ஜேர்மனியின் நிலைப்பாட்டில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்க முன்வந்துள்ளமை மட்டுமல்லாது தனது பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீட்டினைக் கணிசமாக அதிகரித்துமுள்ளது. தேசிய மொத்த வருமானத்தில் 2 வீதம் பாதுகாப்புச் செலவுக்காக ஜேர்மன் ஒதுக்குகின்றது. அதன் நிதிப்பெறுமதி 100 பில்லியன் யூரோ. பல ஆண்டுகள் நேட்டோ மற்றும் அமெரிக்கா அழுத்தங்களைப் பிரயோகித்தபோதும் பாதுகாப்புத்துறைக்கு கூடுதல் நிதியினை ஒதுக்காத ஜேர்மனி, தற்போது ரஷ்ய - உக்ரைன் போரின் விளைவாக அதிகரித்துள்ளது. இரண்டாம் உலக யுத்த அனுபவமும் பாடமும் வகிபாகமும் ஜேர்மனியின் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அரசியலைத் தீர்மானித்து வந்துள்ளது. உக்ரைனுக்கு ஆயுத தளபாட உதவிகளை ஜேர்மன் வழங்க முன்வந்துள்ளமை அதனுடைய வெளியுறவு மற்றும் பாதுகாப்பு சார் அரசியலின் அதிசயிக்கத்தக்க மாற்றமென ஊடகங்கள் வர்ணித்துள்ளன.

## இயற்கை எரிவாயு ஏற்றுமதிக்கான நோர்வேயின் புதிய திட்டம்:

ரஷ்யா போன்று ஐரோப்பாவிற்கான இயற்கை எரிவாயு ஏற்றுமதியில் நோர்வேயும் முக்கிய நாடு. உக்ரைன் போர் நோர்வேயின் எரிசக்தி அரசியலை மறுசீரமைக்கும் வாய்ப்புகள் தொடர்பாக ஆராயவேண்டுமென நோர்வே நாடாளுமன்றத்தில் பல கட்சிகள் அண்மையில் வலியுறுத்தியுள்ளன. அதன் பொருள் ஐரோப்பாவின் எரிவாயுத் தேவையைப் நிவர்த்தி செய்கின்ற முக்கிய தரப்பாக நோர்வேயை முன்னிறுத்துவதாகும். அதாவது ஐரோப்பிய நாடுகளுக்கான நோர்வேயின் எரிவாயு ஏற்றுமதியைக் கணிசமாக அதிகரிப்பதும் தமது எரிசக்திக்கான ஐரோப்பியச் சந்தையை விரிவுபடுத்துவதற்குமான புதிய சூழலைப் பற்றிக்கொள்வதைக் குறிக்கின்றது.

நோர்வேயின் இந்த முனைப்பிற்குரிய நம்பிக்கையைக் கொடுப்பதாக ஐரோப்பிய ஒன்றியமும் சர்வதேச சக்தி மையம் International Energy Agency: IEA தீர்மானங்களை முன்மொழிந்துள்ளன. அதாவது ஒரு ஆண்டுக்குள் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யும் எரிவாயுவை இரண்டில் மூன்று பங்கு குறைத்தல். மற்றும், மாற்றுவழிகளையும் வழங்கல் தரப்புகளையும் கண்டடைதல் என்பதாகும். ரஷ்யாவிலிருந்து குழாய் வழியாக ஜேர்மனிக்கும் பின்னர் ஜேர்மனியிலிருந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குமிடையிலான எரிவாயுக் கடத்துகைக் கட்டமைப்பினூடாக விநியோகம் நடைபெற்றுவந்தது. ரஷ்யாவிலிருந்து எரிவாயு இறக்குமதியைக் குறைப்பதென்பது வேறு நாடுகளிலிருந்து அதிகம் திரவமாக்கப்பட்ட எரிவாயுவை (liquefied natural gas (LNG) இறக்குமதி செய்வதைக் குறிக்கின்றது.

## ரஷ்ய எரிவாயுவிற்கு ஐரோப்பாவின் மாற்றுத்திட்டம்:

உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பிற்குப் பின் எண்ணெய், எரிவாயு விலை ஐரோப்பாவில் பாரியளவில் அதிகரித்துள்ளது. மட்டுமல்லாமல் மின்சாரக் கட்டணமும் அதிகரித்துள்ளது. 2022இற்குள் ரஷ்ய எரிவாயு இறக்குமதியை முற்றாக நிறுத்துவதற்கான முனைப்பினை பிரித்தானியா கொண்டுள்ளது. 2030இற்குள் ரஷ்ய எரிவாயு இறக்குமதியை முற்றாக நிறுத்துவதற்கான திட்டங்களை ஐரோப்பிய ஒன்றியம் வகுக்கத் தொடங்கியுள்ளது. இதன் பொருள் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு இறக்குமதியை அதிகரிப்பது மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி (Renewable Energy) உருவாக்கத்திற்கான தொழில்நுட்ப உட்கட்டுமானங்களை விரிவு-படுத்த வேண்டும். புதுப்பிக்கத்தக்க சக்தி என்பது இயற்கை வளங்களான கடலலை, காற்றலை, சூரியஒளி, மழை, வெப்பம் உட்பட்டவற்றிலிருந்து சக்தி பிறப்பாக்கத்தைக் குறிக்கின்றது. ஐரோப்பிய நாடுகள் பல இத்தகைய இயற்கை வளங்களிலிருந்து அதிகளவு மின்சார உற்பத்தியைச் செய்கின்றன.

## மேற்கின் தோற்றுப்போன பொருளாதாரத்தடை அணுமுறை:

எதிரியைப் பணியவைக்க பொருளாதார வணிகத்தடைகள் உலக வரலாற்றில் புதியவை அல்ல. ஆனாலும் மேற்கின் வணிக, பொருளாதாரத்தடை என்பது தோற்றுப்போனதொரு அரசியல் அணுகுமுறை எனும்போதும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் அதனையே முக்கிய ஆயுதமாகக் கைக்கொண்டு வந்திருக்கின்றன. தடைகள் பெரியளவில் ஆட்சியாளர்களைப் பாதிப்பதில்லை. சாதாரண பொதுமக்களைத் தான் பாதிக்கின்றன என்ற விமர்சனங்களும் அவ்வப்போது எழுந்துள்ளன. எதிரியைப் பொருளாதார ரீதியில் கழுத்தை நெரிப்பது அமெரிக்காவின் ஆயுதங்களில் ஒன்றாக நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. 1962இலிருந்து கியூபா மீதான பொருளாதாரத் தடைகள், 1975 - 1994 வரை வியட்னாம் மீதான தடைகள் மற்றும் 1950களிலிருந்து வட கொரியா மீதான தடைகளைப் பட்டியலிடலாம். 1990ல் குவைத்தினை ஈராக் ஆக்கிரமித்துத் தன்னோடு பலவந்தமாக இணைத்ததை அடுத்து ஈராக் மீது பாரிய தடைகள் கொண்டுவரப்பட்டன. 1993ல் லிபியா மீதான தடைகள். ஈராக் மீது 1990ல் ஐ.நா பாது-காப்புச் சபையின் தீர்மானத்துடன் ஈராக் மீது கொண்டுவரப்பட்ட தடைகள் பத்தாண்டுகள் நீடித்தன. அத்தடைகள் சதாம் ஆட்சிபீடத்தைப் பாதிக்கவில்லை. மாறாக நாட்டின் பொருளாதாரத்தைச் சிதைத்தது. சாதாரண பொதுமக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். உணவு மற்றும் மருந்துத் தட்டுப்பாடுகளால் 500,000 வரையான குழந்தைகளும் சிறுவர்களும் உயிரிழந்ததாக ஐ.நா சிறுவர் நிதியத்தின் தரவுகள் தெரிவித்தன.

## தடை அணுமுறை மீதான எதிர்வினை:

ஈராக் மீதான பொருளாதாரத் தடைகள் ஒரு ஒட்டுமொத்தச் சமூகத்தையும் அழிக்கின்றது என எதிர்ப்புத் தெரிவித்து ஐ.நாவின் துணைப் பொதுச்செயலாளரும் ஈராக்கிற்கான மனிதாபிமான செயற்பாடுகளுக்கான இணைப்பாளருமான Denis Halliday 1998ல் பதவிவிலகினார். ஈராக் விவகாரத்தில் எழுந்த கடுமையான விமர்சனங்கள், புதிய மாற்றத்துடன் எண்ணெய், ஆயுதங்கள் உட்பட்ட திட்டவட்டமான பொருட்களுக்கான தடை கொண்டு வரப்பட்டது. அதாவது உணவுப்பொருட்கள் மற்றும் மருந்துப்பொருட்களுக்கான தடைகள் தளர்த்தப்பட்டன.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் மனித உரிமைகள், ஜனநாயகத்தின் பேரில் தமக்கு ஒவ்வாத மற்றும் சர்வாதிகார ஆட்சி-பீடங்கள் மீது தடைகளை நடைமுறைப்படுத்தின. ஆனால் இவர்கள் தலைமையேற்று நடத்திய ஆக்கிரமிப்புப் போர்களுக்கு இவர்கள் மீது பொருளாதாரத்தடைகளை யார் விதிப்பது. மேற்கின் பொருளாதாரத் தடைகள் அவர்களின் புவிசார் நலன்களுக்குத் தகுந்தாற்போல் தெரிவுசெய்யப்படுபவையே. பலஸ்தீன நிலங்களைத் தொடர் ஆக்கிரமிப்புச் செய்து வரும் இஸ்ரேலுக்கு எதிராக இதுவரை எந்தப் பொருளாதாரத் தடைகளையும் மேற்கு கொண்டுவரவில்லை. அதிலும் 1967 இற்குப் பின் மேற்கொள்ளப்பட்ட கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட நில ஆக்கிரமிப்புகளை ஐ.நா பாதுகாப்புச் சபைத் தீர்மானம் ஒன்று 2016ல் கண்டித்திருந்த போதும் எவ்வித அழுத்தங்களையோ தடைகளையே இஸ்ரேல் மீது மேற்கு கொண்டுவரவில்லை.

## உலகமயமாக்கலும் பல்துருவ உலகின் அவசியமும்:


இன்றைய உலகு ஒற்றைப் பரிமாண உலகு அல்ல. உலகமயமாக்கல் யதார்த்தத்தில், பிராந்திய எல்லைகளைத் தாண்டி, நாடுகள் ஒன்றோடொன்று நெருங்கிய பொருளாதார உறவுகளைக் கொண்டுள்ளன. பொருளாதார வலைப்பின்னல்களும் அவற்றின் அடுக்குகளும் அத்தகைய நெருக்கமும் தங்குநிலையுமுடையனவாக மாறியிருக்கின்றன. உலகமயமாக்கல் என்பது வெறுமனே பொருளாதார எல்லைகளைத் தகர்த்திருப்பது மட்டுமல்ல. பொருளாதார உறவுகளே முதன்மையானவை எனும் போதும், அதனைத் தாண்டி அரசியல், சமூக, பண்பாடு, விளையாட்டு, ஊடகம், வாழ்வுமுறை, உணவு எனப் பல தளங்களில் உலகமயமாக்கல் தாக்கம் செலுத்துகின்றது. அதிலும் தகவல்தொழில்நுட்பமும் அதன் இன்னபிற கூறுகளும் பெருமளவில் தாக்கம் செலுத்துகின்றன.

இந்த உலகமயமாக்கலில் சீனாவும் ரஷ்யாவும் தவிர்க்க முடியாத அங்கங்கள். ரஷ்யா எண்ணெய், இயற்கை வாயு ஏற்றுமதி நாடு மட்டுமல்ல. முக்கியமான மூலப்பொருட்கள், உணவுப்பொருட்களையும் உலக நாடுகள் அங்கிருந்து இறக்குமதி செய்கின்றன. சீனா மேற்கிற்குரிய மிகப்பெரிய நுகர்வுப்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடு. கொரோனா தொற்றுக்காலத்தில் ஏற்பட்ட முடக்கம் அதனைத் தெட்டத்தெளிவாக உணர்த்தியது. விநியோகப் பொறிமுறைகள் பாதிக்கப்பட்டிருந்தமை, முன்கணிப்பற்றிருந்தமையால் எதிர்கொண்ட பொருட்களுக்கான தட்டுப்பாடுகள், சிக்கல்கள் சீனாவில் வெகுவாகத் தங்கியிருந்தமையை வெளிப்படுத்தியிருந்தன. எனவே தற்போதைய உலகு ஒற்றைத்துருவமாக இயங்க முடியாது. அது பல்துருவ உலகாகவே இயங்க முடியும் என்பது உலகமயமாக்கலின் யதார்த்தம்

## ரஷ்ய எண்ணெய், எரிவாயு, மூலப்பொருள்களில் தங்கியுள்ள பல நாடுகள்:

ஐரோப்பாவைப் பொறுத்தவரை எரிவாயு ஏற்றுமதியில் ரஷ்யாவை ஒரு வல்லரசு எனலாம். அமெரிக்கா அடுத்த நிலையில் உலகின் இரண்டாவது பெரிய எரிவாயு ஏற்றுமதி நாடாகவுள்ளது. கோதுமை மாவு ஏற்றுமதியில் ரஷ்யா, உக்ரைன் மற்றும் கசக்கஸ்தான் ஆகியன முக்கியமானவை. இம்மூன்று நாடுகளும் கருங்கடல் ஊடாக உலகின் மொத்த கோதுமைப் பாவனையின் மூன்றில் ஒரு பங்கினை ஏற்றுமதி செய்கின்றன. சோளம் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தியில் முன்னணியில் உள்ள நாடு உக்ரைன். உலக நாடுகளுக்கான 20 வீத சோளமும் 80 வீதமான சூரியகாந்தி எண்ணெயும் உக்கிரைனிலிருந்து செல்கின்றன. எகிப்த், துருக்கி, இந்தோனேசியா போன்ற மக்கட்தொகை அதிகமுள்ள நாடுகள் இந்த இறக்குமதிப்பொருட்களில் பெரிதும் தங்கியுள்ளன. இன்னும் நேரடியாகச் சொல்வதானால் பல உலக நாடுகளின் பொருளாதாரத்திற்கு ரஷ்ய மூலப்பொருட்கள் அத்தியாவசியமானவையாக உள்ளன. உணவுத்தட்டுப்பாட்டுக்கு வழிவகுக்கக்கூடிய அளவிற்கும், எரிவாயு மற்றும் உலோகம் சார்ந்த மூலப்பொருட்களின் தட்டுப்பாடு தொழிற்சாலை உற்பத்திகளையும் பாதிக்கக் கூடியது.

பொருளாதாரத் தடை என்பது ரஷ்யாவை மட்டும் பாதிக்கப் போவதில்லை. ரஷ்யாவுடன் வர்த்தக உறவைக் கொண்டிருக்கின்ற நாடுகள், ரஷ்யாவின் எரிவாயு மற்றும் முலப்பொருட்களில் தங்கியுள்ள நாடுகள், அவற்றின் வணிக மற்றும் உற்பத்தித்துறைகளை பாதிக்கக்கூடியன.



rooban.s@thaiveedu.com


Mega Financial Group
WE ARE PROVIDING A LIFETIME
FAMILY PROTECTION
SAVE BIG
ON COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET
OUR PRODUCTS AND SERVICES
Life Insurance products
Critical Illness Insurance
Disability Insurance
Dental & Drug Insurance
Travel Insurance
Non-Medical Insurance
Mortgage Insurance
RRSP's Investments
RESP-Education Saving Plan
Final Expense Products
(Through Funeral Homes)
INDUSTRIAL ALLIANCE
Canada Life
Sun Life Financial
UL Mutual
OBF
La Capitale
Assumption Life
RBC Insurance
Empire Life
Desjardins
Manulife Financial
www.megafinancial.ca
RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca
Office: 416-293 5559 • Fax: 416-293 9409
PH28 -4168 Finch Ave. E., Scarborough, ON., M1S 5H6

# பிரசவ காலமும் வாந்தியும்

- கந்தையா செந்தில்நாதன்

தாய்மைப் பேறு என்பது ஒரு பெருஞ்செல்வம். இக் கால கட்டத்தில் பெண்ணின் பெற்றோர், கணவனின் பெற்றோர் மனமகிழ்வுடன் பல உதவி ஒத்தாசைகளைச் செய்து பெண்ணை மகிழ்வுடனும், ஆரோக்கியமாகவும் வைத்திருத்தல் பெண்ணிற்கு மிகுந்த மனநிறைவை ஏற்படுத்தும்.

முதல் பிரசவமாயின் பெண்ணிற்கு வேண்டிய அனுபவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியம். புலம் பெயர்ந்த



நாட்டில் தாயை அடுத்து மாமியார், உறவினர்கள், சிநேகிதர்கள், வைத்தியசாலை சிகிச்சை நிலையங்கள் என்பன உண்டு. சிறுவயது முதல் ஒட்டி, உறவாடி தனது எண்ணங்களைப் பகிர்ந்து, வளர்ந்து வந்த குடும்பத்தில் தாய் பிரதான இடத்தை வகிக்கிறார்.

கர்ப்ப காலத்தில் வாந்தி எடுக்கும் போது தாயோ, தந்தையோ, சகோதரமோ உதவிக்கு நின்று ஆறுதல் கூறுவது முதல் தேசிக் காய் மணக்கக் கொடுத்து இஞ்சித் தேநீர் பருகக் கொடுத்து வயிற்றுப் புரட்டுதலைக் குறைப்பதற்கு பலவாறும் முயன்று செயற்படுவர்.

நித்திரைத் தூக்கத்திலும் வீட்டில் ஆழ்ந்து தூங்குபவர்களைப் பெண்ணானவள் எழுப்பி உதவி கேட்கத் தயங்கமாட்டாள். இதன் காரணத்தால் தான் தலைப்பிரசவம் தாய் வீட்டில் என்று எமது முன்னோர் கூறிச் சென்றிருக்கிறார்கள்.

குறிப்பாக இங்கு நன்கு ஒட்டி உறவாடிப் பழகினர்வர்களும் இதே போல் கவனிப்பை நல்குவார்கள் என்பதனால் சமூகப் பிணைப்புக்களை எவ்வளவு தூரம் ஏற்படுத்துகிறோமோ அவ்வளவு நன்மைகளை எதிர் கொள்ளலாம். புலம் பெயர் தேசங்களில் இவை பிரதானமானவை.

பிரசவ காலத்தில் வாந்தி, வயிற்றுக்குமட்டல், வயிற்றுப் பொருமல் என்பன பல பெண்களில் ஏற்படுகின்றன. பெரும்பாலான பெண்களில் இவை பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. வாந்திக் குணம் இடையிடையே வந்துபோகும். வாந்தி எடுக்கவும் செய்வார்கள். கர்ப்பம் தரித்த முதல் சில கிழமைகளில் ஏற்படும் இந்த வாந்தி(சத்தி)க்குணம் அநேகமாக நாலுமாதமளவில் நின்று விடுவதுண்டு. சிலருக்கு இந்நிலை நீண்டு சென்று 5ம், 6ம் மாதங்களையும் கடந்து செல்லக் கூடும்.

கர்ப்பமுற்ற பெண் இங்கு பல சிரமங்களை எதிர்கொள்கிறார். பெண்ணின் வேலை, குடும்பப் பொறுப்பு, மனோநிலை என்பன மேலும் உடல் நிலையைப் பாதிப்பிற்கு உள்ளாக்கலாம். மனம் விட்டுப் பேசுவதற்கு கணவரும், தாய் வீட்டாரும், கணவன் குடும்பத்தினரும் இருக்கும் பொழுது அங்கு தென்பு பிறக்கிறது.

வெகு சில பெண்களுக்கு வாந்தி எடுக்கும் காலம் நீடித்துச் செல்லும் பொழுது, ஒவ்வொரு தடவையும் வாந்தி எடுக்கும் பொழுது, இங்கு உடலுக்கு வேண்டிய நீராகாரம் கிடைக்காமல் உடல்வற்றும் பொழுது, உடல் எடை குறைய வாய்ப்புண்டு. அத்துடன் உணவும் வாந்தியுடன் சென்று விடுவதால் தேவையான ஊட்டச்சத்துகளும் அரிதாகி விடுகிறது.

உணவு குடலில் தங்காமல் வாந்தியுடன் செல்வதால், உடலுக்கு வேண்டிய சக்தியை உடற்கொழுப்பில் இருந்து உடம்பு பெற்றுக் கொள்கிறது. சிறுநீர் பரிசோதனையின் பொழுது அதில் கீற்றோன் இருந்தால் உடலானது கொழுப்பை பாவிக்கிறது என்று உறுதி செய்யலாம்.

மிகவும் அதிகளவில் சத்தி(வாந்தி) எடுக்கும் பட்சத்தில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு நாளத்தினூடாக சேலையின், டெக்ஸ்றோஸ் போன்றவை ஏற்றப்பட்டு சத்திக்குரிய வாந்தி மருந் துகளும் கொடுக்கப்படும்.

உடலின் நீர்த்தேவை, உப்பு, குளுக்கோசு போன்ற உடனடித் தேவைகள் இதனால் பூர்த்தி செய்யப்படும். இக்கட்டத்தில் மகப் பேற்று நிபுணர் வாந்தியைக் கட்டுப்படுத்தும் வில்லைகளைப் பரிந்துரைப்பர்.

கர்ப்ப காலத்தில் வயிற்றுக் குமட்டல், வாந்தி என்பன அதிகமாக ஏற்படுவதற்கான காரணங்கள் பின்வருமாறு:

- முதற் பிரசவம்.
- தாயோ, சகோதரிகளோ பிரசவ காலங்களில் வாந்தியால் பாதிக்கப்பட்டிருத்தல்.
- பிரயாணங்களின் பொழுது வாந்திக்குணம் இருந்தால் அல்லது வாந்தி எடுத்திருந்தால்.
- இரட்டைக் குழந்தைகளும் அதற்கு மேலும் பிரசவ காலத்தில் ஏற்படுதல்.
- ஒற்றைத் தலைவலியும் ஒரு காரணமாக கருதப்படுகிறது.
- அதிக உடற்பருமன்.
- பெண் குழந்தை கர்ப்பத்தில் இருந்தால்.
- வேலைப்பழு, மன உளைச்சல் கூடுதலாக இருந்து அவற்றை கையாள்வதில் சிரமம் இருந்தால்.
- கோப்பிப் பானங்கள், கறிவகைகளின் மணங்கள், வேறு மணங் கள் சில பெண்களுக்கு தூண்டுதலாக அமைந்து வாந்தியைக் கொண்டு வரும்.

பெண்கள் வாந்தி எடுத்தாலும் இவை சிசுவைப் பாதிக்காது. சிறு சிறு ஓங்காளங்கள் வயிற்றுப் பகுதியை அசைவிற்கு உட்படுத்துவ தால், சமயங்களில் அவை நன்மையாகவும் அமைகின்றன. தொப் பூள் கொடி மூலம் தாயில் இருந்து தேவையான உணவை சிசுவா னது பெற்றுக் கொள்கின்றது.

தாயானவள் அதிகூடிய அளவு வாந்தி எடுக்கும் பட்சத்தில் தாயின் நீரின் அளவு, ஊட்டச்சத்தின் அளவுகள் கட்டாயம் பேணப்படுதல் வேண்டும். அல்லாவிடில் தாயில் நீர் குறைந்து, ஊட்டம் குறைந்து, சிசுவிற்கு பாதிப்பு ஏற்படும். வைத்திய ஆலோசனை பெறப்பட்டு அதன்படி ஒழுகுதல் வேண்டும்.


சிகிச்சை:

- இஞ்சிச்சாறுடன் தேநீர் அல்லது இஞ்சிப்பாகு.
- சிறு அளவிலான உணவை அடிக்கடி சாப்பிடுதல் நன்மை தரும். (கர்ப்பப்பை இரைப்பையை மேல் நோக்கித் தள்ளுவ தும், இரைப்பையின் மேற்பக்க வாய் மூடி தளர்ந்து இருப்பதும் களத்தினூடாக உணவு மீள வருவதற்கு இடமளிக்கிறது.)
- வாந்தியைத் தூண்டும் காரணிகளை அகற்றல். (கோப்பி மணம்)
- அதிக நேரம் ஓய்வு எடுத்தல்.
- மகப்பேற்று நிபுணர் பரிந்துரைத்த வில்லைகளைப் பாவித்தல்.
- நீர்ப் பானங்களை சிறிது சிறிதாக அருந்துதல்.

மேற்கொண்டும் வாந்தி கட்டுப்படாவிடில் வைத்தியசாலையில் தங் கிச் சிகிச்சை பெறவேண்டி ஏற்படலாம். வருமுன் காப்பது சிறந் தது. ஆதலால் சிறுகச்சிறுக நீர், உணவு என்பன எடுப்பது சிறந் தது.



senthilnathan.k@thaiveedu.com



# வழி தெரியாத வலி

# Fibromyalgia

- போல் ஜோசேப்

"குடும்ப மருத்துவர் எல்லாச் சோதனையும் செய்து பாத்திட்டு, 'எல்லாம் நோமல்' என்று சொல்லிப் போட்டார். ஆனா... எப்ப பார்த்தாலும் உடம்பெல்லாம் நோகுது. ஸ்பெசலிஸ்ட் டாக்டர் தந்த 'பெயின் கில்லர்' குளிசையெல்லாம் எத்தனை வருசமா போடுறன், அதுவும் இப்ப வேலை செய்யேல்ல... கோயிலுக்கு வாற கமலா ரீச்சர் சொன்னவ தங்களுக்கும் இப்படித்தான் நாரி நோவு இருந்து. கேரள வைத்தியம் செய்ய அங்க போய், இரண்டு கிழமை செய்த பிறகு, இப்ப கொஞ்சம் பரவாயில்லையென்று. அதையும் நம்பி அங்கைபோய், ஒரு மாதம் நின்று செய்ய நல்லா இருந்திச்சு... பிறகு, இங்கை வர பழையபடி நோகத் தொடங்கி விட்டுது."

ஆம் இவர்களுக்கு அப்படி என்னதான் பிரச்சினை? ஏன் இப்படி ஒரு இனம்புரியாத வலி? மருத்துவர்களுக்கே விடை தெரியாது தடுமாறும் அப்படியென்ன வியாதி?. கொரோனாவையே சமாளிச்சிட்டோம், ஆனா இது 1990க்குப்பிறகு கண்டுபிடிச்சாலும் முப்பது வருசங்களுக்கு மேலாகியும் என்ன ஏதெண்டு இன்னும் கண்டுபிடிக்க முடியாமல் ஆராய்ச்சிகள் தொடருது.

Fibromyalgia என்ற 'தசை நார் வலி'. இருபது பேரில் ஒருத்தர் இந்த நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். அமெரிக்க புள்ளிவிபரங்களின்படி 5 மில்லியன் பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்களாம். தற்போது தொற்றாத ஒரு பெரும் பரவலாக (Pandemic) உலகம் முழுவதும் பலரைத் தாக்கி வருகிறது. பெரும்பாலும் பெண்களைத்தான் அதிகமாக தாக்கினாலும் குறிப்பாக 30 முதல் 50 வயதிற்குள்ளானவர்களைத்தான் குறிவைக்கிறது. தொடக்கத்தில் மூட்டுவலிகளாக இருக்கலாம் என்று எண்ணி அதற்குரிய பரிசோதனைகள் எல்லாம் செய்து பார்த்தால்... அது நெகடிவ் என்று முடிவுகள் வரும். பிறகு மூட்டுவலி நிபுணர்கள், நரம்பு நிபுணர்கள், மற்றும் மனநல நிபுணர்கள் என்று எல்லாரும் தங்கள் பாணியில் பல பரிசோதனைகளைச் செய்து கடைசியில் இது காரணம் தெரியாத, இனம்புரியாத, வழி தெரியாத, வலியென்று தீர்மானித்து 'பைபுரோமையால்ஜியா' என்ற பெயர் சூட்டு விழா நடைபெறும்.

உணர்வுகள், உணர்ச்சிகள், செய்திகளெல்லாம் மூளையிலிருந்து உடலெங்கும், மற்றும் உடலிலிருந்து மூளைக்கு நரம்புகள் வழியாகத்தான் பரிமாறப்படுகிறது. இவை நியூரோன்கள் என்றும், இந்த நியூரோன்கள் சந்திக்கும் புள்ளிகளானது சினாப்ஸ் (Synapse) என்றும் அழைக்கப்படுகின்றன.

சுமாராக மூளையில் மட்டும் 100 பில்லியன் நியூரோன்களும் 125 ரில்லியன் சினாப்ஸ் என்ற சந்திப்பு நிலையங்களும் உள்ளன. இவை மிக அதிக எண்ணிக்கையில் இருந்தால் மிக அதி புத்திசாலி என்றும் எண்ணிவிடாதீர்கள். யானைக்கு மனிதரைவிட பல மடங்கு அதிக நியூரோன்கள் உள்ளன.

இந்த சினாப்ஸ்களுக்கு உள்ளே பலவிதமான நியூரோக் கெமிக்கல்ஸ் மூலக்கூறுகள் உள்ளன. இவை நியூரோ ட்ரான்மிற்றர்ஸ் என்று அழைக்கப்படும். இவைதான் செய்திகளை அடையாளம் கண்டறிந்து நரம்புகள் வழியாக கடத்த உதவி செய்கின்றன. இதில் சில வலியுணர்வுகளை குறைக்கவும் சில வலியுணர்வுகளை அதிகமாக்கவும் செய்கின்றன. உதாரணமாக 'சப்ஸ்ரன்ஸ் B' யாருக்கெல்லாம் அதிகமாக இருக்கிறதோ அவர்கள் ஒரு சிறிய வலியைக்கூட பெரிதாக உணரும் தன்மையை பெறுகிறார்கள். வலியுணர்வை தாங்கும் சக்தியும் குறைவடைந்து போகும்.

ஆனால் இன்னொரு முக்கியமான விடயத்தையும் வாசகர்கள் புரிந்து கொள்ளவேண்டும். வலியுணர்வு என்பது ஒரு நோயின் கண் போன்றது. வலியுணர்வு என்பது உயிரினங்களின் ஒரு வரப்பிரசாதம். இது இல்லையேல் பல நோய்கள் வெளியே தெரியாமல் எப்போதோ நாம் இறந்து போயிருப்போம்.

மாரடைப்பு நோயில் நெஞ்சுவலி வரவில்லையென்று வைத்துக் கொண்டால், அது தெரியாமல் இதயம் நின்று மரணம் உண்டாகலாம். அது போல உடலின் உள்ளுறுப்புகளில் ஏதாவது அழற்சி (Inflammation) ஏற்படுகின்றபோது முதலில் வெளிவரும் உடல் மொழி வலிதான். அதன்பின்பு மருத்துவரிடம் சென்று, வலிக்கான காரணம் கண்டறிந்து, நோயைக் குணமாக்க வலி உதவுகின்றது.

ஆனால், பல புற்று நோய்களில் இந்த உணர்வு மாறுபட்டதாக இருக்கிறது. உடலுக்குள்ளே ஒரு இடத்தில் புற்றுநோய் உருவாகிறது என்றால் அதைச் சுற்றியுள்ள திசுக்களில் வலியுணர்வு சில நேரங்களில் மரத்துப்போவதால் ஆரம்பத்தில் கண்டறிந்து கொள்வது முடியாமல் போகிறது. இது புற்நோய்க் கலங்களில் சித்து விளையாட்டு.

ஆகவே வலி அல்லது நோவு என்பது பல நோய்களின் முதன்மை அறிகுறியும் உடல் மொழியுமாகும். 'வலி நல்லது' ஆனால் அதுவே நோய்கள் ஏதுமின்றி அல்லது காரணம் தெரியாமல் வருகின்ற போது நோயாளிபடும் துன்பங்கள் பல அதிலொன்றுதான் இந்த 'வழி தெரியா வலியான தசை நார் வலி'.

உணர்வுகள் உணரப்படுவது நமது மூளையில் தான். வலியுணர்வை கூட்டியும் குறைத்தும் உணர்வதை மூளைதான் பெரும்பாலும் முடிவு செய்கிறது. இது அம்பிலிபயர் (Amplifier) என்ற ஒலி பெருக்கி போல மூளையும் வலிபெருக்கியாகச் செயற்படுகிறது.

மூளையிலுள்ள பல பகுதிகள் இந்த பொறிமுறைக்குப் பொறுப்பாக இருந்தாலும் தலமஸ் (Thalamus), இன்சுலா (Insula), அமைக்டலா (Amygdala) மற்றும் சின்குலேற் கோட்ரக்ஸ் (Cingulate Cortex) போன்ற மூளையின் முக்கிய பகுதிகளின் பங்களிப்புத்தான் வலியுணர்வைத் தீர்மானிக்கின்றன.



உடலின் பல பகுதிகளிலிருந்தும் மூளைக்கும், மூளையிலிருந்து உடலுக்கும் தண்டுவடத்தின் வழியாகத்தான் செய்திகள் பரிமாறப் படுகின்றன. இவற்றில் முக்கியமான ஸ்பைனோ தலாமிக் ட்ராக்ற் என்ற நரம்பு வழித்தடம் - இதன் மூலம் தான் பெரும்பாலான வலி யுணர்வுகள் கடத்தப்படுகின்றன.

இவ்வாறாக வலியுணர்வுக்கான தகவல்கள் மூளைக்குச் செல்லும் போதெல்லாம் அவற்றை இனம் கண்டு அடையாளப்படுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான பொறிமுறையினை மூளை தீர் மானித்து அதற்கான வேலைத்திட்டங்களை மற்ற உறுப்புகளுடன் இணைந்து இயற்கையாகவே வலியினை குறைக்க ஏற்பாடுகள் நடைபெறும். சிலவேளைகளில் அதையும் தாண்டி அந்த பொறி முறைகள் செயற்படாத போதுதான் அவை நாட்பட்ட வலியாக மாறுகின்றன. அந்த மாதிரியான ஒரு பிரச்சினைதான் தசை நார் வலி என்ற Fibromyalgia.

உடலின் குறிப்பிட்ட சில இடங்களில் கழுத்து மற்றும் தோள்பட் டையைச் சுற்றிய இடங்கள், மார்பு மற்றும் நெஞ்சுப்பகுதி, முழங்கை மற்றும் முழங்காலின் பின்பகுதிகள், முதுகு மற்றும் இடுப்புப்பகுதி போன்றவற்றில் குறிப்பிட்ட புள்ளிகளில் அதிக மான வலியுணர்வு தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு மேலாக இருப்பின் அது பெரும்பாலும் இந்த நோயின் அறிகுறியாக இருக்கலாம்.

இந்த வலியானது பரவலாக உடலெங்கும் மாறி மாறி அங்குமிங் குமாக வலிப்பது போன்ற உணர்வுடன், குறிப்பாக காலையில் வலியோடு எழுந்து பின்பு நேரம் போகப்போக அதிகமாகும். பொதுவாக பேச்சு மொழியில் நோயாளிகள் குறிப்பிடும் போது 'வாய்வு அங்குமிங்கும் ஓடியோடி வலிக்குது' என்று சொல்வ துண்டு.

பல நோயாளிகளுக்கு இதனுடன் இணை அறிகுறிகளான உடல் மனச்சோர்வு, எப்போதும் படுத்திருக்க வேண்டுமென்ற உணர்வு, தூக்கமின்மை, அஜீரண குறைபாடு, பசியின்மை, நெஞ்செரிச்சல், அடிக்கடி மலம் கழிக்க வேண்டுமென்ற உணர்வுகள் உண்டாகும்.

தாடைகளில் வலி, காதில் இரைச்சல், நினைவாற்றல் குறைதல், எரிச்சல், கோபப்படுதல், விரக்தி மனம் போன்றவையும் ஏற்பட லாம். இதனால் இவர்களின் நாளாந்த வழக்கமான வாழ்க்கை முறையில் மாற்றங்களுண்டாகி ஒரு தீவிர மன அழுத்த நிலைக் குத் தள்ளப்படுகின்றார்கள். அது மட்டுமல்ல, தொடர்ச்சியாக வலி நிவாரணி மாத்திரைகளை உட்கொள்ளுவதால் அதன் பக்க விளைவுகளையும் எதிர்கொள்ள நேரிடுகிறது.

நான் கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல இந்த நோய்க்கான சரியான காரணங்கள் கண்டறியப்படவில்லை யென் றாலும், பல நோயாளிகளில் ஆய்வு செய்ததில் சில காரணிகளை அடையாளம் கண்டுள்ளனர்.

சிலருக்கு இது பரம்பரையாக வரலாம் என்று சில ஆய்வாளர்கள்

குறிப்பிடுகிறார்கள்.

ஏதாவது ஒரு நோயின் தாக்கத்திற்கு பின்பு குறிப்பாக வைரஸ் கிருமிகளின் நோய்த் தொற்றுக்கு பின்பும் சிலருக்கு இந்த நோய் ஏற்பட்டிருக்கிறது.

உடற்பருமன் அதிகரிப்பிற்குப் பின்பும், மற்றும் தைரொயிற் மற்றும் ஹோர்மோன்கள் தொடர்பான பிரச்சினை இருப்பவர்களுக்கும் வரலாம் என்கிறது சில ஆராய்ச்சிகள்.

பெண்களுக்கு மெனோபாஸ் என்ற மாதவிலக்கு முற்றாக நின்று போகின்ற காலங்களில் இந்த வலிநோய் உண்டாக வாய்ப்புகள் உள்ளதாம்.

வாகன விபத்துகள், வழுக்கி விழுதல் (Physicaltrauma) போன்ற வற்றிக்கு பின்பும் சிலருக்கு அறுவைச்சிகிச்சைகளுக்கு பின்பும் இது ஏற்பட்டிருப்பதாக சில புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன.

பெரும்பாலனவர்களில் மனரீதியான தாக்கங்களுக்குப் பிறகு (Emotional trauma) அதாவது இழப்புகள், பிரிவுகள், ஏமாற்றங்கள் போன்ற தாங்கமுடியாத மன உளைச்சல்களால் இந்த தசை நார் வலி நோய் வந்திருப்பதும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இப்படி நோயாளியின் கடந்த கால வரலாறுகளின் அடிப்படையில் நோயின் காரணங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

எல்லாம் சரி. என்னதான் தீர்வு?

கடந்த பல ஆண்டுகால எனது அனுபவத்தின் அடிப்படையிலும், இந்த நோய்க்கு ஆளான நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு அளித்த சிகிச்சையின் அனுபவத்தாலும் இந்த நோயை குணப்படுத்துவது மிகவும் இலகுவானது.

முதலில் நோயாளியின் கடந்த கால உடல், மன, சமூக வரலாறுகளைப் பற்றிய ஒரு தெளிவான ஆய்வும் புரிந்துணர்வும் அவசியமாகிறது. அத்துடன் அவரின் வாழ்வியல் முறை, உணவு முறை, சூழல் போன்றவற்றையும் கருத்திற் கொண்டு சரியான காரணத்தைக் கண்டறிந்தால் தீர்வு என்பது மிகவும் இலகுவானது. வெறும் வலி நிவாரண மாத்திரைகள் இதற்கு தீர்வாகாது.

ஒரு பெண் வயது நாற்பது, குறிப்பிட்ட நோயின் அறிகுறிகளோடு வந்தார். கடந்த மூன்று ஆண்டுகளாக எல்லா மருத்துவ பரிசோதனைகள், சிறப்பு நிபுணர்களின் ஆலோசனைகளுக்குபின் Fibromyalgia என்ற நோய் தான் என்று உறுதி செய்து வலி நிவாரண குளிசைகளை எடுத்து வருவதாகவும் சொன்னார்.

குளிசைகளின் வலிமை குறையும் போது மீண்டும் வலியின் வலிமை கூடுகிறது என்றும், தற்போது இரைப்பையில் அல்சர் இருப்பதால் வலி நிவாரண மருந்துகள் எடுப்பதில்லையென்றும் வலியோடு கண்ணீர்மல்க கதைகளைச் சொல்லிக்க கொண்டிருந்தார்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தாயகத்தில் இருந்த போது முதலில் மலேரியா, பிறகு சிக்குன்குன்யாவும் அதன்பிறகு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தாயகம் சென்றபோது டெங்கு காய்ச்சலும் வந்து அவதிப்பட்டு குணமானதாக குறிப்பிட்டார்.

ஆம் இந்த நோய்கள் குணமானாலும் இவற்றின் தாக்கமும் பாதிப்பும் உடலில் சில மாற்றங்களை உண்டாக்கி பின்விளைவுகளையும் உண்டாக்கும் என்பது எல்லாரும் அறிந்ததே. இந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு சில மருந்துகளைக் கொடுத்ததில் அவர் சில வாரங்களின் பின்பு முழுமையாகக் குணமடைந்தார்.

இதேபோல இன்னொருவர், அவருக்கு வயது ஐம்பது, பல பரிசோதனைகள் செய்து வலிக்கான காரணத்தை மருத்துவர்களால் கண்டறிய முடியவில்லை என்பதால் அவருக்கு Fibromyalgia என்று முடிவு செய்தனர். என்னிடம் வந்த போது முழுமையான, நோயின் முன்பதான வரலாறுகளை ஆய்வு செய்து பாத்ததில், அவருக்கு இந்நோய் வருவதற்கு சில மாதங்களுக்கு முன்பு ஒரு காரில் விபத்திற்குள்ளானார். ஆனால், காயங்கள் ஏதுமில்லை. அடுத்த நாள் குடும்ப மருத்துவரை சந்தித்து விபரத்தைச் சொல்லி சில பரிசோதனைகளைச் செய்தபின்பு ஏதுமில்லையென்பதால் சிகிச்சைகள் ஏதும் எடுத்துக்கொள்ளவில்லை.

சில மாதங்களின் பின்பு மெதுவாக வலிகள் தோன்ற ஆரம்பித்தன. அதுமட்டுமல்ல அவருக்கு மெனோபாஸ் என்ற மாதவிலக்கு முற்றாக நின்றுபோற வயது என்பதால் அது தொடர்பான குணங்குறிகளும் கூடவே வலியினை அதிகப்படுத்தும் துணைக் காரணிகளாக இருந்தன. இவருக்கு முன்னர் ஏற்பட்ட வாகனவிபத்தின் காரணத்தையும், மெனோபாஸ் அறிகுறிகள் போன்றவற்றின் அடிப்படையிலும் ஹோமியோபதி மருத்துவ முறையில் ஆய்வுகளை மேற்கொண்டு சிகிச்சை வழங்கியதின் பின்பு படிப்படியாக வலிகள் குறைந்து முழுமையாக குணமானார்.

இவ்வாறாக மருந்துகள் மட்டுமல்ல அக்குப்பஙசர் என்ற வைத்திய முறையில் சில சிறிய ஊசிகளை குறிப்பிட்ட புள்ளிகளைக் கண்டறிந்து செலுத்தி வலிகளைக் குறைக்கவும் தசை நார்களின் இறுக்கத்தை குறைத்தும் நோயைக் குணமாக்க முடியும். நாட்பட்ட தசை நார் வலி நோயாளிகளுக்கு வைத்தியம் மட்டுமல்ல அவர்களுக்கு ஏற்ற வகையில் மனநல ஆலோசனைகள் வழங்குதல் அவசியமானதாகும்.

மேலும் அவர்களின் உடல்வாகுக்கு ஏற்றவாறு யோகா மற்றும் சிறப்பு உடற்பயிற்சிகள் போன்றவற்றை நாளாந்த செயற்பாடுகளோடு கடைப்பிடிக்க கற்றுத்தருவதும் நோயின் தீவிரத்தை விரைவில் குறைத்து குணம்பெற வழிவகுக்கிறது.

இவற்றோடு எனது அனுபவத்தில் உணவு முறைகளில் மாற்றங்களை செய்யுமாறும், குறிப்பாக மாமிச உணவுகளைத் தவிர்த்து அதிகமாக காய்கறி உணவுகள், பழவகைகளை அதிகம் சேர்த்தும், சிறுதானியங்கள் மற்றும் விதைகள் (Nuts), கடலை, பயறு போன்றவற்றை முளைக்கவைத்து உணவில் சேர்த்துக்கொள்வதால் தசைகள் மற்றும் நரம்புக்கலங்கள், நரம்பு இரசாயணங்கள் உருவாக மற்றும் வலுவூட்டும் தாதுப் பொருட்கள் கிடைக்க ஏதுவாகிறது.

Fast Food என்ற துரித உணவுகளை தவிர்த்தும், போத்தல் மற்றும் ரின்களில் அடைக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவுகளை, குளிர்பானங்கதைத் தவிர்த்தலும் மிக அவசியமாகும்.

பயிற்சிகளில் குறிப்பாக, நீச்சல் பயிற்ச்சி மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்ட நோயாளிகள் பலரில் பாரிய அளவிலான முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

எனது பேராசிரியர் ஒருவர் தனது அனுபவத்தைக்குறிப்பிடும் போது அலுமினியம், மெர்க்குரி, லெட் என்ற ஈயம் போன்ற உலோகங்களின் அளவுக்கு அதிகமான நச்சுத்தன்மை உடலில் சேர்வதால் அவை தசை நரம்புகளின் செயற்பாடுகளிலும் கட்டமைப்பிலும் மாற்றத்தை உண்டாக்குகின்றன. இதனால் இந்த நோய் உண்டாக வாய்ப்புகளுண்டு என்று குறிப்பிட்டதும் நினைவுக்கு வருகிறது.

ஆகவே, அவை எதனால் உடலில் சேர்கின்றன என்பதை நோயாளியின் வாழ்க்கை முறையையும், பழக்க வழக்கம் போன்றவற்றை கேட்டறிந்து ஆய்வுகள் செய்து, அந்த உலோக நச்சுத்தன்மைகளை முறிக்கும் ஹோமியோபதி மருந்துகளைக் கொடுத்தும் இந்த நோயைக் குணப்படுத்தலாம் என்பதும் அனுபவத்தின் சாட்சிகளாகும்.



paul.joseph@thaiveedu.com

## ஏட்டில் எழுதிவைத்தார்

04

# அங்காதிபாதம் 400

இன்னமும் ஏட்டுச்சுவடிகளில் மட்டுமே காணப்படும் எமது முன்னோரின் படைப்புக்களைக் எண்ணிமப்படுத்தும் பணிகளை தற்போது நூலக நிறுவனத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். இவற்றுள் இதுவரை அச்சில் வெளிவந்திராத ஒருசிலவற்றையேனும் வாசித்துத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு அறியத்தரும் ஒரு முயற்சியாக நாடிவிதி மற்றும் அங்காதிபாதம் ஆகிய நூல்களைத் தாய்வீடு' இதழில் வெளியிடத் தீர்மானித்தேன்.

நூலகத்தினரின் EAP1260_CO65_F004.pdf என்னும் இலக்கத்தில் உள்ள சுவடிகளின் பாடல்களே இங்கு தரப்பட்டுள்ளன.

- பால. சிவகடாட்சம்

*ஆச்சதிற் பிரமா தோன்றி ஆகாயந் தனை விதிக்க*
*பேச்சிலா காயம் வாய்வைப் பெற்றது வாய்வு தானும்*
*கூச்சிடா தேயு தன்னைக் கொடுத் தங்கதனில் அப்பு*
*வாச்ச தப்புவி லிருந்து பிருதிவி வந்த தாமே -13*

மாயோனிடம் இருந்து பிரமா தோன்றி பிரபஞ்ச வெளியான ஆகாயத்தைத் தோற்றுவிக்க அந்த ஆகாயம் காற்றைப் பிறப்பிக்க, காற்றானது நெருப்பைத் தோற்றுவிக்க அதில் இருந்து நீரும், நீரிலிருந்து பூமியும் உருவாகின.

*பிருதிவி தன்னில் ஓசை பிறந்த வவ்வோசை அன்னம்*
*வருவதாய்ச் செய்த தத்தி விரசமும் வளர்ந்து நீண்ட*
*பெருவிர சத்தி ரத்தம் பிறந்துமா மிசத்தைத் தந்து*
*பருவமா மிசத்தில் மேனி பயந்த தத்தியி னைத்தானே -14*

பூமியில் ஓசை பிறக்க அவ்வோசையில் பதார்த்தம் தோன்ற அந்தப் பதார்த்தத்தின் மூலம் இரசமும் இரசத்தில் இரத்தமும் பிறந்தது இரத்தம் மாமிசத்தைத் தந்து மாமிசத்தில் உடம்பானது எலும்பினைப்பெற்றது.

*அத்தியில் மச்சை தோன்றிற் றதிலே சுக்கிலந் தானூற*
*முத்திய சுக்கிலத்தில் சுரோணித முளைத்ததாகும்*
*வித்திது வாய் உதித்த மெய் யெனும் இச்சடந்தான்*
*பத்தியே பார்க்கின் நல்லாய் பராபர மாயி ருக்கும் -15*

எலும்பில் மச்சை தோன்ற அம்மச்சையில் சுக்கிலமும் சுக்கிலத்தில் சுரோணிதமும் முளைத்தெழுந்தன, இவற்றையே வித்தாகக் கொண்டு பிறந்த உடல் என்னும் இச்சடத்தை ஆராய்ந்து பார்த்தால் மங்கைநல்லாளே இது பரம்பொருளாயிருக்கும்.

*இருந்திடும் கருவி தொண்ணூற் றாறிற் றிருமூன் றாதாரம்*
*வருந்திடும் அஞ்ச வத்தை மண்டலம் மூன் றெழுத்து*
*திருந்திய ஐம்பத் தொன்றும் தெளிந்து மேற்சிவத்தை யுள்ளம்*
*பொருந்திடக் கண்டு பஞ்ச பொறி புலனையும் பொடித்தே -16*

மனித உடலில் இருந்திடும் கருவிகள் தொண்ணூற்றாறு ஆதாரம் பன்னிரண்டு, அவத்தை ஐந்து, மண்டலம் மூன்று, எழுத்து ஐம்பத்தொன்று, என்று கூறப்படுபவற்றைத் தெளிந்து உணர்ந்து ஐந்து புலன்களையும் துகளாக்கி

*பொடித்திரு கலைகள் தன்னைப் பொருந்தவோர் கலையிற்*
*- போக்கி*
*தடித்திடும் வாசல் ஏழு தன்னையும் தாழ்ப்பா ளிட்டு*
*நடித்திடு நலங் கும்பிட்டு நாதாந்த வெளியாம் வீட்டை*
*பிடித்து யோகஞ் சாதிக்கில் பிறவிபோம் பேசின் மாதே -17*

ஐம்பொறிகளையும் அடக்கி வைத்து வாசல்கள் ஏழுக்கும் பூட்டுப் போட்டு நாதாந்த வெளியாகிய வீட்டை நினைந்து யோகசாதனை செய்தால் பிறவிப் பிணியைப் போக்கிவிடலாம் பெண்ணே.

*மாதொரு பாக னாதி வகுத்திடும் உடம்பின் றன்மை*
*யேதெனிற் தொண்ணூற் றாறு தத்துவ மியக்க மாகும்*
*ஓதுமண் ணீர் நெருப்போ டுற்றகால் வான மாதி*
*பூதிய முதல வற்றை யிற்றெனப் புகலு வாமே -18*

மாதொருபாகனாகிய இறைவன் படைத்த உடம்பின் தன்மை குறித்துக் கூறுவோமானால் இது தொண்ணூற்றாறு தத்துவங்களின்



இயக்கமாகும். மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பவை பஞ்சபூதங்களாகும்.

*புகலுறு பூதம் ஐந்து பொருந்திய நாடி பத்து*
*விகலுறு கரணம் நாலு வித்தையேழ் வாய்வு ஈரைந்து*
*தகையுறு வாக்கு நான்கு கன்ம விந்திரியம் ஐந்து*
*தொருபிறக் கருவி தானும் சொல்லுகில் ஐயைந் தாமே -19*

பூதங்கள் ஐந்தென்றால் நாடிகள் பத்து, கரணம் நாலு, வித்தை ஏழு, வாயு பத்து, வாக்கு நான்கு, கன்மேந்திரியம் ஐந்து, பிறவிக் கருவிகள் இருபத்தைந்தாகும்.

*ஐந்து மெஞ்ஞான விந்திரிய மடுத்த மாங்கார மூன்று*
*விந்தையாம் குணங்கள் மூன்று விளங்கு மாத்திரைகள் ஐந்து*
*வந்திடு சிவத்துவம் ஐந்து வசனாதி ஐந்தி னோடு*
*முந்திய தத்துவப்பேர் மொழிந்திடு முறை யதாமே -20*

மெய்ஞான இந்திரியங்கள் ஐந்து, ஆங்காரம் மூன்று, குணங்கள் மூன்று, மாத்திரைகள் ஐந்து சிவதத்துவம் ஐந்து, வசனாதி ஐந்து என முந்தைய தத்துவங்களின் பெயர்களைக் கூறும் முறையாகும்.

*முறையது வாகச் சென்ம முதித்திடும் வகையைக் கேளீர்*
*இறையவன் னருளி னாலே இயாயொடு தந்தை கூடி*
*நிறைவுறு போகந் தன்னில் நீங்கிய சுக்கிலந் தான்*
*அறுகுநுண் ணுனிப் பனிபோல் சுரேரணிதப் பைக்குள்ளாமே -21*

பிறவி தோன்றும் முறைபற்றிக் கேட்டறிந்து கொள்வீர். இறைவ-னின் அருளினாலே தாயும் தந்தையும் கூடிப் போகம் அனுபவிக் கும்போது ஆணில் இருந்து வெளிவரும் விந்துவானது அறுகம்புல் லின் நுனியில் தோன்றும் மிகச்சிறிய பனித்துளி போன்று பெண் ணின் கருப்பைக்குள் செல்லுகின்றது.

*உள்ளது சுரோணிதம் விந்துரு வாய்ப் பிராண வாய்வு*
*மெள்ள வுள்ளாகப் புக்கி மெற்றயர் வாசல் மூடி*
*ஒள்ளிய விந்து தன்னை விளைவிக்கு முதான வாய்வு*
*கள்ளமாய்க் கரு வளர்க்கும் அபானனுங் காவ லாமே -22*

பெண்ணின் முட்டையுள் விந்துருவாகச் சென்ற பிராணவாயு நுழைந்தவுடன் வாசல் மூடப்பெற்று உதானவாயு கருவை வளர்க் கும். அபானவாயு அவ்வளர்ச்சிக்குக் காவலாக நிற்கும்.

*காவலாம் அபானவாயு கருதிய வேலை போலே*
*யாவலாய்க் காத்து நிற்கும் அக்கருக் குட் பிராணன்*
*மேவியே கலந்து நிற்கும் வியாதியு மூன் றுள்ளாகும்*
*பாவையே யைந்தாம் நாளில் பக்குவக் கருவ தாமே -23*

கருவைக்காத்து நிற்பது தன் கடமை என்பதுபோல் அபானவாயு காத்து நிற்க அக்கருவுக்குள் பிராணவாயு கலந்து நிற்கும். மூன்று வகையான வியாதிகளும் கூடவே தோன்றிவிடும். ஐந்தாம் நாளில் கருவானது பக்குவப்பட்டுவிடும்.

*கருவதா மீரைந்தா நாட் கட்டியாய்த் திரண்டு நிற்கும்*
*பெருகு மூவைந்தா நாளிற் பெருத்திடு முட்டை போலே*
*ஒருமதி தன்னிற் கண்ட முற்றிடும் மிருமா தத்தில்*
*மருவிய மிடறி னோடு முதுகு தோண் மட்டுமாமே -24*

முழுமை பெற்றுவிட்ட கருவானது பத்தாவது நாளில் ஒரு கட்டியா கத் திரண்டிருக்கும். பதினைந்தாம் நாளில் பெருத்து ஒரு முட்டை-போலாகிவிடும். ஒரு மாதத்தில் கழுத்து முதிர்ச்சி பெற்றுவிடும். கருவளர்ச்சியின் இரண்டாம் மாதத்தில் மிடற்றோடு முதுகும் தோளும் உருவாகும்.

*மட்டுறு மூன்றாந் திங்கள் வரைவிலாத் தொடை கை காலாம்*
*இட்டமாம் நாலாந் திங்கள் இலங்கிய வதனம் உண்டாம்*
*தொட்ட வைந்தினில் வாய்நாசி தொளை செவி யாறிலீறு*
*கட்டிடு வலஞ் சலங்கள் களிந்திடு துவாரம் உண்டாம் -25*

மூன்றாம் மாதத்தில் விலா, தொடை, கை, கால் என்பன உருவா கும். நாலாம் மாதத்தில் முகம் தோற்றம் பெறும். ஐந்தாம் மாதம் வாய், மூக்கு. செவி ஆகிய துளைகளும் ஆறாம் மாதம் முரசு மற்றும் மலம் சலம் என்பன கழிந்திடும் துவாரங்களும் உண்டகின் றன.

*உண்டெனும் ஏழாந் திங்கள் உறுமயிர் நரம்பு நாடி*
*கொண்டிடும் சந்து தொப்புள் குடலொடு சுரமும் உண்டாம்*
*கண்டிடும் திங்கள் எட்டில் களிந்திடும் பிலனும் உண்டாம்*
*மண்டையில் மயிரும் உண்டாம் மாதர் உண்டிட்ட சாரம் -26*

ஏழாம் மாதத்தில் உரோமம், நரம்பு, நாடி, மூட்டுக்கள், தொப்பூள், குடல் என்பவற்றுடன் காய்ச்சலும் உண்டாகும். எட்டாம் மாதத்தில், கருவுக்குப் பலமும், மண்டையில் மயிரும் உண்டாகும். தாய் உண்ட உணவின் சத்தானது

*சாரம் ஆங்கதுவே செல்லத் தான் தொப்புள் வளியுண்டாகி*
*ஆரும் ஒன்பது மாசத்தில் அறிவுடன் உணர்ச்சி யுண்டாய்*
*பாருறு கெற்பம் தன்னில் பருத்ததி வருத்த முண்டாய்*
*சீருறு நாதன் தன்னைச் சிந்திக்கும் நிலை யதாகி -27*

தொப்புள் வழியாக வளரும் கருவைச் சென்றடைவதால், ஒன்பதாம் மாதத்தில் அறிவும் உணர்ச்சியும் உண்டாகி, கர்ப்பத்தில் பருத்து வருத்தமும் அதிகமாகி சிறப்பு மிக்க நாதனாகிய இறைவனை நினைந்து போற்றும் நிலையை அடையும்.

*நிலையதாய் எங்கு மாகி நிராமய நிமல மாகி*
*அலகிலா யுயிர்கள் நல்கும் ஆதியே சோதி வாழ்வே*
*பலகலைச் சுருதிக் கெட்டா பரமவென் றிருகை கூப்பி*
*உலகினுக் கரிய தாகும் உன்பதம் அருளாய் என்னும் -28*

'எங்கும் நிறைந்திருக்கும் கடவுளாகிய நிமலனே! அளவில்லாத உயிர்களைப் படைத்தளித்த சோதியே! வாழ்வே! பலகலைக ளுக்கும் எட்டாத பரமனே!' என்று இருகைகளும் கூப்பி 'உலகத் தோருக்குக் கிடைத்தற்கரிய உன்பாத கமலங்களை எனக்கு அரு ளுவாய்' என்று வேண்டி நிற்கும்.

*என்னவே பத்தாந் திங்கள் இறையவன் அருளி னாலே*
*சென்னி கீழாய் உதிப்பச் சிறந்திடும் பிராண வாய்வு*
*துன்னியே யுதைத்துத் தள்ளத் தொல்லையில் உணர்ச்சி நீங்கி*
*மன்னிய பாரின் மீது மதலையும் பிறப்பப தாமே -29*

பத்தாவது மாதத்தில் இறைவனின் அருளினாலே கர்ப்பத்தில் உள்ள சிசுவின் தலை கீழாகத் திரும்பியதும் பிராணவாயு பிதுக்கி உதைத்துத் தள்ளும்போது ஏற்படும் துன்பத்தில் உணர்வுகள் நீங் கப்பெற்று மண்மீது குழந்தையானது பிறக்கின்றது.

*பிறந்திடு மதலை தன்னைப் பிரபஞ்ச கிரியாம் மாயை*
*திறஞ்சுத்தி வளைத்துக் கொள்ளத் திகைத்து நொந் தழுவ தாகும்*
*நிறைந்திரு வினையுங் கோர்வை யாகியே நெருங்கிச் சூளும்*
*மறந்தவிம் மாயை யாலே பிறப்பது மடுப்ப தாமே -30*

அவ்வாறு பிறக்கும் குழந்தையைப் பிரபஞ்சத்தைச் சூழ்ந்திருக் கும் மாயையானது சுற்றி வளைத்துக்கொள்ள அது திகைப்புற்று நொந்து அழுகின்றது. கர்மவினைகள் ஒரு கோர்வையாகிக் குழந் தையை நெருங்கிச் சூழ்ந்துகொள்ள மறைந்திருக்கும் இம்மாயை யினாலே பிறப்பு நிகழ்கின்றது.

குறிப்பு: அங்காதிபாதம் என்னும் தலைப்பில் பரராசசேகரத்துக்கு உரிய 400 பாடல்களைக்கொண்ட நூலொன்று இலங்கையிலும் இந்தியாவிலும் வெவ்வேறு காலப்பகுதிகளில் அச்சில் வெளிவந் துள்ளது. செகராசசேகரத்துக்குரிய அங்காதிபாதத்தின் ஒருசிலபா டல்களும் அச்சில் வெளிவந்துள்ளன. எனினும் அங்காதிபாதம் என்னும் தலைப்பில் இலங்கையில் ஆக்கப்பெற்ற நூல்களுள் திருகோணமலை ஈசன் புகழ்பாடும் இந்நூல் தனித்துவமானது. இன்னமும் அச்சில் வெளிவராதது. அந்தாதி முறையில் அமைந்த நானூறு பாடல்களைக்கொண்ட இந்நூலில் 124 பாடல்கள் கொண்ட ஏடுகள் மட்டுமே இதுவரை கிடைத்துள்ளன. நூலகத்தின ரின் EAP1260_CO65_F004.pdf என்னும் இலக்கத்தில் உள்ள சுவ டிகளின் பாடல்களே இங்கு தரப்பட்டுள்ளன.



Sivakadadcham@thaiveedu.com

# விஞ்ஞானமுறையும் முறையியலும்

விஞ்ஞானம் (science) 'scientia' என்ற இலத்தின் மொழியிலிருந்து தோற்றம் பெற்ற சொல்வடிவமாகும். இதன் பொருள் 'அறிவு' (knowledge) என்று வரையறுக்கப்படுகின்றது. விஞ்ஞானம் என்பது ஒரு முறைப்படுத்தப்பட்ட மற்றும் ஒழுங்குப்படுத்தப்பட்ட அறிவாக கருதப்படுகின்றது. இவ்வாறான அறிவு, விஞ்ஞானமுறையை (scientific method) அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்படுகின்றது. விஞ்ஞானம் இயற்கை விஞ்ஞானம் (natural science), சமூகவிஞ்ஞானம் (social science) என இரு பெரும் பிரிவுகளை உள்ளடக்கியது.

இயற்கை விஞ்ஞானம் சமூக விஞ்ஞானத்திலிருந்து பல்வேறு வகையில் வேறுபட்டது. இயற்கை விஞ்ஞானத்தில் பெறப்படுகின்ற பொதுமையாக்கங்கள் போன்று சமூகவிஞ்ஞானத்தில் பொதுமையாக்கங்களை உருவாக்கல் எளிதானதல்ல. விஞ்ஞானங்களில் இடம்பெறுகின்ற பல்வேறு செயல்முறைகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுகின்ற அறிவு விஞ்ஞானஅறிவு (scientific knowledge) என அழைக்கப்படுகின்றது. இந்த விஞ்ஞானஅறிவு, விதிகள் மற்றும் கொள்கைகளின் பொதுமையாக்கத்திலிருந்து பெறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞான அறிவானது அளவையியல் கட்டமைப்பு சார்ந்த கொள்கைகள் மற்றும் அவதானங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றது. இங்கு கொள்கைகள் என்பது நாங்கள் எதை அவதானித்தோம் என்ற விடயத்திற்கான விளக்கத்தினை தருகிறது. அவதானமானது உருவாக்கப்பட்ட கொள்கையினது தன்மையை நிரூபிப்பதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது அதனை மாற்றியமைத்து புதிய ஒரு கொள்கையை உருவாக்குவதற்கும் உதவுகின்றது. இதன் அடிப்படையில் விஞ்ஞான அறிவின் உற்பத்தியில், நம்பிக்கை மற்றும் அதிகாரத்தின் பங்களிப்பு என்பது வெறுமையானதாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறு நம்பிக்கை மற்றும் அதிகாரத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகின்ற அறிவு விஞ்ஞான அறிவாக கொள்ளப்படமாட்டாது.

விஞ்ஞான ஆய்வானது கோட்பாட்டுரீதியாகவும் அனுபவரீதியாகவும் மேற்கொள்ளப்படுகின்ற ஒன்றாகும். கோட்பாட்டுரீதியான ஆய்வு இயற்கை தோற்றப்பாடுகள் தொடர்பான கொள்கைகளின் உருவாக்கம் மற்றும் விருத்தி தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துகின்றது. அனுபவரீதியான ஆய்வானது கொள்கைகளை சோதித்தலும் அவை எவ்வாறு அவதானத்துடன் பொருந்திப் போகின்றது என்பதை அளவிடுவதாகவும் உள்ளது.

விஞ்ஞான ஆய்வுகள், விஞ்ஞானஅறிவின் விருத்தியில் பாரிய பங்களிப்பு செய்வது மாத்திரமின்றி மக்களுக்கு தேவையான அனைத்து விதமான பொருட்கள் மற்றும் சேவைகளையும் வழங்குவதற்குரிய வழிவகைகளையும் மேற்கொள்கின்றது. விஞ்ஞான அறிவின் ஒழுங்கமைப்பு, தோற்றம் என்பன விஞ்ஞானமுறையின் அடிப்படையிலேயே பெறப்படுகின்றன. விஞ்ஞானமுறை எவ்வாறு அமையவேண்டும் என்பதை விஞ்ஞானமுறையியல் நெறிப்படுத்துகின்றது. எனவே இங்கு விஞ்ஞானமுறை மற்றும் விஞ்ஞான முறையியல் (scientific methodology) ஆகியவை விஞ்ஞானஅறிவின் உற்பத்தியில் இன்றியமையாதனவாக உள்ளன.

விஞ்ஞானமுறை என்பது இயற்கைத்தோற்றப்பாடு தொடர்பாக எழுகின்ற பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் ஒரு ஒழுங்குப்படுத்தப்பட்ட முறையினை பின்பற்றி, அப்பிரச்சினைக்குரிய தீர்வினை முன்மொழிதலாகும். இங்கு பிரச்சினை தோன்றுதல், கருதுகோள் முன்வைத்தல், எதிர்வுகூறல், கருதுகோளை வாய்ப்புப் பார்த்தல் (அவதானம், பரிசோதனை), கருதுகோளை ஏற்றுக்கொள்ளல், நிராகரித்தல் அல்லது மாற்றியமைத்தல், கருதுகோள் ஏற்றுக்

- வீராசாமி பிரபாகரன்

கொள்ளப்பட்டால் விதி, கொள்கை அமைத்தல் அல்லது கண்டுபிடிப்பு நிகழல் என்ற அடிப்படையில் விஞ்ஞான அறிவின் விருத்தி இடம்பெறுகின்றது.

இவ்வாறான படிமுறைகளைக் கொண்ட விஞ்ஞானமுறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை தெளிவுபடுத்துவதாக விஞ்ஞான-முறையியல் காணப்படுகின்றது. விஞ்ஞானமுறையியலின் பிரதான நோக்கம் ஒரு விஞ்ஞானமுறையின் நம்பகத்தன்மை மற்றும் வலிதானதன்மை ஆகிவற்றை நிலைநிறுத்தலாகும். விஞ்ஞான வரலாற்றில் பல விஞ்ஞானமுறையியல்கள் தோற்றம்பெற்று விஞ்ஞான அறிவின் விருத்திக்கு பங்களிப்பு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவற்றில் தொகுத்தறிமுறை மற்றும் உய்த்தறிமுறை ஆகியவை பாரம்பரியமாக விஞ்ஞானத்தில் பின்பற்றப்பட்டு வரும் முறையியல்களாகும்.


உய்த்தறிமுறையானது நியாயவடிவத்தினை அடிப்படையாகக் கொண்டு தரவுகளிலிருந்து உட்கிடையாக ஒரு முடிவினை பெறுகின்ற முறையாகும். இம்முறையானது அரிஸ்டோட்டலினால் 'organon' (கருவி) என்ற படைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை கருதுகோளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

16ம் நூற்றாண்டில் ஏற்பட்ட விஞ்ஞான மறுமலர்ச்சியின் காரணமாக விஞ்ஞான அறிவின் விருத்திக்கு ஒரு புதிய முறையியல் தேவைப்பட்டது. இத்தேவையின் விளைவாக பிரான்ஸிஸ் பேக்கன் என்ற முறையியலாளரினால் முன்வைக்கப்பட்ட முறையே தொகுத்தறி-முறை ஆகும்.

இத்தொகுத்தறிமுறை அரிஸ்டோட்டலின் உய்த்தறிமுறைக்கு எதிரானதாக நோக்கப்படுகின்றது. மேலும் பேக்கன் தன்னுடைய நூலான 'Novum Organon' (புதிய கருவி) மூலம் தம்முடைய முறையியலை முன்வைத்தார். இத்தொகுத்தறிமுறையானது அனுபவத்தினையும் அனுபவத்திற்கு உட்பட்ட தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு அனுபவத்திற்கு அப்பாற்பட்டதற்குமான பொதுமுடிவினை பெறுகின்ற முறையியலாக காணப்படுகின்றது.

இரு முறையியல்களுக்குப் பிறகு கார்ள் ஹெம்பல் என்பவரினால் விதி 'உய்த்தறி முறை' என்ற முறையியலும் கார்ள் பொப்பர் என்பவரினால் 'பொய்ப்பித்தல் முறை', தோமஸ் கூன் என்பவரினால் 'கட்டளைப்படிம மாற்றம்' தொடர்பான ஆய்வுமுறை, போல் பெயராபாண்டினால் 'முறைகளுக்கு எதிரான அல்லது அப்பாலான விஞ்ஞான விருத்தி பற்றிய கருத்து, மற்றும் லக்கடோஸின் 'விஞ்ஞான ஆய்வு நிகழ்ச்சித் திட்டம்' போன்ற பல முறையியல்கள் விஞ்ஞானத்தில் தோற்றம் பெற்று விஞ்ஞான அறிவின் விருத்திக்கு பங்களிப்பு செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

***உசாத்துணை:***
- *Francis Bacon https://en.wikipedia.org/wiki/Francis_Bacon*
- *Novum Organon https://en.wikipedia.org/wiki/Novum_Organum*
- *Carl Hempel https://en.wikipedia.org/wiki/Carl_Gustav_Hempel*
- *Karl Popper https://en.wikipedia.org/wiki/Karl_Popper*
- *Thomas Kuhn https://en.wikipedia.org/wiki/Thomas_Kuhn*
- *Imre Lakatos https://en.wikipedia.org/wiki/Imre_Lakatos*



prabakaran.v@thaiveedu.com

# மகிழ்ச்சியின் தோற்றுவாய்

- குமார் புனிதவேல்

உயிரினங்கள் அனைத்துமே மகிழ்ச்சியை விரும்புகின்றன. மனிதரும் அதற்கு விதிவிலக்கல்ல. மனிதரின் வாழ்வின் ஒவ்வொரு செயற்பாடும் மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது. அது உலோகாயமாக இருக்கலாம் அல்லது ஆன்மீகமாக இருக்கலாம். இலக்கு மகிழ்ச்சி ஒன்றே. திருவள்ளுவர் கூட முதலில் அறம்பாடி பின்னர் பொருள்பாடி இறுதியில் இன்பம் எனும் மகிழ்ச்சியைத் தான் பாடினார்.

நான் சந்தித்த மனிதரில் சிலர் பொருளாதாரவளத்துடனும் ஆரோக்கியத்துடனும் இருந்தும்கூட மனமகிழ்ச்சி இல்லாமல்



சோகமாக இருப்பதைக் கண்டிருக்கின்றேன். இன்னும் சிலர் பெருஞ்செல்வத்தையும் துறந்துவிட்டு அமைதியும் மகிழ்ச்சியும் வேண்டி ஆன்மீகத்தேடலில் ஈடுபட்டிருப்பதனைக் கண்டுள்ளேன். செல்வமும் இல்லாது ஆன்மீகத்தேடலும் இல்லாது மகிழ்ச்சியாக இருப்பவர்களையும் சந்தித்திருக்கின்றேன். எனவே மகிழ்ச்சி என்பது எமது மனதில் தோன்றும் ஓர் இனிய உணர்வு என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர்.

'மனது' என்று கூறும்பொழுது எவருமே 'என்மனது' என்று தம் நெஞ்சைத்தான் தொட்டுக் காட்டுவார்கள். ஆனால் மனது என்பது ஒருவரின் சிந்தனையாகும். சிந்தனை தோன்றுவது மூளையில் என்பதால் மனது இருப்பது மூளையில் அன்றி நெஞ்சில் அல்ல. இன்பம், துன்பம் அனைத்தும் அமைவது மூளையில்தான் என்பதை மறக்கலாகாது.

மூளையில் ஏற்படும் மகிழ்ச்சி, சோக உணர்வுகளுக்குக் காரணம் இயக்குநீர் (hormone) எனப்படும் வேதிப்பொருள் (chemical). ஆகும். எனவே மகிழ்ச்சியைத் தூண்டும் இயக்குநீரைச் சுரக்க வைக்கும் வழிவகைகளை நாம் யாவரும் அறிந்து கொள்வது மிக மிக அவசியம்.

**மகிழ்ச்சிக்குக் காரணமான இயக்குநீர் வகைகள் நான்கு:**

- என்டோபின்ஸ் - Endorphins உடல்வலியைப் போக்க.
- டோப்பமின் - Dopamine மனநிறைவைப் பெறுவதற்கு.
- ஒக்ஸிரோசின் - Oxytocin சமூக ஈடுபாட்டு நிறைவு.
- செரடோனின் - Serotonin இயற்கையோடு இணைந்த ஆன்மீக நிறைவு.

இவை சுரப்பதற்கான காரணிகளும் அவற்றின் விளவுகளும் ஒன்றுக்கொன்று வேறுபடும். எனவே இந்த இயக்குநீர்ச் சுரப்பிகளின் செயற்பாட்டை ஊக்குவிக்கும் இயற்கை வழிமுறைகளை ஆராய்ந்து அவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாமும் மகிழ்ச்சி மிக்க வாழ்வு வாழலாம்.

**என்டோபின்ஸ் - Endorphins:**
உடல் அப்பியாசங்கள் என்டோபின்ஸ் சுரப்புக்கு வழிவகுத்து உடல்வலியைப் போக்க உதவுகின்றன. நாம் இளம்வயதில் கிளித்தட்டு, சடுகுடு, கெந்திப்பிடித்தல். போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டதன் மூலம் உற்சாகமாக, மகிழ்ச்சியாக இருந்தோம்.

ஆதிமனிதர் வேட்டையாடி, விவசாயம் செய்து வாழ்ந்த காலத்தில் உடம்புக்கு நிறையவே பயிற்சி கிடைத்தது. ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இனசனத்துடன் கூடி வாழ்ந்தனர். இன்றோ, சமுதாய வளர்ச்சியும் தொழில்நுட்ப வளர்ச்சியும் மிகுந்ததனால் உடலை வருத்தும் வேலைகள் அருகி, உடல்வலியைப் போக்க உதவும் என்டோபின்ஸ் சுரப்பு குறைந்து விட்டது. இதனை ஈடு கட்ட தினமும் குறைந்தது அரைமணி நேரமாவது விறுவிறுப்பான வேகநடை நடக்க வேண்டும். இதுதவிர மனதுக்குப் பிடித்த இசை, கலைநிகழ்ச்சிகள், உங்களைச் சுற்றி நல்ல நண்பர்கள் கூட்டம் ஆகியவற்றை நிறையவே வைத்திருங்கள்.

'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும்'. எனவே உற்சாகமாக இருக்கக் கற்றுக் கொள்வோம். குறிப்பாக, ஓய்வு பெற்றபின் தவறாமல் தொடர்ந்து தேகப்பயிற்சி செய்வது மிகமிக அவசியம்.

**என்டோபின்ஸ் சுரப்புக்கு உதவும் முக்கிய காரணிகள்:**

- தேகாப்பியாசம் செய்தல்.
- வாய்விட்டுச் சிரித்தல்.

- நறுமணதைலங்கள் உடலில் பூசுதல்.
- கறுப்புச்சொக்லற் (dark chocolate) சாப்பிடுதல்.
- இசை. கலைநிகழ்ச்சிகளில் நண்பர்களுடன் பங்கெடுத்தல்.

**டோப்பமின் - Dopamine:**
டோபமின் மனத்திருப்தி அல்லது மனநிறைவு ஏற்படும் வேளைகளில் சுரக்கும் ஓர் இயக்குநீராகும். பொதுவாக ஒரு சாதனை அல்லது மனதுக்குப் பிடித்த செயற்பாடுகளின்போது மனநிறைவு ஏற்படும். மாணவப்பருவத்தில் பரீட்சைச்சித்திகள், போட்டிநிகழ்ச்சி வெற்றிகள் ஆகியவை டோப்பமின் சுரப்புக்குப் பெரிதும் உதவுகின்றன. முதிர்பருவத்தில் உங்கள் பிள்ளைகள் பேரக்குழந்தைகளை வாழ்த்திப் புகழும்போது அவர்கள் பெறும் மகிழ்ச்சி டோபமின் இயக்குநீர்சுரப்பினாலேயே ஏற்படுகிறது. வயிறார அறுசுவை உணவை உண்டபின்னர் அவ்வுணவைச் சமைத்தவரைப் பாராட்டிப் புகழும்போது சமைத்தவரும் சாப்பிட்டவரும் இரட்டிப்பு மகிழ்ச்சியைப் பெறுகிறார்கள்.

தொழிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் உங்கள் மனம் விரும்பும் பிரயோசனமான ஒரு பொழுதுபோக்கினை ஆரம்பிக்கலாம். வரைதல், எழுதுதல், வாசித்தல், குறுக்கெழுத்துப்போட்டி, சுடோக்கு, செஸ் போன்ற விளையாட்டுகள், பிடித்த இடங்களுக்குப் பயணம் செய்தல் முதலானவை. மனம் விரும்பிய பயனுடைய வேலைகளில் சந்தோஷமாக ஈடுபடுதல் டோப்பமின் சுரப்புக்கு மிக்க அவசியம் என்பதை மறந்து விடாதீர்கள்.

**டோபமின் சுரப்புக்கு உதவும் முக்கிய காரணிகள்:**

- குறிக்கோள் உள்ள செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
- சிறிய வெற்றிகளையும் கொண்டாடுதல்.
- விருப்பமான உணவுவகைகளைச் சமைத்து உண்ணல்.
- உங்களை நீங்களே வசீகரப்படுத்துதல்.
- ஆழ்ந்த தூக்கத்தை அனுபவித்தல்.

**ஒக்ஸிரோசின் - Oxytocin:**
ஒக்ஸிரோசின் சுரப்புக்குக் காரணமாக அமைவது சமூக ஈடுபாடு ஆகும். 'மனிதர் ஒரு சமூக மிருகம்' என்பது யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கூற்று. தாய் - குழந்தை அணைப்பு, சிநேகிதர் தழுவல், செல்லப்பிராணிகளுடனான விளையாட்டுத்தழுவல் முதலான ஸ்பரிசங்கள் ஒக்ஸிரோசின் சுரப்புக்குப் பிரதான காரணங்களாக அமைகின்றன.

காட்டில் கூட்டமாக வாழும் மிருகங்கள் ஒன்றுடன்ஒன்று உராய்ந்து கடித்து விளையாடி மகிழ்கின்றன. சிறுத்தை தனது குட்டிகள் தன் மீது ஏறி விளையாடுவதை இரசிக்கின்றது. கோழி தன் குஞ்சுகளைச் சிறகுக்குள் பொத்தி வைத்து மகிழும். இவ்வகையான மகிழ்ச்சியான தருணங்களில் உடலில் ஒக்ஸிரோசின் இயக்குநீர் சுரக்கின்றது.

மற்றவர்களுக்கு நீங்கள் மனமுவந்து உதவும் வேளைகளிலும் உங்கள் உடலில் ஒக்ஸிரோசின் சுரப்பு நடைபெறுகின்றது. உதாரணமாக ஒரு பேருந்தில் வயோதிபர் ஒருவருக்கு உங்கள் இருக்கையை விட்டுக்கொடுப்பதில், சக்கரநாற்காலியில் வரும் ஒருவருக்கு உதவிசெய்வதில் உண்டாகும் மனநிறைவுக்கும் மகிழ்ச்சிக்கும் காரணம் இந்த ஒக்ஸிரோசின் சுரப்பே. எனவே, உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாக அமைவதற்குத் தன்னார்வத்தொண்டு பெரிதும் பயன்படும். ஓய்வுபெற்ற மூத்தோராயின் உங்கள் பேரக் குழந்தைகளை விரும்பிப் பராமரியுங்கள். நீங்களும் உங்கள் வழித்தோன்றல்களும் ஒரு சேரப் பயனடைவீர்கள்.

**ஒக்ஸிரோசின் சுரப்புக்கு உதவும் முக்கிய காரணிகள்:**

- செல்லப்பிராணிகளுடன் விளையாடுதல்.
- குழந்தைகளுடன் விளையாடுதல்.
- உங்களுக்கு நெருக்கமானவரைக் கட்டியணைத்தல்.
- அறிந்தவர் சாதனையை வாழ்த்துதல்.
- கரம்பற்றிப் பயணித்தல், கரம்பற்றி வாழ்த்துதல்.

**செரடோனின் - Serotonin:**
இறுதியாக செரடோனின் இயக்குநீரை 'ஆன்மீகஇயக்குநீர்' என்று நான் கருதுவதுண்டு. காரணம் ஆன்மீகசாதனை செய்வோருக்கு செரடோனின் சுரப்பு அதிகமாக இருப்பதாக அறியப்படுகின்றது. யோகாப்பியாசம், தியானம் மனஒருமைப்பாடு போன்ற பலவகையான பயிற்சிகளும், இயற்கையோடு இணைந்த வாழ்க்கைமுறையுமே இதன் காரணிகளாகின்றன.

சூரியஒளி உடலின் உற்சாகமான மனஎழுச்சிக்குத் தேவையான அளவு செறரோனின் இயக்குநீர்சுரப்புக்கு ஆதாரம் ஆகும். ஆனால் குளிர்காலத்தில் சூரியஒளிக்குறைவினால் ஏற்படும் 'மனச் சலிப்பு' (Winter Blues) உடலிலும் மனதிலும் உற்சாகமற்றநிலை தோன்றக் காரணமாயிற்று. இத்தன்மைகளைச் சமநிலைப்படுத்துவதே சூரியவழிபாட்டின் ஆரம்பப்படியாக ஆதிகாலத்தில் அமைந்திருக்கலாம்.

**செரடோனின் சுரப்புக்கு உதவும் முக்கிய காரணிகள்:**

- தியானத்தில் ஈடுபடுதல்.
- சூரியஒளியில் குளித்தல்.
- நீச்சல் பயிற்சி செய்தல்.
- ஓட்டப் பயிற்சிகளில் ஈடுபடுதல்.
- இசை, கலைநிகழ்ச்சிகளை இரசித்தல்.

இப்போது 'மகிழ்ச்சியின் தோற்றுவாய்' பற்றி நீங்களும் ஒரு முடிவுக்கு வந்திருப்பீர்கள் என நம்புகின்றேன். என்டோபின்ஸ், டோப்பமின், ஒக்ஸிரோசின், செரடோனின் என்ற நான்கு இயக்குநீர்வகைகளை இயற்கையாகவே எளிதில் பெற்றுக்கொள்ளும் வழிவகைகளையும் அறிந்திருப்பீர்கள். உங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக அமைத்துக்கொள்ளும் பொறுப்பும் இப்போ உங்கள் கையிலேயே உள்ளது.

kumar.punithavel@thaiveedu.com



STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2021)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

# குறுக்கு வழியில் குறைக்கும் உடல் எடை!

- சுப்ரமணியம் ஜெயசீலன்

உடல் எடையை குறைத்துக்கொள்வதற்கு நாம் அனைவரும் விரும்புகின்றோம். இதற்காக பல் வேறு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. வேலைப் பளு மிக்க உலகில் பலர் குறுகிய காலத்தில் உடல் தோற்றத்தை மாற்றிக்கொள்ளவும் எடையை குறைக்கவும் பல்வேறு யுக்திகளை கையாள்கின்றனர். உணவு தவிர்ப்பு, நீராகாரம் மட்டும் எடுத்தல், கீட்டோ டயட் என பல்வேறு வழிமுறைகள் இன்றைய இளைஞர் யுவதிகள் மத்தியில் பிரபல்யமானதாக காணப்படுகின்றது. இவ் வாறு உடல் எடையை குறைப்பதற்கு பயன்படுத்தப்படும் வழி-முறைகள் உயிராபத்து மிக்கவை என்றால் நம்பமுடிகின்றதா? சில



உத்திகள் மிகவும் ஆபத்தானவை என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

உலகின் புகழ்பூத்த நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர்களில் ஒருவ ரான ஷேன் வோர்ன் அண்மையில் இயற்கை எய்தினார். அவரது மரணத்தினால் முன்னதாக சந்தேகம் வெளியிடப்பட்ட போதிலும், பின்னர் இயற்கை காரணிகளினால் அவர் மரணித்தார் எனவும் மாரடைப்பு காரணமாக உயிரிழந்திருக்கலாம் எனவும் கூறப்பட் டது.

ஷேர்ன் வோர்ன் இறப்பதற்கு முன்னதாக அவர் உடல் எடையை குறைக்கும் தீவிர வழிமுறை ஒன்றை பின்பற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. உடல் எடையை குறைப்பதற்காக 14 நாட்கள் நீராகாரம் (liquid diet) மட்டும் எடுத்துக் கொண்டிருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

வோர்ன் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னதாக... 'சில ஆண் டுகளுக்கு முன்னர் இருந்த உடல் தோற்றத்தை அடைவதே தமது இலக்கு' என டுவிட்டரில் பதிவிட்டிருந்தார்.

52 வயதான வோர்ன் தாய்லாந்தில் நண்பர்களுடன் விடுமுறையை கழிப்பதற்காக சென்றிருந்த வேளையில் இயற்கை எய்தினார்.

வோர்ன் இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு உடல் எடையை குறைக்கும் வழிமுறைகளை பின்பற்றியிருந்தார் எனவும், அவரது மரணத்திற்கு உடல் எடை குறைப்பதற்கான வழி முறைகளுக்கும் தொடர்பில்லை எனவும் அவரது நண்பர்கள் கூறு கின்றனர்.

எவ்வித திண்ம உணவுகளையும் எடுத்துக் கொள்ளாது வெறும் பானங்களை அல்லது திரவ ஆகாரங்களை உட்கொள்வதே இந்த நீராகார திட்ட உணவு முறைமையாகும்.

### திட்ட உணவு (Diet) எவ்வளவு பாதுகாப்பானது, அவை உடலை எவ்வாறு பாதிக்கும்?

பல்வேறு நீராகாரங்களைக் கொண்ட டயட் வழிமுறைகள் காணப் படுகின்றன. இவை அனைத்துமே சிறிதளவு கலோரிகளை உட் கொண்டு துரித கதியில் உடல் எடையை குறைப்பதே இவற்றின் பிரதான இலக்காகும். பழங்கள், மரக்கறி வகைகளைக் கொண்ட பானங்கள் உடலின் நச்சுப் பொருட்களை அகற்றவும் கலோரி எண்ணிக்கையை குறைக்கவும் உதவுகின்றன.

எவ்வாறெனினும் இந்த கடுமையான உடல் எடை குறைப்பு வழி-முறைகள் அல்லது டயட்கள் உடல் ஆரோக்கிய கேடுகளை ஏற்ப டுத்தும் எனவும், பொதுவாக பலருக்கு இது பொருத்தமுடைய தல்ல எனவும் மருத்துவ நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

உடல் எடை கூடிய அல்லது மிக அதிக உடல் எடை கூடிய மற் றும் நீரிழிவு நோயுடைய நபர்களுக்கு மட்டுமே 800 கலோரிகள் கொண்ட உணவை உட்கொள்ள வேண்டுமென பிரித்தானிய தேசிய சுகாதார சேவை பரிந்துரை செய்கின்றது.

மருத்துவ கண்காணிப்பின் கீழ் பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டு இந்த டயட் முறை பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த டயட் முறையில் உடலுக்கு நாள் ஒன்றில் தேவையான அனைத்து ஊட்

டச் சத்துக்களும் உள்ளடங்கியுள்ளன. எனினும் இணையத்தில் விளம்பரம் செய்யப்படும் அநேகமான திட்ட உணவுப் பானங்கள் அனைத்துமே இந்த வகையினைச் சேர்ந்தவை என வகையீடு செய்யப்பட முடியாது.

துரித கதியில் பெறுபேறுகளை அநேகர் எதிர்பார்க்கின்ற காரணத்தினால், இந்த பான வகை திட்ட உணவு பலரினாலும் கவரப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது என, பிரித்தானிய திட்ட உணவு ஒன்றியத்தின் உறுப்பினர் ஐஸ்லிங் பிகொட் தெரிவிக்கின்றார்.

நீராகார வகை டயட் முறைமை பயனளிக்கக் கூடியது என்ற போதிலும், அது அனைவருக்கும் ஒரே விதமான பயனைத் தராது எனவும், அனைவரும் ஒரே நீராககார திட்ட உணவு முறைமை பொருந்தாது என அவர் குறிப்பிடுகின்றார்.

ஆரோக்கியமான உடல் எடையைக் கொண்டவர்களிடம் இவ்வாறு விளம்பரம் செய்வது குறித்து கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது என அவர் தெரிவிக்கின்றார்.

பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள் என்பனவற்றில் அதிகளவான கனியுப்புக்கள் மற்றும் உயிர்ச்சத்துக்கள் செறிந்து காணப்பட்ட போதிலும், அவற்றில் புரதம் மற்றும் கொழுப்புச் சத்துக்கள் மிகக் குறைந்தளவில் காணப்படுகின்றன.

இதில், தோல் நீக்காது, விதைகளை எடுக்காது முழுப் பழத்தையும் பயன்படுத்தாவிட்டால் நார்ச் சத்தும் போதியளவில் கிடைக்கப் பெறாது.

இந்த உணவுப் பழக்கத்தை பின்பற்றினால் ஓர் வாரத்தின் பின்னர் பிழிந்தெடுக்கப்பட்டு, முற்றிலும் சோர்வடைந்த நிலையை உணர்வீர்கள் என ப்ளைமவுத் பல்கலைக்கழகத்தின் மனித ஊட்டவியல் பேராசிரியர் டொக்டர் கெயில் ரீஸ் தெரிவிக்கின்றார்.

உடலுக்கு தேவையான சமனிலையான ஊட்டச்சத்துக்களை வழங்காத திட்ட உணவு அல்லது டயட் நீண்ட கால அடிப்படையில் உடலுக்கு பெரும் கேடுகளை விளைவிக்கும் என்கிறார்.

சேமித்து வைக்கப்பட்டுள்ள இரும்புச் சத்து பயன்படுத்தப்படும் எனவும், இதனால் பெண்களுக்கு இரத்தச்சோகையை ஏற்படுத்தும் எனவும், தசை நிறை குறையும் எனவும், குடல், நுரையீரல், கல்லீரல் என்பன உடலை வழமை போன்று இயங்கச் செய்வதற்காக கடுமையாக தொழிற்பட நேரிடும் எனவும் தெரிவிக்கின்றார்.

தலைவலி, தலைச்சுற்று, கடுமையான சோர்வு, வயிற்றுப் போக்கு அல்லது மலச்சிக்கல் போன்ற பக்க விளைவுகளும் இந்த டயட் காரணமாக ஏற்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

பழச்சாறுகளில் அதிகளவான இயற்கை அமிலங்கள் காணப்படுகின்றன இவை பற்களின் எனமல்களை அழிப்பதுடன், குறைந்தளவு கலோரிகளை உட்கொள்வதனால் வாய் துர்நாற்றத்தை உருவாக்கும்.

நீராகாரம் கொண்ட திட்ட உணவு முறைகளை பின்பற்றுவதனால் வேகமாக உடல் எடையை குறைக்க முடியும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. எனினும் இது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்படுகின்றது. நீராகாரம் எடுப்பதனை நிறுத்திக் கொண்டபின் வழமையான உணவுகளை நீங்கள் எடுத்துக் கொள்ளும் போது மிக வேகமாக உடல் எடை திரும்பவும் அதிகரிக்கும் எனவும் இதனை யோயோ ரிஸ்க் என அழைப்பதாகவும் ஐஸ்லிங் பிகொட் குறிப்பிடுகின்றார்.

நீராகார திட்ட உணவு முறையானது நச்சுசார் உணவுக் கலாச்சாரத்தின் ஒரு பகுதி எனவும், இது உணவு தொடர்பான எதிர்மறையான மனப்பான்மையை உருவாக்கும் எனவும் தெரிவிக்கின்றார். இவை உண்மையில் உடல் எடை குறைப்பினை விடவும் உடல் எடை அதிகரிப்பிற்கே வழியமைக்கும் என மேலும் தெரிவிக்கின்றார்.

உங்கள் உடலுக்கு நீண்ட கால அடிப்படையில், நடைமுறைச் சாத்தியமான இலக்குகளை அடைவதற்கான முனைப்புக்கள் காட்டப்பட வேண்டுமெனவும், அது ஒரு வாரத்தில் எட்டிவிடக் கூடிய இலக்கு கிடையாது எனவும் குறிப்பிடுகின்றார்.

நீண்ட காலத்திற்கு உடல் எடையை குறைப்பதற்கு அதி தீவிரமான திட்ட உணவு முறைகள் பயன்படப் போவதில்லை. ஆரம்பத்தில் உடலிலிருந்து குறையும் எடையானது உடலில் உள்ள நீராகவும் மெலிந்த தசைகளாகவுமே இருக்கும் என பிரித்தானிய தேசிய அமைப்பின் உறுப்பினர் டொக்டர் சிமோன் ஸ்டீன்சன் தெரிவிக்கின்றார்.

இவ்வாறான துரித கதியிலான திட்ட உணவு முறைகளினால் பல்வேறு உடல் ஆரோக்கிய குறைபாடுகளை ஏற்படுத்தும் எனவும், பித்தக் கல் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீராகாரத்தை அடிப்படையாகக் கொண்ட திட்ட உணவு முறை அல்லது டயட்களினால் உடல் எடை குறைவதனைப் போன்றே உடல் எடை அதிகரிப்பும் ஏற்படுகின்றது. இதனை ஓர் எடைச் சுழற்சியாக கருத வேண்டும் எனவும் இதனால் உடல் ஆரோக்கிய பாதிப்புக்கள் வெகுவாக ஏற்படுவதாகவும் டொக்டர் ஸ்டீன்சன் தெரிவிக்கின்றார்.

குறைந்த கலோரிகளைக் கொண்ட உணவுகளை உட்கொள்வதன் மூலம் இருதய பாதிப்புக்கள் ஏற்படும் சாத்தியங்கள் வெகுவாக காணப்படுகின்றது என மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

இவ்வாறான திட்ட உணவு பழக்கமுடையவர்களுக்கு சிறிய அளவிலான மாரடைப்பு ஏற்பட்டாலும் அது பாரதூரமான ஆபத்துக்களை ஏற்படுத்தும் என தெரிவிக்கின்றனர்.

பழங்கள், மரக்கறிகள், முழுத் தானியங்கள், விதைகள் உள்ளிட்ட பல்வேறு உணவு வகைகளை உள்ளடக்கியதுடன் நாள் முழுவதும் தொழிற்படுவதற்கு போதியளவு சக்தியை வழங்கக்கூடிய சமனிலையானதும் பல்வகையானதுமான திட்ட உணவு முறையே சிறந்தது என டொக்டர் ஸ்டீன்சன் குறிப்பிடுகின்றார்.

அல்கஹோல், பிஸ்கட் வகைகள், விரைவு உணவுகள், பெரியல் உணவுகள் என்பனவற்றை தவிர்த்துக்கொள்வது உசிதமானது என டொக்டர் ரீஸ் பரிந்துரை செய்கின்றார். இவை தேவையற்ற கலோரிகளை உடலுக்கு வழங்கும் எனவும் துரிதமான திரவ உணவு வகைகள் பொருத்தமற்றவை எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

உங்களுக்கு ஏதேனும் உடல் நலக்குறைபாடுகள் காணப்பட்டால் திட்ட உணவு பழக்கமொன்றை ஆரம்பிக்க முன்னதாக வைத்தியரின் ஆலோசனை வழிகாட்டல்களை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது.

எனவே, உடல் எடையை குறைப்பது மிகவும் ஆரோக்கியமான ஓர் எண்ணம் என்ற போதிலும், அதனை எவ்வாறு குறைப்பது என்பது குறித்த தீர்க்கமான முடிவுகளை எடுத்து செயற்பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

ஏனெனில், விளம்பரங்கள், இணைய வழி ஒளிப்பதிவுகள் போன்றவற்றில் பகிரப்படும் தகவல்கள் அனைவருக்கும் ஒருசேர பொருத்தப்பாடுடையதாக அமைந்துவிடாது. எனவே, துரித கதியில் உடல் எடையை குறைப்பதற்கு முயற்சிக்காது, திட்டமிட்ட அடிப்படையில் கிரமமாக உடல் எடை குறைப்பிற்கான வழிமுறைகளை பின்பற்றி ஆரோக்கியமான வாழ்வினை பெற்றிட முடியும் என்பது நிதர்சனம்.



jeyaseelan.s@thaiveedu.com

# மடிந்துபோன மனிதம்

- சி. நற்குணலிங்கம்

இந்த அவசர உலகில் மனிதம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் புரிதல் மிக அவசியம். மனிதம் என்பது மனித மற்றும் பிற இயற்கை விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு நெறிமுறையின் மூலம் ஒரு மனிதாபிமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதைக் குறிக்கிறது. மனிதம் என்பது தத்துவவாதம் அல்ல. அது எப்போதும் மத மற்றும் மூடநம்பிக்கைகளைச் சார்ந்து இருக்காது. நம் பகுத்தறிவின்மூலம் சிந்தித்துச் செயற்படும் தன்மை பிற மனித வாழ்வுக்கு நாம் நம்மை பயக்கும் வகையில் இருத்திக்கொள்வதாகும். மனிதம் மற்றும் மனிதநேயம் என்பது ஒரு ஜனநாயக மற்றும் நெறிமுறை வாழ்க்கை நிலைப்பாடாகும். எந்த உயிராக இருந்தாலும் அவை கஷ்டப்படும்போது பலனை எதிர்பார்க்காமல் உதவி செய்வதே மனிதம் எனப் பொருள்படும். பிறவியால் மனிதர் அல்ல தன்னைப் போலவே பிறரை நினைக்கும் குணம், எவ்வித எதிர்பார்ப்புமின்றி துன்பத்தில் உதவும் குணம் மனிதம். இருப்பதைக் கொடுத்து இல்லார் வாழ்வும் சிறப்புறச் செய்தல் மனிதம். மனிதம் இல்லா வாழ்வில் நிம்மதியின்றி தவிப்பதுதான் மிச்சம்.

அதிவேக சுழற்சியுற்று உளன்று கொண்டிருக்கும் இன்றைய உலகின் போக்கில், விசையுற அசைந்து மனிதர் தனது சுயத்தை இழந்து வாழ்கின்றனர். இன்னொருவரை அடியொற்றி வாழ நினைத்து வாழ்வின் ஆயுள் முழுவதையும் தொலைத்துவிடுகின்றனர். மனிதருக்கு உரித்தான அன்பு, பாசம், கருணை, மனிதாபிமானம், விட்டுக்கொடுப்பு, உதவும் மனப்பாங்கு போன்ற நல்லொழுக்கப் படிமங்கள் யாவுமே அழிவுப் பாதையில் செல்ல பொறாமை, பொய்யுரைத்தல், ஏமாற்றுதல், நம்பிக்கைத்துரோகம், போட்டி, கொலை, கொள்ளை, பழிவாங்குதல் போன்ற கீழ்மைக் குணங்கள் மேலோங்கி உள்ளன. மனிதர்கள் மனிதத்தோடு வாழ்ந்தாலே ஆரோக்கியமான மனித சமுதாயத்தை உருவாக்க முடியும்.

மனிதர்களிடத்தில் மனிதம் இன்றியமையாத தேவையாகின்றது. மனிதத்துக்கு ஒழுக்கம் தேவையாகிறது. ஒருவருடைய வாழ்க்கை நடைமுறைகள் ஒழுக்கம் என்று தீர்மானிக்கப்படும். ஒழுக்கம் ஒழுகு என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். ஒழுகு என்றால் ஒன்றை இடைவிடாது கடைப்பிடித்தலாகும். வாழ்க்கைக்குத் தேவையான நல்ல, சிறந்த, உயர்ந்த நெறிகளை எந்த நேரத்திலும் விட்டுவிடாமல் தொடர்ந்து பின்பற்றுவதாகும். ஒழுக்க நிலையில் தற்சார்பான ஒழுக்கம் முதன்மையானது. அதாவது ஒரு மனிதர் தன்னைத்தான் கொண்டு வாழ்தல். தன்னுடைய ஐம்புலன்களையும் மனதில் கட்டுக்கோப்புடன் வைத்துக்கொள்ளல். 'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி'. அதாவது, ஒழுக்கத்தை முக்கியம் என்று எண்ணிக் காப்பவர்கள் மேலான நிலையை அடைந்து போற்றுவார்கள். ஒழுக்கத்தை விட்டவர்கள் பழிபாவங்களுக்கு உள்ளாவார்கள் என்கிறது குறள்.

நவீன தொழில்நுட்பங்களின் வளர்ச்சியை அதிகமாய் நுகர்ந்து கொள்ளும் நாம் உலகத்தை மாற்றுவோம் புதிய உலகம் படைப்போம் எனக் கூறியபடி மனிதாபிமானத்தை தொலைத்துவிடப்போகின்றோம். மனிதர்கள் இருக்கிறார்கள், அவனுள் குடிகொண்டிருந்த மனிதம் தொலையக் காரணம் மனிதர்கள் மனிதத்துடன் வாழத் தவறிவிடுகின்றமையே. மனிதம் எங்கே பயணிக்கிறது என்பதை உணராதவர்களாக மனிதர்கள் தம் வழியில் சென்றுகொண்டிருக்கிறார்கள். இதனால் மனிதம் என்ற உயரிய பண்பு அற்றுப் போகின்றது.

மனிதம் என்பது தனியான ஒன்றல்ல. அது மனித இயல்போடு ஒன்றித்தது. ஒருவரின் சொந்த வாழ்க்கைக்கு அர்த்தத்தையும், வடிவத்தையும் கொடுப்பது மனிதம். மனிதத்தை மீறி வாழ்வோர் அதிகம். அவர்களை மறப்போம், மன்னிப்போம். இதுவரையான கோபம், குற்றம், கொடூரமான அத்தனையையும் மறப்போம். இயன்றவரை மனிதம்போற்றி, நட்புப்போற்றி, அன்பின் மிகுதியில் உலகத்திற்கான அக்கறையை முன்நிறுத்தி, வாழும் ஒவ்வொரு உயிருக்காகவும் சிந்திப்போம். மிருகங்கள் மிருகங்களாகவும் பறவைகள் பறவைகளாகவும் வாழ, மனிதர்கள் மட்டும் தன்னிலிருந்து கீழிறங்கி வாழ்கின்றார்கள். கருணைகொண்ட மனதுக்கு சுயநலம் அவசியப்படாது. சுயநலம் இல்லாதவரால் மட்டுமே பிறர்பற்றிச் சிந்திக்க முடியும். சமூகத்துக்கான தன் கடமைகளைச் செய்ய முடியும்.

மண்ணில் ஒட்டிக்கொள்ளும் மழை நீரைப்போல இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறது மனிதம். அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்பது முன்னோர் வாக்கு. அதனினும் அரிது மனிதத் தன்மையுடன் மனிதர் வாழ்வது.

மனிதம் தழைக்க முயலவேண்டும். அன்று, மனிதர் இயற்கையோடு இணைந்திருந்தபோது மனிதம் தழைத்திருந்தது. இன்று, செயற்கையாய் செயற்படத் தொடங்கியபின் மனதோ மரத்துப் போனது, மனிதம் மரித்துப்போனது. மனிதத்தில் நம்பிக்கை இழந்துவிடக்கூடாது. மனிதம் ஒரு சமுத்திரம். சமுத்திரத்தின் சில துளிகள் மாசுபடுவதால் சமுத்திரம் மாசடைந்துவிடாது.

மனிதவாழ்க்கை, ஒவ்வொருவருடைய வாழ்க்கை முறைகள் மற்றும் அவர்களது சிந்தனைகளைப் பொறுத்து வித்தியாசப்படும். இருந்தபோதும், மனிதர் எப்படியும் வாழலாம் என்பதைவிட இப்படித்தான் வாழவேண்டும் என்று உலகின் பல்வேறு நெறிகள் சுட்டிக்காட்டுகின்றன. 'பிறருக்குப் பின்னால் நின்று நாம் செய்ய வேண்டிய வேலை அவர்களைத் தட்டிக்கொடுப்பது மட்டும்தான்' என்கிறார் விவேகானந்தர். நாடி அடங்கிப் போகையிலே நாலு பேரு வேணும். அந்த நாலுபேரு வேணுமெனில் மனிதம் வளர்க்க வேணும். அன்பைக் கலந்த வாழ்க்கையை, வார்த்தையை தெளிப்

போம். மனம் பகிர்ந்து மனிதம் தெளிவோம். மனிதர்களைப் போற்றி மகிழ்வோம். மனிதம் மறக்கப்பட்டால் இம்மண்ணிலே மனித இனம் அழிந்துபோகும். மனிதம் ஒவ்வொருவர் வாழ்விலும் பிறக்கட்டும். மற்றவரை ஏற்றுக்கொள்ளும் தன்மை இன்னும் வளரட்டும்.

உலகில் பிறந்த மனிதர் யாவரும் சமம். ஒற்றுமையுடன் வாழ்ந்து மனிதம் விதைப்போம். ஆயுதம் ஏந்துவது அறிவுக்கு அழகன்று. அன்பால் அகிலம் சிறக்க வாழ்வது நன்று. உயிரினங்களில் உயர்ந்த இனம் மனித இனம். ஒருகணம் சிந்தித்து செயலாற்றுங்கள். முடிவு மரணம்தானே. எதைக் கொண்டுபோவோம்? அன்பை விதைத்துவிட்டுச் செல்வோம். யாராயினும் அறுவடை செய்யட்டும். முடிந்த மட்டும் இரசித்துக்கொண்டே போவோம். மனிதராய் வாழ மனிதத்துவம் தேடுவோம். பணத்துக்குப் பின்னால்த்தான் மனிதம் என்றால் அந்த மனிதம் பிணந்திண்ணிக் கழுகுகளுக்கு சமம். மதங்கள் நூறு, இனங்கள்வேறு. ஆனால் மனிதம் ஒன்று. மதங்கள் பிரிப்பதை மனிதம் இணைக்கட்டும்.

நம்முடைய சொற்கள் யாருடைய இதயத்திலும் விதையாக விழ வேண்டும். விசமாக இறங்கக் கூடாது. பூவாக மலர வேண்டும். முள்ளாகக் கிளிக்கக்கூடாது. உன்பின்னால் நிற்பவர்கள் எல்லோரும் உன்னை நேசிக்கிறார்கள் என எண்ணிவிடாதே. அதில் உன் முதுகில் குத்தக் காத்திருப்போரும் இருப்பார்கள். மனிதர் மறந்த மனிதம் மலரட்டும். மனிதத்தை தொலைத்துவிட்டு மனதைக் கல்லாய் மாற்றிவிட்டோம். உதடுகள் பிழைதனை உச்சரிக்க வாழ்வைச் சிதைத்துவிட்டோம். உலகம் அழியாமல் உயிரோடும், உயிர்ப்போடும் இருக்கவேண்டுமானால் அறிவாற்றல், ஆளுமை, அதிகாரம் கொண்ட மனிதர்களைவிட மனிதரின் பலம் வாய்ந்த குணங்களான அன்பு, கருணை, இரக்கம் எனும் மனிதம் கொண்ட மனிதர்களே தேவை. மற்றவை எல்லாம் இருந்தும் மனிதம் இல்லாவிட்டால் நினைத்த எதையும் அவர்களால் சாதிக்க இயலாது.

பல ஆண்டுகளாக மனிதத்துடன் வாழ்ந்த புனிதர்கள் நிறைந்த பூமி நம் பூமி. ‘உயர்வான ஒழுக்கம், உன்னதமான பண்பாடு, அவலக்குரல் கேட்டால் துடித்து எழும் மனிதநேயம்... அத்தனை நற்பண்புகளோடும் உலகம் வியக்கும் வாழ்க்கை வாழ்ந்து, மனிதகுலம் செழிக்க வழிகாட்டினார்கள் நம் முன்னோர்கள்’ என, முன்னோர்களின் மனிதநேயம் குறித்து புறநானூறு கூறுகின்றது. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார் வள்ளலார். சமநிலை சமுதாயத்தை வலியுறுத்தினார் பாரதியார். தன்னைத் தாக்கும் பகைவர்களுக்குக்கூட இம்சை செய்யாதிருப்பதை தனது போராட்ட வழியாக நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டவர் மகாத்மாகாந்தி.

இன்றைய மனிதரின் மனிதத்தின் நிலை என்ன? மனிதரை மனிதர் மதிப்பதில்லை. அரவணைப்பதில்லை. அன்பு காட்டுவதில்லை. மனிதம் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் புதைந்து கொண்டிருக்கிறது. மனிதருக்கு பொன்னைத் தேடுவதிலும், மண்ணைத் தேடுவதிலும், பொருளைத் தேடுவதிலும் உள்ள நாட்டம் மனிதத்தைத் தேடுவதில், சேகரிப்பதில் இல்லை. நாம், நமது என்ற பரந்த வட்டத்தில் வாழவேண்டிய மனிதர் நான், எனது என்ற குறுகிய வட்டத்தில் சுருங்கிக்கொண்டிருக்கிறார்கள். மனிதமற்ற மனிதர்கள் சமுதாயத்தை சீரழித்துக்கொண்டிருக்கிறார்கள். சந்திரமண்டலத்தில் முதன்முதலாக கால் வைத்தவுடன் என்ன நினைத்தீர்கள் என நீல் ஆம்ஸ்ரோங்கைக் கேட்டபோது ‘பூமியிலிருந்து இலட்சக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள சந்திரமண்டலத்தில் இடம் பிடித்த மனிதரால் பக்கத்து நாட்டில், பக்கத்து வீட்டில் உள்ள மனிதர்கள் மனதில் இடம்பிடிக்க முடியவில்லையே என வருத்தப்பட்டேன்’ என்று கூறியது... மனிதம் மடிந்துகொண்டே வருகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. மரித்துப்போன மனிதம் மலர ஒன்றுபடுவோம். ஒன்றுபட்டால் உண்டு நிம்மதியான வாழ்வு.



natkunalingam@thaiveedu.com







# வீடு விற்கவா? வாங்கவா?

# சிந்தியுங்கள்! செயற்படுங்கள்!

- வேலா சுப்ரமணியம்

ஒருவர் ஒரு வீட்டைக் கொள்வனவு செய்வது என்பது அவர்களது வாழ்நாளில் அவர்கள் செய்யும் பெரிய முதலீடாகவே அமைகின்றது. அதுபோன்றதே, வீட்டை விற்பது என்பதுகூட வாழ்நாளில் ஒருவர் செய்யக்கூடிய ஒரு மிகப் பெரிய பணக் கொடுக்கல் வாங்கலாகவே காணப்படுகின்றது. எனவே இத்தகைய வீடு வாங்கும் அல்லது விற்கும் நடவடிக்கையை மேற்கொள்கின்றபோது, ஒரு சரியான திறமையுள்ள வீடுவிற்பனை முகவரைத் தெரிந்தெடுப்பதிலேயே ஒருவரது வெற்றி தங்கி இருக்கின்றது.

கடந்த சில காலங்களில் வீட்டுச் சந்தையில் ஏற்பட்ட, யாருமே எதிர்பார்த்திராத விலையேற்றம் அதன் பக்கம் எல்லாரது கவனத்தையும் திசை திருப்பிவிட்டது. பல வீடுவிற்பனை முகவர்களையும் உருவாக்கிவிட்டது.

இந்த நிலை எவ்வாறு உருவானது? சுருக்கமாகக் கூறுவதானால் வீட்டுச் சந்தையில் ஏற்பட்ட அதீத விலையேற்றமும், வீடு விற்பனை முகவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஊதியமும் பலரையும் ஈர்த்துவிட்டது என்பதுதான் உண்மை.

வீடுவிற்பனை முகவர்கள் மலிந்து கிடக்கும் நிலையில் ஒரு சரியான முகவரைத் தெரிவு செய்வது என்பது மிகச் சவாலான நிலையாக உள்ளது. ஒரு நண்பனைத் தெரிவுசெய்வதா? அல்லது குடும்பத்தில் உள்ள ஒருவரைத் தெரிவு செய்வதா? அல்லது கூடவே வேலை செய்யும் ஒருவரைத் தெரிவு செய்வதா? அல்லது நானே படித்து எனது வீட்டை வாங்குவதா? அல்லது விற்பதா? இத்தகைய இக்கட்டான சூழ்நிலைக்கு எல்லோருமே தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஒருவர் எடுக்கக் கூடிய முடிவு அவர்களுக்கு பல ஆயிரம் டொலர்களைக் கொடுக்கக்கூடியது என்பதும் அல்லது பல ஆயிரம் டொலர்களை இழப்பதற்கு வழிவகுக்கும் என்பதும் அவர்கள் தமது வீடு விற்பனை முகவர்களைத் தெரிவு-செய்யும் போது உணர்ந்து கொள்வதில்லை. காலம் கடந்த பின் உணர்ந்து கொள்ளலாம். ஆனால் இழந்தது இழந்ததுதான் எஞ்சி இருக்கப்போவது கவலையும் மன உளைச்சலும்தான்.

கனடாவில், கடந்த சில ஆண்டுளாக இருந்துவரும் வீட்டுச் சந்தை நிலையை வைத்துக் கொண்டு யாரும் எந்த முடிவும் எடுத்துவிட முடியாது. அதாவது அக்காலப்பகுதியில் எப்படியான முகவர்? என்ன தரத்தில் உள்ள வீட்டைப் போட்டாலும் கேட்டவிலையை விட அதிகவிலைக்கு அதை விற்றிருக்கமுடியும். அது போல, உரிய பெறுமதிக்கு மேலாகவே ஒரு வீட்டை வாங்கி இருக்கமுடியும். அப்போது இருந்தது ஒரு போலியான சந்தை நிலை. அது இப்போது மாறுபட்டு ஓர் ஆரோக்கியமான வீட்டுச் சந்தை நிலையை உருவாக்க நகர்ந்து கொண்டிருக்கின்றது போலத் தெரிகிறது.

இத்தகைய ஓர் ஆரோக்கியமான சந்தை நிலையில் ஒருவர் உச்ச பலனை அடைவதற்கு, ஆற அமர யோசித்து ஒரு சரியான வீடு விற்பனை முகவரை தெரிவு செய்வதிலேயே அவர்களது வெற்றி தங்கியிருக்கின்றது. அந்த வகையில் பலருக்கும் பயன்பெறும் பொருட்டு பல விதமான யுத்திகளை அல்லது வரைமுறைகளை இக்கட்டுரையின் வாயிலாக அடையாளப்படுத்த விளைகிறேன்.

**நம்பிக்கை, நேர்மை:**

நம்பிக்கை நேர்மை, உள்ள முகவர்களைக் கண்டு பிடிக்க வேண்டியது முதற்படி. ஒரு வீடுவிற்பனை முகவர் மிக நம்பிக்யைானவராக இருக்க வேண்டியது மிக அவசியம். பல லட்சம் பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை செய்ய முற்படுகின்றபோது ஒரு முகவர் நம்பிக்கைக்குரியவராக இல்லாது விட்டால் ஒருவர் முடிவு-களை எடுப்பதில் பல இடர்ப்பாடுகளைச் சந்திக்க வேண்டிவரும். மாறாக நம்பிக்கை உள்ள முகவரைத் தேர்ந்து எடுத்துவிட்டால் எந்த விதமான அழுத்தங்களும் இன்றி மிக இலகுவாக வீட்டை விற்கவோ அல்லது வாங்கவோ ஏதுவாக இருக்கும். நம்பிக்கைக் குரிய முகவர் ஒருவர் தனது வாடிக்கையாளர்களது பொறுப்புக்களை தானே எடுத்துக்கொண்டு செயற்படுவதால் வாடிக்கையாளரின் விற்கும் அல்லது வாங்கும் செயற்பாடு முழுவதும் மகிழ்ச்சிகரமாக அமைந்துவிடும் வாய்ப்பு உள்ளது.

நேர்மையுள்ள முகவர்களை தேர்ந்து எடுப்பதும் மிக அவசியமானது. தனது நலனுக்காகவோ, அல்லது தனது ஊதியத்திற்காகவோ நேர்மையற்ற பல முகவர்கள் பலவித முறையற்ற செயல்களில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அனுபவம் இல்லாத வாடிக்கையாளர்களுக்கு உண்மைத்தகவல்களை மறைத்தல் அல்லது ஏமாற்றுதல் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றது. உதாரணமாக ஒரு வீட்டைக் கொள்வனவு செய்யும்போது அதே இடத்தில் அதே மாதிரியான வீடு அண்மைக்காலத்தில் என்னவிலைக்கு விற்கப்பட்டிருக்கின்றது என்பதை ஒப்பீட்டுரீதியில் ஆராய்ந்து அதன் அடிப்படையில் வாங்கப்போகும் வீட்டின் விலையை தீர்மானிக்க உதவி செய்ய வேண்டியது மிக அவசியம். ஆனால் கொள்வனவு முடிந்தால் போதும் என் ஊதியம் வந்துவிடும் என்று, பணம் கொடுத்து வாங்கப்போகும் கொள்வனவாளர்களின் நலனில் அக்கறை கொள்ளாத முகவர்கள் நாட்டில் அதிகம் இருக்கிறார்கள். இது எங்கள் சமூகத்தில் மட்டுமல்ல பொதுவாக இருக்கக் கூடிய ஒரு பொதுப் பிரச்சினை.


கொள்வனவாளர்களின் சக்திக்கு மேலான வீடுகளின் மீது ஆசைகாட்டி அவர்களை தங்கள் வலையில் வீழத்தி அவர்களுக்கு முதலாவது அடமானக் கடனுக்கு மேலாக இரண்டாம், மூன்றாம் அடமானக்கடன்களை எடுத்துக்கொடுத்து இறுதியில் அவர்களை நடுத்தெருவில் கொண்டுவந்து விடுவதிலும், தங்கள் வங்கிக் கணக்குகளை நிரப்புவதிலும் பல முகவர்கள் குறியாக இருக்கிறார்கள். நடுத்தெருவுக்கு வந்த பின்னர் முகவர்களைத் திட்டித் தீர்ப்பதில் பலனில்லை. எனவே முன் எச்சரிக்கையாக நம்பிக்கை, நாணயம், நேர்மையுள்ள உங்களுக்கு இசைவாக ஒத்துப் போகக்கூடிய முக

வர்ளைத் தேர்ந்தெடுத்து வாழ்வில் வளம்பெற முயற்சி செய்யுங்கள்.

### துறைசார் அனுபவம்:

பதிவு செய்யப்பட்ட வீடு விற்பனை முகவர்கள் எல்லாம் அத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள் அல்ல. வீடு பற்றிய எந்த வித அடிப்படை அறிவோ, அல்லது அனுபவமோ இல்லாத பல முகவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு சிறந்த சேவையை தமது வாடிக்கையாளருக்கு வழங்குவது சிரமம். துறைசார் அனுபவம் உள்ள முகவர் ஒருவர் வீட்டைப் பார்த்த மாத்திரத்தே அதனது பெறுமதியைக் கணித்து உடன் முடிவு எடுக்கச் சிபார்சு செய்யலாம். இதனால் நல்ல சந்தர்ப்பம் தவறிப் போகாது. அது மட்டுமல்ல, பல லட்சம் டொலர்கள் இலாபம் கூட வரலாம், ஏமாற்றங்களைத் தவிர்க்கலாம்

முகவர்கள், வீடு வாங்குபவர்களுக்கு வீடுகளைக் காட்டும் போது கதவுகளைத் திறந்துவிட்டு தாம் தொலைபேசியில் ஒன்றித்துப் போய் இருப்பதையும், கொள்வனவாளர்கள் தாங்களாகப் பார்த்து



விட்டு வெளியே வர அடுத்த வீட்டுக்கு அவர்களை அழைத்துப் போகும் முகவர்களும் இருக்கிறார்கள். வீட்டைப்பார்ப்பதும் முடிவு எடுப்பதும் வாங்குபவர்களின் கடமை என்று தாம் ஈடுபாடின்றி தாமரை இலையில் உள்ள தண்ணீர்போல இருக்கும் முகவர்களினால் என்ன பலன் என்பதை யோசித்து முடிவு எடுக்கவேண்டும்.

### வசிக்கும் அல்லது வசிக்கப்போகும் இடத்தைச்சார்ந்த முகவர்களைத் தேர்தல்:

என்னதான் தொழில்நுட்பம் வளர்ந்தாலும், இருந்த இடத்தில் இருந்தபடியே பல விடயங்களை ஆராய்ந்து அறியக்கூடிய நிலை இருந்தாலும் உரிய இடத்தைச் சேர்ந்த அல்லது உரிய இடத்தில் பரீட்சயமான முகவர்களிடம் இருந்து அதிக பலனைப் பெறும் வாய்ப்பு உள்ளது. உதாரணமாக ஒரு பரீட்சயமற்ற புதிய இடத்தில் ஒரு வீட்டைக் கொள்வனவு செய்ய முற்படும் போது விலை பற்றி ஒப்பீட்டு அறியவோ சுற்றாடலில் உள்ள வசதி பற்றி அறியவோ புதிய தொழில்நுட்பங்கள் உதவி செய்யும். ஆனால் அங்கு இருக்கக்கூடிய சமூக கலாச்சார மற்றும் உள்ளக நிலைகளை உறுதிசெய்ய அந்தப்பிரதேசத்தில் இருப்பவரை நம்புவதே மேலானது. அதுபோல ஒரு புதிய இடத்திற்கு வந்து வீடுகளை விற்க முற்படும் முகவர்கள் பெறுமதிக்கும் குறைந்த விலைக்கு வீடுகளைச் சந்தைப் படுத்தியதையும் அதே வேளை பெறுமதிக்கு மேலான விலையைக் குறித்து சந்தைப்படுத்த முயன்று அல்லற்பட்டதையும் பார்த்திருக்கிறேன். அத்தகைய சூழ்நிலையை நான் எனது வாடிக்கையாளருக்கு சாதகமாகப் பயன்படுத்திய சந்தர்ப்பங்களும் உண்டு.

எனவே அப்பிரதேசத்தைச் சேர்ந்த முகவர்களினூடாக அதிக பலனை அடைய வாய்ப்பு உள்ளது என்பது உறுதியான விடயம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

### இலகுவான தொடர்பாடல் (Two way Communication is the Key):

ஒரு வீட்டை விற்பதற்கோ அல்லது வாங்குவதற்கோ சம்பந்தப்பட்ட முகவருடன் தொடர்பு கொள்வது மிக இலகுவானதாக இருக்க வேண்டும். இத்தகைய செயற்பாடுகளின் போது இரட்டைவழிக் கருத்துப் பரிமாறல் உடனுக்குடன் செய்யவேண்டிய நிலை இருக்க வேண்டும்.

வீடு விற்கும்போது அல்லது வாங்கும்போது அச்செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கையில் பலவித கேள்விகள் அடிக்கடி வரச் சந்தர்ப்பம் இருக்கிறது. அதற்கான பதில் உடனுக்குடன் கிடைக்காவிட்டால் அத்தகைய பதில்களில் பலன் இல்லாமல் போய்விடும்.

நான் அனுபவத்தில் சந்தித்த பல முகவர்களுடன் தொடர்பு கொள்வதில் பல இடர்களைச் சந்தித்திருக்கிறேன். தொடர்புக்கு ஒன்றில் Text செய்தி மட்டும் அல்லது Email மட்டும்தான். பதிலுக்கு பல மணிநேரம் அல்லது சில நாட்கள் பொறுத்திருக்க வேண்டியிருக்கும். இத்தகைய சூழ் நிலையில் எப்படித் தரமான சேவையை வாடிக்கையாளருக்குக் கொடுக்க முடியும்.

எனவே ஒரு முகவரைத் தெரிவு செய்யும் போது உடனுக்குடன் இரட்டைவழித் தொடர்பாடல் ஏற்படுத்தும் நிலையில் முகவர் இருக்கிறாரா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டியது மிக அவசியம்.

### புதிய தொழில் நுட்பங்கள்:

பொதுவாக எல்லாத் துறைகளிலும் நாளாந்தம் தொழில்நுட்ப வளர்ச்சிகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இருக்கக் கூடிய குறிப்பிட்ட தொழில்சார்ந்த புதிய தொழில் நுட்பங்களை சாதாரண பொது மக்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. எனவே காலத்திற்குக் காலம் புதிதாக வரும் தொழில்நுட்பங்களை கற்று அறிந்து அவற்றின் மூலம் முதற்தரமான சேவையை வழங்கக் கூடிய முகவரைத் தேர்ந்து எடுப்பதன் மூலம் அதிக பலனைப் பெறலாம்.

ஒரு வீடு விற்பனை முகவர் தனது தொழிலைச் செய்வதற்கு பொதுவாக ஒரு தொலை பேசி, கணினி, தொலைநகல் இயந்திரம், Printer போன்றவற்றை வைத்திருப்பது அவசியம். ஆனால் மேற்குறிப்பிட்ட எதுவும் இல்லாமல் முகவராகப் பணியாற்றுபவர்கள் எல்லாச் சமூகத்திலும் இருக்கவே இருக்கிறார்கள். கைத்தொலைபேசி இல்லாமல் ஒரு முகவரா என்று பலரும் ஆச்சரியப்படலாம். ஆனால் கைத்தொலை பேசியே இல்லாத ஒரு முகவரூடாக நான் ஒரு வீட்டை விற்றுப் பட்டபாடு இன்னும் நினைவில் இருக்கிறது.

வீடு விற்பனை அலுவலகங்களுக்குச் சென்று அங்குள்ள வசதிகளையும் இயந்திரங்களையும் பாவிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அது தப்பே இல்லை. வீடு விற்பனைத் துறையில் நேரம் என்பதும் துரிதம் என்பதும் பலலட்சம் டொலர்களைத் தரக் கூடியவை என்பதை பல சந்தர்ப்பங்களில் எனது அனுபவரீதியாக உணர்ந்திருக்கிறேன். இது யாரும் மறுக்க முடியாத உண்மை.

பல முகவர்களிடமும் கைத்தொலைபேசி இருக்கும் ஆனால் அவர்களது இலக்கங்கள் விளம்பரப்படுத்தப்படாது இருக்கும். குறிப்பாக MLS Listing ஐ பார்த்தால் முகவரின் தொலைபேசி

இலக்கத்திற்குப் பதிலாக அவர்களது அலுவலக தொலை பேசி இலக்கமே போடப்பட்டிருக்கும். குறிப்பிட்ட முகவருடன் தொடர்பு கொண்டு உடனடியாக ஏதாவது தகவல் பெறவேண்டும் என்றால் அல்லது முடிவு எடுக்க வேண்டுமென்றால் அவலுவலக இலக்கத்துடன் தொடர்புகொண்டு செய்தியை விடவேண்டும் பின்னர் அலுவலகம் குறிப்பிட்ட முகவருக்குச் செய்தி அனுப்பி அதன் பின்னர் அவர் தொடர்பு கொண்டால் மட்டுமே பேசமுடியும். இதில் பல முகவர்கள் செய்திகளுக்குப் பதில் அளிப்பதே இல்லை, சிலர் காலம் கடந்து அழைப்பார்கள். அத்தகைய அழைப்புகளும் பதில்களும் சில வேளைகளில் பலனற்றவையாக போய்விடும். ஒரு சில முகவர்கள் மட்டும் உடன் அழைப்பார்கள். உரிய தகவல்களைப் பரிமாறுவார்கள். மாறாக ஒரு குறிப்பிட்ட முகவருடன் அவரது கைத்தொலைபேசி மூலம் உடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் எவ்வளவு இலகுவாக முடிவுகளை எடுத்து விடமுடியும் என்பதை அனுபவத்தில்தான் ஒருவரால் உணர்ந்து கொள்ள முடியும். எனவே ஒரு முகவரைத் தெரிவு செய்யும் போது அவரது பிரத்தியேகத் தொலைபேசி இலக்கம் எவ்வளவு தூரம் அணுகக் கூடியதாக உள்ளது என்பதையும் அவர் எவ்வாறு தனது தொடர்பாடல்களைப் பேணிவருகிறார் என்பதையும் நன்கு ஆராய்ந்து முடிவுகளை எடுங்கள்.

தொழில்நுட்பம் என்று கூறும்போது புதிய தொழில்நுட்பம் இல்லா விட்டாலும் சில அடிப்படைக் கூறுகளாவது கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஒரு முகவருக்கு ஓர் ஒப்பந்தத்தை தயார் செய்து அனுப்பினால், அது கைச்சாத்திடப்பட்ட பின்னர் திரும்பி வரும் போது அல்லது மாற்றங்கள் செய்து திரும்பி வரும் போது அவற்றை வாசிக்க முடியாத நிலை இருக்கும். இத்தகைய திருப்பி அனுப்பப்படும் ஒப்பந்தங்கள் 'சலவை செய்யப்பட்டவையா?' என்றுகூட சில வேளைகளில் நினைக்கத் தோன்றும். தொலைநகலில் திருப்பி அனுப்புவது, மின்னஞ்சலில் திருப்பி அனுப்புவது இவைதான் சாதாரண நடைமுறை. ஆனால், அவை ஏனோ முறையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. எல்லோரிடமும் 'Smart Phone' இருக்கும். இவற்றில் ஒரு சிறு Scan செய்யும் மென்பொருளை பதிவிறக்கம் செய்து வைத்திருந்து பயன்படுத்தினால் கூட தரமான பத்திரங்களைப் பரிமாற முடியும். குறிப்பாக ஒப்பந்தங்களை நிரப்பும் போதும் கைச்சாத்திடும்போதும் 'கறுப்பு' மை பேனாக்கள் பயன்படுத்தப்படவேண்டியது அவசியம். அது மட்டுமன்றி, ஒரு முகவர் தன்னிடம் தரமான தொழில் நுட்பம் இருந்த போதும் மறுபக்கம் இருக்கக்கூடிய மட்டமான தரங்களில் உள்ள முகவர்களின் சேவைகளையும் சமாளிக்கும் விதத்தில் செயற்படக் கூடிய முகவர்களை தெரிவு செய்தல் அதிக பலனளிக்கும்.

நீங்கள் ஒரு வீட்டை வாங்க அல்லது விற்க முற்படும்போது நீங்கள் இருப்பது ஒரு இடமாக இருக்கும், வேலை செய்யுமிடம் இன்னொன்றாக இருக்கும். அதேவேளை உங்கள் முகவர் இருப்பது வேறு ஒரு இடமாக இருக்கும். மிகவும் பரபரப்பான வாழ்க்கைமுறையில் சிக்கி ஓய்வு நேரமே இல்லாது ஓடிக்கொண்டிருக்கும் காலச் சூழலில் கிடைக்கக்கூடிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தினால் மட்டுமே வீடு சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைச் சிறப்பாகவும், சிரமமின்றியும் குறுகிய நேரத்தில் செய்யமுடியும். ஊதாரணமாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் போதும், கைமாறப்படும் போதும் விற்பனை செய்பவர்களையோ அல்லது வாங்குபவர்களையோ நேரில் சந்தித்து கைச்சாத்துப் பெறுவது வழமை. சம்பந்தப்பட்டவர்கள் வேலை முடிந்து வரும்வரை காத்திருப்பதும் அல்லது அவர்களைத் தேடி முகவர்கள் ஓடித்திரிந்து சந்திப்பதும் முன்னர் இருந்த நடைமுறைகள். தற்போதும் இதனையே பல முகவர்கள் பின் பற்றுகிறார்கள். ஆனால், இருந்த இடத்தில் இருந்த படியே 'Docu Sign' போன்ற நடைமுறை மூலம் சட்டரீதியான கைச்சாத்துக்களை கைத்தொலைபேசி மூலம் கூட சில நிமிடங்களில் செய்துவிட முடியும். இதன் மூலம் நேரத்தை மிச்சப்படுத்துவது மட்டுமல்ல பலவித ஏமாற்றங்களையும் தேவையற்ற சிரமங்களையும் தவிர்த்துக் கொள்ளலாம். எனவே ஒரு முகவரைத் தெரிவு செய்யும் போது இத்தகைய நடைமுறைகள் சாத்தியமா என்பதை முன் கூட்டியே அறிந்து கொண்டு செயற்படுவது பல விதத்தில் நன்மை பயக்கும்.

### விளம்பரங்களும் சிபாரிசும்:

ஒரு சிறந்த முகவரைத் தெரிவு செய்வதற்கு விளம்பரங்களை மட்டும் பார்த்து இறுதி முடிவெடுக்காமல் அவரைப்பற்றி உங்கள் நண்பர்கள் உறவினர்களிடம் விசாரித்து, அவர்களின் அண்மைக் கால அனுபவத்தின் அடிப்படையில் முகவர்களைத் தெரிவு செய்தல் பொருத்தமானது. தங்களது சுயநலங்களுக்காக சிபாரிசு செய்யக்கூடிய நண்பர்களையோ, உறவினர்களையோ இனங்கண்டு கொள்ளவேண்டிய பொறுப்பு உங்களுடையது. குறிப்பாக உங்கள் தேவை என்னவோ அதற்கேற்ற அனுபவம் பெற்றிருக்கக்கூடிய ஒருவரிடம் இருந்து சிபார்சினைப் பெற்று செயற்படுதல் பலனளிக்கும்.

### குறைவான தரகு (Low Commission):

குறிப்பாக ஒரு வீட்டை ஒருவர் விற்கின்ற போது குறைந்தளவு செலவில் விற்க முற்படுவது இயல்பு. பொதுவாக சந்தைப்படுத்தும் முகவருக்கு $2\frac{1}{2}$ வீதமும் வாங்கிக் கொடுக்கும் முகவருக்கு $2\frac{1}{2}$ வீதமுமாக தரகு முறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் போட்டியின் காரணமாக இந்த விகிதாசாரங்களைக் குறைப்பதில் விற்பவர்கள் குறியாக இருக்கிறார்கள்.

ஒரு வீட்டைச் சந்தைப்படுத்தும் போது அதற்கென ஒரு முகவர் பல செலவுகளைச் செய்து விளம்பரப்படுத்த வேண்டி இருக்கும். பல மணித்தியாலங்களைச் செலவிட வேண்டி இருக்கும். அது மட்டுமன்றி, குறிப்பிட்ட முகவர் அவர் சார்ந்திருக்கும் வீடுவிற்பனை நிறுவனத்திற்குரிய கட்டணங்களையோ அல்லது ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தையோ செலுத்த வேண்டியிருக்கும்.

எனவே, அளவுக்கதிகமாக தங்கள் கட்டணங்களைக் குறைக்கும் முகவர்கள் உரிய சேவைகளைக் கொடுக்கவே முடியாது. எனவே குறைந்த கட்டணத்தால் கவரப்படும் விற்பவர்கள் பலவித ஏமாற்றங்களைச் சந்திக்க வேண்டிவரும் என்பது தவிர்க்க முடியாதது. இது ஆரோக்கியமானதல்ல. குறைந்த கட்டணம் என்ற பெயரில் மட்டமான சேவைகளைக் தரக்கூடிய முகவர்களைத் தவிர்த்து சிறந்த, முறையான சேவைகளைத் தரக்கூடிய முகவர்களைத் தெரிவு செய்தல் அவசியமானது. உண்மையில் ஒரு வீட்டை உரியமுறையில் தயார் செய்து வாங்குபவர்கள் பலரது கவனத்தையும் உள்வாங்கக் கூடிய முறையில் சந்தைப்படுத்தும் போது சாதாரண சந்தை விலையைவிட அதிக விலைக்கு ஒரு வீட்டை விற்கமுடியும். முகவரின் தரகுக் கட்டணத்தை குறைப்பதால் வரும் இலாபத்தைவிட வீட்டை அதிக விலைக்கு விற்பதால் வரும் இலாபம் பன்மடங்காக இருக்கும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். சுருங்கக் கூறுவதானால் ஒரு நல்ல விலைக்கு ஒரு வீட்டை விற்கும் சந்தர்ப்பத்தில், மறைமுகமாக வாங்குபவரே விற்கும் முகவரின் தரகுக் கட்டணத்தையும் பொறுத்துக் கொள்கிறார் என்பது ஆழமாக சிந்திப்பவர்களுக்குப் புரியும்.

எனவே, ஒருமுகவரைத் தெரிவு செய்யும் போது குறைந்த கட்டணத்தில் மோகம் கொள்ளாது, சிறந்த சேவையையும் உங்கள் வீட்டிற்கு உச்சப் பெறுமதியையும் பெற்றுத்தரக்கூடிய முகவர்களைத் தெரிவு செய்யுங்கள்.

### பதிவு செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள்:

ஒரு முகவரைத் தெரிவு செய்யும் போது, அவருக்கு உரிய பகுதியில் விற்பனை அல்லது கொள்வனவு செய்ய அனுமதி உண்டா? பதிவுசெய்யப்பட்டவரா? என்பவற்றை முன்கூட்டியே அறிந்து கொள்ளுதல் நல்லது. விற்பனை அனுமதி பெற்றவர் ஒருவராக இருக்க, அதிகாரம் பெறப்படாத முகவரின் உதவியாளர்கள் பல இடங்களில் களத்தில் இருப்பதைக் காணமுடிகிறது. பிரச்சினை என்று வருகின்றபோது பலவித சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ள இவை வழிவகுக்கும்.

ஒருவருக்கு மாகாணரீதியான அனுமதிப் பத்திரம் இருந்தாலும் பிரதேச அடிப்படையில் சில கட்டுப்பாடுகள் இருக்கும். உதாரணமக Toronto Real Estate Boardல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு முகவர் Ottawa Real Estate board ல் பதிவு செய்யப்படாமல் இருக்கலாம். Kingston city இல் ஒருவர் ஒரு வீட்டை விற்கவோ அல்லது வாங்கவோ முற்படும்போது அந்த பிரதேசத்திற்குரிய Real Estate board இல் பதிவுசெய்யப்படாத ஒரு முகவரைத்தேர்ந்தெடுத்தால் பல

அசௌகரியங்களைச் சந்திக்க நேரிடும். எனவே இவற்றைக் கவனத்தில் எடுத்து முகவர்களைத் தெரிவு செய்தல் நன்று

**விருதுகள் பெற்ற முகவர்கள்:**

எந்தத்துறையிலும் ஒருவர் விருதுகள் பெற்றுக் கௌரவிக்கப்படுகிறார் என்றால் அவரது சேவையை அவர் சார்ந்த நிறுவனமோ அல்லது பொதுமக்களோ அங்கீகரித்து கௌரவிக்கிறார்கள் என்று தான் அர்த்தம். வீடு விற்பனைத் துறையிலும் வருடா வருடம் அதிக வீடுகளை விற்பனை செய்த முகவர்கள் ஒவ்வொருவித தர நிர்ணய அடிப்படையில் விருதுகள் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப் படுகிறார்கள். எனவே உயர் விருது பெற்றவர்கள் ஏற்கனவே அத் துறையில் திறம்படச் செயற்படுகிறார்கள் என்பது உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது.

மறுபுறம் அதி உயர் விருதகள் பெறும் முகவர்கள் அவரது துறையில் பரபரப்பாக இருப்பதால் தனிப்பட்ட கவனத்தை இழக்கும் சந்தர்ப்பமும் உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

**மதிப்பாய்வு (Review):**

தற்போதய சூழ்நிலையில் எதற்கு எடுத்தாலும் ஒரு பொருளை வாங்க முன்னரோ அல்லது சேவையைப் பெற முன்னரோ அவை பற்றி மதிப்பாய்வு செய்துவிட்டுப், பின்னர் அவற்றைப் பெற வாய்ப்பு உள்ளது. அந்த வகையில் ஒரு முகவரைத் தெரிவு செய்ய முன்னர் கணினியின் துணை கொண்டு அவரைப்பற்றி இலகுவில் ஆய்வு செய்து விடலாம். Google என்பது ஒரு அருமையான வழிகாட்டி. ஆனால் புரளிகளைக் கிளப்பி விட்டு அதனால் உருவாக்கப்படும் Trend மூலம் 'Youtube' போன்ற சமூக வலைத்தளயங்கள் ஊடாக அதிக பணம் சம்பாதிக்க முற்படும் ஒரு கூட்டமும் இருக்கின்றது என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

அது மட்டுமன்றி சமூக வலைத்தளங்களின் ஊடாக அவர்களது சுயவிளம்பரங்களுடன் சேர்த்து சில உள்ளார்ந்த பண்புகளையும் தொழில்சார் மதிப்பாய்வுகளையும் அறிந்து கொள்ளமுடியும்.

காலம் கடந்தபின், ஐயோ! இவரைப் பற்றி முதலில் தெரியாமல் போய்விட்டதே! என்ற ஏக்கத்தைத் தவிர்க்க இவை ஓரளவு வழி வகுக்கும்.

சுருங்கக் கூறுவதானால், மாற்று இனத்தவர்கள் செயற்படுவது போல அவர்களது சில பண்புகளை நாமும் பின்பற்றுதல் பலனளிக்கும். இந்தவகையில் அவர்கள் ஒரு முகவரைத் தெரிவு செய்வ தென்றால் குறைந்தது மூவரை நேர்முகப்பரீட்சை செய்வார்கள். பின்னர் தகுதி கண்ட ஒருவரைத் தெரிவு செய்வார்கள். நாங்களும் இத்தகைய நல்ல நடைமுறைகளைப் பின்பற்றலாம்.

ஏற்கனவே மேற்குறிப்பிட்டது போல உறவினர், நண்பர்கள், உடன் தொழில் புரிபவர்கள் என்ற உறவு நிலைகளைக் கடந்து, பல ஆயிரம் டொலர்கள் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை ஏற்றபடி முன்னெடுக்க உதவக் கூடிய சரியான முகவர்களைத் தெரிவு செய்வதிலேயே வாழ்நாளில் உங்களுக்கு ஏற்படக் கூடிய இலாபமும் நஷ்டமும் தங்கி உள்ளது.

வீடு விற்பனையின் போது வீட்டுப்பரிசோதனை, அடமானக்கடன் ஒழுங்கு, சட்டத்தரணி ஒழுங்கு, Moving, Staging, Professional Photography, Painting and handy man jobs எனப் பல்வேறு தேவைகளுக்கும் முகம் கொடுக்கவேண்டிய தேவை ஏற்படும். இவை எல்லாவற்றையும் சிறப்பாக ஒழுங்கு செய்யக்கூடிய முகவர்களைத் தேர்ந்து எடுத்துவிட்டால் எல்லாம் சிறப்பாகவும் மகிழ்வாகவும் நிறைவடைந்து நிம்மதியான வாழ்வும் கிடைக்கும்

சிந்தியுங்கள்! செயற்படுங்கள்!



velasubramaniam@thaiveedu.com



# பிரபஞ்சத் தொடக்கத்தை பின்நோக்கிப் பார்க்க முடியுமா?

- குரு அரவிந்தன்


‘பிரபஞ்சத்தைப் பின்நோக்கிப் பார்க்க முடியுமா?’ என்ற வாசகரின் கேள்விக்கான சிறிய விளக்கம் தான் இது. இது ஆன்மீகம் அல்ல, அறிவியல் விளக்கம். சுமார் 13,750 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ‘பிக்-பாங்க்’ எனப்படும் பெருவெடிப்பின்போது வாயுக்கள் உருவாகியபோது, அதில் உள்ள அணுக்கள் ஒன்றிணைந்து பிரபஞ்சமும், ஏனைய பொருட்களும் உருவானதாக அறிவியல் விளக்கம் தருகின்றது. ஒளியின் பயணம் பற்றியும், ஒலியின் பயணம் பற்றியும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். தமிழில் ‘ளி’ மற்றும் ‘லி’ என்ற எழுத்துக்கள் மாறும்போது இரண்டுவிதமான சொற்பதங்களைக் குறிப்பிடமுடியும். சிலர் இதில் சில சமயம் எழுத்துப் பிழை விடுவதால் அதன் அர்த்தமும் மாறிவிடும். தமிழில் இதுபோல இரண்டு எழுத்துச் சொற்கள் பல இருக்கின்றன. பல மாணவர்கள் எழுதும்போது இந்தப் பிழையை விடுவதால்தான் அதைப்பற்றி முதலில் குறிப்பிட்டேன். ஒளி என்றால் வெளிச்சம், ஒலி என்றால் சத்தம் என்று ஆரம்ப மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கின்றேன். இதற்கு வேறு அர்த்தங்களும் தமிழில் உண்டு. ஒளி, ஒலிக்கு நல்ல உதாரணம் மின்னலும், இடியும் என்று விளக்கமும் கொடுத்திருக்கின்றேன். மின்னலும், முழக்கமும் ஒரே இடத்தில் இருந்து ஒரே நேரத்தில் புறப்பட்டாலும், மின்னல்தான் முதலில் கண்ணுக்குப் புலனாகின்றது. அதன் பின்தான் இடி முழக்கம் கேட்கின்றது. இதற்குக் காரணம் மின்னலான ஒளி, முழக்கமான இடியின் ஒலியைவிட வேகமானது. பலருக்கு இது தெரிந்திருக்கும், ஆனால் விண்வெளி பற்றி அறிந்து கொள்ள விரும்பும் ஆரம்ப மாணவர்களுக்கான விளக்கம் மட்டுமே இது.

மார்ச் மாதம் தாய்வீடு பத்திரிகையில் வெளிவந்த ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி பற்றிய எனது கட்டுரையை வாசித்த தாய்வீடு பத்திரிகை வாசகர் ஒருவர் ஆர்வம் காரணமாக சில விளக்கங்கள் கேட்டிருந்தார். அதில் முக்கியமாகப் ‘பின்நோக்கிப் பார்த்தல்’ என்றால் என்ன?, எப்படி ஒரு தொலை நோக்கியால் அப்படிச் செய்ய முடியும்?, பிரபஞ்சத்தின் தொடக்கத்தை எப்படி அதனால் பார்க்க முடியும்?, என்பது பற்றி எல்லாம் கேட்டிருந்தார். பக்கக் கட்டுப்பாடு காரணமாக அதைப்பற்றி விபரமாகச் சென்றவாரம் எழுத வில்லை என்பதால் இம்முறை அவரது கேள்விக்கான விளக்கத்தைக் குறிப்பிடுகின்றேன். இந்தக் கட்டுரை விண்வெளி பற்றி ஆய்வு செய்பவர்களுக்காக அல்ல, சாதாரணமாக விண்வெளி பற்றி அறிந்து கொள்வதற்கான அறிமுகக் கட்டுரையே இது.

ஒரு யுத்தத்தில் ‘பின்நோக்கி’ என்பது தோல்வியின் ஆரம்பமாகவும் இருக்கலாம் அல்லது யுக்தியான ஒரு நகர்வாகவும் இருக்கலாம். விடுதலைப் போராட்டக் காலத்தில் இப்படியான நகர்வுகள் பலவற்றை நாங்கள் பார்த்திருக்கின்றோம். இங்கே ‘பின்நோக்கி’ என்பது காலத்தைக் கடந்து பின்நோக்கிப் பார்ப்பது. அது எப்படி சாத்தியமாகும் என்பதற்குத்தான் ஒளியின் வேகத்தைக் குறிப்பிட்டேன். விண்வெளியில் ஒளியின் வேகம்தான் முக்கியமாகக் கவனிக்கப்படுகின்றது. உதாரணமாக எங்களுக்கு அருகே இருக்கும் சந்திரனைக் காதலர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் அதிகம் வர்ணிப்பதுண்டு. அதன் ஒளி எங்கள் கண்ணில் படுவதால் பால்நிலா, தேன்நிலா, வெண்நிலா, புதுநிலா என்றெல்லாம் வர்ணிக்கின்றோம். உண்மையில் அது புதுநிலா அல்ல, சந்திரனில் இருந்து புறப்பட்ட வெளிச்சம் எங்கள் கண்ணில் படும் போது, 1.3 விநாடிகளுக்கு முற்பட்ட பழைய சந்திரனையே நாங்கள் பார்க்கின்றோம். காரணம் சந்திரன் சுமார் 239,000 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது. அதாவது அருகே உள்ள, கண்ணுக்குத் தெரியும் சந்திரனாக இருந்தாலும், 1.3 விநாடிகளுக்கு முற்பட்ட சந்திரனைத்தான் எங்களால் பார்க்க முடிகிறது. இதேபோலத்தான் பல கோடி மைல்களுக்கு அப்பால் உள்ள நட்சத்திரங்களின் வெளிச்சங்களைப் பார்க்கும் போது, நட்சத்திரங்கள் இருக்கும் தூரத்தைப் பொறுத்து பல வருடங்களின் பின்தான் அவற்றைப் பார்க்க முடிகிறது. இதைத்தான் ‘ஒளிவருடம்’ என்று சொல்கிறார்கள். ஒளி மிகவேகமாக - ஒரு விநாடிக்கு சுமார் 180,000 மைல்கள் வேகத்தில் நகர்கின்றது. அதனால்தான் ஒரு நட்சத்திரத்தைச் சென்றடைய எத்தனை ஒளி வருடங்கள் எடுக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். நாங்கள் இப்போது பார்க்கும் நட்சத்திரங்கள் பல கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டது. இப்போது அதில் சில நட்சத்திரங்கள் உடைந்து சிதறி இல்லாமற் கூடப் போயிருக்கலாம். எமக்கு அதைப்பற்றி இன்னும் தெரியாது, ஆனால் எங்கள் கண்ணுக்குத் தெரிவது நீண்ட காலத்திற்கு முற்பட்ட பழைய நட்சத்திரங்களே! அதாவது நாங்கள் பின்நோக்கிப் பார்க்கின்றோம் என்பதுதான் அறிவியல் தரும் விளக்கமாகும்.

நாங்கள் சூரியக் குடும்பத்தில் இருக்கின்றோம். சூரியனும் ஒரு நட்சத்திரம்தான் என்பது உங்களுக்கும் தெரியும். அதனால்தான் சூரியனின் ஈர்ப்புக்குள் நாங்கள் அகப்பட்டிருக்கின்றோம். இது போன்ற கோடிக்கணக்கான நட்சத்திரக் குடும்பங்கள் அண்ட வெளியில் இருக்கின்றன. நாங்கள் இப்போது தெரிந்து கொள்ள விரும்புவது என்னவென்றால், எங்களைப் போன்ற உயிரினங்கள், சூரியக் குடும்பத்தில் மட்டுமல்ல, எல்லையில்லாத அண்ட வெளியில் எங்கேயாவது இருக்கின்றனவா என்பது தான். அதற்கான முயற்சிகள்தான் அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் நடக்கின்றன.

எங்களுக்கு மிகக் கிட்ட இருக்கும் பால்வெளி நட்சத்திரக் கூட்டத்தில் உள்ள புரொக்சிமா செண்டோரி நட்சத்திரத்தை அடைய, ஒளியின் வேகத்தில் சென்றால் மட்டும் எங்களுக்கு நான்கு ஒளி யாண்டுகள் எடுக்கும். அது முடியாத காரியம், காரணம் ஒளியின் வேகத்தில் மனிதர் பயணிக்கக்கூடிய தொழில்நுட்பம் இதுவரை எங்களிடம் இல்லை என்பதே உண்மை. 2016ம் ஆண்டு வியாழனை நோக்கி அனுப்பப்பட்ட ஜுனோ விண்கோள்தான் இதுவரை மனிதரால் அனுப்பப்பட்ட விண்கோள்களில் விரைவானது. விநாடிக்கு 73.88 கிலோ மீட்டர் வேகத்தில் இது பயணித்தது. இதுவரை



கண்டறிந்ததில் 60 லட்சம் ஒளியாண்டைக் குறுக்களவாகக் கொண்ட ஐசி 1101 நட்சத்திர மண்டலங்களும் உண்டு. இவற்றுடன் ஒப்பிடும் போது 100,000 ஒளியாண்டுகளைக் குறுக்களவாகக் கொண்ட எமக்கு அண்மையில் உள்ள பால்வெளி ஒரு சிறிய புள்ளி அளவேயாகும். அந்த வகையில் நாங்கள் மிகக்கிட்டக் கண்ணுக்குத் தெரியும் நட்சத்திரத்தை பார்க்கும் போது, நான்கு ஒளிவருடத்திற்கு முற்பட்ட பழைய நட்சத்திரத்தைத்தான் பார்க்கின்றோம். இதைத்தான் 'பின்நோக்கிப்' பார்ப்பது என்று சொல்வார்கள்.

அண்டவெளி விரிந்து கொண்டே போவதால் எம்மைவிட்டு மிகவும் தொலைதூரத்திற்குச் சென்றுவிட்ட நட்சத்திரக் கூட்டங்களை எம்மால் காணமுடியாமல் போய்விட்டது. சூரியக் குடும்பம் போல, ஒவ்வொரு நட்சத்திரங்களுக்கும் குடும்பங்கள் இருக்கின்றன. இதுவரை நாங்கள் கண்டறிந்ததில், பெரிய நட்சத்திரக் கூட்டமான அன்ரோமீடா (Andromeda) சுமார் இரண்டரை மில்லியன் வெளிச்ச வருடங்களுக்கு அப்பால் இருக்கின்றது. இதைவிட மிகப்பெரிய நட்சத்திரக் கூட்டமான விர்கோ விண்மீன் திரள்கள் சுமார் 60 மில்லியன் வெளிச்ச வருடங்களுக்கு அப்பால் இருக்கின்றன. 'வெப் ஸ்பேஸ் ரெலஸ்கோப்' என்ற இணையத்தளத்தில் 'பின்நோக்கிப் பார்த்தல்' என்றால் என்னவென்று நல்லதொரு விளக்கம் கொடுத்திருந்தார்கள். 'உங்களுக்கு டைனஸோக்களை உயிரோடு பார்க்க விருப்பமானால், அங்கிருந்து, அதாவது அந்த நட்சத்திரங்களில் இருந்து மிகச் சக்திவாய்ந்த தொலைநோக்கியால் பூமியைப் பார்க்க முடியுமானால், எங்கள் பூமியில் டைனஸோக்கள் உலாவித்திரிவதைப் பார்க்க முடியும்.' என்ற விளக்கத்தில் இருந்து ஓரளவு 'பின்நோக்கிப் பார்த்தல்' என்றால் என்னவென்று உங்களுக்குப் புரிந்திருக்கும்.

இந்தப் பின்நோக்கிப் பார்த்தலைத்தான் இப்போது விண்வெளிக்கு அனுப்பியுள்ள ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கி செய்யப் போகின்றது. இந்தப் பிரபஞ்சத்தின் தொடக்கம் எங்கே என்பதைக் கண்டறிவதற்கான முயற்சிகளை அது மேற்கொள்ளப் போகின்றது. அதற்காகத்தான் அண்டவெளியை இலகுவாகக் கண்காணிக்கக்கூடிய இடமான, சுமார் ஒரு மில்லியன் மைல்களுக்கு அப்பால் சென்று சூரியனைச் சுற்றி வருகின்றது. தனது இருப்பை அங்கே நிலைநிறுத்திக் கொண்டதும் முதல் சில விண்வெளிப் படங்களை எடுத்து அனுப்பி இருந்தது. அதில் ஏழு படங்களை நாசா நிறுவனத்தினர் தெரிவு செய்து இணையத்தளத்தில் போட்டிருந்தார்கள்.


இந்தப் படங்களில் பிரபஞ்சத்தின் விளிம்பில் இருக்கும் நட்சத்திரக் கூட்டங்கள் நிறைந்த என்ஜிசி 4710 நட்சத்திரங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இன்னுமொன்று லுமினொஸ் சிகப்பு நட்சத்திரக் கூட்டத்தையும் படம் பிடித்திருக்கின்றது. இன்னுமொன்று 33,000 வெளிச்ச வருடங்களுக்கு அப்பால் இருக்கும் எண்ணுக் கணக்கற்ற நட்சத்திரங்களைக் கொண்ட என்ஜிசி 6779 நட்சத்திரக் கூட்டங்களைப் படம் பிடித்திருக்கின்றது. பிறிதொரு படத்தில் மிகவும் பிரகாசமாக வட்டமாகச் சுற்றியிருக்கும் நட்சத்திரங்களுக்கு நடுவே தனது காலத்தை முடித்துக் கொள்ளும் நட்சத்திரத்தையும் படம் பிடித்திருக்கின்றது. இந்த நட்சத்திரம் மிகவும் பிரகாசமாகத் தெரிவதால் ஒரு கட்டத்தில் வெடித்துச் சிதறலாம் என்றும் ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர். தொலைநோக்கி எடுத்த இன்னுமொரு படம் ஏசிஓஎஸ் 295 நட்சத்திரக் கூட்டத்தைக் காட்டுகின்றது. இன்னுமொரு படம் 270 மில்லியன் ஒளிவருடங்களுக்கு அப்பாற்பட்ட என்ஜிசி 4907 நட்சத்திரக் கூட்டத்தைக் காட்டுகின்றது. பிரபஞ்சத்தின் ஆரம்ப காலத்தை நோக்கிய நகர்வில் இடையே தென்பட்ட நட்சத்திரங்களை ஜேம்ஸ் வெப் படம் பிடித்திருக்கின்றது. இந்த ஜேம்ஸ் வெப்பின் வெற்றியைத் தொடர்ந்து இனி ஆய்வாளர்கள் எங்கெல்லாம் பின்நோக்கிப் பார்க்க வேண்டுமோ, அவற்றைத் தேர்ந்தெடுத்துக் குறிப்பிட்ட சில நட்சத்திரங்களை ஆய்வு செய்வார்கள்.

இதுவரை காணாத, நினைத்தும் பார்க்காத புதிய நட்சத்திரக் கூட்டங்களை ஜேம்ஸ் வெப் கண்டறிந்து அவற்றின் படங்களை அனுப்பி இருக்கின்றது. நிச்சயமாகக் கோடிக்கணக்கான இந்த நட்சத்திரக் கூட்டங்களில் எங்கேயாவது உயிரினங்கள் இருக்கலாம், அல்லது உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கலாம் என்றுதான் விண்வெளி ஆய்வாளர்கள் நம்புகின்றார்கள். 68 மில்லியன் ஒளியாண்டுகளுக்கு அப்பால் உள்ள என்ஜிசி 1385 நட்சத்திரக் கூட்டத்தை தொலைநோக்கி படம் பிடித்திருக்கின்றது. 350 ஒளியாண்டுகளுக்கு அப்பால் உள்ள யுஜிசி 2665 நட்சத்திரக் கூட்டம், 5 மில்லியன் ஒளியாண்டுகளுக்கு முற்பட்ட சுப்பநோவா என்று சொல்லப்படுகின்ற நட்சத்திரம், புதிதாக உருவாகிய நட்சத்திரங்களையும் என்ஜிசி 2276 நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையே கண்டு பிடித்திருக்கின்றது. புதிதாக உருவாகிய இந்த நட்சத்திரங்கள் எங்கள் கண்ணுக்குப் புலப்படாது, காரணம் அந்த நடசத்திரங்களின் வெளிச்சம் எங்களை வந்தடைய இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளாகலாம்.

சென்ற மார்ச் மாதம் 11ம் திகதி மிகவும் தொலைதூரத்தில் உள்ள, அதாவது 2000 ஒளியாண்டுகளுக்கு அப்பால் உள்ள நட்சத்திரத்தை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி எந்த ஒரு தடையுமில்லாமல் மிகத் துல்லியமாகப் படம் பிடித்திருப்பதாக நாசா நிறுவனம் அறிவித்திருந்தது. ஒரு ஒளியாண்டு என்பது சுமார் அறுநூறாயிரம் கோடி மைல்களைக் குறிக்கும். இதில் உள்ள 18 தங்கக் கண்ணாடிகளும் ஒரே நட்சத்திரத்தை வெவ்வேறு கோணங்களில் படம் பிடித்துக் குவியமாகக் காட்டக்கூடியதாக அமைக்கப்பட்டிருக்கின்றது. வருகின்ற யூன் மாதம் தொடக்கம் ஒரு கோடி மைல்களுக்கு அப்பால் இருக்கும் இந்தத் தொலைநோக்கி முழுமையாகச் செயற்படத் தொடங்கும். கடந்த 20 வருடங்களாகப் பலராலும் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட இந்தத் தொலைநோக்கி இப்போது எதிர்பார்த்த பலனைத் தரத்தொடங்கி இருக்கின்றது. இந்தத் தொலைநோக்கியின் 'பின்நோக்கிப் பார்க்கும் திறனைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.


**உசாத்துணை:**

- https://www.nasa.gov/press-release/nasa-s-webb-reaches


kuruaravindan@thaiveedu.com

# கோலங்கெடும்...

- வேதநாயகம் தபேந்திரன்

'விளாத்தியடிப் பக்கம் ஒருக்காப் போட்டு வாறன்' கனகன் தனது மனைவி லட்சுமிக்குச் சொல்லி விட்டு அவளின் பதிலை எதிர்பாராமல் விறுவிறு-வென நடந்தான்.

'உந்த மனுசன் உந்த வெய்யில் எல்லாம் காய்ஞ்சு உழைச்ச காசை... ஊதாரியாச் செலவழிக்கப் போகுது' லட்சுமி தனக்குள் புறுபுறுத்துக் கொண்டாள். ஆனாலும், அவளுக்குத் தெரியும் தனது புருசன் கனகனை மாற்ற முடியாதென. சீல் சாராயத்தைக் குடித்து ஈரல் கீரல் கருகுவதை விட கள்ளுத்தானே, பிரச்சினை யில்லையென மனதுக்குள் நினைப்பாள்.

விளாத்தியடிக் கொட்டிலுக்குப் போன கனகன் தனது பெயரில் உறுதி எழுதப்படாத பிளாவை எடுத்தான். சில்லறையைப் பொறுக்கி இரண்டு ரூபா எடுத்துக் கொடுக்கக் கள்ளு அளக்கும் சாந்தன் ஒரு போத்தல் பனம் கள்ளை அளந்து பிளாவினுள் ஊற் றினான்.

அதைப் பக்குவமாகப் பிடித்துக் கொண்டு ரேஸ்ற் கடை வைத் திருந்த சின்னவனிடம் ஐம்பது சதம் கொடுக்க அவன் முறுகப் பொரித்த சூடை மீன் ஒன்றைக் கொடுத்தான்.

கனகன் தனது கூட்டாளிகள் இருந்த பக்கமாகப் போய் ஓர் ஓர மாகக் குந்தினான். அவனது குரல் வளம் விளாத்தியடிக் கொட்டி லில் விலாசமானது. அவன் வந்த உசாரில் கூட்டாளிகள் பாட்டுக் கச்சேரியை உசாராகத் தொடங்கினார்கள்.

'என்னை யாரென்று எண்ணி எண்ணி நீ பார்க்கிறாய். இது யார் பாடும் பாடலென்று நீ கேட்கிறாய்...', 'அடி என்னடி ராக்கம்மா பல்லாக்கு நெளிப்பு என் நெஞ்சு குலுங்குதடி...' எனப் பாடல்கள் பட்டையைக் கிளப்பியது.

இந்தச் சந்தோசச் சாம்ராச்சியத்தை ரசிப்பதற்கென்று மௌனசா மிகள் சிலர் கள்ளும் பிளாவுமாகக் காத்திருப்பார்கள்.

அதிகாலை நித்திரை விட்டெழுந்து தோட்ட வேலைக்குப் போய் மண்வெட்டி பிடித்து மாடாக உழைத்துக் களைத்த கனகனைப் போன்றவர்களுக்கு அந்த ஒரு போத்தல் பனங்கள்ளும் பாட்டும் உடல் துன்பத்தை மட்டுமல்ல, மனதின் துன்பத்தையும் போக்கி யது.

கையில் எப்படித் தான் காசுப் புழக்கம் இருந்தாலும், யாரும் ஓசி யில் தந்தாலும்கூடக் கனகன் சீல் சாராயத்தைக் குடிக்க மாட் டான். ஒரு முறை கனகனின் கூட்டாளி மயிலன் என்ன மச்சான் ஒருக்காச் சீல் சாராயத்தை இழுத்துப் பாரன். உச்சம் உசார் ஏறு மென்றான்.

மச்சான் கள்ளுக் குடித்தால் எங்கட காசு எங்களிட்ட இருக்கும். சாராயம் குடித்தால் எங்கட காசு வெளிநாட்டுக்குப் போகும். எங் கட ஆக்களின்ர வருமானத்தை உயர்த்த வேணும். சீல்ச் சாரா யத்தைக் குடித்து விட்டு குடல் கருகிச் சாவதைவிட உடலை வருத்தாத கள்ளு நல்லது. அதுக்காகத்தான் நான் சீல் சாராயத் தைக் குடிப்பதில்லை என்பான்.

விளாத்தியடிக் கொட்டிலின் பாட்டுக் கச்சேரி முடியக் கனகன் வீட் டுக்குச் சென்றான். மனைவி லட்சுமியின் கைப் பக்குவத்தில் குத்த ரிசிச் சோறும் கிளக்கன் மீன் குழம்பும், முருங்கை இலை வறை யும் இருந்தது. வயிற்றுப் பசி போக்க நன்றாகச் சாப்பிட்டான். வீட் டின் முன்திண்ணையில் பாயைப் போட்டுக் கொண்டு இரண்டு மணித்தியாலம் மெய் உறக்கமொன்று கொண்டான்.

மாலைப்பட முகத்தைக் கழுவிக் கொண்டு கொக்கத் தடியை எடுத்துக் கொண்டு செல்லையர் வளவுப் பக்கம் போனான். குழை களை உருவிக் கொண்டு ஆடு, மாடுகளுக்குப் போட்டான். கனக னின் பிள்ளைகள் மூன்று பேரும் சின்ன மாவடிப் பள்ளிக் கூட வளவில் விளையாடி விட்டு வந்திருந்தனர்.

கிணற்றடியில் போய்க் குளித்துவிட்டு, சாமி கும்பிட்டுவிட்டுத் தமது பாடப் புத்தகங்களை எடுத்துப் படிப்பில் கவனம் செலுத் தினார்கள்.

கனகன் தனது உடல் அலுப்பைப் போக்காட்டுவதற்கு நாளாந்தம் பனங்கள்ளைக் குடித்தாலும் மனைவி பிள்ளைகள், வீடு வளவு மீது அக்கறை அதிகம். நாலு வழியில் வருமானம் உழைத்தால் தான் முன்னேறலாமென மனைவி லட்சுமியுடன் பாடுபட்டு உழைப் பான்.

லட்சுமியும் கடும் சிக்கனவாதி. புருசன் உழைத்துத் தரும் காசில் ஒன்பது ரூபா மிஞ்சினால் ஒரு ரூபா போட்டுப் பத்து ரூபாவாக் கிச் சேமித்துக் கொள்வாள். சீட்டுப் பிடித்துக் காசைப் பெருக்கிக் கொள்வாள். குடும்பத் தேவைகள், நகை நட்டு போன்றவற்றைக் கவனித்துக் கொள்வாள்.

காலங்கள் மெல்ல மெல்ல ஓடியது. நாட்டின் கோலங்களும் மாறி யது. அமைதியாகக் கழிந்த காலங்கள் அமைதி இன்றி ஓடியது.

கனகனின் பிள்ளைகள் மூவரும் படிப்பில் கவனம் செலுத்தினார் கள். பிள்ளைகள் வளர்ந்து வர கனகனும் விளாத்தியடிப் பக்கம் பகிரங்கமாகப் போவதை நிறுத்தினான். குயிலப்பா வீட்டுப் பக்க மாக மாலைப்படப் போய் ரகசியமாக ஒரு போத்தல் கள்ளை ஒரு மிடறில் இழுப்பான். ஓசை படாமல் தனது வீட்டுப் பக்கம் போய் ஆளரவமின்றி நித்திரை கொள்வான்.

கனகனின் மூத்த இரு ஆண் பிள்ளைகளும் படிப்பில் கரை சேர்ந்து உத்தியோகம் பார்த்தார்கள். கடைக் குட்டியான மகள் அளவோடு படிப்பை நிறுத்திக்கொண்டாள்.

நாள்கள் ஓடின. வாரங்களாகின, மாதங்களாகின, ஆண்டுகளா கின. நாட்டின் நிலைமைகளும் மாறிக் கொண்டே போனது.

போர் மேகங்கள் சூழ்ந்த வாழ்வில் கொழும்பிலிருந்து சாராயம் வருவதை முற்றாகத் தடுக்காவிட்டாலும் உள்நாட்டில் ஊக்குவித் தார்கள். பொருளாதாரம் உயர்த்தும் திட்டங்களையெல்லாம் செய் தார்கள்.

உள்நாட்டுப் பனங்கள்ளைக் காய்ச்சி விகார் எனும் பெயரில் ஒரு வகைச் சாராயமொன்று சந்தைக்கு வந்தது. பியருக்குப் பதிலாக றொண்டியா எனும் பெயரில் உற்பத்தியாகியது. அது போலச் சில்வர் பீம் எனும் பெயரிலும் ஒரு சாராயம் வந்தது.

விகார் சாராயத்தை மயிலன் ஒரு முறை வாங்கிக் குடித்தான்.

ச்சா... சீல் சாராயமென்றால் அடிச்சவுடன கிக் ஏறும். உது என்ன வெண்டால் அடிச்சு முக்கா மணித்தியாலம் போனப்புறம் தானே உசார் ஏறுது... எனக் கூறிக் கவலைப்பட்டான்.

சீல் சாராயத்துக்குப் பதிலாக ஒளித்து ஒளித்துக் கசிப்புக் காய்ச்சினார்கள். பார்த்தால் பச்சத் தண்ணீர் போல இருக்கும். அடித்தவுடன் உச்சக் கட்டத்துக்குக் கிக் ஏறும். அதனால் கிபிர் என்று ஒரு பட்டப் பெயரை வைத்தார்கள். வெட்டிரும்பு, பானவெடி என ஊருக்கு ஊர் பெயர்கள் மாறின.

கிபிர் என்றொரு குண்டுவீச்சு விமானம் திடீரெனக் குண்டு வீசி விட்டுப் பறந்ததால் 'கிபிர்' எனும் பெயரும் பொருத்தமாக இருந்தது.

மயிலன் ஒருநாள் கிபிர் அடித்து விட்டு உச்ச வெறியில் 'உலகே



மாயம், வாழ்வே மாயம்' எனப் பாடிய போது, 'பெடியள்' வந்து பிடித்து விட்டார்கள்.

அவர்கள் போட்ட பச்சை மட்டைப் போடலில் தனக்குக் கிபிர் கிடைத்த வழியைக் கூறிவிட்டான்.

பெடியள் ஊரின் ஒதுக்குப் புறமான பற்றை பறுகுப் பக்கம் போய் வளைத்துப் பிடித்து விட்டார்கள். கசிப்புக் காய்ச்சும் பாத்திரம் பண்டங்களையெல்லாம் உடைத்து நொருக்கினார்கள்.

தாம் வறுமை காரணமாகத்தான் கசிப்புக் காய்ச்சியதாகக் கூறினார்கள். பெடியளும் அவர்கள் சொந்தக் காலில் உழைத்து வாழக் கூடிய வழி வகைகளை ஏற்படுத்தினார்கள்.

தரைவழிப் பாதையால் தென்பகுதிக்குப் போய் வருபவர்கள் சாராயப் போத்தல்களைக் கொண்டு வருவதைத் தடை செய்தார்கள்.

இதனால் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் பாஸ் எடுத்துப் போகும் சிலர் அங்கு தமது தாகத்தைத் தணித்துக் கொண்டார்கள்.

நிலைமை திடீரென்று மாறியது. நிலப் பரப்பை ஆட்சி செய்த மனிதர்கள் மாறினார்கள். தரைவழிப் போக்குவரத்துப் பாதை தடைப்பட்டது. கப்பல்களில் உணவுப் பொருள்கள், கடிதங்கள் என யாவும் வந்தது.

பொருள்களின் விலைவாசிகள் கப்பல் பிந்தப் பிந்தக் கூடும். கப்பல்களில் வரும் சாமான்களில் உணவுப் பொருள்கள் கீழ் தட்டில் கிடந்தாலும் கூட சாராயப் போத்தல்கள் மேல் தட்டில் வரும். அதனை முதலாவதாக இறக்கிப் பெருங்குடி மக்களின் தாகம் தீர்த்தார்கள்.

லைசென்ஸ் இருந்தும் வியாபாரம் குறைந்திருந்த சாராயக் கடைகள் எல்லாம் திரும்பத் திறந்து கொண்டன. கூடவே புதுப்புது லைசென்சுகள் எடுத்துப் புதுக்கடைகளையும் திறந்து கொண்டார்கள்.

எத்தனைதான் வந்தாலும் கள்ளுக் கொட்டில்கள் வெற்றி நடை போட்டன.

வெளிநாட்டுப் புலம் பெயர்வும் காசு வருகையும் ஆள்கள் வருகையும் கூட ஆள்களின் பழக்க வழக்கத்தை மாற்றத் தொடங்கியது.

காசு மெத்திய குணத்தால் சாராயம் குடிப்பவர் தொகையும் கூடக் கூடக், கள்ளுக் கொட்டில்கள் வயோதிபர் மடம் என்ற நிலையை எட்டியது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சுகாதாரக் கொள்கைக் கெடுபிடி காரணமாக மீன் பொரியல், வடை, இரத்தவறை போன்ற உணவுகளை விற்ற 'ரேஸ்ற் கடை'க்காரர்கள் தொழிலைக் கைவிட்டார்கள்.

சமாதான காலமென நாலு வருசம் வந்தது. தரைவழிப் பாதையும் இருதரப்புச் சம்மதத்துடன் திறக்கப்பட ஆள்களின் புழக்கங்களும் கட்டடங்களின் நிர்மாணங்களும் அதிகரித்தன. வாழ்க்கைக்கோலங்களும் மாறின.

மீண்டும் போர் மேகங்கள் சூழ்ந்தன. தரைவழிப் பாதை தடைப்பட்டது. திடீரென ஒரு நாள் நிசப்த அமைதி வந்தது.

சத்தங்கள் இல்லாத வாழ்க்கையில் சந்தோசங்களும் இருந்தன. சங்கடங்களும் இருந்தன.

சத்தங்கள் நின்ற விதம் சந்தோசத்தைத் தரவில்லை. ஆனாலும் கூட சத்தங்கள் இல்லாத வாழ்க்கையை வரவேற்றார்கள்.

கனகன் முதுமையிலும் உறுதி தளராத மனிதனாக இருந்தான். மாலைப்பட்டவுடன் குயிலப்பாவிடம் போய் வரும் பழக்கத்தை அவன் விடவில்லை.

இருட்டு நேரம் ஒரு நாள் வரும் போது பெடியள் சிலர் ரின்களில் வாயை வைத்து உறிஞ்சுவதைக் கண்டான். கனகனைக் கண்டவுடன் ஒதுங்கி ஓடினார்கள்.

கிட்டப் போய்ப் பார்த்தான். தகர ரின்களும் கடலை சாப்பிட்ட சொப்பிங் பைகளும் மிச்ச சொச்சங்களும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. அந்த ரின் ஒன்றை எடுத்துக் கொண்டு போய் மயிலனிடம் காட்டி உது என்னவெனக் கேட்டான். மயிலன் பியர் என்றான்.

குடிப்பதைச் சமூக அந்தஸ்துக் குறைவாகப் பார்த்த ஒரு மக்கள் கூட்டத்தில் ஆளரவம் குறைந்த இடங்களில் ஆங்காங்கே குடிப் போரும், குடித்து விட்டு வீதியோரங்களில் ரின்களையும் போத்தல்களையும் எறிவதையும் பார்த்துக் கவலைப்பட்டான்.

உள்ளூரில் உழைத்து உயர்ந்த உழைப்பாளிக் குடும்பங்களது தொகையும் குறைந்து போனது. தென்பகுதி மதுபானங்கள் தாராளமாக விற்பனையாகத் தறிகெட்டுப் போகும் சமூகத்தைக் கண்டு கவலைப்பட்டான்.

நாட்டிலேயே அதிக மதுபானப் போத்தல்கள் விற்கும் மாவட்டம் என்ற பெயரைக் கேட்ட போது கனகன் கவலையால் வாடியே போனான்.



thabendran.v@thaiveedu.com

# தடம் மாறிய பழமொழிகள்

- சி. நற்குணலிங்கம்

பழமொழிகள் நம் முன்னோர்கள் நமக்கு அளித்த அருஞ்சொல் வளங்கள். தமிழ் மொழியில் பல்லாயிரம் பழமொழிகள் உள்ளன. அவை மக்கள் எமக்கு நல் வழி காட்டுவன. வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவன. அவற்றைப் போற்றிப் படிப்பதும், பேணிப் பாதுகாப்பதும் எல்லோரதும் கடமையாகும். எமது பண்டைய செய்யுள் நூல்களிலும், உரைநடை நூல்களிலும் அதிகமான பழமொழிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. கூறும் கருத்துக்கு ஆதாரமாகவும், உதாரணமாகவும், காட்டப்படுவதுமான கருத்தொடர் பழமொழியாகும். இதனை பழைய மொழி, பழகிப்போன மொழி எனப் பலவாறும் அழைத்தனர். இவற்றுக்கு இலக்கணம் கிடையாது. பழமொழிகள் காலத்தின் கண்ணாடிகள். அவை தோன்றிய காலத்து நிகழ்வுகளை வெளிக்காட்டி உள்ளன. பல ஆண்டுகளாக நம் சமுதாயத்தில், பண்பாட்டில் உருவான அனுபவங்களை, கருத்துக்களை, எண்ணங்களை, வாழ்க்கை முறைகள், நம்பிக்கைகள், ஆழமான பற்றுக்கள், உளவியல் நிலைகள், பொருளாதார நிலைகள் முதலியனவற்றை எதிரொலிப்பனவாக பழமொழிகள் விளங்குகின்றன. இவை நாலு வார்த்தைகளில் உண்மைகளை, நீதிகளைக் கூறுகின்றன. ஆழமாக ஊன்றிச் சிந்தித்தால்தான் அதன் பயன் புரியும். மேலெழுந்தவாரியாகப் பார்ப்போமானால் ஏதோ ஓர் அர்த்தம் தோன்றும். அது பழமொழியின் கருத்தாகிவிட முடியாது. அதன் பெருமையை நாம் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். அத்தகைய பெருமை மிக்க பழமொழிகளை தடம் மாறிச் செல்ல அனுமதிக்கக் கூடாது. ஆனால், பழமொழிகள் ஒரு காலகட்டத்திலிருந்து இன்னொரு காலகட்டத்துக்கு மாறப்படும்போது பாதை மாறி பயணம் செய்யவும் தவறவில்லை என்பது புரிந்துள்ளது. அது உற்று நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தடம் மாறிய பழமொழிகள் பல...

***கல்லைக் கண்டால் நாயைக் காணோம்.***
***நாயைக் கண்டால் கல்லைக் காணோம்.***
இது தடம் மாறிய பழமொழி.

சரியான பழமொழி
***கல்லைக் கண்டால் நாயகனைக் காணோம்.***
***நாயகனைக் கண்டால் கல்லைக் காணோம்.***

கல்லால் செதுக்கப்பட்ட கடவுள் சிலையை கல்லாகப் பார்த்தால் அங்கே கடவுளைக் காணமுடியாது. கடவுளாகப் பார்த்தால் கல்லைக் காணமுடியாது.

***ஆயிரம் பொய் சொல்லி***
***ஒரு கல்யாணத்தைப் பண்ணு.***
இது தடம் மாறிய பழமொழி.

சரியான பழமொழி
***ஆயிரம் பேரிடம் போய்ச் சொல்லி***
***ஒரு கல்யாணத்தைப் பண்ணு.***

அதாவது, உற்றார், உறவினர், நண்பர்களுக்கு ஆயிரம் தடவை போய்ச் சொல்லி கலியாணம் செய்.

***படிச்சவன் பாட்டைக் கெடுத்தான்***
***எழுதுனவன் ஏட்டைக் கெடுத்தான்***
இது தடம் மாறிய பழமொழி.



சரியான பழமொழி
***படிச்சவன் பாட்டைக் கொடுத்தான்,***
***எழுதுனவன் ஏட்டைக் கொடுத்தான்.***

***ஆயிரம் பேரைக் கொன்றவன்***
***அரை வைத்தியன்***
இது தடம் மாறிய பழமொழி.

சரியான பழமொழி
***ஆயிரம் வேரைக் கொன்றவன் (மூலிகை வேரை)***
***அரை வைத்தியன்.***

***நல்ல மாட்டுக்கு ஒரு சூடு.***
அதாவது, நல்ல மனிதராக இருந்தால் ஒரு தடவை சொன்னதுமே புரிந்து நடப்பார். இது தடம் மாறிய பழமொழி.

சரியான பழமொழி

***நல்ல மாட்டுக்கு ஒரு சுவடு.***
அதாவது, மாடு பதிக்கும் தடம் சுவடு. அழுத்தமான சுவட்டைப் பதிக்கும் மாடே அதிக பலம் வாய்ந்தது. சுவட்டைப் பார்த்தாலே மாட்டின் பலம் புரியும். சந்தையில் மாட்டை வாங்கும் போது இது கவனத்தில் எடுக்கப்படும்.

***அற்பனுக்கு வாழ்வு வந்தால்***
***அர்த்த ராத்திரியில் கொடை பிடிப்பான்.***
இது தடம் மாறிய பழமொழி.

சரியான பழமொழி
***அர்ப்பணித்து வாழ்ந்து வந்தால்***
***அர்த்த ராத்திரியிலும் கொடை கொடுப்பான்.***

***ஆனைக்கொரு காலம் வந்தால்***
***பூனைக்கொரு காலம் வரும்***
இது தடம் மாறிய பழமொழி.

சரியான பழமொழி
***ஆநெய்க்கு ஒரு காலம் வந்தால்***
***பூநெய்க்கு ஒரு காலம் வரும்***
அதாவது, ஆநெய் - பசு மாட்டு நெய். பூநெய் - தேன். பசு மாட்டு நெய்யுக்கு உடம்பு பெருக்கும். தேனுக்கு உடம்பு குறையும். இரண்டுக்கும் காலம் வரும்.

*பாத்திரம் அறிந்தி பிச்சையிடு.*
இது தடம் மாறிய பழமொழி.

சரியான பழமொழி
***பாத்திறம் அறிந்து பிச்சையிடு.***
அதாவது, புலவர்களும் பாணர்களும், அரசர்களையும் வள்ளல்களையும் புகழ்ந்து பாடி பொருளுதவி (பிச்சை) பெற்று வாழ்க்கை நடத்தினர். அந்தச் சூழ்நிலையில் அவர்களின் பாடும் திறமை அறிந்து அதற்கு ஏற்றாற்போல் பொருளுதவி செய்யப்பட்டது.

***வாக்கத்தவன் வாத்தியார் வேலைக்குப் போ,***
***போக்கத்தவன் போலீஸ் வேலைக்குப் போ***
இது தடம் மாறிய பழமொழி.

சரியான பழமொழி
***வாக்குக் கற்றவன் வாத்தியார் வேலைக்குப் போ,***
***போக்குக் கற்றவன் போலீஸ் வேலைக்குப் போ.***

***சோழியன் குடுமி சும்மா ஆடாது***
இது தடம் மாறிய பழமொழி.

சரியான பழமொழி
***சோழியன் குடுமி சும்மாடு ஆகாது.***
அதாவது, சும்மாடு என்பது தலையில் சுமக்கும்போது தலையில் அண்டாமல் சுமை தாங்க பயன்படும் பொருள். குடும்பி வளர்ந்தாலும் சும்மாடு போல் ஆகாது.

மக்களிடையே நீண்ட காலமாக வழங்கி வரும் பெறுமதியான பழமொழிகளை சிலர் தாம் நினைத்தவாறு அதனை தம் எண்ணத்துக்கு ஏற்றால் போல் மாற்றி அமைக்கிறார்கள் அவ்வாறு மாறும் போது அவை தடம் மாறிய பழமொழிகள் எனக் கொச்சைப்படுத்தப்படுகின்றன. நம் முன்னோர்கள் நம் நல்வாழ்வுக்காக சொல்லிவைத்த பழமொழிகளை நாம் பிறரை குறை கூறவோ, அல்லது பிறர் பழமொழிகளைக் குறை கூறவோ இடமளிக்கக் கூடாது.

எப்படி இருந்த பழமொழிகள்
இப்படி ஆயிடிச்சே.



natkunalingam@thaiveedu.com

DEBT FREE CREDIT SOLUTION
Seeking freedom from DEBT?
We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca

# முதியோர் வாழ்வியல் ஒரு கண்ணோட்டம்

- த. சிவபாலு

யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள பேராசிரியர் குகபாலன் அவர்கள் அண்மையில் எழுதிய சமூகவியல் சார்ந்த ஓர் ஆய்வுநூல், முதியோரின் இருப்பும் இழப்பும் பற்றியதாக அமைந்துள்ளது. புவியியற்றுறைப் பேராசிரியராகப் பணியாற்றிய அவர் புவிசார்ந்த நிலைமைகளைத் தனது அனுபவப் பார்வையினூடு மிக ஆழமாகப் பதித்த ஒரு படைப்பாக, 2020ல் வெளிவந்துள்ளது.

*'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு'*

என்பதற்கேற்ப அவரது நூலை வாசித்த போது எனக்கு ஏற்பட்ட வியப்பும் அனுபவமும் விபரிக்கமுடியாதவை. சமூகத்தின் கடந்த கால, நிகழ்கால அனுவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்ட முதியோர் பற்றிய இந்த நூல், ஒன்பது இயல்களைக் கொண்டு 220 பக்கங்களில் பதிவாகியுள்ளது. நாம் வாழும் போது இந்தச் சமுதாயத்திற்கு என்ன செய்தோம் என்பதனை எடுத்துக்காட்டும் நல்லதோர் ஆய்வுப்பரப்பு. இன்று முதியோர் உலகம் விரிந்து பரந்து செல்கின்றது. அனுபவ ஆற்றல் கொண்டவர்கள் மட்டுமல்ல தமது குடும்பத்திற்கும், தாம் வாழும் சமூகத்திற்கும் தமது இரத்தத்தை உதிர்த்தவர்கள், மூப்புக்காலத்தில் கைவிடப்பட்டு அனாதைகளாக நிர்க்கதிக்குள்ளாகும் நிலைக்குச் சமூகம் தள்ளிவிடக்கூடாது என்னும் கருப்பொருள் இளையோடியுள்ளது. வளர்முக நாடுகளில் முதியோருக்குக் கிடைக்கும் நல்ல வாழ்வியல், இலங்கை போன்ற நாடுகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது இவ்வரியபடைப்பு. முதியோரின், சிறப்பாக தமிழர் சமுதாயத்தில் வாழ்வியல் வரலாற்றுப்போக்கில் எவ்விதம் மாற்றம் கண்டு வந்துள்ளது என்பதனை எடுத்துக்காட்டி, முதியோரைப் பராமரிக்கும் பொறுப்பிலிருந்து பிள்ளைகளும் உறவினர்களும் தவறக்கூடாது என்பதனையும் கருத்திலெடுத்து ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளமை இந்த நூலின் சிறப்பு. இந்து நூலின் உள்ளே பின்வரும் இயல்களில் ஆராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமை வாசகர்களுக்கு உண்மைத் தன்மையைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

- முதியோர் யார்?
- பூகோள ரீதியில் குடித்தொகைப் பண்புகளின் மாற்றங்களும் வயதடைதலும்.
- கொரோனா வைரஸ் தொற்றும் முதியோர்களும்.
- முதியோர் நோய்களும் துஸ்பிரயோகங்களும்.
- இலங்கையில் குடித்தொகைப் பண்புகளும் முதியோர் வாழ்வும்.
- இலங்கைத் தமிழரும் அவர்தம் முதியோரும்.
- முதியோரும் முதியோர் இல்லங்களும்.
- ஆய்வுக்கு உட்பட்ட முதியோர் இல்லங்கள்.
  - கைதடி முதியோர் இல்லம்.
  - சிவபூமி முதியோர் இல்லம்.
  - சாந்தோம் முதியோர் இல்லம்.
  - லில்லி தலவாழ்வு இல்லம்.
- முதியோர் நலன் காக்க.

இவ்வாய்வுப் பரப்பு இலங்கையோடு மட்டும் மட்டுப்படுத்தப்படாது ஐ.நா.வின் தகவல்கள் உலக ரீதியில் எவ்விதம் இடம்பெறுகின்றன என்பனவற்றோடு, இந்தியா உட்பட, உலக நாடுகள் சிலவற்றையும் எடுத்துக்காட்டுகளாகக் காட்டப்பட்டுள்ளமை, ஆய்வுப் பொருளுக்கு வலிமையாக அமைந்துள்ளமையை வாசகர்கள் காணமுடியும்.


இந்நூல்...
***நூலெனப்படுவத நுவலுங் காலை***
***முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்***
***தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி***
***உண்ணின் றகன்ற உரையொடு புணர்ந்து***
***நுண்ணிதின் வளக்கல் அதுவதன் பண்பே.***

என்னும் வரையறைக்கேற்ப ஆக்கப்பட்ட ஒரு நூலாகக் கொள்ள முடிகின்றது. வாசகருக்கு புரியாத மொழியில் எழுதுவதைவிட அவரால் இலகுவாக வாசித்து அறிந்துகொள்ள முடியுமானால் அதுவே ஒரு படைப்பின் வெற்றியாகும். பேராசிரியர் கா. குகபாலன் இதற்கு முன்னரும் சில நூல்களை எழுதி வடமாகாண கலாச்சார அமைச்சின் சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றுக் கொண்டவர். இந்த நூலுக்கும் 2021ம் ஆண்டுக்கான சிறந்த நூலுக்கான விருது கிடைத்துள்ளது. எனவே நூலின் உள்ளே மேலெழுந்த வாரியாக வாசகர்களுக்கான ஒரு கண்ணோட்டத்தைத் தருவதாக அமைகின்றது இக்கட்டுரை.

## முதியோர் யார்?

முதியோருக்கான வரைவிலக்கணம் காலத்திற்குக் காலம் நாட்டிற்கு நாடு மாறுபட்டுவருவதற்கான காரணிகள் பற்றிய ஆய்வு இத்தலைப்பில் தரப்பட்டுள்ளது. 'முதியோர் வயதடிப்படையில் 60 வயதிற்கு மேலுள்ளவர்களை அழைக்கும் வழக்கமிருப்பினும் சில சந்தர்ப்பங்களில் அதில் பொருந்தா நிலையையும் காணமுடிகின்றது. 50 வயதிலேயே முதுமைக்கோலம் கொள்பவர்களையும் 80 வயதிலும் இளைஞர்போல் வாழ்பவர்களையும் நம்மிடையே காண முடிகின்றது' எனக்கூறும் அவர், முதியோர் யார் என்பதற்கு 'வயதால் முதுமையடைந்தவர்கள் - அதாவது உடல், உள ரீதியில் தளர்ச்சியடைந்தவர்களைக் குறிப்பிடலாம்' என பென்சில்வேனியக் குடித்தொகைக் கல்வி நிலையத்தைச் சேர்ந்த Lin Jian என்பவர் தெரிவிக்கின்றார் என, அவரது ஆய்வினைத் தனது கூற்றுக்கு ஆதாரமாக்கியுள்ளார். குடித்தொகை மாறலில் முதியோரின் அதிகரிப்பும் அதற்கான தேவைகளும் அதிகரித்துச் செல்வது பற்றியும் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் நிலைபற்றியும் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. மனித உடலமைப்பு, மருத்துவ சுகாதார, வாழ்வியல் பழக்கவழக்கங்கள் என்பன மனித வாழ்வினை நீடிப்பதாக இருக் கும் அகப்-புறக் காரணிகளைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. அதன் மூலம் முதுமையடைந்த நிலையில் எவ்வித பழக்கவழக்கங் களை மேற்கொள்ளவேண்டும், உணவுப் பழக்கவழக்கம், உடல் உள ஆரோக்கியத்தின் தேவை

பற்றிய மருத்துவவியல் கருத்துக் களைத் தந்து அவற்றை முதியவர்களும் முதியவர்களோடு தொடர்புடைய ஏனையோரும் பின்பற்றக்கூடிய வழிவகைகள் தரப் படுவது, இந்நூலின் நோக்கத்தைத் தொட்டுச் செல்வதனைக் காணமுடிகின்றது. சமுதாயத்திற்கு முதியோர் ஒரு பெரும் சொத்து என்பதனைக் கட்டுரையின் இறுதிப்பகுதியில் வலியுறுத்தியுள்ளமை யும் அவர்கள் பிள்ளைகளுக்குச் சுமையானவர்கள் அல்லர், சமூகத்திற்கும் நாட்டிற்கும் தேவையானவர்கள், அரும்பணியாற்றியவர்கள் என்பது ஆழமாகப் பதிவிடப்பட்டுள்ளது. இலங்கையில் இளைப்பாறும் வயது 57 என வரையறுக்கப்பட்டபோதும் 60 வயது வரை சேவை நீடிப்பு வழங்குவது பற்றியும் குறிப்பிட்டுள்ளதோடு, உடல் உள நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த வய தெல்லை மேலும் நீடிக்கப்படுவதனையும் தந்துள்ளார். அனுபவ ஆற்றல் மிக்க முதியோரின் சேவை உலகநாடுகளில் அதிகரித்துச் செல்வதோடு அச்சேவையின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து ஓய்வூதியக் காலத்தை அதிகரித்துச் செல்வதனை வளர்ந்த நாடு




களான கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தரவுகளைத் தந்து ஒப்பிடப்பட்டுள்ளமை கண்கூடு.

## பூகோளரீதியில் குடித்தொகைப் பண்புகளின் மாற்றங்களும் வயதடைதலும்:

அண்மைக்காலத்தில் முதியோரின் வாழ்க்கைக்காலம் அதிகரித்துள்ளமை பொருளாதார நோக்கர்களால் விமர்சனத்திற்குள்ளாவதையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார். குடித்தொகைக் கல்வி தொடர்பான விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் 17ம் நூற்றாண்டிலிருந்தே பலம் பெறத்தொடங்கின என்பதனை எடுத்துக்காட்டி, குடித்தொகைப் பண்புகள் பற்றி உலக நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாளர்களின் முயற்சிகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. குடித்தொகைக் கல்வி உலகநாடுகளில் முக்கியத்துவம் பெற்றுவருவதையும் மால்தூஸின் அபாய அறிவிப்பையும் உலக நாடுகள் கருத்திற்கொண்டுள்ளமையையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

முதியோரின் வாழ்வியல் பற்றிய வரலாறு இங்கு மிகச்சுருக்கமாக தரப்பட்டுள்ளது. முதியோரின் சராசரி வாழ்வு அதிகரித்துச் செல்வதனால் ஓய்வூதியம், சுதந்திரம், பராமரிப்பு, அரசியல், வருமானம் போன்ற முதியோரின் பல்வேறு தொடர்புகளைச் சுட்டிக்காட்டிச் செல்கின்றது ஆய்வுப்பரப்பு.

முதியோர் ஆடம்பரச் செலவுகளைச் செய்யமாட்டார்கள் என்பதனால், பொருளாதார உற்பத்திக்கு, அவர்கள் பங்களிப்புக்கான நிதிமூலமாக அமையமாட்டார்கள் என்பதும், அரசாங்கம் அதிகளவு மருத்துவ, வதிவிட செலவுகளைச் செய்யவேண்டி ஏற்படும் என்பதையும் ஆராய்வதாக அமைகின்றது. முதியோர் பற்றி இரு முனை நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்த்துள்ளார். நீண்டகாலம் வாழும் முதியவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரிப்பதனால் உழைப்போரிடமிருந்து கூடியளவு வரியைப் பெற்றுக் கொள்ளவேண்டிய நெருக்கடிக்கு அரசாங்கங்கள் உட்படவேண்டிய கட்டாய நிலையும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## கொரோனா வைரஸ் தொற்றும் முதியோர்களும்:

இந்நூல் எழுதப்பட்ட காலத்தில் உலகத்தை உலுக்கிக் கொண்டிருந்த கொரோனாத் தொற்றுநோயின் விளைவுகள் பற்றி ஓர் இயலில் ஆராயப்பட்டுள்ளது. மருத்துச் செலவின் எதிர்பாராத அதிகரிப்பு உலகில் உள்ள அனைத்து நாடுகளையும் பாதித்துள்ளமையை, தக்க தகவல்களைத் திரட்டித்தந்து தனது பதிவிற்கு பக்கபலமாக்கியுள்ளார். தனியே முதியோர் பிரச்சினை மட்டுமன்றி அது ஒரு சமூக, அரசியல் பிரச்சினையாக உருவெடுத்துள்ளமை ஆராயப்பட்டுள்ளது. இந்த நோயின் பக்கவிளைவுகள் உற்பத்திப் பாதிப்பு, வருமான இழப்பு என்பன, உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றிய நிலைமைகளுடன் ஒப்பீட்டு ரிதியாகத் தரப்பட்டுள்ளன. 2019ல் இந்த நோய் பரவத்தொடங்கியதிலிருந்து இந்நூல் எழுதப்பட்ட காலம் வரையான நோய்ப்பரம்பல் தரவுகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி இந்தநோய் உள்நோக்கத்தோடு பரப்பப்பட்ட ஒரு நோயா என்னும் ஐயத்தைத் துணிந்து குறிப்பிட்டுள்ளமை கருத்திற்கொள்ளத்தக்கது.

முதியோர் பற்றிய இந்த நூலில், குழந்தைகளின் இறப்பு, விபத்துக்களால் இறப்பு, சத்துணவில்லா ஏழ்மையால் உயிரிழப்பு போன்றவற்றையும் யுனிசெப் நிறுவனத்தின் ஆதாரத்தோடு ஆராயப்பட்டுள்ளது. மலேரியா, டெங்கு, மஞ்சள்க்காமாலை போன்றவற்றால் இறப்போர் தொகை, இந்தியா, இலங்கை போன்ற பிரதான தொற்றுக்கு உட்பட்ட நாடுகளின் பட்டியலுடன் விளக்கமும் தரப்பட்டுள்ளது. வரலாற்றில் மனித குலத்தை குலைநடுங்க வைத்த பிளேக்(Plaug), கறுப்பு மரணம்(Black Death), அம்மை(small box), வாந்திபேதி(cholerae), எயிட்ஸ்(HIV/AIDS), போன்ற வைரஸ் தொற்றுக்கள் பற்றியும் அவை காவுகொண்டுள்ள உயிர்த்தொகைகள் பற்றியும் தரவுகளைத் தந்து வியக்க வைக்கின்றது இந்நூல். நாடுகளை எடுத்துக்காட்டாக்கி ஆராயப்பட்டுள்ளது. இந்தியாவில் மட்டும் ஆண்டொன்றுக்கு விபத்துகளால் 150,000க்கும் மேற்பட்டவர்கள் இறப்பதாகவும், மலேரியாவில் இலங்கையில் ஆண்டுதோறும் 3,000 பேர் இறப்பதாகவும் வளிமண்டல மாசடைதலால் சீனாவில் ஆண்டொன்றிற்கு 1100,000 பேர் இறப்பதாகவும் தகவல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இன, மத மோதல்கள், வளிமண்டல மாசடைதல், சூழல் மாசடைதல் என்பவற்றையும் மனித உயிர்களைக் காவுகொண்டுள்ள தரவுகளையும் தாங்கி நிற்கின்றது அவரது ஆய்வுப்பரப்பு. ஈழத்தில் 1970ல் ஆரம்பித்த ஈழவிடுதலைப் போராட்டத்தினால் இறந்தவர்களின் தொகையையும் அறியத்தருகின்றது இந்நூல்.

## முதியோர் நோய்களும் துஸ்பிரயோகங்களும்:

மூப்படைவதால் வரும் நோய்த் தொல்லைகள் பற்றிய மருத்துவ அறிக்கைளை ஆதாரமாகக் கொண்டு பல்வேறு தகவல்கள் திரட்டித் தரப்பட்டுள்ளன. உடல், உளத்தைப் பாதிக்கும் காரணிகள் மட்டுமன்றி முதியோரைப் பாதிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக சமூகக்காரணிகளும் தரப்பட்டுள்ளது. பக்கவாதம், நீரிழிவு, மாரடைப்பு, அறிவுத்திறன் வீழ்ச்சி, எலும்புத் தேய்மானம், புறஸ்ரேற் (சிறுநீரகச் சுரப்பி) விரிவடைதல், உதறு வாதம் (உடல்நடுக்கம் - Parkinson's), மலச்சிக்கல், புற்றுநோய், கண், காது, பல் வியாதிகள், அறளைபேர்தல் (dementia) போன்ற முதுமைக்கால நோய்களைப் பற்றிய விளக்கங்களோடு முதுமைக்காலத்திற்கான உணவு வகைகளில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் பற்றியும், குறிப்பாக நீரிழிவு, எலும்புத் தேய்மானம் ஆகியவற்றிற்கான உணவு வகைகளும் பராமரிப்புகளும் பற்றியும் அறிவுறுத்துகின்றது.

முதியோர் துஸ்பிரயோகம், உடல்-உள-பாலியல் உணர்வுநிலை, அலட்சியப்படுத்துதல், கவனிக்காமல் கைவிடப்படல், அவர்களின் பணத்தைக் பிள்ளைகளும் உறவினர்களும் கையாடுதல் போன்ற பல்வேறு நிலைமைகளும் விரிவாகவும் தெளிவாகவும் ஆராயப்பட்டுள்ளது.

## இலங்கையில் குடித்தொகைப் பண்புகளும் முதியோர் வாழ்வும்:

குடித்தொகைப் பண்புகளை, பண்டைய ஆட்சியியல் வரலாற்றோடு தொடர்புடைய பண்புகளைத் தொட்டுச்செல்லும் ஆய்வா

ளர் தமிழ், சிங்கள மன்னர்கள் இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்தமையும் தென்னிந்தியப் படையெடுப்புகள் இடம்பெற்றமையும் அவை குடித்தொகையில் ஏற்படுத்திய மாற்றங்களையும் காட்டியுள்ளார். மலேரியா, கொலறா (வாந்திபேதி) போன்றவற்றால் பெருந்தொகையான மக்கள் இறந்திருக்கவேண்டும் என்பதனையும், 19ம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட மருத்துவ வாய்ப்புக்கள் தொற்றுநோய்களின் தாக்கத்தைப் படிப்படியாகக் குறைத்திருக்க வேண்டும் என்பதனையும் எடுத்துக்காட்டுகிறது. கல்வி வாய்ப்புகள் -குறிப்பாக 1945ல் ஏற்படுத்தப்பட்ட கட்டாய இலவசக்கல்வி என்பன வாழ்வியலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியமையும் அது குடித்தொகைப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தியமையும் ஆராயப்பட்டுள்ளது.

ஆயுள் எதிர்பார்ப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், 1960இன் பின்னர் முதியோரின் தொகையில் கணிசமான அளவு அதிரிப்பு ஏற்பட்டுள்ளமை அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. 1901ல் இருந்து 2016 வரையான பிறப்பு, இறப்புவீதம் குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் தரப்பட்டுள்ளமை குடித்தொகையில் முதியோரின் பங்கு அதிகரிப்பைக் காட்டிநிற்கின்றது.

'2016ம் ஆண்டு குடிப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பிரகாரம் 60 வயதிற்கு மேற்பட்டவர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் பௌதிக ரீதியிலான செயற்பாட்டு பிரச்சினைகளினாலும் அரைப்பங்கிற்கு மேற்பட்டோர் உடல்வலு மற்றும் உளநலத்தால் பாதிக்கப்படுபவர்களாகவும் ஏறத்தாழ 45 சதவீதத்தினர் தொற்றா நோய்க்குள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது' என்பதனைப் பதிவிட்டதோடு, ஆண் முதியோரின் இறப்பு அதிகரிப்பதால் பெண்கள் விதவையாதல், தனிமை வாழ்க்கை, வருவாயின்மை போன்றவையும் பதிவாக்கப்பட்டுள்ளன.

## இலங்கைத் தமிழரும் அவர்தம் முதியோரும்:

இவ்வியலில் முதுமைப் பருவத்தில் பிள்ளைகளின் பராமரிப்பிலும் பிள்ளைகள் வெளிநாட்டில் வாழும் நிலையில் முதியோர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், முதியோர் இல்லங்களில் தங்கி வாழும் முதியோர்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. இவற்றுள் எழுத்தாளரின் நேரடி அனுபவமும் ஆய்வும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாரம்பரியமாக முதியோர்களைப் பிள்ளைகள் பராமரித்துப் பேணிவந்த தமிழர் வாழ்வியல் பின்நோக்கி நகர்த்தப்பட்டு, அவற்றை வாசகர்கள் அறிந்துகொள்ளும்வாய்ப்பும் தரப்பட்டுள்ளது.

வீட்டில் இருக்கும் முதியோர்கள் பிள்ளைகளுக்குப் பாரமாக அன்றி அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து உதவுவதனைக் காணமுடியும். இன்றைய பொருளாதார சமூகமாற்றங்கள் முதியோரின் தேவைகளைப் புறத்தொதுக்கும் நிலைமைக்கு ஆளாகியுள்ளமை இருப்பினும், இன்றுவரை அவர்களின் மரணத்தின் பின்னரான இறுதிக்கிரியைகளை பிள்ளைகள் நிறைவேற்றும் நிலை தொடர்வதனையும் சுட்டிக்காட்டியுள்ளது. வடமாகாணத்தில் உள்ள முதியோர்களின் நிலைகுறித்தும் வன்னிப்பிரதேசத்து நிலை குறித்தும் தனித்துவமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது.

## முதியோரும் முதியோர் இல்லங்களும்:

சமூக-பொருளாதார விரைவான மாற்றங்கள், அரசியல் நிலைமைகள், 1970க்குப் பின்னரான விடுதலைப் போராட்டங்கள் முதியோரின் வாழ்வியலைப் பாதித்துள்ளமை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. போராட்டத்தின் விளைவாக நாட்டைவிட்டு அதிகளவான இளைஞர்கள் வெளியேறிய போதும் பெரும்பாலான முதியோர் தங்கள் இடங்களிலேயே வாழத் தலைப்பட்டமையால் முதுமையின் தனிமை அவர்களை வாட்டுவதனையும் அவர்களின் பராமரிப்பு கேள்விக்கிடமாக மாறிவிட்ட நிலைமையையும் அவதானித்துள்ளமை கட்டுரையில் பதிவாகியுள்ளது. இதன் காரணமாக முதியோரைப் பராமரிக்கும் பணியாட்களின் தேவை அதிகரித்துள்ளமையோடு முதியோர் இல்லங்களும் பல்வேறு இடங்களில் தோற்றம் பெற்றுள்ளமையும் கருத்திற்கொள்ளப்பட்டு அவற்றின் நிலைமைகள் பற்றிய தகவல்களும் தரப்பட்டுள்ளன. வடமாகாணத்தில் கைதடி முதியோர் இல்லமே நீண்டகாலமாக இயங்கிவந்துள்ளது. இவைபற்றியும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் அரச முதியோர் இல்லமாக 'சாந்தி முதியோர் இல்லம்' குறிப்பிடப்படுகின்றது. இதனைவிட, ஏனைய தனியாரால் அல்லது ஆலயங்களால் பராமரிக்கப்படும் முதியோர் இல்லங்கள் 13 உள்ளதாக தகவல் பதிவாகியுள்ளது. பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்கள் செல்லச்சந்நிதி, திருக்கேதீஸ்வரம் போன்ற அன்னதான சத்திரங்கள் உள்ள இடங்களுக்குச் சென்று அங்குள்ள மடங்களில் தங்கி வாழ்ந்துவந்துள்ளனர். ஆனால், போராட்டக்காலத்தில் யாழ் மாவட்டத்தில் இருந்து மக்கள் வெளியேறிய போது இவை அனைத்தும் செயலிழந்து வெறிச்சோடிக் காணப்பட்டமை உலகறிந்த விடயம்.

## ஆய்வுக்கு உட்பட்ட முதியோர் இல்லங்கள்:

ஆய்வாளரின் கவனத்திற்கு உட்படுத்தப்பட்ட முதியோர் இல்லங்களின் வசதிகள், மருத்துவ பராமரிப்பு, உணவு, பொழுதுபோக்கு என்பன பற்றிக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இம் முதியோரில்லங்களின் பராமரிப்புக்கான நிதி எவ்விதம் கிடைக்கின்றது என்பதும், அவை யாரால் பரிபாலிக்கப்படுகின்றன என்பதும் கருத்திற்கொள்ளப்பட்டள்ளன.

கைதடி முதியோர் இல்லம், சிவபூமி முதியோர் இல்லம், சாந்தோம் முதியோர் இல்லம், லில்லி தலவாழ்வு இல்லம் என்பன தனித்தனியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையும், அவற்றின் செயற்பாடுகள் பதிவாக்கப்பட்டுள்ளமையும், அந்நிலையங்களுக்கு ஆக்கபூர்வமான நிதிப்பங்களிப்பினை பொது நலன் விரும்பிகள் தாமே முன்வந்து தருவதற்கும் வெளிநாட்டில் உள்ளவர்கள் உதவுவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## முதியோர் நலன் காக்க:

இறுதியாக, முதியோரின் நலன் காக்க புலம்பெயர்ந்து வாழும் சமூகம் உதவும் முகமாக, இரண்டாம் உலகமகாயுத்தத்தின்போது ஐரோப்பாவில் ஏற்பட்ட அனர்த்தங்கள், அகதி முகாம்களில் தஞ்சமடைந்தவர்களுக்கு பொதுநலத் தொண்டு நிறுவனங்கள் மருத்துவ, உணவு, தங்குமிட வசதிகளைச் செய்து பாதுகாத்தது போன்று, இன்றும் முதியோருக்கான இல்லங்கள் வளர்ச்சியடைந்த நாடுகளில் நல்ல தரத்தில் பராமரிக்கப்படுவது போன்று, இலங்கையிலும் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற நோக்கில், முதுமைக்காலத்தில் அவர்கள் ஓய்வாக மட்டுமன்றி பொழுதுபோக்குக்கான சாதனங்கள், முதியோர் கல்வி நிலையங்கள் என்பனவற்றின் அவசியம் பற்றி வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்படும் நிலைமைகளுடன் ஒப்பு நோக்கப்பட்டுள்ளது.

முதியோர் இல்லங்களுக்கு வருகை தருவோர், பணியாளர்கள் என்போர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய தன் அவசியத்தையும் உணர்த்துகின்றது இவ்வியல்.

இந்நூலின் இறுதியில் ஆய்வுக்கான 51 உசாத்துணைகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை இந்த நூலின் நம்பகத்தன்மைக்கு கட்டியம் கூறுகின்றது.

ஓய்வு நிலையில், தனது முதுமைப்பருவத்தில், ஏனைய முதியோர்கள் பற்றிக் கவனம் செலுத்தியதோடு, அவர்கள்மீது செலுத்தப்பட வேண்டிய கவன ஈர்ப்பை இந்தநூல் பெற்றுக்கொள்ள உழைத்துள்ளார் இதன் ஆசிரியர் என்பது வெளிப்பாடு. தானும் இந்தச் சமூகத்தில் ஒருவர் என்ற உணர்வோடு, முதியோர்கள் படும் துன்பங்கள், இடர்கள், உள - உடல் உபாதைகளால் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி மிகச் சிறப்பாகவே கவனம் செலுத்தி, மற்றவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்த இந்த எழுத்து, காலத்தின் தேவை கருதி எழுதப்பட்டது என்பது வாசிக்கும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் தோன்றும் என்பதில் ஐயமில்லை.

வடமாகாணக் கலாச்சார அமைச்சு பாராட்டியது போன்று நாமனைவரும் அவரைப் பாராட்டுவது மிக அசியமானதும், அவரை மேலும் சமூகம் சார்ந்து சிந்திக்கத் தூண்டுவதாக அமையும் என்பதனையும் மனங்கொள்வோமாக.



sivapalu@thaiveedu.com


# ஒஸ்லோவில் ‘தவேந்தல்’

# நினைவேந்தலும் நூல் வெளியீடும்

- என். சரவணன்

உலகில் விடைபெற்று மறைகிறவர்கள் எல்லோரும் மகான்களாக மறைவதில்லை. மகான்கள் பிறப்பதில்லை. சமூகத்தில் அவர்கள் ஆற்றிவிட்ட உயரிய பாத்திரங்களால் தான் மகான்கள் ஆக்கப்படுகிறார்கள். அவர்களே மகான்களாக அறியப்படுகிறார்கள். தவேந்திரன் அப்பேர்பட்ட ஒரு மகானாகவும், முன்னுதாரணராகவும் வாழ்ந்து, தான் சார்ந்த உலகுக்கு கடன் இல்லாத மனிதனாக விடைபெற்றுச் சென்றிருக்கிறார்.

அப்பேர்பட்ட மனிதனுக்கு அந்த உலகம் செய்யும் கைமாறு, அவரை நினைவு கூருவதும், அவரை முன்னுதாரணமாகக்




கொண்டு அப்பணிகளை விட்ட இடத்தில் இருந்து தொடர்வதுமே.

தவேந்திரன் 1962ல் பிறந்தவர். புற்றுநோய் தாக்கி சில மாதங்களே ஆன நிலையில் கடந்த ஜனவரி 21ம் திகதி ஒஸ்லோவில் காலமானார்.

தவேந்திரன் மறைந்த 30ம் நாளன்று, பெப்பிரவரி 20ம் திகதி அவருக்காக ஒஸ்லோ மாநகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வு ஒரு முன்னுதாரண நிகழ்வாக அமைந்திருந்தது. அந்த நிகழ்வில் அவரின் நினைவாக ஒரு நினைவு மலரொன்றும் வெளியிடப்பட்டது. மண்டபம், நிறைந்து வழிந்திருந்தது.

தமிழ்ச் சூழலில் இப்படியான நினைவேந்தல் நிகழ்வுகளை சமய, சம்பிரதாய நிகழ்வோடு சம்பந்தப்படுத்தி நடத்தும் வழக்கம் உண்டு. அதில் இருந்து வெகு சில நிகழ்வுகள் தான் நினைவேந்தலை பிரக்ஞைபூர்வமான, உளப்பூர்வமான நிகழ்வாக நடத்தப்படுகின்றன. அப்படி எடுத்துக்காட்டான நிகழ்வாக இதனை ஏற்பாடு செய்திருந்தார்கள் அவரின் நண்பர்கள். அவரின் நண்பர்கள் எனும் போது அவரின் வாழ்நாளில் பல்வேறு பொதுப்பணிகளில் பணியாற்றிய நிறுவனங்களும், செயற்பாட்டாளர்களும், அவரின் ஊரான அரியாலையைச் சேர்ந்தவர்களும், அவரின் குடும்பத்தினரோடு சேர்ந்து அந்த நிகழ்வை ஒரு சிறந்த நினைவு கூறல் நிகழ்வாக நிகழ்த்தி முடித்தார்கள்.

இதில் நோர்வே தமிழ்ச் சங்கத்தின் பாத்திரம் மிகவும் முக்கியமானது. கடந்த எட்டு வருடங்களாக தவேந்திரன் தமிழ்ச்சங்கத்தின் செயற்பாடுகளில்தான் அதிக நேரத்தையும், உழைப்பையும், சக்தியையும் செலவழித்து வந்தார். தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகளிலும், அமைப்பு ரீதியிலான மாற்றங்களும் இந்த இடைக்காலத்தில் பாரிய வளர்ச்சி கண்டிருந்தது.

இந்த நிகழ்வில் உள்ள இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால் மிகக் கச்சிதமான நிகழ்ச்சி அமைப்புகள். அறிவிப்பாளர்கள் என்று எவரும் இடையில் குறுக்கிட்டு விளக்கிக்கொண்டிருக்கவில்லை. முதலில் கலாநிதி சர்வேந்திரா தனது உரையையும் பின்னர் நிகழ்வைப் பற்றிய ஒரு அறிமுகத்தை வழங்கிவிட்டு ‘இனி வரும் நிகழ்ச்சிகள் அத்தனையும் நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி அவரவர் அந்தந்த ஒழுங்கில் வந்து நிகழ்த்துவார்கள் என்று கூறி அமர்ந்தார். அதனைத் தொடர்ந்து அடுத்த நிகழ்வுக்கான மேடை அமைப்புகளை ஒரு சில செக்கண்டுகளில் மாற்றுவதற்கு அங்கே ஒழுங்கமைப்பாளர்கள் காத்திருந்தார்கள்.

இப்படி நிகழ்த்தப்பட்டபோது உணர்வுபூர்வமான பேச்சுகளும், கலை நிகழ்வுகளும் அதன் ஆழமான சோக உணர்வு மாறாமல் அப்படியே நிகழ்வு முழுவதும் பேணப்பட்டது.

இறுதியில் இந்த நிகழ்வு திட்டமிடப்பட்டிருந்த நேரத்தை விட சில நிமிடங்களுக்கு முன்னரே முடிவு பெற்றது. வழமையாக எந்த நிகழ்வையும் திட்டமிட்ட நேரத்தைவிட அதிகமான நேரத்தை எடுக்கும் என்பதே பொதுவான ஏற்பாட்டாளர்களின் கணிப்பாக இருப்பதுண்டு. இந்த நிகழ்வு கச்சிதமாகவும், அதன் பெறுமதியில் உயர்ந்ததாகவும் இருந்ததுடன் வேளைக்கு முடிக்கப்பட்டது சிறந்த அனுபவமாக இருந்தது.

நிகழ்வின் ஆரம்பத்தில் தவேந்திரனின் மூன்று புதல்விகளுமான, ஜீவந்தி, திஷாந்தி, துஷாந்தி ஆகியோர் உருக்கமான நினைவுகளை உரையாக நிகழ்த்தினார்கள். பின்னர் மூத்த புதல்வி ஜீவந்தி அப்பாவைப் பற்றிய ஒரு பாடலைப் பாடினார். அப்பாடலுக்கு பின்னணி இசையை ரவிக்குமார் வேலாயுதம் வழங்கியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து பலர் உரையாற்றினார்கள். சர்வேந்திரா தர்மலிங்கம், பாலசிங்கம் யோகராஜா, அருணன் சரவணமுத்து, புலேந்திரன் கனகரட்ணம், கவிதா லட்சுமி, ரவிக்குமார் திருச்செல்வம், சிவகுமார் சிவசண்முகநாதன், சஞ்சயன் செல்வமாணிக்கம்



ஆகியோரின் சுருக்கமான உரைகள் பல நினைவுகளின் பதிவுகளாக மட்டுமன்றி தவேந்திரனின் மகத்தான பொதுச் சேவையை பதிவு செய்கின்ற உரைகளாகவும் அமைந்திருந்தன. அவற்றின் சமூகப் பெறுமதி, அவற்றை முன்னெடுத்து அடுத்த நிலைக்கு கொண்டு செல்லப்படவேண்டியதன் அவசியத்தையும் அந்த உரைகள் உணர்த்தின.




உரைகளை நேரடியாக நிகழ்த்த முடியாத நிலையில் கனடாவிலிருந்து ப. ஸ்ரீஸ்கந்தன், தாயகத்திலிருந்து மாற்றுத் திறனாளிகள் அமைப்பைச் சேர்ந்த வெற்றிச்செல்வி சந்திரகலா, ஸ்ரீபார்வதி வித்தியாலயம் அபிவிருத்திச் சங்கத்தின் சார்பாக பாடசாலை அதிபர். திரு. ரவிச்சந்திரன் கந்தையா, லண்டனிலிருந்து ராஜரூபன் செல்வதுரை ஆகியோரின் உரைகள் காணொளிக் காட்சிகளாக அங்கே காட்டப்பட்டன.

சூடான் நாட்டு சக்சபோன் (Saxophone) வாத்தியக் கலைஞர் மோட்டன் சக்கறியா (Morton Zakaria) அன்று மிகவும் உருக்கமான இசையை நிகழ்த்தினார். அவரை நோர்வே தமிழ்ச் சமூக நிகழ்வுகளில் அறிமுகப்படுத்தியவர் தவேந்திரன். தவேந்திரன் சிறந்த இசை இரசிகர். தான் பெற்ற சந்தோசத்தை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று எப்போதும் நினைக்கும் மனிதர். அப்படி ஒரு தடவை மோட்டன் சக்கறியாவின் இசையில் மயங்கியவர், தமிழ்ச் சங்க நிகழ்ச்சியில் அவரை பங்கேற்கச் செய்தார். மோட்டன் சக்கறியா தவேந்திரனின் இழப்பைப் பற்றிய சில குறிப்புகளைச் சொல்லித்தான் அன்று அவ்விசையை நிகழ்த்தினார்.

நோர்வே தமிழ்ச்சங்கத்தின் சார்பில் சுரேன் சரவணமுத்து உரையாற்றியதுடன் அவ்வப்போது பதிவு செய்துவைத்திருந்த காணொளிகளை கலவையாக்கி ஒரு தொகுப்பையும் வெளியிட்டார்கள்.

அதுபோல தவேந்தல் நினைவு விஜய் நாதன், சுரேஸ் சிவராஜா ஆகியோர் தயாரித்த விபரணம் ஒன்றும் இடம்பெற்றது.

சாந்தகண்ணா அவர்கள் நிகழ்த்திய 'காற்று காவி வந்த சேதி கேட்டு' என்கிற நாடக பாணியிலான கவிதாநிகழ்வு எல்லோரது உன்னிப்பான கவனத்தைப் பெற்றது.

இந்த நிகழ்வில் இளையோர் பலரும் நினைவேந்தால் பாடல்களைப் பாடினார்கள். லவங்கி ராஜேந்திரன், அஞ்சனா ராஜகோபால், அதிசயன் சுரேஷ் ஆகியோரின் இசைப் பங்களிப்பு நிகழ்வை பரிபூரணப்படுத்தியது.

இறுதியில் தவேந்திரனின் நினைவாக 'தவேந்தல்' என்கிற தலைப்பில் தயாரிக்கப்பட்டிருந்த நூலின் வெளியீட்டு நிகழ்வும் நடந்தது. அந்த நூலின் தொகுப்பாசிரியராக நான் இயங்கியிருந்தேன். அந்த நினைவுமலர் குழுவில் சர்வேந்திரா தர்மலிங்கம், ப. ஸ்ரீஸ்கந்தன், ராஜன் செல்லையா, பாலசிங்கம் யோகராஜா, சஞ்சயன் செல்வமாணிக்கம், அருணன் சரவணமுத்து, நேதாஜி நடராஜா ஆகியோருடன் சேர்ந்து ஒரு கூட்டுப் பணியாக இதை செய்து முடித்திருந்தோம். இரண்டே வாரங்களில் அப்படிப்பட்ட சிறப்பான ஒரு நூலை முடித்தது சிறந்த அனுபவம்.

இந்த நினைவு மலர் அவரின் நினைவுப் பதிவுகளின் தொகுப்பாக மட்டுமன்றி அவர் நமக்கு விட்டுச் சென்ற பணிகளை நினைவுறுத்தும் பதிவுகளாகவும், அத்தகைய பணிகளை ஊக்குவிக்கின்றவையாகவும் நிலைத்து நிற்கும்.

தவேந்திரன் அவர்களின் துணைவி மேகலா தனியான 'கல்வெட்டு' மலரை தவிர்த்துவிட்டு இந்த நூலின் பணிகளுடன் முழுமையான குடும்ப ஒத்துழைப்பை தந்திருந்தார்.

'தவேந்தல்' என்கிற பெயரை இந்த நூலுக்கு சூட்டியவர் 'தாய்வீடு' பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவருபவரும் தவேந்திரனின் நண்பருமான ப. ஸ்ரீஸ்கந்தன் அவர்கள்.

இந்த நிகழ்வின் உச்சமாக தவேந்திரனின் கனவுகளை தொடர்ந்து மேற்கொள்வதற்காக ஒரு நிதியமும் ஆரம்பிக்கப்பட்டதுடன் அன்றே பலரும் அன்னிதியத்துக்கு தமது பங்களிப்பை வழங்கி னார்கள்.

தவேந்திரன் ஒரு கணவராக, தந்தையாக, உறவினராக, நண்ப ராக, மற்றவர்களால் விரும்பப்படுபவராக எல்லோர் இதயங்களில் எப்படி குடியேறினார் என்பது இந்த நூலில் பதிவு செய்யப்பட்டி ருக்கிறது. அந்த வகையில் இதுவொரு சிறந்த ஆவணப் பதிவாக வும் ஆக்கியிருந்தோம்.

மூன்று பகுதிகளாக தொகுத்தோம். முதலாவது, குடும்பத்தினரின்



செய்திகளையும் கட்டுரைகளையும் புகைப்படங்களையும் தகவல்க ளையும் கொண்டது. இரண்டாவது பகுதி, தனி நபர்களின் பதிவுக ளைக் கொண்டது. மூன்றாவது, அமைப்புகள், நிறுவனங்களின் பதிவுகளைக் கொண்டது. எந்தவகையிலும் இழப்பு பற்றிய உணர்வு பூர்வமான பண்பை சிதைத்துவிடாதபடி அதன் அமைப் பும், படங்களின் நிறங்களும், அதன் தொகுப்பும் இருக்கவேண் டும் என்பதில் மிகவும் கவனமாக இருந்தோம். அதற்காக பல உரையாடல்களை நகர்த்தியிருக்கிறோம். படங்கள் இடும்போது ஒரு ஜனரஞ்சக சஞ்சிகையின் வடிவில் வந்து விடக்கூடாது என்ப தற்காக படங்களை நிறம் குறைத்து ஓரிடத்தில் குவித்தோம். புத் தகத்தின் தாள், அட்டைப்படம் என்பவற்றின் நிறத்தில் கூட அந்த உணர்வு இழையோடும் வகையில் பார்த்துக்கொண்டோம்.

மிகக் குறுகிய காலத்தில் இப்பேற்பட்ட நிகழ்வையும், நூலையும் வெளியிடுவது அவ்வளவு எளிமையான காரியமல்ல. இதற்கு முன் னர் இப்படி சாத்தியப்பட்டிருக்கிறதா என்பதை நானறியேன். இந்த நிகழ்வும்கூட அப்படித்தான். மிகக் குறுகிய காலத்தில் வெற்றிகர மான ஒரு நிகழ்வு சாத்தியப்பட்டிருக்கிறது என்றால், அது தவேந் திரன் பொதுப்பணிகளில் உருவாக்கிச் சென்ற நன்மைதிப்புத் தான். அவருக்கு இறுதியாக செலுத்தக்கூடிய நன்றியை இப்படித் தான் நண்பர்களும், உறவினர்களும் ஈடுசெய்கிறார்கள்.

காலம் முழுவதும் திட்டங்களை மட்டுமே தீட்டிக்கொண்டிருந்தவர் கள் திடீர் என்று நம்மிடையே இருந்து விடைபெற்றுச் சென்ற சந் தர்ப்பங்கள் பலவற்றை நாம் கண்டிருக்கிறோம். தவேந்திரன் அப் பேர்பட்ட வாய்ப்பேச்சு வீரர் அல்ல. அவர் நேரடியாக ஒரு செயல் வீரர். ஓயாத செயல் வீரர். தன்னை மேடைக்கு மேல் அழைக்கத் தேவையில்லை, திரைக்குப் பின் இருந்து இயக்குங் கள் என்று நேரடியாகவே சொல்பவர்.

பொது அரசியல் பணிகளில் இருந்து தன்னை தள்ளியே வைத்தி ருந்தார். அவரின் மென்மைத்தன்மைக்கு பொது சமூக சீர்திருத்த, சமூக அபிவிருத்திப் பணிகளுக்கு பொருத்தமாக இருந்தார்.

எந்தவொரு பொதுப் பணிகளிலும் தன்னை முதன்மைப்படுத்தும் நபர் அல்ல... ஒருபோதும் தற்பெருமை, சுயநலம், சுயவிளம்பரம் அற்ற ஒரு மனிதர் அவர். வெற்றிகரமான பணிகளுக்கு பின்னால் அவர் இருப்பார். பின்னால் இருந்தபடி அதன் வெற்றியைக் கொண்டாடுவார். தனது பாத்திரம் இது என்று உரிமை கோரமாட் டார். அந்த வெற்றிகளுக்கு சொந்தம் கொண்டாடமாட்டார். திரை யின் பின்னால் இருந்து நன்மையை செய்து மற்றவர்களின் மகிழ்ச் சியிலும், வெற்றியிலும் இன்பம் காணும் மனிதர்களைக் காண்பது அரிது. இந்த விடயத்தில் தவேந்திரனுக்கு நிகராக வேறெவரையும் நான் கண்டதில்லை.

அவருடன் சேர்ந்து ஏராளமான பணிகளில் ஈடுபட்டிருக்கிறேன். 2000ம் ஆண்டு 'பறை' என்கிற சஞ்சிகையை வெளியிட்டபோது என்னோடு அதன் ஆசிரியர்களில் ஒருவராக அவர் இயங்கினார். ஐரோப்பிய இலக்கிய சந்திப்பை நோர்வேயில் இரு தடவைகள் அவரும் சேர்ந்துதான் நடத்தியிருந்தார். நோர்வேயில் பல அமைப் புகளின் ஆரம்பகர்த்தாவாக இருந்தவர். இலங்கையில் சுனாமி, இறுதியுத்தம் போன்ற நிலைமைகளில் அங்கே உதவி செய்வதற் காக நண்பர்களை சேர்த்துக்கொண்டு கொள்கலன்களில் பொருட் களை அனுப்புவதிலிருந்து பல்வேறு உதவிகளை செய்தார். அது போல தாயகத்தில் வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு என பல்வேறு பிரதேசங்களில் நிறுவனங்களை ஆரம்பிக்கவும், அவற் றுக்கான உதவிகளை மேற்கொள்வதிலும் தொடர் பணியாகக் கொண்டிருந்தார்.

சதா திட்டங்களைப் போட்டுக்கொண்டே இருக்கும் அபாரமான தூரநோக்குள்ள மனிதர் அவர். அதுபோல அத்திட்டங்களில் பல வற்றை, தகுந்தவர்களை அணுகி அவர்களின் ஒத்துழைப்பை பெற்று நிறைவேற்றிவிடும் வினைத்திறன் படைத்தவர் அவர்.

அவர் இந்த உலகத்தில் இருந்து தன்னை விடுவித்துக்கொண் டதை நாம் இனி நம்பத்தான் வேண்டும். அவர் தான் விரும்பிச் செய்ய வேண்டிய பலவற்றையும் செய்து முடித்த பின்பே இந்த ஓய்வை பெற்றிருக்கிறார்.

அவரைச் சூழ இருந்த இந்த உலகத்துக்கு அவர் கடன்பட வில்லை.

'மரணத்தைவிட உண்மையான வேறெதுவும் இந்த உலகத்தில் இல்லை!' என்பார்கள். ஆனால் உலக உண்மைகள் பல நமக்கு கசப்பானவை. இழப்பை விட கசப்பான வேறெதுவும் நமக்கு இருக்கப் போவதுமில்லை. இறப்பு என்கிற கசப்பான உண் மையை எப்படி ஏற்றுக்கொள்வது என்பது பற்றிய புத்த பகவா னின் போதனைகளை நாம் அறிந்திருக்கிறோம். இந்த இழப்பை யும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய வலுக்கட்டாயம் நம்மனைவ ருக்கும் உண்டு. சில இழப்புகளை கடக்கலாம், ஆனால் மறத்தல் சாத்தியமில்லை. தவேந்திரன் அந்த வகை.



sarawanan.n@thaiveedu.com

# படித்தோம் சொல்கின்றோம்

# சண்முகம் சபேசனின் 'காற்றில் தவழ்ந்த சிந்தனைகள்'

- முருகபூபதி

மாந்தருக்கு சிந்திக்கும் ஆற்றலும் இருக்கின்றமையால், ஏனைய உயிரினங்களிலிருந்து வேறுபடுகிறார்கள். அவர்களின் சிந்தனைக் கருவூலங்கள் எழுத்தில் - பேச்சில் - செயலில் வெளிப்படும் போது, அவற்றுக்கான மாற்றுச் சிந்தனைகளும் எதிர்வினைகளும் தோன்றுவதும் இயல்பு.

இந்தப்பத்தியில் பேசப்படும் நூலை எழுதியவர் தற்போது எம்மத்தியில் இல்லை. அத்துடன் அவர் உளமாற நேசித்த தமிழ்த்தேசியத் தலைவரும் இல்லை.




இவர்கள் இருவரதும் சிந்தனைகளையும் தன்னகத்தே கொண்டுதான் இந்த நூல் வெளிவந்துள்ளது.

'காற்றில் தவழ்ந்த சிந்தனைகள்' என்ற இந்த நூலை எழுதியிருக்கும் சண்முகம் சபேசன், அவுஸ்திரேலியா மெல்பனில் 1989ம் ஆண்டு முதல் வாழ்ந்தவர். கடந்த 2020ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி மெல்பனிலேயே மறைந்துவிட்டார்.

இவர் யாழ்ப்பாணம், நீராவியடியில் 1954ம் ஆண்டு பிறந்தவர். யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் மாணவரான சபேசன், அவுஸ்திரேலியா மெல்பனுக்கு புலம்பெயர்ந்து வந்தபின்னர், விக்ரோரியா ஈழத்தமிழ்ச்சங்கம், தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முதலானவற்றில் அங்கம் வகித்தவாறு, மெல்பன் 3CR தமிழ்க்குரல் வானொலியில் கால் நூற்றாண்டு காலம் ஊடகவியலாளராகவும் எழுத்தாளராகவும் இயங்கிய தமிழ்த் தேசியப் பற்றாளர்.

3CR தமிழ்க்குரல் வானொலியில் தங்கு தடையின்றி, வாரம்தோறும் அரசியல் விமர்சன கட்டுரைகளை எழுதி தனது குரலிலேயே ஒலிபரப்பினார். அவ்வாறு எழுதி ஒலிபரப்பிய ஆக்கங்கள் நூற்றுக்கணக்கானவை.

அவற்றையெல்லாம் மீண்டும் செம்மைப்படுத்தி தொகுத்து வெளியிடவிரும்பியிருந்த சபேசன், அதனை சாத்தியமாக்காமல் விடைபெற்றுவிட்டார்.

ஈழப்போர்க்காலத்திலும் அதன் முடிவின் பின்னரும் பல நூல்கள், கவிதை, சிறுகதை, நாவல், ஆய்வு, சுயசரிதை முதலான வடிவங்களில் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் வந்துவிட்டன. தொடர்ந்தும் வெளியாகின்றன. சில மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஈழ விடுதலை இயக்கங்களிலிருந்தவர்கள், வெளியே பார்வையாளராக இருந்தவர்கள் மட்டுமன்றி, போர்க்களத்தில் நின்ற மேஜர் கமல் குணரட்னவும் Road to Nandikadal என்ற நூலை வரவாக்கியிருக்கிறார். அத்துடன், Prabakaran was a loving family man. The Srilankan army seized ten thousand photographs of the LTTE and his family and the LTTE events. But even in a film, Prabakaran could not be seen with a glass of liquor. He was a disciplined leader and was a different leader என்றும் பதிவுசெய்துள்ளார்.

பிரபாகரனுடன் நெருங்கிப்பழகியிருக்கும் சபேசன், இறுதிப்போரின் போது சரணடைந்த விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்த யோகியின் உறவினருமாவார். சபேசனின் காற்றில் கலந்த சிந்தனைகள் நூலிலும் பல படங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் சில மேஜர் கமல் குணரட்ண குறிப்பிடும் அவர்களது படையினர் தேடி எடுத்த ஏராளமான படங்களின் தொகுப்பிலும் இருக்கலாம்.

சபேசனின் நண்பரும் எழுத்தாளரும் தமிழக அரசியல் பிரமுகருமான திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் முனைவர் சுப. வீரபாண்டியனின் அணிந்துரையுடன் வெளியாகியிருக்கும் இந்நூல் ஐந்து பிரிவுகளைக் கொண்டிருக்கிறது.

நூலாசிரியரின் நாட்குறிப்பு, அவர் மெல்பன் 3CR தமிழ்க்குரல் வானொலியில் நிகழ்த்திய அரசியல் சார்ந்த உரைகள், கலை, இலக்கியம், சமூகம் சார்ந்த பதிவுகள், அவர் நேசித்த இந்திய சுதந்திரபோராட்டத்தில் ஈடுபட்டு மரணதண்டனை பெற்ற பகத்சிங், ஈழப்போராட்டத்தில் உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த திலீபன், மெல்பனில் இயற்கை மரணமெய்திய மாமனிதர்கள் தில்லை ஜெயக்குமார், கொழும்பில் சுடப்பட்டு கொலையுண்ட குமார் பொன்னம்பலம் ஆகியோர் பற்றிய ஆக்கங்கள், முதலானவற்றோடு ஒளியில் எழுதுதல் என்ற பிரிவில் பல முக்கியமான ஒளிப் படங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இவற்றையெல்லாம் சீராகத் தொகுத்து சபேசனின் கனவை, அவரது மறைவிற்குப்பின்னர் நூலாக வெளியிட்டு நனவாக்கியுள்ளார் மனைவி திருமதி சிவமலர் சபேசன்.

இந்நூலில் சபேசனின் நாட்குறிப்பிலிருந்து... என்ற பிரிவில் இடம் பெற்றுள்ள செய்திகள் பிரபாகரன் பற்றி நாம் அறியாத சில பக்கங்களை பேசுகின்றன.

சபேசன் எழுதுகிறார்: 'எனது வாழ்நாளில் மறக்கமுடியாத நாட்கள் என்று குறிப்பிடுவதானால், அவை தேசியத்தலைவருடன் உரையாடிய நாட்கள்தான். அந்தக்கணங்கள் மறக்கமுடியாதவை.

ஒரு முறை அவருடனான சந்திப்பின்போது, அவர் நிகழ்த்திய மாவீரர் தின உரையில் சில தவறுகள் இருக்கின்றன என்று சுட்டிக்காண்பித்தேன்.

அதற்கு அவர், 'சில தவறுகள் இல்லை சபேசன், இன்னும் கூர்ந்து பார்த்தால் பல தவறுகள் இருப்பது புலப்படும்.' என்றார்.

குறிப்பிட்ட மாவீரர் தின உரையை ஒப்புநோக்கியவர் (Proof Reader ), 'தான் கண்டுபிடிக்காத தவறுகளை நீர் எவ்வாறு கண்டுபிடித்தீர்...?' எனக்கேட்டதும், 'நீங்கள் எழுத்துப் பிழைகளைத்தான் பார்த்திருப்பீர்கள். ஆனால், நான் கருத்துப் பிழையைத்தான் கண்டுபிடித்தேன்...' எனச்சொன்னேன்.

அதனைக்கேட்டதும், தலைவர், 'சபேசன்... நீங்கள் மேலும் ஆழமாகப்பார்த்தால் மேலும் சில பிழைகளைக்கண்டுபிடிப்பீர்கள்' என்றார்.

அத்துடன், ஏனைய இயக்கப் பொறுப்பாளர்களிடத்தில் 'சபேசன் வித்தியாசமாக சிந்திப்பவர். அவரது சிந்தனைகளையும் உள்வாங்கிக்கொள்ளுங்கள்' என்று தலைவர் சொன்னார்.

மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில், 'சபேசனின் உரைகள் ஐ.பி.சி. வானொலியில் ஈழத்தின் நேரம் காலை 4.00 மணிக்கு ஒலிபரப்

பாகும். அதனை அனைவரும் தவறாமல் கேட்கவேண்டும். நானும் அதனைக் கேட்பதுண்டு என்று இயக்கத்தினருக்கு சொன்னார்.

தலைவர் அவ்வாறு சொன்னதும், எனக்கு சற்று பதட்டமாகிவிட்டது. எனது உரையை தலைவரும் செவிமடுப்பதனால், இனிமேல் நானும் மிகுந்த கவனத்துடனும் பொறுப்புணர்வுடனும் உரைகளை எழுதவேண்டும் என்று மனதிற்குள் தீர்மானித்துக்கொண்டேன்.

தலைவர் எனக்கு எழுதிய ஒரு மடலில் 'உங்கள் விடுதலைப்பணி தொடர வாழ்த்துக்கள்' என்று எழுதியிருந்தார்.

அதற்கு நான், 'விடுதலைப்பணி சிறக்க' என்று எழுதியிருக்கலாமே என்று கேட்டதும், அவர் அதற்குச் சிரித்துவிட்டு, 'நீங்கள் சபேசன், விடுதலைப்பணியை சிறப்பாகத்தான் செய்கிறீர்கள். ஆனால், தொடர்ந்து செய்வதுதான் சிரமம். எங்கடை ஆட்களே உங்களை தொடர்ந்து விடுதலைப்பணி செய்யவிடமாட்டார்கள்.' என்றார்.

அவர் சொன்னது சரிதான். தீர்க்கதரிசனமான கூற்றுத்தான். தலைவர் போனபிறகு என்னை விடுதலைப்பணி செய்யவிடாமல் பலர் தடுத்துவிட்டார்கள்.

நான் வன்னியில் நின்ற நாட்களில் ஒரு நாள் இயக்கப் பொறுப்பாளர்களின் கூட்டத்திற்காக ஒரு கூடத்தில் குழுமியிருந்தோம்.

நானும் நிதிக்குப் பொறுப்பானவரும் உரையாடிக்கொண்டிருந்தோம். அப்போது தலைவர் அக்கூடத்திற்குள் பிரவேசித்தார். நாம் அதனைக் கவனிக்கவில்லை. ஏனையோர் மரியாதையின் நிமித்தம் எழுந்து நின்றனர். தலைவர் எம்மருகில் வந்து, 'அறிவாளிகள் என்றால் ஒன்றாகத்தான் இருப்பீர்களோ...?' என்றார்.

அவருடனான சந்திப்பு ஆரம்பமானதும், 'கேள்விகளை கேளுங்கோ...' என்றார்.

அதற்கு நான், 'என்னத்தை கேட்கிறது. உங்களிடம் கேட்கவிருந்த கேள்விகள் எழுதப்பட்டிருந்த கொப்பியை உங்கட பொடியன்கள் சிலர் எடுத்துக்கொண்டு போட்டார்கள்' என்றேன்.

உடனே தலைவர் வெளியே சென்ற பொடியளை உள்ளே அழைத்தார். அவர்கள் ஓடோடி வந்தார்கள்.

'ஏனடா, சபேசன் அண்ணையோடு முண்டுறியள். அவருடைய உடைமைகளை அவரிடமே கொடுத்துவிடுங்கள்' என்றார். அதன் பின்னர்தான் தலைவரிடம் நான் கேள்விகள் கேட்டேன்.

அதன்பின்னர், இயக்கப்பொடியள் ஒருவர்கூட என்னை நெருங்காமல் மரியாதையாக நடத்தினர்.

வன்னியில் தலைவருடன் நின்ற நாட்களில் அவரே... சமைத்துக் கொண்டு வந்த உணவை எனக்குப் பரிமாறினார்.

'ஏன் எனக்காக சமைத்து எடுத்துவந்தீர்கள்..? என்று கேட்டதற்கு, 'சபேசன்... முன்னர் நீங்கள் இங்கே வந்தபோது இதே சுவையுள்ள சாப்பாட்டை இரண்டுமுறை எடுத்துப்போட்டு சாப்பிட்டியள். அதுதான் இம்முறையும் நானே சமைத்து எடுத்துவந்து பரிமாறுகின்றேன்.' என்றார்.

அப்போது நான் அவரது பேரன்பினால் நெகிழ்ந்துபோனேன். எனது கண்களும் பனித்தன. ஒருநாள், தலைவருடனான சந்திப்பில், 'உங்களுக்கு ஏதாவது நடந்துவிட்டால், நீங்கள் போராட்டத்தில் வீரச்சாவடைந்தால், அடுத்த கட்ட நடவடிக்கை என்ன..?' என்று கேட்டேன்.

அதற்கு அவர், 'போராட்ட வடிவங்கள் மாறும். இருநூறு வருடங்களுக்கு முன்னர் போராடி மடிந்த பண்டார வன்னியன் பற்றி இப்போது பேசுகின்றோம். இதுபோன்று எனது மறைவுக்குப்பின்னரும் என்னைப்பற்றி பேசுவார்கள்.' என்றார்.

அன்டன் பாலசிங்கம் அண்ணை, தலைவருக்கு ஆலோசனை வழங்குவதில் உறுதுணையாக இருந்தவர். அவரது மறைவுக்குப் பிறகு தலைவருக்கு சரியான ஆலோசனைகள் கூறுவதற்கு எவருமிருக்கவில்லை.

நான் தலைவருடன் வன்னியில் நின்ற நாட்களில் என்னை தன்னோடு வந்து நிற்கும்படி கேட்டிருந்தார்.

'வெளிநாட்டில் வெள்ளைக்காரனிடமிருந்து சம்பளம் பெற்றால், பெருமை. என்னிடமிருந்து பெற்றால் சிறுமையோ..?' என்றும் ஒரு நாள் கேட்டார்.

நான் சொல்லிழந்து, செயலிழந்து அவரையே வைத்தவிழி வாங்காமல் பார்த்துக்கொண்டு நின்றேன். அது சில மணித்துளிகள் தான். ஆனால், நீண்டநேரம் பார்த்ததுபோன்ற உணர்விருந்தது.

அதற்கிடையில் தலைவர் வேறு விடயங்கள் பேசத்தொடங்கிவிட்டார். நான் தலைவரிடத்திலேயே நின்றிருக்கவேண்டும். அந்த குற்றவுணர்வு என்னைப்பற்றியிருக்கிறது.

அது மட்டுமல்ல, எனக்கு மற்றும் ஒரு குற்றவுணர்வும் இருக்கிறது. தலைவர் வீரச்சாவடைந்தபின்னர், அவருக்கு வீரவணக்கம் செய்ய முடியாமல்போய்விட்டது. பலரும் அரசியல் ஆதாயம் கருதி, தலைவர் இன்னமும் உயிருடன் இருக்கிறார் என்று சொல்லிக் கொண்டு திரிகிறார்கள்.

ஒரு விநாடிகூட வீணாக்காமல் தமிழீழ விடுதலைக்காக போராடிக் கொண்டிருந்த எமது பெருமதிப்பிற்குரிய தமிழ்த்தேசியத்தலைவரை, கடந்த பதினொரு வருடகாலமாக (2009 மே மாதம் முதல்) அவர் எங்கோ மறைந்து ஒளிந்துகொண்டிருக்கிறார் எனச்சொல்வது, அவரை இழிவுபடுத்தும் செயலாகும். அவருக்கு எப்போது வீரவணக்கம் செலுத்தப்போகிறோம்..?

தலைவருக்கு, ஒருவர் இன்னுமொருவர் காலில் வீழ்வது பிடிக்காது. தமிழன் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும் என்பார். ஒரு தடவை வெளிநாட்டிலிருப்பவர்கள் தங்கள் பிள்ளைகளுடன் தலைவரைப்பார்ப்பதற்கு வன்னிக்கு வந்தார்கள்.

தலைவரைக்கண்டதும், தங்கள் பிள்ளைகளை அவரது காலில் வீழ்ந்து வணங்கும்படி சொன்னார்கள். அது அவருக்கு கோபத்தை வரவழைத்தது. இதுபற்றியும் தலைவர் என்னிடம் பேசியிருக்கிறார்.

என்னை நேரடியாக எதிர்த்தவர்கள் பலரும் என்னோடு உண்மையாக நேர்மையாக இருந்தார்கள். ஆனால், என்னை நேரடியாக ஆதரித்தவர்கள் பலர் எனக்கு மறைமுக எதிரிகளாக விளங்கினார்கள்.' இவ்வாறு இந்த நூலில் இடம்பெற்றுள்ள டயறிக்குறிப்பு பேசுகிறது.

சுயநிர்ணய உரிமையும் சுதுமலைப்பிரகடனமும், அதனையடுத்து எழுதப்பட்டிருக்கும் சுதுமலைப்பிரகடனம் - 32 ஆண்டுகள் சுட்டும் நிதர்சனம் ஆகிய கட்டுரைகள் சமகால இலங்கை அரசியலில் - தமிழ்த்தரப்பு அரசியல் தலைவர்களின் நடவடிக்கைளையும் ராஜபக்ஷக்களின் அரசையும் - இந்திய மத்திய அரசின் அசமந்தப் போக்கின் சடுகுடு விளையாட்டுக்களையும் கேள்விக்குட்படுத்துகிறது.

சபேசன், 2005 - 2019 காலப்பகுதியிலேயே, இனி என்ன நடக்கும் என்பதையும் தீர்க்கதரிசனமாக அன்றே சொல்லிவிட்டார் என்பதும் இந்நூலைப்படிக்கும் போது தெளிவாகிறது.

சபேசனின் மறைவுக்குப்பின்னர், அவரது கனவை நனவாக்கியிருக்கிறார் திருமதி சிவமலர் சபேசன்.

தமிழ்நாடு காலச்சுவடு பதிப்பகத்தின் ஏற்பாட்டில் சுதர்சன் புக்ஸ் இந்நூலை பதிப்பித்துள்ளது.




murugaboopathi@thaiveedu.com

# பெரியாரின் தீண்டாமைக் கொள்கை

**- நெல்லை ஜெயசிங்**

இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய புரட்சிகர சமூகத் தலைவர்கள் பலர். அவர்களில் முதன்மையானவராக பெரியாரை குறிப்பிடலாம். தமிழ் சமுதாயத்தை தட்டி எழுப்பிய பெரியார், பல்வேறுபட்ட சிந்தனை விதைகளை விதைத்துச் சென்றுள்ளார். சமூக நீதி, சாதிய எதிர்ப்பு, மூட நம்பிக்கை எதிர்ப்பு, இறை மறுப்பு, பகுத்தறிவு, பெண்கள் முன்னேற்றம், பெண் கல்வியின் அவசியம் எனப் பெரியாரின் கொள்கைகள் அவரது சிந்தனைகளின் வெளிப்பாடாக போற்றப்படுகின்றன. இவற்றில் சாதிய கட்டமைப்பின் மீதான பெரியாரின் தீண்டாமைக் கொள்கையின் தாக்கம் இன்றும் தமிழகத்தில் பேசுபொருளாக இருந்து வருகிறது. அதனை மறுப்போர் அல்லது அவரது சமூகநீதி கருத்துக்கள் மீது வெறுப்புற்றோர், அவரது கொள்கை கோட்பாடு



களை கருத்தால் எதிர்கொள்ள முடியாத வலதுசாரிகளில் சிலர் அரசியல் பின்புலத்துடன் கோழைத்தனமாக அவரது நினைவுச் சின்னங்களை அண்மைக்காலங்களில் சிதைத்து வருகின்றனர். அவரது உருவச்சிலைக்கு செருப்பு மாலை அணிவிக்கின்றனர். சிறுநீர் தெளிக்கின்றனர். எனினும் அவரது புகழ் சற்றும் குறையாது வளர்ந்து கொண்டே வருகிறது. அவரது சமூக நீதிக்கொள்கைகள் மீதான ஈர்ப்பும் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதையும் காணமுடிகிறது.

பெரியாரின் தோற்றம் தமிழகத்திற்கு பெருமை சேர்ப்பதாகும். தந்தை வெங்கட்டநாயக்கருக்கும் தாய் சின்னத்தாயம்மாளுக்கும் மகனாக 1879 செப்டம்பர் 17ம் நாளில் ஈரோட்டில் ஈ.வே. ராமசாமி நாயக்கர் என்ற பெயருடன் பிறந்தார் பெரியார். வசதியான முற்பட்ட சாதியான நாயக்கர் சமூகத்தில் பிறந்த அவர், பின்னாளில் தன் பெயருக்கு பின்னால் இருந்த சாதிப்பெயரான நாயக்கர் என்பதை நீக்கி, தன் கொள்கைக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தார். ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்த பெரியார் தெலுங்கு மொழியை தாய்மொழியாகக் கொண்டபோதும் பின்னாளில் தமிழ் மொழி மீது மிகுந்த பற்றும் அதனை வளர்ப்பதில் மிகுந்த ஆர்வமும் கொண்டிருந்தார். மனித வாழ்க்கைக்கு முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்ற அனைத்தையும் தகர்த்தெறிய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அவரது சமூகநீதி கோட்பாட்டில் தலையாயது தீண்டாமைக் கொள்கையாகும்.

சமத்துவத்துக்கும் சுயமரியாதைக்கும் எதிரான சாதி அமைப்புத் தான் பெரியாரின் முதன்மையான இலக்கு. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட சாதிய இழி நிலை இன்றும் தொடர்கிறது. இந்தியாவில் பட்டியலினத்தைச் சார்ந்தவர்களில் ஏழில் ஒருவர் தீண்டத்தகாதவராக சாதியக் கொடுமைகளுக்கு ஆளாவதாக அண்ணல் அம்பேத்கர் தனது அறிக்கையொன்றில் ஆழ்ந்த கவலையுடன் குறிப்பிட்டுள்ளார். சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கடந்த பின்னும் தலித் மக்கள் மீதான வன் கொடுமை நின்றபாடில்லை. பொதுக் கிணற்றில், பொதுக்குழாயில் தண்ணீர் எடுக்கத் தடை, பொதுப்பாதையில் செருப்பு அணிந்து செல்லத் தடை, வாழும் போது சேரிவாழ்க்கை, இறந்த பின்னர் தனிச் சுடுகாடு. அந்தச் சுடுகாட்டிற்கு போவதற்கும் பொதுப்பாதையில் அனுமதி இல்லை. அனைவருக்கும் சமம் என கூறப்படும் கோயிலுக்குள் போகத் தடை. பொதுக் கடையில் தேநீர் அருந்த இரட்டைக் குவளை. சாதி மாறி திருமணம் செய்தால் கொடூர ஆணவக் கொலை என ஏராளமான அடக்குமுறைகள் இன்றும் தொடர்வதை பார்க்கும் போது... பெரியார் வாழ்ந்த காலத்தில் நிலைமை எவ்வளவு கொடூரமானதாக இருந்திருக்கும் என்பதை கற்பனை பண்ணிப்பார்க்க இயலாது. தொட்டால் தீட்டு, பட்டால் தீட்டு என ஒடுக்கப்பட்டவர்கள் மிருகங்களை விட கேவலமாக நடத்தப்பட்ட காலமது. எனவேதான் பெரியார், எந்தப் பாவத்தை செய்தாவது சாதியை ஒழிக்க வேண்டும் என்றார். அதனால் சாதி அடுக்குமுறையைக் கடுமையாகச் சாடுவதில் அவர் எந்த தயக்கமும் காட்டவில்லை.

வர்ணாசிரமத்தை கடைப்பிடிக்கும் பார்ப்பனியத்தை பெரியார் இறுதிவரை எதிர்த்தார். இந்திய தேசத்தில் சாதிய ஏற்றத் தாழ்வுகள் சட்டப் பாதுகாப்புடனும் சாத்திரப் பாதுகாப்புடனும் நிலைநிறுத்தப்படுவதாக பெரியார் கூறுகிறார். இதிகாசங்கள் முதற்கொண்டு மனுநீதி சாத்திரம் வரையில் வர்ணாசிரமம் கடைப்பிடிக்கப்படுவதாக சாடுகிறார். எனவே சட்டங்கள் மாற்றப்பட வேண்டும், சாத்திர நம்பிக்கைகள் உடைக்கப்பட வேண்டும் என்ற கோணத்தில் களப்பணியாற்றினார். வருணாச்சிரம பழக்கத்தால் உலக நாடுகளில் இந்தியா மட்டும் வரலாற்றில் பின்நோக்கி சென்று கொண்டிருப்பதாக கூறுகிறார். கேரள மாநிலம் வைக்கம் மகாதேவர் கோயிலை சுற்றியுள்ள பொதுப்பாதையில் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நடந்து செல்லக் கூடாது என்ற உயர் சாதியினரின் தடைக்கு எதிராக நடந்த போராட்டத்தில் பெரியாரும் கலந்து கொண்டு தன் எதிர்ப்பை காட்டினார்.

வெளிநாடு உட்பட தமிழகமெங்கும் பயணித்த பெரியார் மிகச் சாதாரண மொழிநடையில் தனது சமூக நீதி கொள்கைகளை பொதுமக்களிடையே எடுத்துரைத்து மிகப் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தலானார். உயர்வும் தாழ்வும் செயற்கையாக கற்பிக்கப்பட்டதென்றும் அது ஒரு சூழ்ச்சிப் பொறி, முறைகேடு, அநீதி எனவும் ஆவேசப்பட்டார். மற்றவர்கள் பேசத்தயங்கியதை பேசினார். எழுத தயங்கியதை தயக்கமின்றி எழுதினார். அவரது கருத்துக்

கள் தமிழகத்தில் ஆழமாக வேரூன்றி இருப்பதால் பெரியாரின் சுயமரியாதை கொள்கையையொட்டி இன்றைய தமிழ் பாட புத்த கங்களில்

**‘தீண்டாமை ஒரு பாவச் செயல்’**
**‘தீண்டாமை ஒரு பெருங் குற்றம்’**
**‘தீண்டாமை ஒரு மனித நேயமற்ற செயல்’**
என்ற அறிவுரைகள் இடம்பெற்றுள்ளன.

சாதியம் மதம் சார்ந்து இருப்பதாகவும் சாதியத்திற்கு மதம் உர மூட்டுவதாக இருப்பதாகவும் பெரியார் குறிப்பிடுகிறார். மதவாத மும் சாதி வெறியும் கரம் கோர்த்து நிற்பதாக குற்றம் சாட்டுகிறார். மதச்சட்டங்களால் ஆகம விதிகளால் தீண்டாமை பழக்கவழக்கங் கள் பாதுகாக்கப்படுகின்றன என்கிறார். சாதியை எதுவெல்லாம் காப்பாற்றியதோ அதையெல்லாம் எதிர்த்து பிரச்சாரம் செய்தார். சாதியத்தை இங்கே கட்டிக் காப்பது மதமும் கடவுளும் என்பதை பெரியார் உணரலானார். எனவேதான் நால்வகை சாதி என தூக் கிப் பிடிக்கும் வேத ஆகமங்களும் கீதையும் ஆரியத்தை காக்க வகுக்கப்பட்ட சதித்திட்டம் என்றார். தீண்டாமை முற்பிறவியின் பயன் என மதத்தால் நியாயப்படுத்தப்படுவதை மறுக்கும் பெரி யார் ‘மதமும் பிழை கடவுளும் பொய்’ என பொது மேடைகளில் கூறத் தொடங்கினார். எனவே, சாதிய முறைகளின் ஆணி வேரான மதத்தை வெறுக்கத் தொடங்கி இறை மறுப்பாளராக மாறத் தொடங்கினார். சாதியை எதுவெல்லாம் காப்பாற்றியதோ அதை-யெல்லாம் எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். குறிப்பாக மதம், கட வுள், சாஸ்திரம் என்பவற்றில் காணப்பட்ட பிற்போக்குத்தனங் களை வெளிப்படையாக வெளிப்படுத்தத் தொடங்கினார்.

மதம் மனிதர்களை பிளவுபடுத்துகிறது, சாதிய வன்மத்தை விதைக் கிறது, சமதர்மத்தை மறுக்கிறது. எனவே மதத்திற்கு எதிரான கருத் துக்களை தமிழில் எளிய வழிகளில் அனைவரும் புரிந்து கொள் ளும் வகையில் தெளிவாகப் பேசி மக்களை தட்டியெழுப்பிய பெருமை தந்தை பெரியாரைச் சாரும். ‘உன்னைப் பறையனாய்ப் படைத்தார், அவனைப் பார்ப்பணனாய்ப் படைத்தார், என்னை சூத்திரனாய்ப் படைத்தார்’ என்று கடவுள் மேல் பழிபோடும் கொடு மைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றார் பெரியார். கீழ் சாதி என்ப தற்கும் தொடக்கூடாதவர் என்பதற்கும் மதத்தையோ கடவுளையோ காரணம் காட்டுவது வெறும் பித்தலாட்டம் என்கிறார். கல்லை கட வுளாக்கும் மந்திரங்கள் ஏன் ஒரு மனிதரை மற்ற மனிதருக்கு சமத்துவமான மனிதராக்கக் கூடாது எனவும் வினவுகிறார். மேலும், நரக வாழ்க்கை என்ற ஒன்றிருந்து, அங்கே மனிதர் சமமாக நடத் தப்பட்டால், இவ் இழி சாதி வாழ்வைவிட நரகமே மேல் என்று கூறும் அளவிற்கு சாதிய வன்மத்தை கடுமையாக எதிர்த்தார். மத மும் கடவுளும் இங்கே சாதியத்தை கட்டிக்காப்பதாக குற்றம் சாட் டுகிறார். மற்றைய மதங்களின் மீது கவனம் காட்டாத பெரியார், சாதிய முறைகளின் ஆணிவேராக இந்து மதம் இருப்பதாக கூறுகி றார். அனைத்து சாதியினரையும் கோயிலுக்குள் அனுமதிக்காத நிலை கண்டு குமுறும் பெரியார், மற்ற நாடுகளில் மக்களை ஒன்றுபடுத்த கடவுளும் மதமும் இருக்க, நமது நாட்டில் மக்களை வேறு வேறாக பார்க்கவே மதமும் கடவுளும் இருப்பதாக கூறுகி-றார்.

தமிழகத்தில் மிக முக்கியமான இயக்கமாக கருதப்படும் திராவிடர் கழகத்தினை தோற்றுவித்த பெரியாரின் தீண்டாமை உள்ளடக்கிய சமூக நீதிக் கொள்கைகள் தமிழக அரசியலிலும் சமூகப் பரப்பி லும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. சமூக நீதிக் காக கடைசி நொடிவரை போராடியவர் பெரியார். குடலிறக்க நோயினால் அவதியுற்ற போதும் மனம் தளராது கொண்ட கொள் கைக்காக வடிந்த சிறுநீரை பையில் ஏந்திக்கொண்டு 94 வயதை யும் பொருட்படுத்தாமல் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தவர் தந்தை பெரியார். சமூக வரலாற்றில் பெரியாருக்கு தனி இடம் உண்டு. அவரது இலட்சியம் மக்களிடையே சமத்துவத்தையும் சுய மரியாதையையும் நிலை நிறுத்துவதாகும். அவரது சமூகநீதி பய ணம் முழுமையாக வெற்றி அடையாவிட்டாலும் குறிப்பிடத் தக்க பலனை தந்துள்ளமையை மறுக்கவோ மறக்கவோ முடியாது. சாதிய படிநிலைகள் காக்கப்படும் கருவறைகளில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆக வேண்டும் என்ற பெரியாரின் போராட்டத்தின் விளைவே இன்று அனைத்து சாதியினரும் அர்ச்ச கர் ஆகும் தமிழக அரசின் முன்னெடுப்பாகும்.

தந்தை பெரியாரின் போராட்டங்களால் தமிழகத்தில் சாதிய கொடுமைகள் முற்றாக ஒழிந்துவிட்டன என்று கூறுவதற்கில்லை. சாதியின் பெயரால் அநீதிகள் இந்திய சமூகத்தில் நிகழ்த்தப்படு வது நிற்கவில்லை. சாதியின் பெயரால் மனிதக் கழிவுகளை மனி தனே அகற்றும் அவலநிலை இன்றும் தொடர்கிறது. பட்டியலின சாதியினருக்கு கண்ணியமிக்க வாழ்வும் மரணமும் மறுக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இந்தியாவில் ஏழ்மையும் சாதி ஒடுக்கு முறையும் இணைந்தே பயணிக்கிறது. சமூகத்தில் தீண்டாமை சட் டத்தில் மட்டுமே ஒழிக்கப்பட்டிருக்கிறது. நடைமுறையில் வெவ் வேறு வடிவங்களில் பயணித்துக் கொண்டிருக்கிறது. தேர்தலில், வேட்பாளர் தேர்வில், நிர்வாகிகள் நியமனத்தில் சாதியம் செல் வாக்கு செலுத்துவது மாறவில்லை. திராவிட கட்சிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. நாட்டின் முதல் குடிமகன் என்ற பெருமை மிக்க இந்தியாவின் இன்றைய ஜனாதிபதி பட்டியலினத்தவர் என்பதால் குறிப்பிட்ட சில இந்து கோயில்களுக்கு சென்று வழிபட அவர் இந்துவாக இருந்தாலும் ஆகம விதிகளின்படி அவர் அனுமதிக் கப்படுவதில்லை என்ற பாரபட்சம் மறையவில்லை. அதாவது உயர் அதிகாரம் உயர் பதவி அனைத்தையும் தாண்டி சாதியம் சமூகத்தை கட்டுப்படுத்துவது தொடர்கிறது என்பதாகும். சாதி மாறி திருமணம் செய்பவர்கள் மிகக் கொடூரமாக கொல்லப்படுகி-றார்கள். பிராமணியத்தின் வீரியம் சமூக வளர்ச்சியினால், இட ஒதுக்கீட்டு கொள்கையால் சற்று குறைந்த போதும் இடைசாதியி னரின் ஆதிக்க மனப்பான்மை சமூக அமைப்பில் சற்று ஓங்கி வருவதையும் காணமுடிகிறது. இவ்வாறு மேற்குறிப்பிட்ட சாதிய வன்மங்கள் இன்றும் இருந்த போதும் பெரியார் போன்றவர்களின் சமூக விழிப்புணர்வு காரணமாக அவை மட்டுப்படுத்தப்பட்டிருப் பதை பெருமளவில் காணலாம். வீழ்ந்து கிடந்தவர்களை தட்டி எழுப்பி தன்மானப் பாதையை காட்டிச் சென்றவர் பெரியார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திரு. திருமாவளவன் கூறு வதைப் போன்று இந்திய சமூகம் சாதிய கட்டமைப்புகளால் ஆனது. சாதியக் கூறுகள் இல்லாமல் ஒரு தனிமனிதனின் வாழ்க்கை இங்கே நகர்வதில்லை. இது ஆயிரக்கணக்கான தலை முறைகளாக நிலவுகிறது. எனவே அதற்கு எதிரான பலமான போராட்டத்தை முன்னெடுத்தவர் பெரியார். சாதிய வன்மத்தின் வேகத்தை மட்டுப்படுத்தியவர் பெரியார். சமூக நீதிக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் பெரியார் என்பதால் பெரியார் பிறந்த நாள் சமூக நீதி நாளாக கடைப்பிடிக்கப்படுமென தமிழக முதல்வர் திரு. ஸ்டாலின் அறிவித்துள்ளார். பெரியாரின் பங்களிப் புதான் சமூகத்தில் பரவலான வலுவான அடித்தளத்தை உரு வாக்கி தந்திருக்கிறது. பலதரப்பட்ட கருத்துக்களை மிக துணிச் சலாக கூறிவந்த பெரியார் மீது பல்வேறு விமர்சனங்கள் இப்போ தும் கூறப்பட்டு வருகின்றன. ஆனால் சமூக மாற்றத்தில் பெரியா ருக்கு பெரும் பங்குண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கும் பெரியார் தேவைப்படுகிறார் என்பதை யாராலும் மறுக்க முடியாது. சாதிய ஒழிப்பை இன்று கடுமையாக பேச முடி கிறதென்றால் அதற்கு பெரியார் ஏற்படுத்திவிட்டுப்போன அடித்த ளமே காரணம். எனவேதான் பெரியார் சமூக சீர்திருத்த இயக்கத் தின் தந்தை என அழைக்கப்படுகிறார்.


‘நம் கடவுள் சாதி காப்பாற்றும் கடவுள்’

‘நம் மதம் சாதி காப்பாற்றும் மதம்’

‘நம் அரசாங்கம் சாதி காப்பாற்றும் அரசாங்கம்’

‘நம் இலக்கியம் சாதி காப்பாற்றும் இலக்கியம்’

‘நம் மொழி சாதி காப்பாற்றும் மொழி’



jeyasingh@thaiveedu.com

# ஆவண வகை இலங்கைத் தமிழ் நாவல்களுள் அதி உயரம் ஏறிய படைப்பு!

## சாந்தனின் 'சித்தன் சரித'த்தை முன்வைத்து

- தேவகாந்தன்

'கதையென்ற சொல்லாடல் தமிழில் புனைவு என்பதாகவே காலங்காலமாய் வழங்கப்பட்டு வருகிறது' என சீனிவாசன் நடராஜனின் 'தாளடி' நாவல் முன்னுரையில் மாலன் மிகச் சரியாகக் குறிப்பிடும் வரியோடு இந்த மதிப்புரையைத் தொடக்குவது சிறப்பு. புனைவு என்பதற்குரிய சங்கத் தமிழ்ச்சொல்லாய் 'பொய்மொழி' என்பதை புறநானூற்றிலிருந்து தருகிறார் அவர். இம்முன்னெடுப்பு காலச்சுவடு வெளியீடாக 2021ல் வெளிவந்த சாந்தனின் 'சித்தன் சரித'த்தின் கணிப்பீட்டிற்கு அவசியமாகும் விதத்தை இவ்வுரையீட்டின் இறுதியில் வாசகரால் புரியமுடியுமென நம்புகிறேன்.

பெரும்பாலும் மனிதக் கரம் படும் எந்தக் கலையிலும் புனைவேறிவிடுமென்று சொல்லப்படுவதுண்டு. எந்தக் கலையுமே 'போல' செய்வதான பிரதியாக்கமில்லை. போலச் செய்வதில் கலைஞனுக்கு இடமில்லாதவரையில் கலைத்துவம் சேர்வது எங்ஙனம்? அதனால்தான் எந்தக் கலையிலும் புனைவுண்டு எனப்படுகிறது.

நவீன இலக்கியங்களான சிறுகதை நாவல்கள் புனைவின் அதிக பட்ச உச்சம் தொடுபவை. நாவல்களில் சுயவரலாற்றுப் பாங்கு (Auto biographical Novel), ஆவணப் பாங்கு (Documentary Novel) என்ற வகைமைகளை இலக்கிய விமர்சனம் முன்மொழிகிறது. அவற்றிலும்தான் புனைவுண்டு என்கிறது பின்நவீனத்துவம். இதை ஒப்புக்கொள்ள முடியும். வரலாறு எழுதியலில்கூட அதன் இருண்மைகளையும் இடைவெளிகளையும் நிரவ புனைவு கைகொடுப்பதாக வரலாறெழுதிகள் இன்று ஒப்புக்கொள்கிறார்கள்.

'சித்தன் சரிதம்' தன்னை நாவலென்று சொல்லிக்கொண்டு வந்திருக்கிற ஒரு பிரதி. ஆயினும் அது ஒரு கதையையல்ல, பலரின் சம்பவங்களையே கொண்டிருக்கிறது. உள்ளோடிய ஒரு கதை உள்ளதாயினும், அது பெரும்பாலும் சித்தனென்ற பாத்திரத்தின் குணநல விஸ்தரிப்பின்றியே நகர்ந்திருக்கிறது. லோகேஸ்வரி-யென்ற பாத்திரம் இன்னும் உணர்வுரீதியான விளக்கம் பெற்றிருப்பதாகச் சொல்ல முடியும்.

'சித்தன் சரித'த்தின் உண்மையான கதாபாத்திரங்களாய் காலத்தையும், இடத்தையும்தான் கொள்ளமுடிகிறது. படைப்பாளியின் நோக்கமும் இதுவென்று கொள்ளுமளவு அவையே வலுவானவையாயும் இருக்கின்றன. சற்றொப்ப 1940களிலிருந்து 1990கள்வரையான அரை நூற்றாண்டுக் காலத்தையும், யாழ் குடாநாட்டிலுள்ள எந்தக் கிராமத்தையும் மாதிரியாய்க் கொள்ளமுடியுமாயினும் பழைய புலம், இரட்டைக்குளம், குறிஞ்சிலி ஆகியவற்றோடு முக்கியமாக நிலவரையாக அல்லிப்புலத்தையும் இது கொண்டிருக்கி-றதாய்க் கொள்ளலாம்.

இது புனைவுக்கான ஒரு மொழியைக் கொண்டிருக்கவில்லை என்பது வாசக அவதானத்தில் தவறிவிட முடியாது. ஆயினும் அது தன் விவரணையை விபரமாக விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட மொழியானது ஒரு விசேஷித்த தன்மையைக் கொண்டதாகயிருக்கின்றது. அதன் நடைகூட கிட்டமுட்ட நாட்குறிப்பின் எழுத்துநடையாய் அங்கங்கே காணக்கிடப்பது அதனால்தான். இலங்கையின் சுமார் 140 ஆண்டுக் கால நாவல் வரலாற்றில் கையாளப்படாத தனித்துவம் கொண்டதாய் அந்த நடை இருக்கிறது. இந்நூலை பிரதியாக்குவதே அதன் முதல் பகுதியிலுள்ள மொழியும், நடையுமென்றாலும் தகும்.

நூலில் ஒரு மரணத்தின் நினைவலை இவ்வாறு எழுகிறது: 'அப்பு கூடச் சாக முடியுமென்று யார் நினைத்திருக்க முடியும்? அதுவும் இந்த வயதில், அதிலும் இப்படி? ஆனால் அது நடந்தது, இடி விழுந்த மாதிரி' (பக்: 161) போன்ற உரைவீச்சுக்கொண்ட வரிகள் உளவாயினும், ஆவண வகை நாவலுக்கான ஒரு நடையைப் பிரதி கொண்டிருப்பதே அதன் சிறப்பாகவும் ஆகிநிற்கிறது.

பல்வேறு இலக்கிய வகைமைகளுள் தன்னை வெளிப்படுத்தியிருந்தாலும், அதிகமான சிறுகதைப் படைப்புக்களை வெளியிட்டிருக்கும் சாந்தனின் 'ஒட்டுமா' (1978) நாவலும், மற்றும் 'விளிம்பில் உலாவுதல்' (2007) குறுநாவல் தொகுப்பும் முக்கிய கவனம் பெற்றவை. கடந்த காலத்திய அவரது பயண நூல், சிறுகதை, நாவல் என்ற படைப்பினங்களில் கையாளப்பட்ட எந்த நடையையும்விட 'சித்தன் சரித'த்தின் நடை வேறுபட்டு நிற்பது நிஜமாகும். அந்த உயர்ச்சியின் பின்னணியில் அவர் கையாண்ட மொழியும் நடையும் இருக்கின்றன. காலத்தில் புழங்கிய சொற்களை நினைவிலிருந்து இழுத்துவந்து படைப்பில் நிரந்தரம் ஆக்கியதன்மூலம், தமிழின் மொழி வளத்தை மிகுப்பிக்கும் பணியையும் சாந்தன் நிறைவேற்றியிருக்கிறார் என்பதை இங்கே அடையாளப்படுத்தவேண்டும்.

இந் நாவல் மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது. முதலாவது பகுதி 'பாலன் - விடலை' எனவும், இரண்டாவது 'காளை' எனவும், மூன்றாவது 'முதுமகன்' எனவும் மகுடமிடப்பட்டிருக்கின்றன. சித்தனின் பருவங்களைக்கொண்டு அமைந்த பகுதிகளேயானாலும், இரண்டாவதில் ஓரளவும், மூன்றாவது பகுதியில் சற்று அதிகமாகவும் மட்டுமே சித்தன் பாத்திரம் இடம்பெறுவது உண்மை. அவரை முழு உணர்வுள்ள பாத்திரமாய் நாவலில் காண முடிவதில்லை. இவ்வகை நாவலினத்துக்கு அந்தளவு உணர்வுபூர்வமான விஸ்தரிப்பு அவசியமுமில்லை. அல்லிப்புலத்தை மையமாக்கி விரியும் முதலாம் பகுதி தன்னுடைய விவரணைகளைச் சிறப்பாகவே செய்துவிடுகிறது. இரண்டாம் பகுதி சித்தனின் பாத்திரமாகவன்றி அக்கால கல்விநிலை சார்ந்து விவரணம் தருகிறது. மூன்றாவது பகுதி சித்தனின் பணியும், திருமணமும், பணியோய்வுமாக நிறைவெய்துகிறது.

இவற்றில் வீறார்ந்தும், ஆவணப் பாங்கில் அமைந்தும் விளங்குவது முதலாவது பகுதியே. நாவலின் நடையும் மொழியும் சிறப்புப் பெறுவதும் இப் பகுதியிலேயே நிகழ்கிறது. இப் பகுதியில் கலாச்சாரப் பதிவின் செழுமை அதிகம். ஊர் எப்போதும் கலாச்சார கூறுகளின் மையமாகவே கருதப்படுவது. கொடியேற்றுதல் (பட்டம் விடுதல்), பேதி மருந்து குடித்தல், சனி முழுக்கு, பார்வை பார்த்தல், வீட்டு அத்திவாரம் போடுதல், புதுமனை குடிபுகுதல், கோயில் திருவிழாக்களென வாழ்முறையும் கலாச்சாரமும் நிறைவாகப் பேசப்படும் பகுதியும் இதுதான்.

நரசிம்மலு நாயுடு என்பவர் 'தென்னிந்திய சரித்திரம்' என்ற நூலை எழுதுகையில், நாயக்கர் கால சரித்திரத்தில் பல கால வெளி-

களை எதிர்கொண்டார். அவற்றை ஈடுசெய்ய திரிகோணமலை த.சரணமுத்துப்பிள்ளையின் 'மோகனாங்கி' நாவல் தமக்கு பெரிதும் உதவியதாக அதில் குறிப்பிட்டுள்ளார். அதுபோல சமூகம் மொழி வரலாறு சார்ந்த ஆய்வுக்கான பல தகவல்களை 'சித்தன் சரிதம்' கொண்டிருக்கிறது. தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும், குறிப்பாக யாழ் குடாநாட்டுக்கும், இடையேயிருந்த நெருங்கிய ஊடாட்டத்தை சில தகவல்கள் வெளியிட்டுநிற்கின்றன. உதாரணமாக கேரளத்திலிருந்து வந்த சிலர் இங்கு உறைந்திருந்த தகவல் சொல்லப்படுகிறது.

நாவலின் 190ம் பக்கத்தில் இவ்வாறு வருகின்றது: 'ஆறண்ணாவைப்போல் அந்தமாதிரிப் படங்கள் கீறக்கூடிய இன்னும் ஒரேயொருவனைத்தான் சித்தனுக்குத் தெரியும். அவன், திருவல்லம். மலையாளத்து ஆட்கள். மூன்று நாலு பரம்பரையாக யாழ்ப்பாணத்திலேயே வசிக்கிற குடும்பம். கேரளத்திலுள்ள தங்கள் ஊரின் பெயர் அது என்று திரு எப்போதும் சொல்வான்.'

அதுபோல தென்னிந்தியாவிலிருந்து வந்த 'கொழும்புச் செட்டிகள்'பற்றியும், அவர்களது மனநிலைபற்றியும் 2:13ம் அதிகாரத்தில் விவரங்கள் உள.

இவ்வாறு வரலாற்றுக்கு, அதன் ஆய்வுத் தொடர்ச்சிக்கு, தேவையான மூலங்களை அளிக்கின்றது இது. இவை யாவும் சாதாரண கதைசொல்லும் நாவல்களைவிட உயர்ந்தவொரு தளத்திற்கு 'சித்தன் சரித'த்தை உயர்த்துகின்றன.

முதலாம் பகுதியில் 1958ம் ஆண்டுக் கலவரமும், இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் 1977 மற்றும் 1983ம் ஆண்டுகளின் கலவரங்கள் குறிப்பிடப்படுகின்றன. பாத்திரங்களின் உரையாடலிலும், ஆசிரிய கூற்றாகவும் அவை பிரதியில் இடம்பெறுகின்றன. இலங்கை வரலாற்றைக் குலுக்கிய வலிகாமத்தின் புலப்பெயர்வு மூன்றாம் பகுதியின் இறுதியில் இடம்பெறுகிறது. அதனால் இரண்டாம் பகுதி நினைவோடையாக உருமாறிப் போக, மூன்றாம் பகுதி சமகால வரலாற்றுப் பதிவாக வடிவம்கொள்கிறது. ஆயினும் அதன் பிரதம வெளிப்பாட்டுக் கூறு முதலாம் பகுதியின் விவரணையாகவே இருக்கிறது.

நாவலின் விசேஷித்த தன்மைகளும், குறைபாடான அம்சங்களும் சந்திக்கும் புள்ளியும் இதுதான். சம பலத்துடன் படைப்பைக் கொண்டுவந்து சேர்த்ததில் படைப்பாளியின் திறமை காணக் கிடக்கிறது. ஒரு சாதாரண நனைவிடை தோய்தலாகவும் நிகழ்வுப் பதிவாகவும் ஆகியிருக்கவேண்டிய நூல், நாவலாக உருமாறும் விந்தை இங்கேதான் சம்பவிக்கிறது. காலத்தையும் இடத்தையும் பாத்திரங்களாக்கி அதில் லோகேஸ்வரி, பரிகாரி அப்பு, குருவன், பிந்து, சட்டிச் சாமிபோன்ற அற்புதமான மனிதர்களை உலவவிட்டதன் மூலம் இதை படைப்பாளி சாதித்திருக்கிறாரெனச் சொல்லமுடியும்.

யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம்பெற்ற ஒரு சமூகத்தின் கதையையே இது பேசுகிறதென்றாலும், பெரும்பான்மைச் சமூகத்தின் வாழ்வியல், கலாசார, அரசியல் பாங்கினை முடிந்தளவு இலக்கியப் பிரத்தியட்சமாக்குகிறது நாவல்.

நாவல் கொழும்பு, கட்டுபெத்த, மாவனல்ல, கண்டியென பிற மாவட்டங்களுக்கும் பயணிக்கிறதானாலும், காலத்தின் பதிவை, வாழ்முறையின் துலக்கத்தையும் வீச்சையும் செப்பமாகக் காட்ட அது யாழ் மாநிலத்தையே தேர்ந்தெடுக்கிறது.

மூன்றாம் பகுதியில், ஏற்கனவே சொல்லப்பட்டதுபோல், மகாஇடப்பெயர்வான வலிகாமப் பெயர்ச்சி வர்ணிக்கப்படுகிறது. அந்த இடப்பெயர்விலுள்ள வலி நாவலில் போதுமான அளவு வெளிப்படவில்லையென்றே கருதக்கிடக்கிறது. இடம்பெயர்பவர்களில் காணப்படவேண்டிய அவல உணர்வு, குதூகலமாய் அவர்கள் மனத்துள் அமுங்கிக் கிடக்கிறது. ஆனால் இடம்பெயர்ந்தவர்களில் சிலர் ஊர் திரும்பி தம் வீடுகளதும் நிலத்தினதும் சீர்கேடுகளைக் கண்டதில் அடைந்த அவலம் வெகுசிறப்பாகப் பதிவாகியுள்ளது.

நாவலின் சிறப்பான இன்னுமோர் அம்சம் அது வெகு அவதானமாக மெய்ப்புநோக்குகை செய்யப்பட்டிருப்பதுபற்றி கட்டாயம் குறிப்பிடப்படவேண்டும். மிக அபூர்வமாக ஓரிரு சொற்பிழைகள். மேலும் காற்புள்ளி, முக்காற்புள்ளி, நிறுத்தக் குறி ஆதியனவும் தகுந்த சந்திகளில் இடம்பெறுவதையும் சொல்லவேண்டும். தொகையளவில் காற்புள்ளிகள் அதிகமாய் இடம்பெறுகின்றன நாவலர் பதிப்புப்போல. வாசிப்பில் ஐயம் எழுவதைத் தவிர்க்கும் விதமான அத்தேவையைப் புரிந்துகொள்ள முடிகிறது.

இன்னுமொரு விஷயமும் இந் நாவலில் அவதானப்படவுண்டு.

செங்கைஆழியானின் 'வாடைக் காற்று' நாவல் வீரகேசரிப் பிரசுரமாக 1973ல் வெளிவந்தது. அதில் நெடுந்தீவு மக்களில் சிலருக்கு வெள்ளையினத்தவரின் உடலம்சங்கள் இருப்பதற்குக் கூறப்பட்ட காரணத்தினால் படைப்பாளிக்கு எதிராக அவ்வூர் ஆக்ரோஷங்கொண்டு எழுந்தது. வெள்ளையின உடற் சாய்ங்கல்களின் வெளிப்பாட்டிற்கான காரணம் ஆய்வுரீதியானதல்ல. யூகமானது. அதை கற்பனை ஊரொன்றில் ஏற்றிக்காட்டினாலும் புனைவின் வீச்சாகப் பொறுத்துப்போக வாசகருக்கு முடிந்திருக்கும். ஆனால் வாழும் ஊரொன்றுபற்றிய அவ்வகை அபிப்பிராயம் கேள்விக்குரியது. அதற்கான எதிர்ப்பு நியாயமானது. ஆனால் கருத்தின் எதிர்ப்பாகமட்டும் அது இருப்பது கட்டாயம். விவாத நிலையில் அப்பிரச்சினை தீர்க்கப்பட்டாலும் படாவிட்டாலும் இந்த நிலைப்பாடு எழுத்தாண்மையின் சுதந்திரத்திற்கு முக்கியமானது. தமிழகத்தில் பெருமாள் முருகனின் 'மாதொருபாகன்' நாவலுக்கு இதுவே நடந்தது.

அத்தகு பிரச்சினையொன்றை 'சித்தன் சரிதம்' துணிகரமாக முன்வைத்திருக்கிறது. இது குறித்து நாவலில் வரும் வரிகள் இவை:

'செம்பட்டை மயிர், அல்லது பூனைக்கண், அல்லது நல்ல வெள்ளை நிறம் என்ற ஒவ்வொன்றோடும் சிற்சிலபேரை சிப்பித்திட்டியில் சித்தன் கண்டிருக்கிறான். 'ஓ ஓ?'

'அது உனக்குச் சொன்னா என்ன, தம்பி? அந்தப் போத்துக்கீசப் பறங்கி ...யள்தான் காரணம்! அந்த நாயள்!' சித்தனுக்குப் புரிந்தது. மாரியப்புவின் கோபத்தின் நியாயமும்.

'சில அப்பாவிப் பெண்புரசை வெருட்டி, வில்லங்கப்படுத்தி, அலங்கோலம் பண்ணி!' தலையை நீட்டி வெற்றிலைச் சாற்றை வெறுப்புடன் துப்பினார்.' (பக்:200)

2.6ம் அதிகாரத்தில் வரும் சிப்பித்திட்டி, மட்டிக்குளி ஆகிய கடலோரக் கிராமங்களின் வர்ணிப்பு அற்புதமாக வந்திருந்தது. சிப்பித்திட்டி மக்களின் உழைப்பும் முயற்சியும் போற்றப்படும் விதமாகவே பதிவாகியுள்ளன. ஆனால் அப் பகுதிகளில் சிலபேரிடம் காணப்படும் பறங்கியின உடலம்சங்களின் காரண விளக்கம் மாரியப்பு வாயிலிருந்தே வருவதானாலும், பெண்களின் இணக்கமின்றியே நிகழ்வதாய்த் தெரிவிப்பதானாலும் அது எந்த நியாயத்தோடும் பொருந்திப்போக மறுக்கவே செய்யும்.

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்திருக்கக்கூடிய தாய் சொல்லப்படும் இச் சம்பவம் குறித்த ஐதீகங்கள் அவ்வூரில் இருந்திருக்கக்கூடும். அது குறித்து தெரியவந்திருப்பின் அதை வெளிப்படுத்துவதற்கான வெளிகள் வேறு விதங்களில் இருக்கின்றன. விவரணமாகச் சென்ற தன்மையிலிருந்து பிரதி மீண்டு புனைவுக்கு \ மீபுனைவுக்கு ஏறியிருக்கவேண்டிய தருணம் இது. 'இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்' மற்றும் 'உலக இலக்கிய'த்தைத் தந்த படைப்பாளி இதை ஒப்புக்கொள்வாரென நம்பலாம்.

மொத்தத்தில் இலங்கையின் நாவலிலக்கியம் பெருமைப்படக்கூடிய ஆக்கம் 'சித்தன் சரிதம்'. அதனளவு உயரத்தை இலங்கையின் ஆவண வகைத் தமிழ் நாவலெதுவும் இதுவரை அடைந்திருக்கவில்லை என்பது மிகையான கூற்றல்ல.



devakanthan@thaiveedu.com

# இலங்கையில் தேசியவாதமும் இனவாதமும் - 1948-1956

ஆங்கில மூலம்: சி. அரசரத்தினம்
தமிழில்: க. சண்முகலிங்கம்

**அறிமுகம்:**

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகள் பற்றிய கல்விமையம் (Centre for South and East Asian Studies) நடத்திய பாடநெறியில் பயின்ற மாணவர்களுக்கு பேராசிரியர் சி. அரசரத்தினம் 1982 ஜனவரி - பெப்ரவரி காலத்தில் நிகழ்த்திய விரிவுரைகள் 1986ல் சென்னைப் பல்கலைக்கழகத்தால் ஒரு நூலாகப் பிரசுரிக்கப்பட்டது. SriLanka after Independence: Nationalism Communalism and Nation Building என்பது இந்நூலின் தலைப்பாகும். 90 பக்கங்களுடைய இந்நூலில் இலங்கையில் சுதந்திரத்திற்கும் பின்னரான மூன்று புத்தாண்டுகளின் அரசியல் வரலாறு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இந்நூலின் முற்பகுதியில் 1948 முதல் 1956 வரையான காலப்பகுதியின் அரசியல் வரலாற்றைக் கூறும் பகுதி தமிழாக்கம் செய்து இங்கே தரப்பட்டுள்ளது.

## சுதந்திரத்திற்குப் பிந்திய ஒன்பது ஆண்டுகள் பற்றிய வரலாற்றை விளங்கிக்கொள்வதற்கு முதற்படியாக:

இலங்கைக்குச் சுதந்திரம் எப்படிக் கிடைத்தது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். 1948ல் இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரத்தின் இயல்பு, அதனைப் பெற முயற்சி எடுத்த தலைவர்கள் யார், அத்தலைவர்கள் கடைப்பிடித்த செயல்முறைகளும் அவர்களை ஊக்குவித்த கருத்தியல்களும் எத்தகையன என்பனவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை. ஒரு சுதந்திர தேசத்தின் பிறப்பு என்ற நிகழ்வு நடைபெற்றபோது தோன்றிய அறிகுறிகள் அரசியல் அறிஞர் என்ற சோதிடனுக்கு அவசியமானவை. அவ் அறிகுறிகளை வைத்து அவர் எதிர்காலம் பற்றிய எதிர்வு கூறல்களைத் தெரிவிப்பதுண்டு. வரலாற்றாய்வாளரும் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட முன்னேற்றங்களைப் பற்றிப் பேசும் போது மேற்குறித்த பின்னணியை உற்று நோக்குவது அவசியமானது. இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கை அதிஷ்டவசமாக ஒரு யுத்தத்தில் இருந்து தப்பிக்கொண்ட நாடாக விளங்கியதைக் காணலாம். 1942ல் யப்பானின் யுத்தக் கப்பல்கள் பிரித்தானியாவின் கடற்படைகளை ஆசியப் பிராந்தியத்தில் அழித்துவிட ஆயத்தம் செய்தன. யப்பான் இறுதியில் தோல்வியைத் தழுவியவேளை கொழும்பிலும், திருகோணமலையிலும் இரு குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றன. இலங்கை யப்பானின் நேரடியான ஆபத்துக்கு ஒரு போதும் உட்படவில்லை. 1943ல் அட்மிரல் மவுண்ட் பேடன் பிரபு தென்கிழக்காசியாவின் தலைமையகமாக இலங்கையைத் தேர்ந்து கொண்டார். இந்தியாவுடன் ஒப்பிடும் போது பிரித்தானியாவிற்கு இலங்கையின் உள்நாட்டு அரசியல் தொல்லையற்றதாக இருந்தது. இலங்கையின் மிதவாதத் தலைவர்கள் பிரித்தானியாவின் யுத்த முயற்சிகளுக்குத் தமது ஆதரவைக் கொடுத்தனர்.

இலங்கையின் சட்டசபையின் காலம் 1941ல் முடிவடைந்தது. யுத்தம் காரணமாக அதற்கு கால எல்லை குறிக்கப்படாத நீடிப்பு வழங்கப்பட்டது. அதனால் சட்டசபைக்குத் தெரிவான உறுப்பினர்கள் நன்றிக்கடன் உடையவர்களாக இருந்தனர். இலங்கையில் டொனமூர் அரசியல் யாப்பின் படியான நிர்வாகக் குழுக்கள் முறை தொடர்ந்தது. ஏழு குழுக்களின் தலைவர்கள் அமைச்சரவையாகச் செயற்பட்டனர். அவ் அமைச்சர்களிடம் உள்நாட்டு அலுவல்கள் தொடர்பான பொறுப்புகள் இருந்தன. ஆயினும் நிதி, பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் என்ற மூன்று விடயங்கள் ஏகாதிபத்திய அரசின் அதிகார எல்லைக்கு உட்பட்டதாய், ஆளுநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இலங்கை இருந்து வந்தது. இவ்வாறு இலங்கையின் அரசியல் தலைவர்களுக்கும் காலனிய அரசுக்கும் இடையில் இருந்தது போன்ற நல்லுறவு இந்தியாவில் இருக்கவில்லை. இந்தியாவில் மாநில அரசுகள் வெவ்வேறு இடங்களில் ஆட்சி புரிந்து வந்தன. பிரித்தானியாவின் யுத்த முயற்சிகளுக்கு ஆதரவு கொடுக்க மறுத்த இவ் அரசுகள் 1939ம் ஆண்டு பதவி விலகின. இதனால் இந்திய அரசு இந்தியாவின் யுத்தப் பிரகடனத்தை, மாநிலங்களின் தெரிவு செய்யப்பட்ட அரசுகளின் சம்மதமின்றியே அறிவித்தது. இலங்கையின் அரசியல் தலைவர்கள் அவ்வாறான தடையை பிரித்தானியாவிற்கு ஏற்படுத்தவில்லை. இதனால் பிரித்தானியாவும் இலங்கைத் தலைவர்களுக்கு நன்றியுடையதாக இருந்தது.

இந்தியாவிற்குச் சுதந்திரத்தை வழங்குவதற்கான ஆரம்ப முயற்சிகளை பிரித்தானியா மேற்கொண்டிருந்த வேளை, இலங்கைக்கும் சுதந்திரத்தை வழங்குவது பற்றிய முயற்சியில் இறங்கியது. 1943ம் ஆண்டு மே மாதம் அரசாங்கம் இலங்கையின் யாப்புத் திருத்தம் பற்றிய ஒரு பிரகடனத்தை வெளியிட்டது. யுத்தம் முடிவுற்ற பின் இலங்கைக்கு பொறுப்பாட்சியை வழங்கலாம் எனக் கூறப்பட்டது. அரசின் இப்பிரகடனத்திற்கு ஏற்ப, இலங்கையின் அமைச்சரவை ஒரு அரசியல் யாப்பை வரைய ஆரம்பித்தது. இவ்வாறு வரையும் போது இலங்கைக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்படமாட்டாது. பொறுப்பாட்சியே வழங்கப்படும் என்ற கட்டுப்பாட்டை அவர்கள் கருத்தில் கொண்டனர். அரசியல் யாப்பு வரைவைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அமைச்சரவையில் டி.எஸ். சேனாநாயக்க முதன்மைபெற்ற தலைவராக விளங்கினார். அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தை தனது தனிப்பட்ட பொறுப்பாக ஏற்றுக்கொண்ட அவர் காலனிய அரசின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தாமே நடத்தி வந்தார்.

1944ம் ஆண்டு முற்பகுதியில் அமைச்சரவை அரசியல் யாப்பு வரைபை எழுதிச் சமர்ப்பித்தது. வரைபு விரைவாகத் தயாரிக்கப்பட்டது. அதன் தயாரிப்பு வேலைகள் இரகசியமாகவே நடத்தப்பட்டன. வெவ்வேறு நலன்களையும் உடையோருடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளும் இரகசியமாகவே நடத்தப்பட்டன. சிறுபான்மையினர் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்பவராக அ. மகாதேவா அமைச்சரவையில் இருந்தார். பிரித்தானிய அரசுக்கு அரசியல் யாப்பு சமர்ப்பிக்கப்பட்டபின்னர் 1944ம் ஆண்டு யூலை மாதம் அரசியல் யாப்புப் பற்றி ஆராய்வதற்கான ஆணைக்குழு ஒன்றை அரசாங்கம் நியமித்தது. அமைச்சரவையின் யாப்பினை வரைந்த குழுவினை விட விரிந்த நோக்கு எல்லையுடையதாக ஆணைக்குழுவின் விடயப் பரப்பு அமைந்தது. பிரித்தானிய அரசு, இலங்கையின் சுதந்திரம் பற்றிய விடயம் முக்கியமானது. அதனை அமைச்சரவை என்ற சிறு குழுவின் பொறுப்பில் விட்டுவிட முடியாது. இந்த சிறு குழுவின் அரசியல் தலைவர்கள் ஏழு எட்டு ஆண்டுக

ளுக்கு முன் தெரிவு செய்யப்பட்டவர்கள், அவர்களது முடிவுகள் பரந்த பொது சனங்களினதும், நாட்டின் பல்வேறு பகுதியினரதும் பங்கேற்பு இல்லாமல் எடுக்கப்பட்டவை ஆகிய விடயங்களைக் கருத்தில் கொண்டே ஆணைக்குழுவினை யாப்புப் பற்றிய விசாரணைக்காக நியமித்தது எனலாம். யாப்புப் பற்றிய திறந்த விவாதம் வேண்டும். குறிப்பாக சிறுபான்மைக் குழுக்களின் (Minority Groups) பங்கேற்புடன் அரசியல் யாப்பு வரையப்பட வேண்டும் என்பதை பிரித்தானிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருந்தமை புலனாகிறது. இவை ஆணைக்குழுவின் அமைப்புப் பற்றிய பிரகடனத்திலும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தமை அவதானத்தில் கொள்ள வேண்டியதாகும்.

1944ம் ஆண்டு சோல்பரிப் பிரபுவின் தலைமையில் ஆணைக்குழுவை அமைக்கும் அறிவித்தல் வெளியிடப்பட்டது. ஆணைக்குழு டிசம்பர் 1944 முதல் ஏப்ரல் 1945 வரை இலங்கையில் தங்கியிருந்து மனுக்களைப் பல்வேறு தரப்புக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல், சாட்சியங்களைப் பதிவு செய்தல், இலங்கையில்



பல்வேறு இடங்களுக்குச் சென்று வருதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டது. அமைச்சர்கள் குழு ஆணைக்குழுவின் விசாரணையை உத்தியோக பூர்வமாக நிராகரித்தது. ஆயினும் டி.எஸ். சேனாநாயக்கவும் ஏனைய அமைச்சர்களும் தனிப்பட்ட சந்திப்புகளை மேற்கொண்டனர். இலங்கைக்கும் பொறுப்பாட்சியை வழங்கும் அரசியல் யாப்பை ஆணைக்குழு முன்மொழிந்தது. வெளிநாட்டு அலுவல்கள், பாதுகாப்பு, நாணயம் ஆகியன ஆளுநரின் அதிகாரங்களாக இருக்கும் என்றும் ஆணைக்குழு தெரிவித்தது. இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்தை ஆணைக்குழு முன்மொழியவில்லை. ஆயினும் 1943ன் அரசப் பிரகடனத்திலும் அமைச்சர் குழுவின் வரைபிலும் கூறப்பட்டனவற்றிற்கு அமைவான அந்தஸ்தை இலங்கைக்கு வழங்குவதாக அதன் முன்மொழிவுகள் அமைந்தன. ஆணைக்குழு அறிக்கை வெளியாகிய வேளை யுத்தம் முடிவுக்கு வந்தது. இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் அமைச்சர்கள் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வேண்டும் என்ற கோரிக்கைக்கு அழுத்தம் கொடுத்தனர். மீண்டும் இதற்கான முனைவுகள் டி.எஸ். சேனாநாயக்கவிற்கும் பிரித்தானிய அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தை என்ற வடிவத்தில் அமையலாயிற்று. 1945 ஆகஸ்ட் - செப்டம்பர் மாதங்களில் டி.எஸ். சேனாநாயக்க இதற்காக இங்கிலாந்து சென்றிருந்தார். டொமினியன் அந்தஸ்து வழங்குவதை இலகுபடுத்தும் வழிமுறையாக பிரித்தானியாவுடன் பாதுகாப்பு தொடர்பான உறுதிமொழிகளை வழங்கும் உடன்படிக்கைகளைச் செய்வதற்கும் டி.எஸ். சேனாநாயக்க விருப்பம் கொண்டிருந்தார். சோல்பரி யாப்பின் படியான மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரம் உள்ள அரசை உருவாக்கி எல்லை குறிக்கப்படாத இடைமாற்ற காலத்தின் முடிவில் டொமினியன் அந்தஸ்தை வழங்கலாம் என பிரித்தானிய அரசாங்கம் கருதியது. அவ் அரசு இவ்விடயத்தில் அவசரம் காட்டவில்லை. அமைச்சர்கள் புதிய யாப்பின்படி அரசை அமைப்பதற்கு முடிவு செய்தனர். அரசியல் யாப்பு சட்ட சபையில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.


1947ம் ஆண்டின் தொடக்கத்தில் சோல்பரி யாப்பைச் செயல்படுத்துவதற்கான இறுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை இரகசியமாகவும், மட்டுப்படுத்தபட்ட உள்நடவடிக்கைகளாகவும் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் தரப்பில் பேச்சுவார்த்தையை நடத்தியவர் ஓ.ஈ. குணதிலக எனும் அரச அதிகாரியே ஆவர். இவருக்கு மக்களின் ஆணை என எதுவும் இருக்கவில்லை டி.எஸ். சேனநாயக்கவின் நம்பிக்கைக்கு உரியவராக இவர் இருந்தார் என்பதே இவரின் தகுதியாகும். நாட்டில் அப்போதிருந்த அரசியல் சூழ்நிலை பிரித்தானிய அரசுக்கு செயலாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. சனப்பிரதிநிதிகள் சபைக்கான தேர்தல் நெருங்குகிறது என்ற எதிர்பார்ப்பு அரசியலைக் கொதிநிலைக்குக் கொண்டு சென்றது. அரசியலில் மட்டுமல்லாது தொழிற்சங்க இயக்கத்திலும் கொதிநிலை உயர்ந்து சென்றது. முதலீடுகளிற்கு பாதகமான விளைவுகள் ஏற்படமாட்டாது என்ற உத்திரவாதம், நாட்டின் பாதுகாப்புக்கு பிரித்தானிய பொறுப்பாக இருக்கும் என்பன போன்ற விடயங்களில் இலங்கையின் பிரித்தானிய சார்பு நலன் குழுக்களும் உறுதி மொழியை வழங்கின் தனிநபர்கள் பலரும் ஆதரவை வழங்கினர். இந்நிலையில் டொமினியன் அந்தஸ்தை நோக்கி அரசியல் நகர்வுகளை செலுத்துவதே பிரித்தானியாவின் நீண்டகால நலன்களை உறுதி-செய்வதற்கான ஒரே வழி என்பதை பிரித்தானிய அரசாங்கம் உணர்ந்தது. இதன் பயனாக எவரும் எதிர்பாராத வகையில் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்தை வழங்கும் இறுதி முடிவு வெளியாயிற்று. இந்த முடிவு எவ்வித ஆர்ப்பாட்டமும், உணர்ச்சிச் செறிவும் இல்லாத வகையில் வெளியிடப்பட்டமை இந்த முடிவுக்குப் பின்னால் ஏதோவொரு சதி இருக்கிறது என்ற எண்ணத்தை பலர் மனதிலும் உருவாக்கியது. இலங்கைக்கு உண்மையிலேயே சுதந்திரம் கிடைத்ததா அல்லது இந்த அறிவிப்பில் சூது ஒன்று உள்ளதா என்ற கேள்வி எழுந்தது. அமைச்சர் குழுவுக்கு எதிரான அரசியல் குழுக்களுள் அமைச்சர் குழுவினர் பிரித்தானிய அரசாங்கத்துடன் ஒன்று சேர்ந்து இலங்கை மக்களை ஏமாற்றிவிட்டனர் என்ற கண்டனக்குரல் ஒலித்தது. 1947ம் ஆண்டு யூன் மாதம் ஆளுநர் இலங்கையின் அரசியல் அந்தஸ்து பற்றி அறிக்கை-யொன்றை வெளியிட்டார். இதனையெடுத்து சேனநாயக்க சட்டசபையில் இது பற்றிய தனது விளக்கத்தை கூறும் முகமாக உரை நிகழ்தினார். அவ்வுரையில் ஓ.ஈ. குணதிலகவிடமிருந்து தமக்குக் கிடைத்த செய்தியைப் பற்றிக் குறிப்பிட்டார். இதன் பின்னர் சட்ட சபையில் அரசியல் யாப்பு மாற்றங்களுக்கு உருவம் கொடுக்கும் வகையில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டபோது ‘சுதந்திரம்’ என்ற ஐயத்திற்கு இடமில்லாத சொல் உபயோகிக்கப்பட்டது. இதன் பின்னரே இலங்கையின் விடுதலையின் உண்மைத்தன்மை யாது என்பது பற்றிய விவாதத்தில் தெளிவு பிறந்தது.

இலங்கையின் சுதந்திரம் நோக்கிய பயணப்பாதை தென்னாசியாவின் பின்னணியில் தனித்துவமானது. சமாதான வழியில் பேச்சுவார்த்தை மூலம் பெறப்பட்ட இச்சுதந்திரப்பாதை, காலனி ஒன்றிற்கும் சாம்ராஜ்ஜியம் ஒன்றிற்கும் இடையிலான உறவுகளின் முன்மாதிரியானது எனப் புகழப்பட்டது. பிரித்தானிய அரசியல்வாதிகளும், இலங்கையில் சுதந்திரத்தை பேரம்பேசி பெற்றவர்களான அரசியல்வாதிகளும் இம்மாதிரி பற்றிப் புகழ்ந்து பேசலாயினர். குறுங்கால நோக்கில் இலங்கையின் இப்பாதை மிகவும் பொருத்தமானது என்று கருதப்பட்டது. வன்முறையை கட்டவிழ்த்து விடுவதால் ஏற்படும் பயங்கர அனுபவம் தேவையானது தானா? கட்டுப்படுத்த முடியாத சக்திகளின் கோர தாண்டவத்தை அனுமதிப்பதால் கிடைக்கும் பயன் என்ன? வெகுஜனங்களால் புரிந்து கொள்ளமுடியாத விடயங்களில் அவர்களால் அறிவு பூர்வமாக தெரிந்து கொள்ள முடியாதவற்றில், அவர்களைப் பங்கு கொள்வதன் பயன் என்ன? போன்ற கேள்விகள் அப்போது கேட்கப்பட்டன. ஆனால் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிந்திய வரலாறு சமாதான வழியிலான இந்த மாதிரி பற்றிய மாயைகளைத் தகர்த்தெறிந்தது. புதிய வினாக்கள் பல வினவப்பட்டன. இவ்வினாக்கள் தேசியம், அரசியல் அதிகாரம், அரசியல் பங்கேற்பு அரசியல் நிறுவனங்கள், தேசியவாதக் கருத்தியல்கள் என்பன போன்ற மிக முக்கியமான விடயங்கள் சார்ந்தனவாக இருந்தன.

1943-47 காலத்தில் இலங்கையின் சுதந்திரம் பற்றிய பேச்சுவார்த்தைகளின் போதும், அரசியல் பேரங்களின் போதும், வெகு ஜனங்களின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவில்லை. மக்களின் பங்கேற்பும் இடம் பெறவில்லை. சுதந்திரம் பற்றி மக்கள் விவாதித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பிரச்சினைகள் பல இருந்தன.

அவர்களிடம் அச்சமும், எதிர்காலம் பற்றிய பயமும் இருந்தது. மக்களைப் பிளவு படுத்திய பல்வேறு பிரச்சினைகள் இருந்தன. இவற்றில் சில உண்மையானவை. சில உள்ளடங்கிய ஆபத்துக்க ளாக இருந்தன. மக்கள் இவை பற்றி விவாதிக்கவோ, கருத்துத் தெரிவிக்கவோ வாய்ப்பு வழங்கப்படாமலே இலங்கைக்கு சுதந்தி ரம் கிடைத்தது. வெகுஜன மட்டத்தில் இலங்கை மக்களிடம் நாட் டுப்பற்று கிளர்ந்தெழவில்லை. நாட்டுப் பற்று இல்லாத சுதந்திர மாக இலங்கையின் டொமினியன் அந்தஸ்தும் விடுதலைபெற்ற நாடு என்ற நிலையும் அமைந்தது. இச்சுதந்திரம் பற்றிய கேலிப் பேச்சும், நகைப்பும் இலங்கையர்கள் பெற்றுக் கொண்டது உண் மையான சுதந்திரமா அல்லது போலியானதா என்ற கேள்வியைக் கிளப்பியது. பிரித்தானியாவின் ஆதிக்கத்தைத் தொடருவதற்காக செய்யப்பட்ட பாதுகாப்பு உடன்படிக்கைகளின் பின்னால் உள்ள இரகசியம் யாது என்ற கேள்வி மேலெழுந்தது.

இலங்கையின் சுதந்திரத்திற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட முக்கிய தலைவர்களிடம், இலங்கை எங்கே போய்க்கொண்டிருக் கிறது என்பது பற்றிய தெளிவான சிந்தனை இருக்கவில்லை. அத்



தலைவர்கள் ஒரு அரசியல் கட்சியின் தலைமைத்துவத்திற்கு கட் டுப்பட்ட நபர்களாக இருக்கவில்லை. இலங்கைத் தேசியகாங்கி ரஸ் நீண்டகாலத்திற்கு முன்பே செயற்பாடு இழந்த அமைப்பாக மாறியிருந்தது. 1943ல் சேனாநாயக்க அவ் அமைப்பில் இருந்து இராஜினாமா செய்திருந்தார். ஏனைய அமைச்சர்கள் வெவ்வேறு குழுக்களோடும், அரசியல் போக்குகளோடும் சம்பந்தமுடையவர்க ளாக இருந்தார்கள். அவர்கள் ஒன்றுபட்ட ஒரு அமைப்பின் உறுப் பினர்களாக இருக்கவில்லை. அவர்களில் எவரும் கட்சி ஒன்றின் உறுப்பினர் என்ற வகையில் தேசிய அரசியல் பிரச்சினைகள் பற் றிச் சிந்திக்கவோ, செயற்படவோ இல்லை. முன்னணித் தலைவர்க ளிடம் அரசியல் பிரச்சினைகள் பற்றிய தெளிவான திட்டமோ புரிந் துணர்வோ இருக்கவில்லை. சுதந்திரம் பெற்றதன் பின்னரான ஏழு ஆண்டுகள் ஆட்சி செய்த ஐக்கிய தேசியக்கட்சி, 1946ம் ஆண்டி லேயே தாபிக்கப்பட்டது. அக்கட்சி அவசரத்தில் தோற்றுவிக்கப்பட் டது.

1944ம் ஆண்டு முதல் சிங்களவர் - தமிழர் பிரச்சினை அரசியல் உணர்ச்சிச் செறிவோடு பேசப்பட்டு வந்தது. ஜி.ஜி. பொன்னம்ப- லம் அவர்களின் தமிழ்க் காங்கிரஸ் தமிழ்த் தரப்பின் நியாயங் களை எடுத்துக்கூறியது. ஆயினும் இந்த விவாதம் பழைய பாணி யிலான கருத்துக்கள், சொல்லாடல்கள் சார்ந்தனவாகவே இருந் தன. அரசியல் யாப்பில் தமிழர்களுக்கான காப்பீடுகள், தமிழர் பிரதிநிதித்துவம் போன்றன விவாதத்திற்குரிய விடயங்களாகக் கொள்ளப்பட்டன. இவ்விவாதங்கள் 1921ம் ஆண்டில் பிரதிநிதித்து வம் தொடர்பாக எழுந்த பிணக்கின் தொடர்ச்சியாகவே அமைந் தன. பொன்னம்பலம் சமப் பிரதிநித்துவம் (Balanced Representa- tion) என்ற நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கையில் தன் முழுக் கவனத்தையும் செலுத்தினார். பெரும்பான்மையினருக்கும் சிறுபான் மையினருக்கும் சமப் பிரதிநிதித்துவம் (50க்கு 50) இருக்க வேண் டும் என்று கோரிய அவரும், ஏனைய சிறுபான்மைத் தலைவர்க ளும் சிறுபான்மை இனங்களின் உரிமைகளைக் காத்துக் கொள்வ தற்கான வேறுவழிமுறைகள் பற்றிச் சிந்திக்கத் தவறினர். எதிர்கா லத்தில் இலங்கையின் சிறுபான்மை இனங்கள் எதிர்நோக்கக் கூடிய பிரச்சினைகள் எவை என்பது தேசிய அரங்கத்திற்கு கொண்டு வரப்படவில்லை. இக்காரணத்தால் அமைச்சர்கள் குழு வும், அரசியல் யாப்பினைப் பற்றி ஆராய்ந்த சோல்பரி ஆணைக் குழுவும் சிறுபான்மையினங்களின் பிரச்சினை பற்றி மேலோட்ட மான கவனத்தையே செலுத்தினர். வெஸ்ட்மினிஸ்டர் முறையிலான பாராளுமன்ற அரசியல் முறைமை, அம்முறைமையில் கட்டுப்பா டற்ற சட்டவாக்க அதிகாரம் உடைய பாராளுமன்றம் என்ற நிறுவ னம் அமையப் போகிறது. அத்தகைய வெஸ்ட்மினிஸ்டர் முறை மையில் ஒரு பக்கத்தில் நிரந்தர பெரும்பான்மையும், மறுபக்கத் தில் நிரந்தர சிறுபான்மையும் உருவாகப் போகின்றன. இதனால் பல ஆபத்துக்கள் தோன்றப்போகின்றன என்ற விடயங்கள் பற்றி எவருமே கவனம் செலுத்தவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இலங்கையருக்கு அதிகாரத்தை கையளித்தல் பற்றிய பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டவரான பிரித்தானிய சிவில் சேவை அதி காரி ஒருவர் அரசியல் யாப்பு சிறுபான்மையினருக்கு வழங்கிய பாதுகாப்புகள் குறித்துப் பின்வருமாறு கூறினார்.

'மனிதனின் நுண்ணறிவால் சிறுபான்மையினருக்கு பகுத்தளிக்கக்கூ டிய பாதுகாப்புக்கள் என எவை இருக்க முடியுமோ அவற்றை உச்ச அளவில் வழங்கியிருக்கும்' அரசியல் யாப்பாக இலங்கை யின் அரசியல் யாப்பு உள்ளது. இன்று பின்னோக்கிப் பார்க்கும் போது சிவில் சேவை அதிகாரியின் இந்தக் கூற்று நம்ப முடியாத தாக உள்ளது. தேர்தல் தொகுதிகளை வரையறுப்பதில் சிறுபான் மைப் பிரிவினர்களுக்கு சாதகமான விடயங்கள் சில சேர்க்கப்பட் டது என்பதைத் தவிர்த்து பிரிவு 29 உபபிரிவு (2) மட்டுமே செயல் வலுவுடைய ஒரு பாதுகாப்பாக அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டி ருந்தது. சோல்பரி பிரபு பல ஆண்டுகள் கழிந்த பின்னர் நேர்மை- யோடு ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார். இலங்கையின் இனவாத உணர்வுகளின் ஆழத்தை தமது ஆணைக்குழு நன்கு உணர்ந்தி ருக்கவில்லை என்பதே அவர் குறிப்பிட்ட விடயம். அவ்வாணைக் குழு இன உணர்வுகளின் முழுப்பரிமாணத்தையும் உணர்ந்திருக்கு மாயின் அடிப்படை உரிமைகளை அரசியல் யாப்பில் சேர்த்திருக் கும். இந்தப் பிரச்சினைகள் அன்றைய விவாதங்களில் மேற்கி ளம்பி உரியவர்களின் கவனத்தை ஈர்க்கவில்லை, இவை பற்றிப் பிரச்சாரப்படுத்தவில்லை என்பது மிகப் பெரிய தவறாகும். இத்தவ றுக்கு காரணம் இலங்கையின் அரசியல் பரிணாமத்தை, மேலோர் குழுவொன்றின் இரகசிய நடவடிக்கையாக வைத்திருந்தமையே ஆகும்.

அரசியல் ஆய்வாளர்கள் இன்னொரு கோணத்திலும் ஒரு விமர்ச னத்தை முன்வைத்தனர். சோல்பரி யாப்பில் வெஸ்ட்மினிஸ்டர் முறையிலான மந்திரி சபையைச் சேர்த்தது பொருத்தமில்லை. அம்முறையைவிட டொனமூர் அரசியல் யாப்பின் நிர்வாகக் குழு முறைமை (Executive System) சிறுபான்மையினரின் அரசியல் பங் கேற்பிற்கு மிகவும் உகந்தவொரு கருவியாக இருந்திருக்கும் என் பதே இந்த விமர்சனம். இது விவாதத்திற்குரிய ஒரு கருத்தாகும். சோல்பரி அரசியல் யாப்பை விமர்சிப்பவர்கள் பின்வரும் குறை- களை எடுத்துக்காட்டினர்.

- அரசியல் கட்சி முறையின் வளர்ச்சி திரிபுபட்டதாக அமைந்தது.
- மந்திரிசபைச் சர்வாதிகாரத்திற்கு (Cabinet Dictatiorship) சோல் பரி அரசியல் யாப்பு வழிவகுத்தது.
- பாராளுமன்றத்தின் பின் ஆசனங்களில் அமர்ந்திருந்தவர்களும் (Back Benchers) எதிர்க்கட்சியினரும் அந்நியப்படுத்தப்பட்டனர்.

இதனால் சமூகத்திலும் முரண்பாடுகளும் கொந்தளிப்புகளும் மேற் கிளம்பின.

இக்குறைகள் இருப்பதாக ஏற்றுக்கொள்ளாதவர்களான இன்னொரு பிரிவினர் 1950கள் முதலாக அரசியல் கட்சிகளின் வளர்ச்சி ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியாகும் எனக் கூறுவதோடு, இதன் பய னாக,

- அரசியல் பங்கேற்ற Political Participation விரிவடைந்தது.
- சிறுபான்மையினரும் அரசியலில் பங்கேற்றனர் என்றும் கூறுகின் றனர்.

இவர்களின் கருத்துப்படி 1960களில் இலங்கையில் தோன்றிய அர சியல் பிரச்சினைகளுக்கு சோல்பரி அரசியல் யாப்புத்தான் கார ணம் என்று கூறுவது தவறு, வெஸ்ட் மினிஸ்டர் முறைமையில் முழுப்பழியையும் சுமத்த முடியாது என இவர்கள் கூறுவர்.

சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையின் அரசியலை இரண்டு அலைகளாக கிளம்பிய தேசியவாதங்களின் அடிப்படையில் சிலர் விளக்க முனைந்தனர். 20ம் நூற்றாண்டின் முதலாவது தேசியவாத அலை இலங்கைக்கு 1948ல் சுதந்திரம் கிடைத்தமை, அதன் பின்னரான எட்டு ஆண்டுகால ஆட்சி என்பனவற்றை உள்ளடக்கியது. இந்தத் தேசியவாத அலையை அடுத்து 1956ல் சடுதியான வேகத்துடன் இன்னொரு தேசியவாத அலை எழுந்தது. 1948 முதல் 1956 வரையான அமைதியான மாற்றங்களையடுத்து எழுந்த கொந்தளிப்பான நிலைமைகளை விளக்குவதற்கு மேற்குறித்த இரண்டு தேசியவாத அலைகள் என்ற வரைசட்டம் கவர்ச்சியுடையதாக விளங்கியது. சுதந்திரத்திற்கு பிந்திய காலத்தின் அரசியல் அனுபவம் தனித்துவம் வாய்ந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இக்காலத்தை 'தேசியவாத காலகட்டம்' என்று அழைப்பது பொருத்தமானதா? அக்காலத்தில் பல போக்குகள் அரசியல் அரங்கில் வெளிப்பட்டன. இவை யாவற்றையும் 'தேசியவாதம்' என்ற ஒற்றைக் கருத்தியலுக்குள் அடக்கி விடலாமா என்ற நியாயமான சந்தேகம் எழவே செய்கிறது. ஆளும் குழு உறுப்பினர்களிடையே சமூக ஒருங்கிணைப்பு இருந்தது. யாவரும் பொருளாதார நிலையில் ஒரே மட்டத்தினராய் இருந்தனர்.

இலங்கை வரலாற்றின் இக்காலகட்டத்தை விளக்குவதற்கு தேசியவாதக் கருத்தியல்களின் துணையை நாடுவதில் பயனில்லை. இக்காலகட்டத்தில் ஆட்சி அதிகாரம் ஒரு சிறு உயர்குழுவிடம் இருந்தது. அக்குழு இறுகப் பிணைக்கப்பட்ட ஒன்றுபட்ட குழுவாகவும் இருந்தது. இவ்வாளும் குழு எதிர்நோக்கிய வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்கள் என்பனவற்றின் போது அது எவ்விதம் பதிற்குறியை வெளியிட்டது. நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொண்டது எனப் பார்ப்பதே சரியான நோக்குமுறையாகும். இவ் ஆளும் உயர்குழு அதிகாரம், அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு போன்ற விடயங்களில் ஒருங்கிணைக்கப்பட்டதும் ஐக்கியப்பட்டதுமான குழுவாக இருந்தது. இக்குழுவினரிடையே படிப்படியாக பொதுவான கருத்துக்கள் எண்ணக்கருக்கள், தத்துவ நோக்குகள் உருவாகின. இக்கருத்துக்களை லிபரல் தேசியவாதம் (Liberal Nationalism) எனக்கூறலாம். இக்குழுவினரிடையே, முதலாளித்துவ வகுப்பினைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். இம்முதலாளிகள் வகுப்பு, 19ம் நூற்றாண்டு முதலாக பிரித்தானிய முதலாளி வகுப்பின் கீழ்நிலைக் கூட்டாளிகளாக இருந்து வந்தனர். பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் அதிகூடிய லாபம் உழைக்கக்கூடிய பகுதிகளில் பிரித்தானிய முதலாளிகளுக்கு விட்டுகொடுத்துவிட, அதன் குறைந்த லாபம் உடைய பகுதிகளில் இம்முதலாளி வகுப்பினர் பங்கெடுத்தனர். பிரித்தானிய மூலதனம் ஊடுருவாத துறைகளான காரியச்சுரங்க அகழ்வுத்தொழில், போக்குவரத்துத்துறை, ஏற்றி இறக்கல் தொழில், சேவைத்தொழில்கள், சில்லறை வர்த்தகம் என்பனவற்றில் இலங்கை முதலாளிகள் வகுப்பு தனது முதலீடுகளை விரிவாக்கியது. பெருந்தோட்டங்கள் துறை, வங்கித்துறை, ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் ஆகிய மிக முக்கியமான துறைகளில் பிரித்தானிய முதலீடுகள் ஆதிக்கம் செலுத்தின. இலங்கையின் சுதேசிய முதலாளி வகுப்பு இக்காலத்தில் புதிய முயற்சியாளர்களின் வரவால் விரிவு பெற்றது. சட்டம், மருத்துவம் போன்ற உயர் தொழில்களில் புகுந்து பணம் சேர்த்தவர்களும், நிலப்பிரபுத்துவ வகுப்பைச் சேர்ந்தவர்களும் வர்த்தக தொழில் துறைகளில் முதலீட்டுத் தொழில் முயற்சியாளர்களாகி சுதேசிய முதலாளித்துவ வகுப்பின் உறுப்பினர்களாகினர். இவ்வாறு விரிவடைந்த முதலாளி வகுப்பினரின் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி விளங்கியது.

ஆளும் உயர்குழாங்களுடன் இணைந்து கொள்வதற்கான இன்னொரு வழியாக ஆங்கிலக்கல்வி அமைந்தது. ஆங்கிலக் கல்வியால் ஒருவர் பல்வகையில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆங்கிலக் கல்வியின் அடைவு மட்டத்தை பொறுத்து ஒருவர் அடையக்கூடிய அதிகார மட்டமும் அடைந்தது. ஆங்கிலத்தில் உயர் தகைமையைப் பெற்ற ஒருவர் அதிகாரத்தின் உயர் மட்டங்களை எட்டிப்பிடிக்க முடியும். ஆங்கிலக் கல்வியின் தரம் குறைந்ததாயின் குறைந்த அதிகார மட்டப் பதவிகளுடன் திருப்தியுற வேண்டியிருந்தது. பல்கலைக் கல்வியைப் பெற்றவர்களும், சட்டம் மருத்துவம் போன்ற உயர்தொழில் துறைகளில் புகுந்து பணம் சேர்த்தவர்களும், அரசியல் அதிகாரம் உடைய உயர்குழாமுடன் இலகுவாகவே இணைந்து கொள்ள முடிந்தது. ஆங்கிலம் கற்றவர்களிடையே பல்வேறு படித்தவர்கள் இருந்தனர். அக்குழுவினுள்ளே படித்தவர்கள் இருந்த போதும் ஆங்கிலக் கல்வி அற்றவர்களில் இருந்து தம்மை அவர்கள் வேறுபடுத்திக் கொண்டு ஒரு குழுவாக அடையாளப்படுத்தினர். அவர்களது உடை நடை பாவனைகள் பிறரில் இருந்து வேறுபட்டவை. அவர்களின் உரையாடல் மொழியும் வேறுபட்டது. அவர்கள் வாழ்ந்த குடியிருப்பு சூழல் மேம்பாடுடையதாக இருந்தது. ஆங்கிலம் கற்றவர்கள் திருமண உறவுகளை ஆங்கிலம் கற்றவர்களுடனேயே வைத்துக் கொண்டனர். இவை யாவற்றையும் விட அதிகாரம் அவர்களிடம் இருந்தது. அரசியல், நிர்வாகத்துறை, உயர் தொழில்கள், பண்பாடு, பொருளாதாரம் என்ற அனைத்து வகை அதிகாரங்களும் ஆங்கிலம் கற்றவர்களிடம் இருந்தது.

இலங்கையின் உயர்குழாம் மூடுண்ட சமூகக் குழுவாக இருக்கவில்லை. அதற்குள் நுழைவதற்கான கதவுகள் திறந்தபடி இருந்தன. இத்தன்மை அதற்குப் பலத்தை வழங்கியது. 1940களில் கல்வி விருத்தி ஏற்பட்டது. குறிப்பாக ஆங்கிலக் கல்வி விருத்தியடைந்தது. சனத்தொகையின் 7% ஆனவர்கள் ஆங்கில அறிவு பெற்றவர்களாயிருந்தனர். இவ்வீதாசாரம் அதிகரித்துச் சென்றதால் ஆங்கிலம் கற்ற உயர்குழு விரிவடைந்தது. இக்குழு தம் பிள்ளைகளை மிகச்சிறந்த பாடசாலைகளுக்கு அனுப்பியது. பிள்ளைகளுக்கு சிறந்த வீட்டுச் சூழலை வழங்கியது. உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அரச பதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் மூலம் உயர்குழாத்தின் தலைமைக்குழு தன் பலத்தை நிறுவியது. இருந்த போதும் அதுகாலம் வரை ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக் கொள்ளாத குடும்பங்களும், சாதிப்படிநிலையில் தாழ்ந்த நிலையில் இருந்தோரும் வறியவர்களும் ஆங்கிலக் கல்வி மூலம் உயர் குழாத்துக்குள் நுழைவதற்கு வழி ஏற்பட்டது. சடுதியாகக் கிடைத்த சுதந்திரத்தின் பயனால் அரசுத்துறையிலும், தனியார் துறையிலும் வேலை வாய்ப்புகள் அதிகரித்தன. அரசியல்வாதிகளாகவும் கீழ்நிலையில் இருந்தோர் பலர் உயர்ந்தனர். இதன் பயனாக நாட்டின் வர்க்கக் கட்டமைப்பில் அடிப்படையான மாற்றம் இல்லாமலே உயர்குழாம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்தல் இடம் பெற்றது. இந்த வட்டத்திற்குள் உள்ளீர்க்கப்பட்ட ஆட்கள் அதன் வசிய சக்தியினால் தம்மை புதிய மனிதர்களாக மாற்றிக் கொண்டனர். மனப்பாங்குகளிலும் வாழ்க்கை முறையிலும் அவர்கள் உயர்குழாமின் உறுப்பினர்களாகத் தம்மை மாற்றிக் கொண்டனர்.

உயர்குழாம் உறுப்பினர்கள் முழுமையாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களாக இருக்கவில்லை. மேற்குமயப்பட்ட கல்வியை கற்ற இக்குழுவினரின் கணிசமான பங்கினர் எதிர்க்கட்சிகளிலும் சேர்ந்து கொண்டனர். அரசியல், பொருளாதார வளர்ச்சி பற்றிய மாற்றுக்கருத்துக்களை கொண்டோராக இவர்கள் விளங்கினர் பாராளுமன்றத்தில் மார்க்சிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்தோர் செல்வாக்கு மிக்க எதிர்க்கட்சி அரசியல்வாதிகளாக இருந்தனர். உலகக் கம்யூனிச இயக்கம் பற்றிய கொள்கை வேறுபாடு காரணமாக இவ் அரசியல்வாதிகள் மூன்று பிரிவுகளாகப் பிளவு பட்டிருந்தனர். மார்க்சிஸ்ட் எதிர்த்தரப்பினர் கட்சிகளின் தலைவர்கள் மேட்டிமை மிக்க உயர்குழாம் உறுப்பினர்களேயாவர். அக்கட்சிகளின் நிதி மூலங்களும், ஆளணிகளும் ஆங்கிலம் கற்ற குழுவின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்தது. இக்காரணத்தினால் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலம் முழுமையும் (1947-1956) தொழிற்சங்க உரிமைகள், வெண்சட்டை உத்தியோகத்தர்களதும், உடல் உழைப்பாளிகளான தொழிலாளிகளதும் சம்பளப் பிரச்சினைகள், பொருளாதார வளர்ச்சி பற்றிய உபாயங்கள் என்பன யாவும் பாராளுமன்றத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு விளையாட்டாக அமைந்தது. கௌரவத்திற்குரிய இந்த விளையாட்டு பாராளுமன்றம் என்ற அரங்கில் உயர்குழுக்களால் நடத்தப்பட்டது.

1952ல் நிகழ்ந்த தேர்தலின் பின்னர் பாராளுமன்றத்தில் உயர்குழுவினரிடையே கட்சி அடிப்படையில் புதிய பிளவுகள் தோன்றின. எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி சிறீலங்கா சுதந்திரக்கட்சி என்ற பெயரில் புதிய கட்சியை ஆரம்பித்தார். இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராகவும், அதன் ஸ்தாபன உறுப்பினராகவும் இருந்தவர். அக்கட்சியில் இருந்து பண்டாரநாயக்க விலகிப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். பண்டாரநாயக்கவின் வெளியேற்றம், வரலாற்றுத் திருப்பமாக அமைந்ததை பிற்கால வரலாறு உணர்த்திய போதும்

1952ல் தனிப்பட்ட அவரது அரசியல் அபிலாசைகளே அவரின் முடிவுக்கு காரணமாக அமைந்தன. அக்காலத்தில் அவரது வெளியேற்றம் கொள்கை வேறுபாடுகளால் ஏற்பட்டது எனக்கூற முடியாது. கொள்கை வேறுபாடுகள் இருந்தனவென்றால் அவை பிற்காலத்திலேயே முக்கியம் பெற்றன. ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான அதிகாரப் போட்டியில், மக்களின் அணி திரட்டலுக்கு இக்கொள்கை வேறுபாடுகள் முக்கியம் பெற்றன. அதுகாலம் வரை ஐக்கிய தேசியக் கட்சி பொதுமக்களுடன் உள்ள தொடர்பை புரவலர் - ஆதரவாளர் (Patron - Client) என்ற வலைப்பின்னல் முறையூடாக மேற்கொண்டு வந்தது. மரபுவழிப்பட்ட தொடர்புகள் ஊடாக மக்களுடன் தொடர்பு கொள்வதில் மார்க்சீயக் கட்சிகளுக்கு இருந்தது போன்ற தடைகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கவில்லை. மார்க்சிஸ்ட் கட்சிகள் மரபு வழித் தொடர்புகளை நம்பி இருக்க முடியவில்லை. அவர்கள் பேசிய தொழிலாளர் வர்க்கப் புரட்சி கிராமியப் பகுதிகளின் வெகுஜனங்களால் புரிந்துகொள்ள முடியாத விடயமாக இருந்தது. மார்க்சிஸ்ட் கட்சிகளிற்கு கொழும்பு நகரிலும் மேற்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளிலும் ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தினர் மத்தியில் ஆதரவு இருந்தது. பண்டாரநாயக்கவும் உயர்வகுப்பில் இருந்து வந்த ஒருவரே ஆதலால் அவருக்குப் பின்னால் உயர் வகுப்பினைச் சேர்ந்தவர்களே ஆதரவாளர்களாக இருந்தனர். இதனால் பண்டாரநாயக்கவும், ஏற்கப்பட்ட வழிமுறைகளின் விதிகளுக்கு அமையவே அரசியலைக் கொண்டியக்கிக் கொண்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒன்பது ஆண்டு ஆட்சிக்காலத்தை (1947 -1956) லிபரல் தேசியவாதக்காலம் (Period of Liberal Nationalism) எனச் சிலர் குறிப்பிட்டனர். இக்காலப்பகுதியில் சில பொதுவான அரசியல் கொள்கைகள், எண்ணக்கருக்கள், அரசியல் தத்துவங்கள் என்பன உருவாகியிருந்தன என்ற காரணத்தால் பிற்கால ஆய்வாளர்கள் இக்கருத்தைக் கூறினர். இக்காலத்தின் உயர்குழாம் அரசியல்வாதிகளிடம் லிபரலிசம், அரசியல் யாப்பு வாதம் (Constitutionalism) என்ற இரண்டு விடயங்கள் மீது நம்பிக்கையும் பற்றுதலும் இருந்தது. இவர்கள் அதிகாரம் உடையவர்களாய் இருந்தார்கள் அசைக்க முடியாத அவ்வதிகார பலம் அவர்களுக்கு இருந்தபடியால் லிபரலிசம், அரசியல் அமைப்புவாதம் போன்ற சிந்தனைகள் இயல்பாகவே அவர்களிடம் தோன்ற முடிந்தது. ஆயினும் இவர்களது அதிகாரத்திற்குக் அறைகூவல் விடுக்கப்பட்டபோது இவர்கள் சர்வாதிகாரிகள் போன்றே நடந்து கொண்டனர். லிபரல் அரசியல்வாதிகளின் எதிரிகளாக ஆரம்பத்தில் விளங்கியவர்கள் காலப்போக்கில் அரசியல்யாப்பு வாதத்தைத் தழுவிக் கொண்டு பாராளுமன்ற விவாதக்களத்தின் விளையாட்டில் கைதேர்ந்தவர்களாக மாறியபோது, இலங்கை அரசியலில் அரசியல் அமைப்புவாதம் நிலைபேறுடைய ஒன்றாக மாறியதோடு, அதுவே அரசியலின் இறுதி இலக்குப் போன்றும் ஆகியது. அரசின் வகிபாகம் யாது என்பது பற்றிய பொதுவான ஏற்புடைய கருத்து ஒன்று உருவானது. இதன்படி அரசு சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பது எனக் கருதப்பட்டது. சுதந்திரமான தொழில் முயற்சிகளின் வளர்ச்சிக்கு இது அவசியமானது. பிரித்தானிய ஏகாதிபத்தியம் புகுந்து கொள்ளாத துறைகளில் உள்ளூர் முதலாளி வர்க்கம் புகுந்து வெற்றிடங்களை நிரப்பும் நட்புச் சூழல் உருவானது. இச்சூழலைப் பயன்படுத்திச் சுதேச முதலாளித்துவம் வளர்ச்சியுற்றபோது ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் அதற்குப் பாதுகாப்பையும் வழங்கியது. பொருளாதாரத்தின் உயர்பீடங்கள் பிரித்தானிய மூலதனத்தின் பூரண கட்டுப்பாட்டில் இருந்தன. தனிநபர் உரிமைகளுக்கும் முதலாளித்துவ நலன்களுக்கும் இடையே முரண்பாடு எழுந்தபோது அரசாங்கம் தனிநபர் உரிமைகளை மிகவும் மூர்க்கமான முறையில் அடக்கியது. இலங்கையின் அரசுச் செயற்பாடு முதலாளித்துவ ஜனநாயகத்தின் சிறந்த வகைமாதிரியாக விளங்கியது. வடிவத்திலும், வெளித்தோற்றத்திலும் ஜனநாயக சுதந்திரங்கள் பாதுகாக்கப்பட்டன போன்ற நிலை இருந்ததேனும், நடைமுறையில் அரச அதிகாரமும், அரசுக் கொள்கையும் சொத்துடமை வர்க்கங்களின் நலன்களைப் பாதுகாப்பனவாகவே செயற்பட்டன.

சுதந்திரத்திற்கு பிற்பட்ட ஒன்பது ஆண்டுகால ஆட்சியின் போது மேலாதிக்கம் பெற்றிருந்த உயர்குழாத்தினை அரசியல், பொருளாதாரம், நிர்வாகத்துறை, உயர்தொழில்கள் என்ற நான்கு வகைப் பாட்டின்படி நோக்கப்படுதல் வேண்டும். இந்த நான்கு வகை உயர்குழாம்களும் இனக்குழுமப் பன்மைத்துவம் (Multi-Ethnic Composition) உடையனவாக இருந்தன. இத்தன்மை காரணமாக தேசிய ஒருங்கிணைப்பு என்ற இயல்பு அரசியலில் வெளிப்பட்டது. இந்த ஒருங்கிணைப்பும் ஒன்றுபட்ட இலங்கைத் தேசியவாதம் என்ற இயல்பும் திட்டமிட்ட முறையில் வளர்க்கப்பட்டவை எனக் கூற முடியாது. உயர்குழாத்தில் எல்லா மொழிப் பிரிவினரும் எல்லாச் சமயப் பிரிவினரும் உறுப்பினர்களாக இருந்த காரணத்தால் இயல்பாகவே ஏற்பட்ட இயல்புகளாக இவை இருந்தன. உயர்குழாத்தின் ஒவ்வொரு இனக்குழுமப் பிரிவும் தமது தனிப்பட்ட பண்பாட்டு அடையாளத்தை இலங்கையின் ஆங்கிலமயப்பட்ட உயர்குழாம் பண்பாட்டில் வெளிப்பட்டுத் தெரியாத வகையில் மறைத்துக் கொண்டு பிறகு பூக்களோடு உறவுகளை வளர்த்துக் கொண்டனர். இவ்வுயர்குழாத்தின் தொடர்பாடல் மொழி ஆங்கிலமாக இருந்தது. ஆங்கிலக் கல்லூரிகளில் இவர்கள் ஒன்றாகப் படித்தவர்கள். இதனால் சமூக வாழ்வு பண்பாட்டு நடவடிக்கைகளும் பொழுது போக்கும் கலை கலாச்சார ஈடுபாடுகளிலும் ஒன்றிணைந்தவர்களாக இருந்தனர். பிரதேச அடிப்படையில் உயர்குழாம் கொழும்பை பிரதான இடமாகக் கொண்டிருந்தது. ஆயினும் மேற்குக் கரையோரம், யாழ்ப்பாணக்குடா நாடு, கண்டி ஆகிய பிரதேசங்களில் இருந்தும் உயர்குழாமிற்கு ஆட்சேர்ப்பு நிகழ்ந்தது. ஆயினும் உயர்குழாமின் அதி உயர்பீடங்களில் அமர்ந்திருந்தவர்கள் கொழும்பைத் தளமாகக் கொண்டவர்களாகவே இருந்தனர். கொழும்பைத் தளமாகக் கொண்ட உயர்குழுவே தேசிய விவகாரங்களில் அதிகாரம் மிக்கதாக இருந்தது. காலனித்துவ ஆட்சிக்காலத்தைவிட சுதந்திரத்திற்குப் பிந்திய காலத்திலேயே இவ்வுயர் குழாமின் அதிகாரம் கூடியதாகவும் இருந்தது.

உயர்குழாமின் எல்லாப் பிரிவினர்களிலும், எல்லா மட்டங்களிலும் சமயச்சார்பின்மை (Secularism) என்ற கொள்கை காணப்பட்டது. அரசியலிலும், பொதுவிடயங்களிலும் சமயத்தைக் கலக்கக்கூடாது என்னும் இச்சமயச் சார்பின்மைக் கொள்கையை உயர்குழாம் உறுப்பினர்கள் மேற்கத்தைய கல்வியின் ஊடாகப் பெற்றுக் கொண்டனர். உயர்குழாத்தினர், தனிப்பட்ட வாழ்வில் மிகுந்த சமயப்பற்றும் சமயப்பக்தியும் உடையவர்களாகப் பெரும்பாலும் விளங்கினர். ஆயினும் அவர்களால் பொதுவாழ்வில் இருந்தும் அரசியலில் இருந்தும் தமது சமய வாழ்வைப் பிரித்து வேறுபடுத்தி நோக்கும் மனப்பக்குவம் இருந்தது. மொழி விடயத்திலும் அவர்கள் இது போன்ற கொள்கையையே கடைப்பிடித்தனர். அரசியல் கொள்கைகளிலும், சமூக உறவுகளிலும், தமது தனிப்பட்ட சமய நம்பிக்கைகள் தலையீடு செய்வதை அவர்கள் விரும்பவில்லை. சுதந்திரம் பெற்ற பின்பான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் முதல் அரைப்பகுதிக் காலம் வரை எழுச்சி பெற்று வரும் பௌத்த சமய இயக்கம் அரசுக்குள் உட்புக முடியவில்லை. டி.எஸ். சேனாநாயக்க அக்காலத்தில் பௌத்தர்களின் அரசியல் கோரிக்கைகளை உறுதியோடும் அதிகாரத் தொனியோடும் மறுத்துரைத்தமை பற்றிய கதைகள் சில உள்ளன. அவரது உறுதிக்காக அவர் பாராட்டவும் பட்டார். இக்காலத்தில் சமய இயக்கங்களிற்கு அரசியல் ஆதரவு வழங்க முடியாது என உறுதியாக நிராகரிக்கப்பட்டு வந்தது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் இறுதிக் கட்டத்திலேயே (1956ஐ நெருங்கும் வேளை) எழுச்சி வெறும் பௌத்த சமய அலையைக் கண்ணுற்ற உயர்குழாம் அச்சமும் குழப்பமும் அடையத் தொடங்கியது.

மேற்குறித்த இயல்புகள் காரணமாக ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் இக்காலம் இனக்குழுமங்களிடையே நட்புறவும், சமயப் பிணக்குகள் இன்மையும் அமைதியும் நிலவிய காலமாக இருந்தது. சோல்பரி அரசியல் யாப்பு தமது உரிமைகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டது என விரக்தியுற்றிருந்த தமிழர்கள் விரைவில் அதை மறந்தனர் அவர்களின் அச்ச உணர்வும் நீங்கியது. சேனாநாயக்க இனங்களிடையே அமைதியை வேண்டி நிற்பவராகக் காணப்பட்டார். அவர் நீட்டிய நட்புக்கரத்தை உதறிவிடுவது பண்பற்ற செயலாகவே கருதப்பட்டது. இதனாற்போலும் 1949ம் ஆண்டில் ஜி.ஜி. பொன்னம்பலம் எதிர்கட்சியின் பக்கத்தில் இருந்து அரசாங்கப் பக்கத்திற்கு மாறி பாராளுமன்றத்தில் அமர்ந்து கொண்டார். அவரது தமிழ்க் காங்கிரஸ்கட்சி அக்காலத்தில் இலங்கைத் தமிழர்களது பழைமை வாய்ந்த கட்சியாக விளங்கியது என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். ஜி.ஜி. பொன்னம்பலம் இவ்வாறு அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதால், முதலாவது பாராளுமன்றத்தில் இலங்கை இந்திய காங்கிரஸின் ஏழு

உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கிய இன ஐக்கியத்திற்குள் சேராதவர்களாக இருந்தனர். அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய இந்தியத் தமிழர்கள் தனிமைப் படுத்தப்பட்டனர். ஐக்கிய தேசியக்கட்சி 1948இலும் 1949இலும் இந்தியத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறிக்கும் அநீதியான சட்டங்களை இயற்றியது. இச்சட்டங்களின் பயனாக 900,000 இந்தியத் தமிழர்கள் வாக்குரிமையை இழந்தது மட்டுமல்லாமல் நாடற்றவர்களாகவும் ஆக்கப்பட்டனர். இனப்பிரிவினைகளின் அடிப்படையிலான குழுநலன்களின்படி செயற்படுவதில்லை என்ற கொள்கையைக் கொண்டிருந்த ஒரு கட்சிக்கு இது நீங்காத கறையாக அமைந்தது. இந்தியத் தமிழர்களின் வாக்குரிமையையும் குடியுரிமையையும் ஏன் ஐக்கிய தேசியக் கட்சி பறித்தது என்பது குறித்த விவாதத்தில் இரு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அரசியல் லாபம் கருதி இத்தீங்கை ஒரு பிரிவு மக்களுக்கு இழைத்தது என்பது ஒரு கருத்து. இல்லை, இந்திய எதிர்ப்பு இனவாதமே ஐக்கிய தேசியக் கட்சி அரசை இவ்விதம் நடந்து கொள்ளத் தூண்டியது என்பது இன்னொரு கருத்து. பாராளுமன்றத்தில் இலங்கை இந்திய காங்கிரசின் பிரதிநிதிகளான ஏழு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், மார்க்சிஸ்ட் இடதுசாரிகளுடன் சேர்ந்து எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்திருந்ததோடு, அரசியல் பொருளாதாரக் கொள்கை விடயங்களில் எப்பொழுதும் மார்க்சிஸ்ட் இடதுசாரிகளுடன் இணைந்து வாக்களித்து வந்தனர். ஐக்கிய தேசியக்கட்சி பலமற்ற நிலையில் இருந்த அக்காலத்தில் மேற்படி ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு எதிர்க்கட்சிகளுக்கு கிடைக்காமல் செய்வதன் மூலம் தன் பாதுகாப்பை பலப்படுத்தலாம் என உணர்ந்தது. அத்தோடு பெருந்தோட்டப் பகுதிகளில் இந்தியத் தமிழர்களின் வாக்குகள் இடதுசாரிகளுக்கே தேர்தலின் போது கிடைத்தன என்பது நன்கு அறியப்பட்ட உண்மையாக இருந்தது. இதனைவிட கண்டி மாகாணங்களின் சிங்களவர், பெருந்தோட்டங்களில் வதியும் தமிழ்த் தொழிலாளர்களான இந்தியர்கள் பாராளுமன்ற ஆசனங்களை தமது இனத்திடமிருந்து பறித்து எடுப்பதாகக்கருதினர். இதனால் அவர்களுக்கு எதிரான உணர்வைக் கொண்டிருந்தனர். சிங்கள உயர் குழாமின் ஒரு பிரிவினர் இந்தியாவின் தேசியவாதத்தையும், அது இந்தியக் குடியரசை இருபதாம் நூற்றாண்டில் வழிநடத்திய பாதையையும் வன்மையாக எதிர்ப்பவர்களாக இருந்தனர்.

இந்தியத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்தமை திட்டமிட்டுச் செய்யப்பட்டதா அல்லவா என்ற விவாதம் ஒருபுறம் இருக்க, இந்தியத் தமிழரின் வாக்குரிமையைப் பறித்தமை சிங்களமேலாண்மை நோக்கிய நகர்வின் முதற்படியாக அமைந்தது என் பது மறுக்க முடியாத உண்மை. 1952 தேர்தலில் இதன் உடனடி விளைவை அவதானிக்க முடிந்தது. இனங்களுக்கிடையிலும், பிரதேசங்களிற்கிடையிலும் அதுவரை பிரதிநிதித்துவத்தில் இருந்து வந்த சமநிலை 1952 தேர்தலால் குலைந்தது. ஏழு தேர்தல் தொகுதிகளில் வாக்காளர் எண்ணிக்கை 40% முதல் 80% வரை குறைந்தது. இத்தொகுதிகளில் சிங்கள வாக்காளர்கள் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றனர். இதனால் ஏற்பட்ட சமநிலைக்குலைவு, அடுத்து வந்த ஒவ்வொரு தேர்தலிலும் தொடர்ந்தது. பிற சமூகங்களைவிட சிங்கள சமூகம் தனது பெரும்பான்மைப் பலத்தை அதிகரித்துக் கொள்வதற்கு இது இடமளித்தது.

நாட்டின் பொருளாதாரத்தை எடுத்து நோக்கின் இக்காலத்தில் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து ஏற்பட்டது என்பது உண்மையாயினும், இக்காலம் எதிர்கால முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள் தவறவிடப்பட்ட காலமாக இருந்தது. யுத்தகாலத்தில் இலங்கையின் அந்நியச் செலாவணி இருப்பு அதிகரித்துச் சென்றது. இந்த அந்நியச்செலாவணி வளத்தை நன்கு பயன்படுத்தியிருந்தால் எதிர்காலத்தில் இலங்கை எதிர்நோக்கிய பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றிற்கு தீர்வு காணப்பட்டிருக்க முடியும். யுத்தகாலத்தில் ஏனைய நாடுகளின் ஏற்றுமதிப் போட்டியாளர்களுடன் ஒப்பிடும் போது, இலங்கையின் தோட்டதுறை உற்பத்தி அதிகளவு பாதிப்புக்களைச் சந்திக்கவில்லை. போர் முடிவில் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட தளம்பல்களின் பாதிப்பில் இருந்து குறுகிய காலத்திற்குள் இலங்கையின் ஏற்றுமதித்துறை தகவமைத்துக் கொண்டது. 1950 முதல் மேற்குலக சந்தைகளில் பொருட்களுக்கான கேள்வி அதிகரிப்பால் ஏற்பட்ட வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொண்டு இலங்கை முன்னேறியது. 1955 வரை தேயிலை, இரப்பர் என்ற இரண்டின் மூலமும் இலங்கை நல்ல வருமானத்தைப் பெற்றது. இலங்கை அரசின் பொருளாதாரக் கொள்கை சுதந்திர தொழில் முயற்சிகளை ஆதரிப்பதாக இருந்ததால், சுதேச முதலாளி வகுப்பு நலன்களோடு ஒத்துப்போவதாக அமைந்தது. வர்த்தகத்தில் தலையீடு இன்மை காரணமாக போட்டி நிலவியது. இது உயர்குழாமின் நுகர்வுச் செலவை அதிகரிக்க உதவியது. கீழ் மட்டங்களிற்கும் இந்நன்மைகள் கிட்டின. 1950களில் பொருளாதார வளர்ச்சியின் ஆண்டுச் சராசரி 4.6 வீதமாக இருந்தது. இக்காலத்தின் சனத்தொகை வளர்ச்சி வீதம் ஆண்டுச் சராசரி 2.7 வீதமாகவே இருந்தது. அந்நியச் செலாவணி இருப்பு போதியதாக இருந்தபடியால் அரசு சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் கவனிப்புப் பெறாத சமூக நலத் திட்டங்கள் பலவற்றில் முதலீடுகளைச் செய்தது.

ஐக்கிய தேசியகட்சியின் ஆட்சிக் காலத்தில் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான ஒருங்கிணைக்கப்பட்ட திட்டம் எதுவும் இருக்கவில்லை. ஆகையால் அக்காலத்தில் அரசு கடைப்பிடித்த தலையிடாப் பொருளாதாரக் கொள்கையுடன் முரண்படும் நடைமுறைகள், செயற்பாடுகள் எவையும் இருக்கவில்லை. ஆயினும் விவசாயக் குடியேற்றத் திட்டங்களில் அளவுக்கு அதிகமான முதலீடுகள் செய்யப்பட்டன. இத்துறை டி.எஸ். சேனாநாயக்கவின் விருப்புக்குரிய துறையாக விளங்கியதால், அவர் இத்துறையில் அதிக கவனம் செலுத்தினார். பெருமளவில் முதலீடுகள் இத்துறையில் செய்யப்பட்டன. குடியேற்றத்திட்டங்கள் இலங்கையின் சிங்கள மன்னர்கள் முற்காலத்தில் நீர்ப்பாசனவிருத்தியை ஏற்படுத்தி நாட்டை செழிப்புடையதாக்கியமை பற்றிய நினைவுகளை மீட்பதாகவும் இது அமைந்தது. அன்றைய அரசியல் சூழலில் கடந்த காலம் பற்றி அதிகம் பேசப்படவில்லை. அரசியலில் நிகழ்காலப் பிரச்சினைகள் பற்றிய கவனம் செலுத்தப்பட்டது. குடியேற்றத்திட்டங்கள் மட்டும் இதற்கு விதிவிலக்காக கடந்த கால நினைவுகளை மீட்பனவாக இருந்தன. குடியேற்றத்திட்டங்கள் இரண்டு காரணங்களால் முக்கியம் பெற்றன. இலங்கையின் அரிசி இறக்குமதிச் செலவு அதிகரித்துச் சென்றது. இதனால் அந்நியச் செலாவணி வீணாகியது. நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரித்தால் அவசியமான ஒன்றாக ஆகியது. இரண்டாவதாக தென்மேற்கு, தெற்கு கரையோர மாவட்டங்களின் சன அடர்த்தி மிக்க பகுதிகளில் இருந்து மக்களை சன அடர்த்தி குறைந்த வடமத்திய, கிழக்குப் பகுதிகளிற்கு இடம்பெயர்த்திக் குடியேற்றும் தேவை இருந்தது. அணைக்கட்டுக்களையும், நீர்த்தேக்கங்களையும் அமைப்பதிலும் காடுகளை வெட்டித் துப்புரவாக்கி காணிகளை அபிவிருத்தி செய்வதிலும் பெருந்தொகையில் முதலீடுகள் செய்யப்பட்டதால் மக்களை குடியேற்றுவதற்கான காணிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டன. கிழக்கு மாகாணத்தின் கல்லோயாப் பள்ளத்தாக்குக் குடியேற்றத் திட்டம் இத்தகைய முதலீட்டுத் திட்டங்கள் யாவற்றிலும் மிகவும் பெரியதாக இருந்தது. பல்நோக்குத் திட்டமான கல்லோயாவில் நீர்ப்பாசனக் காணி அபிவிருத்தியும் குடியேற்றமும், நீர் மின்சக்தி உற்பத்தி, பருத்தி, கரும்பு, பெருந்தோட்ட உற்பத்தி, சிற்றளவுக் கைத்தொழில்கள் ஆகிய பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. நியாயமான அளவு வாழ்க்கைத்தரத்தை விவசாயக் குடும்பங்கள் அடைவதற்கு ஏற்றதாக காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. குடியேற்றத் திட்டங்கள் பல திருப்திதரும் வகையில் அமைக்கப்பட்டபோதும், செய்யப்பட்ட பெரும் அளவான முதலீடுகளை ஈடுசெய்யும் வகையில் அவற்றின் பயன்கள் அமையவில்லை என்றே கூறவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது ஆட்சிக்காலத்திலேயே இலங்கையில் சமூக நல அரசு (Welfare State) ஒன்றிற்கான அடித்தளமும் இடப்பட்டது. டொனமூர் அமைச்சரவைக் காலத்திலேயே சமூக நலத்திட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டன. ஆயின் அக்காலத்தில் இத்திட்டங்கள் அமைச்சர்கள் சிலரின் தனிப்பட்ட திட்டங்களாக அவை இருந்தன. பொதுவான கொள்கையோ, திட்டமிடுதலோ இல்லாமல் தனித்தனியாக அவை செயற்படுத்தப்பட்டன. ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரையான கல்விக் கட்டணம் நீக்கப்பட்டு இலவசக் கல்வித்திட்டம் 1943 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. சுகாதார சேவைகளுக்கான செலவு கணிசமான அளவில் உயர்ந்தது. அரசாங்க வைத்தியசாலைகளும், சிகிச்சை நிலையங்களும் நாடெங்கும் பரவலாக அமைக்கப்பட்டன. இவ்வலையமைப்பின் ஊடாக இலவச மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன. யுத்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மலேரியா ஒழிப்பு வேலை தொடரப்பட்டது. இதனால் உச்சமான பெறுபேறு அடையப்பட்டது. விலைவாசிகளைக் குறைப்பதற்

காக வழங்கப்பட்ட உணவு மானியத்திட்டம் அரசாங்கத்தால் தொடரப்பட்டதோடு, விரிவாக்கப்பட்டது. இத்திட்டங்கள் மக்களின் சுகாதார நிலையையும், வாழ்க்கையையும் உயர்த்துவதற்கு உதவின. இதையிட்டு உயர்குழாம் பெருமிதம் கொண்டிருந்தது. அயல்நாடுகள் இலங்கையைப் பார்த்துப் பொறாமை கொள்ளும் அளவிற்கு இலங்கையின் முன்னேற்றம் இருந்தது. இந்நிலையில் மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்துச் சென்றன. சமூகநலன் அபிவிருத்தித் திட்டங்களினால் ஏறிவரும் செலவுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இத்திட்டங்களை முற்றாகக் கைவிடுதல் எந்த அரசாங்கத்தாலும் நிறைவேற்ற முடியாத காரியமாக இருந்தது. 1955ம் ஆண்டில் சமூக நலன் சேவைகளுக்கான செலவுகள் வரவு செலவுத்திட்டத்தின் 35 வீதமாக இருந்தன.


மேற்குறித்த பொருளாதாரப் பிரச்சினைகளின் பின்னணியில், அதிகரித்து வரும் சனத்தொகைப் பிரச்சினைகளை மேலும் மோசமாக்கியது. யுத்தத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இறப்புவீதம் வேகமாகக் குறைந்து சென்றது. அதேவேளை பிறப்புவீதம் தொடர்ந்து உயர் நிலையிலேயே இருந்து வந்தது. 1946ன் சனத்தொகை மதிப்பீட்டிற்கும், 1953ன் சனத்தொகை மதிப்பீட்டிற்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் சனத்தொகை அதிகரிப்பு வீதம் சராசரி 2.8 வீதமாக இருந்தது. இலங்கையின் சனத்தொகை வரலாற்றில் இவ்வீதம் உச்சமானதாக இருந்தது. சனத்தொகையின் ஒவ்வொரு வயதுப் பிரிவினரினதும் சமூகநலச் செலவுகளை இச்சனத்தொகைப் பெருக்கம் அதிகரித்தது. பாடசாலை செல்லும் மாணவர் தொகையின் அதிகரிப்பு கல்விச் செலவைக் கூட்டியது. உணவு மானியச் செலவுகளும் அதிகரித்தன. மக்களின் ஆயுட்காலம் அதிகரித்ததனால் மருத்துவச் செலவுகளும் அதிகரித்தன.

1952ன் பாராளுமன்றத் தேர்தல் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்த உயர்குழாமிடையில் பிளவை ஏற்படுத்தியது. முதல் தடவையாக ஏற்பட்ட இப்பிளவால் அக்கட்சி நிலைகுலைந்து போகவில்லை. பிளவு ஏற்பட்ட பின்பும் அரச உயர்குழாம் உறுதி குலையாமல் இருந்தது என்றே கூறலாம். இனங்களுக்கிடையிலான இணக்கம் தொடர்ந்தது. இந்தியத் தமிழர்கள் மட்டும் இவ்விணக்கக்கூட்டில் இருந்து துண்டிக்கப்பட்டு வெளித்தள்ளப்பட்டிருந்தனர். இடதுசாரிக் கட்சிகளின் பாராளுமன்றச் செல்வாக்கு வீழ்ச்சிப்போக்கைக் காட்டியது. இடதுசாரிகள் தொழிற்சங்க இயக்கத்தில் தொடர்ந்து தமது செல்வாக்கை செலுத்தி வந்தனர். மூன்று இடதுசாரிக்கட்சிகள் தனித்தனியாக தொழிற்சங்கங்களை வைத்திருந்தமையால், தொழிலாளர் இயக்கத்திலும் ஐக்கியம் இருக்கவில்லை. இதனால் இடதுசாரிகளும் பலவீனமுற்றிருந்தனர். ஆயினும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் நாடு எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, தலைமை தாங்கி, மாற்றங்களை ஏற்படுத்தும் திறன் இருக்கவில்லை. 1954ல் அரசாங்கம் உணவு மானியத்தால் ஏற்படும் செலவுகளைக் கட்டுப்படுத்த முயற்சி செய்தது. சுதந்திர இலங்கையின் இரண்டாவது பிரதமரான டட்லி சேனாநாயக்க அப்போது இப்பிரச்சினையை தீர்வு செய்ய முயற்சியொன்றை மேற்கொண்டார்.

அவ்வாண்டு உலக வங்கியின் ஆணைக்குழு இலங்கைக்கு வந்து அறிக்கை ஒன்றை அரசுக்கு கையளித்தது. அதிகரித்து வரும் சனத்தொகை, உற்பத்தி விளைதிறன் குறைவு என்பனவற்றின் நீண்டகால விளைவுகள் குறித்து இவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அரசின் பொருளியல் ஆலோசகர்கள் உணவு மானியச் செலவுகளைக் குறைக்க வேண்டும் என ஆலோசனை வழங்கினர். இந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்ட பிரதமர் அரிசியின் விலையை உயர்த்தினார். இடதுசாரிக் கட்சிகள் இதனை எதிர்த்து சிவில் ஒத்துழையாமை இயக்கம் ஒன்றை முன்னெடுத்தன. இதற்குப் பொதுமக்கள் ஆதரவு வழங்கினர். அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகள் வன்முறையைத் தூண்டின. பிரதமர் டட்லி சேனாநாயக்க மென்மைப் போக்குடையவர், வன்முறைப் போக்கை விரும்பாதவரான அவர் பதவியில் இருந்து விலகிக் கொண்டார். சேர். யோன் கொத்தலாவல பிரதமரானார். பிரதமர் பதவியில் ஏற்பட்ட மாற்றத்துடன் அரசின் போக்கும் மாறியது, மக்கள் அரசுபற்றிக் கொண்டிருக்கக் கூடிய அபிப்பிராயமும் மாறியது.

ஐக்கிய தேசியக்கட்சியின் உயர்குழு ஆட்சியாளர்களிடையே வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக நீண்டகால இலக்குகள் எவையும் இருக்கவில்லை. உலக விவகாரங்களில் இலங்கை தனித்துவமான கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும் என்ற சிந்தனை அக்காலத்தில் அரசாங்க மட்டத்தில் இருக்கவில்லை. பிரித்தானியாவுடன் செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி கடற்படைத்தளங்கள் பிரித்தானியாவினால் பாதுகாக்கப்படும் என்பதும் பிரித்தானிய இராணுவமும் கடற்படையும் இலங்கையில் நிலைகொண்டு நாட்டின் பாதுகாப்பை பேணும் எனவும் உறுதி செய்யப்பட்டிருந்தது. இதனால் தனது ஆயுதப்படைகளின் விருத்திக்காக இலங்கை பெருமளவு பணத்தை முதலீடு செய்ய வேண்டிய தேவை இல்லாதிருந்தது. ஆயினும் இக்காரணத்தால் இலங்கை பிரித்தானியாவுடனும், மேற்கத்தேய நாடுகளுடனும் இணைந்த ஒரு நாடாகவும் இராணுவ, வெளியுறவுக் கொள்கை என்பனவற்றில் அந்நாடுகளில் தங்கியிருக்கும் ஒன்றாகவும் வெளி உலகால் நோக்கப்படலாயிற்று. மேற்கத்தேய நாடுகளுக்கும், கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் இடையில் கெடுபிடி யுத்தம் (Cold War) தீவிரம் அடைந்த பின்னணியில் இலங்கை மேற்கு நாடுகளுடன் அணிசேர்ந்து நின்றதோடு, வெளியுறவுக் கொள்கைகளில் கம்யூனிச எதிர்ப்பு நிலையை எடுத்தது. இதனால் இலங்கையின் பிராந்திய வகிபாகம் குறித்து பல பிரச்சினைக்குரிய கேள்விகள் எழுந்தன. குறிப்பாக இலங்கையின் அண்டை நாடான இந்தியாவுடனான உறவுகள் குறித்த பல கேள்விகள் எழுந்தன.

இலங்கையின் ஆளும் உயர்குழுக்களின் ஒருபிரிவினரிடையே இந்திய எதிர்ப்பு மனோபாவம் இருந்து வந்தது. அப்பிரிவினரின் அரசியல் சிந்தனையிலும், அரசியல் நோக்கிலும் கீழைத்தேயச் சமயங்களின் கருத்துக்களின் தாக்கம் இருக்கவில்லை. இப்பிரிவின் பெரும்பான்மையினர் கிறிஸ்தவர்களாகவும், பௌத்த இந்து மதங்களைச் சாராதவர்களாயும் இருந்தனர். இதனால் தமது நாட்டின் பாரம்பரிய சமய தத்துவங்கள் பற்றிய அறிவு அற்றவர்களாயும் இப்பிரிவினர் விளங்கினர். இக்காரணத்தால் பாரம்பரிய சமய உணர்வுகள் இவர்களின் அரசியல் கருத்துக்களில் வெளிப்படவில்லை. காலனியத்துக்கு முந்திய காலப்பகுதியில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே பண்பாட்டு தொடர்புகள் நீண்டகாலமாக இருந்து வந்தது. ஆனால் இலங்கையில் 350 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலனி ஆட்சிக் காலத்தில் இத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. மக்களிடையே நிலவிய பண்பாட்டு ஐக்கியமும் உணர்வும் இந்நீண்டகால இடைவெளியில் தளர்வுற்றன. பண்பாட்டு ஐக்கிய உணர்வுக்குப் பதிலாக வெறுப்பும் பகை உணர்ச்சியும் கூட வளர்ந்திருந்தன. இலங்கையின் ஆங்கிலம் கற்ற உயர் வகுப்பு ஆங்கிலமயப்பட்டதாக ஆகியிருந்தது. இந்தியாவைவிட இலங்கையின் உயர்வகுப்பினரிடம் ஆங்கில மோகம் மிகையாகக் காணப்பட்டது. மேற்கத்தைய பண்பாட்டை இலங்கையின் உயர்குழாம் தழுவிக் கொண்டிருந்ததோடு அதையிட்டுப் பெருமித உணர்வும் கொண்டிருந்தது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதிவரை இந்தியாவில் இருந்து தொழிலாளர்கள் பெரும் எண்ணிக்கையில் இலங்கைக்கு வந்து குடியேறினர். சிறு வர்த்தகர் சமூகமும் வெண்சட்டை உத்தியோகங்களில் இருந்தோர் குழுவினரும் இலங்கைக்கு வந்து குடியேறினர். யுத்த காலத்தின் முடிவு வரை இவ்வாறு இந்தியரின் உள்வருகை இடம் பெற்றதால், தனது வறியோர் பிரிவினரை இலங்கைக்குள் தள்ளிக்கொண்டிருக்கும் நாடு என்ற எதிர்மறையான அபிப்பிராயத்தை இந்தியா தேடிக்கொண்டது. பொருளாதார முன்னேற்றம் பெற்ற இலங்கை இந்தியாவிடமிருந்து விரும்பத்தகாத, பொருளாதார நிலையில் நலிந்த பிரிவினரை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாக உணரப்பட்டது. இந்தியாவின் பிராந்தியச் செல்வாக்கு உணரப்பட்டதோடு, அச்செல்வாக்கிற்குப் பதிலாக பிரித்தானியாவுடன் இலங்கை கூட்டுச் சேர்ந்துள்ளது என்ற கருத்தும் அக்காலத்தில் நிலவியது. இப்பின்னணியில் தான் இலங்கை எவ்வித மனச்சாட்சி உறுத்தல்களும் இல்லாமல் ஒரு மில்லியன் இந்திய மக்களின் குடியுரிமையைப் பறித்தது. இக்காரணத்தினாலேயே இலங்கை பிரித்தானியாவுடன் தன் பிணைப்புகளை வலுப்படுத்திக் கொண்டது. 1950ல் இந்தியா குடியரசாக மலர்ந்தபோது இலங்கை அது பற்றி மூச்சுவிடாது பிரித்தானியாவுடனான உறவுகளைத் தொடர்ந்து பேணியது.



தொடரும்...

shanmugalingam@thaiveedu.com


## மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

21

# மலையகத்தில் மரபுக்கவிதைகளின் மலர்ச்சியும் ‘குறிஞ்சிப்பூ’ கவிதைகளும்

- மல்லியப்புசந்தி திலகர்

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறியில் மக்கள் பாடல்களான நாட்டார் பாடல்கள், தோட்டப்புறப் பாடல்கள் என வளர்ந்து மரபுக்கவிதைகளுக்குள் காலூன்றத் தொடங்கிய காலமாக 1960களைக் காணலாம். அதற்கு முந்தைய, இலங்கை சுதந்திரமடையும் 1948 காலப்பகுதியை ஊடறுத்து மரபுக்கவிதைகளும் (கே.க ணேஷ், சக்தீ பால அய்யா), நவீன கவிதைகள் (சி.வி. வேலுப்பிள்ளை) என வெளிக்கிளம்பி-




னாலும் எண்ணிக்கையில் அதிகமாக மரபுக்கவிதைகளும் கவிஞர்களும் வெளிப்பட்ட காலமாக 1960களைக் கொள்ளமுடியும்.

மலையகம் எனும் உணர்வு வீறுகொண்டு எழும்பிய அறுபதுகள் காலப்பகுதியில் அதுவரை ‘முத்தமிழ் முழக்கம்’ என வெளிவந்த இலக்கியச் சிற்றிதழ் ‘மலைமுரசு’ மாற்றம் கண்டது. கண்டியில் இருந்து க.ப. சிவத்துடன் இணைந்து இணை ஆசிரியராக இயங்கிய கவிஞர் ஈழக்குமார் 1965ம் ஆண்டு தொகுத்து வெளியிட்ட ‘குறிஞ்சிப்பூ’ என்கிற ஒரு கவிதைத்தொகுப்பு அக்காலப்பகுதியில் மலையகம் சார்ந்து எழுதிய 50 கவிஞர்களின் கவிதைகளைக் கொண்ட தொகுதியாகும். மலையகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கவிஞர்களின் கவிதைகளைக் கொண்ட கதம்பமாக வெளிவந்தவற்றுள் குறிப்பிடத்தக்க கவிதைத்தொகுப்பு இதுவே எனலாம்.

இக்காலத்தின் மலையகத்தில் ஆசிரியர், அதிபர், எழுத்தாளர், சட்டத்தரணி, அரசியல்வாதி எனும் பன்முக ஆளுமையாகத் திகழ்ந்த இரா. சிவலிங்கம் ‘தோரணம்’ எனும் தலைப்பில் குறிஞ்சிப்பூ தொகுதிக்கு முன்னுரை ஒன்றைத் தந்துள்ளார். அப்போதைய இளைஞர்களின் தளபதி எனப் புகழப்பட்ட இரா. சிவலிங்கம் அந்த முன்னுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

இலங்கையன்னையின் கூந்தலில் இன்று குறிஞ்சிப்பூ சூடுகிறோம். பல்லாண்டுகளுக்கு ஒருமுறை மலர்ந்து மறைவது குறிஞ்சிப்பூ. மலைநாட்டில் நம்மவர் குடியேறி ஏறக்குறைய 130 வருடங்களாகின்றன. இப்போதுதான் ஒரு குறிஞ்சிப்பூ மலர்ந்திருக்கிறது. இனி இதன் மணம் நிறைந்து பல மலர்கள் மலையகத்தில் பரிமளிக்கும் என நாம் நம்புவதற்கு முன்னோடியாக முகிழ்ந்திருப்பது குறிஞ்சிப்பூ.

‘பெருமூச்சில், கண்ணீரில் தங்கள் காவியத்தைப் படைத்துவந்த மலைநாட்டு மக்களிடையே இன்று கண்ணீரையும் கலக்கத்தையும் கவியாக்கும் காளையர்கள் பலர் தோன்றியுள்ளனர். இன்சுவைத் தமிழில் எம்மவர் ஏக்கத்தை எடுத்துரைக்கும் ஏந்தல்கள் தமது உள்ளக் குமுறல்களை ஏட்டில் தவழவிட்டதால் இன்று மலர்ந்தது குறிஞ்சிப்பூ’

1965ம் ஆண்டு ஹைலண்ஸ், ஹட்டன் என தான் அதிபராக இருந்த கல்லூரி முகவரியை இட்டே எழுதியிருக்கும் இந்த முன்னுரையில் கவிஞர் ஈழக்குமார் அவர்களின் இந்த வெளியீட்டு முயற்சிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து ‘ஈழக்குமார் நமது பெருமைப் பூ’ எனப் பாராட்டியுள்ளார்.

இந்தக் குறிஞ்சிப்பூ தொகுதியில் இடம்பெற்றுள்ள 48 கவிஞர்களின் பெயர்ப்பட்டியல் இதுதான்:

- சி.வி. வேலுப்பிள்ளை
- சக்தீ.அ. பாலஜயா
- சிதம்பரநாதப் பாவலர்
- பரமஹம்சதாசன்

- பி.ஆர். பெரியசாமி
- எஸ்.எஸ். நாதன்
- ஜெயம்
- சி. நடேசன்
- தமிழோவியன்
- பொ. பூபாலன்
- P. சுப்பிரமணியம்
- சாரல் நாடன்
- சி.எஸ். காந்தி
- சிந்தாகோ
- வி.எஸ். கோவிந்தசாமி தேவர்
- புரட்சிகமால்
- புலவர் மலைநூர்
- குமரன்
- அமரன்
- ஜயந்தன்
- வி. கந்தவனம்
- ஆர். வரதராஜன்
- வழுத்தூர் ஒளிஏந்தி
- கண்டி எம். இராமச்சந்திரன்
- முத்துராசன்
- மலைத்தம்பி
- தோப்பூரான்
- பூண்டுலோயா தர்மு
- ஈழவாணன்
- நவாலியூர் நா. செல்லதுரை
- ஜோரு
- வெண்சங்குவேள்
- உடுதெனிய ஒளிவண்டு
- தமிழ்ப்பித்தன்
- நூரளை இரா. மலைச்செல்வன் (சிக்கன் ராஜு)
- கல்ஹின்னை எம்.எச்.எம். ஹலீம்தீன்
- Christina Gergina Rosetti (தமிழாக்கம் கு. இராமச்சந்திரன்)
- பண்ணாமத்து கவிராயர்
- பி.எஸ். ராகவன்
- பி.கே. செல்லையா
- மரியதாசன்
- ராம. சுப்பிரமணியம்
- ப. வடிவழகன்
- சாந்தன் (இரண்டு கவிதைகள்)
- அன்பன்
- தென்னவன்
- ப.வை. கண்ணையா
- எஸ். ஸ்ரீகாந்தன்
- ஈழகுமார்

என ஐம்பது கவிஞர்களையும் ஐம்பது கவிதைகளையும் அடையாளம் காட்டியது குறிஞ்சிப்பூ.

இந்தக் கவிதைத் தொகுப்பில் வரும் கவிஞர்களுள் அக்காலத்தில் மலையகத்தில் கவிதைகள் எழுதிய மலையகப் பூர்வீகம் சாராத, வடக்கு கிழக்கு பூர்வீகம் சார்ந்த கவிஞர்களும் (ஈழவாணன், நவாலியூர் நா. செல்லத்துரை, வி. கந்தவனம், புரட்சிகமால்) உள்ளடங்கினர். கிறிஸ்ரினா ரொசொட்டி (Christina Georgina Rosetti) என்பவரின் ஆங்கிலக் கவிதை ஒன்றும் கூட ஆங்கில மூலத்திலும் தமிழாக்கம் செய்தும் வெளிவந்து இருப்பது சிறப்பம்சமாகும்.

இந்தப் பட்டியலில் வரும், சாரல் நாடன் அவர்கள் எழுதிய கவிதைகள் சிலவற்றை சி.வி. வேலுப்பிள்ளை அவர்களையும் சக்தீ பால ஐயா அவர்களையும் இணையாசிரியர்களாகக் கொண்ட தொழிலாளர் தேசிய சங்கத்தின் வெளியீடான 'மாவலி' சஞ்சிகையில் காணக்கிடைக்கிறது. அதேபோல இந்தப் பட்டியலில் 'ஜோரு' எனும் புனைப்பெயரில் எழுதியிருப்பவர் இப்போதைய மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் என்பது பலருக்குச் சுவாரஷ்யமான செய்தியாக இருக்கக்கூடும். பின்னாளில் சாரல் நாடன் மலையக ஆய்வு எழுத்தாளராகவும், தெளிவத்தை ஜோசப் சிறந்த நாவல், சிறுகதை ஆசிரியராகவும் மற்றும் இலக்கிய ஆய்வாளராகவும் தம்மை வளர்த்துத் தடம் பதித்துள்ளார்கள்.

இந்தப்பட்டியல் மூலம் மலையக இலக்கியத்தில் கவிதையின் தாக்கம் எத்தனை செல்வாக்கு பெற்றிருந்திருக்கிறது என்பதேயாகும். குறிப்பாக இந்தக் கவிஞர் பட்டாளம் எல்லாமே மரபுக்கவிதை ஜாம்பவான்களாக இருப்பது இன்னுமொரு குறிப்பிடத்தக்க அம்சம். இதற்கு மலையக பாரம்பரிய வழிவந்த நாட்டார்பாடல் துணை நின்றுள்ளது. ஏனெனில், மலையகத்தின் அப்போதையதும் இப்போதையதுமான கல்விச்சூழல் மரபுக்கவிதைக்கு அவர்களைத் தயார்படுத்துவதில் உள்ள சிக்கலான சூழ்நிலையாகும். அதற்கான கல்விச்சூழல் அங்கு இருக்கவில்லை. ஆனாலும், இலங்கையின் வேறு எப்பாகத்தில் இருந்தும் எழுதக்கூடிய யாப்பினை துறைபோகக் கற்ற கவிஞர்களுக்கு எந்தவிதத்திலும் குறைவில்லாது இந்த மலையகக் கவிஞர்கள் மரபுக்கவிதையில் முன்னிலையில் இருந்தார்கள் என்பதுதான் பேராசியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிக்கும் மலையக வாய்மொழிப் பாரம்பரியத்தின் முக்கியத்துவமாக அமைகிறது.

இத்தொகுப்பில் இடம்பெறாத கவிஞர் க.ப. லிங்கதாசன், கவிஞர் சி. அழகுப்பிள்ளை, கவிஞர் எலியாசன், கவிஞர் சங்குப்பிள்ளை, கவிஞர் குறிஞ்சிநாடன், கவிஞர் பானா. தங்கம், கவிஞர் மு.துரைசாமி, கவிஞர் சிவேரா ஆகியோரோடு சாரணா கையூம், ஏ.பி.வி. கோமஸ், பண்ணாமத்து கவிராயர், லுணுகலை றஸீனா புகார், உக்குவளை கவிஞர் ஆ. குவைல்தீன் போன்றோரும் நம் இந்த வரிசையில் இடம்பெறக்கூடிய பெயர்கள்.

'கவிதா நிலையம்' 293, பேராதனை வீதி, கண்டி எனும் முகவரியில் இருந்து வெளிவந்திருக்கும் இந்தக் 'குறிஞ்சிப்பூ' தொகுதியை வெளியிட்ட கே. பாலச்சந்திரன் பற்றிய குறிப்பு ஒன்றை பின்னட்டையில் அவரது புகைப்படத்துடன் சேர்த்துள்ளார். தொகுப்பாளர் ஈழக்குமார். Tiles of Ceylon நிறுவனத்தில் கடமையாற்றியுள்ள இவர் பல நாடகங்களைத் தயாரித்து வழங்கியுள்ளார். ஷேக்ஸ்பியரின் 400வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை இலங்கையில் முன்னின்று நடத்தியவரும் இவரே எனப் பதிவு செய்கிறார். மலையகக் கவிஞர்களுடைய இந்தக் கவிதைத் தொகுதி வெளிவர இவரது உழைப்பையும் நன்றியுடன் நினைவுகூர்ந்துள்ளார் ஈழக்குமார்.

தொகுப்பாளர் எழுதியிருக்கும் என்னுரையில் 'மலையகத்தின் விழிப்புணர்ச்சிக்கு மட்டுமல்ல மலையக இலக்கியத் திறனுக்கும் இந்நூல் எடுத்துக்காட்டாக அமையுமென்று நம்புகின்றேன்' என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

'குறிஞ்சிப்பூ' தொகுதியில் அடங்கியுள்ள பல கவிஞர்கள் அவர்களது கவிதைகள் பற்றி இந்தத் தொடர் கட்டுரையில் அவ்வப்போது விரிவாக எழுதப்பட்டுள்ளதால் அவர்கள் தவிர்ந்த ஏனைய கவிஞர்கள் பற்றியும் அவர்களது கவிதைகள் பற்றியும் அடுத்து வரும் அத்தியாயங்களில் பார்க்கலாம்.



thilagar@thaiveedu.com

# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO **75%** REFINANCE

## MONTHLY SAVING

**$2,409**

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

**GET APPROVED WITHIN 24 HOURS**

**416.298.2777**

**$375 Mo.**

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

# ஆவணஞானி

# இரா. கனகரத்தினம்

- வே. விவேகானந்தன்

ஈழத்தமிழர் வரலாறு ஆவணப்படுத்தப்பட வேண்டும் என ஆர்வம் கொண்ட ஆர்வலர் பலருள் அமரர் இரா. கனகரத்தினம் அவர்கள் என்றும் நினைவுகூரப்பட வேண்டிய ஒருவராவார். ஈழத்தமிழர் வரலாறு மட்டுமின்றி, உலகத் தமிழர் வரலாறும் பதியப்பட வேண்டும் என்னும் பெருங்கனவைத் தன் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டவர். அதற்கான முயற்சிகளிலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டபோதிலும் துணிச்சலுடன் செயற்பட்டவர். இவர், கலை இலக்கியவாதிகளும் வர்த்தகப் பெருமக்களும் நிறைந்த யாழ்ப்பாணம் குரும்பசிட்டி என்னும் கிராமத்தில், திரு. திருமதி இராமசாமி இணையருக்கு மகனாக, 1934ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி பிறந்தார்.

இரா. கனகரத்தினம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாசாலையில் கற்றார். இவர் பாடசாலை மாணவனாகப் படித்த காலத்தில், இவரது வரலாற்றுப் பாட ஆசிரியர், இலங்கைத் தமிழர் வரலாறு முழுமையற்றதாகவும், முரண்பட்ட நிலையில் இருப்பதாகவும், பலகால வரலாறுகள் எழுதப்படாத நிலையில் காணப்படுவதாகவும், குறிப்பிட்டு, இன்றைய மாணவர்கள் இத்துறையில் ஈடுபட்டு, தற்போதைய வரலாற்றையாவது பதிவு செய்வதுடன் நூல்களையும் வெளியிட வேண்டும், என அடிக்கடி கூறிவந்தமை, இவரது மனதில் ஆழமாகப் பதிந்தது. அத்துடன் இளம் பராயத்திலேயே நூல்களை வாசிப்பதில் ஆர்வம் கொண்ட இவர், மராட்டிய எழுத்தாளர் காண்டேகரின் ‘கிரௌஞ் சவதம்’ என்னும் நூலை வாசித்த பின், சிந்தனையை ஒளிரச்செய்து தன்னை புது மனிதனாக்கியது எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அந்நூலில் பின்வரும் வரிகள் தன்னைப் பெரிதும் கவர்ந்தன எனக் கூறியுள்ளார். ‘என்றும் இறவாத ஓர் அன்னை உனக்கு இருக்கிறாள். அதுதான் உன் தாய்நாடு. மலர் இன்றோ நாளையோ வாடவேண்டியது தான். ஆனால் வாடும் வரைக்கும், மணம் வீசினால்தான் மலரின் வாழ்வு வெற்றி பெற்றதாகும். மனித வாழ்வும் அது போன்றதே. மனிதர் உணவினால் மாத்திரம் உயிர் வாழ்வதில்லை’. இந்த வரிகள் தன்னைப் பெரிதும் பாதித்ததாக ‘2500,000 மக்கள் தலைவர்’ என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1956ம் ஆண்டு யூன் மாதம் 5ம் திகதி இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா தனிச் சிங்கள அரசகரும மொழிச் சட்டத்தை நிறைவேற்றியதும், அதனையடுத்து, அச்சட்டத்தினை எதிர்த்து, காலிமுகத் திடலில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் இருந்த தமிழ் அரசியல் தலைவர்களை சிங்களக் குண்டர்கள் தாக்கிக் காயப்படுத்தியதும், நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரமும் இரா. கனகரத்தினம் அவர்கள் ஆதாரங்களுடன் தனது ஆவணப் பதிவு முயற்சியை மேற்கொள்ள உடனடிக் காரணங்களாக அமைந்தன.

அக்காலப் பகுதியில் தொழில் நிமித்தம் கண்டியில் வாழ்ந்து வந்த காரணத்தினால், அங்கேயே இம்முயற்சியை ஆரம்பித்தார். பழைய பத்திரிகைகளை விற்பனை செய்யும் நாடார் கடைகளைத் தேடி பழைய பத்திரிகைகளைப் பெற்றுக்கொண்டார். பழைய பத்திரிகைகளை சேகரித்து வைத்திருந்தவர்களும் இவரது வேலைத் திட்டத்தினை அறிந்து தம் சேகரிப்புகளைக் கொடுத்து உதவினர். மோனிங் ஸ்டார், இந்து ஓகன், ஈழகேசரி (1930-1952), வீரகேசரி, சுதந்திரன் (1952 முதல்), தினகரன், டெய்லி நியூஸ், சண், சற்றடே-றிவ்யூ, திசை, ஈழநாடு, தினமுரசு (ஆரம்பம் முதல் 2002 வரை), தினபதி, தினக்குரல், சிந்தாமணி, சண்டேரைம்ஸ், சண்டே ஒப்சேவர், ஐலன்ட், ஹோட்ஸ்பிறிங் போன்ற பத்திரிகைகளில் படங்களுடன் வெளிவந்த செய்திகள், மற்றும் ஆயிரக்கணக்கான பல்துறைக் கட்டுரைகள், உலகத் தமிழர் தொடர்பான கட்டுரைகள், கருத்தோவியங்கள், எழுத்தாளர் கனக. செந்திநாதன் அவர்களால் இலவசமாகக் கொடுக்கப்பட்ட இலங்கையில் மறைந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், போன்ற அனைத்தையும் பயன்படுத்தி ஆவண முயற்சியை மேற்கொண்டார். இம்முயற்சியை ஆக்கபூர்வமாக செயற்படுத்த எண்ணிய இரா. கனகரத்தினம் அவர்கள் ‘உலகத் தமிழர் ஆவணக்காப்பகம்’ என்னும் அமைப்பினை கண்டி முல்கம்பொலயில் நிறுவினார்.

1956ம் ஆண்டு முதல் ஏறக்குறைய அறுபது ஆண்டுகளாக இலங்கைத் தமிழர் வரலாற்றை ஆவணமாக தொகுக்கும் பணியை உலகத் தமிழர் ஆவணக் காப்பகத்தின் ஊடாக முழுநேரப் பணியாக மேற்கொண்டார். 1890ம் ஆண்டு முதல் 2011 வரையிலான 121 வருட காலப் பகுதியில் தமிழர் அரசியல், வரலாறு, மற்றும் கலை, கலாச்சார செய்திகள் ஆவணப் பதிப்பில் இடம் பெற்றன. ஈழத்து மற்றும் தமிழகப் பெரியார்கள், இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள், தமிழக, இலங்கைத் தொல்லியல் ஆய்வுகள், தமிழர் கலையும் பண்பாடும், உலகளாவிய தமிழரும் பண்பாடும் என அவரது சேகரிப்புகள் பரந்து விரிந்தன. மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மொரிசியஸ் இந்தோனேசியா, பர்மா, வியட்நாம், கம்போடியா, பிஜித்தீவுகள், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களது கலை கலாச்சார பண்பாடு தொடர்பான தகவல்களையும் சேகரித்தார். ஓர் அரசு செய்யவேண்டிய பணியை தனி மனிதராக நின்று செயற்படுத்தி சாதனை படைத்தார்.

இரா. கனகரத்தினம் இப்பணியினை மேற்கொள்ளும்போது அவர் எதிர்நோக்கிய சவால்கள் அளப்பரியன. 1956ம் ஆண்டு முதல் ஏற்பட்ட இனக் கலவரங்களினால் தனது சொந்த ஊரான குரும்பசிட்டிக்குத் திரும்பி, தான் சேகரித்த ஆவணங்களைத் தனது இல்லத்தில் வைத்துப் பாதுகாத்ததுடன், ஆவணத் தேடல்களையும் தொடர்ந்து மேற்கொண்டார். இவரது முயற்சியில் இவரது மனைவியார் பவளராணியும் பெரும் பங்காற்றினார். போர்ச்சூழல் உக்கிரமடையவே இராணுவக் கெடுபிடிகளும் அதிகரிக்க, ஆவணங்களைப் பாதுகாக்க யாழ். பல்கலைக்கழக அப்போதைய உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் உதவியை நாடினார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களும் பலரது எதிர்ப்புகளையும்

பொருட்படுத்தாது, உதவி புரிந்ததோடு, பல்கலைக்கழகத்திலிருந்த பழைய பத்திரிகைகள் சஞ்சிகைகளைப் பிரதி எடுக்கவும் ஆவன செய்தார். பின்னர் வன்னிக்கு இடம்பெயர்ந்த இரா. கனகரத்தினம் அவர்கள் தமிழீழ ஆவணக் காப்பகத்துடன் இணைந்து செயற்பட்டார்.

இரா. கனகரத்தினம் அவர்களது ஆவண சேகரிப்பின் ஒரு பகுதி 1963ம் ஆண்டு கல்முனையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி மகாநாட்டில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. மகாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தமிழரசுக்கட்சித் தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்கள் இவரது முயற்சியைப் பெரிதும் பாராட்டினார். 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலக



கத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் போதும் இவர் காட்சிப்படுத்திய ஆவணங்களை, மகாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகளார் வியந்து வாழ்த்தினார்.

1989ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 'ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவிய, சிற்ப, கண்காட்சி ஒன்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் திவகலாலா தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அக்கண்காட்சியில் இரா.-கனகரத்தினம் அவர்களின் ஆவணங்களைக் காட்சிப்படுத்த தனியாக ஒரு பிரிவும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

1996ம் ஆண்டு கனடாவில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாட்டிலும் இரா. கனகரத்தினம் அவர்களது ஆவண சேகரிப்புகள் அரச அனுமதியுடன் கண்காட்சியில் வைக்கப்பட்டன. 1997ம் ஆண்டு கனடாவிலிருந்து நோர்வே நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஒஸ்லோ பல்கலைக்கழகக் கண்காட்சியிலும் அவை இடம்பெற்றன. இங்கு அவற்றை நீண்டகாலம் பேணிப்பாதுகாத்து, பயன்படுத்தும் வகையில் நுண்படச் சுருள்களாக மாற்றும் முயற்சியும் வெற்றிகரமாக நிறைவேறியது. 2003ம் ஆண்டு, சுவிற்சர்லாந்தில் யுனெஸ்கோ அதிகாரிகளைச் சந்தித்து, நுண்படச் சுருள்களை எதிர்கால ஆய்வு முயற்சிகளுக்காகப், பாதுகாப்பாக வைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அதன்படி அங்குள்ள லூசேன் மாகாண கிளாரூஸ் ஆவணக்காப்பகத்தில் (Glarus - Archive) பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இது குறித்து இரா. கனகரத்தினம் அவர்கள் கருத்துத் தெரிவித்தபோது 'தனது ஆவண சேகரிப்பில் 20%மான சேகரிப்புகள் இடப்பெயர்வு, இராணுவத் தாக்குதல்கள் என்பவற்றால் அழிந்த போதும், 80% மானவை நுண்படச் சுருள்களில் ஆவணமாக்கப்பட்டுவிட்டன. அவை அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லப்படவேண்டும் என்னும் தனது நீண்டகாலக் கனவை நோர்வே அரச நிறுவனம் ஒன்று நிறைவேற்றி இருப்பதால், தனது சேகரிப்பான உலகத் தமிழர் தகவல்களும், ஒரு நூற்றாண்டு இலங்கைத் தமிழர் வரலாறும் பாதுகாக்கப்பட்டுள்ளதால் மனநிறைவடைகிறேன். எனக் குறிப்பிட்டார்.

உலகத் தமிழர்களை ஒரு அமைப்பின் கீழ் கொண்டு வந்து தமிழ் மொழியையும் பண்பாட்டையும் பாதுகாக்க, அருட்தந்தை வண.-தனிநாயகம் அடிகளார், அமரர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், அமரர் பேராசிரியர் சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன், அமரர் சோதிநாதன், காமாட்சி சோதிநாதன் ஆகியோரை ஒன்றிணைத்து, அவர்களின் ஆலோசனைப்படி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் கிளையினை, 1974ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி, யாழ்ப்பாணத்தில் உருவாக்கினார். அதன் முதலாவது தலைவராக சாலை இளந்திரையன் பணியாற்றினார். இரா. கனகரத்தினம் அவர்கள் 1974ம் ஆண்டு முதல் 1981ம் ஆண்டு வரை செயலாளர் நாயகமாகப் பணிபுரிந்தார். இதன் முதலாவது மகாநாடு 1977ம் ஆண்டு சென்னையிலும், இரண்டாவது மகாநாடு 1980ம் ஆண்டு மொறீசியஸ் தீவிலும் நடைபெற்றது. 2008ம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதி முதல், எட்டாம் திகதி வரை தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க மகாநாட்டில் கலந்து சிறப்பித்தார்.

'உலகத்தமிழர் குரல்' பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் தொகுப்பாசிரியராகவும், நூலாசிரியராகவும் செயற்பட்டு பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். முதன் முதல் 1952ம் ஆண்டு 'சீசரின் தியாகம்' என்னும் சிறுகதை நூலை எழுதி வெளியிட்டார். 1960ம் ஆண்டு '2500,000 மக்கள் தலைவர்', 'தமிழரசுத் தந்தை', 'அமரர் வன்னியசிங்கம் நினைவு மலர்' ஆகிய வெளியீடுகளை வெளியிட்டார். 1973ம் ஆண்டு 'அலைகடலுக்கு அப்பால்', 1974ம் ஆண்டு 'உலகத்தமிழர் ஐக்கியத்தை நோக்கி' 1977ம் ஆண்டு 'செல்வாவின் சிந்தனைகள்' ஆகிய நூல்கள் வெளிவந்தன. 1980ம் ஆண்டு 'றியுனியன் தீவில் எங்கள் தமிழர்கள்', 'மொறீசியஸ் தீவில் எங்கள் தமிழர்கள்', 'ஒரு குடைக்கீழ் உலகத் தமிழினம்' ஆகிய நூல்களும், 1981ம் ஆண்டு 'உலகத் தமிழர் ஒருமைப்பாடு' என்னும் நூலும் இவரால் எழுதி வெளியிடப்பட்டன. 1996ம் ஆண்டு இரா. கனகரத்தினமும் அவரது துணைவியாரும் இணைந்து 'உலகத் தமிழர் ஆவணக்காப்பகம் - ஒரு அறிமுகம் என்னும் சிறுபிரசுரத்தை வெளியிட்டனர். 2012ம் ஆண்டு 'ஒரு நூற்றாண்டு (1890 - 2011) இலங்கைத் தமிழர் வரலாறு மைக்ரோ பிலிம்களில்' என்னும் நூல் வெளியாகியது.

இரா. கனகரத்தினம் அவர்களின் தமிழ்ப் பணியைப் பாராட்டி மொறீசியஸ் முன்னாள் பிரதமர் ராம்குலாம் மற்றும் தமிழக முன்னாள் முதல்வர்கள் மு. கருணாநிதி, எம்.ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் விதந்து பாராட்டியுள்ளனர். 1996ம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி குரும்பசிட்டி நலன்புரிச் சபை - கனடாக் கிளை, இவரது ஆவணக் கண்காட்சியை சிறப்பாக நடத்தியதோடு, மறுநாள் இரண்டாம் திகதி, பாராட்டு விழாவினையும் ஏற்பாடு செய்து, 'ஆவணஞானி' என்னும் பட்டத்தினையும் வழங்கி கௌரவித்தது. இலங்கை அரசு ஏற்கனவே சமாதான நீதவான் பட்டத்தினை வழங்கியிருந்தது.

இளமைப் பருவத்திலேயே தமிழரசுக்கட்சியின் தீவிர ஆதரவாளராக விளங்கிய இரா. கனகரத்தினம் அவர்கள் தமிழ் தேசியத்தில் அளவிலாப் பற்றுக் கொண்டவர். 'வரலாறு இன்றேல் தமிழர் வாழ்வே இல்லை' என்னும் தாரக மந்திரத்தை அடிநாதமாகக் கொண்டு, தமிழர் வாழ்வை ஆவணப் படுத்தலில் தன் வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர்.

தொகுப்பாசிரியர், நூலாசிரியர், ஆவணக காப்பாளர் (Archivist), கட்டுரையாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட ஆவணஞானி இரா. கனகரத்தினம் அவர்கள் 2016ம் ஆண்டு ஜுன் மாதம் 22ம் திகதி கண்டியில் அமரத்துவம் அடைந்தார். எந்தவொரு ஆடம்பரமும் இன்றி, இலைமறை காயாக இருந்து அவர் ஆற்றிய தமிழ்ப் பணி மகத்தானதாகும். 2017ம் ஆண்டு ஜுலை மாதம் எட்டாம் திகதி கனடா வாழ் ஈழத்தமிழர்கள் ஸ்காபரோ நகரசபை மண்டபத்தில் அவரது மறைவின் ஓராண்டு நிறைவை நினைவு கூர்ந்து மதிப்பளித்தனர்.



vivekananthan.v@thaiveedu.com

# மாணவர் கல்வியில் தன்னை அர்ப்பணித்த

# நல்லதம்பி பேரின்பநாதன்

- த. சிவபாலு

பேராதனைப் பல்பலைக்கழகத்தில் கல்வி பயின்று, 1973ம் ஆண்டு பொருளியல் துறைச் சிறப்புப்பட்டதாரியாக வெளியேறி, அதே பல்பலைக்கழகத்தில் விரிவுரையாளராகத் தொழிலை ஆரம்பித்த பேரின்பநாதன், 1975ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழத்தின் தொடக்கால விரிவுரையாளர்களுள் ஒருவராக நியமனம் பெற்றார். அன்று தொடக்கம் அத்துறையில் சிறப்புமிக்க மாணவர்களை உருவாக்கும் பணியை உள்ளத்தால் உவந்து ஏற்றுக்கொண்டு செயலாற்றத் தொடங்கினார்.

பங்குடுதீவில் சாதாரண நிலையில் உள்ள ஒரு குடும்பத்தில் தலைமகனாக 1948ல் பிறந்த அவர், ஐந்தாம் வகுப்பு அகில இலங்கை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி, சிறப்பான கல்லூரியாகத் திகழ்ந்த வேலைணை மத்திய கல்லூரியல் தங்கியிருந்து கற்றும், அரசாங்க உபகாரநிதியைப் பெற்றுத் தனது கல்வியைத் தொடர்ந்த அவர் அங்கிருந்து பேராதனைப் பல்கலைக் கழத்திற்கு 1969ல் தேர்வானார். அங்கு பொருளியலைத் தனது சிறப்புப் பாடமாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டு கற்கும்வேளையில் 1971ம் ஆண்டு இடம்பெற்ற ஜே.வி.பியினரின் ஆயுதப் போராட்டம் காரணமாக ஓராண்டுகாலம் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன. பின்னர் அங்கு தொடர்ந்து கற்று, அவரோடு பொருளியலைச் சிறப்புப்பாடமாகக் கொண்டவர்களிலும்பார்க்க மிகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்தில் மாணவர்களுக்கான பல்வேறு பணிகளில் ஈடுபட்டதுமல்லாமல் பொருளியல் துறைசார்ந்து முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டதோடு, இந்தி அரசின் உபகார நிதியில் மேல்நிலைக் கல்வியைக் கற்பதற்கான வாய்ப்பைப் பெற்று டெல்கிப் பல்கலைக்கழகத்திற்குத் தேர்வானார். தாய், தந்தை, பாட்டி என அனைவரையும் அடுத்தடுத்து இழந்த அவரது குடும்பம் நிர்க்கதி நிலைக்கு ஆளாக்கப்பட்டது. குடும்பத்தில் ஏற்பட்ட இவ்வித இழப்புகள் காரணமாக தனது இளைய சகோதரர்களைக் கவனிக்கவேண்டிய பாரிய பொறுப்பு அவரில் சுமத்தப்பட்டது. அவரால் நாட்டைவிட்டு வெளியேற முடியாத இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டதனால், அந்த வாய்ப்பை ஏற்று டெல்கிப் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்.

1983ல் திருமண பந்தத்தில் தன்னைப் பிணைத்துக்கொண்டதன் பயனாக நிர்த்தனன் என்னும் ஆண்மகவிற்கும் நிவேதா என்னும் பெண்மகவிற்கும் தந்தையானார். பிள்ளைகளுக்கு ஏற்ற தந்தையாக, தந்தை மகற்காற்றும் அனைத்தையும் செய்து தந்தார். பிள்ளைகளின் எதிர்காலத்தை மனதில் கொண்டு கனடாவிற்குக் குடும்பத்தோடு புலம்பெயர்ந்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவேளை மாணவர்களுக்குப் பயனுறும் வகையில் பல கட்டுரைகளை எழுதியதுடன் நூல்களையும் எழுதி வெளியீடு செய்தார். வர்த்தக மாற்று விகிதம் என்னும் நூல் 1987லும், பேராசிரியர் வி.பி சிவநாதனுடன் இணைந்து கேள்வியும் நிரம்பலும் என்னும் நூலையும், பேராசியர்கள் மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய பொருளியல் சஞ்சிகைகள் எட்டினையும், இலங்கையின் பெருளாதாரம் என்னும் நூலை 2013லும், இலங்கையின் பொருளாதாராக் கட்டுரைகள் என்னும் தொகுப்பு நூலை 2013லும் வெளீயீடு செய்தார்.

கனடாவில் ஆண்டுதோறும் வெளியீடு செய்யப்படும் பழையமாணவர் சங்கத்தின் ஆண்டுமலருக்கான பொருளடக்கில் ஆக்கங்களைத் தேர்ந்தெடுத்து சிறப்புற மலர் வெளிவருவதற்கான ஆலோசனைகளை முன்வைத்துச் செயற்படுத்தியும் காட்டினார். அதனை ஏற்றுக்கொண்ட அமைப்பு 2001ம் ஆண்டு புங்குடுதீவின் எழுத்தாளர்களைப் பற்றிய சிறப்பு மலரை வெளியீடு செய்தது. தொடர்ந்த 2002ல் பாடசாலைகளையும் கல்வி தொடர்பான ஆக்கங்களை வரலாற்றுப்பதிவாக்கியது. தொடர்ந்து புங்குடுதீவின் சமய பாரம்பரியங்களும் ஆலயங்களும் பற்றிய ஆக்கங்கள் பதிவாகின. ஆண்டுதோறும் சிறப்பு மலராக வெளிவந்த நிலையில் 'புங்குடுதீவு மான்மியம்' என்ற ஒரு மாபெரும் நூல் உருவாக ஆலோசனை நல்கியவர்களுள் ஒருவராக மதிக்கப்படுகின்றார்.

பல்கலைக்கழகத்தில் அவருக்கு பேராசிரியருக்கான தகமைகள், வாய்ப்புக்கள் இருந்தபோதிலும் அவற்றிற்கு அவர் ஒருபோதும் ஆசைப்பட்டவரும் இல்லை. அதற்காக விண்ணப்பிக்கவும் இல்லை. தான் மாணவர்களுக்கு செய்யும் கற்பித்தல் பணிக்கு இவை இடையூறாக அமையும் என்பதே அவரது உள்ளத்தில் காணப்பட்ட எண்ணப் பாங்காக அமைந்தது என்பதனை, நான் அவரோடு நெருங்கி உறவாடியதன் பயனாகத் தெரிந்துகொண்டேன்.

விரிவுரைகளில் மட்டுமல்ல மாணவர் நலனிலும் மிகந்த ஈடுபாடு கொண்டிருந்தவர் பேரின்பநாதன். நிருவாகப் பணிகளில் அவரை ஈடுபடத்தூண்டிய பல்கலைக்கழக கல்வியாளர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப, ஒருசில பணிகளை மேற்கொள்ள முன்வந்தாலும் அவை தனது கற்பித்தலில் தொய்வை ஏற்படுத்திவிடும் என்பதோடு மாணவர்களுக்காகத் தயாரிக்கும் தனது தேடல்களை தடுத்துவிடும் என்பதிலும் மிகுந்த கவனமாக இருந்துவந்தவர். காய்தல் உவத்தல் இன்றி அனைத்து மாணவர்களையும் சமமாகக் கருதி கல்விபோதித்த சிறந்த விரிவுரையாளராகப் பணிகொண்டார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் இணைந்து 2005ல் இலங்கை அரசுக்கும் இராணுவத்திற்கும் எதிராக தங்கள் எதிர்ப்பைத் தெரிவுத்து, யாழ்ப்பாணத்தில் உள்ள அமைதியைப் பேணுவதற்கான மேற்பார்வை அமைப்பின் அலுவலகத்திற்குச் சென்று முறையிடச் சென்றவர்களை, பரமேஸ்வராச் சந்தியில் வழிமறித்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததில் பேராசிரியர் ந. பேரின்பநாதன் காயமுற்று யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்நிகழ்வில், மாணவர்களை முன்



னுக்கு விடாது தாங்களே முன் சென்றார்கள். இதனால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், கலைப்பீடாதிபதி ஆர். சிவச்சந்திரன் உட்படப் பலர் படுகாயமடைந்தனர்.

கனடாவிற்கு புலம்பெயர்ந்தபின் பொருளியல் துறையில் கல்வியை ஆரம்பிக்க எண்ணி, சென்ரனியல் கல்லூரியில் கற்றவேளை அவர் மேற்கொண்ட பொருளியல் பாடத்தில் 100க்கு 100 புள்ளிகளைப் பெற்ற ஒரே மாணவர் எனப் பாராட்டப்பட்டார். இருந்தும், கல்விப்பணியை தொடரமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார். குடும்பத்தின் தேவைகருதி கனடாவில் தனக்குப் பொருந்தாத பணியை மேற்கொண்டார்.

கனடாவில் இருந்த காலத்தில், தான் விருப்போடு ஈடுபட்ட கற்பித்தல் தொழிலை மேற்கொள்ள முடியாமல் போனதை இட்டு மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானார். யாழ்ப்பாணம் சென்று தனது மனம்விரும்பிய பணியை மேற்கொள்ளத் தலைப்பட்டார். மீண்டும் யாழ். பல்கலைக்கழகம் சென்று சில காலம் விரிவுரையாளராகக் கடமையாற்றிய பின் கனடாவுக்கு திரும்பினார்.

கற்பித்தல் தொழிலின் திருப்தி என்பது மாணவர்களோடு ஊடாடுவதன் மூலமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டவராகச் செயற்பட்ட, ஒரு நேர்மையும் நிதானமும் மிக்க விரிவுரையாளராக திரு. பேரின்பநாதன் திகழ்ந்து அனைத்து மாணவர்களின் நன்மதிப்பையும் பெற்றுக்கொண்டார்.

உலகப்பரப்பில், புதிதாக வரும் பொருளாதாரப் புத்தகங்களை வாங்கி வாசிப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகத் தன்னை ஆக்கிக்கொண்டார். தான் வாங்கிய நூல்களை, பின் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்புச் செய்துவருவது அவருக்கும் நண்பர்களுக்கும் தெரிந்த விடயம். அவர், எம்மைவிட்டுப் பிரிவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், தான் வாசித்த நூல்களை யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கும்படி தனது சகோதரனிடம் கேட்டிருந்தார் என்றால், அவரது எண்ண அலைகள் எதனைச் சுற்றி வந்துள்ளன என்பது வெள்ளிடமலை.

பல்கலைக்கழக மாணர்கள் பயனுற வேண்டும் என்னும் நோக்கத்தோடு அவர்களின் கல்விக்குத் தேவையான பொருளியல் நூல் ஒன்றை ஆக்கித் தரவேண்டும் என்னும் நோக்கத்தோடு இறுதிவரை பாடுபட்டவர். கதிரையில் இருந்து எழுதுவதற்கு கால்கள் இடம் கொடுக்கவில்லை என்பதனால், படுத்திருந்தே தனது எழுத்துப்பணியைத் தொடர்ந்தவர். ‘நான் பாடையில் செல்லும்வரை தமிழ் மாணாக்கருக்கு சேவையாற்ற வேண்டும்’ என்னும் முனைப்போடு, தன்னால் இயன்றளவும் செயற்பட்டுக்கொண்டிருந்தவர். தனது ஓய்வு நிலையில் தனது குடும்பத்தினரோடு கனடாவில் வாழ்ந்து வந்த நிலையல் உடல்நலக் குறைவினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார்.

தன்னோடு பழகியவர்களின் துன்பம் கண்டு மனம் நொந்து அழும் பண்பு அவரிடம் உண்டு. உணர்ச்சிவசப்படும் அவரது இரக்க குணம் கனடாவிற்கு வந்தபின்னரும் திரும்பி நாட்டிற்குச் சென்று பணியாற்றியதோடு மட்டுமல்லாது தனது ஊருக்கு அடிக்கடி சென்று அங்கு வாழும் மக்களின் இன்ப, துன்பத்தில் பங்கு கொண்டு அவர்களின் நல்வாழ்வுக்கு அரும்பாடுபட்டு உழைத்த ஒரு நல்ல மனிதத்தை அவரிடம் காணமுடிந்தது.

வன்னியியல் ஆய்வுபரப்பில் ஒரு உரையாற்றும் வண்ணம் கேட்டுக்கொண்ட போது தனது உடல் நோயைக்கூடப் பார்க்காது உரையாற்றியவர். வன்னிப் பிரதேசத்திலும் மிகுந்து அக்கறை கொண்ட அவர் தனது மாணாக்கர்களிடம் வன்னியல் உள்ள வளங்களைப் பயன்படுத்துவதற்கான பொருளியல் சார்ந்து தேடல்களுக்கு ஊக்குவித்து வழிகாட்டியர் என்பது அவரிடம் கல்விகற்ற மாணவர்கள் மூலம் அறியமுடிகின்றது.

கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்து தன்னோடு கல்வி கற்றவர்களோடு எப்பொழுதுமே தொடர்பை வைத்துப் பேணி வந்தவர். தன்னிடம் கற்ற மாணவர்களை மறந்துவிடாத மனிதப்பண்பாளன். கனடாவில் குடியேறிய பல்கலைக்கழக நண்பர்கள். விரிவுரையாளர்களோடு மிக நெருக்கமாகத் பழகிவந்ததோடு மட்டுமன்றி ஒன்றுகூடி அளவளாவி மகிழ்ந்து வந்தவர்.

அவரோடு அடிக்கடி உரையாடிக் கூடிக்குலாவும் மிக நெருங்கிய நண்பரான அப்புக்குட்டி கணபதிப்பிள்ளையின் பிரிவு அவரை மிகவும் பாதித்திருந்தது. நண்பனின் பிரிவைத் தாங்கமுடியாது தவித்து அவரது அன்புள்ளம்.

அன்புள்ளம் கொண்ட நல்லதம்பி பேரின்பநாதனின் உயிர், மார்ச் 24, 2022 அன்று அவரது உடலைவிட்டுப் பிரிந்தது.



sivapalu@thaiveedu.com

# மனித நேயமிக்க சமூக அநீதிக்கெதிரான குரல்

# மாத்தளை சோமுவின் சிறுகதைகள்

- எம். வாமதேவன்

## அறிமுகம்:

1960களின் மலையக சமூக எழுச்சியை தொடர்ந்த அறுவடையான, கலை இலக்கிய உத்வேகத்தில் 1970களில் உதயமான எழுத்தாளர்களில் ஒருவராகத் திகழ்பவர் மாத்தளை சோமு ஆவர். இலங்கையின் மலையகத்தின் நுழைவாயிலாகக் கருதப்படும் மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தன்னுடைய இயற்பெயரான சோமசுந்தரத்தைச் சுருக்கி, தனது பிறப்பிடமான மாத்தளையை இணைத்து, 'மாத்தளை சோமு' என்ற பெயரில் அரை நூற்றாண்டு காலமாக இலக்கியத்துறையில் வலம் வந்து கொண்டிருப்பவர். அவருடைய இலக்கியப் படைப்புகளுக்காக இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் தற்போது அவர் வாழும் அவுஸ்திரேலியாவிலும் பல அரச விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றவராவார். இவரது இலக்கியப் படைப்புகளில் குறிப்பிடத்தக்கதாக அமைவது சிறுகதைகள் ஆகும். இவரது நான்கு சிறுகதைத் தொகுதிகளில் அடங்கியுள்ள ஐம்பது கதைகளைப் பற்றிய ஒரு பார்வையே இக்கட்டுரை.

இந்நான்கு சிறுகதை தொகுதிகள் 1970 - 99 காலப்பகுதியில் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டவையாகும். இவற்றில் ஐம்பது சிறுகதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 1984ல் வெளியான நாமிருக்கும் நாடே என்ற முதலாவது தொகுதி 1970 - 82ம் ஆண்டு காலப்பகுதியில் வீரகேசரியில் வெளிவந்த எட்டு கதைகளையும் சிந்தாமணி, தீபம் போன்ற பத்திரிகைகளில் வெளியான இரண்டு கதைகளுமாக 12 கதைகளை உள்ளடக்கியுள்ளது. 1989ல் வெளிவந்த இரண்டாவது தொகுதியான அவன் ஒருவனல்ல என்ற தொகுதியில் 12 கதைகள் வீரகேசரி, சிந்தாமணி, சிரித்திரன் போன்ற பத்திரிகைகளில் வெளிவந்தவை உள்ளடக்கப்பட்டுள்ளன. மூன்றாவது தொகுதியான அவர்களின் தேசம் 1995இல் வெளியிடப்பட்டது. இதன் 12 கதைகள் 84 - 85 காலப்பகுதிகளில் வெளிவந்தவையாகும். இறுதித் தொகுதியான கருப்பு அன்னங்கள் என்ற தலைப்பில் 1999ம் ஆண்டு வெளியிடப்பட்டவை. இதில் உள்ளடக்கப்பட்டது 14 கதைகள் வீரகேசரி மற்றும் இந்தியா டுடே போன்றவற்றில் வெளியிடப்பட்டவை. இவருக்கு பெருமளவில் பிரசுரக் களம் அமைத்துக் கொடுத்தது வீரகேசரி பத்திரிகை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கதைகளின் படைப்பு இவரது வாழ்க்கை ஓட்டத்தோடு இணைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. இலங்கையையும் தமிழ் நாட்டையும், தற்போது வசிக்கும் அவுஸ்திரேலியாவையும் தளமாகக் கொண்டு எழுதப்பட்ட கதைகளாகவே இவை அமைந்துள்ளன. வாழ்விடங்களின் மாற்றங்களுக்கேற்ப இவரது கதைகளுக்கான கருப்பொருளும் மாறி வந்துள்ளன. மூன்று நாடுகளில் வாழுகின்ற வாய்ப்புக் கிட்டியதால் இவரது கதைகளில் ஒரு புதிய பரிமாணத்தைப் பார்க்கக்கூடியதாக உள்ளது. இது தமிழ் எழுத்தாளர்களில் இவருக்கு கிடைத்த ஒரு சிறப்பு என்று சொல்லலாம். கதை நிகழும் கால அடிப்படையில் முதல் இரண்டு தொகுதிகளிலும் மலையகம் விரவிக் காணப்படுகின்றது. அடுத்த இரண்டு தொகுதிகளில் அதிகமான கதைகள் அவுஸ்ரேலியாவை மையம் கொண்டவை.

## மலையகம் சார் கதைகள்:

முதற் தொகுதியில் ஆறு கதைகளும் இரண்டாவதில் இரண்டுமாக எட்டுக் கதைகள் குறிப்பிடத்தக்க வகையில் மலையகம் சார் கதைகளாகவும், ஏனையவை பொது அம்சங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. மலையகம் என்ற வரையறைக்குள் தோட்டத்துறை சார்ந்தவையே கருதப்படுகின்றன. காரணம் மலையகம் என்ற சமூக அடையாளத்திற்குப் பின்னர் தோட்டங்கள் என்ற சமூக, பொருளாதார அமைப்பே அடித்தளமாக அமைந்துள்ளமையே. மறைந்த பேராசிரியர் கைலாசபதி அவர்களின் முன்னுரையுடன் வெளிவந்துள்ள தோட்டக்காட்டினிலே என்ற தொகுப்பில் உள்ளடங்கியுள்ள மூன்று கதைகள் இவரது தனித் தொகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

இவர் தனது மூன்று கதைகளையும் மாத்தளையைச் சார்ந்த மலரன்பன் மற்றும் மாத்தளை வடிவேலன் ஆகியோரின் மும்மூன்று கதைகளையும் சேர்த்து ஒன்பது கதைகளைத் தொகுப்பாக வெளியிட்டுள்ளார். அவன் ஒருவனல்ல என்ற தொகுப்பிலுள்ள தலைப்பு கதை, ஆசிரிய பதவி வகிக்கும் மலையக இளைஞன் ஒருவனின் சமூக நேயத்தை எடுத்துரைக்க, நாய்கள் மனிதராவதில்லை என்ற கதை தோட்டத்துரையின் அல்சேஷன் நாயும் லயத்து நாயும் ஒன்று சேர்வதற்கு இடம் கொடுக்காத தோட்டத்துரையின் வர்க்க நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. இதே வர்க்க வேறுபாட்டை லயத்துப்பயல் என்ற கதையும் தோட்ட சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை வர்க்க வேறுபாடுகளை எடுத்தியம்புவதாக அமைகின்றது.

பிரபல தமிழக எழுத்தாளர் ஜெயகாந்தனின் முன்னுரையோடு வெளிவந்துள்ள நமக்கென்றொரு பூமி என்ற தொகுப்பில் தலைப்புக் கதை தோட்ட மக்களின் நிலமின்மைப் பிரச்சினையை எடுத்துரைக்க முற்படுகின்றது. மரணித்த ஒருவரின் உடலத்தைப் புதைப்பதற்கு நிலமளிக்க மறுக்கும் தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடிகளுக்கு எதிரான குரலாக இக்கதை அமைந்துள்ளது. வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்படும் சிறுவர்களின் நிலை, அவர்கள் எதிர்நோக்கும் வறுமை நிலை என்பன பகல்நேரத்து நட்சத்திரங்கள் என்ற கதை எடுத்துக் காட்டுகின்றது. தோட்டங்களில் ஒவ்வொரு சாதிக்கும் ஒரு லயம் என்ற முறைமை காரணமாக லயங்களுக்கிடையே எழுகின்ற முரண்பாடுகள் சமூக அமைப்பின் காரணமாக சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தோட்ட நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையான முரண்கள் பல கதைகளில் கருப்பொருட்களாக மிளிர்கின்றன.

பொதுப் பண்புகளைக் கொண்ட பெரும்பாலான கதைகள் முதி-

யோர்களை மையப் படுத்தியதாய் அமைந்துள்ளன. கோவில்களை ஒட்டி வாழுகின்ற சாமியார்கள், பிச்சைகாரர்களுக்கும் கோவில் அமைப்புகளின் தலைவர்களுக்குமிடையே காணப்படும் முரண்கள் மிக லாவகமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பிச்சைக் காரர்களின் சேமிப்புகளைக் கூட விட்டு வைக்காத கோவில் பிர முகர்கள் தாங்கள் செய்கின்ற செயல்களுக்கு, கவசமாகத் தங்க ளது பதவிகளைப் பயன்படுத்துகின்ற சமூக விரோதிகளைப் படம்



பிடித்துள்ளார். மனிதமே மௌனித்து போகின்ற பல நிகழ்வுகளை இக்கதைகள் வெளிப்படுத்துகின்றன. உடலவயக் குறைபாடுற்ற பெண்ணிற்கான திருமணப் பேச்சுவார்த்தையை எடுத்துக்காட்டும் கதை உட்பட, பல சமூகத்தின் பலவீனக்குழுக்களின் பிரச்சினைகளை மையப்படுத்தியதான கதைகள் ஆசிரியரின் மனித நேயத்தை வெளிப்படுத்துகின்றன.

அவன் ஒருவனல்ல என்ற தலைப்பிலான இரண்டாவது தொகுதியின் 12 கதைகளும் 1970களில் எழுதப்பட்டவை. மனித உணர்வுகளை மையப்படுத்திய இவைகளில் தலைப்புக்கதை ஏற்கனவே தோட்டக்காட்டினிலே தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனோடு இரண்டு கதைகள் மலையகம்சார் கதைகளாகவும் ஏனையவை பொதுப்பண்புகள் கொண்டவைகளாகவும் அமைந்துள்ளன. தொழிற்சங்க செயற்பாட்டினை விமர்சிப்பதான கழுகுகள் கதையும், மகன் உபதேசிக்கும் தகப்பன் சாமிகள் கதையும் மலையகம்சார் கதைகளாகவும் காணப்படுகின்றன. ஏனையவை ஏமாற்றல், வறுமைப்பிரச்சினை, ஏழை - பணக்காரன் ஆகிய பாத்திரங்களை மையப்படுத்தியதாய் சமூக நீதிக்கான குரலாய் அமைந்துள்ளன.

1999ல் வெளிவந்த அவர்களின் தேசம் என்ற தலைப்பிலான மூன்றாவது தொகுப்பிலடங்கும் 12 கதைகளில் தலைப்புக் கதையோடு ஒரு பிடி மண் என்பவை மலையகத்தின் நீட்சியாகக் கருதக்கூடிய தாயகம் திரும்பியோரை மையப்படுத்தியுள்ளன. இலங்கைவாழ் இந்திய தமிழர்களில் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள், இலங்கை - இந்திய ஒப்பந்த அடிப்படையில் இந்தியாவிற்கு குடியேறியவர்களே தாயகம் திரும்பியோர் என அடையாளப்படுத்தப் படுகின்றனர். இவர்கள் தமிழ்நாட்டில் எதிர்நோக்கிய சாதியம் உள்ளிட்ட பல பிரச்சினைகளை இந்தக் கதைகள் வெளிப்படுத்துகின்றன. தமிழ்நாட்டில் குடியமர்த்தப்பட்டிருந்தாலும் இலங்கை மலையகத்தை மறக்காமல், அங்கிருந்து கொண்டு சென்ற ஒரு பிடி மண்ணை புதைகுழியில் சேர்க்க வேண்டுமென்ற விருப்பம், தாயகம் திரும்பிய மலையக கவிஞன் சிவானந்தனின் சென்றுவருகிறேன் ஜென்ம பூமியே என்ற கவிதை வரிகளை நினைவு படுத்துகின்றன. இதோடு ஒட்டியதாக தமிழ்நாட்டைக் களமாகக் கொண்ட கதைகளாக அமையும் புதிய பிரமா மற்றும் காற்றில் ஆடும் கூரைகள் என்பன சாதியப் பிரச்சினைகளை எடுத்துரைக்கின்றன.

## அவுஸ்திரேலிய சார் படைப்புகள்:

அவுஸ்திரேலியத் தளத்தைக் கொண்ட கதைகள் புலம்பெயர்ந்த தமிழர்கள் அந்நிய நாட்டில் படும் அவஸ்தைகள், சொந்த உறவுகளையே சுரண்டுதல், கலாச்சார விழுமியங்கள் அழிந்து போதல் போன்றவற்றை பொருளாகக் கொண்டுள்ளன. வெளிநாடு என்றதும் பணம் சேகரிப்பு, உயர் பதவி நிலைகளை நாடுதல், உயரிய வாழ்க்கை என்பவை முன்னுரிமை பெற, பெற்றோர் பிள்ளைகள் என்போர் அதற்கு பலிக்காடாக்களாகி விடுகின்றனர். இதனை பல கதைகள் எடுத்துரைக்கின்றன. கணவன் மனைவி இருவரும் உயர் பதவிகளில், இதனால் இளம் பிள்ளையைக் கவனிக்க முடியவில்லை. அவள் 13 வயதிலேயே கருவுறுகின்றாள். கருவைக் கலைக்கப் பிரயத்தனங்கள். இப்படி ஒரு கதை. நோயாளித் தந்தையை வீட்டில் பராமரிக்க முடியாததால் அவர் முதியோர் விடுதியில் விடப்படுகிறார். நோயுற்று இறக்கும் தருவாயில் கடைசியாக மகனைப் பார்க்க விரும்புகிறார். தொடர்புகளைத் துண்டித்த நிலையில் மகன் உயர் மட்ட கூட்டத்தில். தந்தையின் இறுதி ஆசையை நிறைவேற்ற முடியாது போகின்றது. இன்னுமொரு கதை இப்படி. அவுஸ்திரேலியரோடு ஏற்படுகின்ற முரண்கள் பல கதைகளின் கருப்பொருள்கள்.

அவுஸ்திரேலியாவில் வாழ்ந்தாலும் சொந்த நாட்டில் எதிர்நோக்கிய பிரச்சினைகளை அசை போடுகின்ற கதை, ஆகாயம். இது போர்க்காலச் சம்பவங்களை நினைவூட்டுகின்றது. முகம் - சொந்த நாட்டில் உயர் பதவி. வெளி நாட்டில் அத்தகைய பதவி கிடைக்காததால் ஏற்படுகின்ற மன அவஸ்தை, யாழ்ப்பாணம் - கொழும்புப் பிரதேசங்களை நினைவு படுத்துகின்றது. வேர் - அயல் நாட்டில் தொலைந்து போகும் தமிழ் கலாச்சாரத்தை மீட்டெடுக்கும் முனைப்புக் கொண்டதாய் அமைந்துள்ளது. ஆசிரியரே கதையில் நுழைந்து கலாச்சார அழிவு பற்றி விளக்கம் கொடுக்கும் அளவிற்கு இவ்விடயத்தில் அக்கறை காட்டியுள்ளார்.

## முடிவுரை

நிறைவாக, மலையகம் சார்ந்த பெயரோடு தமிழ் இலக்கியப்பரப்பில் பங்களித்து வரும் மாத்தளை சோமுவின் கதைகள் மனித நேயத்தை முன்னிறுத்தியவை. முதியோர்கள் உள்ளிட்ட, பலவீனக் குழுக்களின் பிரச்சினைகள் மனித நேயத்தோடு அணுகப்பட்டுள்ளன. முற்போக்கு எண்ணமிக்க இவரது படைப்புகள் சமூக அநீதிக்கெதிரான குரலாக அமைந்துள்ளன. கதை சொல்லும் பாணி முதிர்ந்த எழுத்தாளராக இவரை அடையாளப்படுத்துகின்றது. இதுவரை வெளிவந்துள்ள இவரது ஏனைய கதைகளும் நூல்வடிவில் வெளிவருமாயின் அவை தமிழ் சிறுகதைப் பரப்பிற்கு அணி சேர்ப்பதாய் அமையும். தமிழ் இலக்கியப் பரப்பில் பல்வேறு புதிய பரிமாணங்களைக் கொண்டுவந்துள்ள இவரது சிறுகதைகள் போல, இவரது பல நாவல்களும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். மலையக இலக்கியக் குரலை தமிழ் நாட்டிலும் தான் வாழுமிடத்திலும் எழுத்தாலும் செயற்பாடுகளாலும் ஒலித்து வருபவர் என்ற வகையில் மலையக இலக்கியப் பரப்பில் இவருக்கு ஒரு சிறப்பான இடமுண்டு.



vamadevan.m@thaiveedu.com

# தமிழ்த்தேசியத்தைக் கட்டமைத்த ஆணிவேர்

# தந்தை பெரியார்

- சு. வேணுகோபால்

கடந்த முப்பது ஆண்டுகளாகவே பெரியாரின் மீதும் பெரியாரிய கருத்துக்கள் மீதும் அவர் பிறந்த சாதியின் மீதும் பல கருத்தியல் இயக்கங்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றன. தமிழகத்தில் தலித் இயக்கம் எழுச்சி பெற்றபோது பெரியார் இடைநிலை சாதிகளுக்குத்தான் முன்னு-ரிமை தந்து போராடினார். அவர் ஒரு சிந்தனைவாதி அல்ல என்ற படி விமர்சனம் எழுந்தது. பெரியார் சிந்தனைவாதி இல்லை என்றால் இங்கு யார்தான் சிந்தனைவாதி என்று அ. மார்க்ஸ் மறுப்புக்குரலை ஆதாரத்துடன் முன்வைத்தார். தலித்தியர்கள் தலித் மக்களுக்காக பாடுபட்ட முன்னோடிகளை நிலைநிறுத்த பெரியாருக்கு மாற்றாக முன்வைத்தனர். மாற்று சாதியார் எங்களுக்காகச் சிந்தித்திருக்க முடியாது. எங்கள் விடுதலை குறித்து எங்கள் பிரச்சினைகள் குறித்து எங்களுக்கான தலைவர் இதோ என்று மீட்டெடுத்து முன் வைத்தனர்.


பெரியார் திராவிடம் என்று சொல்லி தமிழகர்களை வீழ்த்தினார் என்று தோழர் குணா 'திராவிடத்தால் வீழ்ந்தோம்' என்று தனது கருத்துக்களை முன்வைத்தார். பெரியாரின் இனச்சார்பான கருத்தியலுக்கு எதிர்நின்ற கம்யூனிஸ்ட்டுகள் பெரியார் சொன்ன சாதி ஒழிப்பின் முக்கியத்துவத்தை அறிந்து பின்னர் நெருங்கிவந்தார்கள். தோழர் கி.வீரமணியின் தலைமையிலிருந்து பெரியாரிய இயக்கவாதிகள் பிரிந்து சென்று களப்பணி ஆற்றினார்கள்.

பெரியார் ஒரு வடுகர், தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர், தமிழ் நாட்டைத் தமிழனை ஆளவிடாமல் செய்தவர். பெரியார் தமிழ்த் தேசியத்தின் விரோதி என்று ஒரு அரசியல் கட்சி பேசிவருகிறது. உண்மையில் பெரியார் தமிழ், தமிழர் விரோதியா, திராவிட, ஆரிய விரோதியா, பெரியார் தன் நிலைப்பாட்டில் எப்படி நின்றார் என்பதை ப. திருமாவேலனின் 'இவர் தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர்?' என்ற நூல் ஆராய்கிறது. தமிழுக்காகவும் தமிழருக்காகவும் தன் வாழ்வையே களத்தில் பணயம் வைத்துப் போராடிய ஒருவரை எந்தவித ஆதாரம் இல்லாமல் புனைசுருட்டுக்களை அள்ளிவிட்டு வரலாறு என்ன என்பதே தெரியாமல் ஆட்சி அதிகார சுவைக்காக தமிழ் தேசியத்தின் பெயரால் அலையும் வெத்துவேட்டு அரசியல்வாதிகளை இந்த நூல் தோலுரித்துக்காட்டுகிறது.

இந்த நூலைப் படிக்கிறபோது முதலில் அவர் தன் சொந்த சாதிக்கு கொடூரமான விரோதியாகச் செயல்பட்டிருக்கிறார். தமிழன் தவிர்த்து பிற திராவிட இனங்களைத் தன் கருத்துக்களால் பந்தாடுகிறார். திராவிடர் என்பதை ஆரிய கருத்தியலுக்கு எதிராக நிறுத்துகிறார். தமிழர் வாழ்வு என்பதை பிற திராவிட இனங்களுக்கு எதிராக நிறுத்துகிறார். பெரியார் தன்னை ஒரு தெலுங்கு நாயக்கராக கன்னட மொழிக்காரராக இருப்பதையே வெறுக்கிறார். தன்னை தமிழனாகவே பார்க்கிறார்.

இந்தக் கட்டுரையில் தமிழர், திராவிடம் என்பதை அவர் அரசியல்படுத்திய விதம், சூழநிற்கும் திராவிட எதிரிகள், வடவர், பார்ப்பனர் எதிர்ப்பு என்ற நான்கு எல்லைகளில் பெரியார் சமராடியதை மட்டும் பார்க்கலாம். யோசித்துப் பார்த்தால் ஹிட்லரைப் போல தமிழின வெறியராகவே செயல்பட்டிருக்கிறார். ஒரு படைப்பாளியாக பெரியாரின் இனவெறி எண்ணங்களுக்கு நேர் எதிரானவன், ஒரு பார்ப்பான், ஒரு தலித், ஒரு வடவன், ஒரு தெலுங்கன், ஒரு ஆப்கானிஸ்தானியனின் கண்ணீர் ஒன்றே என்று பார்ப்பவன். ஒரு தமிழ் விவசாயி, ஒரு மராட்டிய விவசாயியின் வீழ்ச்சியும் சாவும் எனக்கு வேறுவேறு அல்ல. தமிழ்நாட்டிற்கு இன்று படைபடையாக வந்து கட்டடவேலை செய்யும் பீகார், ஒடிசா மக்களை விரோதியாக என்னால் பார்க்கமுடியாது. அந்த வேலைகளைச் செய்ய தமிழர் அதிகம் இல்லை. பெரிய பெரிய கல்வி நிறுவனங்களில் நேபாளிகள் கக்கூஸ் கழுவுபவர்களாக, தரையைப் பெருக்குபவர்களாக வேலை செய்கிறவர்களை என்னால் விரோதியாகப் பார்க்க முடியாது. அந்த வேலைகளைச் செய்ய இன்று தமிழர்கள் இல்லை என்பதே உண்மை. தமிழன் கேட்கும் சம்பளத்தில் பாதிக்கு இவர்கள் வருகிறார்கள். இங்கு வந்து பத்துக்குப்பத்தடி தகரசெட் போட்டு குழந்தைகளின் கல்வியைச் சீரழித்து வெறுமனே உயிர்வாழ்வதற்காக தினம் தினம் வேலை தேடி ஓடிக்கொண்டிருப்பவர்களை நான் நேசிக்கிறேனே தவிர வெறுத்து விரட்டமாட்டேன். ஆறு நாட்களில் முடிக்கவேண்டிய வேலையை 10 நாட்கள் வரை தமிழ் பாட்டாளிகள் இழுத்தடித்து ஏமாற்றுவார்கள். அதில் பாதியைக் குடித்து உடலையும் குடும்பத்தையும் நாசமாக்குவார்கள். வட நாட்டிலிருந்து வந்து எந்த வேலை செய்தாலும் ஏமாற்றுவதில்லை. குறைந்த சம்பளத்தில் கடினமான உழைப்பைத் தருகி-றார்கள். குறிப்பிட்ட கால அளவில் வேலையை நியாயமாக முடித்துத் தருகிறார்கள். என் கண்முன் தோட்டக்காட்டு சாலைகளில் நொறுங்கிச் சரிந்த ஓட்டு வீடுகளில் கைக்குழந்தைகளை வைத்துக்கொண்டு தண்ணீர் பாய்ச்சும் பெண்களைப் பார்க்கிறேன். தமிழன் தோட்டத்தில் பாடுபட தமிழன் இல்லை. ஒடிசாப் பெண்கள் தமிழ் நிலத்தில் பாடுபடுவதைப் பார்க்கிறேன். என் நிலைப்பாடு தஸ்தாவேஸ்கி, டால்ஸ்டாய் நிலைப்பாடு. மனித குலத்தை நேசிக்கிற நிலைப்பாடு. வள்ளுவரின் நிலைப்பாடு.

பெரியார் யார் என்றால், அவரது நிலைப்பாடு என்னவென்றால் தமிழன் வாழ்விற்கு எதிரானவர்கள் அனைவரும் எதிரிகள்தான். தமிழன் விளைநிலத்தில் பக்கத்து மாநில பறவைகளுக்கு இடமில்லை. ஒரு குன்றிமணியைக்கூட கொத்திச் செல்ல விடாமல் விரட்டியவர் அவர். ஒரு மூர்க்கத்தில் மலையாளியான இளங்கோ எழுதிய சிலப்பதிகாரத்தைக்கூட தூக்கி எறிந்துவிடு. அவனுக்குப் பதிலாக தமிழன் எழுதிய நூலை மட்டும் வை. அதனால் ஒன்றும் கெட்டுப்போகாது என்று சொல்லக்கூடிய மனம் படைத்தவர். அதனால்தான் தமிழர்களை அரக்கர்களாக உருவகித்த ராமாயணத்தை தீயிலிட்டார். அரக்கர் என்பதை வீரம் கொண்ட தமிழன் என்று பொருள்படுத்தினார். குகன், சுக்கிரவன், அனுமன் என்கிற அடிப்படை மக்களை நேசித்த, மக்களோடு மக்களாக நின்ற ஏக பத்தினி விரதன் என்பதையெல்லாம் தூக்கிப்போடு. கம்யூன் என்ப



தற்கு ஒரு மாதிரியாக கம்பராமாயணத்திற்குள் ஒரு சமதர்ம நோக்கு இருப்பது என்பதெல்லாம் அபத்தம். கவித்துவத்தை நீயே வைத்துக்கொள். அது அரக்கர் என்கிற தமிழனுக்கு எதிரி. அது என்ன உயர்ந்த கருத்துக்களைச் சொன்னாலும் தீயில்போடு என்பதுதான் பெரியாரின் நிலைப்பாடு.

பெரியாரின் அரசியல் நகர்வுகூட மேக்ரோ நிலையிலிரந்து மைக்ரோ புள்ளியில் குவிந்ததுதான். இந்திய தேசிய காங்கிரஸ், நீதிக்கட்சி (திராவிடம்), தமிழ்த்தேசியம் என்பதுதான் அவரின் அரசியல் பயணமாக இருக்கிறது. அவர் நிலைகொண்டது தமிழர் நலன். இந்திய தேசியம் பார்ப்பனர்களின் கையில் இருக்கிறது. திராவிடத்தை தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள் பங்குபோட்டுக் கொண்டனர். நாம் இருப்பது தமிழ்நாடு, இனி தமிழரின் முன்னேற்றமே தன் பணி என்பதாக வடிவெடுத்திருக்கிறார். இன்று சிலர் திராவிடம் என்ற சொல்லைப் பயன்படுத்தி தமிழரை ஏமாற்றினார் என்று சொல்கிறார்கள். அவர் இருந்து இன்று இதே குற்றச்சாட்டை முன்வைத்தால் திராவிடமாவது மண்ணாங்கட்டியாவது தமிழன் வாழ்வு, தமிழ்த்தேசியம்தான் என்செயல்பாடு என்று திராவிடம் என்ற சொல்லைத் தூக்கி எறிந்திருப்பார். அப்படித்தான் அவர் தன் வாழ்நாள் முழுக்க செயல்பட்டிருக்கிறார். மொழிவழி மாநிலம் என்ற குரல் தெலுங்கர்களிடம் எப்போது எழுந்ததோ அப்போதே பெரியார் தமிழ்த்தேசியம் குறித்து அவர்களைவிட தீவிரமாகப் பேசவும் செயலாற்றவும் தொடங்கிவிட்டார். இன்று பெரியார் மீது குற்றச்சாட்டு வைக்கும் தமிழ் அமைப்புகள் அல்லது தமிழர்கள் பெயரைச் சொல்லி அரசியல் நடத்தும் கட்சித்தலைவர்கள் உண்மையில் வரலாற்றை மறைக்கும் பொய்யர்கள் என்பதுதான் நேற்றைய வரலாற்றின் விடையாக இருக்கிறது. இன்று அவரை வடுகராக நாயக்க சாதியாகப் பார்க்கும் மனநிலையிலிருந்து வரும் எதிர்ப்பே தவிர, கருத்தியல்ரீதியில் அல்ல. கருத்தியல் ரீதியில் பெரியாரை இவர்கள் வெற்றிகொள்ள முடியாது என்பதால் இவர் பிறந்த சாதியை அரசியல்படுத்தி ஏமாற்றலாம் என்று நம்புகின்றனர். 'இவர் தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர்' என்று பெரியாரின் சிந்தனைகளைத் தொகுத்துத் தந்திருக்கும் ப.திருமாவேலனின் இந்த நூல் அவர்களை கடுப்பிற்கு உள்ளாக்கும். இவர்களைவிட படுதீவிரமாக தமிழர்நலனில் அக்கறை கொண்டு பாடுபட்டிருப்பது தெரியவருகிறதே என்பது வெளிச்சமாவதை, தங்களின் அரசியலின் ஞானசூனியத்தை போட்டு உடைக்கிறதே என்று பதட்டப்படுவார்கள். உண்மையில் பெரியாரை விமர்சிக்கத் தகுதியற்றவர்கள் என்பதை இந்த நூல் காரணகாரியத்தோடு எடுத்துரைக்கிறது.

## பெரியாரின் திராவிடம்:

பெரியார் தமிழர்களைத் தமிழர்களாகவே விளித்தார். தமிழர்கள் என்று மட்டும் சொல்லிக்கொண்டால் அதற்குள் பார்ப்பனர்கள்

உள்ளே நுழைந்து விடுவார்கள் என்பதற்காகவே ஆரியத்திற்கு எதிராக திராவிடம் என்ற இன அடையாளத்தை வைத்தார். தமிழ்ப் பார்ப்பனர்களைத் தமிழர்களுக்கு வெளியில் நிறுத்தி திராவிடம் என்ற அரசியல் சொல்லாடலைப் பயன்படுத்தினார்.

'தமிழனை அடிமையாக்கிக் கோழைகளாக வைக்கவேண்டும் என்பதற்காகப் பார்ப்பனர்கள் கற்பனையாக ஏற்படுத்திய சூழ்ச்சியே சாதி என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை' என்று சொன்னார். (விடுதலை 29.09.1958)

'1924 முதல் 1954 வரை ஒரு தமிழன்கூட முதன் மந்திரியாக வர முடியவில்லை. சுப்பராயன், சுப்பராயலு ரெட்டியார், பிரகாசம், ஓமந்தூர் ரெட்டியார், இராசகோபாலாச்சாரியார், இந்த மாதிரி பார்ப்பானும், ஆந்திரக்காரனும்தான் இருந்திருக்கிறார்கள். அப்படிக்கில்லாமல் முதன்முதலாகத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழன் (காமராசர்) முதலமைச்சராக வந்திருக்கிறார்' என்றார் (விடுதலை 15.05.1954).

'தமிழ்நாடு தமிழனுக்கே' என்று ஆரவாரம் செய்யுங்கள். உங்கள் கைகளில் 'தமிழ்நாடு தமிழனுக்கே' என்று பச்சை குத்திக் கொள்ளுங்கள். உங்கள் வீடு தோறும் 'தமிழ்நாடு தமிழனுக்கே' என்ற வாசகத்தை எழுதிப் பதியுங்கள்' (விடுதலை 25.10.1955).

'தட்சிணப் பிரதேசம் வந்தால் தமிழராகிய நமக்குத்தான் ஆபத்து. அது மலையாளியின் ஆதிக்கத்திற்கு இடம் வகுக்கும். தமிழ்நாடு தனித்தே இருக்கவேண்டும்' என்றார் (விடுதலை 14.06.1956).

எந்தக் கட்சியில் இருந்தாலும் தமிழர்களாக இருங்கள் என்றார். 'காங்கிரசில் இருக்கிற உண்மைத் தமிழன். திமுகவில் உள்ள தமிழன், கம்யூனிஸ்டில் உள்ள தமிழர், அத்தனை தமிழனும் தான் தமிழன் என்பதை உணர வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார் (விடுதலை 29.07.1968).

இந்தப் பார்ப்பனர்கள் தமிழர்களை இந்தி படிக்கக் கட்டாயப்படுத்துகிறார்கள் என்றால் தமிழ் மொழிக்காரர்களின் சுயமரியாதை எவ்வளவு என்பதைத் தமிழர்களே உணர்வார்களா! (குடிஅரசு 10.05.1931).

இந்தி எதிர்ப்புக்கு ஆதரவளிப்பதை அரசியல் பணியாகவே மட்டும் கருதக்கூடாது என்றும் இதை மொழிப் பாதுகாப்புப் பணியாக ஒவ்வொரு தமிழரும் கருதவேண்டும் என்றும் தலைகுனிந்து வேண்டிக்கொள்கிறேன் (விடுதலை 27.05.1952).

பொங்கல் பண்டிகையைத் தமிழர் எல்லோரும் கொண்டாடவேண்டும் (விடுதலை 6.3.1962).

என்னைப் பொறுத்தவரையில் நான் தமிழனெனச் சொல்லிக் கொள்ள ஒப்புகிறேன் (குடியரசு 29.01.1944) என்றெல்லாம் எழுதினார்.

'தமிழ்நாட்டில் பிறந்து, தமிழ்நாட்டில் வளர்ந்து தமிழ்நாட்டைத் தன்னுடைய தாக்கிக் கொண்டிருக்கும் இந்துவாகிய தமிழனை அவனுடைய நாட்டில் மற்றொருவன் வீதியில் நடக்காதே' என்று சொல்வது எவ்வளவு கேவலம் என்று கேட்டார் (குடியரசு 05.07.1925).

'தமிழர்கள் தங்கள் அறியாமைத்தனத்தால் வெள்ளைக்காரர்களைத் துரை என்றும், பிராமணர்களைச் சாமி என்றும் அழைத்து வந்த பார்வை ஒழிய வேண்டும்' என்றார் (குடிஅரசு 3.8.1925).

தமிழரோடு சேர்ந்து உணவருந்த மறுக்கும் பார்ப்பன ஜாதித்திமிருக்கு, என்ன பாடம் கற்பிக்கப் போகிறீர்கள்! தமிழரே உமது ரோஷம் பொங்கவில்லையா? என்றார் (விடுதலை, 29.01.1961).

தமிழ்நாட்டில் தமிழர், இந்த நாட்டுக்குப் பிச்சையெடுத்துப் பிழைக்கவந்த சோம்பேறிக் கூட்டத்தினரால், சூத்திரன், வைப்பாட்டி மகன், நீசச்சாதி என்று எழுதி வைத்துக்கொண்டு அதைக் கடவுள் சொன்னார் என்று சொல்லி ஏய்த்து அவமானப்படுத்தி வருவதை ஒழிக்க முடியாத தமிழர், முதலில் ஒழிக்க இஷ்டப்படாத தமிழர், வெள்ளைக்காரரிடம் சுயராஜ்யம் கேட்கின்றனர் என்றால் இந்தத் தமிழர்கள் யோக்கியமானவர்கள், மானமுள்ளவர்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா? (விடுதலை. 10.05.1941).

ஜாதி முறையை ஒழிக்கப்பாடுபடாதவன் தமிழனே அல்ல. அவன் உடலில் தமிழர் ரத்தம் சுத்தம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும் (விடுதலை, 10.05.1941).

தமிழன் பிரார்த்தனை செய்யும் கோயில்கள் ஒன்றிலாவது தமிழனுக்கு மரியாதை கிடையாது. (விடுதலை 13.04.1941).

தமிழ்நாட்டில் பணத்துக்குப் பாடும் பாட்டுத் தொழிலாளியைத் தமிழில் பாடச் செய்ய இவ்வளவு கஷ்டமிருந்தால் தமிழர்களின் இழிநிலை இதனினும் வேறென்ன? (குடிஅரசு, 04.12.1943) என்றெல்லாம் கேட்டார்.

என் பிறவிக்குக் காரணமாக, என் இன இழிவுக்குக் காரணமாக இருக்கும் சாதியை ஒழிப்பதும், என் இனமக்களாகிய தமிழர்களுடையவும், என்னுடையவும் தாய்நாடான தமிழ்நாட்டை பனியா-பார்ப்பன அடிமைத் தளையிலிருந்தும் சுரண்டலில் இருந்தும் மீட்டுச் சுதந்திரமாக வாழவைக்க வழி செய்வதுமான 'தனித் தமிழ்நாடு' பெறுவதும் என் உயிரினும் இனிய கொள்கைகளாகும் (விடுதலை, 15.12.1957) இது அவரது நோக்கம்.

கக்கூஸ் (மலக்கழிவு) எடுப்பவன் தமிழன். முடிவெட்டுபவன் தமிழன். துணி வெளுப்பவன் தமிழன். தோல் வேலை செய்பவன் தமிழன். கஃபி, தேயிலைத் தோட்டங்களிலும் ரப்பர் எஸ்டேட்டுகளிலும் பஞ்சாலைகளிலும் வேலை செய்யும் தொழிலாளிகள் அனைவரும் நம்மாள்கள் (தமிழர்கள்) தொழிலாளியாக ஒரு பார்ப்பான் கூட இந்த 1959ல் காணமுடியாதே எல்லாம் நம் ஆள்கள், இது யாருடைய வீடு? நம் தமிழர் நாடு (விடுதலை, 23.01.1959).

உன்ஆட்சி எங்களுக்கு (தமிழர்களுக்கு) வேண்டாம். எங்களுக்கு ஆளத்தெரியும். ஆண்டு கொள்கிறோம். தமிழ்நாடு சுதந்திரமாக இருக்கவேண்டும். நீ நாட்டை விட்டு வெளியே போ! (விடுதலை, 8.4.1959).

தமிழனுடைய காரியத்தில் கன்னிகாதானம், தாரா முகூர்த்தம், விவாகம் என்றும் சொற்கள் வருவானேன்! இந்த வார்த்தைகள் எல்லாம் தமிழா? (விடுதலை, 22.11.1959).

நம் நாட்டுக்கு இன்றைக்குத் தமிழ்நாடு என்று நம் நாட்டுப்பெயர் கிடையாது. எங்கே அந்தப் பெயர் வைத்தால் தமிழ் இன உணர்ச்சி - மொழி உணர்ச்சி - தமிழர்களுக்கு வந்து விடுமோ என்பதற்காகவே டில்லி பார்ப்பன ஆட்சி அந்தப் பெயரை அதற்கு இடாமல் இருக்கிறது (விடுதலை, 24.05.1960).

வெள்ளைக்காரன் போகும்வரை ஒரு தமிழன்கூட அய்க்கோர்ட் ஜட்ஜூ ஆக்கப்பட்டது கிடையவே கிடையாது (விடுதலை, 4.11.1960).

தமிழ்நாட்டானைத் தவிர மற்ற எவனுக்கும் இங்கு உரிமை கூடாது என்றும் கூறுபவர் நாம்தான் (விடுதலை, 27.11.1960).

தமிழனை இழிவுபடுத்தும் மதம், சாஸ்திரம், புராணம் ஆகியவற்றை ஒழிப்பதும், நெருப்பு வைத்துக் கொளுத்துவதும்தான் எங்கள் வேலை.

100க்கு 97 பேர் உள்ள நாம் (தமிழர்கள்) இந்த நாட்டில் கீழ்ச் சாதி. (விடுதலை, 23.11.1961).

நாடு நம்முடையது (திராவிடர் தமிழ்நாடு) வரிப்பணம் 100க்கு 99 பாகம் நம்முடையது. மந்திரி 8 பேர்களில் (ஒன்றுக்கு முக்காலே

அரைக்கால் பாகம்) 7 பேர்கள் நம்மவர்கள் (தமிழர்கள்) சட்டச பையில் 100க்கு 95 மெம்பர்கள் நம்மவர்கள் (தமிழர்கள்). சிறப்பா கச் சொல்ல வேண்டுமானால் கல்வி மந்திரியும் நம்மவர் (தமிழர்).

இந்தநிலையில் 100க்கு 3 பேர்கள் உள்ள சமுதாயத்தில் பார்ப்ப னருக்கு 100க்கு 100 பேர்களும் கல்லூரியில் இடம்கிடைத்து விடு கிறது. நம்மவர் (தமிழர்கள்) திண்டாடுகிறார்கள். தெருவில் அலை கிறார்கள்.

தமிழர்கள் ஈன நிலைக்கும், மானம் வெங்காயம் கெட்ட தன்மைக் கும் இன உணர்ச்சியற்ற இனத்துரோகத்தன்மைக்கும் இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும் கேட்கிறேன்? (விடுதலை, 3.08.1965).

நான் கட்சிமாறுவது என் சுயநலத்தை முன்னிட்டு அல்ல. மனித சமுதாயத்திற்கும் தமிழர்களின் நன்மை கருதியும்தான். அதற்காக நாளையும் கட்சி மாறுவேன். (விடுதலை, 25.10.1971).

இவ்விதம் ப.திருமாவேலன் 229 இடத்தில் பெரியார் எழுதியும் பேசியும் வந்ததைத் தொகுத்துத் தந்திருக்கிறார். இதில் திராவிடம் என்பதை பெரியார் எப்படி அரசியல் படுத்தியிருக்கிறார் என்றால் தமிழர் நாடு, தமிழ்ச்சாதி, தமிழர் பண்பாடு என்றே பொருள் கொண்டு செயல்பட்டிருக்கிறார். அதுவும் தீவிரமாக, எம்.ஜி.ஆர். அகில இந்திய அண்ணா தி.மு.க. என்று கட்சியைத் தொடங்கி னார். இன்று அகில இந்திய என்ற முன் ஒட்டுக்களுக்கு ஏதேனும் பொருள் இருக்கிறதா? அன்று அப்படி தொடங்க எம்.ஜி.ஆர். அவர்களுக்குத் தேவை இருந்தது. இன்று இல்லை என்பதனால் பெயரை மாற்று என்று சொல்ல என்ன பெரிய விளைவு இருக்கி றது. அதைப்போலத்தான் திராவிடம் என்ற சொல் பார்ப்பனியத் திற்கு எதிரானது. அதை முன்வைத்தார் பெரியார். ஆனால் பெரி யார் திராவிடம் குறித்துச் சிந்திக்கவில்லை. தமிழர் குறித்தே சிந் தித்தார்.

தமிழர் உயர சாதிய பார்வையிலிருந்து விடுபடவேண்டும். அதை உருவாக்கி சுகபோகம் அனுபவித்த பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டும். 97 சதம் தமிழர் உள்ள தமிழ்நாட்டில் தமிழன் வேலை வாய்ப்பைப் பெறவேண்டும். காமராசர், தி.மு.க ஆட்சி யாளர்கள் சுத்த தமிழர்கள். இந்தத் தமிழர் ஆட்சியிலே இந்திய ஒன்றியத்திலிருந்து பிரிந்து தனித் தமிழ்நாடாக நிலைபெறவேண் டும். இதில் தெலுங்கனுக்கோ, பார்ப்பானுக்கோ, கன்னடனுக்கோ மலையாளிக்கோ இடமில்லை. தமிழ்நாட்டைத் தமிழன் ஆளவேண் டும். இதைத்தான் திராவிடர் கழகம் என்ற பெயரில் ஆட்சி நடத் திய பெரியார் எழுதினார். பேசினார், செயல்பட்டார். பெரியாரின் செயல்பாட்டில் அவரின் கட்சிபெயருக்கே எவ்வித நன்மையும் இல்லை. அதனை அவர் பொருட்படுத்தவும் இல்லை. அவர் பேசியது போராடியது எல்லாமே தமிழ்த் தேசியத்திற்காகத்தான். அதைப் பட்டவர்த்தனமாக எடுத்து வைக்கிறார் திருமாவேலன். இந்திய தேசத்தில் ஆங்கிலேய அந்நியர்கள் நம்மை ஆள யோக் கியதை அற்றவர்கள். எங்களை ஆள அவர்களுக்கு அருகதை இல்லை. அவர்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று எந்த உணர்வில் சுதந்திரத்திற்காக நம்மவர்கள் பாடுபட்டார்களோ, அதே உணர்வில் தெலுங்கர்கள், கன்னடியர்கள், மலையாளிகள், பார்ப்பனர்கள், வடநாட்டினர், தமிழ்நாட்டிற்கு அந்நியர்கள். அவர் கள் தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது. உடனே வெளியேற வேண்டும் என்ற மனநிலையில் பேசினார் செயல்பட்டார்.

இன்று தமிழர் தமிழர் என்று கத்தும் அரசியல்வாதிகள் அனைவ ரும் பெரியாரின் சிந்தனைகளை, எழுத்துகளை திருடி தனதுபோல பேசும் பொய்யர்கள் தாம் என்று இந்த நூல் எடுத்துரைக்கிறது. உண்மையில் பெரியார் தமிழர் குறித்து பேசியதற்கு நிகராக, உண்மையாக இவர்கள் இல்லை. 80 ஆண்டுகளுக்கு முன் தமி ழரை அடிமைப்படுத்திய அத்தனை தடைகளையும் தன் செய லால் தீயிட்டுப் பொசுக்கியவர் பெரியார். அவரை தமிழர் இல்லை என்று சொல்வது அரசியல் திருட்டுத்தனம் தவிர வேறில்லை என் கிறது ஆதாரத்துடன் இந்நூல்.

## ஒரே பொருளில் இரண்டு சொற்கள்:

ஒரு மாணவனைக் கல்லூரியில் அழைக்கும் பெயர் ஒன்றாகவும் வீட்டில் அழைக்கும் பெயர் வேறொன்றாகவும் இருக்கும். இரண்டு பெயர்களும் ஒருவரைக் குறிப்பதுதான் என்பது யாவருக்கும் தெரிந்த எளிய உண்மை. பெரியார் இந்த பொருளில்தான் திராவி டம், தமிழ் என்ற சொற்களை காலமெல்லாம் பேசிவந்திருக்கிறார் என்பதற்கானச் சான்றுகளை இதழ்களிலிருந்து எடுத்து வைக்கிறார் ப.திருமாவேலன். பெரியாரே அப்படித்தான் சொல்லி இருக்கிறார்.

‘தமிழ் இனம் என்பதும் திராவிட இனம் என்பதும் ஒரே பொரு- ளைக் கொண்டதுதான்’ (விடுதலை, 19.10.1963) என்று பெரியார் பல்வேறு இடங்களில் சொல்லி இருக்கிறார்.

‘(திராவிடம்) தமிழர் கழகம் ஒன்றுதான் - அதாவது நாங்கள்தான் இந்த எதிர்ப்பு ஆணைகளை எல்லாம் சட்டை செய்யாமல் எதிர்த்து நின்று தமிழர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறோம்’ என்றார் (விடுதலை, 19.07.1969).

பெரியார் திராவிடம் என்று அழைப்பதற்கு ஏதோ பெரிய சதி வேலை இருப்பதுபோல ஒரு மாயத்தோற்றத்தைப் பேச்சில் உரு வாக்கும் ஜாலக்காரர்கள் பெரியார் திராவிடம் என்ற சொல்லையும் பந்தாடுவதை படிக்கவில்லை என்பதுதான் உண்மை. ‘நாம் திரா விடன் அல்லது தமிழன் என்று பெயரை வைத்துக் கொள்ளாமல் வேறு பெயரை வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் ‘சூத்திரக் கழ கம்’ என்றுதானே வைத்துக்கொள்ள வேண்டும்’ என்று பேசினார் (விடுதலை, 8.1.1959).

‘தமிழ்நாடு ஒரு தனி நேஷனாக இருந்தது. இன்னும் இருக்கிறது அதுதான் திராவிடம்’ என்று 1935லேயே எழுதினார் (பகுத்தறிவு மலர் 3 இதழ் 6, 1935).

‘திராவிட - தமிழக என்ற பேரைக் கண்டு எவனாவது முகம் சுளித் தால் அவன் முகத்தில் காரித்துப்புங்கள்’ (விடுதலை, 12.11.1953).

இதுவரை எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தும் ஒன்றும் முடியா ததால்தான் இன்று ‘தமிழ்நாடு தமிழருக்கே’ (திராவிட நாடு திராவி டர்க்கே) ஆகவேண்டும் என்கிற கிளர்ச்சி செய்கிறோம்.

இன்று தமிழர்களாகிய (திராவிட மக்களாகிய) நம்மை அடக்கியா ளும் ஜனநாயக சுதந்திர ஆட்சியானது நம்மை மோசடி செய்து மடையர்களாக ஆக்கிய ஆட்சியேயாகும். (விடுதலை 13.08.1969).

கடவுள் 10 அவதாரம் எடுத்தான். அத்தனை அவதாரங்களும் அசுரர்களைக் கொல்வதற்கும் (திராவிடர்களை, தமிழர்களை) தேவர்களைக் (பார்ப்பனர்களை) காப்பாற்றுவதற்காகவேயாகும். அசுரர்கள் - இராட்சதர் - அரக்கர்கள் என்பதெல்லாம் திராவிடர்க ளாகிய - தமிழர்களாகிய நம் மக்களையே ஆகும் (விடுதலை, 16.11.1989).

தமிழர் என்ற இடத்தில் அடைப்புக்குறிக்குள் திராவிடர் என்றும், திராவிடர் என்ற இடத்தில் (தமிழர்) என்றும் அடைப்புக்குறி இட்டு ஆரம்பம் முதலே எழுதினார்.

மிகத்தெளிவான புரிதலோடு தமிழ் இனத்தைத்தான் திராவிட இனம் என்ற சொல்லால் குறிப்பிட்டிருக்கிறார். ஏன் அவர் தமிழர் கழகம் என்று வைக்கவில்லை என்று கேள்வி எழுப்புபவர்கள் அண்ணாத்துரையிடம் முன்வைப்பதில்லை என்று பார்க்க வேண்டி யதிருக்கிறது. சுத்த தமிழரான அண்ணாத்துரை ஏன் தி.மு.க. என்று பெயரை வைத்தார்? அவரேனும் தமிழர் கழகம் என்று வைத்திருக்கலாமே? இந்த பெயர் வைப்பு என்பது ஆரியத்திற்கு எதிரான திராவிட இனத்தின் முதன்மையான இனம் என்பதைக் குறிக்கத்தான். ஆக, பெரியாரை இவர்கள் சீண்டுவது அவர் பிறந்த சாதியைச் சீண்டுவதற்காகத்தான். தமிழர் என்று கருத்திய லில் பெரியாரை வெல்ல முடியாது என்று செய்கிற அற்ப குசும்பு

தவிர வேறொன்றும் இல்லை. வடுகர் என்று பிரித்துச் சொல்லி அரசியல் பண்ணினால் முதலமைச்சர் ஆகிவிடலாம் என்ற மேடை அரசியல்வாதிகளின் பகற்கனவாகத்தான் இருக்கிறது. கத்திப் பேசு வதினால் பெரியாரின் நீண்ட தமிழினப் பணியில் ஒரு கிள்ளுக் கீரை அளவு செய்திருப்பதாக ஆகிவிட முடியுமா?

ப. திருமாவேலன் தமிழன் - திராவிடன் என்ற சொல்லைத் தமிழ் நாட்டு திராவிடன் அல்லது தமிழன் என்பதாகவே பெரியார் ஓங்கி ஒலித்தார் என்பதற்கான 63 மேற்கோள்களை எடுத்து முன்வைத் திருக்கிறார். உண்மையில், பெரியார் குறித்த வெத்துவேட்டு விமர் சகர்களால் ஒரு பெரிய நன்மை விளைந்திருக்கிறது. பெரியார் யார் என்பதற்கான மிகவலுவான அவரது பார்வையைச் செயல் பாட்டை மீண்டும் பொது வெளியில் வைக்க உதவியிருக்கிறது. அதனை ப.திருமாவேலன் நேர்மையாகச் செய்திருக்கிறார்.

பெரியாரின் வேகம், செயல்பாடு எத்தகையது என்றால் தமிழனின் உயர்விற்காக வரலாற்றின் தடங்களைக்கூட இல்லை என்று மூர்க் கமாக மறுத்து உரைப்பார். வரலாறு கிடக்கட்டும் என் குரல்தான் முக்கியம் என்று ஓங்கி அடிப்பார். அதில் தமிழனுக்கு நன்மையே கிட்டலாம். ஆனால் வரலாற்றை இல்லை என்றாக்குவது அவரது செயல்பாட்டில் மிகப்பெரிய குறை. ஓமந்தூர் ரெட்டியார் சென்னை மாகாண முதலமைச்சர் பதவி முடிந்ததும் என்ன செய்தார்? தெலுங்கு தேசத்திற்கா ஓடினார்? அரசியல் ஆசையை துச்ச-மென தூக்கி எறிந்து வடலூர் வந்து வள்ளலாரின் பணிகளை மேலெடுத்தார். கல்விச்சாலைகளைத் தொடங்கினார். பசி போக்க உணவுச்சாலைகளை ஏற்படுத்தினார். சமரச சுத்த சன்மார்க்கத்தை வலியுறுத்தினார். எல்லாம் தமிழருக்காக செய்த்தார். பெரியார் தன்னை தமிழன் என்று சொல்லிக் கொண்டவர். தமிழுக்காக தமிழ் ஏழைகளுக்காக உழைத்து மாண்ட ஓமந்தூர் ரெட்டியாரை தெலுங் கன் என்று எப்படி அவரால் பேசமுடிகிறது. தன்னைப்போல ஓமந் தூரார் ஒரு தமிழன் என்றல்லவா சொல்லி இருக்கவேண்டும். பெரி யார் மற்ற திராவிட தமிழர்களின் தமிழ் மக்களுக்கான பணிக ளைப் போற்றவில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

திராவிடர்களாகிய தமிழர்களாகிய நமக்கு மதமே இல்லை (விடு தலை, 26.10.1968) என்பார். தொல்காப்பியர், வேந்தன், மாயோன், சேயோன், வருணன் என்று நிலத்து தெய்வங்களாகச் சொல்லப்பட் டதை எடுத்துக்கொள்ளமாட்டார். சமண பௌத்தம் இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் நிலைபெற்றதை காது கொடுத்துக் கேட்கமாட்டார். கொற்றவை வழிபாடுதான் கண்ணகிக்குள் ஒரு பேராற்றலை உசிப்பிவிட்டது என்றால் நம்பமாட்டார். சைவம், வைணவம் என்று ஏழாம் நூற்றாண்டில் எழுச்சி பெற்றதை பொருட் படுத்தமாட்டார்.

கடவுள் இல்லை என்ற அவரது கொள்கையை வற்புறுத்துவதற் காக தமிழன் வாழ்வில் இருந்ததை இல்லை என்று தூக்கியடிப் பார். கடவுள் தமிழர்களான அசுரர்கள், அரக்கர்களை கொல்லுவ தற்காகவே பத்து அவதாரம் எடுத்தான் என்பார்.

வைணவ கதைகளைக் கட்டுடைத்து புதிய விளக்கங்களாக பெரி யார் தந்ததற்கு அவரது வைணவ பின்புலம் பயன்பட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். சிறுவயதில் இருந்து வைணவ கதைகளைக் கேட்டு வளர்ந்தவர்.

கடவுள் இல்லை என்று அவர் பிரச்சாரம் செய்ததற்கு ஒரு உயர்ந்த நோக்கம் இருந்தது. கடவுள் பெயரால் சாதி சமய வேறு பாடுகளைப் புகுத்தி மனிதர்களைக் கீழ் மேல் என்று பிளவுபடுத் தியதைக் காட்டத்தான் - பெரியார் பிறப்பதற்கு முன்னதாகவே ஐரோப்பா, ரஷ்ய தேசமெங்கும் கடவுள் மறுப்புக்கொள்கை உண் டாகி பெரும் விவாதக்களமாக மாறிவிட்டது. அதற்கும் முன்னதாக தமிழ்நாட்டுச் சித்தர்கள் சிலர் கடவுள் மறுப்புக் கொள்கையை வைத்திருக்கின்றனர். தஸ்தாவேஸ்கி கடவுள் இல்லை என்பதை கண்டடைந்த பின் கடவுளின் இருப்பு சமூகத்திற்கு நல்லது என்கி றார். மேலைநாடுகளில் நாத்திகர்கள் கலைகளைப் போற்றினர்.

பெரியார், பெரியார் வழிவந்தவர்கள் கோயிலைத் தகர்க்க வேண் டும் என்றனர். பாரதிதாசன் கூட 'தில்லை நடராசனையும் ஸ்ரீரங் கத்தானையும் பீரங்கி வைத்து தகர்ப்பது எந்நாளோ' என்று பெரி யாரின் கருத்தைப் பாடலாக எழுதினார். தகர்க்கலாம்தான். அந் தக் கோயிலில் தமிழர்களின் சிற்பங்களையும் கட்டடங்களையும் சேர்ந்தே போகுமே என்பதை உணராமல் பேசுவார். பெரியாரின் பேச்சுவழி தஞ்சாவூர், மதுரை, ஸ்ரீரங்கம் கோயில்களைத் தகர்த் திருந்தால் தமிழரின் கலை ஆற்றலுக்கு என்ன சாட்சியம் இருந்தி ருக்க முடியும். வரலாற்றை வரலற்றின் கதியில் வைத்துப் பார்க்க வேண்டும் என்பதை அவரது கருத்தை வலியுறுத்துவதற்காகவே தூக்கி எறிந்துவிடுவார். என்றாலும், அவரது நோக்கம் தமிழர் நலன் என்பதில் சந்தேகமில்லை.

## மொழிவழி மாநில உருவாக்கத்தில் பெரியாரின் நிலை:

தமிழர் என்று சொல்லிக்கொண்ட தெலுங்கர், திராவிடம் என்று சொல்லிக்கொண்ட கன்னட மொழிக்காரர் என்றெல்லாம் பெரியார் மீது புழுதிவாரி தூற்றுபவர்கள் மொழிவழி மாநில உருவாக்கத் தில் பெரியார் களமாடியதைக் கமுக்கமாக மறைத்துக்கொண்டு நடிக்கிறார்கள் என்பது வரலாற்றைத் தோண்டிப் பார்ப்பவர்கள் அறிந்து கொள்வார்கள். திராவிடத்து தேசிய இனங்களான தெலுங் கர்களை, மலையாளிகளை எந்தளவு வசைபாடி வைத்திருக்கிறார் என்பது பட்டவர்த்தனமாக இருக்கிறது. அவரது விமர்சனம் முரட் டுத்தனமானது. இன்றுகூட அரசியல்வாதிகள் இந்த அளவு வெறுப் புடன் ஒரு மலையாளியை பேசிவிட மாட்டார்கள்.

ஆந்திர மாகாணம் ஏற்படுவது தமிழ் மாகாணம் ஏற்படுவதற்கு மிகவும் அனுகூலமாகும். கன்னடப் பிரதேசங்களைத் தனி மாகா ணமாகப் பிரிக்க வேண்டமென்று ஏற்கெனவே சென்னை மாகாணக் கன்னடியர்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். மலையாளிகளும் தனி மாகாணத்தை விரும்பத்தான் செய்வார்கள். எனவே தமிழர்க ளும் தனி மாகாணக் கிளர்ச்சியை இப்பொழுதே தொடங்கவேண் டும் என்று 1937-ல் விதை போடுகிறார் (விடுதலை, 17.10.1937) திராவிடத்தை ஒன்றாக வைத்திருக்க பெரியார் விரும்பவில்லை. தமிழ்நாடு பிரிவதைத்தான் விரும்பினார்.

'தமிழ்நாடு தமிழ் மாகாணமாகப் பிரிவது தமிழர்களுக்கு அனுகூல மாகும். தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழ் நாகரிக வளர்ச்சிக்கு தமிழ் மாகாணப் பிரிவினை உதவி புரிவதுடன் மலையாளிகள் தொல்லையிலிருந்து விமோசனமடையலாம். தமிழர்களுக்கு வசதி வாய்க்கும். கல்வித்துறையில் மலையாளிகள் தமிழர்களைவிட முன்னணியில் நிற்கிறார்கள். எனவே தமிழ்நாட்டிலுள்ள உத்தி-யோகங்களிளெல்லாம் மலையாளிகளே அமர்ந்திருக்கிறார்கள். தமிழ்நாடு தனி மாகாணமாகப் பிரியும்போது அத்தொல்லை வெகு வாகக் குறைந்துவிடும்' என்று எழுதினார் (விடுதலை, 1.4.1938).

ஆந்திரரும், கேரளத்தவரும் ஆரிய அடிமைகளாக மாறிவிட்டார் கள். 'அடிமையாய் வாழ்வதைக் காட்டிலும் தமிழ்நாடும் மலை யாள நாடாக மாறுவதைக் காட்டிலும் தமிழ் மக்கள் அழித்தொ ழிந்து போவதே நல்லது' (குடியரசு, 24.07.1948).

'தெலுங்கர்களுக்கு ஹிட்லரைப் போன்ற நாட்டாரைப் பிடித்திருக் கிறது. சென்னை நகரம் முழுவதுமே வேண்டுமாம்! வட ஆர்க் காடு, செங்கற்பட்டு, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் சிற்சில பகுதிகள் வேண்டுமாம். தமிழர்கள் சித்தூர், நெல்லூர் ஆகிய பகு திகளைக் கேட்டதற்குப் போட்டியாகவே தெலுங்கர் இந்த வெடி குண்டை வீசியிருக்கிறார்கள் என்று கருதுகிறோம். மொழியின் அடிப்படை மீது பிரிவினை கேட்டால் எவ்வளவு தூரம் பேராசைக் குணம் படையெடுக்கிறது என்பதற்கு தெலுங்கரின் இந்தக் கோரிக்கையே தக்க காரணமாகும்' என்று எழுதினார்.

'உங்கள் விஷயம் வரவர மிஞ்சிவிட்டது. சென்னையில் 100க்கு 20 பேர் உள்ள நீங்கள், அதுவும் வயிற்றுப் பிழைப்புக்காக இங்கு வந்திருக்கிற நீங்கள், சென்னை நகரத்தின் மீது ஆசை வைப்பது தகாது. முடவன் மலைத்தேனுக்குத் தாவினால் என்ன கதியோ அதுதான்! வேண்டாம் இந்த விபரீத எண்ணம்! சென்னை நகரத்தி

லிருப்பதற்குப் பிரியமில்லையென்றால் அடுத்த ஒரே மாதத்திற்குள் இதைவிட்டுப் புறப்பட்டு விடலாம்' என்றே எழுதினார் (விடுதலை, 1.9.1944).

'மூன்றாந்தர - நான்காந்தர உதவாக்கரைத் தெலுங்கர்களையெல்லாம் கார்ப்பரேஷனுக்குள் திணிப்பதற்காகவா இவருக்குக் கமிஷன் வேலை தரப்பட்டிருக்கிறது? முதலில் இவரைத் தெலுங்கு நாட்டுக்கு மாற்றியாக வேண்டும். இவர் இதுவரையில் செய்துள்ள 'மனவாடு'ச் செய்கைகளைச் சீர்படுத்துவதற்கே இன்னும் பல ஆண்டுகள் பிடிக்கும். ஒரு தமிழன் ஹைக்கோர்ட் நீதிபதியாக வருவதற்கு இத்தனை ஆண்டுகள் பிடித்திருக்கின்றன. ஒரு தமிழன் கார்ப்பரேஷன் கமிஷனராவதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் செல்ல வேண்டுமோ தெரியவில்லை' (விடுதலை, 16.12.1952). இப்படியெல்லாம் பேசியும் எழுதியும் செயல்பட்டவர் தந்தை பெரியார்.

## தெலுங்கர், ஆந்திரர் என்று நேருக்கு நேர் கிழித்தவர் பெரியார்:

தமிழ்நாடும் மலையாள தேசமும் சேர்ந்த தட்சிணதேசம் ஒன்று வேண்டாம். அப்படி இருந்தால் மலையாளிகளின் ஆதிக்கம் இன்னும் தமிழ்நாட்டில் கோலோச்சும். எனவே மலையாளிகள் தனியாகப் போய்விடட்டும். தமிழ்நாடோடு இருப்பது ஆபத்து என்றார். டீக்கடை, மளிகைக்கடை எல்லாம் மலையாளிகள் வசமாகிவிடும். வேலைவாய்ப்புகளிலும் மலையாளிகள் தமிழருக்கான இடத்தைப் பிடித்துக் கொள்வார்கள். எனவே மலையாளிகளை இப்போது துரத்தவேண்டும் என்றார்.

தமிழன் நிலைமை இன்று பைத்தியக்காரன் நிலைமையைவிடப் பரிதாபகரமாயிருந்து வருகிறது. ஆரியனும், மலையாளியும், வடநாட்டானும் தேவைக்குமேல், தகுதிக்கு மேல், உரிமைக்கு மேல், சுரண்டிக்கொண்டிருப்பது தன்? தெருவுக்குத் தெரு, சந்துக்குச் சந்து இத்தனை ஆரியர்களும் இத்தனை மலையாளிகளும் கூடியிருந்தால் தமிழனுக்கு இடமேது? மத்திய சர்க்கார் பணிமனைகள் ஒன்றில் நுழைந்து பார்த்தால் தெரியும்? 100க்கு 90 பேர் ஆரியர். 78 பேர் மலையாளிகள், ஒன்றிரண்டு பேர் மட்டுமே தமிழர் (திராவிடர்) என்ன அநியாயம் என்று கேட்டார் (விடுதலை 22.09.1954).

மலபார் போலிஸ் நம்மை அடக்கியாள என்ன யோக்கியதை இருக்கிறது? இதில் தமிழன் இருக்கிறானா? தபால்துறையில் பாதிக்குமேல் மலையாளிகள், தெலுங்கர் இடம்பிடித்திருப்பதை உடனே நீக்க வேண்டாமா? கல்வித்துறையில் தெலுங்கனுக்கு தமிழ்நாட்டில் வேலை. இந்த அதிகாரிகளுக்கு தமிழ் தெரியுமா? தெலுங்கு அதிகாரிகள், மலையாள அதிகாரிகள், தங்களின் தெலுங்கர்களை, மலையாளிகளைத் தமிழ்நாட்டில் திணிப்பதை நிராகரிக்க வேண்டும். அவர்கள் தமிழர்களுக்கு எப்படி கற்றுக்கொடுக்க முடியும் என்றெல்லாம் மொழிவழி மாநில பிரிவை ஒட்டி தெலுங்கர்களையும் மலையாளிகளையும் வசைபாடி துரத்துவதிலே தீவிரம் காட்டினார். இது விசயமான 100 ஆதாரங்களை ப.திருமா-வேலன் இந்த நூலின் எடுத்து வைக்கிறார்.

மலையாளிகள் வெறுக்கும் அளவிற்கு தெலுங்கர்கள் தூற்றும் அளவிற்கு அவர்களை உண்டு இல்லை என்று பெரியார் வசைபாடி தமிழ்நாட்டிலிருந்து விரட்டுவதிலேயே குறியாக இருந்திருக்கிறார். இந்தத் தமிழ்வெறியரை அல்லது தமிழர் நலனிலேயே அக்கறை செலுத்திய ஒரு தீவிர செயல்பாட்டாளரை தெலுங்கர், நாயக்கர் என்று சொல்லும் அரசியல் முதிர்ச்சியற்ற வெறும் வெத்துவேட்டு அரசியல்வாதிகளின் முகத்தை கிழித்துத் தொங்க விடுகிறது இந்நூல். பெரியார் தமிழினத் தலைவன் என்பதற்கு அவரது எழுத்துக்கள் சாட்சிகளாகின்றன.

பெரியார் காந்தியின் மனப்போக்கிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர். இந்திய - பாகிஸ்தான் பிரிவினையின் பொருட்டு, இந்தியா பாகிஸ்தான் வளர்ச்சிக்குத் தர வேண்டியதாக ஒத்துக்கொண்ட 55 கோடி ரூபாயைத் தர மறுக்கிற நிலையை எடுத்தபோது காந்தியார் உண்ணாவிரதம் இருந்து அதனைப் பாகிஸ்தானுக்குப் பெற்றுத் தருவதில் இறங்கினார். பல்வேறு விளைவுகளைச் சந்தித்தார்.

பெரியார், திராவிட பிரதேசமான ஆந்திரா, கர்நாடகா, மலையாளம் பிரிந்து போவதை விரும்பினார். மிகமிக விரைவாய்ப் பிரிந்து போகட்டும் என்பதில் முனைப்புக் காட்டினார். ஆனால் இந்தியா என்ற மைய அரசின்கீழ் அது ஒன்றிணைக்கப்பட்டுள்ளது என்ற யதார்த்தத்தைக் கூட மறுத்து இயங்கினார். மொழிவழி மாநிலம் பிரிந்த உடனே தமிழ்நாட்டில் முன்னமே வேலையில் இருந்த தெலுங்கர்களை, மலையாளிகளை, கன்னடர்களை தமிழ்நாட்டை விட்டு ஓடு ஓடு என்று துரத்துவதிலேயே வேகம் காட்டினார். சரியோ, தவறோ மைய அரசு நியமித்தவர்களை அப்படித் துரத்துவதில் நிதானம் காட்டியிருக்கலாம். விரைவாக அவரவர் மாநிலங்களுக்கு அழைத்துக்கொள்ள சொல்லலாம். ஆனால் மைய அரசின் பணியாளர்களை அப்படி துரத்த முடியுமா என்று பெரியார் யோசிக்கவில்லை. காந்தி இந்த நெருக்கடியை எதிர்ப்பார். தமிழக அரசு பணியில் மலையாளிகள் இருந்தால் துரத்துவதில் நியாயம் உண்டு. மைய அரசு பணியாளர்களையும் தமிழ்நாட்டை விட்டு ஓடு என்றார். தமிழ் தெரியாத அதிகாரிகளிடம் மக்கள் தங்கள் குறைகளை எப்படிப் பேசமுடியும் என்றார்.

பெரியார் தன் பக்க நியாயத்தை மட்டுமே வைத்தார். மறுபக்கம் என்ற ஒன்று இருக்கிறது என்பதை அவர் மறுத்தார். விரும்பியோ விரும்பாமலோ விடுதலைக்குப்பின் இந்தியா என்ற ஒரு தேசம் உருவாகிவிட்டது. அது ஆங்கிலேயராலே உருவாக்கப்பட்டுவிட்டது. சுதந்திர நாட்டில் மத்திய அரசு பணிகள் என்பது எல்லா மகாணத்து மக்களுக்கும் உரிமை உடையது என்று வகுத்துக்கொண்டு தேர்வுசெய்யப்பட்டவர்களை அனுப்புகிறது. மலையா-ளியை எப்படி பணி அமர்த்தலாம்? தெலுங்கனை எப்படி பணி அமர்த்தலாம் என்பது இன உணர்ச்சி சார்ந்தது மட்டுமே. நாம் வகுத்துக்கொண்ட அரசியலமைப்பிற்கு முரணானது. இந்த யதார்த்ததை பெரியார் ஏற்றுக்கொள்ளவே இல்லை. ஈழத்தில், மலேசியாவில் இதுதானே பிரச்சினை. தமிழர்களை, வந்தேரிகள் என்று பார்க்கும் பார்வையில்தானே தமிழர் இனமே சீரழிவிற்கு உண்டானது. தமிழ் நாட்டிற்கு ஒன்று, ஈழத்திற்கு வேறு ஒன்று என்று பார்க்க முடியுமா? தமிழ்நாட்டில் இருக்கும் தெலுங்கனை, மலையாளியை அணுகுவதில் உள்ள வரலாற்று அடிப்படையைப் பெரியார் எடுத்துக் கொள்ளவில்லை. புரட்சியாளர் சே குவேரா, என் பாதம் நிற்கும் இடமே என் தேசம் என்றார். உலக மக்களை நேசிக்கிற பார்வை அவருடையது. சே குவேராவை இந்தப் பிரபஞ்சத்தின் மனிதன் என்றார்கள். சார்த்தர், சே குவேராவை இருபதாம் நூற்றாண்டின் மனிதன் என்றார். சே குவேரா ஒரு புதிய சோசலிச மனிதரை உருவாக்க வேண்டும் என்றார். உலகமெல்லாம் தமிழர்கள் சென்று வாழ்கிறார்கள். ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு விதமான அரசியல் நெருக்கடிகளை எதிர்கொண்டு வாழ்கிறார்கள். இன்று பெரியாரின் சிந்தனைகளைவிட சேகுவேராவின் சிந்தனையே உலகத் தமிழர்களுக்கு நெருக்கமாக இருக்கும்.

உண்மையில் மைய அரசு என்பதில் பெரியாருக்கு அக்கறை இல்லை. தமிழ்நாடு தனி நாடு, அதில் தமிழ் திராவிடரைத் தவிர்த்த மற்ற எந்த திராவிடருக்கும் இடமில்லை என்பதிலேயே அவரது பேச்சும் எழுத்தும் போராட்டங்களும் இருந்தன. இவரை எப்படி திராவிடம் பேசி தமிழை தமிழர்களை ஏமாற்றியவர் என்று சொல்லமுடியும்? உண்மையால் பெரியார் குறித்து இன்று அப்படி பேசுபவர்கள்தான் ஏமாற்றுகின்றனர். பொய்களைப் பரப்புகின்றார் என்பதற்கு இந்நூல் ஒரு முக்கியமான சாட்சி. ஓர் ஆவணம். பெரியார் இவர்களையெல்லாம் விட உயர்ந்த தமிழன் என்று நிறுவுகிறது.

வேலை வாய்ப்புகளில் தமிழ்நாடு மற்ற இனத்தாரின் மற்ற மொழிக்காரர்களின் வேட்டைக்காரனாக ஆகிவிட்டது. தமிழனுக்கு எந்த வேலையிலும் தமிழ்நாட்டில் இடமில்லாமல் போய்விட்டது. 'உலகில் வேறு எந்த நாட்டிலும் பிறநாட்டான். பிற இனத்தான் நிரந்தரமாகத் தங்கிக்கொண்டு இப்படிச் சுரண்டிக் கொண்டிருக்க முடியாது. 'இந்து' என்ற பொதுப்பெயரால் ஆரியனின் ஆதிக்கம்! திராவிடன் என்ற பொதுப்பெயரால் மலையாளிகளின் ஆதிக்கம்!

இந்திய யூனியன் என்ற பொதுப்பெயரால் வடநாட்டான் ஆதிக்கம்' என்று எழுதினார். பெரியார் தமிழ்நாடு தமிழரின் நாடு மட்டுமே என்ற நிலையில் உறுதிப்பாட்டுடன் நின்றார். திராவிட இனங்க ளைத் தூக்கி எறிந்தார்.

## வடவர் எதிர்ப்பு:

பெரியார் 1947க்குப் பின்னும் இந்திய தேசத்தில் இணைந்த ஒரு பகுதி தமிழ்நாடு என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் தேர்தல் பாதை திருடர்கள் பாதை என்று அதை நிராகரித்ததால் சமரச மற்று அவர் நினைத்த கருத்தை தீவிரமாக முன்வைத்து களமாடி-னார். பின்விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் செய்தார்.

மொழிவழி மாநிலமாக தமிழ்நாட்டிலிருந்து ஆந்திரா, கர்நாடகா, கேரளா தொலைந்துபோவதே நல்லது என்று போராடியதைப் போலவே, தமிழ்நாட்டில் இருக்கிற அந்நியர்களை வெளியேற் றியே தீரவேண்டும் என்று போராடினார்.

'இந்தியாவில உள்ள நாம் ஒரு குடும்ப மக்கள் அல்ல. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளும் அல்ல. நம் எல்லோருக்குமான ஒரு தகப்பனும் இல்லை. நம் தாய் தந்தையர்கள் வேறுவேறு. சிறை யில் இருப்பர்களுக்கு சூப்பிரண்டும் ஜெயிலரும் குடும்பத் தலை-வராகிவிட முடியுமா?' என்றுகேட்டார் (குடிஅரசு, 28.04.1940).

'அன்னிய ஆதிக்கத்தின்றும் திராவிடத்திற்கு அரசியல் விடுதலை, வடநாட்டுப் பனியாக்களின் சுரண்டலின்றும் திராவிடத்திற்குப் பொருளியல் விடுதலை, பார்ப்பனியத்தின் பிடியினின்றும் திராவி டத்திற்குச் சமூகவியல் விடுதலை' என்பதை 12.10.1944 மதுரை மாணவர் மாநாட்டில் முன்வைத்தார்.

'அன்னியன் என்றால் வெள்ளையன், பனியா, முல்தானி, மார்வாடி, காஷ்மீரி, குஜராத்தி ஆகியவர்கள்தான்.'

'நம்நாட்டில் தங்கம், வெள்ளி, பித்தளை, துணி முதலிய வியாபா ரங்களிலும் வட்டிக் கடைகளிலும் வியாபாரத்தின் எல்லாத் துறைக ளிலும் மார்வடி, குஜராத்திகள், பனியாக்கள் இவர்கள் ஆதிக்கம் செலுத்திக் கொள்ளை லாபம் பெற்று நம் நாட்டுப் பணத்தைக் கொள்ளை கொண்டு போகிறார்களா இல்லையா? இவர்களைத் துரத்தி அடிக்க வேண்டும். லேவாதேவி தொழிலில் ஈடுபட்டுள்ள மார்வாடிகளை துரத்தியடிக்க வேண்டும்' 1947 சூலை, ஆகஸ்ட் மாதங்களில் தீவிரமாகப் பேசினார்.

1951 வாக்கில் பனியா, மார்வாடி, குஜராத்தி முதலிய வடவரின் அத்தனை விதமான கடைகளின் முன்நின்று இவர்களின் பொருட் களை வாங்காதே என்று திராவிடர் கழகத் தொண்டர்களை நிறுத்தி மறியல் போராட்டத்தை முன் எடுத்தார். தமிழ்நாட்டில் வட நாட்டார்களுக்கு இருக்க வீடும் செய்யத் தொழிலும் வாழ்க்கை வசதிகளும் ஏற்பட செயலாற்றும் மத்திய அரசைக் கண்டித்து அவர்களைத் தமிழ்நாட்டிற்குள் நுழையவிடக்கூடாது. அப்படி வந் தவர்களை வெளியேற்ற வேண்டும் என்று தொடர்ந்து களத்தில் இறங்கிப் போராடினார். வடநாட்டான் பத்திரிகைகளை வாங்கக்கூ டாது. வடநாட்டான் வங்கிகளில், கணக்கு வைக்கக்கூடாது என்று என்னென்ன விதங்களில் அவர்களைத் தடுத்து துரத்தவேண்டுமோ அந்தந்த வகைகளில் போராடினார். வெறுக்கத் துணிந்தவன்தான் வெற்றிபெறுவான் என்று முழக்கமிட்டார்.

இந்நிலையில் பம்பாயில் சிவசேனை இயக்கத்தவர்கள் தமிழர் களை பதிலடியாகத் தாக்கத் தொடங்கினர். 'ஆண்டொன்றுக்கு பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை வடநாட்டான்கள் கொள்ளை அடித்துக்கொண்டு போவது பற்றி ஒரு பொருளாதாரத் துறை வள்ளுவனும் ஒரு தேசியவாதியும் ஒரு தேசபக்தனும் வாயைத் திறக்கவில்லை.' 22.9.1967-ல் சிவசேனைக்கு எதிர்ப்பு கண்டன நாளாக தலையங்கம் எழுதினார். பெரியார் வடநாட்டிலி ருந்து வந்தவர்களுக்கு தொடர்ந்து நெருக்கடித்தர வடநாட்டான் அங்கிருக்கும் தமிழர்களை அடித்து துரத்த முற்பட்டான். தமிழர்க ளுக்கு மற்ற மாநிலங்களில் வேறுவகையான விளைவுகள் ஏற்படு வதைக்கண்டு வடவர் எதிர்ப்பை கைவிட்டார். இந்த இன உணர்ச்சி என்பது சிக்கலானது. நாம் ஒரு பாதுகாப்பான இடத் தில் அமர்ந்துகொண்டு மற்ற இனங்களை வெளியேறு என்று சொல்லும்போது நமது இனம் வேறு இடத்தில் இதே சிக்கலை எதிர்கொள்கிறது. பெரியாரின் பக்கசார்பு வேறு வகையில் சிக்க லுக்குரியதாக மாறுகிறது. இந்த வகையான பார்வை இந்த நூலில் இல்லை.

பெரியார் 19.12.1973-ல் ஆற்றிய இறுதி உரையில் 'நமது கடமை என்பது தமிழர் என்று சொல்லுகிற இத்தனைகோடி மக்களைப் பொறுத்தது' என்றே சொல்லி முடித்தார். இவருடைய போராட்ட முறைகள் வெற்றி அடைந்ததற்கு காமராசர், அண்ணா, கலைஞர் என்று வரிசையாக அவர்களின் ஆட்சியை ஆதரித்து வந்ததும் ஒரு சுலபமான காரியமாக ஆக்கிக் கொண்டார்.

வடவரை பெரியார் வெறியேற்ற பாடுபட்டார். பெரியார் தமிழ் இனத்தைப் போற்றியவர். அவர்களது வாழ்க்கை வளத்திற்காகவே பாடுபட்டவர் என்பதற்கான தரவுகளை இந்த நூலில் ஏராளமாக முன்வைக்கிறார். மற்றவர்கள், மற்ற இனத்தவர்கள் தன்னை எப்படி வேண்டுமானாலும் மோசமாக வரையறுத்துக் கொள்ளட் டும். அதுபற்றி கவலை இல்லை. தமிழன் மட்டுமே தமிழ்நாட்டில் சிறப்புடன் வாழவேண்டும் என்பதே அவரது போராட்ட வடிவமாக இருந்தது.

தமிழ்நாட்டில் இன்று தமிழ் ஆதிக்கசாதிகள் வட்டித்தொழிலை நடத்தி தமிழர்களைக் கசக்கிப்பிழிந்து நொறுக்குகிற வரலாற்று முரணும் இங்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி முடிக் கலாம். வட்டித் தொழில் நடத்திய வடநாட்டான்கூட தமிழர்களிடம் கொஞ்சம் நீக்குப்போக்காக நடந்துகொண்டான். தமிழ்நாட்டில் தமி ழனே வட்டித்தொழிலைக் கையில் எடுத்தப்பின் கடன் வாங்கிய ஏழை எளியவர்களை மிகமிக மோசமாக வசைபாடி தற்கொ லையை நிகழ்த்திக் கொள்ளும்படி வைத்தனர். ஊரைவிட்டு ஓட வைத்தனர். காமதேனுபோல வட்டிக்குமேல் வட்டி வாங்கினர். முத லுக்குமேல் இரண்டு மடங்கு பணம் கரந்தனர். பணம் தரமுடியாத நிலைவரும்போது தங்களின் சின்னஞ்சிறிய வீடுகளை, கையடக் கத் தோட்டங்களை வட்டிக் கடைக்காரனுக்கு எழுதித் தந்தனர். குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டனர். சேட்டுக்களுக்கு பதில் குரூரமான தமிழ் சேட்டுக்கள் தமிழகமெங்கும் உருவாகி னர். வீடுகளுக்குள் புகுந்து பண்ட பாத்திரங்களை வீசியெறிந் தனர். அவர்கள் தங்களைச் சுற்றி ஒரு ரௌடிக் கும்பலை வைத் துக் கொண்டு அடித்தனர். பெண்களை இழிவுபடுத்தினர். ஏழைக் குடியானவன் தொடங்கி பெரிய பெரிய சினிமா தயாரிப்பாளர்கள் வரை பெண்டுபிள்ளைகளை நடுங்கவைத்தனர்.


பெரியார் நல்லதிற்காகத்தான் நினைத்தார். அதில் மாற்றுக்கருத்து கிடையாது. வட்டித்தொழில் விடுபவனும் தமிழன், பெற்றவனும் தமிழன். தமிழ் மொழியை கொடூரமாகக் கையாள வாய்ப்புள்ளவ னும் தமிழன். சூடு சுரணையால் மாய்த்துக் கொள்ள தமிழே தமிழ னுக்கு பகையானதும் வரலாற்றில் நிகழ்ந்தது நிகழ்கிறது.

இந்த இடத்தில்தான் காந்தியாரின் சிந்தனை நமக்கு உதவுகிறது. காந்தி இனத்தால் அல்ல் மொழியால் அல்ல எளிய மனிதர்க ளுக்கு யார் தீங்கிழைத்தாலும் தீங்கு என்று சொன்னார். வெள் ளைக்காரன் நம்மை அடிப்பதுகூட ஒரு அறியாமை. ஆதிக்க மனம் அவனை அப்படிச் செய்யத்தூண்டுகிறது. அவனைத் திருப்பி அடிப்பது அகிம்சை ஆகாது. மனிதத்தை அவன் உணர வைப்பதே உண்மையான அகிம்சை என்றார்.

ப.திருமாவேலன் பெரியார் ஒரு தமிழனாக, தமிழ் மக்களின் நலன் குறித்து மட்டுமே சிந்தித்து செயல்பட்டவராக விளங்கியதை ஆணித்தரமான தரவுகளோடு முன்வைக்கிறார். பெரியாரைத் தெலுங்கன், வடுகன் என்ற பெயரால் அரசியல் நடத்தும் பொய் யர்களை உணரவைக்கிறார். அதே சமயம் பெரியாரின் போராட் டக் களத்தில் பல மறுபக்க உண்மைகளுக்கு அவர் பொருட்படுத் தவில்லை. இடமளிக்கவில்லை என்பதையும் சொல்ல வேண்டிய தாக இருக்கிறது.



venugopal@thaiveedu.com



Allstate
You're in good hands.
உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்
தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்
Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(289) 275-8795
rlinghan@allstate.ca
பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி
செல்லப் பிராணிக் காப்புறுதி
ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்





வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
$985,000 TORONTO
$849,000 AJAX
$899,000 MARKHAM
$689,900 OSHAWA
$649,900 TORONTO
Sell Your House for Highest Price - Here Are Some Recent Proven Results
119% $131,000 SOLD OVER ASKING Morningside & Stains
118% $180,000 SOLD OVER ASKING Rossland & Chrch
106% $30,000 SOLD OVER ASKING Middlefield & Finch
103% $26,000 SOLD OVER ASKING Rossland & Chrch
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
HomeLife G1 Realty Inc.
HomeLife/Future Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet

# பேராசிரியர் ஐஜாஸ் அஹமட்டை நினைவுகூரல்

- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

அண்மையில் மறைந்த பேராசிரியர் ஐஜாஸ் அஹமட் தென்னாசியச் சூழலில் மார்க்சியத்தைத் தத்துவார்த்தத் தளத்தில் விரிவுபடுத்த ஆற்றிய பங்கு முக்கியமானது. ஒரு தத்துவவாதியாக மட்டுமன்றி உழைக்கும் மக்களின் விடிவுக்காக இறுதிவரைக் குரல் கொடுத்தவர் பேராசிரியர் ஐஜாஸ் அஹமட். ஆசிய மார்க்சியச் சிந்தனையாளர்களுள் ஐஜாஸ் அஹமட்டுக்குத் தனித்துவமான இடமுண்டு. தன் எழுத்துக்கள்



வழியே தென்னாசிய நிகழ்வுகளை மார்க்சிய வழித்தடத்தில் கோட்பாட்டுருவாக்கியவர். பின்நவீனத்துவம், பின்கொலனியம் போன்ற பிறழ்வுச் சிந்தனைகள் மீது கடும் மார்க்சிய விமர்சனங்களைத் தத்துவார்த்தத் தளத்தில் முன்வைத்தவர். நவகொலனியத்தின் நவீன வடிவங்களை இனங்கண்டதோடு பண்பாட்டுத் தளத்தில் அது விளைக்கும் சேதங்கள் பற்றி எச்சரித்தவர். இன்னும் முக்கியமாக, ஐரோப்பிய மார்க்சிய இலக்கிய விமர்சகர்களின் ஐரோப்பிய மையச் சிந்தனைப் போக்கை ஆழ விமர்சித்தவர். அவரது பங்களிப்புக்களின் ஒரு குறுக்குவெட்டுப் பார்வையை இக்கட்டுரை வழங்க முயல்கிறது.


பிரித்தானிய இந்தியாவில் உள்ள முசாபர்நகரில் 1941ல் பிறந்தவர் ஐஜாஸ் அஹமட். இந்தியப் பிரிவினையைத் தொடர்ந்து அவரது குடும்பம் பாகிஸ்தானின் லாகூர் நகருக்குக் குடிபெயர தனது கல்வியை லாகூரில் தொடர்ந்தார், அவரது அறிவு விரிவுக்கான களமாக தேனீரகங்களும் அரசியல் அமைப்புக்களின் கூடுமிடங்களும் அமைந்தன. அந்தத் தேனீரகங்களில் ஐஜாஸ் உருது இலக்கியத்தின் சிறந்த மனங்களைச் சந்தித்தார், அவர்கள் கவிதை மற்றும் அரசியல் இரண்டிலும் இவரைப் பயிற்றுவித்தனர். அரசியல் கட்சிகளின் குழுக்களின்வழி மார்க்சியத்தின் ஆழத்தை எதிர்கொண்டார், இது அவரது வாழ்நாள் முழுவதும் அவரைப் பற்றிக்கொண்டிருந்த உலகத்தின் எல்லையற்ற பார்வைக்கு அடித்தளமானது. இடதுசாரி அரசியல் செயற்பாட்டின் வழி பாகிஸ்தானின் அமைதியின்மையினைக் கேள்விகேட்கத் தொடங்கிய ஐஜாஸ் அதிகாரிகளின் கவனத்திற்கு வந்தார். இதனால் நாட்டை விட்டு அமெரிக்காவின் நியூயார்க் நகரத்திற்கு இடம்பெயர நேர்ந்தது.

ஐஜாஸ் அஹ்மதின் இரண்டு காதல்கள் - கவிதை மற்றும் அரசியல் - முழுமையாக நியூயார்க்கில் மலர்ந்தன. அவர் உருது கவிதைகள் மீதான தனது அபரிமிதமான அன்பை அவரது காலத்தின் மிகவும் பிரபலமான கவிஞர்களிடம் கொண்டு சேர்த்தார். அவர்களுக்கு காலிப்பை வாசித்து, அக்கவிதைகளின் பொருளை விளக்கத்தைப் பரிமாறும் புதுமையான பணியைத் தொடர்ந்து மேற்கொண்டார். இதன் பயனால் அவரது முதல் புத்தகமான Ghazals of Ghalib (காலிப்பின் கசல்கள்) 1971ம் ஆண்டு வெளிவந்தது. மறுபுறத்தில் ஃபெரோஸ் அகமதுவுடன் இணைந்து Pakistan Forum என்ற இதழைக் கொண்டுவந்தார். இவ்விதழ் யஹ்யா கானின் (1969-1971) இராணுவ சர்வாதிகாரத்தின் கீழ் நடந்த அட்டூழியங்களை ஆவணப்படுத்தியது. சுல்பிகார் அலி பூட்டோவின் (1971-1977) கீழ் ஜனநாயக ஆட்சியின் சாத்தியக்கூறுகள் பற்றி விரிவாகப் பேசியது. கிழக்கு பாகிஸ்தானில் (1972ல் வங்காளதேசமாக மாறியது) மற்றும் பலுசிஸ்தானில் உள்ள கிளர்ச்சிகளைப் பற்றி அதிக கவனம் குவித்தார். இந்த காலகட்டத்தில் ஐஜாஸ் தெற்காசிய அரசியலைப் பற்றி Monthly Review போன்ற சோசலிச பத்திரிகைகளுக்கு எழுதத் தொடங்கினார், இவ்வாறு தொடங்கிய உறவு மிகநீண்ட கால நெருங்கிய ஒத்துழைப்பாகத் தொடர்ந்தது.

இவரது மிகவும் புகழ்பெற்ற நூலான In Theory: Classes, Nations, Literatures (கோட்பாட்டில்: வர்க்கங்கள், தேசங்கள், இலக்கியங்கள்) 1992ம் ஆண்டு வெளியாகி மிகுந்த கவனத்தைப் பெற்றது. நன்கறியப்பட்ட அமெரிக்க மார்க்சிய அறிஞரும் இலக்கிய விமர்சகருமாகிய ஃபிரெட்ரிக் ஜேம்சன் (Fredric Jameson) 1986ல் Third-World Literature in the Era of Multinational Capitalism (பல்தேசிய முதலாளித்துவ காலத்தில் மூன்றாமுலக இலக்கியம்) என்ற கட்டுரையை Social Text என்ற இதழில் வெளியிட்டார். இக்கட்டுரைக்கான பிரதானமான தத்துவார்த்த எதிர்வினையை 1987ல் ஐஜாஸ் அஹமட் அதே இதழில் Jameson's Rhetoric of Otherness and the National Allegory ( வேற்றுமை பற்றிய ஜேம்சனின் சொல்லாட்சியும் தேசிய உருவகமும்) என்ற தலைப்பில் எழுதினார். இவ்வெதிர்வினையால் மார்க்சிய இலக்கிய வட்டங்களில் மிகுந்த கவனம் பெற்றவராக ஐஜாஸ் அஹமட் மாறினார். குறித்த எதிர்வினையில் இரண்டு தத்துவார்த்த அடிப்படைகளில் ஜேம்சனின் கட்டுரையை ஐஜாஸ் அஹமட் மறுத்தார். முதலாவது ஜேம்சன் கோருகின்ற மூன்றாமுலகப் பிரதிகளின் பொதுத்தன்மையை கேள்விக்குட்படுத்தினார். இரண்டாவது ஜேம்சன் சொல்கிற 'மூன்றாமுலகம்' என்பதற்கான தத்துவார்த்த தளமேதும் இல்லை. இது மேற்குலக மையவாதச் சிந்தனையின் தொடர்ச்சி என்று ஐஜாஸ் வாதிட்டடார். இந்த வாதங்களை உள்ளடக்கியதே அவரது முதல் நூலாகும். இந்நூல் கொலனித்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இயக்கத்தில் கோட்பாடு மற்றும் கோட்பாட்டாளர்களின் பங்கு பற்றியது. இதன் அத்தியாவசியமான உந்துதல், வரலாற்றின் பின்நவீனத்துவ மற்றும் பின்கட்டமைப்பியல் கருத்துக்களை ஊக்குவிப்பவர்களுக்கு எதிராக வாதிடுவதன் மூலம் அவர் இந்தக் கருத்துக்களுக்கு எதிரான காத்திரமான விமர்சனத்தை முன்வைத்தலாகும். அவரைப் பொறுத்தவரை, பிந்தைய கொலனித்துவம், பின்நவீனத்துவம் மற்றும் பிந்தைய கட்டமைப்புவாதம் போன்ற பல்வேறு 'பின்…இசங்கள் (post…isms) வெறுமனே கவர்ச்சிகரமான புதிய

விசாரணை வடிவங்களாக இருந்தன, அவற்றால் மிகக் குறைவா கவே சாதிக்க முடிந்தது.

பண்பாடு மற்றும் இலக்கியம் மீதான அவரது மிகுந்த மதிப்பீட் டின் அடிப்படையில், மூன்றாம் உலகின் பண்பாடுகள் மேற்குல கப் பெருநகரப் பல்கலைக்கழகங்களால் எவ்வாறு மதிப்பிடப்படு கின்றன என்பதைப் பற்றிய வலிமையான பகுப்பாய்வை ஐஜாஸ் உருவாக்கினார். ஃபிரெட்ரிக் ஜேம்சன் மீது எவ்வாறு கட்டமைக் கப்பட்ட விமர்சனத்தை முன்வைத்தாரோ அதேபோல கீழ்த்திசை வாதத்தின் பிரதான தத்துவவியலாளரான எட்வர்ட் ஸயித்தின் கோட்பாடு மீதான கூர்மையான விமர்சனத்தை முன்வைத்தார். இப் பணி பின்நவீனத்துவம் மற்றும் பின்கொலனித்துவத்தின் வலுவான எதிர்மறையான மதிப்பீட்டிற்கும் காட்டமான விமர்சனத்திற்கானது மாக விரிவடைந்தது. ஐஜாஸின் பின்நவீனத்துவம் மற்றும் பின்கொ லனித்துவம் பற்றிய வாசிப்பின் மையமாக இருந்தது அக்கோட் பாடுகளை முன்மொழிவோர் மார்க்சியத்தை மறுதலிப்பதாகும்.




அவர்களால் முன்மொழியப்பட்ட 'பிந்தைய மார்க்சியம்' என்பது 'மார்க்சியத்திற்கு முந்தையதை நோக்கியதேயன்றி வேறொன்று மில்லை, இவர்கள் செய்வது மார்க்ஸ் கடந்துவந்த இலட்சியவா தத்திற்குத் திரும்புவதே' என்றார். புதிய சிந்தனையின் பேரில் மார்க்ஸியர்களையும் மார்க்ஸிய சிந்தனைகளையும் திரிக்கின்ற அயோக்கத்தினத்தில் இப்புதிய கோட்பாட்டாளர்கள் இறங்கியுள் ளார்கள் என்பதே அவரின் வாதமாக இருந்தது. எவ்வாறு எர் னஸ்டோ லாக்லாவ் மற்றும் சாண்டல் மௌஃபே ஆகிய இருவரும் Hegemony and Socialist Strategy (1985) என்ற தங்களது என்ற நூலில் அன்டோனியோ கிராம்சியை பின்நவீனத்துவ சிந்தனையா-ளராகக் காட்ட முயன்றார்கள் என்பதை ஐஜாஸ் இதற்கு எடுத்துக் காட்டாகப் பயன்படுத்துவார். இதனாலேயே கிராம்சியை ஆழமா கப் படித்த ஐஜாஸ் தனது நூலில் கிராம்சி குறித்து விரிவாகப் பேசியதோடு கிராம்சியை மார்க்சியவாதியாக நிறுவினார். இக்கார ணங்களினாலேயே அவரது 'கோட்பாட்டில்: வர்க்கங்கள், தேசங் கள், இலக்கியங்கள்' புத்தகம் உலகெங்கிலும் உள்ள அறிஞர்க ளிடம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. மார்க்சியம் தாக்கு தலுக்கு உள்ளானபோது, அதன் பொருத்தம் பற்றி அல்ல, ஆனால் அதன் தேவை குறித்து அதிநவீன கணக்கெடுப்பை உரு வாக்கிய சில சிந்தனையாளர்களில் ஐஜாஸ் ஒருவர். 'பின்கொல-னித்துவமும், பெரும்பாலான விஷயங்களைப் போலவே, வர்க்கம் சார்ந்த விஷயமாகும்' என்று அவர் தனது உரைநடையை வரைய றுக்கும் கூர்மையுடன் எழுதினார். அவரது புத்தகம், எப்படிக் கோட்பாட்டைப் பற்றி சிந்திக்கவும் எழுதவும் வேண்டுமென ஒரு முழுத் தலைமுறைக்கும் கற்பித்த புத்தகம்.

எட்டுக் கட்டுரைகளைக் கொண்ட இப்புத்தகத்தின் முதலாவது கட் டுரை இலக்கியக் கோட்பாடும் மூன்றாமுலக இலக்கியங்களும் என்ற தலைப்பிலமைந்தது. இது ஐரோப்பிய மையவாதச் சிந்த னையில் இருந்து விலகி ஏனைய நாட்டு இலக்கியங்கள் எவ்வாறு நோக்கப்பட வேண்டும் என்பது பற்றிய சில முக்கியமான கருத் துக்களை முன்வைத்தது. இக்கட்டுரை இன்னும் குறிப்பாக மூன் றாமுலக இலக்கியங்களை எவ்வாறு புரிந்து கொள்வது என்ற வினாவுக்கான விடையாகியது. அதேபோல மூன்று உலகக் கோட் பாடு தொடர்பான விவாதங்களில் தனது கருத்துருவாக்கங்களை இந்நூலில் முன்வைக்கிறார். இந்நூல் அடிப்படையில் ஏகாதிபத்தி யம் மீதான இலக்கிய விமர்சனத்திற்கான பயனுள்ள மார்க்சிய இடையீட்டைச் செய்கிறது.


ஐஜாஸ் அஹமட் பல அறிஞர்களின் படைப்புகள் தத்துவார்த்தத் தளத்திலும் நடைமுறையிலும் வலுவிழந்தவையாக இருக்கின்றன என்பதை அடிக்கடி சுட்டிக்காட்டினார். எட்வேட் ஸயித்தின் கீழ்த் திசைவாதம் மீதான விமர்சனங்கள் மார்க்சியத் தளத்தின் வழி நின்று மேற்கொள்ளப்பட்டவை. 1978ல் வெளியான ஸயித்தின் Orientalism என்ற புத்தகம் கல்வி உலகத்தை புயலால் உலுக்கிய ஒன்று. மேற்கத்திய எழுத்தாளர்களால் கிழக்கத்திய சமூகங்களை இழிவாக சித்தரிப்பதை ஸயித் விமர்சித்தார். ஐஜாஸ் ஸயித்தின் 'தாராளவாத மனிதநேய பாரம்பரியத்தை' விமர்சித்தார், ஒரு மார்க்சியவாதியாக அதன் தவறுகளை எடுத்துரைத்தார். 'ஓரியண் டலிசத்தில்' ஸயித் தனது வாதத்தை உருவாக்க மேற்கத்திய நூல்களைத் தேர்ந்தெடுத்ததையும் அதன்வழி ஒரு தாராளவாதப் போக்கில் வாதங்களை உருவாக்குவதையும் விமர்சித்தார். மேலும் அப்புத்தகம் போதுமான கோட்பாட்டு வலுவின்றிச் சில பொது மைப்படுத்தல்களை செய்யும் விதத்தில் ஐஜாஸ் உடன்பட வில்லை.

ஐஜாஸ் அஹ்மட் மூன்றாம் உலக இலக்கியத்தின் தீவிர வாசக ராக இருந்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உருவான ஒரு வகை இலக்கியப் போக்குடன் குறிப்பாக கொலனியாதிக் கவாதிகள் தங்கள் கொலனிகளில் இருந்து வெளியேறத் தயங்கிய நிலையில் தேசியவாதத்துடன், கொலனித்துவ சக்திகளுக்கு எதி ரான போராட்டத்தை முன்னெடுத்த நிலையில் தோன்றிய இலக்கி யங்களின்பால் அக்கறை கொண்டார். இந்த வகை இலக்கியம் மேற்குலகில் விமர்சன ஆய்வுகள் மற்றும் அறிவார்ந்த வேலைக-ளின் புதிய நீரோட்டத்தை உருவாக்கியது. பின்னர் மூன்றாம் உல கமே இத்தகைய கருத்துக்களின் மையமாக மாறியது. ஐஜாஸ் அஹமட் இந்த விவாதத்தில் முழுமையுடன் ஈடுபட்டார், மிகப் பெரிய தத்துவார்த்த பங்களிப்புகளை செய்தார். அவர் கொலனித் துவ மற்றும் பின்கொலனித்துவ சொற்பொழிவுகளின் வழி மார்க் சிய விமர்சனத்தை உருவாக்கினார் தனது மார்க்சிய விமர்சனங்க ளின மூலம் இந்த நீரோட்டத்தின் பல அடித்தளங்களை தகர்த் தார். அவரது அணுகுமுறை தொடர்ந்து மார்க்சியமாக இருந்தது, புதிய கல்வியியலில் கற்பிக்கப்படும் பின்கொலனித்துவக் கோட் பாட்டின் பெரும்பகுதி ஒருதலைப்பட்சமானது என்று சொன்னார். அவரைப் பொறுத்தவரை, பெரும்பாலான மேற்கத்திய கல்வியா ளர்கள் கொலனித்துவ நுகத்தின் கீழ் நீண்ட காலமாக இருந்து சமீபத்தில் மட்டுமே சுதந்திரம் பெற்ற சமூகங்களைப் புரிந்து கொள்வதில் கடுமையான தவறுகளைச் செய்தனர் என்று வாதிட் டார். அதேபோல எட்வர்ட் ஸயித் கார்ள் மார்க்ஸை ஓரியண்டலிஸ் டுகளுக்குள் சேர்த்ததை எதிர்த்ததோடு அந்த வகைப்பாட்டின் கோளாறுகளையும் எடுத்துரைத்தார்.

ஐஜாஸ் அஹ்மட்டின் முக்கியமான வாதம், மேற்கத்திய புலமைத் துவம் கருதுவது போல மூன்றாம் உலக இலக்கியத்தை ஒரே அளவுகோலில் ஒரே பார்வையில் பார்க்கவியலாது என்பதே. மூன் றாம் உலக இலக்கியத்தில் வர்க்கம் மற்றும் பண்பாட்டில் பெரும் வேறுபாடு இருப்பதாக அவர் வாதிட்டார். ஏனெனில் அரசியலிலும் மதத்திலும் பன்முகத்தன்மை இருந்தது. மூன்றாம் உலகில் வேறு பட்ட தனித்தன்மைகள் இருந்தன, அவரைப் பொறுத்தவரை இந்த

வேறுபாடுகளை மேற்கு புறக்கணித்தது. இது மேற்குலகக் கல்வி மான்களின் ஆய்வியல் கோளாறு. இதேபோல், அவருக்கு 'மூன் றாம் உலக எழுத்தாளர்கள்' என்ற சொற்பயன்பாட்டில் சிக்கல் இருந்தது, ஏனெனில் அவரைப் பொறுத்தவரை பல மூன்றாம் உலக எழுத்தாளர்கள் பழமைவாதத்தினர் மற்றும் உயரடுக்கினர்.

உலகை முதல், இரண்டாம், மூன்றாம் எனப் பிரிப்பதுடன் அவர் உடன்படவில்லை. இந்த வகைப்பாட்டின் படி, முதல் உலகம் முதலாளித்துவமானது, இரண்டாவது சோசலிசமானது, மூன்றாவது ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் வளரும் மற்றும் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளைக் கொண்டிருந்தது. ஐஜாஸ், மூன்றாவதானது மற்றவர்களைப் போலவே முதலாளித்து




வமாக இருந்தாலும், இலக்கியத்தின் பல நிலைகளை உருவாக் கும் மிகவும் பின்தங்கிய முதலாளித்துவத்துடன் இருப்பதாகக் கரு தினார். அதாவது, மேற்கத்திய கல்வியாளர்கள் புரிந்து கொள்ளத் தவறிய பல்வேறு பொருளாதார மற்றும் அரசியல் பண்பாடுகள் மற்றும் நிலைப்பாடுகளைக் கொண்ட பல்வேறு பிரதிகளை இந்த நாடுகள் கொண்டிருப்பதால், தேசியவாதத்தின் ஒரு 'மூன்றாம் உலக இலக்கியத்தை' நீங்கள் படிக்க முடியாது என்றார். இவை யனைத்தும் இவரது நூலில் வாதங்களாக விரிகின்றன.

இவரது இரண்டாவது நூலான Lineages of the Present: Ideological and Political Genealogies of Contemporary South Asia (நிகழ்கா லத்தின் பரம்பரைகள்: தற்கால தெற்காசியாவின் கருத்தியல் மற் றும் அரசியல் மரபுவழிகள்) தென்னாசியச் சூழலின் முக்கியமான திசைவழிகள் குறித்த உரையாடல்களின் தொகுப்பாகும். மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட நூலின் முதற்பகுதி பின்னிப்பி ணைந்த மரபுவழிகள் என்ற தலைப்பில் சுதந்திரத்துக்குப் பிந் தைய இந்தியாவின் மரபார்ந்த நெருக்கடிகளை நான்கு கட்டுரைக ளினூடு பேசுகிறது. இந்திய பாகிஸ்தான் பிரிவினை, பாகிஸ்தா னில் ஜனநாயகமும் சர்வாதிகாரமும், உருது அடையாளமும் தேச மும் குறித்த குறிப்புக்கள் என இந்தியாவின் பல்பரிமாணத்தின் நீட்சியையும் அது ஏற்படுத்தியுள்ள நெருக்கடியைப் பற்றியும் முத லாவது பகுதி பேசுகிறது. இந்நூலின் மூன்றாவது பகுதி சமகால நிகழ்வுகள் பற்றிய ஒரு கணக்கெடுப்பாகவும் விமர்சனமாகவும் உள்ளது.

தீவிர வலதின் அரசியல் என்று தலைப்பிடப்பட்ட இரண்டாவது பகுதியில் இரண்டு கட்டுரைகள் உள்ளன. அதில் Fascism and National Culture: Reading Gramsci in the Days of Hindutva (ஃபாசிச மும் தேசிய பண்பாடும்: இந்துத்துவ நாட்களில் கிராம்ஸியை வாசித்தல்) என்று தலைப்பிடப்பட்ட முதலாவது கட்டுரை, ஃபாசி சம் குறித்த முக்கியமான கருத்தாக்கங்களையும் அந்தோனியோ கிராம்சி அதை பண்பாட்டு மேலாண்மையோடு அடையாளங் கண் டதையும் சுட்டுகிறது. இரண்டாவது கட்டுரை பாபர் மசூதி இடிக் கப்பட்ட பின்னணியில் On the Ruins of Ayodhya: Communalist Offensive and Recovery of the Secular (அயோத்தியின் இடிபாடுகள் பற்றி: வகுப்புவாதத் தாக்குதலும் மதச்சார்பின்மையின் மீட்பும்) என்ற தலைப்பிலமைந்தது. இப்பகுதியில் இனவாதம் குறித்தும் பாசிசம் குறித்து பல முக்கியமான விடயங்களை ஐஜாஸ் அஹ- மட் விரிவாகப் பேசியுள்ளார்.

இவரது மூன்றாவது நூலான On Communalism and Globalization: Offensives of the Far Right (இனவாதம் மற்றும் உலகமயமாக்கல்: தீவிர வலதுசாரிகளின் தாக்குதல்கள்) இவ்விடயங்களை ஆழமாக உரையாடுகிறது. அத்துடன் உலகமயமாக்கல் குறித்தும் அது பண்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றியும் தீவிர வலது அரசிய லின் குரூரம் பற்றியும் பேசுகின்றன. இதேபோல் 2000ம் ஆண்டு Frontline இதழில் A Reflection on Our Times ( நமது காலத்தின் பிரதிபலிப்புக்கள்) என்ற தலைப்பில் எழுதிய தொடரும் முக்கிய மானது. அத்தொடரில் இருபதாம் நூற்றாண்டு குறித்த சுருக்க மான வரலாற்றுச் சித்திரத்தை ஐஜாஸ் அஹமட் வழங்கியிருந்தார். இவற்றின் அடிப்படையில் அவரது கருத்துக்களை சுருக்கமாகப் பார்க்கலாம்.

மதச்சார்பின்மை குறித்த அவரது அவதானிப்புகள் இந்தியச்சூ ழலை மையமாகக் கொண்டவையாயினும் கடந்த பத்தாண்டுகா லத் தென்னாசிய நிலைமைகள் அதை ஒத்தேயிருக்கின்றன. மதச் சார்பின்மையை நவீனகால ஒழுக்கப் பண்பென்றும் இது பண் டைக் காலங்களில் கிடையாது என்று சொல்லும் ஐஜாஸ் இது அரசின் அதிகார வரம்புக்குள்ளிருந்து மதத்தை வெளியேற்றுதல் என்ற ஒரு ஐரோப்பிய ஒழுக்கப் பண்பாகும் என்கிறார். மேலும் இந்திய முதலாளித்துவ வர்க்கம் நவீனத்துவத்தைக் கிரகித்துக் கொள்ளாமல் தன்னுடைய சமூகக் கண்ணோட்டத்தில் மிகவும் பிற் போக்குத் தனமாக இருந்ததால், நவீன மதச்சார்பின்மை ஒழுக்கப் பண்பினை சிதைத்து சின்னாபின்னமாக்கி, மதம் சார்ந்த சொற் றொடர்களுடன் மாற்றி வடிவமைத்துக் கொண்டது. ஐரோப்பாவி- லேயே பல நாடுகள் தற்போது பண்பாட்டுக் கொந்தளிப்பில் சிக் கிக் கொண்டுள்ளன. ஏனெனில், பல்வேறு இனத்தைச் சேர்ந்த, பல்வேறு நிறத்தைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பாவிற்குள் குடியேறி வந்துள்ள நிலையில் அவர்களை முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலாமல் அது திணறுகிறது என்பதை அய்ஜால் எடுத்துரைத் துள்ளார்.

1917ல் நடந்த ரஷ்யப் புரட்சியின் முக்கியத்துவம் என்பது சோச லிச அரசியலை ஐரோப்பியத் தளத்தலிருந்து உலகளாவிய தளத் திற்கு நகர்த்தியது என்று சொல்லும் அய்ஜாஸ், இம்மாற்றமானது ஐந்து வெவ்வேறுபட்ட தன்மைகளை உள்ளடக்கியதாக இருந்தது என்கிறார்.

- விவசாய மைய ரஷ்ய சமூகத்தில் நடைபெற்ற புரட்சியானது, புரட்சிகரத் தத்துவத்தின் நடைமுறையில் மாற்றங்களைக் கொண்டுவந்ததோடு தொழிலாளி - விவசாயி கூட்டணியை முன் நிபந்தனையாக்கியது.
- லெனினும் ஸ்டாலினும் வளர்தெடுத்த போல்ஷ்விக் கோட்பாடு கொலனியாதிக்கம் மற்றும் தேசியம் குறித்த கேள்விகளின் நியா யத்தை ஏற்றதனூடு ஆசிய, ஆபிரிக்க, இலத்தீனமெரிக்க நாடு களில் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவளித்தது.
- கம்யூனிஸ்ட் அகிலம் சோசலிசப் புரட்சிக்கான தத்துவத்தையும் நடைமுறையையும் கற்றுக்கொள்ளவும் கலந்துபேசவுமான தள மாக விரிந்தது. உலகெங்குமிருந்து புரட்சியாளர்கள் இனம் மதம் மொழி பிரதேசம் போன்ற தடைகளைக் கடந்து வேறுபா டின்றி அனுபங்களைப் பகிரவும் கற்றுக்கொள்வதற்கான இடமா கவும் திகழ்ந்தது.
- புரட்சியை உயர்த்திப்பிடித்த சோசலிசத் தத்துவமும் நடைமு

றையும் ஒடுக்குமுறைக்குள்ளான அனைவரையும் இணைத்தது. பெண்கள், சிறுபான்மையினர், பண்பாட்டு மற்றும் மொழிரீதியாக ஒதுக்கப்பட்டவர்கள் என அனைவரையும் அமைப்பாக்கியது. சர்வதேவ பெண்கள் அமைப்பு உருவாக்கத்தில் புரட்சிகர சோசலிஸ்டுகளின் பங்கெடுப்பு ஒரு உதாரணம்.

- மேற்சொன்ன அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு சோசலிசப் பண்பாடு தோற்றம் பெறுவதற்கும் நிலைப்பதற்குமான அடித்தளங்கள் உருவாக்கப்பட்டன. சோசலிச சர்வதேசியம் புத்துயிர்ப்போடு இயங்குவதற்கான அமைப்புக்கள் தோற்றம் பெற்றன.

இந்தியாவில் இனவாதம் குறித்த சில முக்கியமான அவதானிப்புகளை ஜஜாஸ் அஹமட் மேற்கொண்டுள்ளார். அதைச் சுருக்கமாகப் பார்க்கலாம். இந்தியாவின் இனவாதக் கட்டமைப்பிற்கு உதிரிப்பாட்டாளி வர்க்கமும் உதிரியாக்கப்பட்ட குட்டி முதலாளித்துவமும் (lumpen proletariat and the lumpenised petty bourgeoisie) குறிப்பிடத்தக்க பங்களிப்பினைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த விடயத்தில் சங்பரிவாரம், முஸ்லீம் அடிப்படைவாதிகள், சிவசேனா போன்றவை எல்லாம் ஒன்றுதான். நவீன தாராளமய கட்டத்தில் இந்திய முதலாளித்துவத்தின் கட்டமைப்பு அம்சம் அதுதான். நாட்டில் தொழிலாளர் வர்க்கத்தின் அளவை விட வேலையில்லாத இளைஞர்களின் அளவு மிகவும் பெரிதாக இருக்கிறது. இந்நிலையில் முறையான தொழிலாளர் வர்க்கத்தை நிறுவுவதும் அமைப்பாக்குவதும் கடினம். தொழிலாளர் வர்க்கத்திற்குள்ளேயே கூட உதிரிப் பாட்டாளிகளை உருவாக்கும் வேலையும் நடந்து கொண்டிருக்கிறது. முறையான ஊதியம் கிடையாது, எந்த நிமிடமும் வேலையைவிட்டு விரட்டி அடிக்கப்படலாம் என்ற நிலை. இவை முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த அம்சங்கள்.

1966ல் உருவான சிவசேனை 1980களில்தான் இந்துத்துவாவின் சித்தாந்தத்தை முழுமையாகத் தழுவிக் கொண்டது. ஒரு சமயத்தில், தாக்கரே அவசரநிலைப் பிரகடனத்தைக் கூட ஆதரித்தார், வடஇந்தியர்களுக்கு எதிராக சமீபத்தில் நடைபெற்ற பிரச்சாரங்களின் போது அது இந்துக்களுக்கும் இந்துக்கள் அல்லாதவர்களுக்கும் இடையே எந்த வேறுபாட்டையும் காட்டவில்லை. அனைவருமே வெளியாட்கள் போன்றுதான் சித்தரிக்கப்பட்டார்கள். இவர்கள் பம்பாயில் இருப்பதே மராத்தியர்களின் துன்பதுயரங்களுக்குக் காரணம் என்று பிரச்சாரம் செய்யப்பட்டது. நாட்டின் நிதி மையமாக விளங்கும் பம்பாயில் சூறையாடும் முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்ட துன்ப துயரங்களுக்கெல்லாம் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்த, மிக அற்பக் கூலி பெற்ற வட இந்தியர்கள்தான் காரணமென்று சொல்லப்பட்டது.

சிவசேனை தன் கீழ் இருந்த உதிரிப் பாட்டாளிகளைக் கொண்டு, வன்முறை வெறியாட்டங்களை தமிழர்கள், முஸ்லீம்கள், பீகாரிகள் மீது நடத்தியது. பின்னர் வங்காளிகள் மீது இவர்கள் எல்லாம் வங்கதேசத்திலிருந்து வந்தவர்கள் என்று கூறி வன்முறைகளைக் கட்டவிழ்த்தது. அவர்களின் சொத்துக்கள கொள்ளையடிக்கப்பட்டன. அவர்களின் சிறு வியாபாரங்கள் அபகரித்துக் கொண்டார்கள். கேலிச்சித்திர ஓவியராகப் தனது வாழ்வைத் தொடங்கிய பால் தாக்ரே சிவசேனையின் தலைவராக உயர்ந்தபின் அவர் இறக்கும் தருவாயில் அவரது சொத்தின் மதிப்பு இந்திய ரூபாய்களில் 30 ஆயிரம் கோடி ரூபாய் இருக்கும் என்று கூறப்படுகிறது. இனவாதத்தினை விதைப்பவர்கள் என்ன சாதிக்கிறார்கள் என்பதற்கு இதுவொரு சான்று.

இதேபோல இடதுசாரிகளின் சரிவு எவ்வாறு இனவாதத்திற்கு வாய்ப்பாகிறது என்பதை இராஜ்ரிய சுயம்சேவக் சங் (ஆர்.எஸ். எஸ்) அமைப்பின் வரலாற்று வளர்ச்சியூடு ஜஜாஸ் எடுத்துக்காட்டுகிறார். ஆர்.எஸ்.எஸ் இயக்கம் 1925ல் துவக்கப்பட்டது. ஒவ்வோராண்டும் அதன் உறுப்பினர் எண்ணிக்கை கணிசமான அளவிற்கு உயர்ந்து வந்திருக்கிறது. ஆனாலும் 1948க்கும் 1962க்கும் இடையே மட்டும் விதிவிலக்காக அதன் உறுப்பினர் எண்ணிக்கை தேக்க நிலையில் இருந்தது. இவ்வாறு தேக்கநிலை ஏற்பட்டது என்பது காந்தி படுகொலை செய்யப்பட்டதற்கும், நேரு இறந்ததற்கும் இடையிலான காலகட்டம் என்பதை கவனிக்க வேண்டும். 1962ல் தொடங்கிய இந்திய–சீன யுத்தம் இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளை அவமானப்படுத்திடவும் அவர்களுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்திடவும் மிகவும் விரிவான முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தப்பட்டது. அதேகாலப்பகுதியில் இந்திய இடதுசாரி அமைப்புகளின் சரிவும் தொய்வும் நிகழ்ந்தது. அதன் பின்னணியிலேயே வலதுசாரிகளும் தங்களை அமைப்பு ரீதியாகத் திரட்டிக் கொள்ள முடிந்தது.

ஆயினும், 1948க்கும் 1962க்கும் இடையே ஆர்.எஸ்.எஸ் வளராமல் தேக்க நிலையில் இருந்ததற்கு மகாத்மா காந்தியின் படுகொலை ஒரு காரணியாக இருந்த போதிலும், அந்த சமயத்தில் கொலனி எதிர்ப்புப் போராட்டத்தின் வழிவந்த ஜவஹர்லால் நேருவால் தலைமை தாங்கப்பட்ட அரசியல் மற்றும் பண்பாட்டு மூலதனம்தான் அதற்கு மிகவும் முக்கியமான காரணியாகும். மேலும் அந்த சமயத்தில் நாடாளுமன்றத்தில் நேருவுக்கு எதிர்ப்பைப் பிரதானமாக வழங்கியது கம்யூனிஸ்ட்டுகளும், சோசலிஸ்ட்டுகளும்தான் என்பதையும் நாம் நினைவு கூர்தல் வேண்டும். இவ்வாறு அந்த சமயத்தில் ஒட்டுமொத்த இந்திய அரசியலுமே இனவாதத்தை எதிர்த்த அரசியல் சக்திகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. இந்திய அனுபவம் சொல்லும் செய்தி யாதெனில், இனவாதங்கள் ஒன்றையொன்று ஊட்டி வளர்ப்பதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் நன்கு வளர்வதுடன், ஒருபக்கம் முதலாளித்துவக் கொள்ளைக் கும்பலை உருவாக்கிடவும், மிகப்பெரிய அளவில் மக்களை பலிக்கடா ஆக்குவதற்கும் இட்டுச் செல்கின்றன. இவ்வாறு ஓர் இனவெறியால் கொடுமைகளுக்கு ஆளாகி மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள மக்கள், தங்கள் சொத்து சுகங்களை மட்டுமல்ல, தங்கள் அறநெறிப் பண்புகளையும் தொலைத்துவிட்டு நிர்க்கதியாய் இருக்கக்கூடிய நிலையில் ஃபாசிஸ்ட்டுகள் அவர்களை மிக எளிதாகத் தூண்டிவிட்டு, தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிடுகிறார்கள். இந்தியாவில் இதுதான் நடக்கிறது.

இவ்வாறு இனவாத வன்முறை என்பது நிறுவன ரீதியாகக் குற்றங்கள் புரிவதற்கான வடிவங்களாக உருப்பெற்றுள்ளன. இவ்வாறு குற்றவாளிகள், குற்றம் புரியும் அமைப்புகளோடு கூட்டாக இயங்கத் தொடங்குகிறார்கள். இனவாத்தின் அம்சம் இதுதான். சிவசேனையின் ஆட்கள் உதிரிப் பாட்டாளி வர்க்கத்திலிருந்தே பொறுக்கி எடுக்கப்பட்டார்கள் என்பதை நாம் மறந்துவிடலாகாது. இதில் கவனிக்கப்பட வேண்டியது யாதெனில் இத்தகைய உதிரிப் பாட்டாளிகளை இனவாத ஃபாசிஸ்ட் வகையிலான வன்முறை இயக்கங்கள் மிகவும் எளிதாக முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. இதை இன்றைய இலங்கை நிலைமைகளின் அடிப்படைகளில் இலகுவாக விளங்கிக்கொள்ளவியலும்.

உலகமயமாக்கல் பற்றி ஜஜாஸ் அஹமட்டின் கருத்துக்கள் உள்ளூர் - உலக இணைப்பில் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலையும் அதில் உலகமயமாக்கலின் பங்களிப்பையும் தெளிவுபடுத்த உதவுகின்றன. உலகமயமாக்கல் தோன்றியதற்குக் காரணமான ஏழு முன்நிபந்தனைகள் பற்றி ஆழமாகப் பேசியுள்ளார். அவையாவன:

- பிரிந்து கிடக்கும் பழைய கொலனிய சாம்ராஜ்யங்களிலிருந்து வெளிவருவதன் மூலம் உலக முதலாளித்துவம் ஒரு தனி மேலாதிக்கத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.
- இதைச் செய்து முடிக்க அதற்கு ஏற்ற தயார் நிலையிலுள்ள ஒரு ஒப்புயர்வற்ற அதிகாரம் தேவை.
- சோசலிச அரசுகள் கலைக்கப்பட்டு அவை மீண்டும் முதலாளித்துவச் சந்தைக்குள் கொண்டு வரப்படுவதன் மூலம் உலகம் உண்மையிலேயே உலகமயமாக வேண்டும்.
- முன்னாள் கொலனிகள் முதலாளித்துவச் சந்தையை ஆழமாக்கும் வகையில் தொழில்மயமாக வேண்டும்.
- உலக அளவில் முதலாளியச் சந்தைகளை ஒருங்கிணைக்கவும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு தொழில் மூலதனத்தைக் கொண்டு செல்லவும் புதிய வகையிலான தொழில்நுட்பம் தேவை.
- அதுபோல, உலகம் முழுவதும் பெருகி வருகிற, பெருமளவும் மறைந்திருந்து தாக்குகிற, சிறிய எதிரிகளைச் சக்தி வாய்ந்த

முறையில் வேகமாகத் தாக்கியழிக்கக் கூடிய புகழ்வாய்ந்த 'தானியங்கிப் போர்க்களம்' போன்ற தொழில் நுட்பங்கள் தேவை.

- கடைசியாக, எல்லாவித அரசுசாராத் தன்னார்வ அமைப்புகளிலிருந்து துவங்கி அறிவு ஜீவிகளின் பின் நவீனத்துவம் வரை வரலாற்றின் முடிவு என்ற தத்துவக் கண்ணோட்டத்துடன் ஒருங்கிணைந்த ஒரு சிக்கலான வலைப்பின்னல் போன்ற அமைப்பு ஒழுக்க ரீதியில் நெருக்கடி கொடுக்கவும் தத்துவ அடிப்படையில் அங்கீகாரம் வழங்கவும் பண்பாட்டு அடிப்படையில் ஏற்கச் செய்யவும் தேவைப்படுகிறது.

உலகமயமாக்கல் எவ்வாறு மூன்றாமுலக நாடுகளை ஆட்கொண்டது என்பதை வரலாற்றின் உதவியோடு விளக்கும் அய்ஜாஸ், மூலதனத்தின் நேரடி ஆதிக்கத்திலிருந்து இந்த உலகின் எந்தவொரு முக்கிய இடமும் தப்பவில்லை, சோவியத் யூனியன் கலைந்து போனதும், சீனா உலகச் சந்தையோடு முழுமையாக ஐக்கியமடைந்ததும், எல்லைகளற்ற வகையில் இந்த சாம்ராஜ்யம் உலகம் முழுவதும் விரிந்து பரவ வழிவகுத்தது. சந்தை பரவலாக விரிவுபடுத்தப் பட்டுத் தீவிரமாக ஆழப்படுத்தப்பட்டது. வாஷிங்டன் இந்த சாம்ராஜ்யத்தின் தலைநகராகும். இது நியூயோர்க் நகரத்தோடு சேர்ந்து, அமெரிக்காவின் தலைநகராக மட்டுமின்றி, ஏகாதிபத்திய இறையாண்மைக்கான முக்கிய நிறுவனங்களின் தலைமையிடமாகவும் உள்ளது. வோல் ஸ்ற்றீற் (Wall Street), சர்வதேச நாணய நிதியம் (International Monetary Fund), உலக வங்கி (World Bank), உலக வர்த்தக நிறுவனம் (World Trade Organisation), ஐக்கிய நாடுகள் சபை (United Nations) மற்றும் அவை-போன்ற பல நிறுவனங்கள் உலகத்தை நிதி மூலதனம் மூலமாக ஒன்றிணைப்பது என்பது குறைபாடுகள் நிறைந்த சுயமான ஒன்றோடொன்று பூட்டப்பட்ட தேசிய சந்தைகளை ஒன்றிணைப்பதல்ல. மாறாக மிகக்குறுகிய கால அளவுக்குள் முக்கியமான நிதி நிலை குறித்த முடிவுகளை உலகின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு அனுப்பி வைக்கும் திறமை பெற்ற தொழில்நுட்பம் வாய்ந்த ஒரு தனிப்பட்ட அமைப்பை ஒருங்கிணைப்பதாகும்.

இந்த முழுக் கட்டிடமும் சிக்கல் மிகுந்த விதிகள் மற்றும் வழிமுறைகள் ஆகியவற்றுடன் கூடிய அமைப்பில் ஒன்றுடன் ஒன்று இடைவெட்டுகின்ற இரண்டு அம்சங்களின்மேல் எழுப்பப்பட்டுள்ளது. முதலில் உலகைச் சுற்றி, குறிப்பாக ஏகாதிபத்திய ஆளுகைக்கு உட்பட்ட உலகில், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனங்கள் போன்ற கட்டுப்படுத்தும் அமைப்புகளின் வாயிலாக பல்வேறு கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிக்கும் ஒரு உலக அரசாங்கம் உருவெடுத்தது. மூன்றாம் உலகில் உலகமயமாக்கல் என்பதை இந்த அமைப்புகள் 1970களிலும், 1980களிலும் உருவான கடன் நெருக்கடியைப் பயன்படுத்தி நவீன தாராளமயம் என்ற உலக ரீதியிலான கட்டுப்பாட்டு அமைப்பு மூலம் நடைமுறைப்படுத்தின.

சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச அமைப்புகள் இந்த அமைப்பை முழுமைப் படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவை ஒவ்வொரு தனிப்பட்ட நாடும் பணிந்து நடைமுறைப்படுத்தும் வகையிலான சிக்கல் மிகுந்த விதிகளையும். கட்டுப்படுத்துவதற்கான நிர்வாக அமைப்புகளையும் கொண்டுள்ளன. இவ்வகையில் மிகத் தொலைவில் அமைந்திருக்கிற தேசிய அரசுகளின் உள் விவகாரங்களில் கூட மூன்று விதங்களில் வாஷிங்டன் தலையிடுகிறது.

- பன்னாட்டு தனியார் மூலதனச் சக்தி வாயிலாக,
- தேசத்தின் இறையாண்மையை மீறிய ஒழுங்குபடுத்தும் அமைப்புகள் (சர்வதேச நாணய நிதியம் போன்றவை) மூலமாக,
- பல்வேறு நாடுகளின் சட்டங்களை அமெரிக்காவின் சட்டத்தைப் போல மாற்றுவதனூடாக.

அதற்குச் சமமான அளவில் இந்த சாம்ராஜ்யத்தில் உருவாகி-வரும் புதிய சட்டத்திற்குள் இருந்து அமெரிக்காவிலிருந்து திரட்டப்பட்ட எல்லாவித ஒழுக்கங்களையும் போதிக்கும் தத்துவவாதிகளும், நீதிபதிகளும், 'நியாயமான போர்' என்பதற்கான கோட்பாடுகள் குறித்தும் பிறநாடுகளில் 'தலையிடும் உரிமைக்கான' சட்டங்கள் குறித்தும் விவரமாக விளக்குகிறார்கள். 'மனித உரிமைகள்' பற்றி வகுப்பெடுக்கிறார்கள். பகுத்தறிவின்மை என்பதே இன்றைய முதலாளித்துவத்தினதும் அதை முன்தள்ளும் உலகமயமாக்கலின் தேவையாகும் ஏனெனில் மனிதர்கள் பகுத்தறிவில்லாமல் இருக்கும் போதே சந்தைப் பகுத்தறிவின்றி இயங்குகிற போக்கோடு ஒத்துப்போக முடிகிறது. அதே சமயம் உலகமயமாக்கல் என்பது சந்தைகளை ஒன்றிணைத்து மனிதர்களைப் பிரிக்கிறது. ஏனெனில் மனிதர்கள் ஒன்றுபடாமல் அவர்கள் தனித் தனியான நுகர்வோராக இருக்கும்போது தான் அவர்களை உலகச் சந்தையின் நோக்கத்திற்காகச் சிறந்த முறையில் பயன்படுத்த முடியும். சமத்துவ அரசியலை அகற்றி அந்த இடத்தில் வேற்றுமை அரசியலை உருவாக்கும் போர்க் கருவிகளாக உலக அளவில் பின் நவீனத்துவக் கோட்பாடும் மூன்றாம் உலக நாடுகளின் அளவில் பின் கொலனியக் கோட்பாடும் எல்லையற்ற போட்டிகளும் சமூகத்தில் உருவாக்கப்படுகின்றன என்று சொல்லும் ஐஜாஸ் இக்கோட்பாடுகள் எவ்வாறு உலகமயமாக்கலின் சமூகக் கருவிகளாக இயங்குகின்றன என்று மார்க்சியக் கோட்பாட்டுத்தளத்தில் நின்று விளக்கியுள்ளார். ஐஜாஸ் அஹமட்டின் முக்கியமான தத்துவார்த்தப் பங்களிப்பு இதுவென்பேன்.

பின்நவீனத்துவம் மீதான இவரின் விமர்சனத்தை சுருக்கமாகப் பின்வருமாறு நோக்கலாம். உலகில் புரட்சி நடைபெறுவதற்கான சாத்தியம் குறித்து மக்களுக்கு நம்பிக்கை இருக்குமானால் பின்நவீனத்துவம், பின்கொலனியம் போன்ற தத்துவார்த்த மயக்கப் போலிகள் பலன்தராது. உலகமயமாக்கலின் தத்துவமானது புரட்சியின் மீதான நம்பிக்கையை அழிக்க வேண்டும் என்பதே. இத் திட்டத்தின் ஒரு பகுதியை பின்நவீனத்துவக் கோட்பாடு நிறைவேற்றுகிறது. ஓவ்வொரு சிறு குழுவையும் மற்றவற்றிலிருந்து அவற்றின் தனித்தன்மை என்கிற வகையில் தனித்தனியே பிரித்து வைக்க முடிந்தால், புரட்சிக்கான ஒன்றிணைந்த ஒரு சமுதாயம் சாத்தியம் அற்றதாகி விடும். இவ்வகையில் சர்வதேச நாணய நிதியம் மட்டுமே ஒன்றிணைந்து விளங்கும். அதற்குப் பலியாகிறவர்களை கணக்கின்றி மீண்டும் மீண்டும் பிரிக்க முடியும். இந்த ஆபத்தை உணராமல் இவ்வாறான தத்துவ விசாரங்களுக்குப் பலியாகிறவர்களுக்காக இரங்கும் அதேவேளை இதை முன்தள்ளுவோரின் ஆபத்தான நிகழ்ச்சிநிரல் குறித்த எச்சரிக்கை மிகவும் அவசியம் என்கிறார் ஐஜாஸ்.

1990 களின் நடுப்பகுதியில், சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, மார்க்சியம் கருத்துப் போரில் பாதிக்கப்பட்டது என்பது தெளிவாகத் தெரிந்தது, ஏனெனில் நவ-தாராளமயம் பிரபலமான பண்பாட்டின் சொற்களஞ்சியத்தில் (தனித்துவம் மற்றும் பேராசையை மையமாகக் கொண்ட) புதியதாக நுழைந்தது. தாராளமயம் பின்நவீனத்துவத்தின் மூலம் அறிவுசார் உலகில் நுழைந்தது. இந்நிலையில் மார்க்சியத் தத்துவத்தை இலக்கியத் தளத்திலும் அரசியல் தளத்திலும் போராடி நிலைநிறுத்தியவர்களில் -குறிப்பாக ஆசியச் சூழலில் - ஐஜாஸ் அஹமட் முக்கியமானவர். அருந்ததி ராயின் God of Small Things நாவலுக்கு Reading Arundhati Roy Politically என்று தலைப்பிட்டு ஐஜாஸ் எழுதிய விமர்சனம் மார்க்சிய இலக்கிய விமர்சனத்தின் உரைகல். முற்போக்கான ஒரு எழுத்தாளரின் படைப்பைக் கூட எவ்வாறு மார்க்சிய நோக்கில் வாசித்து விமர்சிக்கவியலும் என்பதற்கு இவ்விமர்சனம் நல்லதொரு உதாரணம்.

9/11க்குப் பிறகு நடந்த பேரழிவுகரமான நிகழ்வுகள், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் மீதான போர்கள், சிரியா மற்றும் லிபியாவில் நடந்த போர்கள் ஏகாதிபத்தியத்தின் புதிய போக்குகள் என ஏராளமான கட்டுரைகளை ஐஜாஸ் எழுதியுள்ளார். அவை 2004ம் ஆண்டு Iraq, Afghanistan and the Imperialism of Our Time (ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் நமது காலத்தின் ஏகாதிபத்தியம்) என்ற புத்தகமாக வெளிவந்தது. இதில் ஏகாதிபத்தியம் குறித்து விரிவாக எடுத்துரைப்புக்களைத் தரிசிக்கலாம். ஏகாதிபத்தியத்தின் இந்தப் புதிய முகம், பெரும் கொலனித்துவப் பேரரசுகள் (முக்கியமாக பிரிட்டிஷ் மற்றும் பிரஞ்சு) கலைக்கப்பட்ட பிறகாவது, மற்ற

போட்டி முதலாளித்துவ நாடுகளின் (முக்கியமாக ஜெர்மனி மற்றும் ஜப்பான்) கொலனித்துவ அபிலாஷைகளுக்குப் பிறகு மட்டுமல்ல, தேசியவாதத்தின் உறுதியான அழிவுக்கும் பிறகு எழுகிறது. மூன்றாம் உலகு (கொலனித்துவ எதிர்ப்பு, தேசிய விடுதலைப் போர்கள், பாண்டுங் திட்டம், அணிசேராமை, பாதுகாப்புவாத தொழில்மயமாதல் அரசு) என்று அழைக்கப்படும் பெரும்பாலான நாடுகளில் தேசிய முதலாளித்துவம், வடிவத்தில் மாற்றுதுருவத்திலமைந்த கம்யூனிச நாடுகளின் இருப்பு மூலம் கணிசமாக நீடித்தது.


ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான போட்டிகளின் சுருளில் சிக்கிய ஏகாதிபத்தியம் என்பதற்கு அப்பால், அது (அ) தேசிய தலைநகரங்கள் ஊடுருவிய சகாப்தத்தின் ஏகாதிபத்தியம் எந்தவொரு பிராந்திய மாநிலத்திலும் செயல்படும் மூலதனம் உள்ளடக்கிய விதத்தில், தேசிய மற்றும் நாடுகடந்த மூலதனத்தின் பல்வேறு வடிவங்களில் (ஆ) நிதி மூலதனம் உற்பத்தி மூலதனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதும் (இ) பொருட்கள் சந்தைகள் முதல் நிதி இயக்கங்கள் வரை அனைத்தும் ஒரு உலகளாவிய அரசின் எழுச்சி சாத்தியமான நிலையில், நிரூபிக்கத்தக்க வகையில் உலகம் முழுமையாக உலகமயமாக்கப்பட்டுள்ளது. உலகமயமாக்கப்பட்ட இராணுவ திறன், அமைப்பின் ஒரு புறநிலை தேவை அமெரிக்க ஆட்சியாளர்களின் தேசிய அபிலாஷைகளிலிருந்து முற்றிலும் விலகி, பிரம்மாண்டமான ஆற்றலுடன் இந்த முழு உலகின் மீதும் ஆதிக்கச் செலுத்த விரும்புவதன் விளைவினால் அதே முதலாளித்துவத்தால் ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்புகள் மற்றும் துறைகளிடையே பிளவுகள் மற்றும் முறிவுகளுக்கு வழியமைத்தன என்று ஜஜாஸ் கோடிட்டுக் காட்டுகிறார்.

கொலனிகள் இல்லாத பேரரசுகள் உலகின் ஒரு மூலையில் அல்லது நம்முடன் இருந்திருக்கின்றன. மூலதனத்தின் வரலாறு முழுவதும், சில சமயங்களில் இராணுவத்திற்கு வெற்றிக்கு முந்தையது (வணிகப் பேரரசுகள்), மற்ற நேரங்களில் கொலனித்துவ நீக்கத்திற்குப் பின்பானது (தென் அமெரிக்கா ஸ்பானிஷ் மற்றும் போர்த்துகீசிய ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு), மற்றும் சில நேரங்களில் லெனின் உருவாக்கிய 'அரைக்கொலனித்துவம்' என்ற சொல்லினால் குறிக்கப்படும் வடிவத்தை எடுத்துக்கொள்கிறது (எகிப்து, பெர்சியா போன்றவை). பிரிட்டிஷ் மற்றும் பிரஞ்சுப் பேரரசுகளுக்கு அடுத்தாத உலகின் தலையாய சக்தி அமெரிக்காவா அல்லது ஜேர்மனியா என்பதைத் தீர்மானிக்க இரண்டு உலகப் போர்கள் தேவைப்பட்டன. இவ்வாறே நவீன பேரரசுகள் தன்னை முன்னேறிய முதலாளித்துவக் கூட்டத்தின் தலைவராக மாற்றிக் கொள்கின்றன. குறிப்பிடத்தக்கது யாதெனில் ஜேர்மனியப் பார்வை உலகளாவிய கொலனித்துவத்தின் பழமையான கருத்துக்களில் மூழ்கியது. வுட்ரோ வில்சனின் கீழ் இருந்த அமெரிக்கா கொலனித்துவம் கலைக்கப்படுவதை விரும்பியது. 'தேசியங்களின் உரிமை' என்பதை முன்மொழிந்தது. இது இன்று ஏகாதிபத்தியம் முன்மொழியும் 'ஜனநாயகம்' மற்றும் 'மனித உரிமைகள்' ஆகியவற்றுக்கு ஒரு கருத்தியல் முன்னோடி. இதன்பிறகே உலக நிதியத்தின் மையமாக இருந்த லண்டன் இடம்பெயர்க்கப்பட்டு நியூயோர்க் அதன் மையமாக மாற்றப்பட்டது. இதேகாலப்பகுதியிலேயே போல்ஷிவிக் புரட்சி உலகளாவிய முதலாளித்துவத்திற்கு சவாலாக எழுந்தது. எனவே உலகவரலாறெங்கும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சிந்தனைப் போக்கும் கிளர்ச்சியும் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கின்றன என்பதையும் நவீன சூழலில் லெனினது ஏகாதிபத்தியம் குறித்த விளக்கங்களை விரிவுபடுத்துவது குறித்தும் தனது நூலில் ஜஜாஸ் விரிவாகப் பேசியுள்ளார்.

மார்க்சியத் தத்துவார்த்த தளத்தில் ஜஜாஸின் இன்னொரு முக்கியமான பங்களிப்பு 1999ம் ஆண்டு வெளியான A World To Win: Essays on the Communist Manifesto (வெல்வதற்கான உலகம் கம்யூனிஸ்ட் அறிக்கை பற்றிய கட்டுரைகள்) என்ற நூலில் The Communist Manifesto: In Its Own Time, And In Ours (கம்யூனிஸ்ட் அறிக்கை அதன் காலத்திலும் நம்காலத்திலும்) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையாகும். கம்யூனிஸ்ட் அறிக்கை அரசியல், பொருளாதாரம், வரலாறு, தத்துவம் ஆகியவற்றுக்கிடையே ஒரு புதிய உறவுமுறைக்கான இலக்கணத்தை வகுக்கிறது என்றும் ஒரே நேரத்தில் இரண்டு விதமான அசைவுகளைச் சுட்டிக்காட்டியது என்றும் ஜஜாஸ் குறிப்பிடுகிறார். முதலாவது பொருளியல் உலகில் நடைபெறும் அசைவு அதாவது பல்வேறு உற்பத்தி முறைகளைப் பொதுவான முறையில் விளக்குவதன் மூலம் தத்துவம் என்ற அறிவியல் ஆய்வை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு வரலாற்றுக் கோட்பாட்டை உருவாக்கியுள்ளது. இரண்டாவது நீதிநெறி முறைகளுக்கு முரணான, பொறுத்துக் கொள்ள முடியாத ஒரு உலகத்தை புரட்சிகரமான மாற்றங்கள் மூலம் மாற்றியமைக்கும் நெறிமுறை சார்ந்த திட்டத்தை முன்மொழிந்துள்ளது. எனவே தத்துவத்தையும் நடைமுறையையும் ஒருங்கே கொண்டமைந்தது என்றவகையில் இது முன்னோடியானது எனக் குறிக்கும் ஜஜாஸ் கம்யூனிச அறிக்கையை 'மாற்றத்தின் உரை' என்று அழைக்கிறார்.

இவர் தனது வாழ்க்கைப் பயணத்தை நண்பர்களோடு பகிர்ந்து கொண்ட உரையாடல் கடந்தாண்டு Nothing Human is Alien to Me (மனிதத்துக்கு உரியதெதுவும் எனக்கு அந்நியமல்ல) என்ற தலைப்பில் நூலுருப் பெற்றுள்ளது. இதில் இவரது இளமைக்காலம், இந்தியப் பிரிவினை, பாகிஸ்தான் அரசியல், புலம்பெயர் வாழ்வு, இலக்கியம் என அனைத்தையும் குறித்து விரிவாகப் பேசுகிறார் பேராசிரியர் ஜஜாஸ் அஹமட். ஒரு கல்வியாளராகவும், பொது அறிவுஜீவியாகவும், ஜஜாஸ் உலகெங்கிலும் உள்ள பல்வேறு சோசலிச மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களுடன் தீவிரமாக தொடர்புடையவராக இருந்து ஆற்றிய பணிகளை இந்நூலில் காணலாம். 1985ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்த ஜஜாஸ் 2014ம் ஆண்டு நரேந்திர மோடி தலைமையிலாக பி.ஜே.பி அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் ஏற்படுத்திய விசா கெடுபிடிகளினால் இந்தியாவிலிருந்து வெளியேறி அமெரிக்காவில் மீண்டும் வசிக்க நேர்ந்தது. கடந்தாண்டு ஒரு கலந்துரையாடலில் ஜஜாஸ் சொன்ன வரிகள் தென்னாசியச் சூழலுக்கும் உலகுக்கும் பொருந்தி வருவன: 'உண்மையிலேயே ஜனநாயகத்தைப் பெற, நாம் சோசலிசத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை நான் உணர்கிறேன். ஏனெனில் ஜனநாயகத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையே ஆழமாகப் பொருத்தமில்லா உறவொன்றுண்டு. அதனாலேயே அது குறுங்குழுச் அதிகாரத்தை (Oligarchies) உருவாக்குகிறது.'

அரைநூற்றாண்டுகாலமாகத் தொடர்ச்சியாகப் பேசியும் எழுதியும் வந்தவர் பேராசிரியர் ஜஜாஸ் அஹமட். தேசியவாதம் முதல் ஏகாதிபத்தியம் முதல், இந்துத்துவத்தில் இருந்து இஸ்லாமியம் வரை, தாராளவாத ஜனநாயகத்தில் இருந்து ஜனரஞ்சகம் மற்றும் பாசிசம் வரை, பாரம்பரிய உருது இலக்கியம் முதல் 'உலக இலக்கியம்' என்று மேற்குலகால் அழைக்கப்படுவதை அதற்குரிய உண்மையான இடத்தில் வைப்பதுவரை பல விடயப்பரப்புகளில் அதன் ஆழ அகலங்களை தன் ஆய்வின் மூலமும் எழுத்தின் மூலமும் சாத்தியமாக்கியவர் அய்ஜாஸ். சரிந்த பிரித்தானியப் பேரரசின் பிரிந்து செல்லும் பரிசான ராட்கிளிஃப் கோட்டின் சபிக்கப்பட்ட சுவரில் வலுப்பெற்ற பிரிவினை மற்றும் துக்கத்தைத் தாண்டி இந்தியத் துணைக்கண்டத்தின் இந்தோ-பாகிஸ்தான் அறிவுஜீவிப் புரட்சியாளர்களின் தலைமுறையின் இறுதிப் பிரதிநிதிகளில் ஒருவர் ஜஜால் அஹமட். இதை அவரது எழுத்துகளில் தெளிவாகக் காணவியலும். முகமட் அலி ஜின்னா மற்றும் பச்சா கான் பற்றிய சுருக்கமான ஆனால் சிறப்பியல்பு ரீதியாக மறக்கமுடியாத ஒப்பீடு முதல் பின்கொலனியவாதிகள், எட்வர்ட் சைட் மற்றும் ஃபிரெட்ரிக் ஜேம்சன் போன்ற பலவிதமான சிந்தனையாளர்களை தூக்கியெறிந்ததுவரை தனது வலிமைமிக்க பேனா மற்றும் புத்திசாலித்தனத்தின் ஊடாக மார்க்சிய விமர்சனத்தை அடுத்த தளத்திற்கு நகர்த்தியவர். உண்மையில், இந்தியத் துணைக் கண்டத்தைப் பற்றிப் பேசுவதற்கு, பூட்டோயிசம் மற்றும் இந்து தேசியவாதம் ஆகியவை பற்றிய முன்னோடியான ஆய்வுகளை மார்க்சிய - கிராம்சிய அடித்தளத்தில் நமது நிகழ்காலத்தைப் புரிந்துகொள்வதற்கான இன்றியமையாத அடையாளங்களாக அவரது எழுத்துக்கள் இருக்கின்றன.



meenilankco@thaiveedu.com

# ‘நாளொரு கல்வி பொழுதொரு பரீட்சை எனத் தட்டித்தட்டி என்னை உருவாக்கிய கலாசாலை வீரகேசரி’

## – அன்னலட்சுமி இராஜதுரை

### - நேர்காணல்: தெளிவத்தை ஜோசப்



பத்திரிகைத் துறைக்குள் பெண்கள் நுழையாத 60களில் வீரகேசரியின் ஆசிரியர் குழுவில் இணைந்து, இன்று வரையான ஓர் அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக பணியாற்றிய சாதனைப் பெண் அன்னலட்சுமி இராஜதுரை.

ஒரு படைப்பாளியான இவருடைய ஊடகவியல் பணிகள் வித்தியாசமானவை. பொறுமை, விட்டுக்கொடுக்கும் பண்பு, சகிப்புத்தன்மை, தன்னை முதன்மைப்படுத்திக் கொள்ள ஒடித்திரியாத சுபாவம், மற்ற இலக்கியக்காரர்களின் திறமைகளை அசட்டை செய்யாது மதிக்கும் இயல்பு போன்றவை இவருடைய ஆளுமை விருத்திக்கான அடையாளங்கள். சிறுகதை, கவிதை, குறுநாவல், நாவல் என புனைவுசார் படைப்பிலும், மொழி பெயர்ப்பு, வானொலி நாடகங்கள், கட்டுரைகள் என எழுத்தும் பத்திரிகை உலகுமாக அனுபவித்து அனுபவித்து வாழ்ந்துவிட்ட ஒரு பத்திரிகைப் பெண் ஆளுமை.

**► பெண் பிள்ளை என்றால் அடங்கி ஒடுங்கி வீட்டுக்குள்ளேயே இருக்கவேண்டும் என்னும் கட்டுப்பாடுகள் மிகுந்த யாழ்ப்பாணத்தில் பிறந்துள்ளீர்கள். இலங்கையின் தலைநகர் கொழும்பில் - புகழ்பெற்ற பத்திரிகையான வீரகேசரியில் 23 வயதில் ஆசிரியர் குழுவில் இணைந்துள்ளீர்கள். இதன் சாத்தியப்பாடுகள் பற்றிக் கூறுங்கள்.**

தின்னவேலி என மக்கள் அழைக்கும் ஊரான திருநெல்வேலி பிறந்த ஊர். என் தந்தையின் பெயர் செல்லர் இராசையா, அம்மா

இராசம்மா. ஓர் அண்ணர் (மதியாபரணம்), ஒரு தங்கை (விஜய-லட்சுமி). இருவருக்கும் இடையில் நான் என எங்கள் குடும்பத்தில் மூன்று பிள்ளைகள். தச்சுத்தொழில்சார்ந்த ஒப்பந்தகாரர் தொழிலை ஜீவனோபாயத் தொழிலாக தந்தையார் மேற்கொண்டிருந்தார்.

அந்தக்காலத்தவர்கள் போலவே இவரும் அதிகம் கல்வியறிவைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் எழுத, வாசிக்கக் கூடிய கல்வியைப் பெற்றிருந்தார். இருப்பினும், அனுபவரீதியாக நிறையவே உலகறிவு பெற்ற ஒருவராக இருந்தார்.

நாற்பதுகளின் பின்னரான காலங்களில் கூட்டுறவே நாட்டுயர்வு என்னும் கோஷங்களுடன் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கில் கூட்டுறவு இயக்கம் சுறுசுறுப்புடன் இயங்கத் தொடங்கியது. அரிசி, பருப்பு, மா, சீனி, தகரத்தில் அடைத்த பழங்கள், மீன்கள் என்று சங்கக்கடைகளில் மக்கள் அலை மோதினர். இவை மட்டுமன்றி வேறு துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கின.

திருநெல்வேலி மேற்கு ஐக்கிய நாணய சங்கம் என்னும் ஒரு பெயர்ப்பலகை எங்கள் வீட்டு முன்பக்கத்தில் தொங்கியது. சுற்றியுள்ள சகோதர தொழிலாளர்களுக்கு தொழில் அபிவிருத்திக்காக கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் அது. அதன் தலைவர். செயலாளர், பொருளாளர் எல்லாம் எனது தந்தை தான் எனலாம். சங்கத் தலைவராக, செயலாளராக வெவ்வேறு நபர்களை நியமித்திருந்தாலும் அவர்களின் அக்கறையற்ற போக்கினால் எனது தந்தையே அனைத்தையும் ஏற்று செயற்பட்டார்!

நீங்கள் கூறியதுபோல பெண்களென்றால் சமூகத்தில் அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டும். பெற்றோர் சொற்படி நடக்க வேண்டும். வீட்டு வேலைகளைப் பழகி, கல்யாணம் செய்து, குடும்பம் நடத்தி, குடும்பச் சங்கிலியை கோர்த்தெடுப்பது தான் அவளது கடமை என்றிருந்த காலம் அது. சிறுமியான எனக்கு இவையேதும் புரிந்திருக்கவில்லை என்றாலும், படிக்க வேண்டும் என்னும் ஆசையும் பள்ளிக்கூடம் போகவேண்டும் என்னும் ஆர்வமும் நிறையவே இருந்தது.

கல்விக்கூடங்கள் நிறைந்தது எங்கள் ஊரான திருநெல்வேலி. வடக்கே முத்துத்தம்பி வித்தியாசாலை. அதன் அண்மையில் சைவாசிரிய கலாசாலை. தெற்கே பரமேஸ்வராக் கல்லூரி மற்றும் சைவப் பிரகாச வித்தியாசாலை. கிழக்கே செங்குந்தா இந்துக் கல்லூரி மற்றும் கிறிஸ்தவத் தமிழ்க்கலவன் பாடசாலை என பள்ளிக் கூடங்கள் இயங்கின.

**▸ கல்விக்கூடங்கள் மலிந்த ஊர் தான். கல்வி கற்க வேண்டும் பாடசாலைக்குப் போக வேண்டும் என்னும் ஆவல், அந்த உணர்வு, பெண் பிள்ளையான உங்களுக்கு எப்படி எழுந்தது?**

அப்போது சிறுபிள்ளைகளான எங்களை பாடசாலையில் சேர்த்து கல்வி கற்க அனுப்பும் வழக்கம் எம் ஊரில் கட்டாயமாக விளங்கிய காலம். எனவே நானும் அருகிலுள்ள சைவப் பாடசாலைக்கு அனுப்பப்பட்டேன். படிப்பதில் ஓர் ஆர்வம் உள்ள சிறுமியாக இருந்தேன்.

எட்டாம் வகுப்புவரை மாத்திரமே கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்ட பாடசாலை அது. மூன்றாம் வகுப்பிற்குப் பிறகு எங்கள் உறவுக்காரப் பிள்ளைகளுடன் சேர்ந்து 1948ம் ஆண்டு எனது ஒன்பதாவது வயதில் நானும் போய் செங்குந்தா இந்துக் கல்லூரியில் நான்காம் வகுப்பில் அமர்ந்து கொண்டேன்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு தான் எனது தந்தையார் பழைய பாடசாலைக்குப் போய் பாடசாலை விடுகைப்பத்திரத்தைப் பெற்று இந்தப் பாடசாலை அதிபரிடம் கொடுத்தார் என்பது மறக்கமுடியாதது. அது ஒருகாலம்!

ஜி.ஸி.ஈ சாதாரண பரீட்சை எழுதும்வரை செங்குத்தா இந்துக்கல்லூரியில் கற்று மருதனாமடம் (சுன்னாகம்) இராமநாதன் மகளிர் கல்லூரியில் சிறிது காலம் பயின்று, லண்டன் ஜீ.சீ.ஈ பரீட்சையில் சித்தி பெற்றதுடன் கல்லுரிக்கல்வி நிறைவடைந்தது போலாயிற்று.

**▸ வாசிப்பு, எழுத்து என்ற மோகம் உங்களுக்கு எப்போது ஏற்பட்டது?**

உண்மையில் மிக சிறிய வயதிலிருந்தே பாட்டு, ஆட்டம், நாடகம், கூத்து, பேச்சு, ஓவியம், இயற்கை காட்சி ஆகியவற்றை காணும் போதெல்லாம் மனம் மகிழ்ந்து குதூகலிக்கும் இயல்பு இருந்ததை உணர்கிறேன். எங்கள் ஊரில் ஆலயங்களில் நடக்கும் கலை நிகழ்ச்சிகள், கதாப்பிரசங்கம், சின்னமேளம் என அப்போது அழைக்கப்பட்ட நடன நிகழ்ச்சிகள் மற்றும் ஆலயங்களில் அரங்கேறும் மரபுக் கூத்துகள் போன்றவற்றைப் பார்த்து ரசிப்பதுண்டு. அத்துடன் பெரியவர்கள் கதை கூறும் போது அதைக் கேட்டு



**அகில இலங்கை கண்ணதாசன் மன்றம், கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடத்திய 'கண்ணதாசன் விழா'வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் திரு. இரா. சம்பந்தன் அவர்கள் திருமதி அன்னலட்சுமி இராஜதுரைக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார். அருகில் மன்றத் தவைவர் வேலணை வேணியன்.**

ரசிப்போம். நளமகாராசன் கதை, நல்லதங்காள் கதை, பாரதக் கதை என்றெல்லாம் கேட்போம். பாடசாலை நிகழ்ச்சிகளும் எங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

அதேபோல திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவர்கள் நடத்தும் திறந்தவெளி கலைநிகழ்ச்சிகளையும் சில சந்தர்ப்பங்களில் பார்க்க கிடைத்தமை அரிய அனுபவங்களாகும். அங்கு சில சந்தர்ப்பங்களில் நடந்த தமிழ் விழாக்களும் வாசிப்பு, எழுத்து ஆர்வத்தை துாண்டின எனலாம்.

அவ்வேளை தமிழகத்தில் இருந்து தமிழறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் உட்பட பேச்சாளர்கள் கலந்துகொண்டதும் ஞாபகத்தில் உள்ளது. இந்த வகையில் வாசிப்பில் பெரும் மோகம் ஏற்பட்டு அக்காலத்தில் பிரபலமாக விளங்கிய கல்கி, கலைமகள், குமுதம், ஆனந்த விகடன் போன்ற சஞ்சிகைகளை வாசிக்க ஆரம்பித்தேன். அதிலிருந்து வாசிப்புப் பழக்கம் தொடர்ந்ததால், எழுதவேண்டும் என்ற ஆர்வமும் ஏற்பட்டது என்று கூறவேண்டும். இவ்விடத்தில் எனது உறவினரான ஆசிரியை பரமேஸ்வரி அவர்கள் எனக்கு சஞ்சிகைகளையும் கதைப் புத்தகங்களையும் தந்து என் எழுத்து ஆர்வத்தைத் தூண்டியதையும் மறக்கமுடியாது.

அவ்வேளை தினகரன், சுதந்திரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் சிறுகதைகளையே கூடுதலாக வாசிக்கப் பழக்கப்பட்டுவிட்ட எனக்கு, புதுமைப்பிரியை (பத்மா சோமகாந்தன்), சாந்தினி (மகேஸ் வைரமுத்து), குறமகள் (வள்ளிநாயகி இராமலிங்கம்) போன்ற பெண் எழுத்தாளர்களின் படைப்புகளும் உற்சாகம் தந்தன.

இந்த உற்சாகத்தில் நானும் எழுத முயன்றேன். 'இசை இணைத்தது' என்ற தலைப்பில் ஒரு சிறுகதையை எழுதி தினகரன் பத்திரி

கைக்கு அனுப்பினேன். அதனை நான் யாழ்நங்கை என்ற புனை பெயரில் எழுதி அனுப்பினேன். அப்போது பெரும்பாலும் எழுத்தாளர்கள் புனைபெயரில் தான் எழுதினார்கள். அக்காலகட்டத்தில் கல்கியில் சோமு என்ற எழுத்தாளர் ‘கடல் கண்ட கனவு’ என்ற தலைப்பில் எழுதி பிரபலமாக விளங்கிய தொடர் கதையில் யாழ் நங்கை என்ற ஓர் இள மங்கையின் பாத்திரம் வரும். அப்பாத்திரம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அத்துடன் நான் ஒரு யாழ்ப்பாணப் பெண்ணாக இருந்ததினால் அது எனக்கு பொருத்தமானது எனக் கருதியே வைத்துக்கொண்டேன்.



புரவலர் புத்தகப் பூங்கா அமைப்பினரின் கௌரவத்தின்போது.

அவ்வேளை கலாநிதி கைலாசபதி அவர்களை ஆசிரியராகக் கொண்ட தினகரன் பத்திரிகை எனது கதையை ஒரு பக்கம் முழுவதுமாக படங்களுடன் அழகாக வெளியிட்டமை மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

**► ஈழத்து முன்னோடி இதழியலாளரும் இலக்கியவாதியும் இலக்கிய செயற்பாட்டாளருமான சிற்பி சிவசரவணபவனுடன் மாணவபருவத்திலேயே பழகியுள்ளீர்கள் அவரிடம் கல்வி பயின்ற அனுபவம் எப்படி இருந்தது?**

அவரிடம் கல்வி பயிலும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை! ஏனெனில் நான் வேறு பிரிவில் பயின்றேன். அத்துடன் மாணவி என்ற வகையில் அவருடன் பழகும் வாய்ப்பும் இருந்ததில்லை. ஆனாலும், செங்குந்தா இந்துக்கல்லூரியில் நான் மாணவியாக இருந்த நாட்களில் சரவணபவன் என்னும் இளம் பட்டதாரி ஆசிரியர் கற்பித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு சுறுசுறுப்பான ஆசிரியர் என்பது மட்டுமே மாணவியான எனக்கு அப்போது தெரிந்திருந்தது. அவர்தான் சிற்பி என்பதும், அவர் ஓர் எழுத்தாளர் என்பதும், ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்கள் பலரின் சிறுகதைகளை முதன்முதலில் தொகுத்து ஈழத்துச் சிறுகதைகள் என்னும் தொகுதியை வெளியிட்ட இலக்கியச் செயற்பாட்டாளர் என்பதும் பிந்திய காலங்களில் நான் அறிந்து கொண்டவை.

ஜீ.ஸி.ஈ. (சாதாரணம்) பரீட்சை எழுதிவிட்டு முடிவு வரும் வரை நான் வீட்டில் இருந்த காலத்தில், இந்த சுறுசுறுப்புமிக்க சரவணபவன் மாஸ்டர் எனக்கொரு செய்தி அனுப்பியிருந்தார். நான் ஒரு சஞ்சிகை நடத்தப்போகின்றேன். அதற்கு ஏதாவது எழுதித்தரவேண்டும் என்பதே அந்த செய்தி. அவரை ஓர் ஆசிரியராகவே நான் அறிந்து வைத்திருந்தேன். ஆனால், அவரோ என்னை ஒரு மாணவியாக மட்டுமன்றி, எழுதும் ஆர்வம் உள்ளவராகவும் அறிந்திருந்தார். எமது பாடசாலையின் சஞ்சிகையில் நான் எழுதிய கட்டுரையை அவர் பார்த்திருக்கலாம். அதனால், தான் ஆரம்பிக்கப் போகும் சஞ்சிகைக்கு ஏதாவது எழுதும்படி கேட்டுள்ளார் என்று எண்ணுகிறேன்.

‘அன்னையின் ஆவல்’ என்னும் ஒரு கவிதையை எழுதிக் கொடுத்தேன். அதுவே எனது முதல் கவிதை. சில மாதங்கள் சென்றபின் சிற்பி சரவணபவனின் இலக்கியச் சிற்றிதழான கலைச்செல்வி முதல் இதழ் வெளிவந்தது. எனது கவிதையும் பிரசுரமாகி இருந்தது. அத்துடன் வளரும் எழுத்தாளர் அறிமுகம் என்னும் தலைப்பில் என்னைப் பற்றிய சிறு குறிப்பும் வெளிவந்து எனக்கு மலைப்பையும் மகிழ்ச்சியையும் அளித்தது. தொடர்ந்து எனது சிறுகதைகள் சில கலைச்செல்வியில் வெளிவந்தன. இவ்விடத்தில், எனது படைப்பு மற்றும் எழுத்து முயற்சிகளுக்கு ஊக்கம் தந்தவராக சரவணபவன் அவர்களை நன்றியுடன் என்றும் நினைவு கூருகிறேன். கலைச்செல்வி மூலம் அவரால் அறிமுகம்செய்யப்பட்ட செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், செ. யோகநாதன், செ. கதிர்காம நாதன், முனியப்பதாசன் போன்ற புதிய எழுத்தாளர்கள் பின் நாளில் பிரபல எழுத்தாளர்களாக பெயர் பெற்றனர்.

**► யாழ்ப்பாணச் சூழலில் படித்த பெண்கள் பொதுவாகவே பாதுகாப்பான உத்தியோகமாக ஆசிரியத்**



தமிழ்ப் பெண் ஊடகவியலாளர் அமைப்பு சர்வதேச பெண்கள் நாளை முன்னிட்டு ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஊடகப் பணிபுரிந்த பெண்களைக் கௌரவித்து விருது வழங்கியபோது. (இடமிருந்து வலமாக இரண்டாவதாக இருப்பவர் அன்னலட்சுமி இராஜதுரை).











**தொழிலேயே நாடித்தேடுவதுண்டு. நீங்கள் பத்திரிகைத் தொழிலுக்காக வீரகேசரிக்கு - அதுவும் கொழும்பிற்கு வந்துள்ளீர்கள். அதன் பின்னணி எப்படி அமைந்தது?.**

சிறுவயதிலிருந்தே ஆசிரியர் தொழில் தான் எனக்கு மிகவும் விருப்பமான தொழிலாக இருந்தது. அதற்கான வாய்ப்பைத்தான் தேடினோம், கிடைப்பதாக இல்லை. அவ்வேளை வீரகேசரிப் பத்திரிகையில் தற்செயலாக ஒரு விளம்பரத்ததைப் பார்த்தேன்- உதவி ஆசிரியர்களாக இளைஞர்கள் தேவை என்ற விளம்பரம் அது. எழுத்திலே மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த எனக்கு, அந்த விளம்பரம் ஓர் ஊக்கத்தைத் தந்தது. நாங்களும் இளையவர்கள் தானே வின்னப்பித்துப் பாரக்கலாமே என எண்ணினேன். ஒரு புதிய தொழில் துறையைப் பார்க்கலாமே என்ற எண்ணமும் தான். தந்தையாரிடம் சென்று இதற்கு நான் விண்ணப்பிக்கலாம் என்று பார்க்கிறேன் என்றேன். 'நீ விரும்பினால் செய்யலாம்' என்றார். அப்போது வீரகேசரியில் இணை ஆசிரியராக சுதந்திரன் ஆசிரியராக பெயர் பெற்றிருந்த எஸ்.டி சிவநாயகம் அவர்கள் கடமையாற்றிக்கொண்டிருந்தார். அவர் எனது நெருங்கிய உறவினரான திரு. நாகலிங்கம் என்னும் பாடசாலை வித்தியாதரிசி அவர்களுக்கு மிகவும் தெரிந்தவராக இருந்தார். அவர் எனக்காக அளித்திருந்த சிபாரிசும் எனக்கு உதவியாக இருந்தது. நேர்முகப் பரீட்சைக்கு வரும்படி கடிதம் வந்தபோது தந்தையாருடன் கொழும்புக்குச் சென்றேன்.

பத்திரிகை எழுத்துத்துறை எனக்கு அப்போது முன்பின் அறியாத ஒன்று தானே! இருந்தாலும், எந்த தயக்கமும் தோன்றவில்லை. படிப்படியாக இத்தொழிலை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் விடாப்பிடியாக நின்றது. நேர்முகப் பரீட்சை நடந்த அன்றைய நாள் இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் சமூகமளித்திருந்தார்கள். பரீட்சை எழுதும் போது, நான் தான் ஒரு பெண் விண்ணப்பதாரியோ என ஒரு கணம் எண்ணியவாறு திரும்பிப் பார்த்தேன். நல்ல வேளை! அங்கே மண்டபத்தில் இன்னும் ஒரு பெண்ணும் எழுதிக்கொண்டிருந்தார். அவர் தான் யோகா வல்லிபுரம். பின்னாளில் பிரபலமான ஊடக ஆளுமையாகவும் எழுத்தாளராகவும் விளங்கிய திருமதி. யோகா பாலச்சந்திரன். அவர் தற்போது கனடாவில் வாழ்ந்து வருகிறார்.

1962ம் ஆண்டு மே மாதத்தில் அவரும் யூன் மாதத்தில் நானும் உதவி ஆசிரியர்களாக தொழிலுக்கு அழைக்கப்பட்டோம். எமக்குள்ளே நிலவிய ஒரே தன்மைத்தான எதிர்பார்ப்புகளும் எழுத்தார்வங்களும் எம்மிடையே ஒரு சுமுகமான போட்டியுணர்வையும் ஏற்படுத்தி நாம் மகிழ்ச்சியாக தொழில் புரியத் தூண்டின. எம்மோடு மூன்று இளைஞர்கள் உதவி ஆசிரியர்களாகத் தெரிவானார்கள்.

வீரகேசரி ஆசிரியர் குழுமத்தில் இளம் பெண்களான எமது இருவரதும் வருகை ஒரு புதிய கலகலப்பை தோற்றுவித்தது என்றே கூறவேண்டும். ஏனெனில், அக்காலத்தில் ஆசிரியபீடத்தில் பெண்கள் தொழில் பார்ப்பது மிகவும் அரிது.

அப்போது வீரகேசரியில் பிரதம ஆசிரியராக விளங்கிய எழுத்துலக ஜாம்பவான் 'ரஜனி' எனப்படும் கே.வீ.எஸ். வாஸ் அவர்கள். பத்திரிகை ஜாம்பவான் எஸ்.டி. சிவநாயகம், செய்தி ஆசிரியர் எஸ். வெங்கட்ராமன், உதவி செய்தி ஆசிரியர் ஈ.வீ. டேவிட் ராஜ் ஆகியோர் எங்களது தொழில் செயற்பாட்டுக்கு மிகவும் ஆதரவு தந்தார்கள் என்பதை கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இதன் பயனாக நாம் இருவரும் காரியாலயத்தில் மட்டுமன்றி வெளியில் கூட்டங்கள், பிரமுகர் சந்திப்புகள், கலை இலக்கிய நிகழ்ச்சிகள், புதிய திரைப்பட முதற்கட்ட காட்சிகள் எனப் பலவற்றிலும் உற்சாகமாக கலந்து, வீரகேசரியில் விடயங்களை எழுதுபவர்களாக இருந்தோம். பிற்காலத்தில் திரு. க. சிவபிரகாசம், திரு. சிவநேசச்செல்வன், திரு. பொன். ராஜகோபால் ஆகியோர் ஆசிரியர்களாக

இருந்து ஊக்குவித்தார்கள் என்பதையும் இவ்விடத்தில் நினைவு கூருகிறேன்.

நான் ஆரம்பத்தில் மாணவர் கேசரி என்னும் பகுதியை பொறுப்பெடுத்து நடத்தி மாணவர்களுக்கு ஊக்கமளிக்க, யோகா பெண்கள் பகுதியை அப்போது சிறப்பாக நடத்தினார். அத்துடன், அன்றைய காலகட்டத்தில் பத்திரிகை ஆணைக்குழு நடத்திய நாளாந்த விசாரனை குழு நிகழ்ச்சியையும் அவதானித்து பத்திரிகைக்கு யோகா செய்தியறிக்கை வழங்கினார் என்பதும் குறிப்பி




இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம் நீண்டகால, சிறந்த பத்திரிகையாளர் சேவைக்காக தங்கப் பதக்கம் வழங்கியபோது.

டத்தக்கது. ஆனால், சில வருடங்களின் பின் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட - எஸ்.டி. சிவநாயகம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட தினபதி பத்திரிகையில் கடமையாற்ற அவர் சென்றுவிட்டார்.

**▸ அன்னலட்சுமி என்றால் வீரகேசரி வீரகேசரி என்றால் அன்னலட்சுமி என்னும் அளவுக்கு வீரகேசரி என்கின்ற அந்த பத்திரிகைப் பெருங்கடலுக்குள் ஐம்பது வருடங்கள் ஆழ்ந்து ஐக்கியப்பட்டு இருந்துள்ளீர்கள். முக்கியமானதும் மறக்க முடியாததுமான ஒரு சில அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?**

வீரகேசரியில் தொடர்ந்தும் பணி புரிந்த எனக்கு 50 வருடங்களுக்கு மேலும் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தமை உண்மையில் ஒரு விசேட சந்தர்ப்பம்தான். நான் நாளாந்த செய்தி தயாரிப்பு வேலைகளோடு மங்கையர் பக்கம், இலக்கிய உலகம், விசேட அனுபந்தங்கள் போன்றவற்றை அவ்வப்போது தயாரித்து வழங்கி வந்தேன். அத்துடன், பெதுவெளியில் நடைபெறும் கலை, இலக்கிய நிகழ்ச்சிகளிலும் சமூகமளித்து அவை குறித்தும் எழுதிவந்தேன்.

1966ல் இருந்து 1970 வரை ஜோதி என்னும் குடும்ப வார இதழ், 1973ல் இருந்து 1985 வரை மித்திரன் வாரமலர் போன்றவற்றிற்கு பொறுப்பாசிரியராக இருந்து பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இவற்றின் மூலம் இளம் எழுத்தாளர்கள் பலருக்கு சிறுகதைகள் தொடர்கதைகள் எழுத ஊக்கமளித்தேன். இவை மட்டுமன்றி, 21ம் நூற்றாண்டில் மங்கையர் கேசரி, கலைக் கேசரி ஆகிய (Tabloid) வார பத்திரிகைகளை நடத்தியதன்பின் சங்கமம் என்னும் கலை இலக்கிய பக்கங்களையும் நடத்தி எமது கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் ஊக்கமளித்தேன்.

மேலும் 2010ல் வீரகேசரி ஆரம்பித்த கலைக் கேசரி என்னும் கலை, இலக்கிய, வரலாற்று சஞ்சிகையின் பொறுப்பாசிரியராக 10 வருட காலம் பணியாற்றியமை எனது பத்திரிகை வாழ்வில் மறக்க முடியாத ஒன்றாகும்.

என்னைப் பொறுத்தவரை எனது வீரகேசரி நாட்கள் ஒவ்வொன்றுமே முக்கியமானவை தான். மறக்க முடியாதவைதான்!.

பத்திரிகை ஆலுவலக வேலைகள் பற்றிய அறிவோ, புரிதலோ இல்லாமல் அதற்குள் காலடிவைத்த என்னை நாளொரு கல்வி பொழுதொரு பரீட்சை எனத் தட்டித்தட்டி உருவாக்கிய கலா சாலை வீரகேசரியும் அதன் ஆசிரியர் கே.வி.எஸ். வாஸ் அவர்களும். ஒரு தந்தையைப் போல் எங்களுக்கு (யோகாவுக்கும் எனக்கும்) உபதேசத்துடன் ஊக்கமும் உற்சாகமும் தந்து வேலை வாங்கியவர். வேலை செய்யக் கற்பித்தவர்!

வீரகேசரிக்குள் நான் நுழையுமுன்பே 'ரஜனி' என்னும் பெயரில் அவர் வீரகேசரியில் எழுதிய குந்தளப்பிரேமா, நந்தினி, தாரிணி, பத்மினி, மைதிலி போன்ற தினசரி தொடர் நாவல்கள் மூலம் அவரை அறிந்திருந்தேன். கல்கி, ஆனந்தவிகடன் போன்ற தமிழக பத்திரிகைகளிலும் அவர் எழுதி வருவதாக அறிந்திருந்தேன். இவைகள் அவர் மேல் ஒரு அன்பான மரியாதையை ஏற்படுத்தின.

வெற்றிலையை வாய்க்குள் திணித்துக் குதப்பியபடி பேனாவைக் கையிலெடுத்து எழுதத் தொடங்கினால் அடுத்த நாளைக்கான ஆசிரியத்தலையங்கம், தொடர் கதைக்கான அடுத்த அத்தியாயம் என எழுதி முடித்தபின் தான் தலை நிமிர்வார்.

அவர் ஓர் அசுர எழுத்தாளர் என்பதை, கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 'ரஜனி' என்ற பெயரில் எழுதும் கே.வி.எஸ். வாஸ் ஓர் எம்.ஏ. பட்டதாரி. அவர் ஒரு '60 டன் ரஷ்யன் டாங்கி' என்னும் பதிவும் நிரூபிக்கும்.

கோபம் வரும்போது உரத்துச் சத்தமிடுவதைப் போலவே சந்தோஷம் ஏற்படும் போதும் தன் மகிழ்வைப் பகிர்ந்துகொள்ள யாரை யாவது கத்தி அழைப்பார்.

அவர் கடகடவென கூறுவதைக் கேட்டு எழுத சிரமப்படுவேன். 'என்ன ஸேர்' என்று இரண்டு தரம் கேட்காமல் புரிந்து கொள்ளவே முடியாது! வாத்தியார் மாணவிகள் என்பதான மனோபாவம் தான் எனக்கும் யோகாவுக்கும் இருந்தது. ஒரு நாள் காலை தனது அறையிலிருந்து 'யோகலட்சுமி' என்று உரத்துக் கூப்பிட்டார். நாங்கள் இருவருமே விழுந்தடித்துக்கொண்டு அவருடைய அறைக்குள் விரைந்தோம். 'மன்னிச்சிடுங்கம்மா, அன்னலட்சுமியைத் தான் நான் அழைத்தேன். பழக்க தோஷத்துல யோகாவையும் சேர்த்துக் கூப்பிட்டுவிட்டேன் என்று சிரித்தார். மகிழ்ச்சியில் அவர் குழந்தை மாதிரி. நாமும் பின்னர் எமக்குள் சிரித்துக் கொண்டோம். அந்த சம்பவத்தை என்னால் மறக்கமுடியாது.

மற்றுமொரு சம்பவம் என்னால் மறக்க முடியாதது, வீரகேசரி தினசரியில் தொடர் நாவலாக இளங்கீரனின் 'அவளுக்கொரு வேலை வேண்டும்' என்ற தொடர் வெளிவந்தது. அந்த நாவலை அச்சுக் கோர்க்கும் பகுதியில் கொடுத்து பிறகு சரிபார்க்கும் பொறுப்பு என்னிடம் கொடுக்கப்பட்டிருந்தது. ஒருநாள் ஒரு குறிப்பிட்ட அத்தியாயப் பிரதியைக் காணவில்லை என அச்சுக்கோப்பாளர்கள் கைகளை விரித்துவிட்டார்கள். திகைத்துப் போனேன். ஆசிரியரிடம் கூறினால் பிரச்சினை பெரிதாகிவிடும். ஒரு சில தினங்களில் காணாமல் போன அந்த அத்தியாயம் பிரசுரமாகவும் வேண்டும். நீர்கொழும்பில் வசிக்கும் இளங்கீரனுடன் எனக்கு சகஜமான பழக்கமும் இல்லை. எழுதித்தரும்படி கேட்கவும் தோன்றவில்லை. அதற்கான கால அவகாசமுமில்லை. நானும் ஒரு படைப்பாளி தானே என்னும் நினைவுடன் முன்னர் வந்தவைகளையும் அடுத்தடுத்த அத்தியாயங்களையும் மிகவும் உன்னிப்புடன் வாசித்து, இடையில் காணாமல் போன அத்தியாயத்தை நானே எழுதிப் போட்டுக்கொண்டேன். வாசகர்களிடமிருந்து ஏதாவது கடிதங்கள் வருகிறதா என்றும் கவனித்துக் கொண்டேன். ஒன்றுமே இல்லை. தொடர்கதை முற்றுப் பெற்ற சில நாட்களின் பின் இளங்கீரன் வீரகேசரிக்கு வந்திருந்தார். அவரை அன்புடன் வரவேற்று உரையாடினோம். பல விசயங்கள் பற்றிப் பேசியவர், பேச்சின் நடுவில் அந்தக் காணாமல் போன அத்தியாயம் பற்றியும் தான் எழுதியது போல அது இல்லையே என்றும் கூறினார். நான் அவரிடம் உண்மையைக்கூறி மன்னிப்பும் கோரினேன். பரவாயில்லை, பிரச்சினை

ஒன்றும் இல்லை, கொஞ்சம் வித்தியாசமாகத் தோன்றியது அது தான் கேட்டேன் என்று பெருந்தன்மையுடன் கூறினார். இப்படி எத்தனை அனுபவங்கள்.

**▸ தோட்ட மஞ்சரி என்னும் பகுதியின் பொறுப்பு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட போது 'பத்திரிகைக்கலையின் பரிமாணம் புரியுமுன்னரே அதில் முழுமையாக நான் ஈடுபட வேண்டியதாயிற்று! நீச்சல் தெரியாதவரை தண்ணீருக்குள் தள்ளிவிட்ட மாதிரி இருந்தது' என்று கூறிய எஸ்.எம். கார்மேகம் உங்களுக்கு சற்றே முன்பதாக, உங்களைப் போலவே வீரகேசரிக்குள் வந்தவர். கார்மேகத்தின் கால் நூற்றாண்டு வீரகேசரிக் காலம் வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. அவருடனான உங்கள் நட்பும் பத்திரிகை உலக உறவும் எப்படி இருந்தது?**

பத்திரிகைத் தொழிலை தெரிந்து கொண்டு யாரும் அந்தக் காலத்தில் தொழிலுக்கு வருவதில்லை தான். அப்படியான வசதிகள் ஏதும் இல்லாத சூழலில் நீச்சலே தெரியாமல் தண்ணீருக்குள் தள்ளப்பட்டதாக கார்மேகம் கூறியது மிகச் சரியான கூற்றே. தண்ணீரில் விழுந்து தத்தளித்துக் கொண்டே நீச்சல் கற்றுக் கரைசேர்ந்தவர் இனிய நண்பர் கார்மேகம். தான் மட்டும் கரைசேர்ந்தால் போதும் என்றில்லாமல் தன்னைப் போல் தத்தளிக்கும் வேறு சிலரையும் கைப்பிடித்துக் கரைசேர்க்க முயன்றவர் அவர். கல்லூரி விலகிய மாணவியாக நான் வீரகேசரிக்குள் கால் வைத்த 1962ல் அவர் அதற்குள் இரண்டு வருட அனுபவஸ்தர். வீரகேரியின்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் கொடகே நிறுவனமும் இணைந்து இ.ஒ.கூ. மண்டபத்தில் நடத்திய மூத்த எழுத்தாளர் கௌரவிப்பு விழாவில் கௌரவம் பெற்ற மணிப்புலவர் மஜீத், அன்னலட்சுமி இராஜதுரை ஆகியோர். நடுவில் ஜனாப் அஷ்ரப் அஸீஸ்.

இரண்டு பக்க தோட்ட மஞ்சரியின் பொறுப்பாசிரியர் பதவி வகித்தவர். புதியவர்களும் சகஊழியர்களுமான யோகாவிடமும் என்னிடமும் அன்புடனும் கலகலப்புடனுடனும் பழகியவர். பயப்படாதீர்கள் தடைகளைத்தாண்டி வரலாம். நாங்கள் விழுந்தொழாத பள்ளங்களா! என்று தைரியம் சொன்னவர்.

தோட்ட மஞ்சரியை ஒரு தளமாகக்கொண்டு, தான் சார்ந்த மலையக மக்களின் கலை, இலக்கிய, சமூக, அரசியல் மேம்பாட்டுக்கான அவரது பணிகள் வரலாற்றுக் கவனிப்புக்குரியவை. அவர் உருவாக்கிய மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், வீரகேசரி அனுசரணையுடன் அவர் நடத்திய மலையகச் சிறுகதைப் போட்டிகள் இந்தப் போட்டிகள் மூலம் அவர் கண்டுபிடித்த எழுத்தாளர்கள், முதல் நான்கு போட்டிகளிலும் முதல் மூன்று பரிசு பெற்ற 12 சிறுகதைகளை ஒரு தொகுதியாகப் போட்டு அதை வீரகேசரி வெளியீடாக பிரகடனப்படுத்திக் கொண்ட சாணக்கியம் போன்றவை



வீரகேசரியின் முன்னாள் பிரதி ஆசிரியர் திரு. ஈ.வி. டேவிட்ராஜுவின் பவளவிழாவின்போது... தெளிவத்தை ஜோசப், செல்வராஜா ஆகியோருடன் அன்னலட்சுமி இராஜதுரை

காலத்தால் அழியாதவை.

வீரகேசரி நிர்வாகத்தினருடன் பேசி, அவர்களை இணங்க வைத்து, மலையகப் பரிசுக்கதைகளின் தொகுப்பான 'கதைக் கனிகள்' நூலை வீரகேசரிப்பிரசுரமாக 1971ல் கார்மேகம் வெளியிட்டுக் கொண்டதைத் தொடர்ந்து 1972ல் இருந்து வீரகேசரியின் நூல் வெளியீட்டு முயற்சிகள் ஆரம்பித்தன. 1979 வரையான காலத்தில் 65க்கும் மேற்பட்ட நாவல்களை வெளியிட்ட இப்பணிகளுக்கு அடி எடுத்துக் கொடுத்ததே அவர் வெளியிட்ட கதைக் கனிகள் தான் என்பது எத்தனை முக்கியமானது.

மலையக நகரங்களில் மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் நடத்தும் நூல் வெளியீட்டு விழாக்கள் போன்ற நிகழ்வுகளில் உரையாற்ற என்னையும் அழைத்துப் போயுள்ளமை நினைவுக்குள் இருக்கிறது. வீரகேசரியையே தனது வாழ்க்கை முறையாகக் கொண்டவர் அவர். அவரிடம், உங்களைப் போலவே நான் என்பேன்!

**▸ வீரகேசரியூடான உங்களது அரை நூற்றாண்டு கால ஊடகவியல் சாதனைப் பயணம் உங்களுக்குள்ளிருந்த படைப்புத் திறமைகளை தள்ளிவைத்துவிட்டது பற்றி என்ன கூறுவீர்கள். சிறுகதை, கவிதை என்று ஆரம்பித்தவர்தானே நீங்கள்?**

அப்படிக் கூறிவிடவும் முடியாது! நீங்கள் கூறுவத போல் ஊடகவியல் சாதனைப் பயணம் பரபரப்பானது தான். எனினும், பத்திரிகை எழுத்தில் எனது ஆக்க எழுத்து முயற்சியை மறந்துவிட்டிருந்தேன் என்று இல்லாமல் சிறுகதைகள், குறநாவல்கள், கவிதைகள், நாவல் மொழிபெயர்ப்பு எனப் பலவற்றையும் அவ்வப்போது எழுதி வந்திருக்கிறேன். 1970ல், விழிச்சுடர் என்னும் பெயரில் வேப்பமரம் என்னும் குறு நாவலையும் சேர்த்து இரு குறுநாவல் தொகுதியை 'யாழ்நங்கை' என்னும் எனது புனைபெயரில் வெளியிட்டேன். சுன்னாகம் தமிழருவி பதிப்பகம் மூலம் சிற்பி இதனை வெளியிட உதவினார் 'யாழ்ப்பாண பிரதேசப் பகைப்புலத்தில் மனிதாபிமான உணர்வுகளுக்கு முதலிடம் தந்து எழுதப்பட்ட குறு நாவல்களில் யாழ்நங்கையின் விழிச்சுடர், வேப்பமரம் ஆகியன குறிப்பிடத் தக்கன' என நா. சுப்பிரமணியம் அவர்கள் தனது ஈழத்து தமிழ் நாவல் இலக்கியத்தில் குறிப்பிட்டதையும் நினைவில் கொள்கிறேன்.


மற்றது வீரகேசரி பிரசுரமாக எனது உள்ளத்தின் கதவுகள் என்னும் நாவல் என் பெயரில் வெளிவந்தது 1984ல் நெருப்பு வெளிச்சம் என்னும் சிறுகதை தொகுப்பு சென்னையில் வெளியானது. எழுத்தாளர் காவலூர் ஜெகநாதன் இதனை பதிப்பிட்டு வெளியிட்டார். அதற்கு நானும் சென்றிருந்தேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவர் காலமானதால் இந்நூல் இங்கு வரவில்லை. எனினும், விமர்சகர்கள் சிலர் இதனை விமர்சித்திருந்தார்கள். நூல் இங்கு வந்து சேராததால் பல வாசகர்களுக்குக் கிடைக்காமல் போனது எனக்கு மிகவும் வருத்தத்தைத் தந்தது.

அடுத்து 1992ல் இருபக்கங்கள் என்னும் கவிதைத் தொகுப்பும் என்னால் வெளியிடப்பட்டது. இதனை கார்மேகம் அவர்கள்தான்


குடும்பத்தினருடன் அன்னலட்சுமி இராஜதுரை

தமிழ் நாட்டில் பதிப்பித்தார் என்பதனையும் நன்றியுடன் கூறுகின்றேன். இவையும் வீரகேசரி வாரவெளியீட்டில் வெளிவந்த கவிதைகள்தான். இதனை அடுத்து, 2012ல் வீரகேசரி நிறுவனம் ஒரு பெண் பத்திரிகையாளரின் அனுபவ தொகுப்பான நினைவுப் பெருவெளி என்னும் எனது நூலை தானே பதிப்பித்து சிறப்பாக வெளியிட்டுவைத்ததும் மறக்க முடியாதது.

அத்துடன் சிரித்திரன் சஞ்சிகையில் தீவாந்தரம் என்னும் சிறுவர் தொடர்கதையையும் வீரகேசரியில் சந்திரனில் சுந்தர் என்னும் சிறுவர் தொடர்கதையும் எழுதியிருந்தேன். மேலும், வீரகேசரி வார


இணையருடன் அன்னலட்சுமி இராஜதுரை

வெளியீட்டில் தரமான ஆங்கில சிறுகதைகள் பலவற்றை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டதும் குறிப்பிடக் கூடியது. இவை தவிர, 1982ல் நடந்த ஒபெக் தென் கிழக்கு பத்திரிகையாளர் மாநாட்டில் வீரகேசரி பத்திரிகையாளராக பங்கு பற்றி, மணிலாவில் மணியான நாட்கள் என்னும் கட்டுரைத் தொடரையும் 1995ல் பீஜிங்கில் உலக பெண்கள் மாநாட்டில் பங்கு பற்றி, பலரையும் கவர்ந்த பீஜிங் மாநாடு என்ற தொடர்கட்டுரையையும் எழுதினேன். 2010ல் கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் பார்வையாளராக பங்கு பற்றி தொடர் கட்டுரை ஒன்றை வீரகேசரியில் எழுதியுள்ளேன். அத்துடன், தெரேசா அம்மையார் உட்பட முக்கிய ஆளுமைகளையும் நேர்முகம் கண்டு அவ்வப்போது எழுதி வந்துள்ளேன் என்பதும் வாசகர்கள் அறிந்தது தான். ஆனால், இவற்றில் எதனையும் நூலாக்கும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை என்பதும் கவலைக்குரியது. இருப்பினும் நான் தொடர்ந்தும் எழுத்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டுதான் இருக்கிறேன்.

**► வானொலி எழுத்து துறையிலும் ஈடுபட்டு வந்திருக்கிறீர்கள் அந்த அனுபவம் பற்றி கூறுங்கள்.**

1961இல் இருந்து சில நாடகங்களை எழுதியதன்மூலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புகொண்டவராக இருந்துள்ளேன். மாதர் நிகழ்ச்சி, உரை அரங்கம் உரை நிகழ்ச்சி, கலைக் கோலம், கவிதை அரங்கம், கலந்துரையாடல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அவர்கள் கேட்கும் பொழுது நான் கலந்து கொண்டு பங்களிப்பு செய்திருக்கிறேன். இதைத் தவிர 1967 - 1968ல் பூஞ்சோலை என்னும் கிராம மகளிர் நிகழ்ச்சியையும் 1977ல் மகளிர் அரங்கம் என்னும் கிராம மகளிர் நிகழ்ச்சியையும் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கினங்க நடத்திக் கொடுத்துள்ளேன். அத்தோடு 1994ம் ஆண்டு முதல் 2000ம் ஆண்டு வரை லண்டன் பி.பி.சியில் இலங்கை கடிதம் என்னும் நிகழ்ச்சியில் பங்குபற்றி நேயர்களின் பாராட்டை பெற்றது நிறைவைத் தருகிறது. தற்போது அதாவது கடந்த 2021ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் ஜெர்மன் தமிழருவி வானொலியில் வாராவாரம் மனோரஞ்சிதம் எனும் கலை இலக்கிய சஞ்சிகை நிகழ்ச்சியை நான் தொகுத்து வழங்கி வருகிறேன். அத்தோடு கனடா தாய்வீடு பத்திரிகைகளிலும் எனது பங்களிப்பு தற்போது உண்டு.

**► வீரகேசரி வெளியிட்ட காத்திரமும் கவர்ச்சியும் கொண்ட கலைக் கேசரி என்னும் கலை கலாசார வரலாற்று சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணிபுரிந்திருக்கிறீர்கள். அது பற்றி கூறுங்கள்?**

இது ஒரு மகிழ்ச்சியும் பெருமையும் தரும் அனுபவம். 2010ம் ஆண்டிலிருந்து 2020ம் ஆண்டு வரை அதாவது கொரோனா காலம் வரை வெளிவந்த ஒரு சிறப்பான சஞ்சிகை. தமிழ் நாட்டில்கூட இவ்விதமான நோக்குடனும் நேர்த்தியுடனும் சஞ்சிகை வெளிவரவில்லை என்றுகூட பேசிக்கொண்டார்கள்.

தமிழ் கலை, கலாசாரம், மரபு, வரலாறு ஆகியவற்றை முக்கியப்படுத்திய இச்சஞ்சிகையில் எமது நாட்டு பேராசிரியர்களான எஸ். பத்மநாதன், காரத்திகேசு சிவத்தம்பி, கனகசபாபதி நாகேஸ்வரன், சபா. ஜெயராஜா, பரமு புஷ்பரட்ணம், எஸ். சிவலிங்கராஜா,கலாநிதி கிருஷ்ணராஜா, தமிழ் நாட்டு அறிஞர்களான மருத்துவர் க.திருத்தணிகாசலம் உட்பட அறிஞர்கள் சிலரும் இதில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள்.

எமது நாட்டின் வரலாற்று பெருமை மிக்க இடங்களுக்கும் ஆசிரியர் குழு நேரடியாக விஜயம் செய்து மேலதிக தகவல்களை திரட்டியதோடு, அழகிய புகைப்படங்களையும் எடுத்து இச்சஞ்சிகையை நடத்தியமை மறக்கமுடியாதது. அத்துடன் புகழ் பெற்ற எழுத்தாளர்களும் ஆய்வாளர்களும் தமது பங்களிப்பினை உற்சாகத்துடன் வழங்கினார்கள். எனினும் சர்வதேச தரங்கொண்ட இச் சஞ்சிகை 2020ல் ஏற்பட்ட கொரோனா தொற்று பரவலுடன் நின்று போனமை கவலைக்குரியது.

**► கொரோனா காரணமாக கலைக் கேசரி நின்று போனதுடன் வீட்டில் இருந்த வாறு வானொலிப் பணி மற்றும் எழுத்துப் பணிகளை நீங்கள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவது மகிழ்ச்சியைத் தருகிறது வாழ்த்துக்கள்.**

தங்கள் மேலான நேரத்தை எனக்காக ஒதுக்கி, இத்தகையதோர் நேர்முகத்தை கண்டு எழுதியமைக்காக எனது பணிவான நன்றியறிதலை உங்களுக்கும் தாய்வீடு ஆசிரியருக்கும் வாசகர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.



theliwathai.joseph@thaiveedu.com

# சிகப்பு நிறக் காரும் குதிரை வாலும்...

- ஓவியர் ஜீவா

இந்த முறை இப்போது பார்த்த இரண்டு திரைப்படங்களை குறித்து பகிர்ந்துகொள்ளலாம் என்று இருக்கிறேன். ஒன்று ஜப்பானிய மொழித்திரைப்படம், மற்ற ஒன்று நம் தமிழ் மொழியில் முயற்சிக்கப்பட்ட ஒரு புதிய பாணி திரைப்படம்.

உலக திரைப்படங்களில் ஜப்பானிய மொழி திரைப்படங்கள், நாம் எதிர்பார்க்காத முறையில் மிகப்பழமையானவை. நூறாண்டுகளை கடந்துவிட்டது. என்னைப்போன்ற ரசிகர்களுக்கு ஜப்பானிய மொழிப்படங்களை அறிமுகம் செய்தவை காட்சில்லா திரைப்படங்களும் அகிரா குரசோவாவும்தான். முன்னவை எந்த அளவுக்கு



சிறுபிள்ளைத்தனமாக இருந்தனவோ அவ்வளவு தரம் வாய்ந்தவை குரசோவா திரைப்படங்கள். அவருடைய ரோஷோமோன், இகுரு, செவன் சாமுராய், டெர்ஸு உசாலா, ட்ரீம்ஸ், ரான், காகெமுஷா போன்ற பெரும்பாலான படைப்புகள் உலக அளவில் கொண்டு செல்லப்பட்டன. காகெமுஷாவை நான் கோவையிலுள்ள ஒரு திரையரங்கிலேயே பார்த்திருக்கிறேன். டெர்ஸு உசாலாவை ருஷ்ய அரசாங்கம் தயாரித்தது. காகெமுஷா, லூகாஸும் ஸ்பீல்பெர்கும் இணைந்து தயாரித்து உலகெங்கும் விநியோகித்த படங்கள். அத்தகைய ஜப்பானில் சமீபத்தில் நமது ரஜினி திரைப்படங்கள் வெற்றிக்கொடி நாட்டுகின்றன என்று கேள்விப்பட்டு ஆச்சரியமடைந்தேன்.

சமீபத்தில் நான் பார்த்த ஜப்பானிய திரைப்படம், ஆஸ்கர் கதவுகளை தட்டிக்கொண்டிருக்கும் 'டிரைவ் மை கார்'. இந்த கட்டுரை வெளிவரும் நேரத்தில் பரிசு விவரங்கள் வெளியாயிருக்கக்கூடும். ஹருகி முரகமி எழுதிய சிறுகதையை அடிப்படையாக கொண்ட திரைப்படம். இயக்கியவர் ரியூசுக்கே ஹாமகுச்சி. நாடகத் தயாரிப்பு, ஒத்திகை ஆகியவற்றை பின்புலமாகக்கொண்ட திரைக்கதையமைப்பு. கதாநாயகன் யுசுக்கே கஃபுக்கு ஒரு நாடக நடிகர். மேடை இயக்குனரும் கூட. மனைவி ஓட்டோவும் ஒரு திரைக்கதையாசிரியர். அவளுக்கு கதைகள் சுரப்பது கலவியின்போதுதான். அந்த சமயத்தில் அவளுக்கு சொற்பெருக்காய் சுழன்று வரும் கதையின் போக்கு. கணவரின் இயக்கத்தில் 'வைட்டிங் பார் கோதாவ்' நாடகம் பார்த்து முடித்தவேளையில் அவள் நண்பன், இளம் நடிகன் கோஜியை அவருக்கு அறிமுகப்படுத்துகிறாள்.

ஒரு நாள் விமானம் ஏற கிளம்பும் யுசுக்கே, விமானம் ரத்தானதால், வீட்டுக்கு திரும்பி வருகிறான். அங்கே ஒரு இளைஞனுடன் இன்பம் துய்த்துக்கொண்டிருக்கும் மனைவியை காண்கிறான். இந்த இளைஞன் கோஜியாக இருக்குமோ என்று எண்ணுகிறான். ஆனாலும் இருவருக்கும் தெரியாமல் வெளியேறுகிறான். ஒரு நாள் வேலைக்கு கிளம்பும் கணவனிடம், மாலை திரும்பி வந்தவுடன் அவனுடன் பேசவேண்டும் என்று ஓட்டோ சொல்கிறாள். ஆனால் தாமதமாக திரும்பி வரும் அவன், அவளை பிணமாகத்தான் காண்கிறான். மூளையில் இரத்தக்கசிவு. நொறுங்கி போகும் இவன் செகாவ் எழுதிய 'அங்கிள் வான்யா' மேடையிலேயே விழுகிறான். நாடகம் நின்று போகிறது.

இரண்டு வருடங்கள் கழிகின்றன. அணுகுண்டு நகரமான ஹிரோஷிமாவிலிருந்து ஒரு ப்ராஜெக்ட்டுக்கான அழைப்பு வருகிறது. இரண்டு மாதங்கள் அங்கேயே தங்கி நடிகர் தேர்வு நடத்தி, ஒத்திகை பார்த்து அரங்கேற்றம் செய்யவேண்டும். நாடகம் அதே 'அங்கிள் வான்யா' தான். அரங்கியல் நடிப்பு மேதை ஸ்டானிஸ்லாவ்ஸ்கி அன்று இயக்கியதை இன்று யுசுக்கே இயக்குகிறார். ஒரு குட்டித்தீவு வீடு அவர் தங்குமிடமாகிறது. அரங்கிலிருந்து அரை மணி தூரத்திலிருக்கிறது. ஆனால் கமிட்டியின் விதிகளின் படி, கலைஞர்கள் கார் ஓட்டக்கூடாது. அவர்களுக்கு ஒரு ஓட்டுனரை இவர்களே ஏற்பாடு செய்து தருவார்கள். முன்னர் ஒரு கலைஞர் ஏற்படுத்திய விபத்தினால் ஒருவர் மரணமடைந்ததால் இந்த மாற்ற இயலாத விதி. இவருக்கோ தானே கார் ஓட்டவேண்டும். ஓட்டும்போதே நாடக வசன வரிகளை உச்சரித்துக்கொண்டே ஓட்டுவது அவரது வழக்கம். ஒரு பெண் ஓட்டுனரை அறிமுகப்படுத்துகிறார்கள். இவர் மேலும் தயங்குகிறார். ஒரு டெஸ்ட் ஓட்டம் நடந்தபின் ஒப்புக்கொள்கிறார்.

நடிகர்கள் தேர்வு நடக்கிறது. ஒரு பேச முடியாத பெண்ணும் அதில் ஒருவர். சைகை அவரது மொழி. எதிர்பாராதவிதமாக கோஜியும் இந்த தேர்வுக்கு வந்திருக்கிறான். அவனது சைகைகளும் நடிப்பும் இயக்குனருக்கு எரிச்சல் தந்தாலும், முக்கிய கதாபாத்திரமான வயதான வான்யாவாக நடிக்க தேர்ந்தெடுக்கப்படுகிறான். அவனுக்கோ வயதுக்கேற்ற வேடம் வேண்டும் என்கிறான். பிடிக்கவில்லையென்றால் போகலாம் என்று சொன்னவுடன், நீண்ட

யோசனைக்கு பின் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறான் கோஜி.

யுசுக்கே ஒரு நாள் மதுபானக்கூடத்தில் கோஜியை சந்திக்க நேர்கி றது. தான் ஓட்டோவை விரும்பியதை அவன் ஒத்துக் கொள்கி றான். ஆனால் அவளுடன் உடலுறவு கொண்டதை பற்றி அவன் எதுவும் சொல்லவில்லை. யுசுக்கேவும் தன் ஓட்டுனருடன் சுமுகமா



கிக் கொள்கிறார். கார் பயணத்தின்போது பின்சீட்டிலிருந்து தன் வசனங்களை திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறார். தன் மனைவி பற்றியும், இறந்து போன தன் மகளை பற்றியும் கூட அவளுடன் பகிர்ந்துகொள்கிறார். மகள் உயிரோடு இருந்திருந் தால் இப்போது அவளுக்கு ஓட்டுனர் வடாரியின் வயது இருந்தி ருக்கும் வடாரியும் ஒரு நிலச்சரிவில் இறந்து போன, எப்போதும் தன்னை கரித்துக்கொட்டிக்கொண்டிருந்த தாயார் குறித்தும் அவரி டம் சொல்கிறாள்.

இன்னொரு முறை பாரில் யுசுக்கே, கோஜியின் சுயகட்டுப்பாடற்ற தன்மையை விமர்சிக்கிறார். அவனோ தன்னை அனுமதியில்லா மல் அங்கு புகைப்படமெடுத்த ஒருவனை மிரட்டி தாக்குகிறான். காரில் திரும்பும்போது, தன் மனைவியின் அந்தரங்கம் தெரிந்தும் கூட அவளை இழக்க விரும்பாமல் தான் தெரியாதது போல நடித் ததாக சொல்கிறார் யுசுக்கே. கோஜி, ஓட்டோ சொன்ன ஒரு கதையை விவரிக்கிறான். யுசுக்கே இதுவரை கேட்காத கதை..! ஒரு நாள் ஒத்திகையின்போது காவலர்கள் வந்து கோஜியை கைது செய்து அழைத்துப்போய்விடுகின்றனர். அவன் தாக்கிய அந்த மனிதன் பின்னர் இறந்துபோய்விட்டான். நாடகக்குழுவினர் யுசுக்கேவிடம் விவாதிக்கின்றனர். முக்கிய வேடத்தில் நடித்தவன் இப்போது இல்லாததால் யுசுக்கேவே அங்கிள் வான்யாவாக நடிக் கவேண்டும், அல்லது நாடக அரங்கேற்றத்தை ரத்து செய்யவேண் டும்.

யுசுக்கே வடாரியிடம், தன்னை அவள் தாயார் மறைந்த இருப்பி டத்திற்கு அழைத்துச் செல்ல கோருகிறார். ஒரு பயணம் தொடர் கிறது. பனிப்பொழிவில் மூழ்கிக்கிடக்கும் அந்த வீட்டின் கூரையை காண்கிறார்கள். தான் நினைத்திருந்தால் தன் தாயாரை காப்பாற்றி யிருக்க முடியும் என்கிறாள் அவள். அவரும், தன் மனைவி தன்னு டன் பேச அழைத்திருந்த சரியான நேரத்திற்கு சென்றிருந்தால் அவள் இறந்திருக்கமாட்டாள் என்று வருந்துகிறார். வடாரியின் பழைய வீட்டிற்கு சென்று உணர்ச்சிமயமான நிலையில் ஒருவருக் கொருவர் ஆறுதலளித்துக் கொள்கின்றனர். மீண்டும் நடிகராக மேடையேறுகிறார் யுசுக்கே. அங்கிள் வான்யா நாடகம் அற்புத மாக அரங்கேறுகிறது.

இறுதிக்காட்சியில் வடாரி கொரியாவில் காய்கறிகள் வாங்கிக் கொண்டு தன் சிகப்பு நிற சாப் 900 டர்போ காரில் ஏறுகிறாள். யுசுக்கேவின் அதே கார்தானா...! பின்சீட்டில் ஒரு நாய் அமர்ந்தி ருக்கிறது.

பொதுவாக கட்டுரைகளில் முழுக்கதையை சொல்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. ஆனாலும் இந்த திரைப்படத்தின் போக்கு கதையை சொல்ல வைக்கிறது. ஒரு சிறுகதையை திரைப்படமாக் குவதில் பல சிக்கல்கள் உள்ளன. அதை அப்படியே திரைக்கு மாற்றும்பொழுது ஒன்று கதையின் சாரம் இழந்துவிடும், அல்லது திரைப்படம் மூலக்கதைக்கு உண்மையாக இருக்காது. இது மிக சிறப்பாக கையாளப்பட்டிருக்கும் திரைப்படம். மனித உணர்வுகள், மிக சரியாக புரியப்பட்டு காட்சி ரூபங்களாக மாறியிருக்கின்றன. கதாபாத்திரங்கள் அருமையாக கையாளப்பட்டிருக்கின்றன. நாடக ஆர்வலர்களுக்கு மேலும் இந்த திரைப்படம் நெருக்கத்தை தருகி றது.

மேடைக்கலையில் நாம் கண்டுகளித்த வகைகளில் ஒன்று, அபத்த நாடகம். இந்த வகையில், புற உலகத்துடன் எந்த குறிப் பிட்ட காரணமும் அல்லாமல் மனிதரின் எதிர்வினைகள் குறித்து மேடைப்படுத்துதல். கண்களுக்கு தெரியாத வெளியுலக சக்திக- ளால், மனிதரை ஒரு பொம்மலாட்ட பதுமையை போல கையாளு தலையும்கூட நாடகமாக்குதல் என்று சொல்லலாம். தமிழில் கூட வெளிவந்த யூஜின் அயோனெஸ்கோ எழுதிய ரைனோசர் (காண்டாமிருகம்) என்ற நகைச்சுவை கலந்திருந்த துன்பியல் நாட கத்தை நம்மில் பலர் படித்திருக்கலாம். தமிழில் மேடையேற்றம் கூட கொண்டிருந்ததாக நினைவு. தமிழில் கோணங்கி எழுதி, முரு கபூபதி ஆக்கிய நாடகங்கள் கூட இந்த வகையை சேர்ந்தது என்று நம்புகிறேன். காஃப்கா எழுதிய 'மெடமார்பசிஸ்' புதினத்தில் இரவு தூங்கி கண் விழிக்கும் நாயகன், தான் ஒரு ராட்சச வடிவ பூச்சியாக மாறுவதும், அதன் தொடர்வினைகளும் அற்புதமாக சித் தரிக்கப்பட்டிருக்கும்.

இந்த வடிவில் ஒரு தமிழ் திரைப்படம் தயாரிக்கப்பட்டிருந்தால் எப்படியிருக்கும்! குதிரைவால் திரைப்படம் போல இருக்கலாம்.

உறங்கிக் கொண்டிருக்கும் சரவணனுக்கு விழிப்பு வருகிறது. அவ னது பின்புறத்தில் ஒரு சலசலப்பு. போர்வைக்குள் எதோ சதிரா டுகிறது. எழுந்து நின்று பார்த்தால் அது ஒரு வால். அடர்ந்த முடி யுள்ள ஒரு குதிரைவால்.

பதறிப்போகிறான். வாலை இழுத்துப்பார்க்கிறான். வரமாட்டேன் என்கிறது. அடங்காமல் திமுறுகிறது. கால் சட்டைக்குள் நுழைத்



துப்பார்க்கிறான். அடக்க முடியவில்லை. வெளியே வந்துவிடுகி றது. வேலைக்கு கிளம்புகையில் அக்கம் பக்கத்தினர் சிரிப்பது போல தோன்றுகிறது. பஸ் நிறுத்தத்திலும் இதே கதைதான். நடக் கும்போதே வால் துள்ளுவதால் நடை மாறுகிறது. சிகரட் வாங்கும் பெட்டிக்கடை, தான் பணி புரியும் வங்கியின் ஊழியர்கள், வாடிக் கையாளர்கள், பக்கத்துவீட்டுக்காரர், பூட்சை நக்கும் அவரது நாய் 'பிராக்', கனவுலகில் சந்திக்கும் வானவில் என்னும் வான் கோ என்ற பெயருடைய விசித்திர பெண் எல்லோரும் அடங்கிய ஒரு மாய உலகம் சிருஷ்டிக்கப்பட்டு அதில் குதிரை வாலுடைய சரவணன் என்னும் பிராய்டுக்கு நேரிடும் அனுபவங்கள், விசித்திர சம்பவங்களாக விரிகின்றன.





இந்த திரைப்படத்தில் நேராக கதை சொல்லப்படுவதில்லை. காட்சியரங்குகள், ஒலி, ஒளிப்பதிவு, கதாபாத்திரங்கள். போன்றவற்றில் செய்யப்படும் சில உத்திகள் ஒரு மனோதத்துவ குழப்பத்தை பார்வையாளருக்கும் ஏற்படுத்துகின்றன. கதாநாயகனுடைய வீட்டை எடுத்துக்கொண்டால், அது எத்தகைய இடத்தில் இருக்கிறது என்று குழம்பச்செய்யும் நீள அகலங்கள். ஒரு வினோத தன்மையை அந்த அறை கொண்டு வருகிறது. முகம் பார்க்கும் கண்ணாடி, சுவற்றில் மாட்டியிருக்கும் வினோத ஓவியங்கள், டிவி திரையில் ஒலிக்கும் சிம்பனி, சமயங்களில் ஆயிரத்தில் ஒருவன் பாடல் கூட, இறைந்திருக்கும் மதுக்குப்பிகள், சிகரெட் துணுக்குகள், சுவர்க்காகிதம், படுத்திருக்கும் புத்தர் மற்றும் சில பல சிலைகள், பார்பர் ஷாப்பிலிருந்து திருடப்பட்டதுபோல ஒரு நாற்காலி, ஜன்னல், ஜன்னலுக்கு வெளியே எப்போதும் ஓடிக் கொண்டிருக்கும் லோக்கல் ரயில்கள். அவன் வேலை பார்க்கும் வங்கியும் இப்படித்தான்... ஆனால் வாடிக்கையாளர்கள் வந்து போகும் இடம் என்பதால் கொஞ்சம் வடிவாக இருக்கிறது.

இவன் சந்திக்கும் மனிதர்கள்...? சதா பனியனுக்குள் கை விட்டு அக்குளை சொறிந்து அதை முகர்ந்து பார்த்து இன்புறும் பெட்டிக் கடைக்காரன், அதே கையால்தான் சிகரெட்டையும் எடுத்துக்கொடுக்கிறான். ஆங்கிலத் தவளை பெயருள்ள நாயுடன் வாக்கிங் செல்லும் வேளையில் வாழ்க்கை தத்துவங்களை பகிர்ந்து கொள்ளும் பக்கத்துவீட்டுக்காரர்: இவரும் மனதளவில் ஆரோக்யமாக இல்லை என்பது புரிகிறது. இவன் பெயர் சரவணனா, பிராய்டா என்று குழம்பித்தவிக்கும் இன்சூரன்ஸ் ஏஜென்ட், ஒரு கட்டத்தில் தாக்கு பிடிக்கமுடியாமல் ஓட வேண்டிய சூழ்நிலை. குறி சொல்லும் கிழவியும் தத்துவமாகத்தான் பேசுகிறாள். பிறரைப்போலவே அவளுக்கும் அவனுடைய வால் கண்ணுக்கு தெரியவில்லை. நீ சொல்வதைப்பார்த்தால் மெல்ல மெல்ல குதிரையாக மாறிக் கொண்டு வருகிறாய் என்று குறி சொல்கிறாள். முன்பதிவு செய்து சந்தித்த ஜோதிடரும் இவனது நிலை குறித்து சொல்ல இயலாமல் தவிக்கிறார். அவரது அறை இன்னொரு வினோத அனுபவம். அங்கும் வால் படுத்தும் பாடு தாங்கவில்லை. ஸ்டுவர்ட் கோட் டீஸ்வரன் இவனது கல்லூரி கணித ஆசிரியர். வங்கி வாடிக்கையாளரான அவரோ ஒரு கணித மேதை. அவருடன் விவாதிக்கப் போனால், அவரது வீட்டு கீழ்தள சுவர்கள் மற்றும் தரை முழுதும் கணக்குகளின் கடல். சாம்பல் கிண்ணத்தின் மீது படரும் நத்தை. அவரும் ஒரு விசித்திரப் பேர்வழியே. அவனது குதிரை வால் அவர் கண்ணுக்கும் தெரியவில்லை, ஆனாலும் தெரிகிறது என்று எடுத்துக்கொள்ளும் நபர். கணித சூத்திரங்கள் வழியே அவர் வரைந்த குதிரை படமும் சுவற்றில் தெரிகிறது. குதிரை காமத்தின் வடிவம். உனது பிரச்னை அதுதான் என்கிறார்.

சரி, முன்பதிவு செய்து சந்திக்கும் ஜோதிடரும் இதே காரணத்தைத்தான் சொல்கிறார். காம வீரியத்தை அதிகரிக்கும் முஸ்லி மாத்திரை விளம்பரங்களில் ஒரு குதிரை இருப்பதை சுட்டிக்காட்டுகிறார். எங்கும் இவனுக்கு விளக்கம் கிடைப்பதில்லை. கனவில் இவன் கண்ட வானவில் இவன் அறையிலும் அவனுடன் தத்துவ விசாரணையில் ஈடுபட்டு படத்தின் பின் பகுதியை ஆக்கிரமிக்கிறாள். மலையோரக் குடியிருப்பு, அங்கு வாழும் மக்கள், கருத்திருக்கும் குமரிப்பெண், சிறுமி நீலி, அவள் சிநேகிதன், கிழவி என்று கதையின் நிலப்பரப்பு விரிகிறது. அகன்ற கிணறுக்கு இங்கு முக்கிய இடம். வழுக்கும் படிக்கட்டுகள், தேங்கிக்கிடக்கும் பச்சை நீர், நீரில் பிம்பமாய் தெரியும் வானவில், வீட்டுச் சுவற்றில் சித்திரமாய் பதிந்த எம்ஜியார், குமரியின் மரணம், கல்லெறிந்து தாக்கியபோது மாயமாய் மறைந்த வானவில்லின் வடிவம், கிணற்றுக்குள் விழுந்து தற்கொலை செய்தது ஏன்...! பின் தொடரும் எம்ஜியாரின் மரணம், ரேடியோ செய்திகளை கேட்டு கிராமமே அழுகிறது. கிணற்று நீரில் மிதக்கும் காஷ்மீர் வெள்ளை குல்லாவும் கருப்புக்கண்ணாடியும் எம்ஜியாருடையதுதானே. பிராய்டின் பக்கத்து வீட்டுக்காரர் இந்த மலைக்கிராமத்தில் பச்சை துண்டை போர்த்திக்கொண்டு என்ன செய்கிறார் என்று தெரியவில்லை!

பார்வையாளனுக்கு மாயத்தன்மை உணர்ச்சியை தருவதில் ஒளிப்பதிவாளர் டாப் ஆங்கிளில் பெரும்பாலும் சாய்ந்த சட்டகங்களையே காட்டுகிறார். சில காட்சிகளில் வேகமாக நகரும் காமெரா ஒரு மயக்கநிலையை தருகிறது. ஒரு அசாதாரண சூழலை தருவதில் இசையும் இணைந்து கொள்கிறது. தமிழில் இப்படி ஒரு திரைப்படம் எனக்கு தெரிந்து வந்ததில்லை. ஆனாலும் எந்த கலைவடிவமும் பார்வையாளருக்காகவே உருவாக்கப்படும் நிலையில் அரூப ஓவியங்களை போல ஒன்றுக்கொன்று தொடர்பற்ற காட்சிகளை முன்னும் பின்னும், இடையிலும் கூட கோர்த்து தந்திருப்பது யாருக்காக என்ற கேள்வி எழாமலில்லை. மனிதனின் அன்றாட வாழ்வின் செயல்களில் நுழைந்து பாதிக்கும் டெமென்ஷியா நோயின் பாதிப்பு நாயகனுக்கு இருக்குமோ என்ற சந்தேகம் பார்வையாளனுக்கு இருக்கலாம்.

திரைக்கதை எழுதிய ராஜேஷ், இயக்குநர்கள் மனோஜ் லியோனல் ஜாசன், ஷியாம் சுந்தர் மூவருக்கும் அவர்கள் துணிச்சலுக்கும், நினைத்ததை படைத்த ஆற்றலுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்-துக்கொண்டு, எதற்கும் பின்புறம் ஒருமுறை தடவிப்பார்த்து விட்டு விடைபெறுவோம்!



jeeva@thaiveedu.com

# இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும் சமகாலப் பயன்பாட்டு நிலையும் 15

- கௌசல்யா சுப்பிரமணியன்

இசைத் தமிழ்ப் பாடற்பரப்பினையும் அவற்றின் சமகாலப் பயன்பாட்டு நிலைகளையும் ஆராயும் இத் தொடரில் தமிழிசை மூவரின் காலகட்டத்திற்குப் பின்னரான வரலாறு நோக்கப்பட்டுவருகிறது. இவ்வரலாற்றில் முக்கிய பெண் ஆளுமையாளரில் ஒருவரான இசைக்கலைஞர் வீணை தனம்மாளவர்களது இசையாளுமை அம்சங்கள் சென்ற மாதக் கட்டுரையில் நோக்கப்பட்டன. தனம்மாள் பற்றிய பார்வையை அடுத்து நமது கவனத்திற்கு வரவேண்டியவர் 'தமிழுக்குப் புதுநெறி காட்டிய புலவன்' என்ற கணிப்புக்குரியவராகத் திகழ்ந்தவரான 'மகாகவி சுப்பிரமணியப் பாரதியாரா'வார். இவர் தமிழிலக்கியத்திற்கு (தமிழ்க்கவிதைக்கு) மட்டுமன்றித் தமிழின் இசைப்பாடல் மரபுக்கும் பெரும் பங்களிப்புச் செய்தவராவார். தமக்கு முற்பட்ட கால வரலாற்றினையும் தமக்குப் பின்னரான வரலாற்றினையும் கூட உணர்ந்தவராக - சிம்மநோக்குடன் - செயற்பட்டவராவார்.

இத்தகு திறன்கள் கொண்டவரான பாரதியாரின் இசைத்தமிழ் ஆளுமையம்சங்களை நோக்குவதற்கு முன் இவரின் ஆளுமைத் திறன்களின் உருவாக்கத்திற்கு முன்னோடிகளாய்த் திகழ்ந்துள்ளவர்கள் எனக் கருதத்தக்கவர்கள் - இலக்கியத்தில் மட்டுமல்லாது இசையிலும் வித்துவத்தன்மையுடன் திகழ்ந்த முக்கியமான சிலர் - ஆக்கங்கள் பற்றி இங்கு முதலில் குறிப்பிடவேண்டியது அவசியமாகிறது. இவ்வகைத் திறன்களுடன் பலர் மேற்குறித்த காலங்களில் வாழ்ந்தாலும் எடுத்துக்காட்டாகச் சிலரை இங்கு சுட்டிச் செல்வது பாரதியாரை மட்டுமல்லாது இசைத்தமிழ்ப் பாடற்பரப்பின் வரலாற்றினையும் கூடப் புரிந்து கொள்வதற்கு துணைபுரியும். அவ்வகையில், 'சித்தர்கள்', 'குமரகுருபரர்', 'தாயுமானவர்', 'வீரமாமுனிவர்', 'திரிகூடராசப்ப கவிராயர்', 'இராமலிங்க அடிகளார்', 'தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார்', 'அண்ணாமலை ரெட்டியார்', 'குணங்குடி மஸ்தான் சாகிபு', 'மாயூரம் வேதநாயகம் பிள்ளை', 'வித்வான் இலட்சுமணப்பிள்ளை', 'கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை' முதலியோர் இங்கு கவனத்திற்குரியவர்களாகிறார்கள். இவர்களிற் பின்னைய இருவரும் ஏறத்தாள பாரதியார் காலத்தில் வாழ்ந்தவர்களாவர்.

இவர்களில் 'வேதநாயகம் சாஸ்த்திரியார்', 'அண்ணாமலை ரெட்டியார்' ஆகியோர் தவிர்ந்த பலரும் பொதுவாகவே இலக்கியப் பங்களிப்பாளர்களாக மட்டுமே கருதப்பட்டு வருபவர்கள். இவ்வாறான இவர்களின் இலக்கிய ஆக்கங்களில் ஒரு பகுதி இசைப்பண்புகள் கொண்டவையாகவும் அதாவது இசைப்பாடல்கள் என்பதான கணிப்புக்குரியவையாகவும் திகழ்வன. அவ்வகையிலேயே இசைத் தமிழ்ப் பாடற்பரப்பின் வரலாற்றில் அவ்வாக்கங்கள் எடுத்துப் பேசப்படவேண்டியவைகளாகின்றன. மேற்கூறியோரில் முதற்கண் சித்தர்களின் பாடல்கள் கவனத்திற்கு வருகின்றன.

## சித்தர்களின் பாடல்கள்:

தமிழகத்திலே சித்தர் மரபின் முன்னோடியாகக் கருதப்படுபவர் சைவ நாயன்மார்களிலொருவரான 'திருமூலர்' ஆவார். இவர் கி.பி. 5-6ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவராக அறியப்படுகிறார். அஷ்டமா சித்திகளில் வல்லவரான இவருக்கு திருவாவடுதுறையில் கோயிலுள்ளது. இவர் இயற்றிய 'திருமந்திர'ப் பாடல்கள்(ஏறத்தாள 3000 பாடல்கள்) 'பன்னிரு திருமுறை'த்தொகுப்பில் 10வது திருமுறையில் அமைந்துள்ளதென்பது அனைவரும் அறிந்த செய்தியேயாகும். இவ்வாறமைந்த திருமந்திரப் பாடல்கள் 'விருத்தம்' என்ற பாவின வகையில் அமைந்தவையாகும். இவரைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பல சித்தர்கள் வாழ்ந்து இலக்கியங்கள் படைத்துள்ளார்கள். இவர்களில் இசை சார்ந்த பாடல்களைத் தந்தவர்கள் என்ற வகையில் அறியப்படுபவர்களில் குறிப்பாகப் பட்டினத்தார், பத்திரகிரியார், பாம்பாட்டிச்சித்தர், இடைக்காட்டுச்சித்தர், அகப்பேய்ச்சித்தர், குதம்பைச் சித்தர், கடுவெளிச் சித்தர், அழுகுணிச்சித்தர் முதலியவர்கள் இங்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையவர்கள். இவர்களின் பாடல்கள் சித்தர் பாடல்கள் என்ற தொகுப்பில்(மணிவாசகர் பதிப்பகம் -2000) இடம்பெறுவன.

இவர்களில் பட்டினத்தார் என்ற பெயரிலே தமிழ்நாட்டில் நான்கு புலவர்கள் வாழ்ந்துள்ளார்கள் என அறிகிறோம். அவர்களில் ஒருவர் பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ள ஐந்து சிற்றிலக்கியங்களைப் பாடியவராவார். இவர் 10-11ம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவராவார். 14ம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாவதாக அமைந்த பட்டினத்தாரே சித்தராகத் திகழ்ந்தவராக அறிகிறோம். இவர் நான்கு அகவல்கள், 'திருவேகம்பமாலை' 'உடல்கூற்று வண்ணம்' மற்றும் 'தனிப்பாடல்' ஆகியவற்றைப் பாடியவர். இவற்றுள் இசைப்பாடல் இயல்பு கொண்டதாக அமைந்தது 'உடல்கூற்று வண்ணம்' ஆகும். அப்பாடலானது வாழ்க்கையின் நிலையாமையை நினைவுக்கு இட்டுவருவது. அப்பாடலின் தொடக்கக்கண்ணியும் இறுதிக்கண்ணியும் வருமாறு:

*'ஒருமடமாதும் ஒருவனுமாகி*
*இன்பசுகம்தரும் அன்புபொருந்தி..'(1)*

எனத்தொடங்கும் இப்பாடல் இறுதியிலே,

*விறகிடைமூடி அழல்கொடுபோட*
*வெந்து விழுந்துமு றிந்துநிணங்கள்*
*உருகியெலும்பு கருகியடங்கி*
*ஓர்பிடி நீறும் இலாதஉடம்பை*
*நம்பும் அடியேனை யினியாளுமே' (24)*

என நிறைவுறுகிறது. இப்பாடலின் இசை வாய்பாடு வருமாறு:

*தனதனதான தனதனதான*
*தந்ததனந்தன தந்ததனந்த*
*தனனதனந்த தனனதனந்த*
*தானனதானன தானனதந்த*
*தந்ததனதான தனதானனா*

அடுத்து, மூன்றாவது பட்டினத்தார் 16ம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். இசைப்பா பட்டினத்தார் என்றும் வழங்கப்படுபவரான இவர் 'பட்டினத்தார் திருவிசைப்பா' என்ற பிரபந்தம் பாடியவராக அறியப்படுகிறார்.

நான்காவது பட்டினத்தார் 17ம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார்.

இவர் இசைப்பா வகையான கண்ணி வடிவில் 'அருட்புலம்பல்' என்ற தலைப்பிலான இரு பிரபந்தங்களைப் பாடியவராவார். இப் பாடல்கள் ஈரடிக் கண்ணிகளாக அமைந்த பல பாடல்களைக் கொண்டனவாகும். இவற்றில் முதலாவது பகுதியானது 'முதல்வன் முறையீடு' என்ற தலைப்பில் அமைவது. இது 73 கண்ணிகளைக் கொண்டது. இதன் இரண்டாவது பாடற்பகுதி 130 கண்ணிகளைக் கொண்டதாகும். புலவர் ஆ. மாணிக்கனார் பதிப்பித்த 'பட்டினத் தார் பாடல்கள்' என்ற தொகுப்பிலே(வர்த்தமானன் பதிப்பகம் - 2005) இப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மேற்படி முதலாவதான 'முதல்வன் முறையீடு' பாடற்பகுதியானது கீர்த்தனை என்ற இசைப்பா வடிவத்தின் சாயலில் அமைந்ததாகும்.

'முதல்வன் முறையீடு' என்னும் தலைப்பில் அமைந்துள்ள இப்பா டற் பகுதியானது 'கன்னி வனநாதா! கன்னி வனநாதா!' என்ற ஒற் றைவரியுடன் தொடங்குகிறது. அதனை அடுத்து கண்ணிகள் அமைகின்றன. இரு கண்ணிகள் வருமாறு:

*'மூலம் அறியேன் முடியும் முடிவறியேன்*
*ஞாலத்துள் பட்டதுயர் நாடநடக்குதடா..' (1)*

*'அறியாமை யாம்மலத்தால் அறிவுமுதல் கெட்டனடா*
*பிரியா வினைப்பயனால் பித்துப் பிடித்தனடா..' (2)*

இவ்வாறமைந்த சில கண்ணிகளுக்கொரு முறை 'கன்னி வனநா தா! கன்னி வனநாதா!' என்ற தொடக்க அடியானது இடம்பெறுகி றது. கீர்த்தனையில் வரும் பல்லவியானது சரணம் ஒவ்வொன்றின் ஈற்றிலும் பாடப்படுவதை இது நினைவுக்கு இட்டு வருகிறது. அவ் வகையிலேயே இது கீர்த்தனையின் சாயல் கொண்டதாகக் கருதப் படுகிறது. வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த பட்டினத்தார் பற்றி இதுவரை நோக்கினோம்.

அடுத்து ஏறத்தாழ கி.பி. 14-17 ம் ஆண்டுக் காலப்பகுதிகளில் வாழ்ந்து இசைப்பாடல்கள் பாடிய சித்தர்கள் இங்கு கவனத்திற்கு இட்டு வரப்படவுள்ளார்கள். அவர்களில் பத்திகிரியார் முதற்கண் கவனத்திற்கிட்டு வரப்படுகிறார்.

துளுவ நாட்டு அரசனாகத்திகழ்ந்த பத்திரகிரி ராஜன் என்பவரே பின்னாளில் பத்திரகிரியார் என்ற சித்தராக அறியப்படுகிறார். இவ ரைப்பற்றி வழங்கிவரும் கதை இவரைப் பட்டினத்தாரோடு தொடர் புபடுத்துகிறது. இவர் பட்டினத்தாரைக் குருவாகக் கொண்டவர் என அக்கதை கூறுகிறது. அரசபோகங்களைத் துறந்து சித்தராக மாறிய இவர் பாடியதாக அறியப்படும் 'பத்திரகிரியார் மெய்ஞா னப் புலம்பல்' என்னும் பாடலானது 232 ஈரடிக் கண்ணிகளில் அமைந்துள்ளது. இக்கண்ணிகளின் ஈற்றடிகளின் இறுதிப்பகுதிகள் 'பெறுவது எக்காலம்?', 'தலைப்படுவதெக்காலம்?', 'எழும்பி நிற்பது எக்காலம்?', 'கொள்வது எக்காலம்?', 'முடிப்பது எக்காலம்?', 'தேக் குவது எக்காலம்?' எனக் கேள்வியுடன் முடிகின்றன. இவ்வாறு 'எக் காலம்?' என்ற சொல் இறுதியடிகள்தோறும் இடம்பெறுவதானது இசைப்பாடலுக்குரியதான 'இயைபு' என்ற சிறப்புப் பண்பாகும். சான்றுகளாக இரு கண்ணிகள்:

*'நயனத்திடை வெளிபோல் நண்ணும் பரவெளியில்*
*சயனித் திருந்து தலைப்டுவது எக்காலம்?' (195)*

*'மன்னும் பரவெளியை மனவெளியில் அடைத்து அறிவை*
*என்னுள் ஒரு நினைவை எழுப்பி நிற்பது எக்காலம்?' (207)*

அடுத்து பாம்பாட்டிச் சித்தர் கவனத்திற்கு வருகிறார். இச்சித்தர் தமிழகத்தின் கோவை மாவட்டத்தில் மருதமலையில் வாழ்ந்து வந் தவர் என்பதை அங்குள்ள சான்றுகள் அறியத்தருகின்றன. இவர் இயற்றிய 129 பாடல்கள் சித்தர் பாடல்கள் பதிப்பில் இடம்பெற் றுள்ளன. இவை எளிய நடை, சொல்நயம் என்பவற்றுடனும் ஆழ மான தத்துவப் பொருண்மைகளுடனும் திகழ்வன. 'பாம்பு வடிவ மாக உள்ள குண்டலினி சக்தியினை எழுப்பி அதன் மூலம் ஆன்ம தரிசனம் எய்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு இவை பாடப்பட்டுள்ளன. இவரது பிரசித்தியடைந்த பாடலின் சில கண் ணிகள் வருமாறு:

*'தெளிந்து தெளிந்து தெளிந்து ஆடுபாம்பே சிவன்*
*சீர்பாதங் கண்டு தெளிந்து ஆடுபாம்பே!*

*ஆடுபாம்பே நெளிந்து ஆடுபாம்பே சிவன்*
*அடியினைக் கண்டோமென்று ஆடுபாம்பே!' (1)*

*'நாதர் முடி மேலிருக்கும் நாகபாம்பே*
*நச்சுப் பையை வைத்திருக்கும் நல்லபாம்பே*
*பாதலத்திற் குடிபுகும் பைகொள்பாம்பே*
*பாடிப்பாடி யாடிநின்று விளையாடுபாம்பே' (20)*

ஒவ்வொரு பாடலினதும் இறுதிச்சீர் 'ஆடுபாம்பே' என முடிவடை- கின்றமையானது இதன் இசைப்பாடல் இயல்பான இயைபுத் தன் மையின் சிறப்பினைக் காட்டுவதாயமைந்துள்ளது.

பாம்பாட்டிச்சித்தரின் இப்பாடற்பகுதியானது 'குருவணக்கம்'- (10), 'பாம்பின் சிறப்பு'- (5), 'சித்தர் வல்லபம்'- (15), 'பொருளாசை விலக்கம்'- (10), 'பெண்ணாசை விலக்கம்'- (10), 'உடலின் குணம்'- (10), 'அகப்பற்று நீக்கல்'- (42) முதலான பல தலைப்புகளில் அவற்றில் குறிப்பிடும் எண்ணிக்கையில் கண்ணிகளையும் கொண் டமைந்தவையாகும். அத்தலைப்புகளே அவற்றின் பொருளையும் உணர்த்துவன. இப்பாடலில் 'அகப்பற்று நீக்கல்' பகுதி 'எண்சீர் விருத்தம்' என்ற 'பாவின்' வகையிலமைந்துளது.

அடுத்து இங்கு நோக்கப்படவுள்ளவர் இடைக்காட்டுச்சித்தர் ஆவார். மாடு மேய்க்கும் இடையராகவிருந்த இவருக்கு நவசித்தர் எனப்படுவோரின் அருளால் ஞான உபதேசம் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. இடையர்களையும் மாடுகளையும் நோக்கிப் பாடி யதால் இவர் இடைக்காட்டுச்சித்தர் எனப்பெயர் பெற்றார் என அறிகிறோம். குதித்தாடும் கோனார் பாடலால் இவர் பெயர் பெற் றவர். அப்பாடல்களிற் கண்ணிகளாயமைந்த பாடல் வருமாறு,

*'மனமென்னும் மாடு அடங்கில் தாண்டவக்கோனே - முத்தி*
*வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக்கோனே' (13)*

*'ஓசையுள் அடங்குமுன்னம் தாண்டவக்கோனே - மூல*
*ஓங்காரங் கண்டறிவாய் தாண்டவக்கோனே' (16)*

அடுத்து, இவரது 'தாண்டவராயக் கோனார் கூற்று' என்ற தலைப் பில் அமைந்த பாடலொன்று வருமாறு,

*'தாந்தி மித்திமி தந்தக்கோ னாரே*
*தீந்தி மித்திமி திந்தக்கோ னாரே*
*ஆனந்தக் கோனாரே - அருள்*
*ஆனந்தக் கோனாரே'*

என்ற தொடக்கப்பாடலின் பின்னர் பல கண்ணிகளில் பாடல் தொடர்கிறது. ஒவ்வொரு கண்ணியும் பாடியபின் கீர்த்தனைகள் போன்று தொடக்கப்பாடல் ஆட்டத்துடன் பாடப்படும். இதன் ஒரு கண்ணியினை அடுத்து நோக்குவோம்,

*'மெய்வாய் கண் மூக்குச் செவியெனும் ஐந்தாட்டை*
*வீறுஞ் சுவையொளி யூறோசை யாம்காட்டை*
*எய்யாமல் ஓட்டினேன் வாட்டினேன் ஆட்டினேன்*
*ஏகவெளிக்குள்ளே யோக வெளிக்குள்ளே (தாந்திமி)' (27)*

இவரின் இதே போன்ற இன்னோர் பாடல் 'நாராயணக்கோனார் கூற்றாக'வும் வருகிறது. அப்பாடல் வருமாறு,

*'ஆதி பகவனையே - பசுவே*
*அன்பராய் நினைப்பாயேல்*
*சோதி பரகதிதான் - பசுவே*
*சொந்தமது ஆகாதோ?..' (33)*

இப்பாடலில் அமைந்த 'பசுவே' என்ற தனிச்சொல்லானது 'சிந்து' என்ற பாடல்வடிவத்தின் சிறப்புக் கூறாகும்.

இடைக்காட்டுச்சித்தரின் இப்பாடற்பகுதி ‘சித்தத்தொடு கிளத்தல்’, ‘குயிலொடு கிளத்தல்’, ‘மயிலொடு கிளத்தல்’, ‘புல்லாங்குழலூ தல்’, ‘பால் கறத்தல்’, ‘கிடை கட்டுதல்’ ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ளது (கிளத்தல் என்பது பேசுதல் எனப்பொருள் தரும்). இத்தலைப்புகள் கொண்டு இவரது தொகுப்பில் 130 கண் ணிகள் காணப்படுகின்றன.

அடுத்து கவனத்துக்கு வருபவர் அகப்பேய்ச் சித்தர் ஆவார். இவ ருடைய பாடல்கள் அனைத்துமே மேற்கூறியவாறான தனிச்சொல் கொண்ட சிந்துப் பாடல்களேயாகும். சித்தர்பாடல்கள் தொகுப் பிலே இவரின் பாடல்களாக இவ்வமைப்பு சார்ந்து 90 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சான்றுகளாக இரு பாடல்கள்:

*‘நஞ்சுண்ண வேண்டாவே - அகப்பேய்*
*நாயகன் தாள் பெறவே*
*நெஞ்சு மலையாதே - அகப்பேய்*
*நீ ஒன்றுஞ் சொல்லாதே’ (1)*

*‘ஆறாறு தத்துவமும் -அகப்பேய்*
*ஆகமஞ் சொன்னதடி*
*மாறாத மண்டலமும் -அகப்பேய்*
*வந்தது மூன்றடியே’ (10)*

அடுத்து குதம்பைச் சித்தர் பாடல்களை நோக்குவோம். 32 கண் ணிகள் கொண்ட ஒரு பாடலே கிடைத்திருக்கிறது. ஆழ்ந்த பொருள் பொதிந்துள்ள இப்பாடல் பாடுவதற்கு எளிமையானதாக வும் மகிழ்வைக் கொடுக்கும் வகையிலும் அமைந்திருக்கிறது. ‘குதம்பை’ என்பது காதணியைக் குறிப்பதாகும். அதனை அணிந் துள்ள பெண்ணொருத்தியை முன்னிறுத்திப் பாடுவதாகவே இவரு டைய இப்பாடற்கண்ணிகள் அமைந்துள்ளன. இதனால் இவர் குதம்பைச்சித்தர் என்ற காரணப்பெயரால் வழங்கப்பட்டார் என் பதை உணரமுடிகிறது. இவரின் இருகண்ணிகள் வருமாறு:

*‘வெட்ட வெளிதன்னை மெய்யென்று இருப்போர்க்குப்*
*பட்டயம் ஏதுக்கடி - குதம்பாய்*
*பட்டயம் ஏதுக்கடி?’ (1)*

*‘வஞ்சகம் அற்று வழிதன்னைக் கண்டோர்க்குச்*
*சஞ்சலம் ஏதுக்கடி - குதம்பாய்*
*சஞ்சலம் ஏதுக்கடி’ (4)*

அடுத்து அமைபவர் கடுவெளிச் சித்தர் ஆவார். இவருடைய பாடல் 34 கண்ணிகள் கொண்டதாகும். இது ‘ஆனந்தக்களிப்பு’ என்ற தலைப்பிலமைந்ததாகும். இவரது இப்பாடல் மனம் வாக்கு கடந்த பரந்த வெளியொன்றை (அதாவது கடுவெளியை) நோக்கி ஆன்மாவை வழிப்படுத்துவதான உள்ளடக்க அம்சங்கொண்ட மைந்ததாகும். அவ்வாறு பாடிய காரணத்தாலேயே அவர் கடுவெ ளிச்சித்தர் எனப்பட்டார் என அறிகிறோம். இவருடைய இப்பாடல்,

*‘பாபஞ்செய் யாதிரு மனமே - நாளைக்*
*கோபஞ்செய் தேயமன் கொண்டோடிப் போவான்*
*பாபஞ்செய் யாதிரு மனமே’ (பல்லவி)*

எனத்தொடங்குகிறது. இதனையடுத்து வரும் கண்ணிகளில் ஒன்று பலருமறிந்த பாடலாகும் அது:

*‘நந்த வனத்திலோ ராண்டி - அவன்*
*நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்*
*கொண்டுவந் தானொரு தோண்டி - மெத்தக்*
*கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி’ (4)*

இப்பாடலின் மெட்டானது புகழ்பெற்றதொன்றாகத் திகழ்கிறது. அவற்றோடு இம்மெட்டு ‘ஆனந்தக்களிப்பு மெட்டு’ என இலக்கி யத்திலும் நிலைத்து விட்டது. பின்னாளில் பல இசைநாடகங்களி லும் இது பயன்படுத்தப்பட்டு வந்த பெருமைக்குரியதாகும். கோபாலகிருஷ்ண பாரதியார் தமது ‘நந்தனார் சரித்திர’த்தில் இம் மெட்டினைப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. (‘ஆனந்தக்களிப்பு’ என்பது பின்னாளில் ஒரு சிற்றிலக்கிய வகையொன்றைக் குறித்து நிற்கிறதென்பதும் இதன் சிறப்பாகும்.)

அடுத்தமையும் அழுகுணிச் சித்தர் என்பவரின் இயற்பெயர் அழக ணிச் சித்தர் என்பதாகும். ‘அழகான அணிகளாலமைந்த பாடல்க ளைத் தந்தவர்’ என்ற வகையில் அவருக்கமைந்த பெயரே, அது. ‘மூலப் பதியடியோ’ என்ற தொடக்கமுடன் அமைந்த 40 ‘கலித்தா ழிசை’களைக் கொண்டதான இவரது பாடலின் இரு கலித்தாழிசை கள் வருமாறு:

*‘கொல்லன் உலைபோலக் கொதிக்குதடி யென்வயிறு*
*நில்லென்று சொன்னால் நிலைநிறுத்தக் கூடுதில்லை*
*நில்லென்று சொல்லியல்லோ நிலைநிறுத்த வல்லார்க்கு*
*கொல்லென்று வந்தநமன் என் கண்ணம்மா!*
*குடியோடிப் போகானோ!..’ (7)*

*‘மாமன் மகளடியோ மச்சினியோ நானறியேன்*
*காமன் கணையெனக்குக் கனலாக வேகுதடி*
*மாமன் மகளாகி மச்சினியும் நீயானால்*
*காமன் கணைகளெல்லாம் என் கண்ணம்மா!*
*கண்விழிக்க வேகாவோ!..’ (11)*

இசைப்பாடல்களைத் தந்த சித்தர்கள் பற்றிய இப்பார்வையில் நிறைவாக நமது கவனத்துக்கு வருபவர் கொங்கணநாயனார் எனப்படும் கொங்கணச்சித்தர் ஆவார். இவர் ‘கும்மி’ என்ற இசைப்பாடல் வகையைச் சிறப்பாகக் கையாண்டவராவார். ‘வாலைக்கும்மி’ என்னும் தலைப்பில் அமைந்ததான இவருடைய கும்மிப் பாடலானது 111 கண்ணிகளைக் கொண்டதாகும். இப்பா டல் வாலை எனப்படும் இளம்பருவப் பெண்ணொருத்தியை முன் னிறுத்திப் பாடப்பட்டதாகும். இங்கே இந்த இளம்பெண்ணாகச் சக்தி தெய்வமே உருவகிக்கப்பட்டுள்ளமையானது இவற்றில மைந்த ‘காப்பு’ மற்றும் ‘துதி’ப் பாடல்களினூடாகத் தெளிவாகவே தெரிகிறது. இவ்வாக்கத்தின் நூலாக்க முறைமையைப் பின்பற்றிச் சிறப்பாகக் கூறவேண்டும். காப்பு மற்றும் பல்வேறு தெய்வங்க ளுக்கான துதிமுறைமைகள் முதலானவற்றை முறைப்படி கடைப் பிடித்துப் பாடப்பட்டதாகும். இறுதியில் ‘முத்திரை’ப் பாடல், வாழ்த்துப்பாடல் என்பவற்றையும் இது கொண்டுள்ளது. இதன் பெரும்பாலான பாடல்களில் இறுதிச்சீர்கள் ‘வாலைப் பெண்ணே!’ என அமைவதையும் நோக்கமுடிகிறது. இருபாடல்கள் வருமாறு:

*‘தில்லையில் முல்லையலெல்லையுளாடிய*
*வல்லவள் வாலைப்பெண் மீதினிலே*
*சல்லாபக்கும்மித் தமிழ்பாடவரம்*
*தொல்லைவினைபோக்கும் வாலைப்பெண்ணே’ (8)*

*‘வேதமும் பூதமுண் டானதுவும் வெளி*
*விஞ்ஞான சாத்திர மானதுவும்*
*நாதமுங் கீதமுண் டானதுவும் வழி*
*நான் சொல்லக் கேளடி வாலைப் பெண்ணே!’ (10)*

மேலே குறிப்பிட்ட திருமூலரில் தொடங்கிக் கூறப்பட்ட சித்தர்கள் தமது சித்தத்தில் இறைவனை இருத்தியவர்கள் என்ற வகையி- லேயே ‘சித்தர்கள்’ என அழைக்கப்பட்டார்கள். இவர்களின் பாடல் கள் நேரடியான அர்த்தமுடையவையல்ல. மறைமுகமான அர்த்தங் கள் கொண்டவை. இப்பாடல்களை உட்பொருளை விளங்கிக் கொள்வதற்கு மருத்துவம், தத்துவசாஸ்த்திரம், ஜோதிடம், பௌதிக-இரசாயனம் போன்ற பலவித அறிவுத் திறன்கள் நிறைந் திருக்க வேண்டும். எனினும் இப்பாடல்கள் சராசரி மாந்தரைக் கவ ரவல்லனவாக எளிய நடையிலும் சுவைமிகு மெட்டுக்களிலும் அமைந்தவை. அவ்வகையிலேயே இசைப்பாடல் வகைமையில் அவை சிறப்பாக எடுத்துப் பேசப்படுவதற்குரிய வரலாற்று முக்கி யத்துவம் கொண்டனவாகத் திகழ்கின்றன.

(தொடரும்)



kawsalya.s@thaiveedu.com

# உப்பும் ஊறுகாயும்

**- கிருங்கை சேதுபதி**

அண்மையில் என் தாயாருடன் பேசிக்கொண்டிருந்த போது, பேச்சு வாக்கில் ஒரு சொலவடை அவர்தம் வாக்கில் வெளிப்பட்டது.

‘உப்பைத் தொட்டுக்கிட்டு, உரலை முழுங்கலாம்.’

உப்பைத் தெரிந்து வைத்திருக்கும் எல்லாருக்கும் உரல் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. படமிட்டுக் காட்டினாலும் அதன் பயன்பாடு என்னவென்று பலருக்குத் தெரிந்திருக்காது.

அன்றாட உணவிற்குப் பயன்படும் அரிசியை, நெல்லின் உமி நீக்கிப் பெற்றுக்கொள்ள, உதவுவது உரல். உடுக்கையைக் கீழ்மேலாய் நிறுத்தி, அதன் மேற்பகுதியில், ஒரு குழி தோண்டப்பட்டிருக்கும் எனில், அது உரல். கல்லால் ஆன உரல், நெல்லின் உமி நீக்கி, அரிசியாக்கவும், மரத்தால் ஆன உரல், அரிசியை இடித்து மாவாக்கவும் பயன்படும். தமிழர்களின் அன்றாடப் பயன்பாட்டில் புழங்குபொருள்களான இவை ஆலைகள் வந்த பின் காணாது போய்விட்டன. ஆனாலும் எங்கள் வீட்டில் இவை இரண்டும் இப்போதும் இருக்கின்றன.

அது சரி உப்புக்கும் உரலுக்கும் என்ன தொடர்பு என்கிறீர்களா?

கால் வயிற்றுக் கஞ்சிக்காகப் படாத பாடுபட்டு உழைக்கும் நம் பாரத தேசத்தின் உழைப்பாளிகள், அறுசுவை உணவுக்கு எங்கே போவார்கள்? பெரும்பாலும் கேழ்வரகிலோ, கம்பிலோ ஆன கூழ்தான் கிட்டும். நீர்விட்டுக் கரைத்தோ, கட்டியாக உருட்டிக் கொண்டோ, விழுங்கிவிட்டு வேலையைச் செய்யவேண்டும். தொட்டுக்கொள்ள, ஒன்றும் இருக்காது. உப்புக் கிடைத்தால் அதுவே பெரிது.

இளம் பருவத்தில், எங்கள் குடும்பத் தொழிலாக மளிகை வணிகம் இருந்தது.

கடைக்கு வெளியில் மூட்டைகளாகக் கல் உப்பு இருக்கும். பக்கத்தில் அதனை அளந்து விற்க, இரும்பாலான படி (அளவுக்கருவி) ஒன்று இருக்கும்.

தார்ச்சாலையை ஒட்டியதாக எங்கள் கடை. பழுதடைந்த தார்ச்சாலையை அவ்வப்போது ஒழுங்குபடுத்தத் தார் காய்ச்சி உருக்கி ஊற்றிச் சாலை போடும் தொழிலாளிகள். ஒரு பெரிய தூக்குச் சட்டியைக் கொண்டு வருவார்கள். அதில் அவர்களுக்கான உணவு இருக்கும். அதாவது, நீர் நிரம்பிய கஞ்சியோ, கூழோ இருக்கும்.

ஒரு நாளின் மதிய வேளையில் நான் மட்டும் கடையில் இருந்தேன்.

உணவு இடைவேளையில், தூக்குச் சட்டியைத் திறந்த ஒரு அம்மா, அதன் மூடியைத் திருப்பி, ‘கஞ்சிக்குக் கொஞ்சம் உப்புக் குடு தம்பி’ என்றார்.

எனக்குத் தெரிந்து, இலவசமாக யாரும் உப்புக் கேட்டதில்லை. வெளியில் இருக்கும் சாக்கில் இருந்து, ஐந்து விரல்களையும் மொட்டுப்போல் குவித்து உப்பை அள்ளிக் கொடுத்தேன். என் அளவுக்கு அதுவே மிகுதி. அந்த அம்மா, ‘இன்னும் கொஞ்சம் போடு தம்பி என்றார். கைப்பிடி அளவு எடுத்துப் போட்டேன். ‘காசு வேண்ணாலும் வாங்கிக்க. இன்னும் போடு தம்பி என்றார்.

‘கஞ்சன்’ என்று என்னைச் சொல்லாவிட்டாலும் அந்தப் பொருளில் தானே அவர் அப்படிச் சொல்கிறார் என்ற ஆத்திரத்தில், ‘இதிலே வேணுங்கறதை நீங்களே அள்ளிக்குங்க’ என்றேன்.

சற்றே தயக்கத்தோடு வந்த அம்மா, வலது கையை அகல விரித்து, குவித்திருந்த உப்பை அள்ளி, அந்தத் தூக்குச் சட்டியின் மூடியை நிறைத்தார். ஏற்கெனவே, நான் இருமுறை கொடுத்த உப்புக்கும் மேல், இவர் அள்ளி நிறைத்த உப்பு, குன்றுபோல், குவிந்திருந்தது.

பத்துப் பேருக்குச் சமைக்கிற சாம்பாருக்குக் கூட, எங்கள் தாயார் இவ்வளவு உப்பைப் பயன்படுத்தியது இல்லை. வியப்போடு பார்த்த என்னைப் பார்த்து அந்த அம்மா, சொன்னார். ‘உன்னோட உப்பை அள்ளிக்கிட்டுப்போயி, கடையா போடப்போறேன். கஞ்சிக்குத் தொட்டுக்கத்தான் போறேன்’ என்றார்.

தொட்டுக்கொள்ள, ஊறுகாய் வாங்கக்கூடக் காசு இல்லாத வறுமை. (இத்தனைக்கும் ஊறுகாய் 10 பைசா).

அந்த உப்பும் கஞ்சியில் ஊற்றப்பட்ட நீரும் இருந்த அளவிற்கு, கஞ்சி இருக்குமா என்பதே ஐயம்தான்.

அப்பா கடைக்கு வந்ததும், சாப்பிடப் போன எனக்கு இந்த ஞாபகம்தான். வழக்கமாக மோர்ச்சோற்றுக்கு உப்புச் சேர்க்கிற வழக்கம் எங்கள் வீட்டில் இல்லை. அன்றைக்கு அம்மாவிடம் உப்பைக் கேட்டதும், வியப்பாகப் பார்த்தார், கேட்டார், நடந்ததைச் சொன்னேன். அப்போதுதான், இந்தச் சொலவடையை அம்மாவிடமிருந்து நான் முதன்முதலில் கேட்டேன்.

‘கூழோ, கஞ்சியோ, கைப்பிடி அளவில் குறைவாக இருந்தாலும் சரி, உரல் அளவிற்குப் பெரிதாக இருந்தாலும் சரி, ஊறுகாயோ, துவையலோ, வியஞ்சனமோ வேண்டியதில்லை. ‘உப்பைத் தொட்டுக்கொண்டு உரலை விழுங்கிவிடுவார்கள்’ அவர்கள்’ என்றார். இப்படி விழுங்கினால்தான், அவர்கள் மலையை உடைத்துச் சல்லியாக்கி, சாலை போட முடியும்.

இத்தனைக்கும் கால் வயிற்றுக் கஞ்சி. கொதிக்கும் தாரை எடுத்து வாளியில் நிரப்பி, பரப்பிய சரளைக்கற்களின்மீது கொண்டுபோய்ச் சமமாய் ஊற்றிவிட்டு மீளவும் எடுக்க வரும் அவர்களின் கால்களில் செருப்பே இருக்காது.

***‘காலுக்குச் செருப்பும் இன்றிக்***
***கால் வயிற்றுக் கூழுமின்றிப்***
***பாழுக்கு உழைத்தோமடா, தோழா***
***பசையற்றுப் போனோமடா’***

என்ற பாடலைப் பாடுகிறபோதெல்லாம் என் அப்பாவின் கண்கள் கலங்கியதற்கான காரணத்தை நான் அன்றுதான் கண்டுகொண்டேன்.

அதற்குப்பின் இந்தப் பாடலைக் கேட்கிறபோதெல்லாம் என் கண்களில் என்னையும் அறியாமல் உப்புக் கண்ணீர் ஊற்றெடுக்கத்தான் செய்கிறது.



இந்தப் பாடலை இயற்றியவர் ஜீவா என்றும், எங்கள் ஊருக்கு அவர் வந்திருக்கிறார் என்றும் அவருடைய இயக்கத்தில் ஈடுபட்டதன் காரணமாக, ஊர்நலனுக்காகச் சிறை சென்றிருந்த என் தந்தையார் சொல்வதைக் கேட்டபோதெல்லாம் இனம்புரியாத சிலிர்ப்பு எழுந்திருக்கிறது.

அவர் மிகச் சிறந்த பேச்சாளர் என்று எல்லாரும் - தவத்திரு குன்றக்குடி அடிகளார், எழுத்தாளர் ஜெயகாந்தன், நாவலாசிரியர் பொன்னீலன், பேராசிரியர் எஸ். இராமகிருஷ்ணன், கம்பன் அடிப்பொடி, சா. கணேசன், தா. பாண்டியன் உள்ளிட்ட பலரும் - மட்டுமன்றி, மேடையில் பேசுகிற பேச்சாளர்கள் - எல்லாரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். இன்றும் கேட்கிறேன். நானும் பேசிவருகிறேன்.

பேச்சு என்றால், ஜீவாவின் பேச்சுத்தான். அது கேட்பவர்களையும் பேசச் செய்கின்ற பேச்சு. பேச்சாளர்களுக்கான பேச்சு என்று குறுக்கிவிடலாகாது. பேசத் தெரிந்திருக்கும் தன் உணர்ச்சிகளை, உரிமைகளைப் பேச முடியாதவர்களுக்கான பேச்சு - ஜீவாவின் பேச்சைச் செவிகளில் இறக்கி, மனங்களில் நிறைத்து, மறுபடி அவர் பேச வரும் வரையில், இதையே திரும்பத் திரும்ப ஒலிபரப்பிக் கொண்டிருந்தவர்கள் பலர்.

இன்றளவும், தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் பாரதியின் பாடல்களும், கம்பன் கவிதைகளும், திருவள்ளுவரின் திருக்குறளும் பரவி நிறைந்திருக்கிறதென்றால், அதற்குப் பெருங்காரணமானவர், பேராசான் ஜீவாதான். பூதப்பாண்டி தந்த பொதுவுடைமைச் சிங்கம், தோழர் ஜீவானந்தம் என்கிற ஜீவா. அவர் பள்ளிகள் தொடங்கி, பல்கலைக்கழகங்கள் வரையில் சென்று உரையாற்றியிருக்கிறார். பாமரமக்களுக்கோ, அவர் நடமாடும் பல்கலைக்கழகமாகவே திகழ்ந்திருக்கிறார்.

நாடி நரம்புகள் புடைத்தெழ, இரத்தநாளங்களில் போய்ப் பாரதி பாடல்கள் நிறையும்படி செய்கிற அப்பேச்சை - கேட்க முடியாதவர்கள், செய்திகளாய், ஜனசக்தி, தாமரை இதழ்களில் உரைகளாய் வெளிவந்தவற்றை, எடுத்து விரித்து வாய்விட்டு உரக்க வாசித்தாலே நெஞ்சில் உரம் ஏறும். ஜீவ களை கூடும்.

இன்றைக்கு, பேச்சாளர்களுக்குக் கொடுக்கிற தொகையைவிட, கேட்க வருபவர்களுக்காகச் செய்ய வேண்டிய செலவு அதிகம் இருக்கிறது. அன்றைக்கு ஜீவாவின் காலத்தில், அவர் பேச்சுக்காக, கேட்போரிடம் காசு வசூலிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்த ஒரு தகவல்.

1961ம் ஆண்டு மேமாதம், திருப்பூரில், தோழர் ஜீவா பேசுகிறார். ‘தமிழ் இலக்கியமும் வாழ்வும் வளர்ச்சியும்’ என்பது தலைப்பு. பல இலக்கிய மன்றங்கள், கிளைக்கழகங்கள், படிப்பகங்கள் சார்பில், ஜீவாவுக்கு மலர் மாலைகளும் கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்படுகின்றன. இக்கூட்டத்தில் வசூலான தொகை, ரூ.1417/-(ஆயிரத்து நானூற்றுப் பதினேழு ரூபாய்) அது கட்சிக்காகும் தொகை. பைநிறைய, இயக்கத்தின் பணம் ஜீவாவிடம் இருந்தாலும், பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் தோழர் கொண்டுவரும் உணவிற்காகப் பட்டினியோடு, காத்திருப்பாரே அல்லாமல், பசிபோக்கச் செலவிடமாட்டார். அதனையும் கடந்து தனக்கான தொகை இருந்தால்கூட, அவர் உணவுக்குச் செலவழித்தார் என்று சொல்வதற்கில்லை. பயிலும் புத்தகங்களுக்காகவே அவர் நிறையச் செலவழித்தார்.

தோழர் ஜீவா மறைந்த நாளில், பாவேந்தர் பாரதிதாசன் பாடிய இரங்கற்பாக்களில் ஒரு வெண்பா இப்படிச் சொல்கிறது.

*அடுத்தநாள் சாப்பாட்டுக் கான பணத்தைக்*
*கொடுத்துப் பெருநூல் கொடும்என்(று)- எடுத்துப்*
*படிப்பார் எப்போதும் சீவா படித்த*
*படிப்பே படிப்பிற் பெரிது.*

அவர் படித்தவை அதிகமா? படித்தவற்றிற்கும் மேலாய், எழுத்தில் படைத்தவை அதிகமா? என்றால் அவற்றையெல்லாம்விட, சொற்பொழிவாய் நிறைத்தவைதான் மிக அதிகம்.

அது சரி, தலைப்புக்கும் இந்தக் கட்டுரைக்கும் என்ன தொடர்பு என்று நினைக்கிறீர்களா?

இருக்கிறது.

அது, இன்றைக்குச் சற்றேறக்குறைய, 61 ஆண்டுகளுக்கு முன்னால், பம்பாய்த் தமிழ்ச்சங்கத்தின் பாரதி விழாவில், சிறப்புப் பேச்சாளராக ஜீவா பேசப்போனபோது, நடந்த நிகழ்வில் சொல்லப்பட்டது.

அக்காலத்தில் மூன்று லட்சம் ரூபாய்களுக்கும் அதிகமான செலவில், கட்டப்பட்ட தமிழ்ச்சங்க மண்டபம் முழுவதும் நிரம்பியிருந்தது மக்கள் பெருங்கூட்டம். அவ்விழாவைத் தொடங்கிவைத்த, மணிக்கொடி கு. சீனிவாசன், ‘பாரதியைப் பற்றிச் சரியாக விளக்கம் தரும் சக்தி, ஜீவாவிற்குத்தான் உண்டு. அவர் இவ்வாண்டு வந்திருப்பது இவ்விழாவை மேலும் சிறப்பிக்கிறது.’ என்று கூறிவிட்டுச் சொன்னார்.

‘பாரதி வாழ்ந்த காலம் 39 ஆண்டுகள்தான் என்றாலும், அவர் இறந்த பின் வாழும் காலம் அதைவிட மிகமிக நீண்டது. பாரதி உப்பு என்றால், ஜீவா அதில் ஊறிய ஊறுகாய்’ என்றும் சொன்னார்.

எத்துணை பெரிய, எளிய சத்தியத் தொடர் இது. மேற்கோளாகத் தொட்டுக் காட்டுவதற்காக அல்ல, தொடர்ந்து இயங்குவதற்கான உந்தாற்றலை, இந்த ஒப்புயர்வற்ற உண்மை ஒப்புமை எனக்குள்

மின்னலாய் இறங்கியது.

இத் தொடர் என்னை மீளவும் என் அன்னை சொன்ன சொலவடைக்குள் கொண்டுபோய் நிறைத்தது. 'உப்பைத் தொட்டுக் கொண்டு, உரலை விழுங்கலாம்.'

அப்படித்தான் தோழர் ஜீவா, உலகப் பேரிலக்கியங்களையெல்லாம் வாரி வாரி விழுங்கினார். உலக நாடுகளில் தோன்றிய ஒப்பற்ற சிந்தனையாளர்களையெல்லாம் பாரதிய ஒளியில் தரிசனப்படுத்தினார். செரிக்க முடியாத பல அரிய தத்துவங்களையும் புதிய சிந்தனைகளையும் அசுரப்பசியோடு விழுங்கி, செரித்துக் கொண்டு, தன் குருதி நாளங்களில் கலக்கவிட்டுப் பெருங்குரல் அவர் எடுத்து முழங்கியபோது, அது அப்படியே இலக்கு மாறாமல் எழுதப்படிக்கத் தெரியாத எல்லாத் தரப்பு மக்களையும் சென்று சேர்ந்ததே...

கஞ்சிக்கு உப்பே சேர்த்துக் கொள்ளாத நாம் எங்கே, கால்படிக்கும் மேலான உப்பைத் தொட்டு, ஒரு சட்டிக் கூழையோ, கஞ்சியையோ குடித்துவிட்டுப் பணி தொடரும் அந்தச் சாலைத் தொழிலாளிகள் எங்கே?

'அவர்கள் தொட்டுக் கொண்ட உப்பெல்லாம் வியர்வை ஆறாய் உருகி ஓடித்தான், இந்தச் சாலைகள் சிறந்தன' என்றார் அப்போது என் அப்பா.

***சித்திரச் சோலைகளே - உமை நன்கு***
***திருத்த இப்பாரினிலே - முன்னர்***
***எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ!***
***உங்கள் வேரினிலே.***

***மாமிகு பாதைகளே, உமை இப்பெரு***
***வைய மெலாம் வகுத்தார் - அவர்***
***ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட***
***அந்தியெலாம் உழைத்தார்.***

என்ற பாடல் அடிகள் இரத்தமும் சதையுமாய் இந்த நிகழ்வை அப்படியே பிரதிபலிப்பது உண்மை.

அப்படித்தானே, பாரதி அனைத்துத் துறைகளிலும் பாதை சமைத்தார். அவற்றை இன்னும் விரிவாக்க, ஜீவா உழைத்தார்.

அவர்கள் போட்ட பாதைகளில் இன்று பவனி போகிறவர்கள் எத்தனை பேர்?

ஊறுகாய் வாங்கக் கூட வழியில்லாமல், உப்பைத் தொட்டுக் கொண்டு, கால் வயிற்றுக் கஞ்சியை விழுங்கிய இந்நாட்டில், இயற்கை விளைவித்துக் கொடுக்கிற, உப்புக்குக் கூட வரி போட்டு, உள் நாட்டு உப்பைத் தொடவிடாமல் அதிகாரம் செலுத்தி அடக்கி ஆண்ட ஆங்கிலேயரை எதிர்த்து, அண்ணல் காந்தியடிகள் உப்புச் சத்தியாக்கிரகம் தொடங்குமுன்பே, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இசைமுழக்கம் இட்டவர், நம், பாரதி.

அந்த உப்பில் ஊறிய ஒப்பற்ற ஊறுகாய் ஜீவா.

அனேகமாய், தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் எல்லாரும் வினைத்தொகையை விளக்க, ஊறுகாயைத் தொடாமல் போகவே மாட்டார்கள்.

'வினைத்தொகை என்பது, பெயரெச்சத் தொடராகும். பெயரெச்சமாக வரும் வினையில், பெயரெச்சத்தின் விகுதியும், காலம் காட்டும் இடைநிலையும் கெட்டு, வினையின் முதல்நிலை மட்டும் நின்று அதனோடு பெயர்ச்சொல் தொடர்வதாகும்' என்று சொல்லிக் கொடுத்த இலக்கண உரலை விழுங்க, எடுத்துக்காட்டாகச் சொன்ன, ஊறுகாய்தான் இப்போதும் உதவுகிறது.

ஊறிய காய், ஊறுகின்ற காய், ஊறும் காய் என்று மூன்று காலத்துக்கும் பொருந்தும்படியாக, காலம் காட்டாமல், ஊறுதல் என்னும் தொழிலின் முதல் நிலையான ஊறு என்பது மட்டும் நின்று, காய் என்னும் பெயரொடு வந்து வினைத் தொகை ஆயிற்று என்று கூறிய விளக்கங்கள் ஊறுகாய்ச் சுவைக்குள் ஒடுங்கிப் போயிற்று. ஆனாலும், இதையே சூத்திரமாய்க் கொண்டு, எல்லாச்சொற்களுக்கும் மத்தியில் வினைத் தொகைச் சொற்களைப் பிழையில்லாமல் எடுத்துக் காட்ட இயல்பாய் முடிந்தது.

அதுபோல், முக்காலத்துக்கும் பொருந்துகின்ற பாரதியின் பாடல்களில் ஊறி, முக்காலத்திற்கும் உரிய வினைகளை (செயல்களை)ச் செய்வதற்கு உந்தாற்றல் தருகிற வினையைச் செய்தவரை, ஊறுகாய் என்று சொல்லியது எத்தனை பொருத்தம்?

ஊறுதல் இருக்கட்டும் அதனோடு ஒட்டிவரும் காயையும் நினைவிற் கொள்ள, தேங்காய் திருகிக்கொண்டே, என் தாயார் பள்ளிக்குப் போகுமுன்பு சொல்லிக் கொடுத்த விடுகதையை இங்கு எடுத்துக்காட்டுவது பொருத்தமாய் இருக்கும்.

பூவான பின் காயாவது எது?
காயான பின் பூவானது எது?

யோசிப்பதுபோல, பாவனை காட்டிக் கொண்டு, அம்மாவிடம் போய் வாயைத் திறப்பேன். கைப்பிடி தேங்காய்ப்பூவை அள்ளி, ஒரு துளி சிந்தாமல் என் வாயில் இட்டபடி அம்மா சொல்லுவார், 'அதில் ஒன்னு இதுதான் கண்ணு.'

'எது?'

'காயான பின் பூவானது. தேங்காய் - திருகினால் தேங்காய்ப் பூ.'

'அப்போ, இன்னொன்னு?'

'அது மோர்ச் சோறுக்குத் தொட்டுக்கொள்வது. ஊறுகாய்.'

'எப்படி?'

'எலுமிச்சம்பழத்தை நறுக்கி உப்பில் ஊறப்போட்டால் ஊறுகாய். ஆக, எலுமிச்சை - பழம். அது மீண்டும் காயாக மாறுகிறபோது -ஊறுகாய்.'

அம்மாவின் விளக்கத்தை மேலும் செறிவாக்கி, நான் பணிக்குப் போன காலத்தில், சூழலியலைச் சொல்லி விளக்கினார், இயற்கை ஞானி கோ. நம்மாழ்வார்.

'பிஞ்சு, காய், கடந்து அது கனிந்தால் பழம். அதற்கு மேல் என்னாகும்? அழுகிப் போகும். அதை அழுக விடாமல் தடுப்பது, உப்பு.'

இவற்றையெல்லாம் அப்படியே கொண்டுவந்து பாரதி உப்பிலும், ஜீவாக் காயிலும் சேர்த்துப் பாருங்கள்.

காலத்தால் அழுகிப் போன கருத்துக்களை, அடியோடு போக்கி, காலகாலத்திற்கும் நிலைத்துநிற்கிற கருத்துக்களைப் பாடல்களாய் இசைத்துப் பாரதி பாடியிருக்கிறார் என்றால், அதனைப் பயனுள்ள வகையில், பட்டிதொட்டி எங்கும் பரப்பி, பாரதி போல் ஜீவாவும் நிற்கிறாரே.

ஊறுகாய் என்று சொல்லில் உப்பு எப்பொழுதும் மறைந்து நிற்பதுபோல, ஜீவாவின் உள்ளத்திற்குள் எப்போதும் நிறைந்திருப்பவர் பாரதி தானே. எண்ணம், எழுத்து, பேச்சு, இயக்கம் எல்லாமும் அவர்க்குப் பாரதி தானே.

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே - என்பது பழமொழி.

உப்பிட்டவரை உள்ளளவும் நினை - என்பது அறமொழி.

உப்பு, பாரதி அதனை உள்ளங்களில் இட்டவர் ஜீவா.

வெறும் உப்பைத் தின்ன முடியாது. உப்பில்லாமல் உணவை உண்ண முடியாது. பாரதி வெறும் உப்பு அல்லர். உடல் காக்கும் உணவுகளில் எல்லாம் உப்பு மறைந்தும், சரியான அளவில் நிறைந்தும் இருப்பதுபோல, உயிர் வளர்க்கும் உணர்வுகளில் நிறைந்தவர் பாரதி. சகிக்க முடியாதவைகளும், ஒதுக்க முடியாதவைகளுமாய் நிரம்பிக் கிடக்கும் சமூகக் கொடுமைகளுக்கு மத்தியில், அவற்றை எதிர்கொண்டு போராட, மாற்ற, அமுதம் ஒத்த பாரதியின் எழுத்துக்கள் இல்லையென்றால், ஜீவா எப்படி இயங்கியிருக்க முடியும்?

உப்பு, பாரதி என்றால், அதனைச் சரியாகவும் முறையாகவும் இட்டு, உலகத்தமிழர்களுக்கு உணர்வு ஊட்டி ஊறுகாய் ஜீவா. நம்மால் உப்பை மறக்க முடியாது. உப்பிட்டவரை நாம் மறக்கக் கூடாது.

அளவில் குறைந்தாலும், மிகுந்தாலும் உப்பை நாக்கு ஏற்காது. ஆனால், அளவு எவ்வளவு என்று எப்படித் தெரிந்து கொள்வது?

உழைக்காமல் நிழலில் ஒதுங்கியிருப்பவர்களுக்கு உப்பு நோய் தரும். வியர்வை கொட்ட வேலை செய்து உழைக்கும் மக்களுக்கு, உப்பு உயிர் பேணும்.




அலைகடலில் விளையும் வெள்ளைப் பூ உப்பு. அதுபோல் தமிழ்க்கடலில் எழுந்த உயிர்ப்பூ பாரதி.

பாரதியும் ஜீவாவும் கலந்து பரிணமித்து ஓங்கும் இந்த உப்பு-ஊறுகாய் ஒப்புமையிலேயே, இவ்வளவு இருக்கும் என்றால், பாரதி யாகவே மாறி, முழங்கிய ஜீவாவின் தமிழுக்குள் எவ்வளவு இருக் கும்?

61 ஆண்டுகளுக்கு முன், (இப்போது சரியாக மணிவிழா ஆண்டு) பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தில் ஜீவா பேசியது எப்படி இருந்திருக்கும்?

அவர் என்னதான் பேசியிருப்பார்?

பசியெடுத்தவர்களுக்குத்தான் ருசியின் நுட்பம் புரியும், தாகம் கொண்டவர்களுக்குத்தான் தேடல் குணம் இருக்கும். அளக்கு மீறிய ஆடம்பரம் காட்டி, இலை முழுக்கப் பண்டங்களை நிரப்பி, ஓரத்தில் வைக்கும் ஊறுகாய் போல, இன்றைக்குப் பாரதியையும், ஜீவாவையும் ஆக்கிவிட்டார்களே என்று ஆத்திரம் வருகிறது.

ஒருகாலத்தில் பாரதி, ஜீவா, பட்டுக்கோட்டையார் பாடல்களைப் பாடி, பாமரமக்களின் பாராட்டுக்களைப் பெற்று வளர்ந்த பட்டி மன்ற மேதைகள் இன்று நகைச்சுவையே நறுஞ்சுவையென்று கிட்டத்தட்ட இவற்றை விட்டே விட்டார்கள்.

ஆனாலும், பாரதியை, ஜீவாவைப் பேசாமல் இவர்களால் இருக்க முடியாது என்பதே வரலாறு. என்றோ பசித்து உண்ட உணவின் சாரமாய் உள்ளிறங்கிய உப்பு எனும் நன்றியுணர்வு கொஞ்சமாவது வெளிப்பட்டுத்தானே தீரும்?

கால் படாமல் சொகுசுக் காரில் குளுமை நிரப்பிப் பறக்கும் எவரும், காலில் செருப்பின்றி, கொளுத்தும் வெயிலில், உருகிய தார் ஊற்றிச் சாலை சமைத்த தோழர்களை நினைப்பார்களா?

பசியே இல்லாமல் பணப்பெருமை காட்ட, வாங்கிப் பரப்பிய உணவுப் பண்டங்களைப் பயன் கொள்ளாமல் குப்பைக்குப் போடும் பலருக்கு, பசிக்குச் சமைக்கும் சமையல் தொழிலாளர்கள் பசிக் கொடுமை தெரியுமா?

***எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை***
***செய்ந்நன்றி கொன்ற மகற்கு***

என்றார் திருவள்ளுவர்.

பெற்றெடுத்த மண்ணின் பெருமை காப்பதற்கு உற்ற பணிகளின் மூலம் நன்றிக்கடப்பாட்டைச் செலுத்திவிட்டவர்கள், பாரதியும் ஜீவாவும்.

தான் பட்டினி கிடந்து தரணியின் பட்டினியைப் போக்கப் பாடியவர், பாரதி. அவர் பாடல்களை மேல் விளக்கம் கொடுத்துப் பாடு பட்ட பாட்டாளி ஜீவா.

பாரதி மறைந்து நூற்றாண்டு போயிற்று. ஜீவா மறைந்து 68 ஆண்டுகள் ஆகின்றன.

இருவரும் தமிழாய் இன்னும் இருக்கிறார்கள். எழுத்தாய் நிறைந்த இவர்களின் ஆக்கங்களை எடுத்துப் படிக்கும்போது, முழுதாய், இவர்கள் மறுபடி பிறக்கிறார்கள். நம்மையும் பிறப்பிக்கிறார்கள்.



sethupathi@thaiveedu.com

# கம்பனின் கருவூலம் திறந்து...

**03**

- மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா

சென்ற இதழில் கம்பராமாயணம், பாலகாண்டத்தின் முதல் படலமாகிய ஆற்றுப் படலத்தில் சரயூ நதியைக் கம்பர் வருணனை செய்து பாடிய 20 பாடல்களில் மிகச் சிறந்த பாடல்கள் சிலவற்றை எடுத்து அவற்றில் கரைபுரண்ட கம்பரின் கவி நயமென்னும் வெள்ளத்தில் மூழ்கி நீந்திக் களித்தோம். இக்கட்டுரையில் கம்பராமாயணம், பாலகாண்டத்தின் இரண்டாவது படலமாகிய நாட்டுப்படலத்தில் சிறிது நடை போட்டு உலாவருவோம்.

கோசல நாட்டு வளங்களை வருணித்துக் கூறுவது நாட்டுப் படலம். அறுபது பாடல்களில் கோசல நாட்டின் செழுமையையும்

**கம்பராமாயணத்தின் கதைச் சாரம் வடமொழி நூலைத் தழுவியதாக இருந்தாலும் அக்காப்பியத்தின் பண்புகள் தமிழர் நாட்டையும், தமிழர் பண்பாட்டையுமே வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதைக் காணலாம்.**

வளமையையும் கம்பர் பாடிவைத்துள்ளார். ஒரு நாட்டினது சிறப்பு அந்நாட்டினுடைய வளங்களிலேதான் பெரிதும் தங்கியிருக்கிறது. ஒரு நாடு தனது நாட்டு மக்களுக்கு எந்தக் குறையுமில்லாது உணவு வழங்கக் கூடிய வகையில் தன்னிறைவு கொண்டிருக்குமானால் அந்த நாட்டை விடச் சிறந்ததொரு நாடு வேறு இருக்க முடியாது. அத்தகைய தன்னிறைவைக் கொடுக்கக் கூடிய மருத நில வளத்தினை நாட்டுப் படலத்தில் கம்பர் மிக அருமையாகவே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

*வரம்பெலாம் முத்தந் தத்து மடையெலாம் பணில மாநீர்க்*
*குரம்பெலாஞ் செம்பொன் மேதிக் குழியெலாங் கழுநீர்க் கொள்ளை*
*பரம்பெலாம் பவளஞ் சாலிப் பரப்பெலா மன்னம் பாங்கர்க்*
*கரும்பெலாஞ் செந்தேன் சந்தக் காவெலங் களிவண் டீட்டம்.*

- பாலகாண்டம்: 34

வரம்புகளிலெல்லாம் முத்துகளும், நீர் பெருகிப் பாயும் மதகுகளிலெல்லாம் சங்குகளும், பெரும் நீர்ப் பெருக்குகளையுடைய வாய்க்கால்களின் கரைகளிலெல்லாம் செவ்விய பொற்கட்டிகளும் எருமை மாடுகள் வீழ்ந்து உழக்குகின்ற நீர்க் குழிகளிலெல்லாம் செங்கழுநீர் மலர்க் குவியல்களும், பரம்படித்துச் சமன் செய்யப்பட்ட இடங்களிலெல்லாம் பவளங்களும், செந்நெற் பயிர் பரந்து வளர்ந்துள்ள இடங்களிலெல்லாம் அன்னப் பறவைகளும், பக்கங்களிலுள்ள கரும்புகளிலெல்லாம் செந்நிறத் தேன் பெருக்கும், அழகிய சோலைகளிலெல்லாம் மது மயக்கம் கொண்ட வண்டுகளின் கூட்டங்களுமாக அந்த மருத நிலம் பொலிவுற்றுக் காணப்பட்ட காட்சியைக் கோசல நாட்டு மருதநிலத்தின் செழிப்புக்கான குறியீடுகளாகக் கம்பர் வருணித்திருப்பது அவரின் கவி நயத்தைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

பின்வரும் கவிதையில் மருதநிலச் சிறப்பை அரசவையில் நடைபெறுகின்ற நடன நிகழ்ச்சியாக வருணித்துப் பாடியிருக்கின்ற கம்பரின் கவிதை நயத்தை அறிந்து போற்றாதார் யாருமில்லை எனலாம். மிகவும் புதுமையான கற்பனை வளம் கொண்டு அமைந்துள்ள இப்பாடல் கம்பர் படைத்த முத்தான பாடல்களில் சிறந்ததொரு முத்தெனலாம்.

*தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்*
*கொண்டல்கள் முழவி னோங்கக் குவளைகண் விழித்து நோக்கத்*
*தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்*
*வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ.*

- பாலகாண்டம்: 36

அரசவையிலே மயில்களாகிய நாட்டியப் பெண்கள் நடனம் செய்யவும், தாமரைக் கொடிகளாகிய மகளிர் தாமரை மலர்களாகிய விளக்குகளைத் தமது கைகளில் ஏந்தி நிற்கவும், கருமேகங்களின் முழக்கங்கள் மத்தளம் போல் ஒலிக்கவும், தெளிந்த நீர் நிலைகளில் தோன்றுகின்ற அலைகள் அரங்கத்தின் திரைச் சீலைகள் போன்று விளங்கவும், தேனையொத்த இனிமையுடன் மகர யாழின் இசைகளையொத்து வண்டுகள் இனிமையாகப் பாடவும், பார்வையாளர்களைப் போலக் குவளை மலர்கள் கண்களை மலர விழித்துப் பார்க்கவும் மருதம் என்கின்ற அரசன் பெருஞ்சிறப்போடு அமர்ந்திருக்கின்றான் என மருத நிலத்தை உருவகப்படுத்தி காட்சிப்படுத்தியுள்ளார் கம்பர். பார்வையாளர் நிறைந்த அவையில் முழவம் கொட்டவும், யாழ் இசைக்கவும், திரைகளை விலக்கி நடன மாதர்கள் நடனமாடுகையில் மகளிர் ஒளிவிளக்குகளை ஏந்தி நிற்கின்ற காட்சி மனக்கண்ணில் விரிகின்றது.

அடுத்து வரும் பாடல் கம்பனின் கவி நயத்துக்குச் மேலுமொரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

*ஆலைவாய்க் கரும்பின் தேனும் அரிதலைப் பாளைத் தேனும்*
*சோலைவாய்க் கனியின் தேனும் தொடையிழி பிறாலின் தேனும்*
*மாலைவா யுகுத்த தேனும் வரம்பிகந் தோடி வங்க*
*வேலைவாய் மடுப்ப வுண்டு மீனெலெங் களிக்கு மாதோ.*

- பாலகாண்டம்: 41

கரும்பு ஆலைகளிலிருந்து வெளியேறும் தேன் போன்ற இனிய சாறும், தெங்கு முதலியவற்றின் அரிந்த நுனிகளையுடைய பாளை யிலிருந்து சொரியும் தேனினிய கள்ளும், கனிச் சோலைகளில் பழுத்த பழங்களின் சாறும், தேன் கூட்டிலிருந்து வழிகிற தேனும், பூமாலைகளிலிருந்து வெளியேறும் தேனும், எல்லாம் சேர்ந்து எல் லையில்லாமல் பெருகிச் சென்று கடலில் போய்ச் சேரக் கடலில் வாழ்கின்ற மீன்கள் எல்லாம் அத்தேனை உண்டு களிப்படைகின் றன என்பது இப்பாடலின் கருத்து. அந்நாட்டிலிருந்து பெருகிச் சென்ற தேன் கடலில் போய் விழ, அதனால் உவர்க் கடல் இனிய தேன் கடலாக மாற அதனை உண்டு மீன்கள் களிப்புக் கொள் ளும் என்னும் வருணனையால், இந்த நாட்டிலுள்ள செல்வங்களை வறிய பிறநாடுகளும் பெற்றுக் களிப்படையும் என்ற பொருளில் கம்பர் வெளிப்படுத்தியுள்ளார். இப்பாடலில் வேற்றுப்பொருள் வைப்பணி என்னும் அணிநயம் பொருந்தியிருப்பது குறிப்பிடத் தக்கது.

கோசல நாட்டு விவசாயிகள் பெற்றடைகின்ற பயன்களைப் பற்றி எடுத்துரைக்கும் கம்பரது பாடல்கள் அந்நாட்டு மருத நில வளத் தைப் போலவே சிறந்த அணிநய வளங்கள் மிக்கவை. பின்வரும்



பாடல் அவரது சொல்லாட்சித் திறனைப் பறைசாற்றுகின்ற பாடல் களில் ஒன்று.

*கதிர்படு வயலி லுள்ள கடிகமழ் பொழிலி லுள்ள*
*முதிர்படு மரத்தி லுள்ள முதிரைகள் புறவி லுள்ள*
*பதிபடு கொடியி லுள்ள படிவளர் குழியி லுள்ள*
*மதுவள மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார்.*

- பாலகாண்டம்: 53

வயலில் கதிராக விளைகின்ற தானியங்களையும், நறுமணம் வீசு கின்ற சோலைகளில் இருக்கும் முதிர்ந்த பல மரங்களிலுள்ள பழங்களையும், கொல்லைகளில் விளைகின்ற பருப்பு வகைகளை யும், பதிக்கப்பட்ட கொடிகளிலிருந்து கிடைக்கின்ற உணவுப் பொருட்களையும், நிலத்தின் கீழ் விளைந்து கிடக்கின்ற கிழங்கு வகைகள், இஞ்சி, மஞ்சள் போன்றவைகளையும் வளப்பமுள்ள மலர்களிலிருந்து தேனைப் பெறுகின்ற வண்டுகளைப் போல உழ வர்கள் எடுத்துக்கொள்வார்கள் என்று இப்பாடலில் கம்பர் மிகச் சுவைபடக் கூறியுள்ளார்.

*முட்டில் அட்டில் முழங்குற வாக்கிய*
*நெட்டு உலைக்கழு நீர்நெடு நீத்தந்தான்*
*பட்ட மென்கமு கோங்கு படப்பைபோல்*
*நட்ட செந்நெலி னாறு வளர்க்குமே.*

- பாலகாண்டம்: 58

குறைபாடில்லாத சமையல் வீட்டிலே உலையில் சேர்ப்பதற்காக அரிசி கழுவிய கழுநீர் வெள்ளமானது ஓசையொலிக்குமாறு கீழே வார்க்கப்பட அது நீர்க்கரைகளில் கமுக மரங்கள் ஓங்கி வளர்ந் துள்ள சோலைகளினூடாகப் பாய்ந்து வயலில் நடப்பெற்ற செந் நெல் நாற்றுகளை வளர்க்கும் என்பது இப்பாடலின் பொருள். கீழே வார்க்கப்பட்ட கழுநீர் வெள்ளத்தின் மிகுதியை இவ்வாறு கம்பர் வர்ணித்துள்ளது அந்நாட்டின் செழிப்பைக் காட்டுவதோடு அந்நாட்டுக்கு வந்த விருந்தினரை உபசரிக்கும் அளவிற்கு அங்கு அன்ன சாலைகள் இருந்தன என்பதையும் குறிப்பால் உணர்த்துவதாக உள்ளது.

கோசல நாட்டில் ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் கல்வி கேள் வியில் சிறந்து விளங்கினார்கள் என்பதைக் குறித்துக் கம்பர் பாடி யுள்ள பாடல் சிறப்பானது. கம்பராமாயணத்தின் கதைச் சாரம் வடமொழி நூலைத் தழுவியதாக இருந்தாலும் அக்காப்பியத்தின் பண்புகள் தமிழர் நாட்டையும், தமிழர் பண்பாட்டையுமே வெளிப் படுத்துவதாக அமைந்துள்ளதைக் காணலாம்.

*பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்*
*பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்*
*வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்*
*விருந்து மன்றி விளைவன யாவையே*

- பாலகாண்டம்: 36

குறிப்பறிந்து விருந்தினரை உபசரித்தல், ஈகை ஆகிய செயல்க ளுக்கு இன்றியமையாதனவாகிய கல்வியும் செல்வமும் அந்நாட்டு மகளிர்க்கு நிரம்பியிருத்தலால் அம்மகளிர் ஈகை, விருந்தோம்பல் என்பவற்றை எப்போதும் மேற்கொண்டனர் என்பது கருத்து. இத னால் அக்காலத்தில் பெண்களும் கல்வியறிவில் சிறந்திருந்திருந் தனர் என்பதை அறிய முடிகிறது.

ஒரு நாட்டில் நல்லாட்சி நிலவுமானால் நிச்சயமாக அந்நாட்டில் நீதியும், அறமும், அமைதியும் நிலவும் என்பதைக் கோசல நாட் டினை எடுத்துக்காட்டாகக் கொண்டு கம்பர் காட்டியிருப்பது சிறப் பானது.

*கூற்ற மில்லையோர் குற்ற மிலாமையால்*
*சீற்ற மில்லைதம் சிந்தையிற் செம்மையால்*
*ஆற்ற நல்லற மல்லதி லாமையால்*
*ஏற்ற மன்றி யிழிதக வில்லையே.*

- பாலகாண்டம்: 39

குற்றச் செயல்கள் இல்லாததால் அங்கே உயிரைப் பறித்துக் கொள்வது போன்ற கொடிய தண்டனைகளுக்கு இடமில்லை. தமது மனத்தில் நேர்மை, நீதி ஆகிய குணங்கள் இருத்தலால் அங்கே சினம் விளைவதில்லை. சிறந்த அறச் செயல்களைச் செய்வதன்றி வேறு செயல்கள் இல்லாததால் அந்நாட்டவர்க்கு ஏற் றமே அல்லாமல் இழிவு ஒருபோதும் ஏற்படுவதில்லை என்று நல் லாட்சியின் பயனை எடுத்துக் கூறுவது சிறப்பானது. இதே போன்று இன்னுமொரு பாடல்,

*வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்*
*திண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்*
*உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்*
*ஒண்மை யில்லைபல் கேள்வி யோங்கலால்*

- பாலகாண்டம்: 85

இந்நாட்டிலே வறுமை இல்லாததால் கொடைச் சிறப்புத் தெரிவ தில்லை. நாட்டுக்கு எதிராகப் போர் தொடுப்பவர் இல்லாததால் வீரத்தின் சிறப்புத் தெரிவதில்லை. பொய்யுரைப்போர் இல்லாத

தால் உண்மையின் சிறப்புத் தெரிவதில்லை. பல்வகையான கலைகள் ஓங்கி வளர்ந்திருப்பதால் அறிவுடமை குறித்து மேம்ப டக் கூறப்படுவதில்லை என்பது இப்பாடலின் பொருள். கல்வி, தறுகண்மை, இசை, கொடை எனப் பெருமிதத்திற்கு நான்கு கார ணங்களைக் கூறுவார் தொல்காப்பியர். இந்நால்வகைப் பெருமி தங்களும் இந்நாட்டவர்க்கு உள்ளன என்பதைக் கம்பர் எதிர்மறை யாக எடுத்துரைத்திருப்பது ஒரு புதுவகையான உத்தி எனலாம்.

நாட்டின் தேவைக்கு மேலாக உணவுப் பொருள்களின் விளைச்சல் அபரிதமாகக் காணப்பட்டதால் அவை வண்டிகளில் ஏற்றப்பட்டு பிற இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்ற காட்சியைக் கம்பர் வருணணை செய்யும் பான்மை சுவையானது.

*எள்ளும் ஏனலும் இறுங்கும் சாமையும்*
*கொள்ளும் கொள்ளையிற் கொணரும் பண்டியும்*
*அள்ளல் ஓங்களத்து அமுதின் பண்டியும்*
*தள்ளு நீர்மையிற் தலைம யங்குமே.*

- பாலகாண்டம்: 86

எள்ளையும், செந்தினையையும், இறுங்கையும், சாமையையும் மிகு தியாகக் கொண்டு வருகின்ற வண்டிகளும், உப்பளத்திலிருந்து உப்பைக் கொண்டு வரும் வண்டிகளும் மிக நெருக்கமாகப் போகின்றபோது ஒன்றோடொன்று கலந்து மயங்குகின்றன என்பது இப்பாடலின் கருத்து.

குறிஞ்சி நிலத்தின் விளைபொருளாகிய செந்தினை முதலியனவும், நெய்தல் நிலத்துக்குரிய விளைபொருளான உப்பும் மிகுதியாக வண்டிகளில் ஏற்றப்பட்டு இந்நாட்டுக்குக் கொண்டு வரப்படுகை யில் அவ்வண்டிகள் ஒன்றோடொன்று கலக்கின்றன எனக் கூறுவது எண்ணிக்கையற்ற வண்டிகளில் அவை ஏற்றிவரப்படுகின்றன என் பதை உணர்த்துவதாகும்.

*நென்மலை யல்லன நிரைவரு தரளம்*
*சொன்மலை யல்லன தொடுகடல் அமுதம்*
*நன்மலை யல்லன நதிதரு நிதியம்*
*பொன்மலை யல்லன மணிபடு புளினம்.*

- பாலகாண்டம்: 79

நெற்குவியல் இல்லாத இடங்களில் முத்துக் குவியல்களும், முத் துக் குவியல்கள் இல்லாத இடத்தில் உப்புக் குவியல்களும், அவை இல்லாத இடங்களில் பொன் முதலிய நிதியங்களும், இந் நிதிக் குவையம் இல்லாத இடத்தில் இரத்தினங்கள் பொருந்திய மேடுகளுமாக அந்நாட்டில் எங்கும் பல்வகையான வளங்கள் நிரம்பியுள்ளதாகக் கம்பர் வடித்துள்ள இப்பாடல் பொருள் நயத் துடன் ஓசைநயமும் மிக்கு இருப்பதைக் காணலாம்.

நாட்டுப் படலத்தில் கோசல நாட்டின் பல்வேறு வளங்களைப் பற்றி மட்டுமல்லாது அங்குள்ள மக்களின் செழிப்பான பண்பாடு கொண்ட வாழ்க்கை முறை பற்றியும் கம்பர் பாடியுள்ளார். மகளிர் பந்தடித்து விளையாடும் சந்தனச் சோலைகளைப் பற்றியும் ஆட வர்கள் வில்வித்தை முதலிய கலைகளைப் பயில்கின்ற கலைக் கூடங்கள் பற்றியும், ஆடல் பாடல்களோடு கூடிய திருவிழாக்கள் பற்றியும், பறை, தண்ணுமை போன்ற இசைக்கருவிகள் பற்றியும் நாட்டுப் படலத்தில் எடுத்துக் கூறும் கம்பரது பாடல்கள் பல்வேறு அணிநயங்களுடன் மிளிர்கின்றன. கோசல நாடு, அயோத்தி போன்ற இடங்களைக் கம்பர் வர்ணிக்கும்போது தமிழ்நாட்டு இயற்கை வளங்களையும், செல்வச் செழிப்பையும், மக்களின் வாழ்க்கை முறைகளையும் வெளிப்படுத்துவதாகவே தெரிகிறது. இதுவரை நாட்டுப் படலத்தில் கோசல நாட்டிலே ஒரு சுற்றுலாவே நடத்திய இன்ப அனுபவத்துடன் அடுத்த இதழில் நகரப் படலத் துக்குள் நுழைந்து அயோத்தி நகரின் அழகைக் கண்டு இன்புறு வோம்.

(தொடரும்...)



shanmugarajah@thaiveedu.com



# தொன்மையைத் தேடி ஆதித் தமிழர் திணை வழிக் குடிகள் 16

பகுதி - V

- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தொல்காப்பியம் பொருளதிகாரம், பாடல் பாடும் புலவனுக்காக வகுக்கப்பட்ட 'கவிதை மரபாகும்' தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக் களையே முன்னிறுத்தி அந்'நூற்பாக்களில் பயின்றுவரும்' கவிதை மரபுகளிலிருந்து, அக்காலச் சமூகம், அரச உருவாக்கத்தின் அடிப்படை, வளர்ச்சி, அரச விரிவாக்கம் முதலாய தகவல்களைப் பிரித்தெடுத்து 'ஆதித் தமிழர், திணைவழிக் குடிகள், திணை வழியாகவே அரசு தென்னாட்டில் உருவாகியிருக்கிறது, விரிவாகியிருக்கிறது' என்பதை நிறுவுவது இவ் ஆய்வின் கருதுகோளாகும்.

**சென்ற இதழில்...**

பண்டைய வேளிர் குலத் தலைவர்களுள் முன்னிலையில் வைத்து எண்ணத்தக்கவனும், தமிழ் நாட்டுக் காலக் கணிப்பிற்கு முக்கிய புறச்சான்றாக இன்று கிடைத்துள்ள அசோகன் கிர்னார் (Girnar) இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டவனுமான அதியமான் நெடுமான் அஞ்சி பற்றியும் அவனோடு தொடர்பு டைய அதியமான் நெடுமிடல் அஞ்சி, மலையமான் திருமுடிக் காரி, வல்வில் ஓரி, பெருஞ்சேரல் இரும்பொறை, இன்னும் இவர் களை ஒத்த பிற அரசர்கள், குறுநிலமன்னர்கள், புலவர்கள் ஆகியோர் பற்றியும் சங்க காலத்தை நிர்ணயிக்கக் கூடிய தகவல்கள் ஆராயப்பட்டன.

அவ்வாறே, சங்க காலப் பாண்டியர்களுள் பெருவீரனான தலையா லங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், அவனோடு தொடர்புடையவர்களான சேரமான் யானைக்கட்சேய் மாந்த ரஞ்சேரல் இரும்பொறை, சோழன் கிள்ளிவளவன் முதலிய மன்னர் கள், அள்ளூர் நன்முல்லையார், ஆலங்குடி வங்கனார், ஆலம் பேரி சாத்தனார், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் முதலிய புலவர்கள் பற்றிய, சங்க காலத்தை நிர்ணயிக்கக் கூடிய தகவல் கள் ஆராயப்பட்டன.

மொத்தம் - 54 அரசர்களும் புலவர்களும் இவ்விரு வேந்தர்களுட னும் தொடர்புடையவர்களாக ஏறக்குறையச் சம காலத்தவர்களாக அறியப்படுகிறார்கள்.

**இவ்விதழில்...**

தமிழ் நாட்டு மன்னர் குடிகளில் பாண்டியர் பழமையானவர்கள், அவர்களுக்கு நீண்ட வரலாறு உண்டு. பாண்டியர் வரலாற்றை நாம் முற்காலப் பாண்டியர், சங்ககாலப் பாண்டியர், பிற்காலப் பாண்டியர் என மூன்றாகப் பிரித்துக் கொள்ளலாம். பாண்டியர் என்னும் குலப் பெயரால் அறியப்பட்ட இவர்கள், தம் பெயருடன் மாறன், வழுதி, சடையவர்மன், மாறவர்மன், செழியன், முது குடுமி என்னும் பெயர் ஒட்டுக்களை இணைத்துக் கொள்வார்கள்.

சங்கப் பாடல்களின் வழி, எக்குடி மன்னர்களையும் வரிசைக் கிர மமாக எழுதுவது அத்துணை இலகுவானது அல்ல. பல்வேறு புல வர்களால் பல்வேறு காலப்பகுதியில் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பே சங்க இலக்கியம். மொழி அடிப்படையில் ஆராயுமி டத்து, சில சங்கப் பாடல்கள், தொல்காப்பியர் காலத்துக்கு முன் னவையாகக் காணப்படுகின்றன என்பது தேவநேயப் பாவாணர் கருத்து.


கன்னியாகுமரிக்குத் தெற்கே, தென் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாடு விரிந்து பரந்திருந்ததாகவும் கடல்கோள் காரணமாக அந் நிலப்பரப்பு கடலினால் கொள்ளப்பட்டது என்றும் அறிகிறோம். இதனைச் சிலப்பதிகாரம் பதிவு செய்திருக்கிறது.

*பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்*
*குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள*

- சிலம்பு: காடுகாண் காதை, அடி 19-20

பாண்டியர் மீனக் கொடியையும் வேப்பம் மாலையையும் தமக்கு உரிமை கொண்டவர்கள்.

**முற்காலப் பாண்டியர்கள்:**
ஏறக்குறைய பொ.ஊ.மு.(கி.மு.) 350 பொ.ஊ.மு. 290ம் ஆண்டள வில் கிரேக்கப் பயணியும் புவியியலாளருமான மெகஸ்தெனிஸ் என்பவர் சந்திரகுப்த மௌரியனிடம் தூதுவராக அனுப்பிவைக்கப் பட்டிருந்தார். இவர் பாண்டியரின் தலைநகரான மதுரைக்கும் சென்றதாக அறியப்படுகிறது.



**முற்காலப் பாண்டியர் கொடி**

வடிவம்பலம் நின்ற பாண்டியன் (நிலந்தரு திருவின் பாண்டியன்)

என்னும் மன்னன் சங்க காலத்திற்கு முன் ஆண்டதாகவும், இவன், பஃறுளி என்னும் ஆற்றைக் கடல்கோளுக்கு முன் உருவாக்கிக் கடல் தெய்வத்திற்கு விழா எடுத்ததாகவும் டாக்டர். ந. க. மங்களமுருகேசன் (பாண்டியர் வரலாறு பக்.25) குறிப்பிடுகிறார். இவன் காலத்தில் ஏற்பட்ட கடல்கோள் காரணமாகப் பாண்டிய நாட்டின் பெரும் பகுதியாகிய பஃறுளி ஆறும், பன்மலை அடுக்காகிய குமரிக்கோடும் அழிவுற, பாண்டியன் தன் நாட்டிற்கு வடக்கே சென்று தன் அரசை நிறுவினான் என்று அறியப்படுகிறது.

இதனால், இவன் நிலந்தரு திருவின் பாண்டியன் என்று அழைக்கப்பட்டான். தொல்காப்பியம் 'நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து' அரங்கேற்றப்பட்டது என்னும் அரிய செய்தியை, பனம்பாயிரனார் தொல்காப்பியப் பொதுப் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

*வடவேங்கடம் தென்குமரி*
*ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து*
*வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்*
*எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி*
*செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு*
*முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்*
*புலம் தொகுத் தோனே போக்கறு பனுவல்*
*நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து*
*அறங்கறை நாவின் நான்மறை முற்றிய*
*அதங்கோட்டு ஆசாற்கு அரில்தபத் தெரிந்து*
*மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி*
*மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த*
*தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றிப்*
*பல்புகழ் நிறுத்த படிமை யோனே.*

- தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம்

இன்று எமக்குக் கிடைத்திருக்கும் இலக்கண, இலக்கிய நூல்கள் அனைத்துக்கும் ஆதியான தொல்காப்பியம் நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்தில் அவனது அரசவையில் அரங்கேறியிருப்பது ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, தொல்காப்பியம் அரங்கேறிய காலத்தில், பொ.ஊ.மு. 711ம் ஆண்டளவில், தமிழ் நாட்டில் நிலைபெற்றதொரு பாண்டிய அரசு இருந்திருக்கிறது என்பது தெளிவு.

முடியுடை அரசுகளில் மூத்த குடி பாண்டியர் குடி என்பது ஆய்வாளர் கருத்து. பாண்டியருடைய வரலாறு ஏறக்குறைய பொ.ஊ.மு. 10ம் நூற்றாண்டளவுப் பழமை பெற்றது என்று கூறுவதில் தப்பில்லை.

நிலந்தரு திருவிற் பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்கும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கும் முற்பட்டவன் என்பது நெட்டிம்மையார், முதுகுடுமிப் பெருவழுதியை, 'நெடியோனுக்கு உரிய பஃறுளி ஆற்று மணலினும் பல்லாண்டு வாழ்க' என்று வாழ்த்தியிருப்பது கொண்டும் அறியப்படும்.

*'எங்கோ, வாழிய குடுமி! தங்கோச்*
*செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த,*
*முந்நீர் விழவின், நெடியோன்*
*நன்னிப் பஃறுளி மணலினும் பலவே!*

- புறநானூறு 9

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனை மாங்குடி மருதனார், 'பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்' என்று, மதுரைக் காஞ்சியில் (61) கூறுவதிலிருந்தும் அறியப்படும். இம்மன்னன் 24 ஆண்டுகள் ஆட்சி செய்ததாக உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் கூறுகிறார்.

இறையனார் களவியலுரையின்படி கடல்கோள் நடந்த காலத்தில் கபாடபுரத்தை ஆண்டவன் முடத்திருமாறன். கபாடபுரம் கடல் கொண்டதன் மேல் முடத்திருமாறன் மதுரையில் தலைநகரை அமைத்துக் கொண்டான் என்று இறையனார் களவியலுரை கூறுகிறது. இடைச் சங்கம் இருந்தார்களில் தொல்காப்பியரும் ஒருவர். எனவே இடைச் சங்ககால இறுதி பொ.ஊ.மு. 8-7ம் நூற்றாண்டளவில் என்று கொள்வதில் தப்பில்லை.

பாண்டியருக்கு மிக நீண்ட வரலாறு இருந்தாலும் பாண்டிய மன்னர்களில் ஒரு சிலரது வரலாறே எழுதக்கூடிய அளவு தகவல்களைக் கொண்டிருக்கிறது.

**இவனால் அறியப்பட்டவர்கள்:**

1. தொல்காப்பியர், 2. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பவன் அடுத்ததாகக் குறிப்பிடத்தக்க பாண்டிய மன்னன் ஆவான். இவன், குடுமி ('தண்டா ஈகைத் தகை மாண் குடுமி' - புறம் 6) என்றும், குடுமிக் கோமான் ('குடுமிக் கோமான் கண்டு' - புறம் 64) என்றும், பல்யாகசாலை முதுகுடுமி ('பல்யாகசாலை முதுகுடுமியின் நல்வேள்வி' - மதுரைக்காஞ்சி 759) என்றும் பலவாறு சங்க இலக்கியங்களில் அறியப்படுகிறான்.

இவன் குடுமியான்மலை என்னும் ஊரை மீட்டமையால் பாண்டியன் குடுமிக் கோமான் எனப்பட்டான்.

*கொல்யானை பலஓட்டிக் கூடா மன்னர் குழாந் தவிர்த்த*
*பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி*
என்று வேள்விக்குடிச் செப்பேட்டால் அறியப்படுகிறான்.

*பல்சாலை முதுகுடுமியின்*
*நல்வேள்வித் துறைபோகிய*
*தொல் ஆணை நல்லாசிரியர்*
*புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்*
என்று மதுரைக் காஞ்சியால் (759-762) அறியப்படுகிறான்.

இவன் பல போர்களை வென்று அதன் பயனாக வேள்விகள் பல நிகழ்த்தினான், கொற்கைக் கிழான் நற்கொற்றன் என்னும் பிராமணருக்கு வேள்விக்குடி என்னும் கிராமத்தை இறையிலி நிலமாக வழங்கினான். இந்நிலம், களப்பிரர் ஆட்சிக் காலத்தில், களப்பிரரால் கைப்பற்றப்பட்டது. களப்பிரர் ஆட்சி முறியடிக்கப்பட்ட பின், பொ.ஊ.பி. (கி.பி.) 8ம் நூற்றாண்டளவில் நெடுஞ்சடையன் பராந்தகன் என்னும் பாண்டிய மன்னன், சங்க காலத்தில் முதுகுடுமிப் பெருவழுதியால் கொற்கைக் கிழான் நற்கொற்றனுக்கு வழங்கப்பட்ட வேள்விக்குடிக் கிராமத்தை அவன் வழிவந்த நரசிங்கன் என்பவனுக்கு மீண்டும் வழங்கினான். இவ்வாறு வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக வெளியிட்ட செப்பேடே வேள்விக்குடிச் செப்பேடாகும்.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் போர் வெறி கொண்டு பகைவர் நாடுகளைப் பாழ் செய்து, பாடிவரும் பாணர்க்கும் புலவர்களுக்கும் வழங்கியதாகப் புலவர் பாடல்களில் பொதுப்படக் கூறப்பட்டிருக்கின்றதே தவிர குறிப்பாக யாருடன் எந்த நாட்டின் மேல் எதற்காகப் போரிட்டான் போன்ற தகவல்கள் அறியப்படவில்லை.

*பாணர் தாமரை மலையவும், புலவர்*
*பூ நுதல் யானையொடு புனை தேர் பண்ணவும்,*
*அறனோ மற்று இது விறல் மாண் குடுமி!*
*இன்னா ஆகப் பிறர் மண் கொண்டு,*
*இனிய செய்தி, நின் ஆர்வலர் முகத்தே?*

- புறநானூறு 12

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை மாங்குடி மருதனார், நெட்டிம்மையார் பாடியிருக்கிறார்கள். மாங்குடி மருதனார் தலையாலங் கானத்துச் செரு வென்ற பாண்டியனது அவைத் தலைமைப் புலவன் என்பதை இவ்விடத்தில் நினைவில் கொள்வோம். இம் மன்னன் காலத்துப் பிற மன்னர்கள் பற்றிய தகவல் கிடைக்கப்பெறவில்லை.

'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்', என்னும் பண்டையப் போர் முறையின் அறக் கோட்பாட்டைக் கூறும் புறநானூற்று 9ம் பாடலின் பாட்டுடைத் தலைவன் இப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியே. பாடியவர் நெட்டிம்மையார்.

**இவனைப் பாடிய புலவர்கள்:**

- காரிக்கிழார்
- மாங்குடி மருதனார்

- நெட்டிம்மையார்
- நெடும்பல்லியத்தனார்

சமகால அரசர்கள் அறியப்படவில்லை.

## கடைச் சங்க காலப் பாண்டியர்கள்:

பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் மன்னன் அடுத்ததாக வரலாற்றில் குறிப்பிடத்தக்க அளவில் அறியப்படுகிறான். இவன் ஒரு பெரும் புலவன், நற்றிணை 15, புறநானூறு 188, அகநானூறு 28, குறுந்தொகை 230 ஆகிய பாடல்களைப் பாடியிருக்கிறான்.

*படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்*
*உடைப் பெருஞ்செல்வர் ஆயினும் இடைப்படக்*
*குறுகுறு நடந்து சிறு கை நீட்டி,*
*இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்*
*நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்*
*மயக்குறு மக்களை இல்லிலோர்க்குப்*
*பயக்குற இல்லை தாம் வாழும் நாளே.*

- புறநானூறு 188

பாண்டியன் அறிவுடை நம்பியால், உறுதிப் பொருளை எடுத்துக் கூறும் பொருண்மொழிக் காஞ்சித் துறையில் பாடிய இப் பாடல் தனிச் சிறப்பு வாய்ந்தது. கோப்பெருஞ் சோழனின் நண்பனான பிசிராந்தையார் என்னும் புலவர் இவரைப் பாடியிருக்கிறார்.

*காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே,*
*மா நிறைவு இல்லதும், பல் நாட்கு ஆகும்*
*நூறு செறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே,*
*வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்*
*அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே,*
*கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்*
*மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்*
*வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,*
*பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்,*
*யானை புக்க புலம் போல,*
*தானும் உண்ணான், உலகமும் கெடுமே.*

- புறத்திணை 184

மன்னனுக்கு அறிவுரை கூறுவதாக அமைந்த இப்பாடல் இவர் காலத்தில் மன்னனுக்கும் புலவனுக்கும் இருந்த நெருங்கிய நட்பைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

சம கால மன்னர்களாக அறியப்படுபவர் - கோப்பெருஞ்சோழன். பாடல் பாடிய புலவர் - பிசிராந்தையார். இவன் காலத்தில் போர் நடந்ததாக அறியப்படவில்லை.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்னும் மன்னன் பாண்டிய மன்னர் வரிசையில் அடுத்ததாகக் குறிப்பிடத்தக்க மன்னன். சோழ நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் எல்லையாக ஓடும் வெள்ளாற்றின் தென் கரை தென்கோனாடு என்று அழைக்கப்பட்டது. தென் கோனாட்டின் மேலைப் பகுதி ஒல்லையூர் நாடாகும். ஒல்லையூர் நாடு பாண்டிய நாட்டின் வட எல்லை நாடாகும். சோழ மன்னன், சேரனின் துணையுடன் ஒல்லையூரைக் கைப்பற்றிக் கொண்டான். இதனால் பாண்டியருக்கு ஏற்பட்ட சிறுமையை ஒழிக்கப் பூதப் பாண்டியன் போராடி ஒல்லையூரை மீட்டான்.

இவன் பாடிய 'மடங்கலிற் சினைஇ மடங்கா உள்ளத்து' (புறநானூறு 71) என்னும் வஞ்சினப் பாடல் நயம் மிக்கது. இப் பாடலில், நண்பர்களான, மாவன், ஆந்தை, அந்துவஞ் சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் ஆகிய ஐம்பேராயத்தவர் பற்றிக் குறிப்பிட்டுள்ளான்.

இவன், போர்க்களத்தில் விழுப்புண் பட்டு இறந்தான். இவன் மனைவி கோப்பெரும் பெண்டுவும் ஒரு புலவர். இவர், பூதப் பாண்டியன் இறந்தபோது கணவனுடன் உடன்கட்டை ஏறியவர். அரிசில் கிழாரும் பெருங்குன்றூர் கிழாரும் இவரைப் பாடியுள்ளனர்.

**பாடிய புலவர்கள்:** அரிசில் கிழார் (146, 230,281), பெருங்குன்றூர் கிழார் (147,210,211,266,318)

**சமகாலத்தவர்கள்:** 1. தகடூர் பொருது வீழ்ந்த அதியமான் எழினி, 2. மனைவி கண்ணகியைத் துறந்து வாழ்ந்த வையாவிக் கோப்பெரும் பேகன், 3. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை ஆகிய அரசர்கள் அரிசில் கிழாரால் பாடப்பட்டுள்ளனர். எனவே இவர்களும் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் காலத்தவர்களாகக் கொள்ளத் தக்கவர்கள்.

**ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்:** ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், நம்பி நெடுஞ்செழியன் என்றும், நெடுஞ்செழியன் என்னும் பெயருடைய பாண்டியர்கள் பலர் வரலாற்றில் அறியப்படுகிறார்கள். இந்த நெடுஞ்செழியனை ஏனைய நெடுஞ்செழியர்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டவே 'ஆரியப் படை கடந்த' என்னும் அடை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஊகிக்கலாம்.

ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், வடநாட்டு மன்னரைப் போரில் வென்றதாகச் சிலப்பதிகாரம் வருமாறு கூறுகிறது:

*வடவாரிய படை கடந்து*
*தென்தமிழ் நாடு ஒருங்கு காணப்*
*புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்*
*அரசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டியன்*
*நெடுஞ்செழியன்' - சிலப்பதிகாரம்.*

இதனை நிறுவுவதற்கான புறச் சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. இம்மன்னன், வடநாட்டார் தென் நாட்டின் மீது படையெடுத்து வந்தபோது அவர்களை வென்றதாகவோ அல்லது வடநாட்டிற்குப் படை எடுத்துச் சென்றதாகவோ அறியப்படவில்லை. இலக்கியம் கூறும் செய்திகளை உறுதி செய்வதற்கான புறச் சான்றுகள் அற்ற நிலையில், இவை, புலவர்கள் மன்னர்களை உயர்வு நவிர்ச்சியில் கற்பனையாகப் பாடியவையாகவே கொள்ளக் கிடக்கின்றன.

வடநாட்டிலிருந்து, மதம் பரப்பும் நோக்கில் பௌத்தரும் சமணரும் பெருந்திரளாகத் தென் நாட்டினுள் காலத்திற்குக் காலம் புகுந்திருக்கிறார்கள் என்பதைத் தமிழ் இலக்கியங்களுடன் தொல்லியல் அறிஞர்களும், வரலாற்று ஆய்வாளர்களும் உறுதி செய்திருக்கிறார்கள்.

ஆனால், நாட்டைக் கைப்பற்றும் எணணத்துடன் எவரையும் வருவதற்குத் தென் இந்திய அரசுகள் இடம் தராது சுதந்திரத்தைப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் சுதந்திரமான சேர, சோழ, பாண்டிய நாடுகளும் சதியபுதோ என்னும் அதியமான் நெடுமான் அஞ்சியின் அதிகாரத்திற்கு உட்பட்ட நாடும் இருந்திருப்பதை அசோகரது (கிமு. 273-232) 12ம் கிர்னார் கல்வெட்டு உறுதி செய்கிறது.

தென்னிந்திய அரசுகள், வடக்கே நிலைபெற்றிருந்த நாடுகளைத் தாக்கிப் போரிட்டதை உறுதி செய்யும் புறச் சான்றுகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அசோகரது போர் நடவடிக்கைகள், உலகப் புகழ் பெற்ற கலிங்கத்துப் (தற்போதைய ஒடிசா) போருடன் முற்றுப் பெறுகிறது. அசோகர் கலிங்கத்துப் போருடன் போரை வெறுத்து அறவழி நடந்திராவிட்டால் அவரது அடுத்த படையெடுப்பு தென் இந்தியா நோக்கியதாகத்தான் இருந்திருக்கும். அசோகர் படை கலிங்கத்திற்குத் தெற்கே வரவில்லை.

## மாமூலர்:

மாமூலர் என்னும் சங்கப் புலவர் 30 பாடல்கள் பாடியிருக்கிறார். அத்தனையும் அகப்பாடல்களாக இருப்பினும், அவை வரலாற்றுத் தகவல்கள் பலவற்றைத் தந்து நிற்கின்றன. மாமூலனார் வடநாட்டு அரசுகளான நந்தர்களையும் மௌரியர்களையும் பற்றிப் பாடியிருப்பதால் இவர் பொ.ஊ.மு. 320ம் ஆண்டுக் காலப்பகுதியில்

வாழ்ந்தவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சங்கப் பாடல்கள் வாயிலாகத் தமிழ் நாட்டவர், நந்தர், மோரியர் ஆகிய வடநாட்டு அரசுகள் பற்றியும் அவ்வரசுகளின் தலைநகரான பாடலிபுரம் பற்றியும் அறிந்திருக்கிறார்கள் என்று அறியக் கிடக்கிறது.

கோசர் என்னும் இனக் குழுவினர் சங்கப் பாடல்களில் அடிக்கடி பேசப்படுபவர்கள். கோசர் தென் நாட்டின் பல பகுதிகளிலும் சிற்றரசர்களாக இருந்து பேரரசுகளுக்குப் பலவகையிலும் துணை புரிந்திருக்கிறார்கள். கோசரின் காவல் மரம் வேம்பு என்பதால் கோசர் பாண்டியரின் படையினர் என்பது தெளிவு. கோசர் பாண்டியரின் படை வீரர்கள் என்ற குறிப்பு மதுரைக்காஞ்சியிலும் உள்ளது. நால் ஊர்க் கோசர் பறை முழக்கியும், சங்கு ஊதியும், மன்னனுக்காக வரி தண்டினர். எனவே கோசர், பாண்டியருடன் நெருங்கிய தொடர்பு உள்ளவர்கள்.

தமிழகத்திற்கு வடநாட்டு மோரியர் வருகை பற்றிய குறிப்புக்கள் அகநானூறு 69, 251, 281 ஆகிய பாடல்களிலும் புறநானூறு 175ம் பாடலிலும் காணப்படுகின்றன.

***... புனைதேர் கோசர்,***
***தொன்மூது ஆலத்து அரும்பணைப் பொதியில்,***
***இன்னிசை முரசம் கடிப்பு இகுத்து இரங்க,***
***தெம்முனை சிதைத்த ஞான்றை,***
***மோகூர் பணியாமையின், பகை தலைவந்த***
***மாபெருந்தானை வம்ப மோரியர்***
***புனைதேர் நேமி உருளிய குறைத்த***
***இலங்கு வெள் அருவிய அறைவாய் உம்பர்***

- அகநானூறு 251-12

- இப்பாடலில் மாமூலனார், மோகூர் மன்னன் பழையன் கோசருக்குப் பணிய மறுத்ததால் கோசர், வடநாட்டு மோரியரை உதவிக்கு அழைத்தனர் என்றும் மோரியரும் பெரும் சேனையுடன் வந்தார்கள் என்றும் அவர்களது தேர்கள் செல்வதற்கு ஏற்றாற் போல மலைகள் குடைந்து பாதைகளை வகுத்துச் சென்றார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். இத்தனையும் கூறிய மாமூலர், இப்படையெடுப்பின் முடிவு என்ன என்று கூறவில்லை. தென்னாட்டில், மோரியர் போர் செய்திருந்தால் அதன் விளைவு என்ன?

இப்பாடலில் கூறப்பட்ட பழையன் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் காலத்தவனாக அறியப்படுகிறான்.

- மோரியர் வருகை பற்றி மாமூலனார் மட்டுமல்லாது உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனாரும் 69ம் அகநானூற்றுப் பாடலில் இதே தகவலைக் குறிப்பிட்டுள்ளார்.

**விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்**
**பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த**
**அறை இறந்து அகன்றனர் ஆயினும்**

- அகநானூறு 69

வானளாவிய மலை மோரியரது தேர்ப்படை செல்வதற்குத் தடையாக நின்றது. எனவே, அம்மலையின் பாறையைக் குடைந்து பாதை அமைத்தார்கள் என்னும் செய்தி இப்பாடலிலும் கூறப்பட்டிருக்கிறது.

- மாமூலனார் அகநானூறு 281ம் பாடலில் வடுகர் என்னும் இன்னுமொரு இனத்தவர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

***‘கனைகுரல் இசைக்கும் விரைசெலற் கடுங்கணை***
***முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்***
***தென்றிகை மாதிரம் முன்னிய வரவிற்கு***

- அகநானூறு 281

இப்பாடலில் வடுகரை மோரியருடன் இணைத்துக் கூறப்பட்டிருக்கிறது. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், ‘மாமூலனார் மோரியர் என்று குறித்தது சந்திரகுப்த மௌரியர் மரபினரையே ஆகும் என்பதில் ஐயமில்லை’ (சோழர் வரலாறு பொ.ஊ.மு. மூன்றாம் நூற்றாண்டுச் சோழன் - டாக்டர். மா. இராசமாணிக்கனார்) என்று கூறியிருப்பது மீள் ஆய்வுக்கு உரியது. மௌரியப் பேரரசு பற்றி வரும் பகுதியில் இது ஆராயப்படும்.

**வடுகர்:** மீண்டும் மாமூலர் பாடல்களில் வடநாடு தொடர்பான செய்திகளுக்குச் செல்வோம்.

***குல்லைக் கண்ணி வடுகர் முனையது***
***வல் வேற் கட்டி நல் நாட்டு உம்பர்***
***மொழி பெயர் தேஎத்தர் ஆயினும்***

- குறுந்தொகை 11

இப் பாடலில் மாமூலனார் ‘வடுகர்’ என்னும் இனத்தவர் பற்றிக் குறிப்பிடுகிறார். கண்ணி சூடிய வடுகரது இடத்திற்கு அப்பாலுள்ள கட்டி என்பவனுடைய நாட்டிற்கு அப்பால் உள்ள பிறமொழி பேசும் நாடு பற்றிக் கூறப்படுகிறது. கட்டி என்பவன் சேர மன்னனின் படைத் தலைவர்களுள் ஒருவன். கட்டியின் நாட்டிற்கு அண்மையில் உள்ளவர் வடுகர். வடுகர் வேற்று மொழி பேசும் நாட்டவராக அறியப்படுகின்றனர்.

சங்க காலத்தில் ‘வடுகர்’ என்னும் ஒரு இன மக்கள் சங்கப் பாடல்களில் பேசப்படுகிறார்கள். வடுகர், வேங்கடத்திற்கு மேற்கே வாழ்ந்த வீரமும் வன்மையும் மிக்கவர்கள், இவர்களில் ஒரு சாரார் வேட்டையாடுவார்கள். இவர்களைச் சங்க இலக்கியம் ‘வம்பவடுகர்’ என்று குறிப்பிடுகிறது. தென்னாட்டு, சங்க இலக்கியத் தலைவர்கள் தம் தேசம் கடந்து வடக்கே பொருள் தேடுவதற்காகச் செல்வது பற்றிச் சங்க அகத்திணை இலக்கியங்கள் கூறுகின்றன. வேங்கடமலைக்கு வடக்கே வாழ்ந்த இம் மக்கள் பேசிய மொழி ‘வடுகு’ என்று கலிங்கத்துப் பரணி கூறுகிறது. ‘வடக்கர்’ என்பது மருவி ‘வடுகர்’ ஆகியிருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. இவர்களைப் பற்றிப் பலவாறான கருத்துக்கள் நிலவியபோதும் இவர்கள் விந்திய மலைக்கு வடக்கே வாழ்ந்தவர்கள் என்பதும் தமிழ் அல்லாத பிற மொழி பேசும் தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெளிவு. இவர்களும் கோசருக்குப் போரில் உதவியவர்களாக இருக்கவேண்டும்.

## வடநாட்டு நந்தர்கள்:

நந்தர்கள், பொ.ஊ.மு. 4ம் நூற்றாண்டில் வட இந்தியாவில் மகத நாட்டை ஆண்டார்கள். இவர்களது தலைநகரம் செல்வச் சிறப்பு மிக்க பாடலிபுரம். சிசுநாக மரபைச் சேர்ந்த மகாநந்தி என்பவனின் மகன் மகாபத்ம நந்தன். மகாபத்ம நந்தனே நந்த வம்சத்து முதலாம் மன்னன். மகாபத்ம நந்தன், 88 வயது வரை வாழ்ந்து ஆட்சி செய்ததாக அறியப்படுகிறது. இவன், சத்திரியர்களை அழித்தவன் என வர்ணிக்கப்படுகின்றான். தன நந்தன், நந்தர்களின் இறுதி மன்னன். இவன் 8 ஆண்டுகள் அரசாண்டான். இவன் மிகக் கொடூரமான மன்னனாக வருணிக்கப்படுகிறான். இவனது கொடுங்கோன்மை காரணமாகவே இவனை வெல்லக்கூடியதாக இருந்ததாக சந்திரகுப்த மௌரியன் கூறியதாக புளூட்ராக் என்னும் நூல் கூறுகிறது. நந்த வம்சத்து ஆட்சி சுமார் 100 ஆண்டுகள் நடைபெற்றிருக்கிறது. நந்தர் ஆட்சி உச்சத்தில் இருந்த காலத்தில் அவர்கள் அரசு பீகாரில் இருந்து மேற்கே வங்காளம் வரை பரந்திருந்தது.

மகதப் பேரரசு தக்கணத்திற்குத் தெற்குப் பகுதி வரை விரிவாகியிருந்தது. அதாவது, மேற்கே, மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர், கிழக்கே கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடர், மற்றும் விந்திய மலைத் தொடர் ஆகிய மூன்று மலைத் தொடர்களுக்கு நடுவில் முக்கோண வடிவமான பகுதி தக்கணமாகும். எனவே விந்தியமலையைக் கடந்து நந்தர் வரவில்லை.

இந்தியாவின் முதல் பேரரசை உருவாக்கியவர்கள் நந்தர்கள் என்றும், மகத நாட்டின் ஆட்சியை இவர்கள் மேலும் விரிவாக்கினர்

என்றும், இதற்காக 200,000 பேர் கொண்ட காலாட்படை, 2000 தேர்கள், 3000 போர் யானைகள் என்பவை கொண்ட படையைக் கட்டியெழுப்பினர் என்றும் அறியப்படுகிறது. புளூட்ராக் நூலின்படி இவர்கள் படை இதைவிடவும் பெரியதாகும்.

நந்தர்களது அரசு மகதப் புரட்சி காரணமாக அழிக்கப்பட்டது. மகதப் பேரரசு பற்றியும் அதன் வளமிக்க செல்வம் பற்றியும், அவர்கள் பகைவர்கள் படையெடுப்புக்குப் பயந்து தம் செல்வத்தை கங்கை நீரின் அடியில் மறைத்து வைத்திருந்தது பற்றியும் மாமூலனார் தம் பாடலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

***பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்***
***சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை***
***நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ***

- அகநானூறு 265

இவை, மாமூலர் செவி வழியாகக் கேட்டறிந்த செய்திகளாக இருக்கவேண்டும்.

மேலே கொடுக்கப்பட்ட சான்றுகள் மூலம் நந்த மன்னர்கள் காலத்தில் (பொ.ஊ.மு. 325) வட ஆரியர் விந்தியமலைக்குத் தெற்கே வரவில்லை என்பது உறுதி செய்யப்படுகிறது.




பொ.ஊ.மு. 325 இல் தன நந்தன் ஆட்சிக்காலத்தில் உச்சகட்டத்தில் இருந்த நந்தப் பேரரசு.

இப்படத்தில் இடப்பெயர்களுடன் காட்டப்பட்டிருப்பது நந்தப் பேரரசுக்கு உட்பட்ட பகுதியாகும்.

## மௌரியப் பேரரசு (பொ.ஊ.மு. 322 - பொ.ஊ.மு. 185):

நந்தர்களை வென்று, மௌரியர் பேரரசை நிறுவினார்கள். மௌரியப் பேரரசு, பண்டைக் காலத்தில் வட இந்தியாவை ஆண்ட அரசுகளுள் எல்லாம் அரசியல், படைத்துறை முதலியவற்றில் மிகவும் விரிவானதும் வலுவானதுமாகும்.

மௌரியப் பேரரசின் தலைநகரம் பாடலிபுத்திரம். இப்பேரரசு பொ.ஊ.மு. 322ம் ஆண்டில் சந்திரகுப்த மௌரியனால் உருவாக்கப்பட்டது. நந்த வம்சத்து இறுதி மன்னன் தன நந்தனுக்கும் அமைச்சர் கௌடில்யனுக்குமிடையில் ஏற்பட்ட பிணக்கின் விளைவாக கௌடில்யன் சந்திரகுப்தனின் துணையுடன் மௌரியப் பேரரசை உருவாக்கினான். சந்திரகுப்தனின் (பொ.ஊ.மு. 325-301) பின் பிந்துசாரரும் (பொ.ஊ.மு. 297-273), அவர் பின் பேரரசர் அசோகரும் (பொ.ஊ.மு. 232) ஆண்ட மௌரியப் பேரரசு பொ.ஊ.மு. 180 இல் வீழ்ச்சியடைந்தது.

இவை மூலம், பொ.ஊ.மு. 5ம் நூற்றாண்டு முதல் பொ.ஊ.மு. 2ம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியில் வடநாடு மிக வலுவான பேரரசுகளின் ஆட்சியின் கீழ் இருந்திருப்பது தெளிவாகிறது. இக் காலப்பகுதியில் தென் நாட்டிலிருந்து வடநாடு நோக்கிய படையெடுப்பு நடந்திருக்க வாய்ப்பில்லை.

சந்திரகுப்த மௌரியனின் பேரமைச்சனான சாணக்கியன் தனது பொருள் நூலில், 'தமிழகத்திலிருந்து இரத்தினங்கள், சேரநாட்டு வைடூரியங்கள், கருநிறமுள்ள பாண்டிய நாட்டுச் சால்வைகள், மதுரை மெல்லிய ஆடைகள் முதலியன சந்திரகுப்தன் பண்டாரத்திற்கு அனுப்பப்பட்டன' என்று குறிப்பிட்டுள்ளதாக, P.T. சீனிவாச ஐயங்காரைச் ('History of the Tamils' ப. 141) சான்றாக்கி, டாக்டர் மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுகிறார். இப்பொருட்கள் 'கொடையாகவோ' அல்லது 'திறையாகவோ' அனுப்பப்பட்டதாகக் கூறப்படவில்லை. இது, தமிழகத்திற்கும் மௌரியருக்கும் தொடர்பு இருந்தமையை உறுதி செய்கிறதே ஒழிய மௌரியப் பேரரசு தமிழ் நாட்டின் மீது படை எடுத்துத் தமிழ் நாட்டைத் தனது பேரரசின் கீழ் கொண்டு வந்தது என்றோ தமிழ் மன்னர்கள் இவற்றைத் திறையாக அனுப்பி வைத்தார்கள் என்றோ கூறவில்லை. நட்பு நாடி அனுப்பப்பட்டதாகக் கூட இருக்கலாம்.

## மௌரியப் பேரரசன் அசோகனது கலிங்கத்துப் போரும் அதன் விளைவுகளும்:

வரலாற்று முக்கியத்துவம் பெற்ற கலிங்கத்துப் போர் மௌரியப் பேரரசுக்கும் கலிங்க நாட்டிற்கும் இடையில் நடந்த போராகும். இப்போரை நடத்திய கலிங்க மன்னன் விபரம் கிடைக்கவில்லை. கலிங்க நாடு என்பது இன்றைய ஒடிசா மாநிலமாகும். உலக வரலாற்றில் நடந்த மிகப் பெரிய போர்களில் இதுவும் ஒன்றாகும். இப்போர் பொ.ஊ.மு. 262-261ம் ஆண்டளவில் நடந்திருக்கிறது. இப்போரில் பொதுமக்கள் உட்பட 200,000 உயிர்கள் இழக்கப்பட்டதாக அசோகச் சக்கரவர்த்தியே தனது பாறைக் கல்வெட்டில் குறிப்பிட்டிருக்கிறார். சுதந்திர நாடான கலிங்க நாடு அசோகப் பேரரசுக்கு அடிபணிய மறுத்த காரணத்தால் நடந்த இப்போரில் கலிங்கப்படை தைரியமாக எதிர்த்துப் போராடியதாகக் கூறப்படுகிறது. இந்தப் போரின் விளைவு அசோகச் சக்கரவர்த்தியைப் பெரிதும் பாதித்தது. அவரைப் பௌத்த மதத்திற்கு மாறி உலகில் அறத்தை நிலைநாட்ட உழைக்கத் தூண்டியது. ஆனாலும் வென்ற கலிங்க நாடு மௌரியப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

அசோகன் போரை வெறுத்து நிறுத்தாதிருந்தால் மௌரியரின் அடுத்த இலக்கு தென்னாடாகத் தான் இருந்திருக்கும். அசோகன் பொ.ஊ.மு. 232ல் மறைந்தான். அசோகரின் மறைவுக்குப் பின் மௌரியப் பேரரசு இரண்டாகப் பிளவுபட்டது. அசோகன் இறந்த 50 ஆண்டுகளிலேயே மௌரியப் பேரரசு வீழ்ந்தது.

**இவ்விடத்தில் நாம் குறித்துக் கொள்ளவேண்டியது:**

- நந்தர் காலத்தில் நந்தப் பேரரசு தென்னாட்டின் மேல் படையெடுக்கவில்லை. அதற்கான சூழலும் அமைந்திருக்கவில்லை என்று பார்த்தோம்.
- பொ.ஊ.மு. 325ம் ஆண்டளவில் சந்திரகுப்த மௌரியனால் அமைச்சர் சாணக்கியன் துணையுடன் நிறுவப்பட்ட மௌரியப் பேரரசு, அசோகரின் ஆட்சிக் காலத்தில் தெற்கே தக்கணம் வரை பரவியிருந்தது. அசோகரின் மறைவுடன், (பொ.ஊ.மு. 232) வலுவிழந்தது. இவர் பின் பிளவுபட்ட மௌரியப் பேரரசின் பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்ட வடக்கு, கிழக்குப் பகுதிகளைத் தசரத மௌரியரும் உஜ்ஜயினியைத் தலைநகராகக் கொண்ட மேற்குப் பகுதியை குணாளனும் ஆண்டனர். இவர்கள் ஆட்சிக் காலத்தில், மௌரியப் பேரரசின் தென் பகுதிகளைச் சாதவாகனரும் கிழக்குப் பகுதிகளைக் கலிங்கரும் கைப்பற்றினர். எனவே மௌரியப் பேரரசு எந்தக் காலத்திலும் தமிழ் நாட்டின் மீது படை எடுக்கவில்லை என்று உறுதியாகக் கூறலாம்.

நந்தர் காலமான பொ.ஊ.மு. 425 முதல் மௌரியர் வீழ்ச்சிக்

காலமான பொ.ஊ.மு. 180 வரையுள்ள காலப்பகுதியில் வட நாட்டிலிருந்த எந்த ஒரு படையெடுப்பும் நடக்கவில்லை.




அசோக மன்னன் காலத்து மௌரியப் பேரரசு
(பொ.ஊ.மு. 322 - பொ.ஊ.மு. 185) (Thanks to Google)

பேரரசுக்கள் உயர் நிலையில் இருந்த இந்தக் காலகட்டத்தில் தெற்கிலிருந்தும் படையெடுப்பு நடந்திருக்கச் சாத்தியம் இல்லை.

பண்டைக் காலத்திலிருந்தே வடநாட்டு ஆரியருக்கும் தென்நாட்டுத் திராவிடருக்கும் அரசியல், சமூகப் பொருளாதார அடிப்படையில் முரண்பாடு நிலவி வந்திருக்கிறது என்பதைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. தமிழ் இலக்கண இலக்கியங்கள் அனைத்துமே வடமொழியிலிருந்து தமிழுக்குக் கொண்டு வரப்பட்டவையே என்று கூறியும் நம்பியும் வந்த ஒரு கூட்டம் மிக அண்மைக்காலம் வரை இருந்து வந்திருக்கிறது.

இவ்வாறான முரண்பாடுகளால், பண்டைக் காலத்திலிருந்தே வட நாட்டு ஆரியரோடு போரிட்டு, அவர்களை வென்று, வீரம் நிலைநாட்டியதான ஒரு நினைப்பு, கனவு, தமிழ் நாட்டு மன்னர்களிடையே இருந்து வந்திருக்கிறது என்று ஊகிக்கக்கிடக்கிறது. தமிழ் மன்னர் கனவுகளுக்குப் புலவர்கள் வடிவம் கொடுத்திருக்கிறார்கள் என்று கொள்ளலாம். இதன் வெளிப்பாடாகவே கீழே தரப்பட்டுள்ள பெயர்களைப் பார்க்கலாம் என்பது என் கருத்து.

- ‘ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்’ (சிலப்பதிகாரம்), இது, ஆரியர் படையை, பாண்டியன் நெடுஞ்செழியன் வெற்றி கொண்டதான அடைமொழியாகும்.
- ‘பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்’, இது மகாபாரதப் போரில், போரிட்ட இரு தரப்புப் படையினருக்கும், உதியஞ்சேரலாதன் என்னும் தமிழ் நாட்டு மன்னன் உணவு வழங்கினான் என்னும் பொருள் படும்படியான பெயர் அடையாகும்.
- ‘இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்’ (பதிற்றுப்பத்து 11), இது இமயம் வரை படை எடுத்துச் சென்று, இமயத்தை எல்லையாகக் கொண்ட பெருநிலப் பரப்பை தன் அரசின் கீழ் கொண்டு வந்தான் என்று பொருள்படும்படியான பெயர் அடையாகும்.
- ‘குட புலம் காவலர் மருமான், ஒன்னார் வடபுல இமயத்து வாங்கு வில் பொறித்த’ (சிறுபாணாற்றுப்படை 47, 48ம் அடிகள்) என்று, தன் முன்னோர் போலத் தானும் இமயத்தில் விற்சின்னத்தைப் பொறித்தான் செங்குட்டுவன் என்று கூறும் பாடல் வரிகள்.

இவை போன்ற செய்திகள் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றன. தென்னக மக்களதும் மன்னர்களதும் கனவுகளுக்குப் புலவர்கள் வடிவம் கொடுத்திருக்கிறார்களோ என்ற கருத்தே வலுப்பெறுகிறது.

ஆரிய அரசர்களுக்கும் தமிழ் நாட்டு அரசர்களுக்கும் போர் நடந்ததாகவும் அவ்வாறான ஆரியப் படை ஒன்று தஞ்சை மாவட்டத்தின் அருகே போரிட்டு அழிந்ததாகவும் கூறப்படுகிறது.

- வளம் மிக்க முள்ளூர் மலையைக் கைப்பற்றும் ஆசையால் வந்த ஆரியர்களைக் காரி தன் வேற்படையால் அழித்தான் என்று கூறப்படுகிறது. இப்போர் உண்மையில் வடநாட்டு ஆரியருடன் நடந்த போர் என்பதே ஐயத்திற்கிடமானது. காரியின் நாட்டிற்கு வடக்கே இருந்து வந்தவர்களை ‘வட ஆரியர்’ என்று தவறாக விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது எனலாம்.
- தண்டகாரணியத்து ஆரியர் ஆநிரைகளைக் கவர்ந்து சென்றார்கள் என்று அவ்வாநிரைகளைச் சேரலாதன் மீட்டு வந்தான் என்றும் அதனாலேயே அவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்று போற்றப்பட்டான் என்றும் கூறப்படுகிறது.

ஆநிரைகள் கவர்ந்து செல்லும் வெட்சிப்போரும் அவற்றை மீட்டு வரும் கரந்தைப் போரும் சங்க காலத்தில் பெருமளவில் நடைபெற்றிருக்கிறது. தொல்காப்பியம் இப்போர்களையும் அப்போர்கள் நடைபெறும் தன்மையையும் சிறப்பாக விளக்குகிறது. தொல்காப்பியரது விளக்கம் நடைமுறைக்கு ஏற்பதாகவும் நம்பகமானதாகவும் காணப்படுகிறது. தொல்காப்பியர் கூறும் வெட்சிப்போர் முல்லை நிலங்களுக்கு அயலே இருக்கும் குறிஞ்சி முதலிய நிலத்தவர்களால் மேற்கொள்ளப்படும் ‘ஆகோள்’ முயற்சியாகும்.

மாடுகளைப் பிடிப்பதற்காக மிகத் தொலைவிலிருந்து ஆரியப் படை வந்தது என்பதும் மாடுகளை அவர்கள் பிடித்து ஓட்டிச் செல்ல முயன்றார்கள் என்பதும் நம்புகிற மாதிரி இல்லை. ஒரு பெரும் படை கொண்டு ஆரியர்கள் இந்தத் தேவைக்காக வந்திருப்பார்களா?

இவ்விடத்தில் ‘வட ஆரியர்’ என்பவர்கள் யார் என்ற நியாயமான வினா எழுகிறது. இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்திலிருந்து சில வரிகளை எடுத்து வந்து இவ் வினாவை ஆராயலாம்.

***கொங்கணர்,கலிங்கர்,கொடுங்கரு நாடர்***
***பங்களர்,கங்கர்,பல்வேற் கட்டியர்,***
***வடவா ரியரொடு வண்டமிழ் மயக்கத்துன்***
***கடமலை வேட்டமென் கட்புலம் பிரியாது***
***கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம்***

- சிலப்பதிகாரம், காட்சிக் காதை 156-159.

இங்கு வடநாட்டவருடன் இணைந்து போரிட்டவர்களாக இளங்கோவடிகள், கொங்கணர், கலிங்கர், கருநாடர், வங்களர், கங்கல், கட்டியர் என்று குறிப்பிடுகிறார். எனவே இவர்கள் வடநாட்டவர்கள் அல்லர். இந் நாட்டவர்களின் எல்லைக்கு அப்பால் வடக்கே இருந்தவர்களாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். தென் இந்தியாவின் வட எல்லைக்கு வடக்கு, மேற்கு, தெற்கு ஆகிய புறங்களில் இருந்த அரசுகளே இவை. இவை வட நாட்டு ஆரியர் அல்லாத சிறு அரசுகளாகும். எனவே வட ஆரியர் என்பது மேலே குறிப்பிட்ட இந் நாடுகளின் எல்லைக்கு வடக்கே இருக்கும் நாடுகளாகும்.

தொடரும்.



selvanayaki.s@thaiveedu.com



உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

# தமிழ்வலை - 78


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-78 வினா

**இடமிருந்து வலம்**

2 இலங்கை பெருந்தோட்டப் புலம்

4 ஜெயகாந்தன் எழுதிய ஒரு கதை

7 ஒரு கறிச்சரக்கு

9 மத்திய

10 பேர்போன செக்கோசிலேவேக்கிய எழுத்தாளர்

12 தேர்க் கயிற்

13 தென்புலத்தார்

14 துயிலு

15 சும

16 வாரிசு

**மேலிருந்து கீழ்**

1 ஒரு வியாதி

3 சங்கம்

4 ஓர் ஐரோப்பிய நாடு

5 பட்டினத்தார்

6 சோறு

8 வேகா எவையும்... (2-3)

10 காண்பி

11 கண்டி

12 குடியிரு


14 விடை

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மினன்னஞ்சல் முகவரி:**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 77க்கான விடைகள்



## தமிழ்வலை-77 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

மணிஸ்வரன் மகிந்தா, நோத்யோர்க்
புண்ணியமூர்த்தி சரசுவதி, மார்க்கம்
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ.
நவநாதன் கணேஷ், நோத்யோர்க்,
த.செ. நடராசா, ரொறன்ரோ.
பவளராணி அழகரத்தினம், நோத்யோர்க்

### பரிசுபெறும் போட்டியாளர்

**கவினி பசுபதிப்பிள்ளை,**
**ஸ்கார்பரோ.**

thamilvalai@thaiveedu.com



# தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 25

- நா. சுப்பிரமணியன்

இத்தொடரிலே கடந்த 23ம் கட்டுரை முதல் 'முன்வர-லாற்றுக்கால'ப் பகுதியிலிருந்து தொடரும் இலக்கிய, இலக்கண ஆக்கங்கள் பற்றி நிகழ்ந்துள்ள ஆய்வுகள் பற்றி நோக்கிவருகிறோம். அவ்வகையில் கடந்த கட்டுரையில் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடான தொல்-காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் (கருத்தரங்கக் கட்டுரைகள்) என்ற நூலை நோக்கத் தொடங்கியிருந்தோம். மேற்படி நூலின் முதலாவது பகுதியான 'பொது நோக்கு' என்ற வகைமைசார்ந்த கட்டுரைகளின் உள்ளடக்க அம்சங்கள் பற்றிய பொதுவான முக்கிய முதல்நிலைக் குறிப்புகள் சில அக்கட்டுரையின் பிற்பகுதியிலே முன்வைக்கப்பட்டன. அப்பகுதிசார்ந்த பார்வைகள் இக் கட்டுரையிலும் தொடர்கின்றன.

முன்னைய கட்டுரையின் இறுதிப்பகுதியிலே தொல்காப்பியத்தின் பொருளதிகாரப் பகுதியின் கட்டமைப்பு பற்றிப் பேராசிரியர் கா. சிவத்தம்பியவர்கள் எழுப்பிய பிரச்சினையம்சமொன்று நோக்கப் பட்டது. அப்பிரச்சினை 'மேற்படி பொருளதிகாரப்பகுதியைத் தன் னிறைவுடையதும் தர்க்கரீதியான ஒருங்கிணைவு கொண்டதுமான ஒரு கட்டமைப்பாகக் கருதமுடியுமா?' என்பதாகும். அவ்வாறு அதைக் கருதுவோர் என முனைவர்கள் ச. அகத்தியலிங்கம், இந்திரா மனுவேல் முதலியவர்களை நாம் அடையாளங் கண்டிருந் தோம். அவர்கள், தொல்காப்பியப் பொருளதிகாரத்தை 'ஒருங்கிணைந்த கவிதைக் கோட்பாடு (அல்லது)பாவியல் கோட்பாடு' எனக் காண்பவர்கள் என்பதும் முன்னரே நோக்கப்பட்டதேயாகும். அவ்வாறான அவர்களின் பார்வைகளும் பேராசிரியர் கா. சிவத்தம் பியவர்களின் பார்வையும் எதிரெதிர் நிலையின என்பதை - அதாவது, சிவத்தம்பியவர்கள் 'பொருளதிகாரக் கட்டமைப்பைக் கேள் விக்குட்படுத்துபவர்' என்பதை - முன்னரே நோக்கியிருந்தோம். இவ்வாறான இருவகைப்பார்வை தொடர்பான தெளிவுக்கான சில விளக்கங்கள் வருமாறு:

## ஒருங்கிணைந்த பாவியல் (அல்லது) கவிதையியல் என்ற பார்வை:

'ஒருங்கிணைந்த கோட்பாடு' என்றதொடரானது 'பல்வேறு கூறுகளின் இணைப்பிலமைந்த கோட்பாடு' என்ற பொருளைத்தருவதாகும். இங்கே அத்தொடரானது மேலே நாம்நோக்கிய பொருளதிகாரமானது பாவியல் சார்ந்த பல்வேறு கூறுகளையும் இணைத்துப் பேசுவதான ஒரு நிறைவான கோட்பாட்டுக் கட்டமைப்பு என்ற பொதுவான கருத்தைத் தந்துநிற்பது வெளிப்படை. ஆனால் 'ஒருங்கிணைந்த கோட்பாடு' என்பது பற்றி விளக்கம்தரும் நிலையிலே முனைவர்கள் ச. அகத்தியலிங்கமவர்களும் இந்திரா மனு-வேல் அவர்களும் தம்முள் வேறுபடுகின்றனர் என்பது இங்கு நமது கவனத்துக்குரிய முக்கிய செய்தியாகும். இது பற்றிய விளக்கம் வருமாறு:

முனைவர் ச. அகத்தியலிங்கமவர்கள் மேற்படி பொருளதிகாரமானது எழுத்ததிகாரம் மற்றும் சொல்லதிகாரம் ஆகியவற்றுடன் இணைந்ததான நிலையையே - அதாவது தொல்காப்பியத்தின் ஒட்டு மொத்த கட்டமைப்பையே - 'ஒருங்கிணைந்த நிலை' எனக் காண்கிறார். அவருடைய 'தொல்காப்பியரின் ஒருங்கிணைந்த பாவியல் கோட்பாடு' என்ற கட்டுரையானது தொல்காப்பியத்தின் மூன்றதிகாரம் கொண்ட கட்டமைப்பானது உலகமொழிகள் எவற்றிலும் காணப்படாத சிறப்பு நிலை' என்பதை விளக்கியுரைக்கும் நோக்கில் எழுதப்பட்டதாகும்.

இத்தொடர்பிலான விளக்கத்திலே அவர் இந்திய மொழிகளிலொன்றான சம்ஸ்கிருதம், மேலைமொழிகளான கிரேக்கம், ஆங்கிலம் ஆகியவற்றின் மொழியிலக்கணங்கள் மற்றும் இலக்கியக் கோட்பாடுகள்சார் ஆக்கங்கள் ஆகியவற்றை ஒப்பிட்டு நோக்கித் தமது முடிபுகளைத் தந்துள்ளார். இத்தொடர்பில் அவர் தமது கட்டுரையின் தொடக்கத்தில் தந்துள்ள குறிப்பொன்று இங்கு பதிவுசெய்யப்படவேண்டிய முக்கியத்துவமுடையதாகும். அது வருமாறு:

'... ஒரு மொழியின் இலக்கணத்தையும் அதே மொழி இலக்கியத்தின் பாவியலையும் (Poetics) ஒரு சேர, ஒரே தலைப்பின்கீழ், ஒரே நூலின்கீழ்க் கூறிநிற்கும் ஒரே உலகநூல் தொல்காப்பியம் எனக் கூறுவதில் நாம் பெருமையடையலாம்.' (மேற்படி நூல் ப.1)

இந்திரா மனுவேல் அவர்கள் 'தொல்காப்பியத்தின் பொருள்தளமும் பொருள்கூறுகளும்' என்ற தமது கட்டுரையிலே கவிதையின் பல்வேறு ஆக்கக்கூறுகளும் பொருத்தமுற அமைந்த கட்டமைப்பையே 'ஒருங்கிணைந்த நிலை' என்பதாகச் சுட்டி அதனை விளக்கும் முறைமையிலேயே கட்டுரைப் பொருளை விரித்துச் செல்கிறார். இவ்விபரிப்பிலே அவர் முன்வைத்த தொகுநிலைக் குறிப்பொன்று பொருளதிகாரம் பற்றிய அவரது புரிதலை உணர்த்தி நிற்பதாகும். அக்குறிப்பு வருமாறு:

'...முதல் இயலான அகத்திணையியல் அகப்பாடல் பற்றிய பொதுக்கொள்கையை வழங்குகிறது. இரண்டாம் இயலான புறத்திணையியல் புறப்பாடல்கள் பற்றிய கொள்கையை வழங்க, களவியல், கற்பியல் என்ற இயல்கள் அகம்பற்றிய பாடுபொருளில் திருமணத்துக்கு முன்னும் பின்னும் அமையும் கவிதைத் தளங்களையும் கூற்றுகளையும் களவு, கற்பு என்ற கைகோள்களின் கீழ் தருகின்றன. பொருளியல் அகப்பாடல்களில் பயன்படும் சில இலக்கிய உத்திகளையும்

சிறப்புக்கூற்று மரபுகளையும் மையப்படுத்துகின்றது. மெய்பாட்டியல் இலக்கியத்தில் மெய்ப்பாடு அமையும் நிலையை வழங்க, உவமையியல் உவமையின் தன்மைகளையும் வகைகளையும் விளக்குகிறது. செய்யுளியல் கவிதையின் அமைப்பு, வகைமைக் கோட்பாடு, யாப்புக்கோட்பாடு போன்றவற்றை அளிக்கிறது. இறுதியாக அமையும் மரபியல் சொல், வருணனை போன்றவற்றைக் குறித்த மரபுகளை வழங்குகின்றது. (மேற்படி நூல் ப.43)

இவ்வாறு தமது புரிதலை முன்வைக்கும் இந்திரா மனுவேல் அவர்கள் மேற்படி பொருளதிகார இயல்களின் பொருண்மைகளைக் கவிதைக் கோட்பாட்டுநிலை சார்ந்து 'புற அமைப்புக்கூறுகள் - யாப்பு உறுப்புகள்', 'மொழி அல்லது மொழிநடைக்கூறுகள்', 'இலக்கியவகைமைக் கூறுகள்', 'உவமைக்கூறு', 'மெய்ப்பாட்டியல் கூறு' பாடுபொருட்கூறுகள் என அறுவகைப்படுத்துகிறார். இவற்றுள் 'புறஅமைப்புக் கூறுகள் - யாப்பு உறுப்புகள்' என்பன சார்ந்த சில விளக்கங்களை முன்வைத்தபின் அவர் நேரடியாகவே தமது தலைப்புக்கேற்ப பொருட்கூறுகள்பற்றி - அதாவது பாடுபொருள்கள் எனப்படும் அகம் மற்றும் புறம்சார் மரபுகள் பற்றி

விரிவாக விளக்கிச்செல்கிறார்.

இவ்வாறான மேற்சுட்டிய இருவருடைய (முனைவர்கள் ச. அகத்தியலிங்கம் மற்றும் இந்திரா மனுவேல் ஆகியோருடைய) பார்வைகள் மற்றும் அணுகுமுறைகள் ஆகியவற்றிலிருந்து பெருமளவு வேறுபட்ட ஒன்றாகவே பேராசிரியர் சிவத்தம்பியவர்களின் 'தமிழ்க் கவிதை வரலாற்றில் தொல்காப்பியக் கவிதையியல் - சில வினாக்களும் சிக்கல்களும்' என்ற தலைப்பிலமைந்த மூன்றாவது கட்டுரையின் பார்வை மற்றும் அணுகுமுறை ஆகியன அமைந்துள்ளன. முற்சுட்டிய இருவரும் பொருளதிகாரத்தின் மூலபாடம் மற்றும் உரைகள் சார்ந்த விளக்கங்களாக மட்டுமே தமது உரைப் பொருண்மைகளைக் கட்டமைத்துக் கொண்டவர்களாவர். அத்துடன் தொல்காப்பியத்தின் சிறப்பை விதந்துரைக்கும் உணர்வுநிலையும்(போற்றுதல் மனப்பாங்கும்) அவர்களை வழிநடத்தியமையை உய்த்துணர முடியும். குறிப்பாக அகத்தியலிங்கமவர்களின் எழுத்துகளில் இந்த உணர்வு வெளிப்படையாகவே இடம் பெற்றுளது. இதற்கு,

'... தொல்காப்பியரும் கைதேர்ந்த ஒரு இலக்கண அறிஞர். மொழியியல் வித்தகர். இலக்கணத்துக்கும் கவிதைக்கும் இடையே



உள்ள தொடர்பை நன்கு அறிந்தவர்... தாமே ஒரு கவிஞர் என்ற நிலையில் இதனை நன்கு உணர்ந்தவர்... இந்த அவருடைய சிந்தனையில் பூத்த கொள்கையே அவருடைய ஒருங்கிணைந்த பாவியல் கொள்கை. அக்கொள்கையில் முகிழ்ந்தவைதான் எழுத்தும் சொல்லும் பொருளும். அவை ஒருசேர ஆக்கப்பட்டதன் காரணமும் அதுவே.' என்பதாக அமைந்த அவருடைய கட்டுரையின் நிறைவுப்பகுதி (மேற்படி நூல் ப.38) தக்கதொரு சான்றாகின்றது.

ஆனால் சிவத்தம்பியவர்களின் பார்வை, அணுகுமுறை என்பன மேற்படி பொருளதிகாரத்தை ஒரு ஆய்வுப்பொருளாக மட்டுமே நோக்குவதாகும். அதாவது அவருடைய பார்வையானது ஆய்வுக்குரியதான புறநிலை அணுகுமுறை கொண்டமைந்ததாகும். அவ்வகையிலான அப்பார்வையானது தனியான துணைத்தலைப்பில் நோக்கப்படக்கூடிய முக்கியத்துவமுடையதாகும்

**பேராசிரியர் சிவத்தம்பியவர்களின் பார்வையில் தொல்காப்பியப் பொருளதிகாரம்:**

பேராசிரியர் சிவத்தம்பியவர்களின் மேற்படி தொல்காப்பியப் பொருளதிகாரக் கட்டமைப்பைப் பற்றிய பார்வையானது அக்காலத் தமிழகத்தின் 'கவிதைப் பண்பாடு'(poetic culture) மற்றும் அக்கால 'அனைத்திந்தியக் கவிதைமரபு' ஆகியவற்றின் பின்புலத்தில் நோக்கும் செயற்பாடாக அமைந்துளது. இந்நோக்குநிலையை அவர் இக்கட்டுரையின் தொடக்கத்திலேயே நமக்குத்தெளிவாக உணர்த்தியும் விடுகிறார். மேலும், 'இக்கட்டுரையை எழுதும் காலகட்டம் வரை(1997வரை) தொல்காப்பியப் பொருளதிகாரமானது கவிதையியல் நோக்கில் உரியவாறு அணுகப்படவில்லை' என்பதான தமது அவதானிப்பையும்கூட அவர் பதிவுசெய்துள்ளார். (மேற்படி நூல்: ப.61) இதன் தொடர்ச்சியாக அவர் முன்வைக்கும் விமர்சனக்குறிப்பொன்றும் இங்கு பதிவுபெறவேண்டிய முக்கியத்துவமுடையதாகும். அக்குறிப்பு வருமாறு:

'... தொல்காப்பியத்தை நாம்நோக்கும் முறைமை பற்றிய ஒரு பண்பினையும் குறிப்பிடவேண்டுவது அவசியமாகின்றது. குறிப்பாகத் தமிழ்நிலை நிற்கும் ஆய்வுகளில், தொல்காப்பியத்தை ஒரு தரவுக்களஞ்சியமாகக் கொள்ளும் முறைமையுண்டேயன்றி, அதன் அமைப்பினூடாக மேற்கிளம்பும் புலமைவாதத்தை நோக்கும் மரபு இல்லை. இது அந்நூலின் வரலாற்று முக்கியத்துவத்தைப் போதிய அளவில் வற்புறுத்தாதுவிடும் ஒரு செய்கையாகவே அமைந்துவிடுகிறது. (மேற்படி நூல்: ப.62).

மேற்படி விமர்சனத்திலே அவர் நமது கவனத்துக்கு இட்டுவரும் விடயம் தொல்காப்பியம் பற்றி நிகழ்ந்துள்ள ஆய்வுகளில் ஒருசாரானவை - அதாவது தமிழ்நிலை நின்ற பார்வைகள் - அந்நூல்தரும் தரவுகளைத் தொகுத்துரைக்க முற்பட்டனவேயன்றி அது புலப்படுத்திநிற்கும் புலமை மரபினுடைய வரலாற்று முக்கியத்துவத்தை எடுத்துப்பேச முற்படவில்லை என்பதேயாகும். இங்கே தமிழ்நிலை நின்ற ஆய்வுகள் எவை என்பதைச் சிவத்தம்பியவர்கள் வெளிப்படையாகச் சுட்டவில்லை. ஆயினும் தமிழின் தொன்மையான ஆக்கம் என்றவகையில் அதனைப் போற்றும்வகையில் மேற்கொள்ளப்பட்டுவந்திருக்கும் பல ஆய்வுச்செயற்பாடுகளையே அவர் சுட்டியுள்ளார் என்பதை உய்த்துணரமுடிகிறது.

மேற்சுட்டியவாறான விமர்சனத்தை முன்வைக்கும் அவர் புறநிலை நோக்குடன் அகன்ற தள பரிமாணத்தில் தொல்காப்பியத்தை அணுகும் ஆய்வுச்செயற்பாடுகள் நிகழ்ந்துவந்துள்ளன என்பதையும்கூட அவர் உணர்த்தத் தவறவில்லை. அவர் தனது இக்கட்டுரையாக்கத்திலே பேராசிரியர்கள் சோ.ந. கந்தசாமி, தெ.பொ.-மீனாட்சிசுந்தரனார், அ.மு. பரமசிவானந்தம் மற்றும் ஆய்வறிஞர் பெ. திருஞானசம்பந்தம் முதலான தமிழக ஆய்வாளர்களும் கமில் சுவலபில், ஜே.ஆர். மார் முதலான மேலைநாட்டுத் தமிழியலாளர்களும் தொல்காப்பியம் தொடர்பாக முன்வைத்துள்ள கருத்துகளைச் சான்றாதாரங்களாகக் குறிப்பிட்டுச் சென்றுள்ளமை இதனைத் தெளிவுறுத்தும்.

மேலே நோக்கியவாறாக தொல்காப்பிய ஆய்வுகள் தொடர்பான தமது அவதானிப்புகளை முன்வைத்துள்ள சிவத்தம்பியவர்கள் அவற்றையடுத்தே தனது பார்வைகளை முன்வைக்கத் தொடங்குகிறார். அவ்வகையில் முதலிலே தொல்காப்பியம் குறிப்பிடும் 'செய்யுள்', 'பா', 'புலனெறி வழக்கு' என்பன தொடர்பான சொற்பொருள் நிலையிலான விளக்கங்களை அடிப்படையாகக்கொண்டு வரலாற்றுப் பார்வையொன்றை அவர் முன்வைக்கிறார். அப்பார்வையின் தொடர்ச்சியாகவே பொருளதிகாரத்தின் இயலமைப்பு தொடர்பான அவருடைய அவதானிப்புகள் பதிவாகியுள்ளன. இவ்வகையில் முதலிலே 'செய்யுள்', 'பா', 'புலனெறி வழக்கு' என்பவற்றின் பொருண்மை சார்ந்து அவர் முன்வைத்த வரலாற்றுப்பார்வையை நோக்குவோம்.

அவ்விளக்கங்களிலே அவர் முன்வைத்துள்ள முக்கிய செய்தி, 'தமிழரின் பண்டைய இலக்கிய வரலாற்றின் நிலைமாறு காலமொன்றை அடையாளப்படுத்தும் ஆக்கமாகவே தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் திகழ்கிறது' என்பதாகும். தமிழின் பண்டைய இலக்கியங்கள் பற்றி நோக்குவோர் அவை, 'ஒரு காலத்தில் பாணர் பாடல்கள் என்றவகையில் வாய்மொழிப்பாடல்களாக உருவாகியிருந்தன எனவும் அவ்வாறான வரலாற்றியக்கத்தின் தொடர்ச்சியிலேயே குறித்த ஒரு கட்டத்தில் புலவர் பாடல்கள் என்றவகையிலான எழுத்துநிலைப்பட்ட இலக்கியங்கள் உருவாயின' எனவும் குறிப்பிடுவர். இவ்வாறான வரலாற்றியக்கத்திலே 'புலவர்களின் ஆக்கங்களாக உருவாகத்தொடங்கிவிட்ட வரலாற்றுக் கட்டத்தை அடையாளப்படுத்தும் சான்றாகவே மேற்படி பொருளதிகாரம் திகழ்கிறது' என்பதே பேராசிரியர் சிவத்தம்பியவர்களின் மேற்படி விளக்கங்களின் தெளிபொருளாகும்.

அவருடைய இவ்விளக்கங்களைத் தெளிந்துகொள்வதற்கு முதலிலே மேற்சுட்டிய 'செய்யுள்', 'பா', 'புலனெறி வழக்கு' ஆகியவற்றின் பொருண்மைகளை நாம் இங்கு நோக்குவது அவசியமாகிறது. 'செய்யுள்' என்ற சொல்லானது 'செய்கை' என்ற செயற்பாட்டை உணர்த்தும் 'செய்' என்ற சொல்லடியிலிருந்து தோன்றியதாகும். இதன்பொருள் 'செய்து உள்வைக்கப்படுவது' என்பதாகும். 'பாட்டு' என்பது பரந்துபட்டுச் செல்வதோர் ஓசையைச் சுட்டுவதான 'பா' என்ற அடிச்சொல்லினின்று உருவானதாகும். இது பாடுதல் என்ற செயற்பாட்டைச் சுட்டுவது. 'புலனெறி வழக்கு' என்பது புலமை நிலைப்பட்ட செயன்முறைமை' என்ற பொருளைத்தருவது. அதாவது 'புலவர்களின் ஆக்கங்களாக இலக்கியங்கள் படைக்கப்பட்ட முறைமையொன்றை இத்தொடர் அடையாளப்படுத்தி நிற்பது தெளிவு. இவ்வாறான இவற்றின் பொருண்மைளின் தளத்தில் நின்றே சிவத்தம்பியவர்கள் தமது விளக்கங்களை முன்வைக்கிறார்.

தொல்காப்பியம் குறிப்பிடும் செய்யுள், பாட்டு என்பவற்றை அவர் புலமைச் சூழலொன்றின் 'பிரக்ஞை பூர்வமான' - அதாவது திட்டமிட்டவகையிலமைந்த - செயற்பாடுகளாகவே காண்கிறார். இவ்வாறான அவருடைய பார்வைகளில் சிலவற்றை அவருடைய கூற்றுகளாகவே இங்கு நாம் நோக்கலாம்

'தொல்காப்பியத்தில் செய்யுளாக்கம் புலனெறியாகவே கொள்ளப்படுகிறது...', 'பாடல் புலனெறியின்பாற்பட்டதாகிவிட்டது. அது புலவருக்குரியதாக்கப்பட்டுவிட்டது. தொல்காப்பியம் இந்த நிலையிலேயே தோன்றுகின்றதென்பது மிக முக்கியமான ஒரு விமர்சன உண்மையாகும். அதாவது பாணர்மரபிலிருந்து விடுபட்டுப் பாடல் பிரக்ஞை பூர்வமான ஒரு புலமைத்தொழிற்பாடாகக் கருதப்படும் நிலையிலேயே தொல்காப்பியம் தோன்றியள்ளது. என்பது மிகத் தெளிவான உண்மையாகும்.' (மேற்படி நூல் பக்.64-65) ('பிரக்ஞை பூர்வம்' என்ற வடசொற்றொடரானது 'உணர்வுபூர்மானதும் புத்தித் தெளிவுடனும்' என்ற பொருளைத்தருவதாகும்)

அடுத்து, தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இயலமைப்பைப் பற்றிய அவருடைய பார்வைகளை நோக்குவோம். இவை தொடர்பான எடுத்துரைப்பிலே அவர் தொடக்கத்திலேயே அவற்றின் மூல பாடக் கட்டமைப்பின் தகைமை பற்றிய பிரச்சினைகளைக் கவனத்துக்கு இட்டுவருகிறார். அவ்வகையில் முதலில் அவ்வியல்களின் நூற்பாக்களின் ஒழுங்குமுறை தொடர்பாக நிகழ்ந்துள்ள விவாதங்களைப் பற்றிய தகவலொன்றை நமது கவனத்துக்கு முன்வைக்கிறார். அவ்வியல்களின் நூற்பாக்களின் ஒழுங்குமுறை பற்றிய பார்வைகளில் ஆய்வாளர்களான சோமசுந்தர பாரதியார், பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியர், ஜே.ஆர். மார் (J.R. Marr), கமில் சுவலபில் (Kamil Zvelebil) ஆகியோர் தம்முள் வேறுபட்டுள்ளனர் என்பதே அவர் தரும்செய்தியாகும். இதற்கான சான்றுகளாக அவர் தொல்காப்பியம் மர்ரே பதிப்பின் 127-30 பக்கங்களைக் குறிப்பிடுகிறார். (மேற்படி நூல் ப.65-) இவ்விடயப்பரப்பானது தனிநிலை ஆய்வுக்குரியதென்பதால் இங்கு மேலதிக விளக்கங்கள் தவிர்க்கப்படுகின்றன.

அடுத்து, முதல் ஐந்தியல்களில் அகத்திணையியல், புறத்திணையியல் ஆகியவற்றை அடுத்துள்ள மூன்று இயல்களான - களவியல், கற்பியல், பொருளியல் ஆகியவற்றின் தேவையும் பொருத்தப்பாடும் தொடர்பாக நிகழ்ந்துள்ள விவாதங்கள்பற்றி அவர் குறிப்பிடுகிறார். இம்மூன்று இயல்களும் 'காலத்தால் பிற்பட்டன' எனவும் இடைச்செருகல்களைக் கொண்டிருக்கக்கூடியவை எனவும் ஜே.ஆர். மார் கருதுகிறார் என்ற குறிப்பை அவர் (பேராசிரியர் சிவத்தம்பியவர்கள்) அங்கு பதிவு செய்துள்ளார். (மேற்படி நூல் ப.65) ஜே.ஆர். மார் அவர்களின் மேற்படி குறிப்பானது அவருடைய The Eight Anthologies, Madras, 1985 (pp: 54-55) என்ற நூலில் இடம்பெற்றதாகும்.

இவ்வாறான எடுத்துரைப்புகளின் தொடர்ச்சியிலேயே முன்னரே- முன்னைய கட்டுரையிறுதியில் - நாம் நோக்கியவாறான 'மெய்ப்பாட்டியல்' பற்றிய விமர்சனத்தை - அதாவது அவ்வியலானது ஒரு 'கொள்கைநிலை இடையீடு (theoratical intervention)' என்பதான தனது அவதானிப்பை பேராசிரியர் சிவத்தம்பியவர்கள் பதிவுசெய்துள்ளார். இந்த அவதானிப்பே அவரை ஏனைய ஆய்வாளர்களின் பொதுவான பார்வையிலிருந்து - அதாவது 'பொருளதிகாரமானது ஒருங்கிணைந்த கவிதையியல்' என்பதான பொது நோக்கிலிருந்து வேறுபடுத்துவது என்பதை முன்னைய கட்டுரையிறுதியில் நோக்கியிருந்தோம். இங்கே அவர் அவ்வாறு கருதியமைக்கான காரணிகள் தொடர்பான சிறு விளக்கமொன்றை இயன்ற அளவு சுருக்கமாக முன்வைக்க விழைகிறேன்.

## மெய்ப்பாட்டியல் 'கொள்கைநிலை இடையீடு'- என்பது பற்றிய புரிதல்:

இங்கே 'கொள்கைநிலை இடையீடு' என்ற தொடருக்கு அவர் விளக்கம் தரவில்லை. அத்தொடரானது பொதுவாக, 'குறித்த ஒரு சிந்தனையின் அல்லது கோட்பாடுசார் எடுத்துரைப்பின் தொடர்ச்சியிலே புதியதொரு கருத்தாக்கத்தைப் உட்புகுத்தல்' எனப்பொருள் தருவதாகும். பேராசிரியர் சிவத்தம்பியவர்கள் இங்கு மேற்படி தொடரையடுத்து முன்வைக்கும் விளக்கங்கள் மேற்படி பொதுப் பொருள் சார்ந்தனவாகவே உள்ளன என்பதே எனது புரிதலாகும். அதாவது, 'தொல்காப்பியத்தின் பொருளதிகார எடுத்துரைப்பின் பொதுவான போக்கிலே மெய்ப்பாட்டியலானது கொள்கைநிலை சார்ந்து உட்புகுத்தப்பட்ட ஒரு புதிய கருத்தாக்கமாகவே கொள்ளப்படவேண்டியது' என்பதே பேராசிரியர் சிவத்தம்பியவர்களின் கருத்து எனத்தெரிகிறது. இவ்வகையில் அவர் இடையீடு என்பதாகக் குறிப்பிடும் அம்சம், 'தமிழ் அகத்திணை மரபை அனைத்திந்திய இலக்கிய மரபுடன் தொடர்புறுத்திக் காட்டுதல்' என்ற நோக்குநிலை ஆகும்.

'அகத்திணை மரபை அனைத்திந்திய இலக்கியமரபின் பின்புலத்தில் வைத்துப்பார்ப்பதற்கான முயற்சியாகவே மெய்ப்பாட்டியலைக் கொள்ளல் வேண்டும்' என்ற அவருடைய கூற்று இதனைத் தெளிவுறுத்தும்.(மேற்படி நூல் ப.66)

இதனை நாம் மேலும் தெளிந்துகொள்வதற்கு முதலில் 'மெய்ப்பாட்டிய'லின் உள்ளடக்க அம்சம் பற்றி நோக்கவேண்டும். அவ்வியலில் இடம்பெறும் விடயம், 'உணர்வம்சங்கள் - குறிப்பாக நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய உணர்வு மற்றும் உணர்ச்சியம்சங்கள் - உடலில் வெளிப்படும் முறைமைகள்' பற்றியதாகும். 'மெய்ப்பாடு' என்பது 'மெய்யில் படும்நிலை' அதாவது உடலியக்கத்தினூடாக வெளிப்படும்நிலை என்ற பொருள்தருவதாகும். இவ்வாறான வெளிப்பாட்டு நிலை பற்றிய இலக்கணங்கூறும் ஆக்கமே பொருளதிகாரத்திலிடம்பெற்ற மெய்ப்பாட்டியல் ஆகும்.

மேற்படி உடல்சார் இவ்வெளிப்பாட்டு முறைமையானது பொதுவாக இலக்கியம் மற்றும் கலை வெளிப்பாடுகள் ஆகியவற்றுக்குப் பொதுவான ஒன்றாகும். ஆயினும் குறிப்பாக, நடனம்(ஆடல்) மற்றும் நாடகம் முதலிய நிகழ்த்துகலைகளுக்கே அது சிறப்புரிமை பூண்டதென்பது வெளிப்படை. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம்பெறும் மெய்ப்பாட்டியலானது இலக்கியத்துக்கான- அதாவது கவிதைக்கான - இலக்கணங் கூறும் நோக்கின் ஒரு பகுதியாகவே கொள்ளப்படக்கூடியதாகும். அவ்வாறுதான் உரையாசிரியர்களும் ஆய்வாளர்களுள் மிகப்பலரும்கூட அதனை விளக்கியுரைத்து வந்துள்ளனர் என்பதும் பொதுவாக நாமறிந்த செய்தியேயாகும்.

பேராசிரியர் சிவத்தம்பியவர்கள் கூட மேற்படி பொதுவான கருத்துநிலை சார்ந்து நின்றுதான் அவ்வியல்சார்ந்த தமது அவதானிப்புகளை முன்வைக்க முயன்றுள்ளார். அம்முயற்சியில் பிறர் - அதாவது உரையாசிரியர்களும் ஆய்வாளர்களுள் பலரும் - நோக்கமுற்பட்டிராத ஒரு அவதானிப்பு என்ற வகையிலேயே அவ்வியலானது, 'அகத்திணை மரபை அனைத்திந்திய இலக்கியமரபின் பின்புலத்தில் வைத்துப் பார்ப்பதற்கான முயற்சி' என்பதான கருத்தைப்பதிவு செய்துள்ளார். இவ்வாறான அவருடைய புரிதலுக்கான காரணம் அனைத்திந்திய நிலையிலே - குறிப்பாக வடமொழிமரபிலே - நிலவிவந்துள்ள 'ரஸ'க்கோட்பாட்டுக்கும் மெய்ப்பாட்டியலுக்கும் உள்ள விடயத்தொடர்பேயாகும்.

வடமொழியின் 'ரஸ'க்கோட்பாடானது நாட்டியத்தில் 'ரஸ'ங்கள்(சுவைகள்) வெளிப்படும் நிலைகள் பற்றியதாகும். சிருங்காரம்(காதல்), ஹாஸ்யம்(நகைச்சுவை), பயானகம்(பயம்) முதலான

பல்வேறுவகை ரஸங்கள் பற்றிப் பேசும் கோட்பாடு அது. வட மொழியிலே இக்கோட்பாடு சார்ந்த விளக்கங்களைத்தரும் தொன்மையான நூலாக அறியப்படுவது கி.மு. 2ம் நூற்றாண்டுக்கும் கி.பி 2ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டகாலத்தில் தோன்றியதாக அறியப்படும் பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரம் ஆகும். தொல்காப்பியத்தின் மெய்ப்பாட்டியல் கூறும் உணர்வம்சங்களான நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகியன மேற்படி நாட்டிய சாஸ்திரம் கூறும் 'ரஸ' வகைகளுடன் பெரிதும் ஒத்தமைவன. அவ்வகையில் இரண்டுமே 'கொடுக்கல் - வாங்கல் உறவு' கொண்டவை என்பதே ஆய்வாளர் மத்தியில் பொதுவாக நிலவிவரும் கருத்தாகும்.

இவ்வாறான இந்த உறவு நிலை பற்றி - அதாவது 'கொடுத்தவர்கள் யார்?, பெற்றுக்கொண்டவர்கள் யார்? என்பன பற்றி'- ஏற்கெனவே விவாதங்களும் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக ஆய்வறிஞர்களான பி.எஸ். சுப்பிரமணியசாஸ்திரி, பெ. திருஞான சம்பந்தம், ஜே.ஆர் மார் முதலிய பலர் இத்தகு விவாதங்களை நிகழ்த்தியுள்ளனர். இவ்வாறான விவாதநிலைப் பின்புலத்தைப் பேராசிரியர் சிவத்தம்பியவர்கள் இக்கட்டுரையில் சுட்டியுமுள்ளார்.(மேற்படி நூல்: ப.66) அவ்வகையில் இவ்விவாதங்கள் பற்றிய புரிதல்களின் தளத்தில் நின்றே அவர் மெய்ப்பாட்டியலை அணுகியுள்ளார் என்பது வெளிப்படை.

அவர் வடமொழியின் நாட்டியசாஸ்திர மரபே முற்பட்டதெனவும் அதுசுட்டும் 'ரஸக்கோட்பாடே அனைத்திந்திய நிலையிலானது எனவும் கருதியவர். அவ்வகையில் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலின் உருவாக்கத்துக்கு மேற்படி வடமொழி நாட்டியசாத்திர மரபு ஒரு காரணியாகவும் உந்துவிசையாகவும்கூட திகழ்ந்திருக்கக்கூடும் என அவர் ஊகித்துள்ளார். அவ்வாறான தமது ஊகத்தை நுட்பமாக உணர்த்தும் வகையிலே அவரின் மேற்படி, 'அகத்திணை மரபை அனைத்திந்திய இலக்கிய மரபின் பின்புலத்தில் வைத்துப் பார்ப்பதற்கான முயற்சி' என்ற கூற்றானது அமைந்துளது.

அதாவது, 'தொல்காப்பியமானது தான்கூறவந்த தமிழரின் இலக்கியக் கோட்பாட்டுக்கு - அனைத்திந்திய நிலையிலான ஒரு கோட்பாட்டுநிலைத் தொடர்பும் உளது என்பதை உணர்த்தும் வகையிலேயே மெய்பாட்டியல் என்பதான ஒரு தனி இயலை அமைத்துக் கொண்டுள்ளது' என்பதே சிவத்தம்பியவர்கள் இங்கு கூறவரும் செய்தி என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றது. இதனை உறுதிபடுத்தும் வகையிலமைந்த அவருடைய கூற்றொன்றும் இங்கு நமது பார்வைக்குரியதாகிறது. அக்கூற்று வருமாறு:

'எவ்வாறு நோக்கினும் மெய்ப்பாடு பற்றிய கோட்பாட்டினை நூல் அமைப்பின் அந்தக்கட்டத்தில் கொண்டுவருதல் மூலம் தொல்காப்பியம் தமிழின் தனித்துவமான இலக்கியமரபுகளை ரசக்கோட்பாட்டுடன் இணைத்து நோக்க முனைகின்றது என்பது புலனாகிறது.' (மேற்படி நூல் ப.67)

(இக்கூற்று தொடர்பாக இங்கு மேலதிக விளக்கமொன்று அவசியமாகிறது. 'தமிழின் தனித்துவமான இலக்கியமரபுகள்' என அவர் இங்கு குறிப்பிடுவது 'அகப்பொருள் மரபுகளை மட்டுமே அடையாளப்படுத்தி நிற்பது' என்பதே அவ்விளக்கமாகும். அவருடைய முன்னைய கூற்றில் 'அகத்திணை மரபை... என்றே சுட்டியுள்ளமை இங்கு நமது கவனத்துக்குரியது. தமிழில் அகத்திணை, புறத்திணை என இரு மரபுகளிருக்கும் நிலையில் மெய்ப்பாட்டியல் பற்றிய பார்வையை அகத்திணையை மையப்படுத்தியதாக அவர் பேசியுள்ளமைக்கான காரணம், அவ்வியல் அகத்திணைசார் மெய்ப்பாடுகளை மையப்படுத்தியதாகவே அமைந்துள்ளமையேயாகும். அவ்வியலின் 27 நூற்பாக்களில் முதல் 12 நூற்பாக்கள் மெய்ப்பாட்டின் வகைகளைப் பேச, அடுத்தமைந்த 13 நூற்பாக்கள் அகம்சார்ந்த மெய்ப்பாடுகள்சார் வழக்காறுகளையே பேசியுள்ளது என்பது இங்கு நமது கவனத்துக்குரிய செய்தியாகும்.)

தொல்காப்பிய மெய்ப்பாட்டியலானது 'கொள்கைநிலை சார்ந்த ஓர் இடையீடு' என்பதாக சிவத்தம்பியவர்கள் கருதியமைக்கான காரணிகள் பற்றிய பொதுவான புரிதலுக்கு மேலே இதுவரை தந்துள்ள இவ்விளக்கமே போதுமானவை எனக்கருதுகிறேன். இத் தொடர்பில் சிவத்தம்பியவர்கள் நமது கவனத்துக்கு முன்வைத்துள்ள மேலுமொரு முக்கிய செய்தியையுங்கூட இங்கு சுட்டுவது அவசியமாகிறது. அவர் மெய்ப்பாட்டியலை வடமொழியின் ரசக் கோட்பாட்டுடன் தொடர்புடைய ஒரு 'கொள்கைநிலை இடையீடு' எனக் கருதினாலும்கூட 'அவ்வியலின் பொருண்மையானது தமிழ்ப் பண்பாடு சார்ந்ததே என்பதை - அதாவது தமிழகச் சூழலின் அநுபவங்களின் தளத்திலேயே முகிழ்த்தது என்றே காண்கிறார்' என்பதே அந்த மேலதிக செய்தியாகும். அதாவது மெய்ப்பாட்டியலிற் கூறப்படுவனவான நகை, உவகை, அழுகை முதலிய மெய்ப் பாட்டு அம்சங்கள் தமிழகச்சூழலில் அக்காலத்தில் வழக்கிலிருந்துவந்த நிகழ்த்துகலை மரபுகளின் ஊடாக உருப்பெற்றவை என்பதே அச்செய்தியின் தெளிபொருளாகும். இதற்கு அவர் அவ்வியலின் முதலாம் நூற்பாவையும் அதற்கமைந்துள்ள பேராசிரியருரையையும் சான்றுகளாகக் காட்டுகிறார். மேற்படி மெய்ப்பாட்டியலின் முதலாவது நூற்பாவானது,

'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும் கண்ணிய புறனே நானான் காகும்' இதன் முதற்சொல்லான 'பண்ணை என்பது மெய்ப்பாடுகளின் நிகழ்தளமாகத் திகழ்ந்திருக்கக் கூடிய ஒரு அரங்கமொன்றைச் சுட்டிநிற்பதாகும். இவ்வாறான புரிதலுக்குத் துணைபுரிவது தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவரான பேராசிரியர் என்பார் மேற்படி நூற்பாவில் பண்ணை என்ற சொல்லுக்குத் தந்துள்ள உரைவிளக்கமாகும். அவ்விளக்கத்தின் ஒருபகுதி வருமாறு:

**'முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் முதலானோர்**
**நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும்**
**காமநுகரும் இன்பவிளையாட்டினுள் ...'**

'பண்ணை' பற்றிய மேற்படி குறிப்பையும் கலித்தொகை என்ற சங்கத் தொகைநூலில் இடம்பெறும் 'கேளிக்கைப்பாடல்' மரபுபற்றிய குறிப்பொன்றையும் இணைத்து நோக்கியுள்ள பேராசிரியர் சிவத்தம்பியவர்கள் சங்ககால இறுதியில் தமிழகச்சூழலிலே காமச்சுவை சார்ந்த பிரபுத்துவ அரங்கொன்று வழக்கிலிருந்ததாக முன்னரே அவரின் கலாநிதிப்பட்ட ஆக்கமான Drama in Anciant Tamil Society (Madras 1981) என்ற ஆய்வுநூலில் நிறுவியுள்ளார். அவ்வாறான தமது ஆய்வுமுடிபை அவர் தமது இக்கட்டுரையிலும் நினைவில் அவர் மீட்கிறார். (மேற்படி நூல்: ப.67) அதன் தொடர்ச்சியாக அவர் தரும் குறிப்புபொன்று இங்கு சுட்டப்படவேண்டிய முக்கியத்துவமுடையதாகும்.

'...மெய்ப்பாடு பற்றிய தொல்காப்பிய விளக்கம், ஏதோ ஒரு வகையில் தமிழ்நாட்டில் அக்காலத்தில் நிலவிய ஓர் ஆற்றுகை மரபுடனும் தொடர்புடையது என்பது புலனாகின்றது.' என்பதே அக்குறிப்பாகும். (மேற்படி நூல்: ப.67)

பேராசிரியர் சிவத்தம்பியவர்கள் தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தை நோக்கிய முறைமை என்றவகையில் இயலமைப்புசார் பார்வைகள் என்றவகையில் மெய்பாட்டியல் வரையான அவருடைய அவதானிப்புகள் இங்கே நோக்கப்பட்டன. மேலே நோக்கப்பட்டவாறான மெய்ப்பாட்டியல் பற்றிய பார்வையை அடுத்து, இறுதி மூன்றியல்களான 'உவமவியல்', 'செய்யுளியல்' மற்றும் 'மரபியல்' ஆகியன பற்றிய அவருடைய இயலமைப்புசார் பார்வைகள் தொடர்கின்றன. இவ்வாறான இயலமைப்புசார் பார்வைகளின் தொடர்ச்சியாகப் பொருளதிகாரம்பற்றிய ஒட்டுமொத்த அவதானிப்புகள் என்றவகையிலான பலகுறிப்புகளை அவர் தமது கட்டுரையில் பதிவுசெய்துள்ளார். அவ்விவரிப்புகளினூடாக பொருளதிகாரத்தின் முக்கியத்துவம், அதன் கோட்பாட்டம்சங்களைப் புரிந்து கொள்ளவேண்டிய முறைமை மற்றும் அவ்வாக்கத்துக்குப் பின்புலமாக அமைந்திருக்கக்கூடிய சமூக-பண்பாட்டு நிலைகள் முதலான பலவிடயங்கள் அவரால் நமது கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளன. அவை தனிநிலையில் விரிவாக எடுத்துரைக்கப்படவேண்டிய பொருட்பரப்புடையன என்பதால் இங்கு அவற்றுட்பலவும் எனது இக்கட்டுரைப் பகுதியில் தவிர்க்கப்படுகின்றன.

மேற்சுட்டியவாறான அவருடைய அவதானிப்புகளில் இக்கட்டுரையின் தேவையையொட்டிய சிலவற்றை மட்டுமே சுருக்கமாக இங்கு சுட்டி அவருடைய பார்வை தொடர்பான இக்கட்டுரைப்பகுதியை நிறைவுசெய்ய விழைகிறேன். இவ்வகையில் 'உவமவியல்', 'செய்யுளியல்' மற்றும் 'மரபியல்' பற்றிய அவருடைய பொது அவதா

னிப்புகள் மட்டும் இங்கு கவனத்துக்கு வரவுள்ளன.

## ‘உவமவியல்’, ‘செய்யுளியல்’ மற்றும் ‘மரபியல்’ - பொது அவதானிப்புகள்:

மேற்படி அவதானிப்பிலே குறிப்பாக உவமவியல் மற்றும் மரபியல் ஆகியன தொடர்பான அவதானிப்பிலே அவர் முன்வைத்துள்ள முக்கிய குறிப்புகள், பொருளதிகாரமானது வடமொழியோடு கொண்டிருக்கக்கூடிய தொடர்பை அடையாளங்காட்டுவனவாக அமைந்துள்ளன. முதலில், ‘மெய்ப்பாட்டிய’லைத் தொடர்ந்து ‘உவமவியல்’ அமைந்த முறைமை பற்றிய எடுத்துரைப்பினூடாக மேற்படி தொடர்புநிலையை அவர் அடையாளப்படுத்தியுள்ளார்.

‘மெய்ப்பாட்டியலைத் தொடர்ந்துவரும் உவமவியலும் (இளம்பூரணர் பாடம் உவமையியல்) மெய்ப்பாட்டியலைப்போன்ற ஒரு முற்கோள் முன்வைப்பாகவே உள்ளது. மெய்ப்பாடு ‘தொடர்பு’ படுத்தப்படும்(communicate) முறைமை ‘உவமை’ ஆகும். இதற்கும் வடமொழிப் பரிமாணம் உண்டு. என்பது அவர் தரும்விளக்கம்.(மேற்படி நூல் ப.68)

அடுத்து, மரபியல் பற்றிய எடுத்துரைப்பிலே முதலில் அவ்வியலானது சொல்வழக்கு மரபுகளையும் சமூகமரபுகளையும் நூலாக்கமரபுகளையும் கூறுவது எனக்குறிப்பிடும் அவர் அதன் தொடர்ச்சியில் ‘தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் வாசகர்யார்? அவர் எத்தகையவர்?’ என்ற வினாவை எழுப்பி அவற்றுக்கான விடைகளைத் தரும்வகையில் பின்வரும் குறிப்பை முன்வைத்துள்ளார்.

‘தொல்காப்பியப் பொருளதிகாரம் அமைக்கப்பட்டிருக்கும் முறைமையினை நோக்கும்பொழுது இது, தமிழிலக்கியப் பாரம்பரியத்தை வடமொழிக் கலை, இலக்கியப் பரிச்சியமுடைய ஒருவருக்கு அறிமுகப்படுத்துவதாக அதாவது அத்தகைய ஒருவர் தமிழில் எழுத முனையும்பொழுது தெரிந்திருக்கவேண்டிய மரபுகளை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளமை தெட்டத்தெளிவாக மேற்கிளம்புகின்றது. பொருளதிகாரத்தின் கட்டமைப்பு இந்த உண்மையை நமக்கு வன்மையாக எடுத்துரைக்கின்றது’ (மேற்படி நூல் ப.69).

‘செய்யுளியல்’ பற்றிய அவதானிப்பிலே அவர் நமது கவனத்துக்கு இட்டுவந்துள்ள முக்கிய செய்தி, ‘தொல்காப்பியர் பாவினையே கவிதையாகக் கொள்கிறார்’ என்பதாகும்.

இதுவரை தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பேராசிரியர் சிவத்தம்பியவர்கள் நோக்கிய முறைமைகளை அடையாளங்காட்டவல்ல சில முக்கிய குறிப்புகள் மட்டுமே இங்கு இதுவரை முன்வைக்கப்பட்டன. அவருடைய பார்வையானது புறநிலை சார்ந்ததாகவும் அனைத்திந்தியப் பின்புலத்தையும் உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளமையை மேலே நாம்நோக்கியுள்ளோம். தொல்காப்பியப் பொருளதிகாரம் தொடர்பான அவருடைய இவ்வகைப் பார்வை, அணுகுமுறை ஆகியவற்றை மேலும் விரிவாகத் தெரிந்து தெளியவிழைவோர் இதுவரை நாம் நோக்கிவரும் ‘தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் (கருத்தரங்கக்கட்டுரைகள்)’ என்ற நூலிலிடம்பெற்றதான, ‘தமிழ்க்கவிதை வரலாற்றில் தொல்காப்பியக் கவிதையியல் - சில வினாக்களும் சிக்கல்களும்’ என்ற தலைப்பிலமைந்த கட்டுரையை நோக்கலாம். இக்கட்டுரையானது பின்னர் அவர் வெளியிட்டதான ‘தொல்காப்பியமும் கவிதையும்’ என்ற நூலிலும் (குமரன் புத்தக இல்லம்-2007) இடம்பெற்றுள்ளது.

பேராசிரியர் சிவத்தம்பியவர்களின் மேற்படி கட்டுரைபற்றிய பார்வை இத்துடன் நிறைவுக்கு வருகிறது. ‘தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் (கருத்தரங்கக் கட்டுரைகள்)’ என்ற நூலின் ஏனைய கட்டுரைகள் பற்றிய பார்வைகள் அடுத்த கட்டுரையில் தொடரவுள்ளன.

(தொடரும்...)



subramanian.n@thaiveedu.com



# மீண்டும் ஒரு வாழ்வின் தொடக்கம்




**புதிய தேசம்:**

1991ம் ஆண்டு, ஜனவரி மாதம் 4ம் திகதி, வெள்ளிக்கிழமை, நான் ஓர் அகதியாக கனடாவில் ஒன்ராரியோ மாகாணத்தின் தலைநக ரான ரொறன்ரோவிற்கு வந்துசேர்ந்தேன். நாற்பது வயதில், ஒரு புதிய நாட்டில் மீண்டும் என் வாழ்க்கையை ஆரம்பிக்கவேண்டும். இலங்கையில் என் தொழில்வாழ்க்கையை உதறியெறிந்துவிட்டுவ ரும் முடிவு நானாக எடுத்ததுதானென்றாலும் இங்கு காலடியெ டுத்து வைத்தவுடனேயே நான் தவறுசெய்துவிட்டேனோவென்ற உணர்வுதான் மேலோங்கி நின்றது. அக்காலகட்டத்தில் அகதிநி லைகோரி வெளிநாடுகளில் தஞ்சமடைந்த அனைவரையும்போ லவே நானும் பிரிவு, ஏக்கம், விரக்தி, ஆற்றாமை, பயம் போன்ற சகல எதிர்மறை உணர்வுகளுக்கும் ஆட்பட்டேன். அப்போது ரொறன்ரோவில் வசித்த தமிழர்களில் முக்கால்வாசிப்பேர் அகதிக-ளாக வந்தவர்களே. இலங்கையிலிருந்து பெருமளவில் தமிழர்கள் அகதிகளாக வெளியேறத் தொடங்கிய 1983ம் ஆண்டுக்கு முன்னர் கல்வி, தொழில் முதலியவற்றுக்காகக் கனடாவந்து தங்கிவிட்ட மிகச்சொற்ப தொகையான தமிழர்கள், மத்தியகிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளில் தொழில்புரிந்துவிட்டு இலங்கை திரும்பாது கனடாவில் குடியேறிய குறைந்தளவிலான தமிழர்கள் மற்றும் 83ம் ஆண்டுக்குப் பின்னர் வந்தவர்களில் மிகமிகக் குறைந்த தொகை யினரான தமிழர்கள் மட்டுமே சொந்த வீடு முதலியவற்றோடு ஓர ளவு நிலையூன்றியிருந்தார்கள். நான் வந்த 91ம் ஆண்டளவில் ஓர ளவு கணிசமான தொகைத் தமிழர்கள் ரொறன்ரோவில் குடியேறி விட்டாலும் நூற்றுக்கு எழுபத்தைந்து சதவீதமானவர்கள் அகதிக-ளாகவே இருந்தார்கள். எனக்கு முன்னர் வந்த பலரது அகதிக் கோரிக்கை விண்ணப்பங்கள் தேக்கநிலையையடைந்துவிட்டதால் பலர் ஐந்து வருடங்களுக்கு மேலாகவும் தமது நிலை என்ன வென்று தெரியாமலிருந்தார்கள். அப்போது கனடா பாரிய பொரு ளாதாரப் பின்னடைவைச் சந்தித்திருந்தது. சொற்ப முற்பணத்தைச் செலுத்தி வீடு வாங்கிய பல தமிழர்கள் மாதாந்த வீட்டுக்கடனைச் செலுத்தமுடியாது தமது வீடுகளை வங்கிகளிடம் கையளித்து விட்டு வாடகைக் குடியிருப்புகளுக்குச் சென்றார்கள். இவ்வாறு நான் வந்தநேரமும் ஓர் இருண்ட காலப்பகுதியாக இருந்தது.

ஆனால் மக்கள் ஒன்றாக கஷ்டநிலைக்குள்ளாகும்போது ஒருவர் பாலொருவர் அன்பு, கரிசனை முதலியவற்றைக் காட்டுவது இயல் பாகத் தோன்றும் ஒரு நிலை. அந்தக் கஷ்டங்களில் நின்றும் மீள் வது தம் கையில் இல்லையென்று வரும்போதுதான் தம் நிலை-யொத்த சகமனிதரோடு ஒன்றிநிற்கும் மனநிலை வெளிப்படுகிறது. அந்தக் கஷ்டநிலையிலிருந்து தப்புவதற்கான ஒரு சிறு வழிதென் பட்டாலும் மற்றவர்களை ஏறிமிதித்துத் தப்பிச்செல்லும் சுயநலம் வெளிப்படும். 83ம் ஆண்டுக் கலவரத்தின்போது அகதிமுகாமுக் குச் சென்றதைப் பற்றி விபரித்தபோது இந்த மனித இயல்புபற் றியும் விபரித்திருக்கிறேன். நான் கனடாவந்தபோது தமிழர்கள் அனுபவித்த கஷ்டங்கள் அவர்களை மீறிய நிலை. எனவே, சக தமிழர்களிடம் ஆதரவாக நடந்துகொண்டார்கள். நான் சந்தித்தவர் களில் பலர் எனக்கு ஆதரவான வார்த்தைகளைச் சொன்னார்கள். 'இப்ப உங்களுக்குப் பெரிய மன அழுத்தமாகத்தானிருக்கும், போகப்போகச் சரியாகிவிடும்' என்று பலரும் கூறியபோது, அது சாதாரணமாக எல்லோரும் கூறும் வார்த்தைகள்தானென்றாலும் அப்போது சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த எனக்கு அந்த வார்த் தைகள் ஆறுதலளிப்பனவாக இருந்தன. அப்போது தமிழர்கள் சில சமூக ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தார்கள். ஒருவரிடம் என்ன வேலை செய்கிறீர்களென்றோ எவ்வளவு உழைக்கிறீர்களென்றோ கேட்கக்கூடாதென்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இலங்கை யில் நல்ல பதவிகளிலிருந்துவிட்டு இங்கு வந்து கனடிய அனுபவ மில்லாததால் சிறுசிறு வேலைகளைச் செய்துகொண்டு மிகக் குறைந்த ஊதியம்பெற்றுத் தம் வாழ்க்கையைக் கொண்டுசெல்ப வர்களிடம் அவர்களது தொழில், ஊதியம் பற்றிப் பேசினால் அதற்குப் பதில் சொல்வதற்கு சங்கடப்படுவார்கள், அவர்களது மனம் புண்படக்கூடுமென்ற நல்ல நோக்கமே தமிழ் மக்கள் அவ் வாறு மனிதநேயத்துடன் நடந்துகொள்வதற்குக் காரணமாக இருந் தது.

நானும் வந்தவுடன் ஓரிரு மாதங்கள் வேலையெதுவுமில்லாது, எனது தம்பியும் அவர் மனைவியும் வேலைக்குச் சென்றுவிடத் தனியே வீட்டிலிருந்து தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தேன். தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தேனேயன்றி என் மனம் இனி என்னசெய்யப் போகிறேனென்று சஞ்சலப்பட்டுக் கொண்டேயிருந்தது. அப்போது எனது உறவினரொருவரது வழி காட்டலில் கொழும்பில் உத்தியோகம் பார்த்துவிட்டு ஓரளவு ஆங் கில அறிவுடன் வந்தவர்கள் செய்த ரெலி மார்க்கெற்றிங் என்ற, தொலைபேசிமூலம் அமெரிக்கர்களுக்கு அதிஷ்டலாபச் சீட்டு விற் கும் தொழிலில் மிகச்சிறிதுகாலம் பணியாற்றினேன். அந்த நிறுவ னத்தில் ஏறக்குறைய அனைவருமே இலங்கைத் தமிழர்கள். அங்கே பணியாற்றிய அனைத்துத் தமிழர்களும் என்னைத் தெரிந் தவர்களாக இருந்தார்கள். அனைவருமே அக்கால கட்டத்தில்தான் கனடாவுக்கு வந்திருந்தமையால் இலங்கையில் நான் தொலைக் காட்சிச் சேவையில் உயர்நிலையிலிருந்ததை அறிந்தவர்கள். அதில் சிலர் ரூபவாஹினி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்களாகவு மிருந்தனர். அவர்கள் திடீரெனத் தம்மிடையே என்னைக் கண்டதும் ஆச்சரியப்பட்டார்கள். 'நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள?' என்று என் னைக் கேட்டபடியே இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் எனது பிரச்சினையைச் சொல்லமுடியாது மிகவும் சங்கடத்துக்குள்ளா னேன். இருந்தபோதிலும் அனைவரும் இலங்கைத் தமிழர்களே பணியாற்றிய அந்தச் சூழ்நிலையில் அங்கு சென்று அவர்கள் மத் தியில் புழங்குவது மனதுக்கு சற்று ஆறுதலாகவும் இருந்தது. ஆனால் என்னால் அந்தப் பணியைச் சரிவரச் செய்யமுடிய வில்லை. என்னிடம் வியாபாரம்செய்யும் ஆற்றல் இருக்கவில்லை.




அதேவேளை பல தமிழர்கள் அதை மிகச்சிறப்பாகச்செய்து, அந்த நிறுவனத்தில் பணியாற்றும் அனைவரது கவனத்தையும் பெற்றிருந்தார்கள். எனது துறையாகிய ஒலி, ஒளிபரப்புத் துறைக ளுக்குள் நுழைவது கனடியர்களுக்கே மிகவும் சிரமமானது. ஆங் கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டிருக்காத ஒரு புதிய குடிவர வாளர் அந்தத் துறைகளை நினைத்தே பார்க்கமுடியாது. எனவே, கனடாவில் நான் ஒரு பூஜ்ஜியநிலையிலுள்ள மனிதனாக உணர்ந் தேன்.

எனக்கு ரெலி மார்க்கெற்றிங்கிற்குச் செல்ல ஆலோசனை கூறிய உறவினரே ரொறன்ரோ மாநகரிலுள்ள கொண்டமேனியம் என்று அழைக்கப்படுகின்ற அடுக்குமாடிக் கட்டடமொன்றில் கொன்சி யேர்ஜ் (concierge) என்ற பணியில் சேர்வதற்கு உதவிசெய்தார். கட்டடத்தின் வரவேற்புக் கூடத்திலுள்ள மேசையில் (front desk) அமர்ந்திருந்து வரவேற்பாளர் போன்று செயற்படும் பணி. காலப் போக்கில் அது பாதுகாவலர் (security) பணியாக மாற்றப்பட்டு விட்டது. பாதுகாவலராகப் பணியாற்றுவதற்கு உரிமம் (license) பெறவேண்டும். அப்பணியை இரவில் செய்துகொண்டே பகலில் கணக்கியலில் சான்றிதழ் பெறுவதற்கான பாடங்களை ஈஸ்ட் யோர்க் வளர்ந்தோர் கல்விநிலையத்திலும் ஜோர்ஜ் ப்றவுண் கல்வி நிலையத்திலும் கற்று சான்றிதழைப் பெற்றேன். கணக்கியலில் அரிச்சுவடிகூடத் தெரியாத நான் முதலில் மிகவும் சிரமப்பட்டேன். கமலா தம்பிராஜாவின் சினேகிதியான புனிதா என்பவரின் கணவர் பழனிச்சாமி ஒரு கணக்காளர். இருவரும் கமலா தம்பிராஜாவுடன் இலங்கையில் வீரகேசரிப் பத்திரிகையில் பணியாற்றியவர்கள். பழனிச்சாமியும் என்னுடன் ஜோர்ஜ் ப்றவுண் கல்லூரியில் கணக்கி யல் கற்கவந்த விமல் என்பவரும் நான் கணக்கியலைப் புரிந்து கொள்வதற்கு மிகவும் உதவினார்கள். சிறிதுகாலத்திலேயே வகுப் பில் நடத்தப்படும் பரீட்சைகளில் A, A+ என்று மதிப்பெண்களைப் பெறுமளவுக்கு முன்னேறிவிட்டேன். ஒன்றைச் செய்ய வேண்டு மென்று தீர்மானித்துவிட்டால் அதைச் செய்துமுடிப்பதற்கு மிகுந்த மனஉறுதியுடன் கடுமையாக உழைக்கும் எனது இயல்பு கணக் கியல் படிப்பதற்கும் உதவியது. சான்றிதழைப் பெற்றவுடனேயே நான் பணியாற்றிக்கொண்டிருந்த கொண்டமேனியத்தை நிர்வகிக் கும் நிறுவனத்திலேயே கணக்கியல் பிரிவில் பணிக்குச் சேர்ந்து விட்டேன்.

Wallace McBain and Associates Ltd என்ற, கொண்டமேனியக் குடி யிருப்புகளை நிர்வகிக்கும் நிறுவனத்தின் கணக்கியல் பிரிவில் ஒரு ஆரம்பநிலை உத்தியோகத்தராக 1993ம் ஆண்டு, ஃபெப்ரவரி மாதத்தில் பணிக்குச் சேர்ந்த நான், 1997ம் ஆண்டு, அந்த நிறு வனம் நிர்வகித்துக்கொண்டிருந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட குடியி ருப்புகளின் நிதிநிலையறிக்கை (Financial Statements) தயாரிக்கும் கணக்காளர்களில் ஒருவராக உயர்ந்துவிட்டேன். 1999ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் நான் பணியாற்றிய நிறுவனம் ரொறன்ரோவின் மிகப்பெரும் குடியிருப்பு நிர்வாக நிறுவனமான Greenwin நிறுவ னத்துடன் இணைந்தபின்னர் அங்கு சில மாதங்கள் கணக்காள ராகப் (Proerty Accountant) பணியாற்றிவிட்டு, நான் ரொறன்ரோ வில் இறுதியாகப் பணியாற்றிய Affortable Property Management Inc. என்னும் நிறுவனத்தில் 2000ம் ஆண்டு, மார்ச் மாதம் இணைந் துகொண்டேன். அந்த நிறுவனம் நான் சேர்ந்தபோது வருமானம் குறைந்தவர்கள் வசிக்கும் குடியிருப்புகளை நிர்வகிக்கும் பணி- களை மட்டுமே செய்துகொண்டிருந்தது. நான் அங்கு பணிக்கமர்ந் ததும் கொண்டமேனியம் குடியிருப்புகளையும் நிர்வகிக்கும் நிறுவ- னமாக மாற்றுவதற்கான ஆலோசனைகளை வழங்கி, அதற்கான பிரிவு ஆரம்பிக்கப்பட்டபோது, எனது கணக்காளர் பதவியோடு அந்தப்பிரிவையும் நிர்வகித்தேன். அங்கு கணக்கியல் பிரிவின் தலைவராகப் பணிக்குச் சேர்ந்த நான் சில வருடங்களின் பின்னர் பிரதான நிதி, நிர்வாக உத்தியோகத்தராகப் (Chief Financial Officer - CFO) பதவிஉயர்வு பெற்று, அந்த நிறுவனத்தில் பல தமி ழர்களுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கக்கூடிய நிலையிலி ருந்தேன். அந்த நிறுவனத்தில் இருபத்திரண்டு வருடங்கள் தொடர்ந்து பணியாற்றியபின்னர் 2021ம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் 30ம் திகதி ஓய்வுபெற்றேன்.



கமலா தம்பிராஜா - தேமதுரம்

1990ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 5ம் திகதி வானவில் பாலத்தின் (Rainbow Bridge) ஊடாகக் கனடாவைநோக்கி நடந்துவரும்போது என் எதிர்காலம் என்னவென்று தெரியாத நிலையில் வந்த நான், இந்த முப்பத்திரண்டு வருடங்களாக ஓய்வின்றி உழைத்தமைக்கு எப்போதும்போலவே எனது விடாமுயற்சிதான் காரணம். நான் கனடாவில் எனது தொழிலோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. பல துறைகளில் ஈடுபாடு காட்டி, கனடியத் தமிழ்ச் சமூகத்தின் நடவ- டிக்கைகளில் நான் ஆற்றிய பங்குபற்றி மேலும் விளக்குகிறேன்.

## மீண்டும் ஒலிபரப்பு:

சகலவற்றையும் துறந்து கனடாவுக்கு வந்து எனது தம்பியின் வீட்டில் தங்கியிருந்த ஆரம்பநாட்கள் மிகுந்த துன்பம் நிறைந்ததாக இருந்ததென்று கூறியிருந்தேன். அதுவரை ஓயாது பணிசெய்து கொண்டு சமூகத்தில் ஒரு முக்கியத்துவம்வாய்ந்த நிலையிலிருந்த எனக்கு திடீரென ஒன்றுமே செய்யாது என்ன செய்யப்போகிறேனென்று எதுவுமே தெரியாது வீட்டிலிருப்பது ஒரு பயங்கரமான அனுபவமாக இருந்தது. பனியும் குளிரும் வேறு எனது மனதின் சுமையை அதிகரிக்கச்செய்தன. என்னுடன் ஒலி, ஒளிபரப்புத் துறைகளில் இலங்கையில் பணியாற்றியவர்களில் சிலர் ஏற்கனவே கனடாவில் குடியேறியிருந்தார்கள். அவர்களுடன் பேசுவது மனதுக்கு ஆறுதலாக இருக்குமென்றெண்ணி அவர்களது தொடர்புகளைத்தேடிப் பெற்றுக்கொண்டேன். எனக்கு ஒலிபரப்பில் ஆசானாக இருந்த சீ.வீ. இராஜசுந்தரம் அவர்கள் எனது தம்பி வசித்த ஸ்காபரோ நகரிலேயே வசிப்பதை அறிந்தபோது மனதில் தெம்பு பிறந்தது. அவரைத் தொடர்புகொண்டு பேசி, கனடாவுக்குவந்த மூன்றாம்நாளே, ஜனவரி 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தம்பியுடன்



K. சிவசோதி - CTBC

இராஜசுந்தரம் அவர்களது வீட்டுக்குச்சென்று அவரை நேரில் பார்த்தது பெரும் ஆறுதலாக இருந்தது. அவர் 'இலங்கை இப்போதிருக்கும் நிலையில் அங்கிருந்து நீ நினைப்பவை எவற்றையுமே செய்ய முடியாது. நீ எடுத்த முடிவு மிகச் சரியானது' என்று சொன்னபோது, அந்த வார்த்தைகள் மனதுக்கு இதமாகவும் நம்பிக்கை தருவனவாகவும் இருந்தன. இராஜசுந்தரம் அவர்கள் மேலும் ஒரு மகிழ்ச்சியான தகவலைச் சொன்னார். என்னுடன் ஒரே நாளில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளராகப் பணிக்குச் சேர்ந்து பின்னர் ஒன்றாகவே வர்த்தக நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது பணியைவிட்டு நீங்கி ஸம்பியா நாட்டுக்குச் சென்றுவிட்ட எஸ். ஜெயபாலன் ரொறன்ரோவில் இருக்கிறார் என்பதே அந்த மகிழ்ச்சியான தகவல். ஜெயபாலனது தொடர்பு எண்ணை எப்படியோ கண்டுபிடித்து அவருடன் தொடர்புகொள்ள ஏழுநாட்களாகிவிட்டன. நான்காம் திகதி வெள்ளிக்கிழமை கனடா வந்த நான், பதினொராம் திகதி வெள்ளிக்கிழமை ஜெயபாலனைத் தொலைபேசியில் அழைத்தேன். அப்போது எனக்கு பேரதிர்ச்சியான தகவல் கிடைத்தது. மறுமுனையில் தொலைபேசியை எடுத்தவர் ஜெயபாலன் நேற்றுத்தான், ஜனவரி 10ம் திகதி இறந்துவிட்டாரென்றும் இறுதி நிகழ்வுகள் அடுத்தநாள் நடைபெறவிருப்பதாகவும் சொன்னார். அந்த அதிர்ச்சி எனது துன்பங்களை மறக்கச்செய்துவிட்டது. அடுத்தநாள் தம்பி ஞானேஸ்வரன், இராஜசுந்தரம் அவர்களையும் என்னையும் ஜெயபாலனின் உடல் வைக்கப்பட்டிருந்த மண்டபத்திற்கு அழைத்துச்சென்றார். கனடாவில் நான் முதல்முதலாகச் சென்ற மரணச்சடங்கு ஜெயபாலனுடையது. ஜெயபாலனைப்பற்றி மிக விரிவாக எனது ஒலிபரப்பு அனுபவங்களை எழுதும்போது இந்த நூலில் விபரித்திருக்கிறேன்.

தொடர்ந்து, ரூபவாஹினியின் தொழில்நுட்பப்பிரிவில் பணியாற்றிய சிறீனிவாசன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி ஆகியவற்றில் பணியாற்றிய கமலா தம்பிராஜா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ் வாத்தியக்குழுவில் புல்லாங்குழல் கலைஞராகவும் பின்னர் இசைப்பிரிவில் தயாரிப்பாளராகவும் பணியாற்றிய கமலா சதாசிவம் ஆகியோரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டும் நேரில் சென்றும் சந்தித்துப் பேசுவது மனதுக்கு மகிழ்ச்சிதரும் அனுபவமாக இருந்தது. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராகப் பணியாற்றிவிட்டுக் கனடாவுக்குக் குடிபெயர்ந்த நண்பர் சிவசோதியும் அப்போது ரொறன்ரோவில் வசித்தார். அவரை நான் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது மிகுந்த பரபரப்படைந்து தான் வந்து என்னைத் தனது வீட்டுக்கு அழைத்துச்செல்வதாகக்கூறி ஒருநாளைக் குறிப்பிட்டார். அது ஒரு வார இறுதிநாளென்று நினைக்கிறேன். அதுவரை பல தடவைகள் என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிக் கொண்டேயிருந்தார். சிவசோதியை நான் எழுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து அறிவேன். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இளைஞர் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவரும் அவர் மிகவும் கலகலப்பானவர். அவர் முதலில் நடராஜசிவத்துடன் நட்பானார். ஒருநாள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வரவேற்புக் கூடத்தில் நானும் நடராஜசிவமும் இருந்து பேசிக்கொண்டிருந்தவேளையில் அங்குவந்த சிவசோதியை அழைத்து எம்மருகே அமரச்சொன்ன நடராஜசிவம், அவரை எனக்கு அறிமுகம்செய்து வைத்தார். அப்போது நடராஜசிவம் அவரிடம் கே.எஸ். ராஜாவைப்போல் அறிவிப்புச் செய்து காட்டுமாறு கூற, சிவசோதி உடனேயே அப்போது மிகப்பிரபலமாக விளங்கிய கே.எஸ். ராஜாவின் புதுமையான அறிவிப்புப் பாணியில் அறிவிப்புச் செய்துகாட்டினார். அதிலிருந்து எனக்கும் பழக்கமானார் சிவசோதி. நாடகத் தயாரிப்பாளர் கே.எம். வாசகரோடும் நட்புக்கொண்டிருந்த அவர் அடிக்கடி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் காணப்படுவார். பின்னர் 1978ம் ஆண்டு வர்த்தக சேவையில் பகுதிநேர அறிவிப்பாளராகப் பணியாற்றுவதற்குத் தெரிவான சிவசோதி, கே.எஸ். ராஜா போலல்லாது தனது சொந்தக்குரலிலே ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பாரம்பரிய பாணியில் அறிவிப்புகளைச் செய்தார். அவர் நல்ல குரல்வளத்தைக் கொண்டிருந்தார். சிவசோதி பகுதிநேர அறிவிப்பாளராகத் தெரிவானபோது ஜெயகிருஷ்ணராஜா, அருட்கடாட்சம், எம்.எஸ். விக்னேஸ்வரன், லோகேஷ், மோகனதாஸ், ரட்ணபாலன், வசந்தி ஷண்முகம் ஆகிய பலர் பகுதிநேர அறிவிப்பாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். இவர்களில் ஜெயகிருஷ்ணராஜா எனது ஊராகிய காங்கேசன்துறையில் வசித்தவர். அவரை சிறுவயதுமுதல் அறிவேன். லோகேஷ் யாழ்ப்பாணத்தில் மிகநீண்டகாலம் மேடைநிகழ்ச்சிகளின் அறிவிப்பாளராகவும் யாழ்ப்பாணம் நவீனசந்தை, பேரூந்துநிலையம் முதலியவற்றில் இயங்கிய ஒலிபரப்புச்சேவைகளில் அறிவிப்பாளராகவும் பணியாற்றிய அனுபவத்தோடு ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தகசேவையில் அறிவிப்பாளராக இணைந்தார். எம்.எஸ். விக்னேஸ்வரன் வானொலி நாடக நடிகராகவும் தெரிவானவர். நான் தயாரித்த ஒதெல்லோ நாடகத்தில் நடித்தவர். இவரும் அருட்கடாட்சமும் தேசியசேவையில் அறிவிப்பாளர்களாகப் பணியாற்றினார்கள். வசந்தி ஷண்முகம் பிரபல எழுத்தாளர் சீ. ஷண்முகம் அவர்களதும் அறிவிப்பாளர் இராஜேஸ்வரி ஷண்முகம் அவர்களதும் மகள். இரட்ணபாலனும் மோகனதாஸும் முற்றிலும் புதியவர்கள். இந்த இருவரில் இரட்ணபாலன் மெல்லிசைப்பாடகராகவும் விளங்கினார்.

இவர்கள் அனைவரும் நான் தயாரிப்பாளராகப் பணியாற்றியபோது அறிவிப்பாளர்களாக இணைந்து கொண்டவர்கள். தயாரிப்பு உதவியாளராகப் பணியாற்றியபோது அறிவிப்பாளர்களுடன் நெருங்கிப்பணியாற்றியதுபோல் இவர்களுடன் பணியாற்றச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வளாகத்திற்குள் காணும் இடங்களில் அவ்வப்போது பேசுவதே வழக்கமாக இருந்தது. 1981ம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து நான் ரூபவாஹினிப் பணிகளில் மூழ்கிவிட்டதால் வானொலி நிலையத்தில் பணியாற்றிய பலருடன் தொடர்பு விட்டுப்போய்விட்டது. அந்தக் காலப்பகுதியில் விரிவுபடுத்தப்பட்ட கண்டி ஒலிபரப்புச் சேவையில் பணியாற்றிய சிவசோதியை நான் 83ம் ஆண்டுக் கலவரத்தின்போது அகதிமுகாமில் சந்தித்தேன். நாம் அகதிமுகாமிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற சிலநாட்களில், சுகவீனமுற்ற எமது மகளை இணுவில் வைத்தியசாலையில் நாம் வைத்திருந்தபோது அங்குவந்து பார்த்துச்சென்ற சிவசோதியை 1991ம் ஆண்டு ஜனவ

ரியில் கனடாவுக்கு வந்துதான் சந்தித்தேன்.

சிவசோதி தொலைபேசியில் கூறியவாறு வாரஇறுதிநாளொன்றில் மனைவியுடன் வந்து என்னை அழைத்துச்சென்று உபசரித்தார். இவ்வாறு எனது துறையில் பணியாற்றியவர்களுடன் பழகத் தொடங்கியதும் எனது மனம் ஆறுதலடைவதை என்னால் உணர முடிந்தது. இப்படி நான் வேலை, படிப்பு, பழைய நண்பர்களுடன் தொடர்பு என்று எனது செயற்பாடுகள் சிறிதுசிறிதாக விரிவடையத் தொடங்க நான் மெல்லமெல்லக் கனடா வாழ்க்கைக்குப் பழக்க மாகத் தொடங்கினேன்.

இந்தநேரத்தில் எனது தம்பி ஞானேஸ்வரன் ரொறன்ரோவில் ஒரு தமிழ் வானொலிச் சேவையை ஆரம்பிக்கவேண்டுமென்ற தனது நீண்டநாள்த் திட்டத்தைச் செயற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்



P. ஞானேஸ்வரன் - தேமதுரம்

டார். அவருக்கு சிறுவயதிலிருந்தே வானொலி, தொலைக்காட்சி, சினிமா போன்ற துறைகளில் ஆர்வமிருந்தும் அத்துறைகளில் ஈடு படுவதற்கு சூழ்நிலை இடம்கொடுக்கவில்லை. இலண்டனுக்குச் சென்று தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புத் துறையில் படித் துவிட்டு நாடுதிரும்பிய அவர் கொழும்பில் பெற்ற கசப்பான அனு பவத்தைத் தொடர்ந்து கனடாவுக்குப் புறப்பட்ட சம்பவம்பற்றி நான் ஏற்கனவே எழுதியிருக்கிறேன். 1986ம் ஆண்டு, கனடாவுக்கு வந்த அவருக்கு இங்கு ஓரளவு காலூன்றியவுடனேயே தமிழ் வானொலிச்சேவையொன்றை ஆரம்பிக்கும் எண்ணம் உருவானது.

அப்போது ரொறன்ரோவில் ‘தமிழ்ச்சோலை’ என்னும் வாரம்தோறும் ஞாயிறு காலை பத்துமணி தொடக்கம் பத்தரைவரை ஒலிபரப்பா கும் ஒரு வானொலிச்சேவை இயங்கிக்கொண்டிருந்தது. CJMR 1320 A.M வானொலியூடாக இடம்பெற்ற இந்த ஒலிபரப்பை 1991ம் ஆண்டு, ஞானபண்டிதன் நடத்திக்கொண்டிருந்தார். தமிழ்ச் சோலை வானொலிச்சேவை, 1987ம் ஆண்டு, ஜனவரி மாதம் 4ம் திகதி கலைஇலக்கியத் துறைகளில் இயங்கிக்கொண்டிருக்கும் பா. சிறீஸ்கந்தன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன் னர் 1980களின் தொடக்கத்திலேயே இலங்கையின் மிகப்பிரபல மான மூத்த அறிவிப்பாளர் எஸ்.பீ. மயில்வாகனம் அவர்கள் கன டாவுக்குவந்து வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் தமிழ் வானொலி நிகழ்ச்சியொன்றை ஒலிபரப்பியதாகத் தகவல் இருந்த போதும் அதை உறுதிப்படுத்த முடியவில்லை. நான் வந்த காலப் பகுதியில் ரொறன்ரோவில் சில ரெலிஃபோன் செய்திச்சேவைகள் இயங்கிக்கொண்டிருந்தன. சில எண்களைத் தொடர்புகொண்டால், ஒலிப்பதிவுசெய்யப்பட்ட தமிழ்ச் செய்தியறிக்கையைக் கேட்கமுடி யும். அவை எத்தனை நாட்களுக்கொருமுறை புதுப்பிக்கப்பட்டன என்று தெரியவில்லை. சில செய்திச் சேவைகளில் பல நாட்க ளுக்கு ஒரேசெய்தி கேட்டுக்கொண்டிருக்கும். இருந்தபோதிலும் பலர் இந்தச் செய்திச் சேவைகளுக்கு டயல் செய்வதையே தமது பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர். குறிப்பாக, பாதுகாவலர்க ளாக (Security Guards) இரவில் வேலை செய்பவர்கள் இவற்றைப் பெருமளவில் கேட்டார்கள். இலங்கையின் தமிழ் இயக்கங்களை இங்கு பிரதிநிதித்துவப்படுத்துவோரால் இந்தச் சேவைகள் நடத் தப்பட்டன. ஞாயிற்றுக்கிழமைகளில் பத்துமணி முதல் பத்துமுப் பது வரை ஒலிபரப்பாகும் தமிழ்ச்சோலை வானொலியை நாட்டில் குடும்பத்தைவிட்டுத் தனியாக இங்குவந்து, அங்கு என்ன நடக்கிற தென்று தெரியாமல் இங்கு அடுக்குமாடிக்குடியிருப்புகளில் கூட் டாகத் தங்கியிருந்த தமிழர்கள் தவறாது கேட்டார்கள்.

இப்படியானதொரு காலகட்டத்தில் தான் ஞானேஸ்வரன் ஒக்வில்லி லிருந்து இயங்கும் CHWO என்ற வானொலிச்சேவையில் ‘தேம- துரம்’ என்னும் ஒரு மணித்தியால வாராந்த சஞ்சிகை நிகழ்ச்சியை 1991ம் ஆண்டு, ஜூலை மாதம் 5ம் திகதி ஆரம்பித்தார். 1250 A.M. அலைவரிசையில் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் ஒலிபரப் பான தேமதுரம் நிகழ்ச்சி செய்தி, செய்தி விமர்சனம், சினிமா விமர் சனம், பாடல்கள், நேர்காணல், உரை முதலியவற்றைக் கொண்ட சஞ்சிகை நிகழ்ச்சியாகத் (magazine) தயாரிக்கப்பட்டது.

இதை ஆரம்பித்தபோது இலங்கையில் ஒலிபரப்பு அனுபவம் கொண்ட கமலா தம்பிராஜா, சிவசோதி, நான் எல்லோரும் சேர்ந்து ஒரு தொழில்முறைத்தரத்தில் நடத்தலாமென்று நினைத்து சிவசோ தியைத் தொடர்புகொண்டபோது, அவருக்கும் நீண்டநாட்களாக அப்படி ஒரு வானொலிச்சேவையை ஆரம்பிக்கும் திட்டமிருப்ப தாகக் கூறினார். கூறியபடியே தேமதுரம் ஆரம்பித்த அடுத்த மாதம், 1991ம் ஆண்டு, ஒகஸ்ட் மாதம் 14ம் திகதி, தேமதுரம் நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்ட CHWO 1250 A.M. வானொலி நிலை யத்திலிருந்தே ‘சங்கநாதம்’ என்னும் தமிழ்ச் சஞ்சிகை நிகழ்ச்சியை ஆரம்பித்தார். அவரைத் தொடர்ந்து இசையமைப்பாளர் எம்.பி.- கோணேஷ் ‘இராகப்பிரவாகம்’ என்ற பெயரில் வானொலிச் சஞ் சிகை நிகழ்ச்சியொன்றை அதே CHWO 1250 A.M. வானொலி நிலையத்தினூடாக செப்ரெம்பர் மாதத்திலிருந்து ஒலிபரப்பைத் தொடங்கினார்.

நான் கொண்டமேனியக் குடியிருப்புக் கட்டடத்தில் 1991ம் ஆண்டு, ஜூன் மாதத்தில் பணியாற்றத் தொடங்கினேன். அப்போது கணக்



M.P.கோணேஷ் - றேடியோ ஏஸியா

காளருக்கான எனது படிப்பையும் தொடங்கியிருந்தேன். எனது வேலைத்தளமும் படிக்கும் கல்லூரியும் டவுண் ரவுண் (Down Town) என்று சொல்லப்படுகின்ற ரொறன்ரோ நகரின் மையப்பகு தியில் அமைந்திருந்ததால் அப்பகுதியை அண்மித்த வெலஸ்லி அன்ட் பார்ளிமென்ற் (Wellesley and Parliament) பகுதியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அங்கு குடியிருக்கப் போய்விட்டேன். நான் ரெலி மார்க்கெற்றிங்கில் பணியாற்றச் சென்றபோது அங்கு பணியாற்றிய பல தமிழர்களில் தர்மசீலன், சுந்தரேசன் ஆகியோர் என்னுடன் நட்புக்கொண்டதால் நாம் மூவரும் பஷீர் (Basheer) என்ற நண்பருடன் சேர்ந்து அந்த வீட்டை வாடகைக்கு எடுத்துத்

தங்கினோம். எம்மிடம் அப்போது கார் இல்லாதபடியால் நகரின் மையப்பகுதியில் வசிப்பது பொதுப்போக்குவரத்தைப் பாவித்து எமது அன்றாட அலுவல்களை மேற்கொள்ளச் சுலபமாக இருந் தது. மேலும், நாம் வசித்த அந்தப் பகுதியிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில் அப்போது கனடாவுக்குக் குடிபெயர்ந்திருந்த ஏராளமான தமிழ்மக்கள் வசித்தனர். வெலஸ்லி அன்ட் பார்ளி-மென்ற் அப்போது பல தமிழ்க் கடைகளைக் கொண்ட ஒரு பரப ரப்பான தமிழ்ப்பிரதேசமாக இருந்தது. அந்தப் பகுதியில் அப் போது ‘தேடகம்’ என்ற தமிழ் வாசிகசாலை இயங்கியது. அந்த வாசிகசாலை, எப்போதுமே பத்திரிகைகள், சஞ்சிகைகளைப் படிப் பதற்கென வரும் அப்பகுதியில் வசிக்கும் தமிழ்மக்களால் நிறைந் திருக்கும் இடமாக இருந்ததால் மாலைவேளைகளில் அந்தப் பகுதி தமிழர்களால் நிறைந்து எமக்கு யாழ்ப்பாணத்தில் இருப்பது போன்ற உணர்வைத் தந்தது.

நாளடைவில் அந்தப்பகுதியில் வாடகைக்குக் குடியிருந்த மக்கள், தமது வாழ்க்கைத்தரம் முன்னேற, சொந்தமாக வீடுகளை வாங்கிக் கொண்டு ரொறன்ரோவின் பல பகுதிகளிலும் அதைச் சுற்றியுள்ள நகரங்களிலும் பரவி வாழத்தொடங்கினார்கள். இப்போது முப்பத் தியொரு வருடங்கள் கழிந்து, தமிழர்களின் வாழ்க்கைத்தரமும் அந்தஸ்த்தும் உயர்ந்துவிட்ட நிலையில் தமிழர்கள் பிரமாண்ட மான வீடுகளில் வாழத்தொடங்கிவிட்டார்கள். அப்போது வந்த முதல்ச் சந்ததியினர் தாம் குடியேறிய புதிய நாட்டில் சிறுசிறு வேலைகளைச் செய்து, கடுமையாக உழைத்து தம்மை நிலைநி றுத்த முயன்றார்கள். இப்போது அவர்களின் சந்ததியினர் பல்க லைக்கழகப் பட்டதாரிகளாக, மிக உயர்ந்த உத்தியோகம் பார்ப்ப வர்களாக, தொழில்முனைவோராக (entrepreneur) வெற்றியடைந்த வர்களாக, அரசியல்ப் பலம் மிக்கவர்களாக முன்னேறி, பாரம்ப ரிய கனடிய சமூகத்தோடு சமமாக வாழும்நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். என் கண்முன்னே நடந்த மாற்றம் இது. இப்போது பார்ளிமென்ற் வெலஸ்லிப் பகுதி ஓய்ந்துபோயிருக்கி றது. 1991ம் ஆண்டு நான் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்திற்கும் 2022ம் ஆண்டு நான் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ்ச் சமூகத்திற்குமி டையே மிகப்பெரும் வேறுபாட்டைப் பார்க்கிறேன்.

நான் கனடாவுக்கு வந்த காலம்தான் தமிழ்மக்கள் தம்மை ஒரு உறுதியான சமூகமாக நிலைநிறுத்தும் முயற்சிகளை ஆரம்பித்தி ருந்த காலம். நான் வந்த ஆண்டிலேயே மூன்று புதிய தமிழ் வானொலிச்சேவைகள் ஆரம்பிக்கப்பட்டமை அதற்கான அறிகுறிக ளில் ஒன்று என்று சொல்லலாம். 1991ம் ஆண்டு, ஜனவரியில் வந்த நான், முதல் ஒன்றிரண்டு மாதங்கள் மனச்சோர்வுற்றிருந்த போதும் நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் என்னை நிலை நிறுத் தும் பலவித முயற்சிகளில் ஈடுபடத்தொடங்கியதும் மீண்டும் எனது வாழ்க்கை பரபரப்பானது. இரவில் வேலை, பகலில் படிப்பு என்று சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கினேன். மாலைவேளையில் கணக் கியல் படிக்கும் கல்லூரிக்கும் போகவேண்டிய நாட்களில் எனக்கு இருபத்திநான்கு மணித்தியாலங்களில் ஒன்றிரண்டு மணித்தியா லங்களே உறங்குவதற்கு நேரம் கிடைத்தது.

நான் ஜனவரி மாதத்தில் கனடாவுக்கு வந்தேன். ஜுலை மாதம் தேமதுரம் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 6.00 மணியளவில் ஞானேஸ்வரன் ஸ்காபரோவிலிருந்து பத்திரிகையாளர் D.B.S. ஜெயராஜை தனது காரில் அழைத்துக் கொண்டு ரொறன்ரோவில் நான் இருந்த பகுதிக்கு வருவார். அங்கு நான் இருந்த வீட்டுக்கு அண்மையில் நிறைந்திருந்த வானளாவிய அடுக்குமாடிக் குடியிருப்புகளில் ஒன்றில் கமலா தம்பிராஜா வசித்தார். எங்கள் இருவரையும் காரில் ஏற்றிக் கொண்டு அதேபகுதியிலுள்ள தேடகம் வாசிகசாலைக்குச் சென் றால் அங்கு ரதன் ஆயத்தமாக நிற்பார். அவரையும் ஏற்றிக் கொண்டு சுமார் அறுபது கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஓக்வில் லுக்குச் சென்று அங்குள்ள வானொலிநிலையத்தில் எமது நிகழ்ச் சியை ஒலிப்பதிவுசெய்து ஒலிநாடாவைக் கொடுத்துவிட்டு வந்தால் நிகழ்ச்சி பத்துமணிக்கு ஒலிபரப்பாகும். காரில் வரும்போதே நிகழ்ச்சியைக் கேட்டுக்கொண்டு வருவோம். ரொறன்ரோ வந்ததும் நான் பணியாற்றும் கட்டடத்தில் இரவு வேலைக்காக இறங்கிக் கொள்வேன்.

இப்படியாக எனது ஒலிபரப்புப்பணி மீண்டும் கனடிய மண்ணில் ஆரம்பித்தது.

தேமதுரம் வானொலிச்சேவையின் ஓராண்டு பூர்த்தி ஒன்ராரியோ சயன்ஸ் சென்ரர் மண்டபத்தில் 1992ம் ஆண்டு கொண்டாடப்பட் டது. அதில் இலங்கையின் மூத்த ஒலிபரப்பாளர்களும் என்னை



ரதன் - தேமதுரம்

ஒலிபரப்புத்துறையில் உருவாக்கியவர்களுமான, அப்போது கன டாவில் குடியேறிவிட்ட கலாநிதி. கே.எஸ். நடராஜா அவர்களும் சீ.வீ. இராஜசுந்தரம் அவர்களும் கௌரவிக்கப்பட்டார்கள். அதே தினம் சங்கநாதம் நிகழ்ச்சியின் ஒருவருடப் பூர்த்தியை, அந்த நிகழ்ச்சிமூலம் கனடியத் தமிழர்கள் மத்தியில் இளையபாரதி என அறிமுகமாக ஆரம்பித்திருந்த சிவசோதியும் கொண்டாடினார். அதற்கு எமது நண்பரான பி.எச். அப்துல் ஹமீடை பிரதம விருந் தினராக இலங்கையிலிருந்து அழைத்திருந்தார். அதுதான் ஹமீட் மேற்கொண்ட முதலாவது வடஅமெரிக்கப் பயணமாக அமைந்தது. அதன்பின்னர் நண்பர் ஹமீட் இதுவரை கனடாவுக்குப் பல பய ணங்களை மேற்கொண்டுவிட்டார்.

தொடர்ந்து, ஓக்வில்லுக்குச்சென்று தேமதுரம் நிகழ்ச்சி ஒலிப்பதி வைச் செய்த நாம், எம்.பீ. கோணேஷ் ஸ்காபரோ, விக்ரோறியா வீதியில் ஒரு ஒலிப்பதிவுக் கலையகத்தை அமைத்ததும் ஞானேஸ் வரன் அந்தக் கலையகத்தில் தேமதுரம் ஒலிப்பதிவைச்செய்து, ஒலிப்பதிவுசெய்த ஒலிநாடாவை வானொலிநிலையத்திற்குக் கைய ளிக்கத் தொடங்கினார். இந்த ஏற்பாடு எமக்கு ஒவ்வொரு வெள் ளிக்கிழமையும் கட்டாயமாக ஓக்வில்லுக்குச் செல்லவேண்டியிருந்த நிலையை மாற்றி, எமக்கு வசதியான நேரத்தில் ஸ்காபரோவி-லேயே ஒலிப்பதிவைச் செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்தியது. இதனால் கலாநிதி. கே.எஸ். நடராஜா அவர்களையும் தேமதுரம் நிகழ்ச்சியில் பங்குபற்றவைக்க முடிந்தது. கே.எஸ். நடராஜா அவர்கள் திடீரென மாரடைப்பால் மரணமாகும்வரை தேமதுரத்தில் தொடர்ந்து உரை நிகழ்ச்சியை வழங்கினார். தேமதுரம் நிகழ்ச் சியை நான் தொகுத்து வழங்கினேன். கமலா தம்பிராஜா செய்திக ளைத் தொகுத்து வாசித்தார். அவர் வீரகேசரியில் பணியாற்றிய மையால் அவருக்கு வீரகேசரியுடன் தொடர்புகொண்டு செய்திக ளைப் பெறமுடிந்தது. இப்போதுபோல் வலைத்தளங்களைப் பார்த்து செய்தி எழுதக்கூடிய வசதி அப்போது இருக்கவில்லை. D.B.S. ஜெயராஜ் செய்திவிமர்சன நிகழ்ச்சியைச் செய்தார். D.B.S. ஜெயராஜ் இலங்கையில் ஒரு முன்னணிப் பத்திரிகையாளராக விளங்கியவர். 1987ம் ஆண்டு, இந்திய அமைதிப்படையினர் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளை முதல்முதலில் வெளியுலகிற்கு அறிவித்ததன் மூலமும் அதைத் தொடர்ந்த சம்ப வங்கள் மூலமும் இலங்கை மக்களுக்கு நன்கு அறிமுகமானவ

ராக இருந்தவர். அவர் ஆங்கிலத்தில் எழுதுவதால் தமிழ்ச்சமூகத்திற்கு வெளியேயும் அறியப்பட்ட மிகச்சில தமிழ்ப் பத்திரிகையாளர்களில் அவரும் ஒருவர். அந்தக் காலகட்டத்தில் அவரது கட்டுரைகளைப் படித்திருந்தேனேயன்றி அவர் வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றில் பேசி அறிந்ததில்லை. ஆனால் தேமதுரம் நிகழ்ச்சியில் செய்திவிமர்சனம் செய்தபோது அவர் தங்குதடையின்றி சரளமாகப் பேசியது எனக்கு ஆச்சரியமாகவும் சந்தோஷமாகவுமிருந்தது. ரதன் வானொலியில் சினிமாபற்றி முதல் முதலாகப் பேசியது தேமதுரம் நிகழ்ச்சியில்தான் என்று நினைக்கிறேன். இப்போது முப்பது வருடங்கள் கடந்துவிட்டநிலையில் ரொறன்ரோவில் முன்னணி அரசியல், சமூக மற்றும் சினிமா விமர்சகராக ரதன் வளர்ந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. தேமதுரத்தில் கே.எஸ். நடராஜா, கவிஞர். கந்தவனம் ஆகியோர் அவ்வப்போது உரை நிகழ்ச்சிகளையும் செய்தார்கள். ஒலிபரப்பு விதி-முறைகளை மீறாது, ஈழத்தமிழர்களுக்குப் பெருமைதேடித்தந்த இலங்கை வானொலியின் ஒலிபரப்புத் தரத்துக்கமையவே தேமதுரம் நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டுத் தயாரித்து ஒலிபரப்பப்பட்டது. அதில் ஒருமுறை நடிகமணி. வீ.வீ. வைரமுத்து அவர்களின் ‘அரிச்சந்திர மயானகாண்டம்’ நாடகப் பாடலை ஒலிபரப்பினோம். அந்த தேமதுரம் நிகழ்ச்சியை ஒரு கஸட்டில் பதித்து, அப்போது இலங்கையிலிருந்த நடிகர் கே.எஸ். பாலச்சந்திரனுக்கு அனுப்பியிருந்தேன். அவர் அதைக் கேட்டுவிட்டு நல்லதோர் விமர்சனத்தை இலங்கையிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்றில் எழுதியிருந்தார். அந்தப் பத்திரிகைப் பகுதி என்னிடமுள்ள ஆவணங்களுக்குள் புதைந்திருக்குமென்று நினைக்கிறேன். கிடைத்தால் இந்நூலில் பிரசுரிப்பேன். அவர் எழுதியிருந்ததை அப்படியே எனக்கு ஞாபகப்படுத்த முடியாவிட்டாலும் ‘எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கப்பால் கனடிய வானலைகளில் வீ.வீ. வைரமுத்து அவர்க



D.B.S. ஜெயராஜ் - தேமதுரம்

ளின் குரல் ஒலித்திருக்குமென்று நினைக்கையில் சிலிர்ப்பாக இருக்கிறது’ என்ற பொருள்பட எழுதியிருந்தார்.

1992ம் ஆண்டின் நடுப்பகுதியில் வெலஸ்லி வீதியில் நாமிருந்த வீட்டிற்கு அருகேயிருந்த அடுக்குமாடிக் குடியிருப்புக்குக் குடி-யேறினோம். அந்தக் குடியிருப்பில்தான் கமலா தம்பிராஜா வசித்தார். அவர் இருந்தது பதினெட்டாவது மாடியில், நாம் இருபத்தொன்பதாவது மாடிக்குக் குடிபெயர்ந்தோம். எங்களுடனிருந்த பஷீர் அங்கு வரவில்லை. தர்மசீலனும் சுந்தரேசனும் நானும் அங்கு சென்றோம். தர்மசீலனும் சுந்தரேசனும் இலங்கையில் முறையே இளைஞர்சேவை மன்றத்திலும் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திலும் உயர்பதவி வகித்தவர்கள். இம்முறை எம்முடன் வசிப்பதற்கு கிருஷ்ணலிங்கமும் சேர்ந்துகொண்டார். அவர் பின்னர் இளையபாரதியின் CTBC வானொலியில் பணியாற்றிவிட்டு இப்போது தொடர்ந்தும் ஊடகப்பணி செய்துகொண்டிருக்கிறார். அவர் எம்முடன் வசித்தபோதே வானொலியில் ஆர்வம்கொண்டிருந்ததை அவதானித்தேன். எம்முடன் ஓக்வில் வானொலி நிலையத்திற்கும் வந்திருக்கிறார். அந்த நேரத்தில் இலண்டனிலிருந்து கனடாவுக்கு



1992ம் ஆண்டு தேமதுரம் கலையகத்தில் கிருஷ்ணலிங்கம்

குடிபெயர்ந்திருந்த எஸ். சிறீஸ்கந்தராஜாவும் (தமிழோசை) ஞானேஸ்வரனுடன் இணைந்து தேமதுரம் தயாரிப்பில் உதவி செய்துகொண்டிருந்தார்.

1993ம் ஆண்டு ஜுன் மாதம் 6ம் திகதி எனது மனைவி, பிள்ளைகள் கனடாவுக்கு வந்து சேர்ந்தார்கள். எனது அகதிநிலைக் கோரிக்கை மனு ஏற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து சகல குடிவரவு, குடியகல்வு நடவடிக்கைகளும் முறைப்படி காலதாமதமின்றி நடந்தேறியது. அதேயாண்டு ஃபெப்ரவரி மாதத்தில் கொண்டமேனியக் குடியிருப்புகளை நிர்வாகம்செய்யும் நிறுவனமொன்றின் கணக்கியல்ப்பிரிவில் வேலையும் கிடைத்துவிட்டது. இப்போது இலங்கையை விட்டுவந்த துன்ப நினைவுகள் மறைந்து, கனடிய வாழ்க்கைக்குப் பூரணமாகத் தயாராகிவிட்டேனென்று உணர்ந்தேன்.

எம்.பீ. கோணேஷ் இராகப்பிரவாகம் வானொலி நிகழ்ச்சியை நிறுத்திவிட்டு CIAD 530 A.M. வானொலியில் அதிகநேரத்தை வாங்கி, றேடியோ ஏஸியா என்னும் தமிழ் வானொலிச்சேவையை ஆரம்பித்திருந்தார். அதுவரை தேமதுரம், சங்கநாதம், இராகப்பிரவாகம் முதலிய வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பான CHWO 1250 A.M. வானொலி ஒலிபரப்பு தமிழர்கள் அதிகமாக வாழும் ஸ்காபரோப் பகுதியில் தெளிவாகக் கேட்பதில்லையென்ற குறைபாடிருந்தது. கோணேஷின் றேடியோ ஏஸியா வானொலி ஒலிபரப்பு தமிழர்கள் வாழும் பகுதிகளில் மிகத் தெளிவாகக் கேட்கக்கூடியதாக இருந்ததால் அது மிகவும் விரைவாக மக்களிடையே பிரபலமடைந்தது. அந்த நேரத்தில் இளையபாரதியும் தனது சங்கநாதம் நிகழ்ச்சியை நிறுத்தியிருந்தார். அதற்கான காரணம் அப்போது ஒருவருக்கும் தெரியவில்லை. இதனால் ஞானேஸ்வரனும் ஓக்வில் வானொலி நிலையத்தைவிட்டு கோணேஷின் றேடியோ ஏஸியா ஒலிபரப்பில் ஒரு மணித்தியாலத்தை வாங்கி தேமதுரம் நிகழ்ச்சியை CIAD 530 A.M. வானொலியூடாக ஒலிபரப்பத் தொடங்கினர். கோணேஷின் றேடியோ ஏஸியா வானொலிநிலையம் ஃபார்மஸி - மக்னிக்கல் பகுதியில் அமைந்திருந்தது. நான் பணிசெய்த நிறுவனமும் அதே பகுதியிலேயே அமைந்திருந்ததால் வேண்டிய நேரங்களில் எனக்கு நடந்தே அங்கு செல்லமுடிந்தது. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிவிட்டுக் கனடாவுக்குக் குடிபெயர்ந்த வசந்தா நடராஜனும் றேடியோ ஏஸியாவினூடாகத் ‘தமிழ்ஒலி’ என்னும் நிகழ்ச்சியைத் தயாரித்து ஒலிபரப்பத் தொடங்கினார்.

1993ம் ஆண்டளவில் ஞானேஸ்வரன், தேமதுரம் வானொலி நிகழ்ச்சியோடு அதேபெயரில் ஒரு வீடியோ சஞ்சிகையை வெளியிடும் முயற்சியையும் மேற்கொண்டாராயினும் அதனை அவரால் தொடர

முடியவில்லை. பின்னர் ஞானேஸ்வரன் 1994ம் ஆண்டளவில் தேம துரம் நிகழ்ச்சியை எஸ். சிறீஸ்கந்தராஜாவிடம் கையளித்துவிடவே, சிறீஸ்கந்தராஜா அதைத் 'தமிழோசை' என்ற பெயரில் தொடர்ந்து நடத்தினார். தமிழோசை வானொலியில் நான் செய்தி வாசித்தேன். அந்தக் காலகட்டத்தில் கோணேஷுடன் றேடியோ ஏஸியா வரை பயணித்த நடா. ராஜ்குமார், அதிலிருந்து பிரிந்துசென்று 'கீத-வாணி' என்னும் வானொலி நிகழ்ச்சியைத் தயாரித்து ஒலிபரப்ப ஆரம்பித்தார். சங்கநாதம் நிகழ்ச்சியை நிறுத்தியிருந்த இளைய பாரதி சிலகாலம் கழித்து 1995ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 9ம்



S. சிறீஸ்கந்தராஜா - தமிழோசை

திகதி கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (CTBC) என்ற பெயரில் இருபத்திநான்குமணிநேர தமிழ் ஒலிபரப்புச் சேவை-யொன்றைப் பெரியளவில் ஆரம்பித்தார். இதற்கென அவரால் சந் தைப்படுத்தப்பட்ட பிரத்தியேக வானொலிப் பெட்டியில்தான் CTBC நிகழ்ச்சிகளைக் கேட்கமுடியும். CTBC தமிழ் வானொலிச் சேவைதான் சர்வதேசத்திலுமே தமிழ் ஒலிபரப்பில் மேற்கொள்ளப் பட்ட முதல் இருபத்திநான்கு மணித்தியால வானொலிச்சேவை-யென்று நினைக்கிறேன். அது ரொறன்ரோவாழ் தமிழ் மக்களி டையே குறிப்பாக, முதியவர்களிடம் மிகுந்த வரவேற்பைப்பெற் றது. பிள்ளைகள் தமது வயதுமுதிர்ந்த பெற்றோருக்கு CTBC வானொலிப்பெட்டிகளை வாங்கிக்கொடுத்தார்கள். தமது சொந்த நிலத்தில் ஒருகாலத்தில் சுதந்திரமாக உலாவிவிட்டு, கனடாவுக் குத் தமது பிள்ளைகளோடு வந்து வீடுகளில் முடங்கிக்கிடந்தவர் களுக்கு CTBC வானொலியின் சேவை மிகுந்த ஆறுதலும் மகிழ்ச் சியுமளிக்கும் ஒரு சேவையாகப் பல வருடங்கள் நிலைத்து நின் றது.


CTBCயில் இளையபாரதியுடன் இணைந்து பணியாற்றிய சிலர் அதன் ஒருவருடப் பூர்த்தியின் பின்னர் பிரிந்துசென்று CTR (கனடி யத் தமிழ் வானொலி) என்ற வானொலிச்சேவையை ஆரம்பித் தார்கள். இவ்வாறாக கனடாவில் கடந்த முப்பது வருடங்களில் தமிழ் வானொலிகள் பல்கிப் பெருகியதை நான் அறிந்தாலும் அவற்றின் முழுவிபரங்களும் எனக்குத் தெரியாது. இங்கு நான் எழுதுபவையெல்லாம் எனக்குத் தெரிந்தவற்றை மட்டுமே.

ஞானேஸ்வரனுக்குத் தேமதுரம் வானொலிச்சேவையில் உதவிபு ரிந்த சிறீஸ்கந்தராஜா தமிழோசை வானொலியை நடத்தத் தொடங்கியதும் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க 'வாழ்ந்து பார்க்கலாம்' என்ற வானொலி நாடகத்தை தமிழோசைக்காக எழு தித் தயாரித்து வழங்கினேன். 1995ம் ஆண்டு, ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை தமிழோசையில் வாரந்தோறும் ஒலிப ரப்பப்பட்ட இந்த நாடகத்திற்கு ஸ்காபரோவில் அப்போது பிரபல மாகவிருந்த ஜெயசாயி நகைமாளிகையினர் அனுசரணை வழங் கினார்கள். சிறீஸ்கந்தராஜா ஸ்காபரோவில் வசித்த அடுக்குமாடிக் குடியிருப்பிலுள்ள வீட்டில் அவர் அமைத்திருந்த கலையகத்தி-லேயே இதன் ஒலிப்பதிவு நடைபெற்றது.

இந்த நாடகத்தில் இலங்கை வானொலியில் சானா அவர்களது காலத்திலிருந்தே நடித்த சோதிநாதன் அவர்களும் வாசகரின் காலத்திலும் பின்னர் எனது காலத்திலும் நடித்த திலகா தில்லை-நாதன், சிவா சங்கரப்பிள்ளை ஆகியோரும் நடித்தார்கள். இவர் கள் அனைவரும் அப்போது கனடாவில் குடியேறியிருந்தார்கள். சோதிநாதன் அவர்கள் இந்த நாடகத்தில் நடித்த பின்னர் சொற் பநாட்களிலேயே காலமாகிவிட்டார். தொடர்ந்து சிவா சங்கரப்பிள் ளையும் காலமானார். திலகா தில்லைநாதன் மீண்டும் இலங்கை திரும்பிவிட்டார். மேற்சொன்னவர்களுடன் கவிஞர். கந்தவனம், அருட்செல்வி அமிர்தானந்தர், எம். கலாதரன், சிவஞானச்செல்வன் சரவணபவசர்மா, சங்கீதா நவநீதசிங்கம், திருமதி. பேரம்பலம், மயூரன் மோகன், பரமயோகன் ஆகியோர் நடித்தனர். இந்த நாட கத்தை வெற்றிகரமாகத் தயாரிப்பதற்கு சிறீஸ்கந்தராஜா மிகக் கடுமையாக உழைத்தார். நாடக ஒலிப்பதிவுக்கு நடிகர்களைக் குறித்தநேரத்தில் கொண்டுவந்து சேர்ப்பது, ஒலிப்பதிவு முடிந்த தும் கொண்டுசென்று விடுவது என்று ஓடியோடி வேலைகள் செய்து நாடக ஒலிப்பதிவு எவ்வித இடையூறுமின்றி நடைபெற உதவினார். கனடாவில் எப்போதுமே என்மீது மரியாதையும் அன் பும்கொண்டு உதவும் பல இளைஞர்களை அவ்வப்போது ஒவ் வொரு பணியை ஆற்றும்போதும் சம்பாதித்திருக்கிறேன். அந்த நண்பர்கள் பட்டியலில் முக்கிய இடம்வகிப்பவர்களில் எஸ்.சிறீஸ்-கந்தராஜாவும் ஒருவர்.

'வாழ்ந்து பார்க்கலாம்' நான் கனடாவில் தயாரித்த ஒரேயொரு வானொலி நாடகம். இது தமிழோசையில் ஒலிபரப்பப்பட்டபோது இலங்கை வானொலியில் நாடகம் கேட்கும் அனுபவத்தைத் தந்த தாகப் பலர் பாராட்டினார்கள். இந்த நாடகத்தின் பிரதி பின்னர் 1998ம் ஆண்டு, நூலுருவில் கனடாவில் வெளியிடப்பட்டது.

நான் தமிழோசையில் செய்திவாசித்துக் கொண்டிருக்கும்போது 1995ம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் இளையபாரதி CTBC வானொ லிச்சேவையை ஆரம்பித்ததும் சிறீஸ்கந்தராஜா தனது தமிழோசை வானொலிச்சேவையையும் CTBCயுடன் இணைத்து நடத்த முடி-வெடுத்தார். அதன்காரணமாக மிகச்சிறிது காலம் CTBC வானொ லியிலும் நான் செய்தி வாசித்தேன். பின்னர் கோணேஷ் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரது றேடியோ ஏஸியாவிலும் ஒருசில மாதங்கள் செய்தி வாசித்தேன். ஆனால் பின்னர் அவ்வாறு செய்தி வாசிப்பதை நான் நிறுத்திக்கொண்டேன். காரணம், இலங்கையில் தொழில்முறை வானொலி நிலையத்தில் நான் செய்தி வாசித்த போது மிகத் தெளிவாக, அச்சடித்துத் தரப்படும் செய்தியறிக்கை யைத் தட்டுத்தடங்கலின்றி வாசித்த எனக்கு கனடாவில் அப்போது அனைத்து வானொலிச் சேவைகளிலும் கையினால் எழுதித் தரப் படும் செய்தி அறிக்கையை வாசிப்பது சிரமமாக இருந்தது. அது மட்டுமல்ல, அந்தச் செய்திகளைத் தொகுத்தவர்கள் அவற்றை வானொலிச் செய்தியாக எழுதுவதற்குப் பயிற்றப்படாதவர்களாக இருந்ததால் அந்த வசன அமைப்பு முறை வாசிப்பதற்கு மிகவும் சிரமமாக இருந்தது. இலங்கையில் செய்தி வாசிப்பதற்குரிய உறு தியான தொனியில் தங்குதடையின்றிச் செய்தி வாசித்து மக்களால் நன்றாகச் செய்தி வாசிப்பவர்களில் ஒருவர் என்று அறியப்பட்டி ருந்த நான், இங்கு அப்படி வாசிக்க முடியாத நிலையில், செய்தி வாசிப்பதில் எனக்கிருந்த நற்பெயருக்குப் பங்கம் ஏற்பட்டுவிடு மென்பதால் இங்குள்ள வானொலிச்சேவைகளில் செய்தி வாசிப்ப தைத் தவிர்த்தேன். இது வானொலிச்சேவைகளின் பிழையல்ல, உரியதொழில்முறை வசதிகளுடன் இயங்கமுடியாத பொருளாதார நிலையே இதற்குக் காரணம். ஒரு பணியை நேர்த்தியாகச் செய்ய முடியாவிட்டால் அதைச் செய்யாமல் விடுவதே அந்தப் பணிக்கும் சிறப்பு, அதைச் செய்பவருக்கும் கௌரவம். இந்த நிலை 2001ம் ஆண்டு சீரடைந்தது. அதைப்
பின்னர் விபரிப்பேன்.



*wikneswaran.p@thaiveedu.com*

# நாசகாரிகள்!

- மா. சித்திவினாயகம்

நான் அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தேன். எதையும் ஆராய வேண்டுமென்கிற துருதுருப்பு எப்போதும் எனக்கு.

ரெஜினா பல்கலைக்கழகத்து நான்கு சுவர்களைத் தவிர வேறு எதையுமே தெரியாதிருக்கிற, என்னோடு படிக்கிற பல மாணவர்களுக்கு மத்தியில் நான் துடிப்பானவள். எதையும் ஆராயத் துடிப்பவள். இது எனது ஈழத்திலிருந்து அகதியான தாயிலிருந்து பெற்றதாக இருக்கலாம்.

17 ஏப்ரல் 1995ல் ரெஜினாவின் பனி வெளியில் ஸ்டீவன் கும்மர்ஃபீல்ட் மற்றும் அலெக்ஸ் டெர்னோவெட்ஸ்கி ஆகியோரால் பமீலா ஜோர்ஜ் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டாள்.

அந்தக் கொடூரச் செயலை செய்தவர்கள் ரெஜீனா பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் என அறிந்ததிலிருந்து இந்தப் பல்கலைக்கழகப் பெயரைச் சொல்வதே எனக்குப் பெருத்த அவமானமாக விருந்தது.

அதனைச் செய்தியாக மட்டுமே அறிந்தவள் நான்.

அப்போது நான் பிறந்திருக்கவில்லை. இதை என் அம்மா ரதியிடம் சொன்ன போது இப்படித்தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வெளியே ரஜினி திரணகம நீதி கேட்டதால் கொல்லப்பட்டுக் குருதிப் பெருவெள்ளத்தில் மூழ்கி கிடந்தாள் என்றாள்.

அன்றைய நாட்களில் மற்றொரு ஈழக் கவிஞரான செல்வி அவர்கள்

***இந்தப் பொல்லா உலகில்***<br>
***நான் மிகவும் பலவீனப்பட்டுப் போயுள்ளேன்.***<br>
***என்னை யாரும் கேள்வி கேட்டுத்***<br>
***தொந்தரவு செய்யாதீர்கள்!***<br>
***நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கின்றது***<br>
***எனது இதயம்.***

என்று எழுதி விட்டுத் தன் அடையாளங்களை அழித்துத் தற்கொலை செய்து கொண்டாள் என்றும் சொன்னாள்.

என் தாய் ரதியும் ஓர் முன்னாள் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவி. அவளாலும் அங்கு படிப்பைத் தொடரமுடியவில்லை. இனப்பகையும் உட்பகையும் துரத்த பட்டப் படிப்பை முடிக்காமலேயே அகதியாகிப் பலநாடுகளிடையே தப்பித்து ஓடியவள். கடைசியில் கனடாவில் கால் தரித்தாள் 1995ல்.

'பமீலா ஜோர்ஜ்ற்கு நடந்தகொடுமையின்போது நான் கனடா வரவில்லை' என்றாள் அம்மா பெருமூச்சு விட்டபடி. என்றாலும் எந்தத்தெருவிலும் பெண்கள் நிலை இது தான் என்பதை நான் நன்கு அறிவேன்.

பழங்குடிப் பள்ளி மாணவர்களை வெள்ளைய அதிகாரம் கொன்று புதைத்த எலும்புகள் இன்று கனடிய மண்ணைத் தோண்டதோண்ட வந்துகொண்டு தான் இருக்கின்றன.

எத்தனையோ ஆயிரம் பழங்குடிப் பெண்களை இங்கு கொன்றிருக்கிறார்கள். அதே போன்று ஈழத்துப் பெண்களையும் தான் கொன்றார்கள்.

இறந்தவர்கள் எல்லோரையும் எங்களுக்குத் தெரியாது. அவர்களைக் கொன்றவர்கள் இன்பமாக நடமாடிக்கொண்டிருக்கின்றார்கள் என்பது மட்டும் எமக்குத் தெரியும் என்றாள் அம்மா. அவளுக்கு அது ஈழத்தில் பட்ட அனுபவம். எனக்கோ அனைத்தும் புதியது.

ஆப்பிரிக்க மற்றும் கறுப்பின கலாச்சாரம் பற்றிய புரிதல் மற்றும் விழிப்புணர்வை உருவாக்குவதில் கனடாவில் முக்கியமானவராக இருப்பவர், கனடிய அரசவைக் கவிஞர் என அரிய விருது பெற்ற ஜோர்ஜ் எலியட் கிளார்க்.

அவர் ரெஜினா பல்கலைகழகத்தின் என் பேராசிரியராக கிடைத்தது நான் செய்த வரம் என்றே நான் நம்பினேன். அவர் ஒரு பழங்குடி வம்சாவளி. அவர் உலகின் அற்புதக் கவிதைகளை கனடிய நாடாளுமன்ற நூலக இணையதளத்தில் பதிவேற்றி, விருதளித்து, அவர்களுக்கு அவற்றைக் கற்பித்து வருபவர்.

கவிப் பிரியர்களுக்குமட்டுமல்ல அவரது பாடம் எல்லோர்க்கும் இனிக்கும். அந்த நாட்களில் அவர் பதிவேற்றிய இரண்டு கவிதைகள் அவரை நிலை குலைய வைத்து மிகப் பெரும் கேள்விக்குள்ளாக்கின. அவற்றில் ஒன்று பாலியல் தொழிலாளி ஒருத்தியைப் பின்தொடர்வது பற்றியது.

அந்தக் கவிதையை எழுதியவன் பமீலா ஜோர்ஜ்ஜை அடித்துக் கொன்ற கொலையாளி ஸ்டீவன் கும்மர்ஃபீல்ட். அவன் வேறு பெயர் தரித்து (ஸ்டீபன் பிரவுன்) மெக்சிக்கோவில் இருந்து எழுதிய கவிதையது.

மாணவர்களும், மக்களும் பேராசிரியரில் ஆத்திரமாக இருந்தார்கள். ஒரு கொடூரனின் கவிதையை, அதுவும் உங்கள் பழங்குடிப் பெண்ணைச் சிதைத்தவன் கவிதையை எவ்வாறு பரிந்துரைத்தீர்கள்? எப்படி, எவ்வாறு அதைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

பரோலில் இருந்த கொலையாளி மெக்சிக்கோ போனதெப்படி? கனடிய அரசிற்கு அது தெரியுமா? கொலையாளி தன் பெயரை தான் விரும்பியவாறு மாற்ற முடியுமா? சரமாரியான இந்தக் கேள்விகளை கனடிய ஒட்டுமொத்த மனிதாபிமானமுள்ளவர்கள் கேட்ட போது, இந்தக் கேள்விகளுக்குப் பதில் அறியாது குறுகிப்போனவராக இருந்தார் அப்பேராசிரியர்.

நான் அந்தக் கொலையாளிதான் இதனை எழுதியிருப்பான் என்று கனவிலும் எண்ணவில்லை.



‘கனடாவில் உள்ள பழங்குடி மக்கள் மற்றும் பல்லின மக்களுக் கான நீதிக்காக வாதாடும் கவிஞனான நான் இக்கொலையாளி யின் கவிதைகளை பிரசுரித்தமைக்கு வெட்கப்படுகின்றேன் என்னை மன்னியுங்கள்’ என்ற போது பேராசிரியர் கூனிக்குறுகித் தலை தாழ்ந்து போனதை நான் கண்டேன். காலம் எல்லாக் கொடுமை-களையும் மறக்கச் செய்து விடுகின்றதா?

மாணவ போராட்டங்களின் பின் அந்தக்கவிதைகளை இப்போது பல்கலைக்கழக இணையம் ரத்து செய்து விட்டது.

ஆனால், பமீலா ஜோர்ஜ் எவ்வாறு கொல்லப்பட்டாள்? ஏன் கொல் லப்பட்டாள்? அவளைக் கொன்ற கொலையாளிகளுக்கு என்ன நடந்தது? என்பதுதான் இப்போது எனைப் பிடித்தாட்டும் கேள்வி!

இப்போது பமீலாவைப் பற்றி எவரும் கவலைப்படுவதாய்த் தெரிய வில்லை.

மறக்கடிக்கப்பட்ட அந்தக் கொலையை அறியப் பரபரப்பானேன் நான். அதன்படி எனது நண்பர்கள் பழைய நூலகரான சேவியர் அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தினர். அவர் எனக்கு அந்தச் சம்பவம் தொடர்பாக பல செய்திகளைச் சொன்னார். அதன் பேரில் பமீலாவின் Saulteaux First Nation கிராமத்திற்குப் போனேன் நான்.

Salteaux, மற்றும் ஒயிப்பே என்று அழைக்கப்படும் இந்த பழங் குடிக் கிராமம் பழைய மொழியான கிரீ (Cree) பேசும் கிராமம். அது ஓர் இசைக்குழுக்களின் கிராமம். Saulteaux மக்கள் தங்கள் ஆன்மீக தீர்க்கதரிசியின் தலைமையில் தெற்கு மனிடோபாவிலி ருந்து 1914ம் ஆண்டுகளில் இங்கு குடியேறினர். இந்த வம்சத்தில் வந்த சிறு தேவதை தான் பமீலா என்றார், அந்தச் சமூகத்த லைவி சாரா.

‘கொடும்பனிக் காலத்திலும் காட்டெருமை, மூஸ், கரிபூ, எல்க், பீவர், கரடி, மான் மற்றும் முயல்களை வேட்டையாடக் குதூகல

மாக கூட்டமாகச் செல்வோம். ஆனால் எங்களை கொலம்பஸ் காலத்திருந்தே இந்தவெள்ளைய மனிதர்கள்தான் எந்தக் காலமும் வேட்டையாடி கொன்று வருகின்றார்கள்' என்றாள் சோகம்தோய்ந்த குரலில்.

கனடா, அமெரிக்கா என்றெல்லாம் சொல்லுகிற வல்லரசுகள் உருவாகியுள்ளதே 'செவ்விந்தியர்' என்று அவர்கள் அழைக்கிற பழங்



பமீலா ஜோர்ஜ்

குடியினராகிய எம் உடல்கள் மீதும் எம் இரத்தத்தின் மீதும் தான்.

எங்களின் ஆதிக்குடிகள் வசித்த ஊர் ஊராகச் சென்று அங்கு கூடாரங்களில், பெரும் கொட்டகைகளில் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தவர்களை கொத்து கொத்தாகக் கொன்றார்கள், எரித்தார்கள், சுட்டார்கள்.

குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், கர்ப்பிணிகள் என்று எந்த பாகுபாடும் அற்று அழித்தார்கள். அடிமைகள் ஆக்கினர். சிசுக்களைக்கூட நிலத்தில் அறைந்து கொன்றார்கள். அம்மை நோய் வந்தோர் போர்த்திய போர்வைகள் தந்து எம்மை நோயாளர்களாக்கிக் கொன்றொழித்தார்கள். இப்படித்தான் இந்த வெள்ளைய வெறியர்கள் எம் வருங்கால சந்ததியை, எம் கலாச்சாரத்தை அழித்தார்கள். அழித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கும் மேலாக பாடசாலைகள் என்ற பெயரில் எம் பிள்ளைகளை வன்புணர்ந்து புதைத்தார்கள்.

சாரா உணர்ச்சிப் பிளம்பாய் வெடித்துத் தள்ளினாள்.

கொலையுண்ட பமீலா ஜோர்ஜ் என் வயதை ஒத்தவள்தான். பமீலா ஜோர்ஜ் சாகும் போது 28 வயதாக இருந்தவள். Saulteaux First Nation உடைய மதிக்கத்தக்க உறுப்பினராகவும், இரண்டு குழந்தைகளின் அன்புத் தாயாகவும் அவள் இருந்தாள். உங்களைப் போல் பாலியல் தர்மம் என்று விதிக்கப்பட்டிருக்கிற சட்டங்களை எமக்குத் தெரியாது. அதற்காக நாங்கள் விபசாரிகளல்ல என்றாள் அவள். பமீலா தன் இரண்டு குழந்தைகளையும் வளர்க்கப்படாத பாடுபட்டு வந்தவள். கூச்ச சுபாவமுள்ள மிகவும் ஏழையான அவள் எத்துணை வேலைகளையும் தனித்து எளிதில் செய்கிற சுறுசுறுப்பான பேரழகி. அவள் இயற்கையை நேசிக்கிற ஓர் கவிதைக்காரி. நன்றாக எம் பூர்வீக மொழியில் பாடுவாள்.

தேசிய பழங்குடி மக்கள் தினம் கொண்டாடுவதாகச் சொல்லும் கனடாவின் வரலாற்றில் பழங்குடியினரின் கொலைகளைத்தான் நாமினிக் கொண்டாடவேண்டியிருக்கிறது. எம் பழங்குடிக் கலாச்சாரமாகவிருந்த பமீலாவையும் அவர்கள் கொன்று விட்டார்கள். சாரா நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். அவள் கதையைக் கேட்டுத் திக்கித்து நின்றேன் நான்.

பமீலா எழுதிய டயறியின் பக்கமொன்றைப் பார்க்கத் தந்தாள் சாரா.

*அதில், நான் ஆசாபாசங்களுள்ள மனிசி. அறம், நீதி என்றெல்லாம் சொல்கிற வார்த்தைகள் என்னோடு பல வேளைகளில் ஒத்துப் போவதில்லை. ஹார்மோனின் சேட்டை உந்த அவன் என்னைப் புணர்ந்த போது நான் மறுக்கவில்லை. எல்லோரையும் போலவே அது எனக்குத் தேவையாக இருந்தது. அவனது பிள்ளை எனக்கு பிறந்த போது நான் அள்ளிப் பால்கொடுக்கும் அன்னை தேவதையாக என்னை உணர்ந்தேன். கள்ளிப்பால் கொடுத்துக் கொன்றுவிட நானொன்றும் கொடூரமான கலாச்சாரக் குரூரியல்லவே.*

*எனக்குத் தெரியாது நான் எதற்காகப் பிறந்துள்ளேன் என்பது? என் ஆதிக்குடியின் வாழ்விலிருந்து வெகுதொலைவிற்கு இன்று நான் புதிய சிந்தனைப் பதிவுகளாலும், புது உலகக் கருத்தாக்கப் பரிமாணங்களாலும் சுழற்றி வீசப்பட்டுக் கிடக்கிற ஜடம். இன்றைய வாழ்வில், உடை, உணவு, பழக்க வழக்கங்கள் என்றெல்லாம் பழங்குடிகள் மாறிக் கொண்டேயிருக்கின்றோம்.*

*இன்று நான் எனக்காகவோ, என் பழங்குடிச் சமூகத்தினருக்காகவோ வாழவில்லை. எம்மைச் சூறையாடும் சமூகத்தினருக்காக வாழ்வதற்காகவே கற்பிக்கப்பட்டிருக்கின்றேன். எனது உண்மைக் கருத்தை நான் சொல்லவியலாது. சொன்னால் நான் உயிர் வாழ்தல் அரிது. அவர்கள் கலாசாரம் மிக மிக அழகானது என்கின்றார்கள். அத்தனை கொடூரங்களையும் எம்மேல் அதன் பேரில்த்தான் திணிக்கின்றார்கள்.*

பமீலா தன் உள்ளத்து வேட்கையை அந்த வெறும் கடதாசியில் கொட்டித் தீர்த்திருந்தாள்.

ஒஜிப்பேயின் 16ந் திகதியிரவு நகரம் இருளத் தொடங்கியிருந்தது. காற்று இரைச்சலோடு ஊளையிட்டது. வானத்தில் நட்சத்திரங்களில்லை. கூட்டத்தை விட்டுத் திசைமாறிப் போன மஞ்சள் சொண்டுப் Puffins பிலாக்கணமிட்டது.

தனித்து விடப்பட்ட தன் இரண்டு சிறு குழந்தைகளுக்கான உணவைக் கையிலேந்தி அவசர அவசரமாக வீடு திரும்பிக்கொண்டிருந்தாள் பமீலா. பனிவிழாத பொழுது அது. மொட்டையாய்க் கிடந்த ஓயுப்பே மரங்கள் இலை துளிர்விடத் தொடங்கியிருந்தன.

இருட்டைக் கிழித்தபடி கார் ஒன்று வேகமாக அவளைச் சுற்றி சுற்றிவருகிறது. கண்ணில் ஒளி பட்டுத் தவிக்கிற மானைப் போல அவள் மருண்டாள்.

கார் அவளருகில் மெதுவாக நின்றது. உள்ளிருந்து ஓர் வாலிபன் இறங்குகின்றான். நிறைவெறியில் தடுமாறியபடி அவள் கரங்களை இழுத்தான். அவள் அவன் கரங்களை உதறிவிட்டாள்.

'வா என்னோடு...' அவள் கழுத்தை வளைத்துப் பிடித்தான். அவள் திமிறினாள். 'நான் வீட்டிற்குப் போக வேண்டும். பசியால் துடிக்கும் பிள்ளைகளுக்கு உணவு கொடுக்கவேண்டும்'. கெஞ்சினாள். கும்பிட்டாள் அவள்.

'செவ்விந்தியப் பெட்டை நாயே... வாயைப் பொத்து'. அவனது முரட்டுக் கரங்கள் இவள் முகத்தில் சம்மட்டியாய் இறங்கியது.

அதற்குள் காரின் பின்புறமிருந்து இன்னொருவன் இறங்கிவந்தான். 'நீ இன்று எங்களின் இரை தான் பெட்டை நாயே...' கொச்சை வசவில் திட்டியபடியே அவள் உடைகளை அவன் களையத் தொடங்கினான்.

அங்கமங்கமாக அவளை மானபங்கப்படுத்தி அவளை அணைத் தன அவர்களின் கரங்கள். இரண்டு பேரும் அளவிற்கு அதிகமாக குடித்து இருந்தனர். 'செவ்விந்திய வேசியே உனக்குத் தான் அத் தனையும் தெரியுமே பிறகேன் இந்தப் பிடிவாதம்?' என்ற படி... அவன் முரட்டு மூஞ்சியை அவள் மூஞ்சையில் தேய்க்க முயன் றான்.

அவள் பலங்கொண்ட மட்டும் இருவரையும் தள்ளி விட்டு என்னை விடுங்கள்... என்னை விடுங்கள்... என்று கத்தியபடியே ஓடமுற்படு கின்றாள். யாரும் அவளது அலறலைக் கேட்காமல்... அது வெற் றுக் காற்றில் பட்டு எதிரொலித்தது. ஓடிய அவளை இரும்புக் கம் பியால் தலையில் சரமாரியாக அடிக்கின்றார்கள். அவள் மயங்கி மண்ணில் சாய்கின்றாள். பிள்ளைகளின் உணவுப் பொட்டலம் அந்த நிலமெங்கும் சிதறுகின்றது. விழுந்த அவள் உடலின் மேல் மல்லாக்காய் விழுந்தார்கள் அந்த வெள்ளைய வேட்டை நாய்கள்.

வேட்டை நாய்களாகி அவளைச் சிதைத்தவர்கள் வியர்வையை வழித்தபடியே வெற்றிக் களிப்போடு சிகரெட்டைப் பற்றவைத்தார் கள். இரத்தப் பேராற்றில் துடித்த அந்த தாயின் கடைசி மூச்சு அந்த மண்ணின் மடியில் அடங்கிப்போயிற்று, இரண்டு பச்சிளம் குழந்தைகளை அனாதையாக்கிவிட்டு...

ஏப்ரல் 17, 1995 அதிகாலை என்றைக்கும் போலவே அன்றும் பர பரப்போடு விடிந்தது. சஸ்கட்சுவானின் ரெஜினாவின் ஒரு ஒதுக் குப்புற பாதையோரத்தில் முகம் குப்புற இரத்த வெள்ளத்துள் கிடந்த பமீலாவின் உயிரற்ற உடலைக் கண்டெடுக்கின்றார்கள். விசாரணையில் பமீலா ஜோர்ஜ் அந்த இரண்டு இளம் வெள்ளை யர்களால் அடித்துக் கொல்லப்பட்டது தெரிய வந்தது.

அவர்கள் இருவரும் கொலை செய்த பிறகும், அந்தக் கொலை யைப் பற்றி தங்கள் நண்பர்களிடம் தாங்கள் செவ்விந்தியக் கோழியைக் கொன்றுவிட்டோம் என்றும், அது கொல்லப்பட வேண் டிய இனமென்றும் மிடுக்காக, வீராப்பாக பேசியுள்ளனர் என்கின்ற வாக்குமூலத்தை அவர்கள் நண்பர்களே விசாரணையில் அளித்த னர்.

அவர்களை தீதிமன்றத்தில் விசாரணை செய்த வெள்ளைய நீத வான் மலோன் அவர்கள் 'பமீலா செவ்விந்தியப் பெண். ஏற்கனவே கணவனற்றுப் பிள்ளை பெற்ற விபசாரி என்பதால் இதைப் பாலி யல் வன்புணர்வு எனச் சொல்ல முடியாது' என்று தீர்ப்பளித்தார்.

உலகின் நீதிமான்களாகத் தம்மைச் சிருஷ்டித்துக் கொண்டுள்ள வெள்ளைக்காரக் கொள்ளையர்களின் மனிதாபிமான நீதி இது தான்! பெருமூச்சோடு நிறுத்தினாள் சாரா.

அந்தக் குற்றவாளிகளுக்குத் தண்டனையாக ஆறரை வருடங்கள் சிறைத் தண்டனை எனத் தீர்ப்பளிக்கப் பட்டபோதும் நான்கு வரு டங்களுக்குள்ளாகவே அவர்கள் பரோலில் வெளியே வந்துவிட்ட னர்.

'பரோலில் இருந்தபடியே மெக்சிக்கோவுக்கு எப்படிப் போனான் அந்தக் கொலையாளி? பமீலாவை இழந்த பழங்குடியினராகிய எங்களுக்கும், ஏன் ஒட்டு மொத்த பெண்கள் சமூகத்திற்குமே சீற் றத்தைத் தருகிற கொடிய தீர்ப்பு பமீலாவின் கொலைத் தீர்ப்பும் கொலையாளியின் மெக்சிக்கோப் பயணமும்...' என்றாள் சாரா.

குற்றத்திற்கான தண்டனையை முழுமையாக குற்றவாளி அனுப விக்கா நிலையில் உலகம் சுற்றுவது வெள்ளையருக்கான கனடிய நீதியா? கனடிய குற்றவியல் நீதித் திறனின் தோல்விக்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்கின்றாள் கோபாவேசமாக சாரா.

நான் வாய் மூடி நிற்கின்றேன்.

மூலையில் அடுக்கி வைத்திருந்த புத்தகக் குவியலில் இருந்து பழைய புத்தகமொன்றைத் தேடி எடுத்து என்னிடம் நீட்டினாள்.

வைத்துக்கொள்... யார் கண்டது, வருங்காலத்தில் இந்த நீதி உனக்கும் தேவைப்படலாம் என்றாள்.

ஒன்றும் புரியாமல் புத்தகத்தை வாங்கி விரித்தேன்.

'பண்டிட் குயின்' என்றிருந்தது.

தன்னை பாலியல் வதை புரிந்த 22 பேரிடம் காலில் விழுந்து, தன்னை விடும்படி கெஞ்சி, கூத்தாடி, மன்றாடியும் முடியாமல்... அவர்கள் அவளைச் சீரழித்த பிறகு... நீதி கேட்டு காவல் நிலை யம் என்று ஊரெல்லாம் நீதிக்காக அலைந்தவளை மறுபடி, மறு படி அனுபவித்தெறிந்து விபசாரி என்றார்களே தவிர, அவளின் நியாயத்திற்காக யாரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

பூனையாயக் கிடந்தவள் ஒருநாள் புலியாகி, ஆயுதமேந்தி, தன்னை வன்புணர்ந்த 22 பேரையும் சுட்டுக் கொன்றாள்.

இந்தியா மட்டுமல்ல ஒட்டுமொத்த உலகமே அவளைத் திரும்பிப் பார்த்தது.

இந்திய மக்கள், அவளை பாராளுமன்றப் பிரதிநிதியாக்கி மகிழ்ந் தார்கள்.

ஆம். ஹீரோவாகிய பூலான் தேவியின் வரலாறு அது!

சாரா கட்டித்தழுவிக் கையசைத்தாள்.

நான் கண்ணீரோடு விடை பெறுகின்றேன்.



*sithivinayagam@thaiveedu.com*



உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்...

**KENNEDY LAW OFFICE** கெனடி சட்ட அலுவலகம்

- REAL ESTATE LAW
- BUSINESS LAW
- CRIMINAL LAW
- FAMILY LAW
- IMMIGRATION LAW
- ODSP APPEALS
- SMALL CLAIMS
- WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
- NOTARIZING & COMMISSIONING

**W.KENNEDY BERNADIUS, LL.B**
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC
கனேடிய தமிழ் வழக்கறிஞர்



**Tel: 416 613 4900**

2390 Eglinton Ave. East, Suite# 223 Scarborough, ON. M1K 2P5 (Kennedy & Eglinton)
Fax: 416 613 4904 E: williamkennedylaw@gmail.com



# எல்லைகள்

**- த. சாள்ஸ் குணநாயகம்**

நாங்கள் அந்த வீட்டில் கொண்டுவந்து விடப்பட்டோம் என்பதைவிட, ஒரு வீட்டுக்குள் அடைக்கப்பட்டோம் என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

வெள்ளைச் சேறாக புதையும் பனியில், காதுகளில் ஊசியால் குத்திக்கொல்லும் கடும் குளிரில், நாம் அந்த ராட்சத பஸ் வண்டியிலிருந்து இறக்கப்பட்டோம். பஸ்ஸின் பின் பக்கம் அடைக்கப்பட்டு, எம்மை மறைத்து வைத்து, எல்லையைக் கடந்த மூன்று நாள் பிரயாணத்தின் பின்னர், இந்த வீட்டுக்குள் எங்கள் ஐந்து பேரையும் அடைத்தேவிட்டான்.

இடிந்து விழும் நிலையிலிருக்கும் இந்தப் பேய் வீடும் நாறிக் கொண்டிருக்கும் அறைகளும் ஐஸ்பிடித்து ஈரமான சுவர்களுமாய் இருக்கும் அந்த மர வீடுதான், எங்கள் சிறை. நாம் இப்போ போலந்துக்குள் நிற்கிறோம். இல்லை. சிறை வைக்கப்பட்டுள்ளோம். இது வார்சோ நகருக்கு வெளியேயுள்ள ஒரு சிறு பகுதியாம்.

அடுத்த நாடு ஜேர்மனிதான்.

ஆறுமாதமாய் தொடர்ந்த என் வெளிநாட்டுப் பிரயாணத்தில், இது இறுதிக்கட்டம் என்றுதான் நான் எதிர்பார்த்தேன்.

இலங்கையில் காசு கட்டி உக்கிரேன்வரை கொண்டு வந்துவிட்ட எமது பயண முகவர், எல்லாவற்றையும் சுத்திக்கொண்டு ஓடிவிட்டான்.

மொஸ்கோவில் அவனது ரஷ்சிய காதலியுடன் ஏதாவது ஆடம்பரக் கோட்டல்களில் உல்லாசமாக இருப்பான். எங்கள் பணத்தில்... நாங்கள் இங்கே நாய்படாப்பாடு.

அவனது ஆசை வார்த்தைகளையும் ஆடம்பர வாழ்க்கையையும் நினைக்க எனக்கு எரிச்சலாக இருக்கிறது. மன்னிக்கப்பட முடியாத பிறப்புக்கள்.

பணம் பல லட்சங்கள் செலவாகிவிட்டது. பிரயாணப்பாதை முழுவதும் விமான நிலையங்களிலும் நாட்டு எல்லைகளிலும் எமக்கு மிகவும் அருவருக்கத்தக்க அனுபவங்கள் கெடுபிடிகள். நாங்கள் மனிதப்பிறவிகளே இல்லை என்று எழுதப்பட்டாகிவிட்டது.

உயிர் துச்சமாகிப் போய்விட்ட பிரயாணம் இது.

எதிர்கால கனவுகள் எல்லாம் அழிந்து தொங்குகிறது. கொள்ளையர்கள், காடையர்கள், இனவெறியர்கள் என்று பலர் எம்மை பயமுறுத்தியும் தாக்கியும் விட்டார்கள்.

எமக்குள் இருந்த எல்லாத் தைரியங்களையும் இழந்துவிட்டதான உணர்வுதான் மிச்சமுள்ளது.

உக்கிரேனில் நாம் கைவிடப்பட்டபோது எம்மோடு கூட இருந்தவர்கள் இருபத்து மூன்று பேர். அதில் ஐந்து பெண்களும் ஆறு குழந்தைகளும் அடங்குவர்.

பொலிஸ் கெடிபிடிகளும் இலங்கையரை கைது செய்து நாடுகடத்தும் உத்தரவும் நாம் வெளியே ஒரு முகவரைத் தேடும் நிலையை

யும் தடுத்தே விட்டது. கொலண்டிலிருக்கிற எனது நண்பனுக்கு அதிகாலையில் தொடர்பு கொண்டு இக்கட்டான இந்நிலையை எடுத்துரைத்தேன்.

அவன் யார் யாரையோ தொலை பேசியூடாக பிடித்து... மறுநாள் அமிர் என்பவன் எங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டான்.

வெளிநாடுகளிலுள்ள எமது உறவுகள் ஊடாக பணம் தனக்குத் தரப்பட வேண்டும் என்றும், பணம் கிடைத்த ஏழுநாட்களில் ஜேர்ம னிக்குள் எல்லோரையும் அனுப்பிவைப்பதாகவும் சொன்னான்.

அமீர் மிகவும் நல்லவன் என்றும் நேர்மையாகச் சொன்னதைச் செய்வான் என்றும் உக்கிரேனில் எம்மோடு இருந்தவர்கள் பலர் பேசிக்கொண்டார்கள்.

நம்பிக்கைக்கு நமஸ்தே சொல்லி நானும் அவன் கைகளுக்குள் அகப்பட்டுக் கொண்டேன்.

அமெரிக்க டொலர்களை ஆரிடம் கேட்பது?

நண்பர்கள், மாமா, மச்சான்மார்?

நிலமையைச் சொல்லி எல்லோரையும் கேட்டுப் பார்க்கலாம். இய லாமையும் வேதனையும் எரிச்சலும் அழுகையாய் வந்தது. ஒன்றும் சரிவராவிட்டால் திரும்பிப் போய்விடலாம்.

என் தேசத்தின் பொங்கி எழும் கடல் அலையையும் அதன் கரை யின் சுடுமணலையும் ஏன் நான் விட்டு வந்தேன்?

ஆமியோ, இயக்கமோ எதற்குள்ளும் அங்கேயே இருந்திருக்க லாம்.

இந்தப் பிரயாணம் என்னை முழுமையாய் கொன்றே தின்று விட் டது.

நான் ஒன்றும் கோழையாய் இங்கு ஓடி வரவில்லைத்தானே என்று சமாதானப் பட்டுக்கொண்டேன்.

என் அண்ணனைக் கொன்றவனை அல்லது கொண்டு போனவ னைத் தேடினேன்.

எவரும் நேர்மையாய் எதுவும் சொல்லவில்லை.

காணமற் போனவர்கள் பட்டியலில் பெயரை இட்டு விட்டு அவர் கள் எல்லாவற்றையும் மறைத்து விட்டார்கள்.

எம்மால் அதனை மறக்கமுடியவில்லை.

அண்ணியும் பிள்ளைகளும் அவர் திரும்பி வருவார் என்று இன் றும் எதிர்பார்கிறார்கள்.

என் தேடலால் தொல்லைகளின் சூரியன் உதயமாகிப் பிரகாசித் தான்.

அங்கும் மிரட்டலும் அலக்கழிப்பும் கைதும் என்னையும் துரத்தின. என் ஆத்துமாவைக் கொன்று என்னால் எப்படி வாழமுடியும்? ஓடு எல்லாவற்றையும் துறந்துவிட்டு ஓடு.

இந்துமா கடலின் தொப்புள் கொடியில் அறுந்து தொங்கும் கிரா மம் என் தீவு. முறியாத பனைகள் முகிலை விலக்கி சாமரம் வீசும். பனங்காய் விழுந்து பாறையில் தெறிக்கும். முரல்மீன் பாச்ச லில் கடல் அலை எழும். திருக்கைகள் வந்து மணற் படுக்கை யில் தூங்கும். குதிரையின் கனைப்பில் நாரைகள் பறக்கும். அந்த நீண்ட இனிய தீவின் நெசவுத்தொழிலாளர் குடும்பத்தில் பிறந்தவன் நான்.

மிகவும் ரம்மியமான இளமைக்கால கனவுகளுடன் வாழ்ந்தவன். பெரிதாக ஒன்றையும் எதிர்பார்க்காத சுயசார்பில் வாழப் பழகிக் கொண்ட எம் தீவின் மக்கள் மிகவும் இனிமையானவர்கள்.

எதையும் எதிர்பார்த்துக் காத்திருப்பவர்கள் காதலர்கள் மட்டும் தான்.

என் இனியவளின் வருகைக்காய் மணற் கிணத்து மதகிலும் மாவி லித்துறை மண்டபத்திலும் காத்திருந்து கதைத்தோம்.

நெழுவினிப் பிள்ளையார் தேர்திருவிழாவும் யுவானியார் கோவில் சுற்றுப்பிரகாரமும் பாதிரியார் கோவில் கரோல் கீதங்களும் வெட்ட காடு அம்மன் பொங்கல் திருநாளும் எம்மை குதூகலப்படுத்தின.

தாமளாப்புக் குளத்திற்கு நீந்தப் போவதும் சாறாப்பிட்டியில் தண் ணீர் அள்ளி வருவதும் வெட்டுக் கழியில் கரப்புக்குத்துவதும் வெல்லையில் போய் மீன் பிடிப்பதும் தரவை வெளியில் மாடு கட் டுவதும் குதிரையை பிரட்டி குளம்பு அடிப்பதும் எமது இளமைக் கால வீரச்செயல்களாகவே கருதினோம்.

குறிஞ்சாப்பூக்களை ஊதிவிளையாடுவதும் காவோதிச் செடிகளுக் குள் ஒளிப்பதும் ஈச்சம் பாழைகளை இழுத்துச் சப்புவதும் கோணற் புளியங்காய்களுக்கு கொக்கை கட்டுவதும் கொட்டு ஆட்டிக் குருவிகள் நிலத்தில் இட்டு வைத்த முட்டைகளைத் தேடு வதும் நொச்சிக்காட்டுக்குள் குரக்கன் பிட்டு மணத்தில் கொட்டாவி விடும் பாம்புகளுக்கு கல் எறிவதும் கிட்டிப்புள்ளும் கொடி விளை யாட்டும் எம்மை துடிப்புடன் இயங்க வைத்தவைதான்.

காலம் வெகுவாய் மாறி, அரசியலும் ஆயுதமும் எம்மை அதிகா ரம் செலுத்தத் தொடங்கியபோது, நாம் மிகவும் திணறித்தான் போனோம்.

ஏதோ விடிவு வரும் என்று எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டோம்.

நானும் அவளும் அந்தப் புழுதித் தெருக்களில் காதலித்து கரு வுற்றோம்.

என் நேசத்துக்குரியவளை விட்டுப் பிரிந்த போது, அவள் மிகச் சோகமாக இருந்தாள்.

எமது குழந்தை பிறந்த செய்திகூட மிகத் தாமதமாகத்தான் எனக்கு கிடைத்தது. நான் உக்கிரேன் வந்திறங்கி ஒரு கிழமைக் குப் பின்னர்தான் அறிந்தேன்.

நிரந்தரமான முகவரியில்லாத அலைச்சல் மிகுந்த மனிதர்கள் நாம்.

எல்லாம் இழந்துபோனது போன்ற மனச்சுமையுடன் பலவற்றை இழந்துவிட்ட போலந்துக்குள் நிற்கிறோம். மீசை வைத்த வலேசா வைக் கூப்பிட்டு மண்டையில் குட்ட வேண்டும்போல் இருக்கிறது.

என்னையே நான் குட்டிக் கொண்டேன்.

அமீர் எங்களை இப்போது போலந்திலுள்ள இன்னோர் முகவரிடம் ஒப்படைத்துவிட்டான்.

அவன்தான் எங்களை இந்த வீட்டில் சிறை வைத்தவன்.

அவனுடைய பெயர் தாதா.

தட்டிதட்டி ஆங்கிலத்தில் பேசுவான்.

இந்தியிலோ உருதுவிலோ மிகவும் கோபமாகப் பேசுவான்.

எப்போதும் போதையிலேயே இருக்கிறான். கஞ்சாவையோ கட்டையையோ பத்திக் கொண்டு கண்கள் சிவந்து கிடக்க இடையிடையே வந்து போனான்.

காய்ந்து கிடக்கும் பாண்தான் எமது உணவு. வெறும் சாயத்துடன் விழுங்கினோம்.

எங்கள் ஐந்து பேரில் வன்னியிலிருந்து சிவமும் மட்டக்கிளப்பு மகேந்திரப் போடியாரும் திக்கத்துச் சீலனும் திருமலை மோகனும் அடங்குவர். எல்லோருக்குள்ளும் ஒவ்வோர் பிரச்சினை.

ஆமியாலும் இயக்கங்களினாலும் அடிக்கப்பட்டவர்கள்.

குடும்பங்களில் பலரை இழந்தவர்கள்.

இயக்கங்களிலிருந்து தப்பி வந்தவர்கள்.

போடியார் எம்மை விட வயது கூடியவர். பல அனுபவங்கள் உடையவர். ஊர்காவல் படையாலும் இராணுவத்தாலும் பாதிக்கப்பட்டவர். எல்லாச் சோகங்களையும் தூக்கி வைத்துவிட்டு கலகலப்பாகப் பேசுவார்.

எங்களை எதிலும் மனம் தளரவிடாமல் நம்பிக்கை கொள்ள வைத்திருப்பவர் அவர்தான்.

எல்லைகள் கடக்கும்போதுள்ள பல சோக முடிவுகளை கதைகதையாக கேட்டு வைத்திருந்தோம். ஆற்று நீர் இழுத்துப் போய் சாகடித்ததும், பனியில் விறைத்துச் செத்துக் கிடந்ததும், 'கென்ரை-னர்'களுக்குள் மூச்சடைத்து இறந்ததும், கடலோடு அடிபட்டுப் போனதும்... இலங்கையில் தொடங்கி உலகின் நிலப்பரப்பு எங்கும் அகதியாய் ஓடி வந்த பாதை முழுவதும் புதையுண்ட எம்மவரின் வரலாறு... என்னோடும் தொடர்கிறது என்றுதான் நான் எண்ணினேன். தாதா வந்திருந்த போதெல்லாம் ஏதோ பணத்தைப் பற்றியே பேசினான்.

இன்னமும் அதிக பணம் கேட்கப் போகிறான் என்பது போல்தான் இருக்கிறது.

மறுநாள் வந்தபோது சிவம் மாஸ்டர் என்ற பெயரில் ஒரு இலங்கையனைக் கூட்டிவந்தான்.

அவன்தான் தற்போதைய மொழிபெயர்ப்பாளன்.

அவனும் மடாக் குடிகாரன். வெள்ளை 'வொட்கா'வை போத்தலோடு குடித்தான்.

அவனது மொழிபெயர்பின்படி நாம் இன்னமும் ஆயிரம் டொலர்கள் கொடுக்க வேண்டுமாம். அமீர் தனக்குத் தந்த பணம் போதாது. அதை நீங்கள் ஒழுங்கு செய்தால் ஓரிரு நாட்களில் அனுப்பிவிடுவேன் என்றான்.

இப்போது புதிய இடியொன்றை போடுகிறான்.

நாம் மறுத்துவிட்டோம். 'நாம் பணம் முழுவதும் கட்டிவிட்டோம் இனிமேல் பணம் எங்களுக்கு யாரும் தரமாட்டார்கள்.'

சிவம் மாஸ்டர் குடிபோதையில் அழுதான். 'நான் இயக்கத்துக்கு போய்த்தான் இப்படிச் சீரழிந்தேன்' என்று.

வேலையில் இருந்த இவனை வில்லங்கத்துக்கு இயக்கம் பிடித்து ஆயுதப் பயிற்ச்சி கொடுத்து, இயக்க மோதல்களில் தப்பி இந்தியாவிற்கு ஓடி வந்து, இப்போது குடிக்காகவும் சாப்பாட்டுக்காகவும் எதுவும் செய்யும் ஒரு பரிதாபகரமான மனிதன்.

'கேட்கிற காசைக் கொடுத்து ஓடித்தப்பி விடுங்கள், இல்லாட்டி இந்தச்சனியன்கள் உபத்திரமானதுகள், நடுத்தெருவில் விட்டிடுங்கள்' என்றான் மீண்டும் அவன்.

எனக்கு அவன் மேல் கோபம் கோபமாய் வந்தது.

என்ன செய்வது யாரைக் கேட்பது?

எல்லோருக்கும் என் போன்ற சிக்கல்கள் தான். ஐரோப்பாவில் காசு பிரட்டுவது என்பது சுலபமான காரியமா? அதுவும் வந்து சேராத ஒரு அகதிக்காக.

சீட்டுக்கட்டியும், வட்டிக்கு வேண்டியும் அவர்கள் செய்கின்ற உதவிகளை எம்மால் மறக்க முடியாதுதான்.

எந்த முகத்துடன் எப்படி ரெலிபோன் கதைப்பது?

மாமாவைத்தான் பிடிக்கவேண்டும். அம்மாவின் தம்பி அவர்.

கொஞ்சம் கடுமையான மனிதர், ஆனால் இரக்கமுள்ளவர்.

இரவே அவரது கைத்தொலைபேசியில் எல்லாவற்றையும் அவருக்குச் சொல்லி விட்டேன்.

அனுப்புவதாக ஒப்புக் கொண்டு விட்டார்.

அமீர் அனுப்பிய ஆட்கள் ஆறுபேர் போடரில் பிடிபட்டதாக தாதா சொன்னான். எம்மை கூடிய கெதியில் வெளியேற்ற வேண்டிய நிலையில் அவன் இருப்பதாக நாம் புரிந்து கொண்டோம்.

எல்லோருடைய பணமும் அவனுக்கு வந்து சேர்ந்து விட்டது.

அன்று இரவு மூடிய வான் ஒன்றில் ஏற்றப்பட்டோம்.

போலந்துக்கருகே பழைய கிழக்கு யேர்மனிக்குள் இருந்த ஒரு சிறிய புகையிரத நிலையத்தின் பின்பகுதியில் ஓடிக்கொண்டிருந்த வானில் இருந்து குதித்துப் பதுங்கிக் கொண்டோம்.

ஒரு பத்து நிமிடங்களின் பின்னர் ஒளிபாச்சிக் கொண்டு வருகின்ற பச்சை நிற வாகனங்களின் இரைச்சல்...

வெள்ளையாய் கொட்டிக் கிடக்கும் பனிக் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த எம்மை அந்தப்பச்சை வாகனப் பொலிஸார் கைது செய்தனர்.

நாம் தஞ்சம் தஞ்சம் என்று கெஞ்சினோம்.

சிரித்துக்கொண்டே பச்சை வானில் ஏற்றினார்கள்.

கைரேகை. படப்பிடிப்பு. சோதனை. சிறை.

நாமும் பிடிபட்டுவிட்டோம், எல்லைகளில்,

இலங்கையா? போலந்தா? ஜேர்மனியா?

அரசியல் தஞ்சம், அகதி, அடையாளம்.

எங்கே கொண்டுபோகிறார்கள்?

எங்களுக்கு எதுவும் விளங்கவில்லை. எனக்கு நேர் எதிரே இருந்த போடியார் அழுதுகொண்டிருந்தார். அவர் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை.



charles.g@thaiveedu.com

# அரசியல் வேசிப்வேசி...!



நெடுந்தீவு மகேஷ்

திடீரென எழுந்த சண்டையை அவதானித்துக் கொண்டிருந்த புவனேஸ்வரராசாவுக்கு அந்தச் சண்டையைத் தடுத்து நிறுத்தும் வேகம் இருந்தாலும், சுந்தரலிங்கம், செல்வநாதனைத் தரையில் வீழ்த்திப் ‘பேப்பர் வெயிற்’றால் தலையில் அடிக்கும்வரையில் தடுக்க இயலாமற் போய்விட்டது.

செல்வநாதனின் நெற்றியின் மேலாகத் தலையில் செந்நிறத்தில் மோதகவடிவில் தசை புடைத்திருந்தது. இரத்தம் கட்டி, அது வீங்கிவிட்டது. விலக்குப் பிடித்த புவனேஸ்வரராசா மிகவும் வேதனைப் பட்டார். மூடிக்கிடந்த அறைக்குள் நிகழ்ந்ததை இந்த மூவரையும் தவிர வேறெவரும் அறியவில்லை.

இந்த அலுவலகத்தின் ஓரறையில் ஒன்றாகவே வேலைசெய்யும் இவர்களுக்கிடையில் இப்படி ஒரு சம்பவம் முன்னர் என்றுமே ஏற்பட்டதில்லை.

இருவருக்குமிடையில் சில மணி நேரம் விவாதத்தில் தொடங்கிய

பேச்சுக்கள், முற்றிக் கைகலப்பாக மாறும் அளவுக்கு வீங்கிப் போகும் என்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. குறிப்பாக புவனேஸ்வரராசாவால் அதனைச் சீரணிக்க முடியவில்லை.

இப்பொழுது இந்தச் சம்பவம் அறைக்கு வெளியே கசிந்து விடாமல் இருப்பதில் மூவருமே கவனமாக இருப்பதாகத் தெரிந்தது. செல்வநாதனும் சுந்தரலிங்கமும் இப்பொழுது தங்களின் வேண்டாத வாதத்தால் விளைந்த கோபத்தையும் சண்டையையும் எண்ணிச் சிலபொழுது குழப்பமடைந்தனர்.

‘அலுவலகத்திற்குள்ளே அரசியல் பேச வேண்டாம்.’ என்ற அறிவித்தல் மட்டை ஒன்று மடங்கிச் சுருண்டு கோலம் சிதைந்து கிழிந்து தொங்கியது.

மனித வாழ்வின் பெரும்பகுதி ஆசைகளாலும் பெருமைகளாலும் வடிவமைக்கப்பட்டிருப்பதாகவே புவனேஸ்வரராசாவுக்குத் தோன்றியது.

எது சரி? எது பிழை? என்பதைத் தீர்மானிக்க இயலாதவகையில் ஒவ்வொருவரும் தமது ஆசைகளை நிறைவேற்றவே வாழ்க்கைப் பாதையில் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசியல் வாழ்வும் அதிலே தம்மை இணைத்துக் கொண்டு பெருமை கொள்ளும் எண்ணமும் சேர்ந்ததாகவே வேட்பாளர் பலரின் ஆர்ப்பாட்டங்கள் இருந்தன. அவற்றையே இந்தத் தேர்தலில் அவர் பார்த்தார். வெற்றிகளை நோக்கிப் பயணிக்கும் சிலரது ஆசை பல இரகசியங்களையும் சூழ்ச்சிகளையும் போர்த்திக் கொண்டிருந்ததாகவே அவர் எண்ணமிட்டார்.

எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் விரைந்து தொற்றுகின்ற இந்தக் கொடிய கொரோனாவை விடவும் இந்தத் தேர்தலில் பலர் ஆடிய ஆட்டங்களும் கூடிய கூட்டங்களும் ஓய்ந்துவிட அறிவிக்கப்பட்ட வெற்றியின் முடிவுகள் பலருக்கும் பலவிதமான வருத்தங்களை ஏற்படுத்தியே இருக்கின்றன.

பட்டதாரியான செல்வநாதனுக்கு வேலைவாய்ப்புக்கு வழிசமைத்த வராகத் தோற்றம் காட்டியவரை அவர் இந்தத் தேர்தலில் ஆதரித்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை. செல்வநாதனின் வாக்கு அவருக்குத்தான்.

தனது உறவினரான டாக்டர் வேதானந்தம் கொலை செய்யப்படக் காரணமானவர் இவரே! என்று சுந்தரலிங்கம் வாதிடத் தொடங்கிய போதுதான் அவர்களின் விவாதம் சூடுபிடித்தது.

தனது வாதத்திற்கு ஆதாரமாக அவர் வைத்த குற்றச்சாட்டுகள், செல்வநாதனால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

செல்வநாதன் அவர் செய்த நன்மைகளைப் பட்டியலிட்டார். சுந்தரலிங்கமோ அவர்செய்த ஊழல்களையும் கொலைகளையும் மீண்டும் மீண்டும் உரத்துச் சொல்லி அவரைக் குற்றவாளியாக்கினார்.

விவாதம் முட்டி மோதி உச்சத்தில் இருவரிடையேயும் ஆத்திரத்தையே மூட்டியது.

இவர்களின் விவாதத்திற்குள் சிக்கிக்கொள்ளாமல் சிரித்துக் கொண்டிருந்த புவனேஸ்வரராசா, தனது வாக்கினை யாருக்குப் போட்டார்? என்ற இரகசியத்தைத் தனக்குள்ளேயே சிந்தித்து வாதிட்டுச் சந்தோசப்பட்டுக் கொண்டார்.

இவர் வாக்களித்த பெருமகனார் வெற்றி பெற்று விட்டார். அவ்வளவுதான்!

அவர்களின் பேச்சுவார்த்தைக்குள்ளே புவனேஸ்வரராசா, சரி பிழை கண்டு தனது எண்ணங்களை நுழைக்காமல் மௌனமாகவே அவர்களின் விவாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்தச் சூழலில் திடீரெனப் பாய்ந்தெழுந்த சுந்தரலிங்கம் செல்வநாதனைக் கன்னத்தில் அறைந்தார். கட்டிப் புரண்டார். மேசையிலிருந்து கையிலகப்பட்ட ‘பேப்பர் வெயிற்’றால் செல்வநாதனின் தலையில் ஓங்கி அறைந்தார்.

எதிர்பாராமல் நிகழ்ந்த இந்த மோதலைத் தடுக்கப் புவனேஸ்வரராசா, இருவர் மீதும் தனது பலத்தைப் பிரயோகித்தார். மேசையும் கதிரைகளும் ஒழுங்கு குலைந்து அறையின் ஓரங்களில் ஒதுங்கின.

சண்டை ஓய்ந்தது.

போர் ஓய்ந்த அமைதி நிலவியது. மௌனமாக சில பொழுது இருந்தவர்களில் முதலில் வெளியேறியவர் செல்வநாதன்.

அவர் வெளியேறிய கையோடு ‘ஏனடாப்பா செல்வநாதனை பேப்பர் வெயிற்றால் அடிச்சனி. அவன்ரை நெத்தியும் தலையும் வீங்கிப் போச்சுது’ என்று நட்பு ரீதியாகக் கேட்டு அனுதாபப்பட்டார் புவனேஸ்வரராசா.

‘இவங்களாலதான் அரசியலில் நல்லவர்கள் தோற்றுப் போறாங்கள்’ என்று சொன்ன சுந்தரலிங்கத்தின் பார்வை புவனேஸ்வரராசாவின் முகமாற்றத்தை ஆழமாக நோக்கியது.

நல்லவர்களும் வல்லவர்களும் ஏன் தோற்றுப் போகிறார்கள்?

கொலைகாரரும் கள்வர்களும் இன்று முன்னணியில் நிற்கிறார்களா?

அப்படியில்லை. இது ஜனநாயக நாடு.

மக்கள் ஒவ்வொருவருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு.

கெட்டவர்களையும் கொலைகாரரையும் நாட்டில் ஆட்சியில் வைக்க எந்தக் குடிமகனும் விரும்பமாட்டானே!

சிந்தித்தார்!

புவனேஸ்வரராசா குழம்பிப்போனார்.

ஜனநாயகம்!

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சிமன்றம்!

ஒவ்வொரு வாக்காளரும் இனத்தையும் நாட்டையும் மொழியையும் மக்களையும் அவர்களின் மேன்மையையும் கருத்திற் கொண்டுதானே ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பார்கள்?

புவனேஸ்வரராசா ஒரு வாக்காளர் என்ற நிலையில் அவரது கடமையில் இப்படி எதனையும் அவர் என்றுமே சிந்தித்ததாகத் தெரியவில்லை.

ஊரவனா? உறவினனா? நண்பனா? நம்மவனா? என்பதே அவரது வாக்களிப்பு முறையில் முன்னணியில் நின்ற தேர்வு விருப்பு!

‘எனக்கு வந்த ஆத்திரத்தில என்ன செய்யிறதெண்டு தெரியாம அடிச்சுப்போட்டன்’ சுந்தரலிங்கம் இப்பொழுது கவலைப்பட்டார்.

தேர்தல் ஒரு நாடகம். அது பல கலை அம்சம் பொருந்திய காட்சிகளாகவும் கவலைதரும் சோக நிகழ்வுகளாலும் வடிவமைக்கப்படுகின்றன. இதிலே பொய்யும் புழுகும் காசும் களவும் கலந்திருக்கும்.

பேச்சுப் போட்டிகளும் பட்டி மன்றங்களும் நிகழலாம். இதில் பல வேளைகளில் ஊடகவியலாளர்களும் பங்கேற்பதுண்டு. ஒவ்வொரு வேட்பாளருக்கும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் பல

ஆதரவாளர்கள் இருக்கவே செய்தனர்.

இந்தத் தேர்தலில் நடிக்கவரும் ஒவ்வொரு வேட்பாளரும் மக்களைக் கவரும் வகை தேர்ந்து ஒவ்வொரு வேடம் போட்டு ஆடிய நாடகத்தைத்தான் தேர்தல் காலத்தில் பார்த்தோமே!

இப்பொழுது அவர்கள் ஆடிய நாடகத்தின் சிறப்பும் வெற்றியும் அவர்கள் போட்ட நாடகத்தால் ஏமாற்றப்பட்ட மக்களால் ஜனநாயக விதிமுறைகளுக்கு ஏற்பத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய தேர்தலின் முடிவுகளின்படி தேர்தல் நாடகமாடிய நடிகர்கள், நிஜவாழ்வின் தேவைகளை உண்மையாய் வென்றெடுக்க வேண்டும் என்ற நோக்கோடு இந்த ஜனநாயகம், மக்கள் மன்றத்திற்குச் சிலரைத் தெரிவு செய்து அனுப்பி வைத்துள்ளது.

நிஜவாழ்வில் இவர்கள் முன்னெடுக்கும் மக்கள் தேவையை நிவர்த்திப்பதற்கான செயற்பாடுகளின் வெற்றிகளே, ஒரு நாட்டின் மனித நேய ஜனநாயக நடைமுறைகளின் எழுச்சியாக வேண்டும்.

புவனேஸ்வரராசா அமைதியாகச் சிந்தித்தார்.

'எனக்கு என்னவோ மனம் ஆறுதில்லை! அரசியலில் மனித நேயம் மிக்க நல்லவர்கள் ஏனோ இந்தத் தேர்தல்களில் நிற்பதில்லை! நின்றாலும் வெற்றி பெறுவது அபூர்வமே!' சுந்தரலிங்கத்தின் மனம் புகைந்தது.

சுந்தரலிங்கத்தின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளும் எண்ணமற்ற புவனேஸ்வரராசாவின் மனப்பதிவு குழம்பியது.

தெற்கே தொலைவில் வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் விலகிய செய்தியுடன் ஒரு நல்லவரின் அழகிய முகம் தோன்றி புவனேஸ்வரராசாவுக்கு மகிழ்ச்சி தந்தது.

அந்த வேட்பாளரின் பார்வையில் அவரோடு போட்டிக்கு நிற்பவர்களும் அவரது தொகுதி வாக்காளர்களும் கொண்டிருக்கும் நீதியற்ற முனைப்புக்களே அவரை வேதனைப்படுத்தியது என்றே புவனேஸ்வரராசா நினைத்தார்.

மனம் புளுங்கிய நிலையில் அந்த வேட்பாளர் 'தனக்கு வாக்களிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்!' என்று வாக்காளரிடம் கேட்டுக்கொண்டே தேர்தலிலிருந்து விலகிக் கொண்டார்.

இந்த அரசியல் ஒரு சாக்கடை என்பதும் அதில் பங்கு கொள்ளும் அரசியல் வாதிகள் கொள்ளைக்காரர்கள் என்பதும் உண்மையா?

இதைச் சொல்லிச் சொல்லியே நல்லவர்கள் யாவருமே அரசியலிலிருந்து விலகினால்...!

எம்மை ஆட்சிபுரியும் ஆட்சி...?

எமது நாட்டின் எதிர்காலம்? எமது அரசியல்? எல்லாமும் எங்கோ தொலைவில் ஒரு புள்ளியாய் மங்கலாய்...! ஒரு மாய வெளியை நோக்கி...!

அலுவலகத்தினுள்ளே அரசியல் பேச வேண்டாம்.



mahesu@thaiveedu.com











# சிறுமி

- ஜமெய்க்கா கின்கெயிட்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

திங்கட்கிழமை வெள்ளை உடுப்புக்களைத் தோய்த்து கல் குவியலில் போடு. செவ்வாய்க்கிழமை நிற உடுப்புக்களைத் தோய்த்து காய்வதற்கு கொடியில் போடு. கடும் வெயிலில் - வெறும் தலையுடன் வெளியில் நடக்காதே. பூசணிக்காய் பணியாரத்தை மிகச் சூடான இனிப்பு எண்ணெயில் பொரி. சிறு சிறு உடுப்புக்களைக் கழற்றிய உடனேயே ஊறப் போடு. உனக்கு நல்ல சட்டை ஒன்று தைப்பதற்கு வாங்கும் பருத்தியில் பசை இல்லாமல் பார்த்து வாங்கு. அப்படி என்றால் தான் தோய்த்தவுடன் அது சுருங்கிப் போகாது. அடுத்த நாள் சமைப்பதற்குக் கருவாட்டை முதல் நாளிரவே ஊறப்போடு. ஞாயிறு பாடசாலையில் நீ பென்னா-கலிப்ஸோ -பாட்டுப் பாடுகிறாய் என்பது உண்மையா? நீ உன் உணவைச் சாப்பிடும்போது அதன் மணம் மற்றவர்களின் வயிற்றுப் பசியை கிளறாமல் பார்த்துக்கொள். ஞாயிறு தினங்களில் சீமாட்டி போல நட. வேசியைப் போல நடக்காதே. ஏற்கெனவே அப்படித்தான் வரப் போகிறாய் போலத்தான் நடந்து கொள்கிறாய். ஞாயிறு பாடசாலையில் பென்னாவைப் பாட வேண்டாம். கப்பல் துறை முகப் பொடியன்களுடன் கதைக்காதே. அவர்களுக்குக் வழிகாட்டுவதற்குக் கூட. வீதிகளில் பழங்கள் தின்னாதே. தின்றால் ஈக்கள் உன்னைத் தொடர்ந்து வரும். ஞாயிறுகளில் நான் பென்னா பாடுவதே இல்லை. ஞாயிறு பாடசாலையில் ஒருபோதுமே பாடுவதில்லை. நீ தைத்த பொத்தானின் துளையை இப்படித்தான் வைத்துத் தைக்க வேண்டும். உடுப்பின் கால் மடிப்பை இப்படித்தான் மடித்துத் தைக்க வேண்டும். அதன் மடிப்புக் கழன்று கீழே விழுந்தால், ஏற்கெனவே வேசையைப் போல வருவதற்கு நீ முயல்கிறாய் என்று எனக்குத் தெரியும். அப்படித் தோன்றாமல் தடுப்பதற்கு பாவாடைக் கரையின் மடிப்பு அவிழ்ந்து கீழே விழும்போது இப்படித்தான் அதை மடித்துத் தைக்க வேணும். உன்னுடைய அப்பாவின் காக்கி சேர்ட்டை மடிப்பு விழாமல் இருப்பதற்கு இப்படித்தான் இஸ்திரிபோட வேணும். இப்படித்தான் வெண்டிக்காய் மரத்தை வளர்க்க வேணும். வீட்டுக்குத் தூரமாக. ஏனென்றால் வெண்டிக்காய் மரத்தில் சிவத்த எறும்புகள் மொய்த்திருக்கும். அவை வீட்டுக்குள் வந்து விடும். சேப்பங் கிழங்கை இப்படித்தான் வளர்க்க வேணும். அதற்கு நல்லா தண்ணீர் ஊற்ற வேணும். அல்லாவிட்டால் சாப்பிடும்போது தொண்டையில் அரிப்பெடுக்கும். இப்படித்தான் வீட்டு மூலையைக் கூட்ட வேணும். இப்படித்தான் வீடு முழுவதையுமே கூட்ட வேணும். இப்படித்தான் முற்றத்தைக் கூட்ட வேணும். உனக்கு அதிகம் பிடிக்காத ஒருத்தருடன் இப்படித்தான் புன்னகைக்க வேணும். உனக்குத் துப்புரவாகப் பிடிக்காத ஒருத்தருடன் இப்படித்தான் புன்னகைக்க வேணும். உனக்கு நன்றாகப் பிடித்த ஒருத்தருடன் இப்படித்தான் புன்னகைக்க வேணும். இப்படித்தான் தேநீர் குடிப்பதற்கு மேசையை ஒழுங்கு செய்ய வேணும். இப்படித்தான் இரவுணவு பரிமாறுவதற்கு மேசையை ஒழுங்கு செய்ய வேணும். இப்படித்தான் முக்கியமான விருந்தாளி இரவுணவுக்கு வருகிறார் என்றால் மேசையை ஒழுங்கு செய்ய வேணும். இப்படித்தான் பகலுணவுக்கு மேசையை ஒழுங்கு செய்ய வேணும். இப்படித்தான் காலையுணவுக்கு மேசையை ஒழுங்கு செய்ய வேணும். உன்னை அதிகம் தெரியாத ஆண்களுக்கு முன்னால் இப்படித்தான் நீ நடக்க வேணும். நீ வேசையாக வராமல் இருப்பதற்காக முன்பே எச்சரித்தது போல அதைச் செய்ய வேணும். நீ வேசை என்று அவர்கள் உடனடியாகக் கண்டுபிடிக்க மாட்டார்கள். ஒவ்வொரு நாளும் உன்னை சுத்தம் செய்வதை உறுதிப்படுத்திக் கொள், உன்னுடைய எச்சிலால் என்றாலும் உன்னைச் சுத்தம் செய்ய வேணும். மாபிள் விளையாடுவதற்கு சம்மணம் கொட்டிக் கொண்டிருக்காதே. நீ ஒரு பொடியன் இல்லை என்பது உனக்குத் தெரியும். மற்றவர்களின் பூக்களைப் பறிக்காதே. அதிலிருந்து ஏதாவது பூச்சி உனக்கு தொற்றிவிடும். கருங்குருவிக்கு கல் எறியாதே. சிலவேளை அது கருங்குருவியாகக் கூட இருக்காது. இப்படித்தான் மாவில் இனிப்புப் பண்டம் தயாரிப்பது. இப்படித்தான் டோக்கோணா (மரவெள்ளிக்கிழங்கு, வாழைப்பபழம் ஆகியவற்றில் செய்து வேக வைக்கும் பண்டம்) செய்வது. இப்படித்தான் மிளகுப் பொடி தூவிய இறைச்சி உணவு செய்வது. தடிமல் இருமலுக்கு இப்படித்தான் நல்ல மருந்து செய்வது. ஒரு கரு குழந்தையாக வளர்வதற்கு முன்பே அதை எறிவதற்கு இப்படித்தான் நல்ல மருந்து செய்வது. இப்படித்தான் மீன் பிடிப்பது. உனக்குப் பிடிக்காத மீனை இப்படித்தான் எறிவது. அதைச் செய்தால் உனக்குக் கேடு விளையாது. ஒருத்தனை வெருட்டுவது இப்படித்தான். இப்படித்தான் ஒருத்தன் உன்னை வெருட்டுவான். ஒருத்தனை இப்படித்தான் காதலிக்க வேணும். அது வேலை செய்யாவிட்டால் அதற்கு வேறு வழிகளும் இருக்கின்றன. அவையும் வேலை செய்யாவிட்டால், அவனைக் கைவிடுவது பற்றி அதிகம் உணர்ச்சிவசப்படாதே. இப்படித்தான் நீ அவனிலிருந்து விரைவாக விலகிக் கொள்ள வேணும். அப்போதான் அது உன்மீது தாக்கத்தை ஏற்படுத்தாது. இப்படித்தான் நீ உன் செலவுகளைச் சமாளிக்க முடியும். றொட்டி புதிசா என்று பார்ப்பதற்கு, அதை அமுத்திப் பார். அமுத்திப் பார்க்க பேக்கரிக்காரன் என்னை விடாவிட்டால் என்ன செய்வது? அப்படியென்றால் பேக்கரிக்காரன் றொட்டிக்கு அருகில் உன்னை விடாத ஒரு பெண்ணாக நீ வளரப் போகிறாய் என்று சொல்ல வருகிறாயா?



ஜமெய்க்கா கின்கெயிட் 1949இல் கரிபியன் தீவுத் தொகுதியிலுள்ள ஒன்றான அன்ரிகுவா-பாபுவா வில் பிறந்தவர். அத்தீவு 1981வரை பிரித்தானிய காலனியாக இருந்தது. அவரின் இயற்பெயர் எலெய்ன் பொட்டர் றிச்சட்சன். அவரின் 17 வயதில் அவருடைய தாய் வீட்டிலுள்ள வறுமையின் காரணமாக அவரை நியுயோர்க்கிலுள்ள பணக்கார புறநகருக்கு வீட்டு வேலைக்காரியாக அனுப்பினார். அதன் பின் அவர் இருபது ஆண்டுகள் அன்ரிக்குவாவுக்கு திரும்பிச் செல்லவில்லை. மாலை நேரத்தில் சமுதாயக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றார். எழுதத் துவங்கியவுடன் தன் பெயரை ஜமெய்க்கா கின்கெயிட் என்று மாற்றிக் கொண்டார். ஜமெய்க்கா என்ற பெயர் பூர்வ குடியான அமெரிக்க இந்தியர்களான ரையோனியர்கள் அழைத்த பெயர். பரிஸ் றிவியுவிலும் நியுயோர்க்கரிலும் எழுதினார். அதில் அவருடைய முதல் நாவலான லூஸி தொடர்கதையாக வெளிவந்தது. நியுயோர்க்கர் பத்திரிகையில் இருபது ஆண்டுகள் எழுத்தாளராகப் பணியாற்றினார். Talk of the Town என்ற பத்தியை அதில் பத்தாண்டுகள் எழுதி வந்தார். அவர் ஒரு நாவாலாசிரியர், கட்டுரையாளர், தோட்டக்கலை எழுத்தாளர். கோடையில் அமெரிக்காவில் உள்ள வேமவுன்ரிலும் மற்றக் காலங்களில் அன்ரிக்குவாவிலும் வாழ்கிறார். ஹாவட் பல்கலையில் ஆபிரிக்க அமெரிக்க பேராசிரியராகப் பணியாற்றுகிறார். பரிஸ் றிவுயுவின் ஹடாடா பரிசை 2022இல் பெற்றார். அவர் தன்வரலாற்றுக் கதைகளையே எழுதினார் என்று அவர் மேல் விமர்சனம் உண்டு. யார் தான் தன்வரலாறு கலக்காமல் புனைவு எழுதுகிறார்கள் என்று அதற்கு அவர் பதிலளித்தார்.



mahalingam.k@thaiveedu.com



# வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள்

- உண்ணி. ஆர்

தமிழில்: அரவிந்த் வடசேரி

‘இந்தப் புத்தகங்களையெல்லாம் விற்று விடலாமென இருக்கிறேன்’ பிரபாகரன் பத்மினியிடம் சொன்னான். பத்மினி நம்பமுடியாமல் பிரபாகரனைப் பார்த்தாள்.

‘விற்றால் சுமார் எவ்வளவு கிடைக்கும்?’ பிரபாகரன் கேட்டான்.

அவள் ஒன்றும் சொல்லவில்லை.

‘எல்லா அலமாரிக்கும் சேர்த்து ஐம்பதாயிரம் உறுதி.’ அலமாரியின் கதவுகள் ஒன்றை தட்டி பிரபாகரன் சொன்னான் ‘புத்தகங்களுக்கு இரண்டு இலட்சமாவது கிடைக்காதா?’

பத்மினி என்ன பதில் சொல்லப்போகிறாள் எனும் ஆவல் பிரபாகரனுக்கு இருந்தது. அப்பொழுதுதான் திடீரென மழை பெய்ய தொடங்கியது.



**பி.ஜெயச்சந்திரன் எனும் இயற்பெயர் கொண்ட உண்ணி ஆர் மலையாளத்தின் முக்கிய புனைவெழுத்தாளர்.**

**பல சிறுகதைத் தொகுப்புகளும், சார்லி உட்பட பனிரெண்டுக்கும் மேற்பட்ட திரைக்கதைகளும் படைத்துள்ளார். சார்லி படத்திற்காக கேரள அரசின் சிறந்த திரைக்கதை விருது, கேரள சாகித்ய அகாடமியின் சிறுகதைக்கான விருது உட்பட பல விருதுகள் பெற்றுள்ளார். இவரது திரைக்கதையில் சமீபத்தில் வெளியான நாரதன் திரைப் படம் பாராட்டுக்களை பெற்று வருகிறது.**

**மாறுபட்ட கதைக் களங்களும் கருப்பொருள்களும் இவரது படைப்புகளை தனித்துவப் படுத்துகின்றன. சென்னை புத்தகக் கண்காட்சி நடைபெறும் சமயத்தில் இந்தக் கதை வாசிக்க நேர்ந்ததும் மொழிபெயர்க்க வேண்டும் எனும் ஆவல் உண்டாகியது.**

‘கடவுளே’ என கூவியபடி அவள் முற்றத்திற்கு ஓடினாள். பிரளயத்திலிருந்து ஒவ்வொரு உயிரையும் மீட்கும் உத்வேகத்துடன் காயப் போட்டிருந்த துணிகள் ஒவ்வொன்றையும் வாரியெடுத்தாள். அவற்றை உடம்போடு அணைத்து பின்கட்டை நோக்கி சரளைக் கல் விரவிய முற்றத்தில் தவ்வி ஓடினாள்.

அங்கிருந்த கொடியில் துணிகளை விரித்துக்கொண்டிருந்த பத்மினியின் பக்கம் பிரபாகரன் சென்றான்.

‘நீ ஒன்றும் சொல்லவில்லையே?’

பிரபாகரனின் வெள்ளை சட்டையின் கழுத்துப் பட்டையில் ரவிக் கையின் சிவப்புச் சாயம் படர்ந்ததை மறைத்தபடி பத்மினி சொன்னாள், ‘என்னக்கென்ன தெரியும்.’

‘உப்பு மூட்டை சுமந்த கழுதையின் நிலை எனக்கு.’ ஒரு மோசமான உவமையினை உதிர்த்தபடி பிரபாகரன் பத்மினியைப் பார்த்தான்.

‘மழை இப்படிப் பெய்தா பிள்ளைகளின் யூனிஃபார்ம் எப்படி உலரும்?’ யாரிடம் என்றில்லாமல் பத்மினி சொன்னாள். பிறகு முகத்தில் விழுந்த சாரலை துடைத்தபடி அடுக்களையினுள் சென்றாள்.

‘புத்தகங்களெல்லாம் பெரிய விஷயமில்லை’, சமையல் மேடையில் வந்தமர்ந்து பிரபாகரன் சொன்னான். ‘எங்கேயோ உட்கார்ந்து அவனுக எழுதினதையெல்லாம் வாசித்து இவ்வளவு நாளும் நேரத்தை வீணடித்ததை நினைத்தால் வெட்கமாக இருக்கிறது.’

மீன் அலசிய தண்ணீரை பத்மினி ஜன்னலின் ஊடே வெளியே நின்றிருந்த செம்பருத்தியின் அடிக்கு விசிறி ஊற்றினாள்.

இன்னும் கொஞ்ச நேரம் பிரபாகரன் அங்கேயே வெறுமனே உட்கார்ந்திருந்தான். பத்மினி அவனை சட்டை செய்யாமல் வேலைகளை செய்தாள். மிளகாய் தாளித்த காரத்தினால் தும்மல் போட்டு, பிரபாகரன் அடுக்களையை விட்டு வெளியேறி திண்ணையில் போய் அமர்ந்தான். புத்தகங்கள் குறித்து அவன் ஏதாவது சொன்னாலே பத்மினிக்கு நடுக்கமாய் இருக்கும். கல்யாணம் முடிந்த புதிதில், அவ்வளவு புத்தகங்களைக் கண்டு பிரமித்து ‘இது எல்லாமே வாசித்ததா?’ என கபடமற்று கேட்டாள். கிண்டல் செய்வதாக நினைத்து அவன் ஒரு அடி வைத்தான். அதிலிருந்து கூட்டித் துடைக்க மட்டும் தான் அவள் அந்த அறையினுள் போவாள். பிள்ளைகளும் போவதில்லை. கடைக்குட்டியின் உள்ளே அந்த அறையினுள் என்ன என்ற ஆவல் சுற்றித் திரிகிறது. அதனால் தான் அடிக்கடி அறை வாயிலில் நின்று காப்பி வேண்டுமா, சாப்பிட நேரமாகவில்லையா என்பது போன்று ஏதாவது கேட்பான். அந்நேரம் அவன் பார்வை உள்ளே இருக்கும் ஒவ்வொரு புத்தகத்தையும் வருடிக்கொண்டிருக்கும்.

மழைச் சாரல் திண்ணையின் விளிம்பை எட்டியதும் பிரபாகரன் நாற்காலியை பின்னுக்கு தள்ளி அமர்ந்தான். ஆகாயத்திலிருந்து ஆயிரம் கால்களை பூமியில் பாவிய விசித்திர மிருகம் போன்று மழை வீட்டைச் சுற்றி அலைந்து கொண்டிருந்தது.

‘பழைய புத்தகங்கள் வாங்குபவர்கள் இவ்வளவு புத்தகங்களையும் ஒரே நேரம் எடுத்துக் கொள்வார்களா?’ படுக்கப் போகையில் பிரபாகரன் கேட்டான்.

‘கொடுத்தே ஆகணுமா என்ன?’

பத்மினி அப்படிச் சொல்வாள் என பிரபாகரன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

‘ஏன் அப்படிச் சொல்கிறாய்?’

‘பத்திருபது வருடத்திய சம்பாத்தியம் தானே. அதனால் தான் விற்க வேண்டுமா என கேட்கிறேன்.’

‘இவ்வளவு நாட்கள் சேர்த்த இந்த சம்பாத்தியத்தால் உனக்கோ பிள்ளைகளுக்கோ பத்து பைசா பிரயோஜனம் இருக்கா? நான் இங்கே புத்தகத்தில் முகம் புதைத்து வாசித்துக் கொண்டிருக்கிறேனே தவிர இங்கு நடக்கும் ஏதாவது எனக்குத் தெரிகிறதா? ஏதோ, நீ இருப்பதால் எல்லாம் ஒழுங்காக நடக்கிறது.’

பத்மினிக்கு சிரிப்பு வந்தாலும் அடக்கிக் கொண்டாள்.

‘நமக்கு திருமணம் நடந்த நேரமாவது நான் இதையெல்லாம் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். இப்பொழுது ஐம்பது வயதில் தான் இந்த எண்ணமெல்லாம் வருகிறது. ஆனால் அது தவறு எனச் சொல்ல முடியுமா?’

பத்மினி விளக்கை அணைத்தாள். மின்விசிறியின் இறக்கையில் மோதித் தெறித்த வண்டு ஒன்று பிரபாகரனின் மீது விழுந்தது.

பிரபாகரன் நினைத்தது போலவே நடைபாதை வியாபாரிகளுக்கு இவ்வளவு புத்தகங்களை விலைக்கு வாங்க ஆர்வம் இருக்கவில்லை. எடைக்கு வேண்டுமானால் எடுத்துக் கொள்ள சிலர் தயாராய் இருந்தனர். என்ன ஆனாலும் அது முடியாது என பிரபாகரன் திரும்பி நடக்கையில் வியாபாரிகளில் ஒருவன் சொன்னான்: ‘பாளையத்திலே முகம்மதுனு ஒருத்தர் இருக்கார், போய் பாருங்க. ஒருவேளை வேலையாகலாம்.’

பிரபாகரன் பாளையத்தை அடைந்த பொழுது வயது நாற்பதை எட்டியும் குழந்தைப் பேறு இல்லாத ஒரு பெண்ணை ஹாலந்து நாட்டிற்கு வீட்டு வேலைக்கு அனுப்ப வியாபாரம் பேசி முடிக்கும் தறுவாயில் இருந்தார் முகம்மது. அந்த வியாபாரத்தில் ஏதோ வில்லங்கம் இருப்பது போல் உணர்ந்த பிரபாகரன், முகம்மதின் பார்வையின் எல்லைக்குள் கடக்காமல் சட்டென திரும்பி நடந்தான். இரண்டு எட்டு எடுத்து வைக்கும் முன் பின்னால் இருந்து ‘சார்’ என யாரோ அழைக்க பிரபாகரன் திரும்பிப் பார்த்தான்.

‘பயப்படாதீங்க சார்’, முகம் கொள்ளா சிரிப்புடன் முகம்மது முன்னால் நின்றான். ‘என்னைப் பாக்கத் தானே வந்தீங்க.’

பிராபகரன் ஒன்றும் பேசவில்லை.

'உங்க மொகத்தை பாத்தாலே தெரியுதே, என்னை பாக்க வந்தீங்கன்னு.' முகம் பார்த்து குறி சொல்பவனைப் போல் கேட்டான் முகம்மது. 'என்ன விஷயமா வந்தீங்க?'

'சும்மா' பிரபாகரன் தயங்கினான்.

'நீங்க பயபடாதீங்க. பூமியில நடக்கிற எல்லா வியாபாரமும் எனக்கிருக்கு. அல்லாவுக்கு உவப்பில்லாத எந்தச் செயலும் செய்ய மாட்டேன். என்னால உங்களுக்கு என்ன ஆக வேண்டியிருக்கு?'

பிரபாகரன் மவுனமாக நின்றான்.

'நீங்க கவலையே பட வேண்டாம். வாங்க ஒரு சாயா குடிச்சிட்டே பேசுவோம். எதுனாலும் தாராளமா என் கிட்டே சொல்லலாம். அல்லாவுக்கு விரோதமானதா மட்டும் இருக்கக் கூடாது.'

பிரபாகரன் டீயை ஊதி உறிஞ்சிக் கொண்டே சொன்னான். 'என் கிட்டே இருக்கற புத்தகங்களையும் அவற்றை வைத்திருக்கும் அலமாரிகளையும் நல்ல விலைக்கு எடுத்துக்கறா மாதிரி ஒரு ஆள் வேணும்.'

'அலமாரி வேணும்னா இப்பவே கூட எடுத்துக்கலாம். அதில இருக்கற புத்தகங்கள் தான் பிரச்சினை.'

அது சரிதான் என பிரபாகரனும் ஒத்துக் கொண்டான்.

'நீங்க கவலைப்படாம அந்த டீயைக் குடீங்க.' முகம்மது சொன்னான்.

டீ குடித்து முடித்த பிரபாகரன் முகம்மதைப் பார்த்தான்.

'ஒரு நாள் இல்லை ரெண்டு நாள் டைம் குடுங்க. கவலைப்படாம தைரியமா போங்க. அல்லா தயவில ஆள் வரும்.'

பிரபாகரன் டீக்கு பணம் கொடுக்க முனைந்த பொழுது 'விளையாடாதீங்க சார்' என தடுத்து பிரபாகரனின் தொலைபேசி எண்ணையும் விலாசத்தையும் வாங்கிக் கொண்டான் முகம்மது. பிரபாகரன் கிளம்புமுன் பக்கத்தில் இருந்த பழைய சாமான் கடையினைக் காட்டி, 'இது தான் நம்ம சாம்ராஜ்யம், எப்ப வேணா நீங்க வரலாம்' என வழியனுப்பி வைத்தான்.

அதைக் கேட்ட பிரபாகரன் மனம் விட்டு சிரித்தான்.

'முகம்மது கில்லாடி.' ராச்சாப்பாட்டு வேளையில் பிரபாகரன் பத்மினியிடம் சொன்னான். 'எப்படியும் ஆள் யாரையாவது பிடித்து வருவான். அது உறுதி'

'இன்னும் ஒரு முறை யோசனை செய்ய வேண்டாமா?' பிரபாகரனின் தட்டில் குழம்பு ஊற்றியபடி கேட்டாள் பத்மினி.

'அஞ்சு பைசா பிரயோஜனமில்லாத இந்த புத்தகங்களை எல்லாம் நீயும் உன் பிள்ளைகளுமா சுட்டு தின்னுங்க. இவ்வளவு நாளா என்னை பாழ்படுத்தின அவை இனி இங்கே இருக்க வேண்டாம்.' கோபித்துக் கொண்டு சாப்பாட்டை முடிக்காமல் எழுந்து போனான் பிரபாகரன்.

பிரபாகரனின் சாப்பாட்டை ஒரு தட்டால் மூடி வைத்தாள் பத்மினி.

மறுநாள் காலை, பிரபாகரனின் வீட்டை கண்டுபிடித்து வந்தான் முகம்மது. ஒரு வயதான மனிதரும் உடன் வந்தார்.

'இது ஜான் சார், டாக்டர்', முகம்மது அறிமுகப்படுத்தினான். 'கானடாவிலே இருந்தார். இப்போ அதையெல்லாம் விட்டுட்டு இங்கே வந்துட்டார். நம்ம முனிசிபாலிட்டி ஆபீஸ் பக்கத்திலே பழைய மாடல்லே புதுசா ஒரு வீடிருக்கே அது தான் சாரோட வீடு.'

பிரபாகரன் டாக்டரைப் பார்த்து புன்னகைத்து இருவரையும் வீட்டிற்குள்ளே அழைத்தார்.

'சார் ஃபேமிலியும் அந்த வீட்டில தான் இருக்காங்களா இல்லை ஆபீஸ் மட்டுமா?' பிரபாகரன் கேட்டான்.

'சார் ஃபேமிலியெல்லாம் கானடாவிலே தான் இருக்காங்க. இங்கே தனியாத்தான் இருக்கார். அஞ்சாறு நாய் இருக்கு தொணைக்கு.' முகம்மது தான் பதில் சொன்னான்.

'சார் வாசிப்பீங்களா?' பிரபாகரன் ஆர்வமுடன் கேட்டான்.

'நோ, நோ. நான் அந்த மாதிரி ஆசாமி இல்லை.' டாக்டர் சொன்னார்.

'இங்கேதான் புத்தகங்கள்' ரேழியை ஒட்டின அறையைக் திறந்து காட்டினான் பிரபாகரன்.

'யா அல்லா, இவ்வளவு புத்தகமா?' முகம்மது வியந்தான்.

'முகம்மது சொன்ன போது நானும் இவ்வளவு எதிர்பார்க்கலை', டாக்டரும் ஆச்சரியப்பட்டார்.

பிரபாகரன் அடக்கமாக சிரித்தான்.

'சார் இதெல்லாமே வாசிச்சிருக்கீங்களா?' முகம்மது பக்கத்தில் வந்து இரகசியமாக கேட்டது காதில் விழாதது போல் பிரபாகரன் அலமாரிகளின் கதவுகளை திறந்துக் கொண்டிருந்தான்.

'அழகா அடுக்கி வெச்சிருக்கீங்க. புத்தகங்களுக்கெல்லாம் எந்த டேமேஜும் இல்லை.' டாக்டர் சில புத்தகங்களை எடுத்துப் பார்த்து சொன்னார். 'எனக்கு வாசிப்புப் பழக்கம் எல்லாம் இல்லை. கொஞ்சம் புத்தகங்களும் அலமாரிகளும் இருக்குன்னு சொன்னதால பார்க்கலாம்னு வந்தேன். ஒரு ரீடிங்க ரூம் இருக்கு. அதை எதாவது போட்டு நிரப்பணுமே.'

பிரபாகரன் அது சரி தான் என தலை ஆட்டினான்.

'இதெல்லாத்துக்கும் சேர்த்து எவ்வளவு எதிர்பார்க்கறீங்க?' டாக்டர் கேட்டார்.

'ரெண்டரையாவது கிடைக்கணும்' பிரபாகரன் சொன்னான்.

'அலமாரி தேக்கா இல்லை ஈட்டியா?' முகம்மது தான் கேட்டான்.

'ஃபர்ஸ்ட் கிளாஸ் ஈட்டி' வெட்டக் கொடுக்கும் மாட்டின் முதுகில் தட்டி விலை பேசுவது போல அலமாரியில் அடித்து பிரபாகரன் சொன்னான்.

'ரெண்டரை அதிகம்' டாக்டர் சொன்னார்.

'சார் கொஞ்சம் அட்ஜஸ்ட்மெண்ட் எல்லாம் பண்ணுவார்' முகம்மது டாக்டரிடம் சொன்னான்.

'ரெண்டுக்கு வேணும்னா எடுக்கலாம்' டாக்டர் சொன்னார்.

'ஐயோ, அது ரொம்ப கம்மி' பிரபாகரன் ஏமாற்றத்துடன் சொன்னான்.

‘அப்புறம்?’ டாக்டர் அலமாரியின் அடுக்குகளை எண்ணிப் பார்த்துக் கொண்டு கேட்டார்.

பிரபாகரன் முகம்மதை ஒரு பார்வை பார்த்தான்.

‘ரொம்ப எல்லாம் யோசனை பண்ணாதீங்க. கடைசியா ரெண்டே காலுக்கு முடிச்சிடுவோம்’ முகம்மது இறுதியாக விலை சொன்னான். பிறகு சரி தானே என்பது போல் இருவரையும் பார்த்தான். இருவரும் சரி என்பது போல் தலை ஆட்டினர்.

‘அப்படீன்னா, சார் ஒரு டோக்கன் அட்வான்ஸ் கொடுத்திடுங்க’ முகம்மது சொன்னான். டாக்டர் அட்வான்ஸ் கொடுத்தார். முழுப் பணத்துடன் நாளை காலை வந்து விடுவோம் எனச் சொல்லி இருவரும் விடை பெற்றனர்.

அவர்கள் போனதும் பிரபாகரன் புத்தகங்கள் இருக்கும் அறையில் சென்று அமர்ந்தான். புனைவுகள் வாசித்து இவ்வளவு நாட்களையும் கடத்திய முட்டாள்தனத்தை எண்ணி வெட்கப்பட்டான்.

இரண்டு பணியாட்களுடன் முகம்மது மறு நாள் மத்தியானத்திற்கு முன்னரே வந்து சேர்ந்தான், சீக்கிரமே டாக்டரும்.

‘இதிலே கையெழுத்து போட ஒன்றும் பிரச்சினை இல்லையே?’ முகம்மது கேட்டான்.

‘இதென்ன?’ பிரபாகரனுக்கு புரியவில்லை.

‘இது ஒரு அக்ரிமெண்ட். இதையெல்லாம் நீங்க எனக்கு வித்ததுக்கு அத்தாட்சி.’ டாக்டர் சொன்னார்.

‘அவ்வளவு தானா?’ பிரபாகரன் சந்தோஷமாக கையொப்பமிட்டான்.

இரண்டு தடவையாகத் தான் புத்தகங்களை டாக்டர் வீட்டிற்கு கொண்டு போக முடிந்தது. பிரபாகரன் காலியான அறைக்குள் வந்து பார்த்த பொழுது அது வழக்கத்தைவிட பெரியதாக தெரிந்தது.

‘இந்த அறை இவ்வளவு பெரியது என இப்பொழுது தான் தெரிகிறது’ பிரபாகரன் பத்மினியிடம் அதிசயப்பட்டான்.

அவள் ஒன்றும் சொல்லவில்லை.

‘எவ்வளவு இடம் கிடைத்திருக்கிறது’, பிரபாகரன் அறையின் அளவுகளை அளப்பது போல் நடந்துக் கொண்டு சொன்னான். ‘வேண்டுமென்றால் டி வி யை இந்த அறைக்கு மாற்றலாம். இல்லை, ஒரு கழிப்பறை புதிதாக கட்டி பெரியவனுக்கு கொடுத்து விடலாமா இதை?’

பத்மினி மவுனமாக கதவில் சாயந்துக் கொண்டு அவனைப் பார்த்து நின்றாள்.

‘இந்தப் பணத்தை பிள்ளைகளின் பேரில் வங்கியில் போட்டு விடலாமா? வேணும்னா நீ கூட கொஞ்சம் நகை வாங்கிக்கலாம்.’

பிரபாகரன் வழக்கத்தை விட அதிகம் பேசுவதாகப்பட்டது பத்மினிக்கு.

‘இந்த நாற்காலி மேல் ஒரு கண்ணிருந்தது முகம்மதுக்கு. நான் கொடுப்பேனா இதை. இது என் அப்பாவிற்கு அவரின் அப்பா கொடுத்ததாயிற்றே.’

ஒரு வாசகனின் சாவைக் கொண்டாடுவது போல் தான், தொடர்ந்த இரண்டு நாட்களும் பிரபாகரன் நடந்துக் கொண்டான். இந்த உலகின் மிகப் பெரிய முட்டாள்கள் வாசகர்கள். எழுத்தாளனுக்கு பணமும் புகழும் கிடைக்கிறது. வாசகனுக்கு? பண விரயம். தூக்கம் தொலைப்பு. வீட்டின் இடத்தை அடைத்துக் கொள்கிறது. வீட்டின் அமைதி கெடுகிறது. ஒருவனுக்கும் வாசகனைத் தெரிவதில்லை. அவன் அதை விரும்புவதும் இல்லை எனலாம். எதற்காக வாசிக்கிறீர்கள் என யாராவது கேட்டால் சாதாரண மனிதனுக்கு வாயில் நுழையாத சில வார்த்தைகளை தேடி எடுத்து பேசுவான். ஒரு வேளை, இந்தக் கேள்வியை என்றாவது எதிர்கொள்ள நேரும் என்பதை தெரிந்து கொண்டுதான் அந்த பதிலை எப்பொழுதும் தயாராக கையில் பிடித்துக் கொண்டு நடமாடிக் கொண்டிருக்கிறான். எதற்காக எழுதுகிறீர்கள் என்ற கேள்வியினை எந்நேரமும் எதிர்கொள்ள தையாராக எழுத்தாளன் நடப்பது போன்று. எதற்காக வாசிக்கிறீர்கள் என்ற கேள்வி தான் ஒரு வாசகன் தன் வாழ்வில் பொருள்பொதிந்த விடையளிக்க நேரும் ஒரே சந்தர்ப்பம். ஆனால் அதனால் அவன் எதை அடைகிறான்? ஒன்றுமேயில்லை. பத்மினியிடம் பிரபாகரன் இரண்டு நாட்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்ததுதான் இது. இரண்டு நாட்களில், சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லி முடித்து விட்ட நிம்மதியையும் பிரபாகரன் அடைந்திருந்தான்.

மூன்றாவது நாள் நேரத்திலேயே படுத்து உறங்கிவிட்ட பிரபாகரன் இரவில் எப்பொழுதோ சிறுநீர் கழிக்க எழுந்து போனான். திரும்பி வந்து படுத்தவனுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. இப்படி, தூக்கம் வராத பொழுது அவன் வாசிக்கும் அறையினை நாடிச் செல்வது தான் வழக்கம். சாய்வு நாற்காலியில் சாய்ந்து தூக்கம் வரும் வரை எதையாவது வாசித்துக் கொண்டிருந்து விட்டு அதிலேயே படுத்து உறங்கி விடுவான். பழக்க தோஷத்தால் வாசிப்பறையை திறந்து விளக்கைப் போட்டான் பிரபாகரன். மஞ்சள் வெளிச்சத்தில் தெரிந்த வெறுமையை ஒரு நிமிடம் கூட பார்க்க முடியாமல் பிரபாகரன் கண்களை இறுக்க மூடினான். கனவா நிஜமா என பிரித்தறிய முடியாமல், இதையம் துடிக்க, உடல் உதற, நடுங்கும் கால்களில் நிலை தடுமாறும் உடலுடன் படுக்கையறையை அடைந்து பத்மினியை விளித்தான். உடல் முழுதும் வியர்வையில் நனைந்து, கண்கள் நிலைகுத்தி, முற்றிலும் மாறுபட்ட முகத் தோற்றத்துடன் நின்ற பிரபாகரனைக் கண்ட பத்மினி திடுக்கிட்டு துள்ளி எழுந்தாள். பயம் நெரித்த குரலில் பிரபாகரன் கேட்டான், ‘என் புத்தகங்கள்?’

பிரபாகரனை சேர்த்தணைத்து படுக்கையில் அமர வைத்தாள் பத்மினி.

‘என் புத்தகங்கள்.. என் புத்தகங்கள்...’ முனகிக் கொண்டிருந்தான் அவன். பத்மினி பிரபாகரனின் நெற்றியில் வழிந்த வியர்வையை துடைத்துக் கொண்டிருந்தாள். பரிச்சயமற்ற ஏதோ ஒரு உலகில் அகப்பட்டுக் கொண்டவனைப்போல் இருந்தான் பிரபாகரன்.

விடிந்தும் விடியாததுமாக பிரபாகரன் கிளம்பினான், ‘ஒரு முறை முகம்மதைப் பார்த்து விட்டு வருகிறேன்.’

பிரபாகரன் சென்று சேர்ந்த பொழுத்து தான் முகம்மது தூங்கி எழுந்திருந்தான்.

‘என்ன சார், இந்த நேரத்தில?’

‘என் புத்தகங்கள் திருப்பி வேணும் எனக்கு’, பிரபாகரனின் குரல் நடுங்கிக் கொண்டிருந்தது.

முகம்மதுக்கு ஒன்றும் புரியவில்லை.

‘பணம் முழுவதையும் திருப்பித் தந்து விடுகிறேன். வேண்டுமானால் இரண்டு நாட்களுக்கான வட்டியும் சேர்த்து தருகிறேன். என் புத்தகங்கள் திரும்ப வேண்டும்.’ கடையின் தட்டியின் மீது சாய்ந்து

நின்று பேசிக் கொண்டிருந்தான் பிரபாகரன். அவன் பெரிதாக மூச்சு விட்டுக் கொண்டிருந்தான்.

‘என்ன சார், காலங்காத்தால வந்து விளையாடுறீங்களா? நீங்க அதை அந்த டாக்டருக்கு வித்தது தானே?’

‘என்னால அதை விக்க முடியாது முகம்மது’, பிரபாகரன் முகம்ம துவின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டான்.

பிரபாகரனின் குனிந்த தலையினை நிமிர்த்தி முகம்மது சொன் னான், ‘நீங்க நிம்மதியா வீட்டுக்கு போங்க. நான் அந்த டாக்டரி டம் பேசிப் பார்க்கிறேன்.’

‘நானும் வருகிறேன் உங்களோடு.’

‘அது வேண்டாம் சார். எனக்கு இன்னும் நிறைய வியாபாரம் பண் ணணும் அவரோட. இதுவே தப்பு தான். இது என் தொழிலை பாதிக்கும். நீங்க வீட்டில வெயிட் பண்ணுங்க. நான் கூப்பிடறேன்.’

புத்தகங்கள் இல்லாத அறையின் சாய்வு நாற்காலியில் ஒரு பந்து போல பிரபாகரனின் உடல் சுருண்டு அடங்கிப் போவதை ஜன்ன லின் வழியாக பிள்ளைகள் பார்த்தனர்.

‘கவலைப்படாதீர்கள். அது நம்முடையது தானே. நிச்சயமாக நமக்கு கிடைக்கும்’, அவனுக்கு மட்டும் கேட்கும்படி அருகே வந்து சொன்னாள் பத்மினி.

பத்மினியின் கைகளை பற்றிக் கொண்டான் பிரபாகரன். அவன் கண்கள் நிறைந்து வழிந்தன.

‘அழாதீர்கள்’ அவன் கண்களை துடைத்து பத்மினி சொன்னாள்.

மத்தியானவாக்கில் முகம்மதுவின் அழைப்பு வந்தது.

‘அது நடக்காது சார். டாக்டர் தரவே முடியாதுன்னு கண்டிப்பா சொல்லீட்டார்.’

நாய்கள் குலைப்பது கேட்டுத்தான் டாக்டர் வெளியே வந்து பார்த் தார். கேட்டில் ஒருவர் நிற்பது தெரிந்தது.

‘யாரது?’ டாக்டர் கேட்டார்.

‘நான் பிரபாகரன்.’

‘புரியல.’

‘புத்தகம் விற்றவர்’, பிரபாகரன் வலுவற்ற குரலில் கூவிச் சொன் னான்.

‘ஓ, வாங்க, வாங்க.’ டாக்டர் வந்து கேட் திறந்தார்.

பிரபாகரனை ஆழ்ந்து பார்த்து டாக்டர் கேட்டார், ‘என்ன ஆச்சு, உடம்பு சரியில்லையா என்ன?’

‘அதெல்லாம் ஒண்ணும் இல்லை.’

‘டாக்டர்கள் எங்களுக்கு பார்க்கிறவர்களெல்லாம் நோய்வாய்ப் பட் டவர்களாகத்தான் தெரிவார்கள்.’ ஒரு வெற்றுச் சிரிப்புடன் டாக்டர் சொன்னார்.

பிரபாகரனும் சிரிக்க முயன்றான். கேட்டில் இருந்து வாயிற்படி யினை அடையும் முன், பல முறை, கவனம் பிசகி பிரபாகரனின் கால்கள் தடுக்கின, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவது போன்று உடல் தடுமாறியது.

‘உக்காருங்க’ டாக்டர் சொன்னார்.

ஒரு கோட்டைக்குள் மாட்டிக்கொண்டது போல் அச்சத்துடன் பிர-பாகரன் சுற்றிலும் பார்வையை ஓட்டினான். பழமை வாய்ந்த பொருட்களின் ஒரு பெரிய திரட்டு அதன் ஒளியிழந்த கண்களி னால் தன்னை பார்ப்பதை பிரபாகரன் கண்டான்.

‘எல்லாமே நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தவை. பிரபாகரனின் எண்ணங்களை ஊகித்தது போல டாக்டர் சொன்னார். ‘இங்கு புதி தாக ஒன்றும் இல்லை. இந்த வீடே கூட ஒரு பழைய எட்டு கெட்டு (பெருமை வாய்ந்த ஒரு பழம்பெரும் கட்டட வகை) இடித்து எடுத்தவற்றினால் கட்டியது தான்.’ டாக்டர் உரத்து சிரித் தார்.

பிரபாகரனுக்கு பயமாய் இருந்தது.

‘இதெல்லாம் ஒண்ணுமில்லே. உள்ளே இன்னும் நிறைய இருக்கு. வா காட்டறேன்.’ ஒரு ஜாலவித்தைக்காரனின் திறமையுடன் டாக்டர் பிரபாகரனை அழைத்தார். தூக்கத்தில் நடப்பதைப் போன்று அவன் டாக்டரின் பின்னே சென்றான்.

‘இது பாத்தியா?’ ஒரு காட்டெருமையின் தலையினை காட்டி டாக் டர் சொன்னார். ‘ஆறு பேரைக் கொன்றவன் இவன். வில்லி எனும் ஒரு துரை தான் இவன் கதையை முடித்தவர். பாலாவிலிருந்த ஒரு வீட்டிலிருந்து வாங்கினேன்.’

பிரபாகரன் ஒரே ஒரு முறைதான் அதைப் பார்த்தான் பிறகு டாக்டரையும்.

நிகழ்காலத்திலிருந்து வழி தவறி புராதன காலத்தை அடைந்த ஒரு பயணியைப் போன்று ஒவ்வொரு அறையிலும் பிரபாகரன் நுழைந்து சென்றான்.

‘பொருட்கள் இப்படித்தான். அவை இடம் மாறிக் கொண்டே இருக்கும்’, ஒரு ஞானியைப் போல டாக்டர் சொன்னார். ‘நீங்கள் இவ்வளவு நாட்கள் வாசித்திருந்த புத்தகங்கள் இன்று என் கையில் இருக்கின்றன. நாளை அது இனனோரிடத்திற்கு போக லாம். ஒன்றிற்கும் நிரந்தரமான வாழ்விடம் என்று ஒன்றில்லை.’

அந்த நேரம் டாக்டரின் முகத்தை பிரபாகரன் கூர்ந்து கவனித் தான். அவர் சத்தமின்றி சிரித்துக் கொண்டிருந்தார்.

‘பாருங்கள், உங்கள் புத்தகங்கள்’, டாக்டர் ஒரு பெரிய அறையை கைகாட்டினார். அந்தக் கணம், அந்தக் கணத்தில் மட் டும்தான் பிரபாகரன் வேறொரு காலத்தில் உறைந்து நின்ற தன் மனதினை உதறி இழுத்து திரும்பி வந்தான். இழந்து விட்டதாக நினைத்த உயிரினை கண்டடைந்தது போல அவ்வளவு வெறியு டன் அவன் அந்த அறையை நோக்கி ஓடினான். அலமாரியின் ஒவ்வொரு அடுக்கிலிருந்தும் புத்தகங்களை எடுத்தான். முகர்ந் தான். சிலவற்றை வாஞ்சையுடன் தடவினான். ஏதோ ஒரு புத்தகத் திலிருந்து உதிர்ந்த ஒரு பழைய பயணச் சீட்டினை கையிலெ டுத்து குழந்தையைப்போல் சிரித்தான். பென்சிலின் கோடுகள் பாதி அழிந்து போயிருப்பதை கண்டான். ஒரு புத்தகத்தை திறந்து உரத்து வாசித்தான். ‘It was the age of wisdom, it was the age of foolishness, it was the epoch of belief… என்ன ஒரு தொடக்கம், இல்லையா?’ திரும்பி டாக்டரைப் பார்த்து பிரபாகரன் கேட்டான்.

ஒரு வலிப்பு நோயாளியினது போன்ற பிரபாகரனின் உடல் அசை வுகளை கவனித்துப் பார்த்து அறையின் கதவில் சாய்ந்து நின்றுக் கொண்டிருந்தார் டாக்டர்.

‘சில புத்தகங்களை நாம் வாங்கினாலும் வாசிக்காமல் வைத்திருப் போம்’, பிரபாகரன் சொன்னான். ‘ஒரு எதிர்பாராத தருணத்தில் அது நம்மிடம் சொல்லும் இப்பொழுது என்னை வாசி என.’

டாக்டர் பிரபாகரனின் பக்கத்தில் சென்று நின்றார்.

‘டாக்டர், நான் சொன்னது உங்களுக்கு புரிய முடியாமல் கூட இருக்கலாம். அது அப்படித்தான். நாம் ஒன்றை வாசிக்க தகுதி பெற்று விட்டோமா என நாம் அல்ல, சில நேரங்களில் புத்தகங் களே அதை நிர்ணயிக்கின்றன.’

டாக்டர் ஆமோதிப்பதைப் போல தலை அசைத்துக் கொண்டே அவனிடமிருந்த புத்தகத்தை வாங்கி அலமாரியில் வைத்தார்.

‘அப்போ, நாம் கிளம்பலாம் இல்லையா?’ டாக்டர் அமைதியாகக் கேட்டார்.

எதிர்பாராத அந்தக் கேள்வியினால் திகைத்துப் போன பிரபாகரன் டாக்டரைப் பார்த்தான். டாக்டர் பிரபாகரனின் தோளில் தட்டி கிளம்பு என குரல் தாழ்த்தி சொன்னார். டாக்டரின் கையினை தட்டி விட்டு பிரபாகரன் சொன்னான், ‘எனக்கு என் புத்தகங்கள் வேண்டும்.’

டாக்டர் ஒரு குழந்தையின் விளையாட்டை கண்டது போல சிரித் துக் கொண்டே சொன்னார், ‘என்ன இது பிரபாகரன்? நீங்கள் விற் றது தானே எனக்கு? இப்பொழுது இவை எனக்கு மட்டும் தான் சொந்தம்.’

பிரபாகரன் சுற்றிலும் பார்த்தான். ஒவ்வொரு தாளிலும் என் சுவா சம் மட்டுமே தழுவின புத்தகங்கள். ஒவ்வொரு தாளிலும் என்னு டைய விரல் அடையாளங்கள் மட்டுமே பதிந்த புத்தகங்கள். நான் உறங்கும்பொழுது காவல் நின்றவைகள், என்னுடைய இன்பங்க ளுக்கும் சிரிப்புகளுக்கும் கவலைகளுக்கும் சாட்சிகள்.

புத்தகங்களின் மீது முகம் பதித்து பிரபாகரன் விக்கி விக்கி சொன் னான், ‘என்னுடையவை..’

பிரபாகரன் தனக்கு மட்டுமே பரிச்சயமான அந்த வாசனையில் ஆழ்ந்து கொண்டிருக்கையில் பிடரியில் பதிந்த உலோகத்தின் குளிரில் திடுக்கிட்டு விழித்தான்.

‘இதுவும் பழசு தான்’, டாக்டரின் புகையிலையின் மணம் பிரபாகர னின் முகத்தில் அடித்தது. அவன் திடுக்கிட்டு திரும்பிப் பார்த் தான். டாக்டரின் முகம் அமைதியாக இருந்தது. ஒரு குறுநகை அதில் இருந்தது.

‘இதுவும் அந்த வில்லி துரையினதுதான்.’ பிரபாகரனின் கழுத்தி லிருந்த துப்பாக்கியை விலக்கி டாக்டர் சொன்னார். ‘இன்னும் சிறிது நேரம் நீ இங்கு நிற்கலாம்.’

டாக்டர் அறையை விட்டு வெளியேறினார்.

ஒரு மந்திரக்காரனின் அடிமையைப் போல டாக்டரின் பின்னே நடந்து வீட்டை விட்டு வெளியேறும் பொழுது பிரபாகரன் எதையும் உணரும் நிலையிலில்லை. டாக்டர் அளித்த தனக்கு மட்டுமே யான அந்த சில மணித்துளிகளில் திருடின அந்தப் புத்தகம் தன் அடிவயிற்றில் படர விட்டுக் கொண்டிருக்கும் அதன் உஷ்ணமும் துடிப்பும் வியர்வையும் மட்டும் அவனுக்கு தெரிந்தது.



aravind.vadaseri@thaiveedu.com


# JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.

*“We provide reliable year around Tax and Accounting services.”*

**Our Services included:**

* E- file
* Personal Tax Returns (T1)
* Self-Employed Tax Returns
* Business, HST and Payroll Registrations & Bookkeeping
* Corporate Tax Returns (T2)
* Canada Revenue Agency’s Audit assistance

Starting from
$24.90 Plus tax

Phone: (647)- 351- 5622 / (416)- 722-5338 Fax: (647)- 351- 5620
1193A, Brimley Road, Suite 5, Scarborough, ON, M1P 3G5
jmaccfinancial@gmail.com

# கலிகூலா: ரோம் கண்ட பைத்தியக்கார சக்கரவர்த்தி




நிமால் நாகராஜு

ரோமின் முதலாவது சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்ட ஒகஸ்டஸ் பயங்கர சாமர்த்தியசாலி, அரச நிர்வாகத்தில் அதீத திறமைகொண்டவன். அத்துடன் வீரமும், வசீகரமும் சேர்ந்துகொள்ளவே ரோம மக்களின் மனங்களை இலகுவில் அவன் கவர்ந்துகொண்டான். அவனது ஆட்சியில் சாம்ராஜ்ஜியத்தின் எல்லைகளும் விரிந்தன, சனங்களின் தொல்லைகளும் குறைந்தன. அதனால்த்தான் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்த ரோம சாம்ராஜ்ஜியத்தின் அதிபுகழ் பூத்த சாம்ராஜ்ஜிய அதிபதியாக ஒகஸ்டஸ் கடவுள் ஸ்தானத்தில் வணங்கப்பட்டான்.

ஆனாலும் ஒகஸ்டஸுக்கும் ஒரு குறை இருந்தது. பரந்து விரிந்த ரோமப் பேரரசை அடுத்ததாக ஆள ஆண்வாரிசு அவனுக்கு இருக்கவில்லை. அதனால் தனது மனைவி லிவியாவின் முதல் கணவனுக்கு பிறந்த ரைபீரியஸை தத்தெடுத்துக் கொண்டான்.

கி.பி. 14ல் ஒகஸ்டஸ் இறந்து போகவே, ரைபீரியஸ் ஆட்சிக்கு வந்தான். அவன் ஒன்றும் வசீகரமானவனுமல்ல, ரோம நாட்டை ஆளக்கூடியவனும் கிடையாது. அரசியல் சதுரங்கத்தில் சரியாக காய்களை நகர்த்த தெரிந்த தாயாரின் தயவுடன் ஆட்சிக்கு வந்தவன்.

அவனது ஆட்சி அரையும் குறையுமாகத்தான் ஓடிக் கொண்டிருந்தது. அப்படி இருந்தும் அவனுக்கு ஒரு பேராசை இருந்தது. தனக்குப் பின் தன் மகனை அரசுக் கட்டிலில் அமர்த்த அவன் ஆசைப்பட்டான்.

ஆனால், அதற்கு குறுக்கே நின்றவன் அவனின் பெறாமகனான ஜேர்மானிக்கஸ் எனும் பெரும் வீரன். மிகவும் திறமை கொண்ட அவன் ரோம சாம்ராஜ்ஜியம் எங்கும் பெரும் ஆதரவு கொண்டவன். அடுத்த சக்கரவர்த்தி என எல்லோராலும் கொண்டாடப்பட்டவன்.

ஒருநாள், போர்க்களத்தில் தனது பாசறையில் ஜேர்மானிக்கஸ் திடீரென மர்மமான முறையில் இறந்து போனான். ரோம் திகைத்துப் போனது.

ஜேர்மானிக்கஸின் மனைவி அக்ரிபின்னாவுக்கு, தன் கணவனை கோழைத்தனமாக கொன்றது சக்ரவர்த்தி ரைபீரியஸ் தான் என தீர்க்கமாக தெரிந்திருந்தது. அவளும் ரோமில் பெரும் செல்வாக்கு கொண்டவள். சக்கரவர்த்திக்கு எதிராக அவள் பேசத் தொடங்கவே, மக்கள் அவள் பக்கம் திரளத் தொடங்கினர்.

ரைபீரியஸுக்கு ஒரே ஒரு வழி தான் இருந்தது. ஆட்சிக்கு துரோகம் செய்கிறார்கள் எனக் குற்றம் சாட்டி, அவளையும், ஒரு மகனையும் நாடுகடத்தினான். மற்ற மகனின் சிரம் கொய்யப்பட்டது. ஏழு வயதான மகன் கலிகூலாவும், அவனது மூன்று தங்கைகளும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

ஜேர்மானிக்கஸின் குடும்பத்தை அநியாயமாக சிதைத்துப் போட்ட ரைபீரியஸ் மீது மக்களுக்கு வெறுப்பு அதிகரிக்கவே, ரைபீரியஸுக்கு ரோம் நகரமே பிடிக்காமல் போனது. தூரத்தே இருந்த கப்ரி என்னும் தீவில் இருந்த தனது உல்லாச அரண்மனைக்கு அவன் இடம் பெயர்ந்தான்.

தனித்தீவு, ஆடம்பர மாளிகை, மது, மாது என ரோம சாம்ராஜ்ஜிய பதி எந்நேரமும் இன்பத்தில் துய்த்துக் கொண்டிருந்த போது தான் அந்த துயரம் நடந்தது.

எந்த மகனுக்காக ஜேர்மானிக்கஸின் குடும்பத்தைச் சிதைத்து மக்களின் எதிர்ப்பைக் கூட்டிக் கொண்டானோ, அந்த மகன் திடீரென இறந்து போனான்.

ரைபீரியஸ் இடிந்து போனான். தன் வாரிசு நாடாள முடியாததை அவனால் ஏற்க முடியவில்லை. தனது பேரன் ஜேர்மலஸை அடுத்த வாரிசாக அறிவிக்கலாம் என்றால் அவனுக்கு வயசோ வெறும் பன்னிரண்டு தான்.

ரைபீரியஸின் குயுக்தி மூளை வேறு ஒரு திட்டம் போட்டது. பேரன் ஜேர்மலஸ் ஆயத்தமாகும் வரை ஏதாவது செய்தாக வேண்டும்.

வீட்டுக் காவலில் இருந்த கலிகூலா, ரைபீரியஸின் மாளிகைக்கு அழைத்து வரப்படுகிறான். தன் குடும்பத்தை உருக்குலைத்த ரைபீரியஸின் மாளிகையில் அடுத்த ஆறு ஆண்டுகளை அவன் கழிக்க வேண்டியிருந்தது.

கலிகூலாவும் சாதாரணமானவன் கிடையாது. ரைபீரியஸினை எதிர்த்தால் தன் உயிர் அடுத்த நிமிடமே பறந்து விடும் என்பதை அவன் அறிவான். ரைபீரியஸின் நம்பிக்கையை சாமர்த்தியமாக சம்பாதித்துக் கொண்டான்.

ரைபீரியஸ் மரணப்படுக்கையில் வீழ்ந்தான். தனது பேரனை அடுத்த சக்கரவர்த்தியாக அறிவித்தால் ரோம மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என தெளிவாக தெரிந்த ரைபீரியஸ், கலிகூலாவும், பேரன் ஜேர்மலஸும் இணைந்து ஆட்சியை நடத்துவார்கள் என உயில் எழுதி வைத்தான்.

இனி ரைபீரியஸ் எழும்பப் போவதில்லை என்று தெரிந்ததும், அவனின் மெய்ப்பாதுகாவலர் படையின் தலைவன் மக்ரோ, கலிகூலாவின் பக்கம் சாய்ந்தான். ரோமில் மிகப்பலம் பொருந்திய அவனின் ஆதரவு கிடைத்தவுடன் கலிகூலா செய்த முதல் வேலை, தன் குடும்பத்தை அழித்த ரைபீரியஸை மரணப்படுக்கையில் வைத்தே தலையணையால் அமுக்கி பரலோகம் அனுப்பியது தான்.

தன்னை கொல்லப் போகிறார்கள் என பயந்து கொண்டே முன்னால் வந்து நின்ற ஜேர்மலஸை தட்டிக் கொடுத்த கலிகூலா, 'இணையாட்சிக்கு எல்லாம் நீ ஆசைப்பட முடியாது, உன்னை நான் தத்தெடுத்துக் கொள்கிறேன், எனக்குப் பிறகு ரோமை நீ தாராளமாக ஆண்டு கொள்' என பெருந்தன்மையாக நடந்து கொண்டான்.

ரைபீரியஸின் ஆட்சிக்காலத்தில் தான் யூத தேசத்தில் ரோம கவர்னராக இருந்த பொன்ஸியஸ் பைலேட் என்பவன், இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைய ஆணையிட்டான். இது நடந்த சரியான ஆண்டு தெரியாத போதிலும், கி.பி 30 இற்கும் 36 இற்கும் இடைப்பட்ட காலத்தில் தான் இது நடந்தது என நம்பப்படுகிறது.

பின்னர் இயேசு உயிர்த்தெழுந்ததை கேள்விப்பட்ட ரைபீரியஸ், இயேசுவை கடவுளாக அங்கீகரிக்க செனட் சபையிடம் பிரேரித்த தாகவும், அதனை செனட்டர்கள் நிராகரித்தனர் எனவும் வரலாற் றுக் குறிப்புகள் உண்டு.

ரைபீரியஸின் மரணத்தை கேள்விப்பட்டு ஆனந்த கூத்தாடிய ரோம மக்கள், தாங்கள் மிகவும் விரும்பிய ஜேர்மானிக்கஸின் மகன் கலிகூலா தான் தங்களது புதிய சக்கரவர்த்தி என தெரிந்து மகிழ்ச்சியின் உச்சத்துக்கு போனார்கள். ஆனால் தாங்கள் சட்டிக் குள் இருந்து அடுப்புக்குள் வீழப் போகிறோம் என்று அப்போது அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை.

கலிகூலாவின் முதல் ஏழு மாத ஆட்சி அற்புதமாகத் தான் போனது. அவன் மக்களின் மனங்களை மட்டுமல்ல, செனட்டர்க-ளின் மதிப்பையும் பெற்று பேரரசனாக உருவாகி வரும் போது தான் அந்த அசம்பாவிதம் நடந்தது.

ஒருநாள் திடீரென மயங்கி வீழ்ந்த கலிகூலா நினைவு தப்பி கோமா நிலைக்கு போய்விட்டான். மருத்துவர்களோ கை விரித்து விட்டார்கள். நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. சக்கரவர்த்தியோ மயக்கத்திலிருந்து எழும்புவதாக இல்லை.

இந்தச் செய்தி வெளியே தெரிந்தால், ஆட்சிக்கு ஆவலாய் காத்து நிற்கும் ஏகப்பட்ட நபர்கள் காய்களை நகர்த்த தொடங்கி விடு வார்கள்.

கலிகூலாவின் மெய்ப்பாதுகாவலர் படைத்தலைவன் மக்ரோ, ரைபீ ரியஸின் பேரன் ஜேர்மலஸை அடுத்த அரசனாக தயார்ப்படுத்தும் நேரத்தில் கலிகூலா மூன்று மாத கால கோமாவின் பின் திடீரென கண்விழித்துக் கொண்டான்.

மக்ரோவின் நிலைமை தர்ம சங்கடமாகிவிட, கலிகூலா அவன் மீது சந்தேகப்படத் தொடங்கினான். வெகு விரைவிலேயே மக்ரோ-வும், ஜேர்மலஸும் மேல் உலகம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

கலிகூலாவுக்கு இப்போது யாரைப் பார்த்தாலும் சந்தேகம் வந் தது. சந்தேகம் அதிகமாக அதிகமாக அவன் பைத்திய நிலைக்கு போகத் தொடங்கினான். எதிரிகளை மட்டுமல்லாமல், நண்பர்க ளையும் அவன் பரலோகத்திற்கு அனுப்பத் தொடங்கினான்.

அவனது ஆடம்பர செலவுகளினால் கஜானா காலியாகிப் போகவே, ரோமின் செல்வந்தர்கள் மீது அரச துரோக குற்றம் சாட்டி, மரணதண்டனை விதித்து அவர்களது சொத்துக்களை அப-கரித்துக் கொண்டான்.

ஏற்கனவே பெண்மோகம் அதிகம் கொண்ட கலிகூலாவின் அரண் மனை முழுக்க அந்தப்புரமாகிப் போனது.

அடிக்கடி செனட்டர்களை விருந்துக்கு அழைக்கும் கலிகூலா, இடைநடுவில் அவர்களின் மனைவிகளை இழுத்துக் கொண்டு தன் அறைக்குப் போய் விடுவான்.

அதையும் தாண்டி படு அபத்தமான காரியங்களையும் கலிகூலா செய்த போது ரோம் அதிர்ந்து போனது.

கலிகூலாவுக்கு மூன்று தங்கைகள். மூத்த தங்கை யூலியா அக்ரி-பின்னா, அடுத்தவள் ட்ருசிலா, இளையவள் லிவில்லா.

மூத்தவள் அக்ரிபின்னா படு கில்லாடி. அவளுக்கு ரோமின் அர சுக் கட்டிலில் எப்போதும் ஒரு கண். அதிகாரத்துக்காக எந்த எல் லைக்கும் செல்லக் கூடியவள்.

அண்ணன் கலிகூலாவுக்கு அவள் ஒரு ஆலோசனை சொன்னாள், ‘நாங்கள் இருவரும் ஒரு ஆண்பிள்ளையை பெற்றுக் கொள் வோம், அடுத்த ஆட்சியும் எங்கள் குடும்பத்திற்கே’. அவளது விப ரீத யோசனையை கேட்டு, பெண்பித்து பிடித்த கலிகூலா கூட ஒரு கணம் ஆடித் தான் போய் விட்டான்.

அந்த நேரத்தில் எகிப்தில் பாரோ மன்னர்கள் சகோதரிகளை திரு மணம் செய்து கொள்ளும் வழக்கம் இருந்தாலும் ரோமில் அது அருவருப்பாக பார்க்கப்பட்டது.

அக்ரிபின்னா - கலிகூலா உறவில் எதிர்பார்த்தபடி குழந்தை கிடைக்காததால், கலிகூலா தன் அடுத்த சகோதரி ட்ருசிலா மீது கண்வைத்தான். இத்தனைக்கும் ட்ருசிலா திருமணமானவள்.

அண்ணன்தான், ஆனாலும் சகல அதிகாரமும் கொண்ட ரோமச் சக்கரவர்த்தியாயிற்றே. மறுப்புச் சொல்ல முடியாதே.

சில மாதங்களில் ட்ருசிலா கருவுற்றாள். வானத்துக்கும், பூமிக்கும் துள்ளிக் குதித்த கலிகூலா அரண்மனையில் பெரிய விருந்து ஒன்று வைத்து அந்தச் செய்தியை அறிவித்தான். ரோம மக்கள் தலையில் அடித்துக் கொண்டார்கள்.

ஆனாலும் கலிகூலாவை பார்த்து விதி சிரித்தது. ட்ருசிலா திடீ-ரென நோய்வாய்ப்பட்டு இறந்து போனாள், வயிற்றில் இருந்த குழந்தையையும் காப்பாற்ற முடியாமல் போயிற்று.

சிறுவயதில் இருந்தே தனிப்பாசம் வைத்திருந்த ட்ருசிலா இறந்து போனதை கலிகூலாவால் தாங்க முடியவில்லை. அவனுக்கு மேலும் பித்துப் பிடித்தது. ட்ருசிலாவின் மரணத்தை சாம்ராஜ்ஜிய மெங்கும் துக்க தினமாக கடைப்பிடிக்க உத்தரவிட்ட கலிகூலா, அந்த நாட்களில் யாராவது சிரித்தால் கூட மரணதண்டனை விதிக்க கட்டளையிட்டான்.

கலிகூலா சகோதரிகளோடு கொண்ட உறவு குறித்து சில வரலாற் றாசிரியர்கள் சந்தேகம் தெரிவிக்கிறார்கள். பைத்தியமாக ஆட்சி செய்த அவனை படுமோசமாக சித்தரிக்கும் விதமாகவே இந்தக் கதைகள் உலாவந்தன என்பது அவர்களது வாதம்.

இதுக்கும் மேலும் கலிகூலாவின் கூத்தை சகித்து கொள்ள முடி யாத செனட்டர்கள் கலிகூலாவை போட்டுத் தள்ள முடிவு செய் தார்கள். அவனது மரணத்துடன் ரோம சாம்ராஜ்ஜியத்தை மீண்டும் குடியரசாக மாற்றி விடலாம் என அவர்கள் சுயநலத்துடன் யோசித் தார்கள்.

நான்கு வருட ஆட்சி முடிவில் கலிகூலாவை அவனது மெய்க்காப் பாளர் படைத்தளபதி காசியஸ் என்பவன் கொன்று போடவே, ரோம மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

கலிகூலாவின் மரணத்தின் பின்னர் அவனது சித்தப்பாவான கிளாடியஸ் சக்கரவர்த்தியாக அரியணை ஏறிக்கொண்டான். அதி கார ஆசை பிடித்து அலைந்த கலிகூலாவின் தங்கையான அக்ரி பின்னா, சித்தப்பா என்று கூட பார்க்காமல் கிளாடியஸிற்கு நான் காவது மனைவியாகி, ரோம பேரரசியாக பட்டம் பெற்று தனது பேராசையை நிறைவேற்றிக் கொண்டாள்.

அக்ரிபின்னாவுக்கு முதலாவது திருமணத்தால் ஒரு மகன் இருந் தான். அடுத்ததாக அவனை அரியணை ஏற்றினால் தான் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கலாம் என அவள் திட்டம் போட்டாள்.

கிளாடியஸின் மூன்றாவது மனைவியின் மகன், பிரிட்டானிக்கஸிற் குத்தான் அடுத்த ஆட்சி போகப் போவதை அறிந்து கொண்ட அவள், சரியான தருணத்தில் சக்கரவர்த்தி கிளாடியஸை நஞ்சூட்டிக் கொன்றாள். பதினாலு வயது பிரிட்டானிக்கஸையும் பரலோகம் அனுப்பி வைத்து விட்டு, தன் மகனை அரியணையில் அமர்த்தி அழகு பார்த்தாள் அக்ரிபின்னா.

தாயாரின் சதித்திட்டத்தால் சக்கரவர்த்தியாகிய அவளது மகன், நல்ல ஆட்சியை தருவான் என எதிர்பார்ப்பது படு முட்டாள்தனம் என்று ரோம மக்களுக்கும் தெரியும். அவர்கள் பயந்ததைவிட பல மடங்கு பயங்கரத்தை விதைத்த அந்த பேரரசன், ‘ரோம் பற்றி எரியும் போது பிடில் வாசித்தவன்’ என வரலாற்றில் இன்றும் கூட இகழப்படும், நீரோ.



nimal.nagaraj@thaiveedu.com

CENTURY 21.

Innovative Realty Inc.

# 12th Innovative Gala



Guests enjoying dinner at the gala



President of Century 21 Innovative, Sameem Mohamed, and his family



Award Winner walking to the stage to receive their award




Scholarship Award Recipient receiving their scholarship




Photo of all Century 21 Innovative Realty Inc. Agents that attended the gala

**CENTURY 21.**

**Innovative Realty Inc.**

# 12th Innovative Gala




Shama Mandur, the first agent to attain the Million Dollar Club




Century 21 Innovative Management and Staff



Sameem Mohamed, President of Century 21 Innovative Realty Inc.




The Top 10 Agents in 2021 at Century 21 Innovative




Photo of all Century 21 Innovative Realty Inc. Staff that attended the gala


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474


BUYING OR SELLING
Residential, Commercial, Land & Investment Properties
For Sellers:
Free Market Evaluation Available
Competitive Commission Packages Available
Will pay for Staging & Condition
Will pay the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold
Will market your home with social medias
For Buyers:
Will find the home in any area within your budget
Get you the lowest mortgage. rate
SATHY & NITHY
REAL ESTATE TEAM
NITHY
SATHYAKUMAR
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com
SATHY
SIVASUBRAMANIAM
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com
16th Avenue / 9th Line $1,550
FOR LEASE
BEDROOMS:2
WASHROOMS:1
Morningside / Finch $1,200
FOR LEASE
BEDROOMS:1+1
WASHROOMS:1
Pharmacy Ave/Lawrence Ave $1,600
FOR LEASE
BEDROOMS:3
WASHROOMS:1
Victoria Park / Ellesmere $2,000
FOR LEASE
BEDROOMS:2
WASHROOMS:1
Rossland/Wilson $599,900
FOR SALE
BEDROOMS:3+2
WASHROOMS:2
Crowder Blvd / Leslie St $549,900
FOR SALE
BEDROOMS:3+1
WASHROOMS:2
Simcoe/Britannia $509,000
FOR SALE
BEDROOMS:4
WASHROOMS:3
Yonge/Front $659,000
FOR SALE
BEDROOMS:1+1
WASHROOMS:1
King/Blue Jays $699,000
FOR SALE
BEDROOMS:1
WASHROOMS:1
Lawrence Ave E/Orton Park $699,000
FOR SALE
BEDROOMS:3+1
WASHROOMS:3
Finch / Victoria Park $759,000
FOR SALE
BEDROOMS:3
WASHROOMS:2
Hoover Park/Tenth Line $769,900
FOR SALE
BEDROOMS:3+1
WASHROOMS:3
Brock/Hwy 2 $799,000
FOR SALE
BEDROOMS:3
WASHROOMS:4
Dufferin/Summerridge $889,000
FOR SALE
BEDROOMS:3
WASHROOMS:4
Markham/Sheppard $799,000
FOR SALE
BEDROOMS:4+2
WASHROOMS:3
Pharmacy/N.Eglinton $838,000
FOR SALE
BEDROOMS:3+2
WASHROOMS:2
RE/MAX
Remax Realtron Realty Inc., Brokerage
Bus: 905 470 9800
Web: realtorsathy.com



# வீடு வாங்க விற்க...

18 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

## வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

### வாங்கப் போகிறீர்களா?

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

### விற்கப் போகிறீர்களா?

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்




**Best Choice**
**4 BR+ 3 WR**
**Fully upgraded**

www.vela4homes.com

$ Cash incentive for referrals






**Bungalow**
3 +2 BR
2.5 WR
Separate Ent.
Legal apartment
Best Location




Best investment

3+2 Bedrooms, 1+1 Kitchen
4 WR + Walkout Bsmt
Fully Renovated
Separate Entrance
Dual Units (city approved)




Estate Home

Deer Creek
Over 9,000 Sft,
Fully Renovated
1.45 Acre




Bungalow
3 +1 BR
2 WR
Separate Ent.
Legal apartment
Best Location

## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8





1ST MORTGAGE SPECIALS
5 Year Variable 2.35%
5 Year Fixed 3.24%
*Some Conditions Applied, Please Call For More Details
2ND MORTGAGE SPECIALS
Up To 80% in GTA. 75% on other major cities.
No Income Verification.
No Minimum Credit Score.
Quick Closing
Rates from 7.99% to 12.99%
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
TD Canada Trust
Scotiabank
STREET CAPITAL
FIRST NATIONAL FINANCIAL LP
MCAP
ICICI Bank
MERIX
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
-digi Media Creations-



FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
#1
RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor


CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000



BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS
REAL ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

# மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



# MORTGAGE NESAN
**416-908-5656**

*Residential / Commercial / Industrial / Investment Properties*

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

## 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

## 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

## Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

## 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

## 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

## Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |


MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099



LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough

Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX COMMUNITY REALTY INC.




NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law




சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER




பிராணஜீவ
சர்வ ரோக நிவாரணி
Pranajeewa is a traditional herbal medicine that has passed down from generation to generation. It is over 200 years old and is a proven cure for many kinds of diseases including Heart disease, Diabetes, hypertension, Cholesterol and Cancer. Sethsuwa Pranajeewa's miraculous properties has made it the ideal cure for a multitude of other ailments and conditions, known among them are paralysis, Asthma, Catarrh, Skin diseases.
எலும்பு, மூட்டு ஆரோக்கியத்திற்கு!!
NanoCal is a supplement that has been approved by the US FDA as a CURE for osteoporosis and osteoarthritis.
NanoCal can actually reverse and cure these conditions!
Ervamatin Hair Lotion
The ERVAMATIN™
Amazon Organic Shampoo is for all hair types is rich yet mild, cleans well and leaves hair full bodied lustrous and manageable.
மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட தலைமுடி மை.
Dreamron Semi-Permanent Eco Hair Color is the newest innovation that is specially formulated for the people who are allergic to normal oxidative hair colorants which contain PPD & Ammonia. This is a gentle blend of unique herbal powders with HC colorants.
Turmeric & Sandalwood Day Cream
Kasturi
SABONA
2466, Eglinton Ave East Unit 12A (@ Midland) Scarborough, ON. www.sabona.ca 416•264•8787



அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
$2100 Rebate Available Now
call us 416-414-2280
AATEK HEATING & COOLING
FREE Inspection in GTA
Over 10 yrs in Business Experience
Flat Rate Pricing
Parts and Labour guarantee
Guaranteed Repairs
Professional Service
Fully Insured
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280




Buy, Sell Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani & Judy
Real Estate
Judy
Gnanendra
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.809




OUR FREE SERVICES
WHY? REALTOR KATHIR
For Home Owners
Home Staging
Newspaper & Flyer Advertisement
High Resolution Picture & Virtual Tour
Four Page Colour Feature Sheets
Weekends Open House
Guaranteed Weekly Feedback
Social Media Marketing
Full MLS Listing Service
Sale Sign & Direction Signs
Market Evaluation
Radio & Web Tool Advertisement
Professional & Friendly Service
LOW Commission
Over 10 yrs Experience Realtor
Multi Award Winner Since 2006
Excellent Negotiation Skill
Quick Sale with Low Commission
Professional & Friendly Services
Home Sellers' Programme
Home Buyers' Programme
Mortgage Brokers, Lawyers, Inspector Team.
Getting Low Rate Mortgage
SELL WITH KATHIR & GET MAX. PRICE
Buy with Kathir & Get Dream Home
HomeLife/Future Realty Inc.,
Brokerage
O: (905)201-9977 F: (905)201-9229
Kathir Kathirgamanathan B.A.
Real Estate Broker
Dir: 416-230-6462




Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com




Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
RE/MAX
RE/MAX REAL ESTATE CENTRE
Mahesan Subramaniam
BROKER
Free Home Evaluation with No Obligation
416-816-0141
141-1140 Burnhamthorpe Road West, Mississauga, ON L5C 4E9
Office : 905-270-2000 Fax : 905-270-0047





Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE




Allstate.
You're in good hands.
உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்
Roji Linghon
Ajax Agency
(289) 275-8795




வீடு வியாபாரம் காணி வாங்க விற்க அழையுங்கள்!
BUY & SELL HOMES, BUSINESSES, LAND & MORE!
REAL ESTATE HALL OF FAMER
PAT PUSHPAKANTHAN
FULL-TIME BROKER | 20 YEARS OF EXPERIENCE
416-894-1187
WWW.PATPUSH.COM
FREE BUY & SELL DEALS*
FREE STAGING*
FREE HOME MARKET ANALYSIS
NEW CONDO VVIP PRIORITY ACCESS
FREE HOME INSPECTION*
FREE HOME SELLING SERVICES*
FREE INVESTMENT STRATAGIES CONSUTING*
RESIDENTIAL & COMMERCIAL RENTAL SERVICES & PROPERTY MANAGEMENT SERVICES AVAILABLE *
COMMITMENT | RELIABILITY | PROFESSIONALISM
CENTURY 21 Century21 Affiliate Realty Inc.
The dependable realtor you've been looking for.


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct 416.918.9771
Business 416.321.2500
MDRT
Member of Million Dollar Round Table
Life100
INSURANCE & INVESTMENTS INC.
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
LaCapitale
iA Financial Group
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111



Call Me First and Say "YES"
to Get Your Dream Home at a
Dream Rate!
For all your Mortgage needs
Peter Sober
Dir: 416-275-3571
Your Smile Is My Best Return!
TD
Five Branch Locations to serve you better
Scarborough, Markham, Ajax, Brampton & Mississauga


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
Call me now to get your HOME SOLD 416-725-7284
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
647-290-3416
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law
RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7
15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544
AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide Mortgage Solutions Inc.
Brokerage Lic# 10216
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545
RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225
Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6
UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMID GROUP
LIFEPLAN INVESTMENTS
Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC
WE CAN HELP BUILD YOUR FUTURE
Insurance • Investments • Tax and Estate Planning
905-294-PLAN (7526)
www.lifeplaninvestments.ca
416-894-2009
Download Free MyLIFEPLAN App
Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120
$8475.00
Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling/ Leasing/ Investing
Dir: 647.839.0079
Homelife/Future Realty Inc.,Brokerage*
GAJAN
MAHAKANAPATHY
416.999.2777
Realtorgajan.com
Sri Vallipuranathar
Credit Solution Centre
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM
President & CEO
INFORCE LIFE Financial Services Inc.
QUALITY ADVICE YOU CAN TRUST
Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
Cell: 416 505 8532
DR. YALINI ARAVINTHAN
DENTIST
YA Smiles
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
RE/MAX NORTH REALTY
077 566 0000
LATHAN VARATHARAJAH
Broker Owner